சுவடியியல்



டாக்டர் பூ. சுப்பிரமணியம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சுவடி இயல்

டாக்டர் பூ. சுப்பிரமணியம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
சென்னை-600 113.

பதிப்புத் தகவல் பட்டி

நூலின் பெயர்	:	சுவடி இயல்
நூலாசிரியர்	:	முனைவர் பூ. சுப்பிரமணியம்
வெளியிடுவோர்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை-600 113.
வெளியீட்டு எண்	:	160
மொழி	:	தமிழ்
பொருள்	:	சுவடி இயற்கலை
பதிப்பு - ஆண்டு	:	முதற்பதிப்பு—டிசம்பர், 1991
தாள் அளவு	:	18.2 கி.கி. 21×14 செ.மீ.
அச்சு எழுத்து அளவு	:	10 புள்ளி
பக்கங்கள்	:	xvi + 328 = 344
படிகள்	:	1200
விலை	:	ரூ. 48/-
அச்சகம்	:	கவின்கலை அச்சகம் கந்தசாமி நகர், பாலவாக்கம் சென்னை-600 041. தொலைபேசி : 41 71 41
கட்டமைப்பு	:	அட்டைக் கட்டு
ஓவியர்	:	ஜமால்

அணிந்துரை

டாக்டர். அன்னி மிருதுல குமாரி தாமசு
இணைப் பேராசிரியர், இயக்குநர், (பொறுப்பு.)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1979-இல் சுவடியியல் துறையை அமைத்து, முதுகலை சுவடியியல் பட்டய வகுப்பையும் தொடங்கியது. இதற்கு, அந்நாளைய இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் காரணமாக அமைந்தார். ஆண்டு தோறும் பட்டயக் கல்வி பெற்ற மாணவர் உருப்பெற்றதுடன், சுவடிப் பதிப்பு நூல்களும் இதனால் வெளிவரலாயின. மேலும், மாணவர்க்கு உதவும் நிலையில் பயிற்சி. கையேடு எனும் சிறுநூலும் ஆக்கம்பெற்றது. எனினும் சுவடியியல் பயிலும் மாணவர்க்கு ஒரு சிறந்த பாடநூலின் தேவை தொடர்ந்து இருந்தது.

அந்நிலையில், இச்சுவடியியல் பட்டய வகுப்புகள் நிகழ்த்தும் பொறுப்பை ஏற்றுப் பணிபுரிந்த திரு, பூ. சுப்பிரமணியம் அவர்கள், 'சுவடியியல் - ஓர் ஆய்வு' எனும் தலைப்பில் சென்னைப் பல்கலைக் கழக முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்து, 1986-இல் பிஎச்.டி. பெற்றார். அவ்வாய்வேட்டின் செறிந்த வடிவம் தற்போது 'சுவடியியல்' எனும் பெயரில் இந்நூலாக வெளிவருகிறது.

நிறுவனத்தின், சுவடியியல் மாணவரின், சுவடித் துறை ஆர்வலரின் பலநாள் தேவையைச் சிறந்த முறையில் நிறைவு செய்யும் இந்நூலை ஆக்கிய ஆசிரியர் டாக்டர் பூ. சுப்பிரமணியம் அவர்கள் பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்.

நிறுவனச் சுவடித்துறையின் நினைவுச் சின்னமான இந்நூலை நன்றே அச்சியற்றிய கவின்கலை அச்சகத்தினர்க்கு எம் நன்றி.

சென்னை-113 **அன்னி தாமசு**
31-12-91

நன்றி

ஆய்வுப் பட்டத்திற்காகப் பதிவு செய்து கொள்ள இயலா சூழ்நிலையில், பதிவு செய்ய வழிவகுத்துத் தந்தவர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள். ஆய்வுப் பார்வையில் நெறிப் படுத்தி, ஆய்வேட்டினை முடிக்கத் துணைபுரிந்தவர் மேற்பார்வை யாளர் டாக்டர் அன்னிதாமசு அவர்கள். ஆய்வின் தொடக்கத்தில் நெறியாளராக இருந்து வழிகாட்டி அனைத்துப் பணிகளிலும் ஊக்கமூட்டி உதவி செய்து வந்தவர் டாக்டர் ந. கடிகாசலம் அவர்கள். கட்டுரைகளைத் திருத்தித் தந்தும், மீண்டும் மீண்டும் எழுதச் செய்து தூய்மைப்படுத்தியும், பல நூல்களைக் கொடுத்து உதவியும் முழுமையான உழைப்பை நல்கியவர் டாக்டர் இ. சுந்தர மூர்த்தி அவர்கள். உடனிருந்து கருத்துரை வழங்கி, பல்லாற் றானும் துணை புரிந்தவர் டாக்டர் ம. இராசேந்திரன் அவர்கள். தொடக்கக் கட்டுரைகள் தொடங்கி ஆய்வேடு முடியும் வரை பல முறை தட்டச்சு செய்து கொடுத்து உதவியவர்கள் சு. இளங்கோ, சு. இளவரசு ஆகியோர்.

அனைவரும் என்னுடைய வணக்கத்திற்கும் நன்றிக்கும் உரிய வர்களாகிறார்கள்.

இந்த ஆய்வேட்டினை நூலாக வெளியிட வேண்டுமென்று முயற்சி செய்ததுண்டு; இயலவில்லை, பல ஆண்டுகளாகப் பல்கலைக் கழக இசைவு கிடைக்கவில்லை என்பது முதற்காரணம். அச்சிட்டபின் நூல்களைப் பல ஆண்டுகளுக்கு வைத்துப் பாதுகாக்க வேண்டுமே என்ற எண்ணம் அடுத்த காரணம். மேற்கொண்டு முயற்சி செய்யாமைக்கு இதுவே காரணம் எனலாம்.

இந்த ஆய்வேடு சுவடி இயல் பயிற்சி வகுப்புகளுக்குரிய முழுமை யான பாடத்திட்டத்தை உள்ளடக்கியது; பிற துணை நூல்களுக் கான பட்டியலும் அடங்கியிருக்கிறது; சுவடியைப் பற்றி அறிய விரும்புவோருக்கும், சுவடி ஆய்வாளருக்கும் பதிப்பாசிரியர் களுக்கும் துணை புரியக் கூடியது; பாட நூலாகவே கொள்ளும் தகுதி வாய்ந்தது என்பன போன்ற கருத்துகள் என்னுடைய நெறி யாளரும், நிறுவன இயக்குநர் பொறுப்பிலே இருந்து வருபவருமான டாக்டர் அன்னிதாமசு அவர்களின் உள்ளத்தில் தேங்கிக் கிடந் ள் என. அந்த எண்ணங்களின் வெளிப்பாடே இந்த நூலின்

வெளியீடாக அமைந்துள்ளது. அந்த உயர்ந்த உள்ளத்திற்கு இந்த வெளியீட்டின் வழி என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இயக்குநர் அவர்கள் மீண்டும் பரிந்துரை செய்து கேட்டுக் கொண்டதன் பேரில் சென்னைப் பல்கலைக் கழகம் இசைவளித்து நூல் வெளியாகத் துணை நின்றது (பல்கலைக்கழக இசைவுக் கடிதம் பிஎச். டி. எண் 2727-நாள் 2-8-1991.)

வெளியீட்டுப் பணிகள் பலவற்றிலும் செல்வி கோ. விருதசாரணி, திரு. வே. நெடுஞ்செழியன், திரு. எம். மருதமுத்து, செல்வி நா. புனித பொற்கொடி, செல்வி இரா. மரிய ஆக்சிலியா கிறிஸ்டினா, திருமதி. பா. காவேரி ஆகியோர் துணைபுரிந்தனர். அனைவருக்கும் நன்றியுடையேன்.

ஆய்வேட்டின் பகுதிகளாகிய பாடவேறுபாடு, மூலபாட ஆய்வு பாட்டு அமைப்புகள் போன்ற பல தலைப்புகளில் ஏராளமான சான்றுகள் கொடுக்கப் பெற்றிருந்தன. ஒவ்வொரு சிறு மாற்றங்களாக-எழுத்து, அசை, சீர், அடி, பா, தொடர்-என்ற அமைப்புகளில் அச்சான்றுகள் எடுத்துக் காட்டப் பெற்றவையாகும். விரிவு கருதி அவை யாவும் நூலில் சுருக்கியும் குறைந்தும் தரப்பெற்றுள்ளன. பல சான்றுகள் நீக்கப்பெற்றுவிட்டன.

கருத்துரை

இந்த நூலின் கட்டச்சுப்படி சென்னை, ஆசியவியல் ஆய்வு நிறுவனம், ஓலைச் சுவடித்துறைத் தலைவர், பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர்களின் கருத்துரைக்காக அனுப்பப்பட்டது. அவர்களும் அன்போடு கருத்துரை வழங்கி உதவினார்கள். அவர்தம் கருத்துகளுக்கு நன்றியுடையேன்.

திருத்தம் பெற வேண்டியவை யென்று அவர்கள் ஏராளமான இடங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அவற்றுள் மிகச் சில திருத்தங்களை மட்டுமே மேற்கொள்ள முடிந்தது என்பதை அன்போடு கூறிக் கொள்கிறேன். பலவற்றை மேற்கொள்ள இயலவில்லை என்பதையும் காரணங்களோடு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்,

"சுவடியியல், ஆய்வு, பதிப்பு என முப்பெரும் பகுதியாக இந்நூல் அமைந்துள்ளது. இவற்றுள் இரண்டாவது இயலை ஆய்வு என்பதைவிடச் சுவடி ஆய்வு அல்லது மூலபாட ஆய்வு என்று கொள்வது பொருத்தமாகும்" என்று குறிப்பிடுகிறார்கள்.

சுவடி, ஆய்வு, பதிப்பு என்பனவே நூலில் அமையும் முப்பெரும் பகுதிகள். சுவடி இயல் என்பது உள்தலைப்புகளில் ஒன்றே. ஆய்வு என்னும் பகுதியில் பாடவேறுபாடு பற்றிய ஆய்வும் மூலபாட ஆய்வும் அடங்குகின்றன. மூலபாட ஆய்வு என்று மட்டுமே தலைப்பு கொடுக்க இயலாது. சுவடி ஆய்வு என்று கொடுத்தால் பதிப்பு என்ற தலைப்பும் சுவடிப் பதிப்பு என்று அமைய வேண்டும். மூன்று தலைப்புகளும் சுருக்கமாக ஒவ்வொரு சொல்லால் அமைக்கப் பெற்றவையாகும். அவற்றுள் ஆய்வும் பதிப்பும் சுவடியைப் பற்றியனவே என்பது தெளிவு.

''சுவடியியல் அல்லது சுவடி இயல் என்று எந்த வடிவம் இந்நூலுள் ஏற்கப்படுகிறதோ அவ்வடிவமே நூல் முழுமையும் ஆளப்பெறுதல்தான் முறை'' என்று சுட்டியுள்ளார்கள்.

தலைப்பு முதல் நூல் முழுமையும் சுவடி இயல் என்றே ஆளப் பெற்றுள்ளது. உடம்படு மெய்யோடு கூடிய சுவடியியல் என்ற தொடருக்கும் பிரித்து வழங்கும் தொடருக்கும் ஒலி வேறுபாடு ஏதுமில்லை; பிரித்து அமைப்பது ஒலிப்பு முறைக்கும் எழுது முறைக்கும் தெளிவாக இருக்கிறது; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சுவடி இயல் வகுப்பறைக்கான பெயர்ப் பலகையில் இந்த முறையே கையாளப் பெற்றுள்ளது. (நிறுவனச் சுவடிஇயல் பாடத்திட்ட உருவாக்கத்தில் பேராசிரியர் மு. சண்முகபிள்ளை அவர்களுக்கும் பங்கு உண்டு என்னும் கருத்துகளை, ஆய்வேட்டின் வாய்மொழித் தேர்வின்போது எழுந்த வினாக்களுக்கு விடையிறுத்துத் தெளிவுபடுத்திபிருக்கிறேன். அனைவராலும் இந்தத் தொடர் ஏற்றுக் கொள்ளப் பெற்றது.)

ஏதேனும் ஒரு வடிவம் ஏற்கப்படலாம் என்று சுட்டிய கருத்துரையாளர் அவர்கள் நூல் முழுமையும் சுவடி இயல் என்பதைச் சுழித்துச் சுவடியியல் என்று திருத்தியுள்ளார்கள். அவை மீண்டும் பழைய வடிவத்திற்குக் கொண்டு வரப் பெற்றன.

நீடாழி உலகத்து என்று தொடங்கும் வில்லிபாரதத் துதிப் பாடலின் மூன்றாவது அடி,

''ஏடாக வடமேரு வெற்பாக அங்கூரெழுத்தாணிதன்'' என்றே பல பதிப்புகளிலும் காணப் பெறுகிறது. (பக். 34 அச்சில் வேறு) அவ்வடியை,

''ஏடாக மாமேரு வெற்பு அங்கூரெழுத்தாணிதன்'' என்று திருத்தியிருந்தார்கள். வெற்பாக என்பது வெற்பு என மாற்றப்

பெற வேண்டும் என்றது எந்த வகையில் பொருந்தும் என்பது விளங்கவில்லை.

"உத்தர கௌத்தற் கொருமகனாகி"
வேறுபாடு: "**உத்தரன் கவிப்பற்** கொருமகனாகி"
(சிலம்பு : 15; 178-179)

என்னும் வேறுபாட்டுத் தொடர்களைத் தனியே எடுத்துக்காட்டி,

"உத்தரன் கவிப்பற் கொருமக னாகி-என்று பாடமோதி, இக்குரங்கு உத்தரன் என்னும் பெயரோடு...பிறந்து என்பாருமுளர்" என்று காட்டுவார் அடியார்க்கு நல்லார் என்பது நூலில் குறிக்கப் பெறும் செய்தி (பக். 130) இதில் வேறுபாடு என்று குறிப்பிட்ட 'உத்தரன் கவிப்பற்...னாகி' என்ற அடியைச் சுழித்துப் "பாடமும் வேறுபாடும் ஒன்றே! கூர்ந்து நோக்குக" என்று குறுக்கே குறிப்பு எழுதி 'ன'கரஒற்று நீக்கப் பெற வேண்டும் என்று சுட்டியுள் ளார்கள். இதில் திருத்தம் பெற வேண்டுவது எதுவுமே இல்லை.

'சூடாமணி நிகண்டு என்னும் நூலின் சுவடியில் கூறப்பெறாத... செய்யுட்களை இயற்றி, அவற்றை அந்நூலின் இடையிடையே கோத்துச் சுமார் அறுநூறு செய்யுட்களைக் கொண்ட நூலாக... வெளியிட்டுள்ளனர்' என்பது அரும்பொருள் விளக்க நிகண்டு என்னும் நூலிலிருந்து எடுக்கப் பெற்ற மேற்கோள் செய்தி. (பக். 164)

"சூடாமணி நிகண்டில் வேதகிரியார் இடைச்செருகல் செய் தார் என்பது பொருத்தமன்று. அவர் முயற்சி நூலின் விரிவாக்க மாகும். இந்நிகண்டில் 583 பாடல்களே உள, 600 செய்யுட்கள் கொண்ட நூல் என்று **குறித்தது தவறு**" என்று தவறான செய்தி என்னும் தலைப்பில் குறிக்கிறார்கள். மேலும் 'நல்லாப்பிள்ளை தாம் இயற்றிய பாரதத்தில் வில்லிபாரதச் செய்யுட்களை இடை யிடையே எடுத்துக் கொண்டது போன்றது வேதகிரியார் முயற்சி' என்றும் குறிப்பிடுகிறார்கள். (பக். 164)

விரிவாக்கம் என்பது நூலாசிரியரே செய்வது. நூலாசிரியரைத் தவிர்த்த வேறு ஒருவர், வேறுபாடல்களைத் தாமே இயற்றியோ வேறு நூலிலிருந்து எடுத்தோ ஒரு நூலின் இடையிடையே சேர்ப் பாரேயானால் அச்செயலை இடைச் செருகல் என்று தானே கூற வேண்டும்?

இவ்வாறு இடையே ஏற்படும் சேர்க்கை மூல நூலாசிரியருக்கு மாசு கற்பிக்க வேண்டுமென்ற நோக்கமுடையதன்று. மூல நூலின்

இன்பத்தில் முழுகி...நூலின் சுருக்கமான செய்திகளை விரிவாகச் சொன்னால் மேலும் சுவையாக இருக்கும் என்னும் நோக்கத்தால் நிகழ்வதாகும் என்பது போன்ற பல விளக்கங்கள் இடைச் செருகலைக் குறித்து முன்பே இந்நூலில் கூறப்பெற்றுள்ளனவே. (பக். 145)

பதிப்பாசிரியருள் ஒருவர் 'களவிற் கூட்டம்' என்று பதிப்பித்துக் 'கனவிற் கூட்டம்' என்பதை வேறுபாடு காட்டினார்; மற்றொருவர் 'கனவிற் கூட்டம்' என்பதைப் பதிப்பித்துக் 'களவிற் கூட்டம்' என்பதை வேறுபாடு காட்டினார் என இருவேறு பதிப்பு முறைகள் பதிப்புகளில் உள்ளவாறே நூலுள் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. (பக். 229) இரண்டிலும் கனவிற் கூட்டம் என்பதைச் சுழித்துக் கனவில் கூட்டம் எனத் திருத்தினார்கள். நாம் தவறு செய்து விட்டோமோ என்று எண்ணி இருவேறு பதிப்புகளையும் தேடித் திரிய வேண்டிய நிலையில் ஏற்பட்ட உழைப்பும் கால இழப்பும் பெருந்தொல்லையைத் தந்தன என்பது எனக்கு மட்டுந்தான் தெரியும்.

'**தாள் சுவடிகள்**' என்று குறிப்பிட்டிருந்த இடங்களிலெல்லாம் அத்தொடரைச் சிகப்பு மையினால் பெரியதாகச் சுழித்திருந்த முறை, அத்தொடர் கருத்துரை வழங்கிய பேராசிரியரைப் பெரிதும் சுட்டெரித்தது போன்று காட்சியளித்தது. மேலும் 'தாள் சுவடிகள்', தாட்சுவடிகள் எப்படி எழுதினாலும் இந்நாளைக்குப் பொருந்தா-காகிதச் சுவடி என்பது இயல்பாயும் எளிமையாயும் இருக்கும்' என்ற தொடர்களையும் குறுக்கே எழுதியிருந்தார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள ஆங்கிலம், தமிழ் அகராதி பேப்பர் என்ற சொல்லுக்குப் பல தொடர்களிலும் தாள் என்ற சொல்லையே ஆளுகிறது. அரசினர் சுவடி நூலகச் சுவடி அட்டவணைகள் பலவற்றிலும் தாள் என்ற சொல் பல ஆண்டுகளாகவே கையாளப் பெற்று வருகிறது. இவ்வளவு ஏன்? வினாத்தாள், விடைத்தாள் என்று தானே மாணவ நிலையிலும் வழங்கப் பெற்று வருகிறது? தாள் குப்பை என்பதில்லை; காகிதக் குப்பை என்பதுதான் வழக்காறு என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுவடி எண்ணைக் குறிக்கும்போது ஆர். எண், டி. எண் என்று குறிப்பது அரசினர் சுவடி நூலகச் சுவடிகளுக்கு உரிய முறை என்பதும், பிற நூலகச் சுவடியாயின் நூலகப் பெயர் தரப் பெற்றுள்ளது என்பதும் முன்னுரையில் தெளிவாகவே கூறப்பெற்றுள்ளன.

'திருவாரூர் என்பது, கற்றோர் எல்லோர், அருகர் ஆனவர் என்பனபோன்று பெயர்களை விளக்க இடையிலே வரும் சொல் லுருபுகளைப் பிரித்து அமைக்கக் கூடாது' என்பது நூலில் தந்துள்ள செய்தி, (பக். 283) சொற்களைப் பிரித்து அமைத்துக் காட்டி இது போலப் பிரித்து அமைக்கக் கூடாது என்றுதான் குறிப்பிடப் பெறுகிறது.

பிரித்துத் தந்திருப்பது பொருந்துமா? இப்படி ஒரு வினாவைக் குறுக்கே எழுதி அத்தொடரின் அடியில் கோடிட்டுக் காட்டப் பெற் றிருக்கிறது. ஆனால் தனியே எழுதிய கருத்துரையில் 'பக்கம் 283-ல் சொல்லுருபுகள் பிரித்து அமைத்தல் கூடாது என்பது வளரும் தமிழுக்குப் பொருந்தாது என்று குறிப்பிடப்படுகிறது. என்ன பொருள் என்பதே தெளிவாகவில்லை. 'சொல்லுருபுகள் பிரித்து அமைத்தல் கூடாது' என்று குறிப்பிட்ட தொடரே சரியில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அருஞ்சொல் அகரநிரல், அருஞ்சொற்பொருள் அகரநிரல் பிறமொழிச் சொற்கள், தலைவர், நாடு, ஊர்...ஆகிய சிறப்பு அகரநிரல்களைத் தொகுத்து அமைக்கலாம் என்னும் கருத்து சொல் லடைவு என்னும் தலைப்பின் கீழ், அவற்றின் பயன் உட்படத் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளது. ஆனால்,

''பக்கம். 302-ல் அகராதிகள் பற்றிக் கூறுமிடத்து, அரும்பதம் முதலியவற்றின் அகராதி, சிறப்பு பெயர் அகராதி, பொருட்குறிப்பு அகராதி போல்வனவும் நூலின் தன்மைக்கு ஏற்ப இடம் பெற லாம்...உரைநடை நூல்களுக்கும் காவியம் போன்றவற்றிற்கும் அவை அவசியமாகும்' என்னும் கருத்துகள் நூலின் குறுக்கும் நெடுக்குமாகக் கிறுக்கப் பெற்றுள்ளன. அவற்றைப் புரிந்து கொள்ளப் பெருமுயறசி தேவைப்பட்டது.

விளக்கின்மை ஒரு பூசு பொருளா என்ற வினாவை எழுதி விளக்கின்மை என்ற சொற்கள் இருந்த இடமெல்லாம் பெரியதாகச் சுழிக்கப்பட்டன.

'' மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்'' (தமிழ்விடுதூது-25)

என்னும் அடிகளுக்கு 'மஞ்சட்குளிப்பாடல், மையிடல்...சுவடிக்கும் குழந்தைக்கும் பொது. படிக்கத் தொடங்குகையில் எழுதிய ஏட்டில்...எழுத்து விளங்க மைக்காப்புச் சாத்துதல் பண்டைக்கால வழக்கம்' என்று விளக்கம் தருவர்.

'' ஆய ஏட்டினை இருளெனும் அஞ்சனந் தடவி''
(திருவிளையாடல் 60 : 9)

என்ற அடிக்கு ''பனையேட்டில் ஆணி கொண்டெழுதிய எழுத்துகள் நன்கு விளங்குமாறு மை பூசித் துடைப்பது வழக்கமாகலின் ''இருளெனும் அஞ்சனந்தடவி...என்றார்'' என்ற விளக்கமும் காணப் பெறுகிறது. இவற்றுள் குறிப்பிடப்பெறும் மையினையே எளிமையாகத் தயாரித்துப் பயன்படுத்தும் வழக்காற்று அடிப்படையில் விளக்கின் மை என்றோம். நடைமுறையில் இல்லாத பொருளன்று.

'பொதுத்தலைப்புகள்-பெரும் பிரிவுத் தலைப்புகள் பக்க மத்தியில் அமையுமாறு வேறுபட்ட பெரிய எழுத்தில் தரப்படுதல் வேண்டும்' என்பது ஒரு கருத்துரை. தட்டச்சுப்படியில் இயல் தலைப்புகள் அனைத்தும் இடைப் பகுதிலும் உட்தலைப்புகள் இடது ஓரப்பகுதியிலுமே கொடுக்கப் பெற்றுள்ளன. வேறுபட்ட பெரிய எழுத்துமுறை அச்சில் தானே செய்ய முடியும்?

'உள்தலைப்புடன் சேர்த்து விளக்கப் பகுதி தொடருமாயின் (—) டாஸுக்குப் பதில் கோலன் குறி (:) இடலாம். கோலனும் டாஸும் ஒருங்குதருதலும் அமையும்'' என்பது அடுத்த கருத்துரை. கருத்துரை கூறி நூலாசிரியரின் முடிவுக்கு விடுவது விரும்பத்தக்கது. ஆனால் நூலுள் முறையாக அமைந்த சிறுகோடுகளைச் சுழித்து இரண்டிரண்டு புள்ளிகளை வைத்துத் திருத்தம் செய்யப் பெற்றிருந்தது. மேலும் 'உள்தலைப்பு தனிப்படத் தராத நிலையில் கோலன் (:) குறியீடு பொருத்தமாம், யாண்டும் சீரான முறை தொடர்க' என்றெல்லாம் ஆங்காங்கு குறுக்கே எழுதப்பட்டும் இருந்தது.

சமக்குறியும் விளக்குங்குறியும் பெரும்பாலும் வழக்கற்ற நிலை நூலுள் சுட்டப் பெற்றுள்ளது. வேறுபாடு காட்டுமிடங்களில் மட்டும் இருபுள்ளியிடும் முறை நூலுள் இடம் பெறுகிறது. உள்தலைப்புகள் முழுமைக்கும் சிறுகோடு இடும்முறையே ஒரு சீராக மேற்கொள்ளப் பெற்றுள்ளது. அவ்வளவும் சிகப்பு மையினால் சுழித்துத் திருத்தப்பட்டுவிட்ட நிலையில் அனைத்தையும் மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரப் பெரும் பாடுபட வேண்டியதாயிற்று.

'கி. பி. **1947**இல் நடைபெற்றது' என்பது நூலில் கையாளும் முறை. ''இப்பிரதி **கி. மு. 2500-ல்** எழுதப் பெற்றது. **கி. மு. 3850-ல்** முடி சூடியவர்'' என்பன எடுத்துக்காட்டுத் தொடர்கள் (பக். 29). 'இம்முறையில் உருபு இணைப்புத் தருவதாயின் நூல் முழுமையும் ஒரே சீராக' என்று குறிப்பு எழுதி 'இ' கரம் சேர்த்துத் திருத்தப் பெற்றது. இவ்வாறே நடை சரியில்லை, தொடர் சரி

யில்லை என்னும் காரணங்களால் பல தொடர்கள் திருத்தப்பட்டு விட்டன. **அவை**...பொருட்காட்சி சாலையில் இருக்கின்றன **முதலியவைகளில்** எழுதியதாக; **ஆதிநாள் இருந்து** என்பன போன்றவை எடுத்துக் காட்டுப் பகுதிகளில் அமையும் தொடர்கள். இவற்றுள் முறையே,

அவை என்பது இத்தகடுகள் எனவும், முதலியவைகளில் என்பது முதலியவற்றில் எனவும், ஆதிநாள் இருந்து என்பது ஆதி நாளிலிருந்து எனவும் திருத்தப்பட்டன. இத்திருத்தங்கள் யாவற்றையும் மீண்டும் திருத்திப் பழைய வடிவத்திற்குக் கொண்டு வர வேண்டியதாயிற்று. இச்செயல்களுக்காக இந்த எடுத்துக்காட்டுத் தொடர்கள் அமைந்த நூல்களைத் தேடிச் சரி பார்க்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுவிட்டது.

வில்லிபுத்தூரார் என்ற பெயர் வில்லிப்புத்தூரர் என்று திருத்தப்பட்டது. இது எந்தப் பதிப்பிலும் இல்லாத ஒன்று. வை. மு. கோபால கிருஷ்ணமாச்சார்யார் என்பதும் பதிப்பில் உள்ளமுறையே இது...மாச்சாரியர் என்ற முறைக்கு மாற்றப்பட்டது. வி. ஐ சுப்பிரமணியம் என்பது நூலில் காணப்படும் முறை. இது சுழிக்கப் பெற்று வ. ஐ. என்று மாற்றப் பெறுகிறது. கோபால் ஐயர் என்பதும் இவ்வாறே கோபால ஐயர் என்று திருத்தப் பெறுகிறது.

ஒரு இயல், ஒரு ஏடு போல்வன ஓர் இயல், ஓர் ஏடு என்று திருத்தப் பெற்றுள்ளன. ஒன்று என்னும் எண்ணுப் பெயர் ஒரு என்றாதல் உண்டு (தொல். 439). அந்த ஒரு என்பதன் முன் உயிர் முதன் மொழி வருமொழியாக வந்து புணருங்கால் உகரங்கெட்டு முதல் நீண்டு ஓர் என்றாகிப் புணரும் என்பது விதி (தொல். 455). இதன்படி ஓரியல், ஓரேடு என்று இணைந்து நிற்கும். பிரிந்து நிற்கும்போது ஒரு இயல் ஒரு ஏடு என்று நிற்குமே யல்லாது, ஓர் ஏடு என்று எழுதுவது கட்டாயமன்று. கல்+தூண்=கற்றூண் என்றாகும். பிரிந்தால் கல்+தூண் என்றாகுமேயன்றி கற்தூண் என்றாகாது; நற்றாள்-நற்தாள் என்பதும் அவ்வாறே இத்தகையனவே ஓர் இயல், ஓர் ஏடு என்பனவும்.

இவ்வகைக் காரணங்களால் பெரும்பாலான திருத்தமுறைகளை மேற்கொள்ள இயலாமற் போயிற்று என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பூ. சு.

பொருளடக்கம்

		பக்கம்
அணிந்துரை		iii
நன்றி		v
கருத்துரை		vi
முன்னுரை		1
சுவடி		
1. சுவடி இயல்		7-26
அ.	சொற்பொருள்	7
ஆ.	சுவடி இயலின் நோக்கம்	17
இ.	சுவடிகளின் தோற்றமும் வளர்ச்சியும்	18
2. அமைப்பும் வகையும்		27-56
அ.	எழுதுபொருள்கள்	27
ஆ.	ஏடுதயாரித்தலும் பதப்படுத்தலும்	35
இ.	சுவடிகளின் அமைப்பு	38
ஈ.	சுவடிகளின் வகை	54
3. அழிவும் திரட்டுதலும்		57-87
அ.	அழிவு	57
ஆ.	சுவடி திரட்டுதல்—சங்க காலம்	62
இ.	சுவடி திரட்டுதல்—இடைக்காலம்	64
ஈ.	சுவடி திரட்டுதல்—பிற்காலம்	66
உ.	சுவடி திரட்டும் முறைகள்	78
ஊ.	சுவடி திரட்டுதலின் பயன்	79
4. பகுத்தலும் காத்தலும்		88-99
அ.	பகுத்தல்	88
ஆ.	காத்தல்	97
ஆய்வு		
5. பாட வேறுபாடு — *சொற்பொருள்*		100-147
1.	வகை	101
அ.	இடம்	102
ஆ.	பொருள்	105
இ.	காலம்	111

ஈ.	வடிவம்	115
உ.	தன்மை	119
ஊ.	எண்	121
2.	வேறுபாடு தோன்றக் காரணங்கள்	
அ.	மனப்பாடத்திலிருந்து உருவாதல்	128
ஆ.	தற்செயலாக நிகழ்தல்	135
இ.	தெரிந்தே செய்தல்	137
ஈ.	குழப்பங்களால் நிகழ்தல்	142
உ.	நடையால் உருவாதல்	145
6	**மூலபாட ஆய்வு**	148-186
1.	சொற்பொருள்	148
அ.	மூலபாடம்	150
ஆ.	மூலபாட ஆய்வு	151
இ.	மூலபாட ஆய்வியல்	152
2.	தோற்றமும் வளர்ச்சியும்	152
அ.	பொது	152
ஆ.	இந்திய நாட்டில்	153
இ.	தமிழ் நாட்டில்	153
3.	மூலபாட ஆய்வு முறை	157
அ.	சுவடிகளை வகைப்படுத்தும் முறை	157
ஆ.	வழி ஏடுகள்	159
இ.	சுவடிகளின் காலம் அறிதல்	161
ஈ.	வரிசைப்படுத்துதல்	162
உ.	வேறுபாடுகளைக் குறித்தல்	163
4.	மூலபாடத் தேர்வுமுறை	164
அ.	அகச்சான்றுகள்	165
ஆ.	புறச்சான்றுகள்	174
இ.	ஆய்வு நிலையில் தேர்தல்	177
5.	முடிவு	183
பதிப்பு		
7.	**பதிப்புமுறை**	187-263
1.	முன்னேற்பாடு	189
அ.	படியெடுத்தல்	190
ஆ.	சிக்கல் நீக்கும் வழி	190
இ.	எழுத்துமுறை	191

	௧. பாட்டு அமைப்பு	199
	௨. ஒப்பிடும் பணி	206
	௩. மீட்டுருவாக்கம்	208
2.	பதிப்புவகை	209
3.	முன்னோடிகள்	213
	அ. சுவடிப் பதிப்பின் காலம்	213
	ஆ. வழிகாட்டியோர்	214
	இ. கருத்து திரட்டிய முறை	218
	ஈ. முன்னுரை	219
	உ. பாடினோர் வரலாறு	221
4.	பதிப்புப் பணிகள்	223
	அ. பிரிப்பு முறை	225
	ஆ. பிரிப்பு-வரன்முறை	230
	இ. நிறுத்தக் குறிகள்	234
	௧. அடிக்குறிப்பு	243
	௨. ஆய்வடங்கல்	247
	௩. சொல்லடைவு	249
	௪. ஆய்வுமுறை	251
	௫. பதிப்புரை—பொதுக் கொள்கைகள்	258
8.	**அச்சு**	264-281
	அ. அச்சுமுறை கண்காணிப்பு	264
	ஆ. சொந்தப் பதிப்பு	269
	இ. நிறைவுரை	271
	௧. தொடர் ஆய்வுகள்	279
	துணை நூல்கள்	282
	கலைச்சொற்கள்	293
	இணைப்பு :	
	1. அச்சுப்படி திருத்தக் குறிப்புகள்	300
	2. கி.பி. ஆண்டுக்கு மாற்றும் முறை	302
	3. தமிழ் எண்கள்	303
	4. பதிப்பு விவரப்பட்டி	304
	5. சுவடிப் பதிப்பு—பதிப்பாசிரியர்கள்	305
	6. தமிழ்ச்சுவடி உள்ள இடங்கள்	308
	7. எழுத்தாணி இலட்சணம்	310
	8. சுவடி இயல் கல்விக்குரிய துணை நூல்கள், ஆய்வேடுகள்	311

முன்னுரை

அரசினர் சுவடி நூலகத்தில் பணியாற்றும் வாய்ப்பினை 1963இல் பெற்றேன். அதுமுதல் பணியில் பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டன; அவற்றில் பல ஐயங்கள் தோன்றின; பல சிக்கல்கள் ஏற்பட்டன; அவற்றால் பலவகை எண்ணங்களும் கருத்துகளும் உருவாயின. இவை நிறைந்து தேங்கிக் கிடந்த காலத்தில், 1979 அக்டோபரில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சுவடி இயல் பயிற்சி வகுப்பு ஒன்றினைத் தொடங்கியது; அதில் பணியாற்றும் வாய்ப்பினை எனக்கு அளித்தது. சுவடி நூலகத்தில் ஏற்பட்ட அனுபவங்களும், பயிற்சி வகுப்பினை நடத்த வேண்டிய சூழ்நிலையும் இணைந்து 'சுவடி இயல் - ஓர் ஆய்வு' என்னும் இத்தலைப்பில் ஆய்வு செய்ய என்னைத் தூண்டின. அத்தூண்டுதல்களில் குறிப்பிடத்தக்க சிலவற்றை மட்டும் இங்குச் சுட்டுவது இன்றியமையாத அடிப்படையாகும்.

நிகழ்ச்சிகள்

தனியாரிடமிருந்து கிடைக்கும் சுவடிகளை நூலகத்தில் வாங்கி வைக்கவேண்டும். கொண்டுவரும் சுவடிகளின் உரிமையாளருக்கு ஏதேனும் பணம் பெற்றுத் தருவது கடமை. மேலதிகாரிகள் அதை அனுமதிக்க வேண்டும். கிடைத்துள்ள சுவடிகளைப் பற்றிய முழு விவரங்களையும் கொடுத்து, அவற்றை விலை கொடுத்து வாங்க இசைவு தருமாறு கேட்போம்.

இச்சுவடிகள் இதுவரை அச்சாகவில்லையா?

இவற்றைப் போன்ற சுவடிகள் வேறு இந்த நூலகத்தில் இல்லையா?

வேறு எந்த நூலகத்திலுமே இல்லையா?

சுவ—1.

என்பன போன்ற பல வினாக்கள் எழும். முழு விவரமும் முதலில் அனுப்பப்பட்ட கடிதத்தில் விளக்கமாக இருக்கும்.

யாப்பருங்கலம், கப்பல் சாத்திரம் (அரசினர் சுவடி நூலகப் பதிப்புகள்) ஆகிய சுவடிப் பதிப்புகள் பலவற்றைக் காணும்போது பதிப்பு முறைகளைப் பற்றி நினைக்க நேர்ந்தது; பிழை மலிந்திருந் ததையும் சிந்திக்க முடிந்தது.

எகர ஒகரங்கள் புள்ளிபெறும் நிலையினால், உயிர்மெய் நெடில்கள் புள்ளியின்றி குறில்போல எழுதப்பட்டுள்ளன. அவற்றை அவ்வாறே வெளியிட்டிருந்த நூல்களையும் காண நேர்ந்தது. வேண்டாதவிடத்து நெடிலாகவும் அச்சிடப்பட்டிருந்தன.

இவ்வாறு சுவடிகள் திரட்டுவது முதல் அச்சு நூல்களைக் காண்பது ஈறாகச் சுவடி நூலகப் பணிகளில் பல நிகழ்ச்சிகள், கடிதப் போக்குவரத்துகள் ஆகியவற்றில் பல சிக்கல்கள் நாள் தோறும் நிகழ்ந்து வந்தன.

சிக்கல்கள்

படியெடுக்கத் தேர்ந்தெடுக்கப்படுவோர் அதிகாரிகளுக்கு வேண்டியவர்கள். ஆறாவது வகுப்பு, ஏழாவது வகுப்பு படித்தவர் களும் இருந்தனர். அதிகாரிகளின் ஆணையின்படி, புலவர்கள் எழுத வேண்டிய சுவடிகளைத் தேர்ந்தெடுத்து, கொண்டுவந்து அப் படி யெடுப்போருக்குக் கொடுக்க வேண்டிய நிலை; எழுதுவதில் பிழைகள் கண்டு கூறினாலும் கண்டுகொள்ளாத நிலை; இவற்றை யெல்லாம் கடந்து அவர்களுக்கு உரிய கூலியை முறையாகப் பெற்றுத் தந்தாக வேண்டிய கட்டாயம்.

சுவடிப் பதிப்புகளை மேற்கொண்டபோது, வேறு நூலகங் களிலிருந்து சுவடிகளைப் பெற்று ஒப்பிட வாய்ப்பிருந்ததில்லை. அருகில் பிற துறைகளில் இருந்த வல்லுநர்களிடம் சென்று ஐயங்களை நீக்கிக் கொள்ளவும் அனுமதிப்பதில்லை; பதிப்பாசிரியர் அவருடைய இடத்தை விட்டுச் செல்லக் கூடாது என்ற கட்டுப்பாடு. பதிப்புரை ஒரு பக்கத்திற்கு மிகக் கூடாது; சுவடியிலுள்ளதைத் தான் பதிப்பிக்க வேண்டும்; சொந்தச் செய்திகளுக்குப் பக்கங்கள் ஒதுக்கப்படக் கூடாது என்ற கட்டுப்பாடு. இத்தகு சிக்கல்கள் பல.

எண்ணங்கள்

சிக்கல்கள் தோன்றுந்தோறுந் பலவகை எண்ணங்களுந் தோன்றின.

அச்சான நூல்களுக்குரிய வேறு சுவடிகள், இந்த நூலகத்திலுள்ளவை போன்ற வேறு சுவடிகள், பிற நூலகங்களிலுள்ளவை போன்ற சுவடிகள் ஆகியவற்றால் பயன் எதுவுமே இல்லையா? தெளிவில்லாத நிலையோடு, பிழைமலிந்த, சுவடிகளில் உள்ளவாறே படிக்க இயலாத நிலையுடைய பதிப்புகளை எல்லோரும் பயன்படுத்த முடியுமா? அவற்றால் ஏதேனும் பயன் உண்டோ? படியெடுக்கும் செயல்கள் இவ்வாறே தொடரவேண்டுமா? விரிவான ஆய்வுரை, பதிப்புரைகள் அவசியமில்லையா? என்பன சில எண்ணங்கள்.

பிற பட்டறிவுகள்

"பாடுநர்க் கீத்த பல்புக ழுன்னே
ஆடுநர்க் கீத்த பேரன் பினனே
அறவோர் புகழ்ந்த வாய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே"[1]

என்னும் பாடலைப் பாடம் நடத்தியபோது இயைபுத் தொடை பொருந்தும் இப்பாடல் பல்புக ழினனே, ஆய்கோ லினனே என்றிருக்கவேண்டும்; ழி, லி என்பவற்றின் மேல் விலங்குகளை எழுத்துத் தொடர்ச்சியினால் ஏற்பட்ட கோடுகள் என நீக்கியும், னகரத்திற்குப் புள்ளியிட்டும் பதிப்பித்திருக்கின்றனர் என்று கருதினேன். தொல்காப்பிய மேற்கோளில்[2] இதே முறையில் பதிப்பிடப் பெற்றிருந்ததைக் கண்டபோது என் கருத்து வலிவுற்றது. இதனால் பிற நூல் சுவடிகளும் பதிப்புகளில் பயன்படும் என்ற அனுபவம் ஏற்பட்டது.

> "ஏட்டுச் சுவடியைப் பார்த்து எழுதுவது எவ்வளவு சிரமமென்பது எனக்கு நன்றாகத் தெரியும்... தமிழ்நூல்களைச் சிரத்தையோடு படிப்பவர்களே அதிகமாக இல்லாதபோது ஏட்டுச் சுவடியைப் படிப்பதாவது; பார்த்து எழுதுவதாவது!"[3]

என்பன போன்ற செய்திகள் பதிப்புக் கலை முன்னோடிகளின் கருத்துகளாகக் கிடைத்தன.

சுவடி இயல் பயிற்சி வகுப்பினைத் தொடங்கியபோது, மூல பாட ஆய்வியல், பதிப்புக் கலை என்னும் இரண்டு சிறுநூல்கள்

---

1. புறநானூறு, 221.
2. தொல். பொருள், நூற்பா-79, எடுத்துக்காட்டு.
3. நினைவு மஞ்சரி, பக். 9.

துணையாயின. முன்னோடிகளின் பதிப்புரைகள் பலவற்றைத் தொகுக்க முடிந்தது. இவற்றாலும் பல செய்திகள், அனுபவங்கள் கிடைத்தன.

இத்தகு நிகழ்ச்சிகளும் சிக்கல்களும் அனுபவங்களும் சேர்ந்து 'சுவடி இயல் ஓர் ஆய்வு' என்னும் இத்தலைப்பில் ஆய்வு செய்து, சுவடிப் பதிப்பில் நிலையான சில உண்மைகளைக் காணவேண்டும் என்ற முடிவை உருவாக்கின. அதன் விளைவாகத் தோன்றுவது இந்த நூல்.

நூலின் அமைப்பு

சுவடிகளைப் பற்றிய செய்திகள், படியெடுப்பதற்குரிய ஆய்வு முறைகள், பதிப்பித்தற்குரிய வழிவகைகள் என்ற அடிப்படையில் இந்த நூல் சுவடி, ஆய்வு, பதிப்பு என்னும் மூன்று பெரும் பகுதி களாக அமைகிறது. உள்ளே அமையும் இயல்களும் உட்தலைப்பு களும் ஆங்காங்கு காட்டப்பெற்றுள்ளன. நூலின் முழுஅமைப்பு பொருளடக்கத்தால் தெளிவாகும்.

செய்திகள்

நூலுள் சுவடி, வேறுபாடு, மூலபாடம், பதிப்பு, அச்சு ஆகிய வற்றின் வரலாறுகள் மிகைப்படுத்தப் பெறவில்லை. சுவடி படித்தல், பதிப்பித்தல். அச்சிடுதல் ஆகிய பயிற்சிகளையே முதன்மையாகக் கொண்டு அவற்றிற்கேற்ற அனுபவமிக்க கருத்து களே ஆய்ந்து தரப்படுகின்றன. பயிற்சிக்காகவும் அனுபவத்திற் காகவும் சான்றுகள் பலதிறப்பட்டவை காட்டப் பெற்றுள்ளன.

அச்சு முறைகளைக் கூறும் பகுதியில் 25 உறுப்புகளோடுகூடிய நூலின் அமைப்பு கூறப்படுகிறது. பிற நூல்களில் இவ்வமைப்புகள் கூறப்படுகின்றன. ஆயினும் நூலின் பல தன்மைகளை விளக்கும் போது நூலின் முழு அமைப்பைக் கூறவேண்டிய அவசியம் ஏற் பட்டது.

இதேபோல விருத்தப்பாவியல் என்னும் நூல் விருத்த வகைகளை விளக்குகிறது. சுவடிகளைப் படியெடுத்துப் பாடல் களை முறைப்படுத்த வேண்டிய செய்திகளை ஆய்ந்து காட்டும் போது விருத்தங்களைத் தவிர பிற பாக்களின் வகைகளையும் விளக்க வேண்டியுள்ளது. வேறு நூலில் கூறப்பட்டது என்பதனால் விருத்த வகைகளை விட்டுப் பிற வகைகளை மட்டும் சான்றுடன் விளக்குவது நூலின் இப்பகுதி குறையாக இருக்கும் என்பதனால் விருத்த வகையும் சேர்க்கப்பெற்றது.

களன்

நூலினுள் சான்றுகளாகவும், படங்களாகவும் கையாளப் பெற்றுள்ள சுவடிகள் பெரும்பாலும் சென்னை, அரசினர் சுவடி நூலகச் சுவடிகளாகும். டி எண், ஆர் எண் என்று கொடுக்கப் பெற்றுள்ளவை. அந்நூலக எண்களாகும். ஒன்றிரண்டு பிற சுவடிகள் ஆளப் பெற்றுள்ளன. அவை அடிக்குறிப்பில் இடம் சுட்டப்பெற்றுள்ளன.

திருக்குறள் காட்டு

திருக்குறள், பரிமேலழகர் உரையில் வேறுபாடுகள் காட்டப் பெற்ற வற்றிற்கு மட்டும் சுருக்கம் வேண்டி அவ்வவ் இடங்களில் குறள் எண்கள் கொடுக்கப் பெற்றன. வேறு உரைகளைச் சுட்ட வேண்டிய இடங்களில் அடிக்குறிப்பில் தரப்பெற்றன. இடை யிடையே குறள் சான்றுகள் வரினும் அடிக்குறிப்பிலேயே தரப் பெற்றுள்ளன.

பிறநூல் காட்டுகள்

அடிக்குறிப்பில் நூல்பெயர், பக்கம் அல்லது பாடல் எண் ஆகியவை மட்டுமே கொடுக்கப் பெற்றுள்ளன. ஆசிரியர், முகவரி ஆகியவை துணைநூல் பட்டியலில் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. தொடர்ச்சியாகப் பல சான்றுகளைக் காட்டியுள்ள விடங்களில், பலமுறை கையாளப் பெற்றுள்ள நூல்களாதலின், அந்தந்தச் சான்றுகளுக்கு நேரே அடைப்புக் குறிக்குள் (அகம், 47; புறம்-19; சிலம்பு 5 17 என) குறிப்புகள் சுருக்கமாகத் தரப்பெற்றுள்ளன.

அடிக்குறிப்பில் பக்கம்

அடிக்குறிப்பில் சீர்மை கருதி பக்கம், பக்கங்கள் இரண்டு சொற் களுக்கும் பக். என்ற சுருக்கக் குறிப்பே கையாளப் பெற்றுள்ளது.

16; 16-18 என வரும் எண்களின் அமைப்பால் பக்கம், பக்கங்கள் என்ற தன்மைகள் விளங்குமாதலின் இம்முறை கையாளப்பட்டது. ப.; பக். என்பன ஆங்கில முறையைப் பின் பற்றியனவே; வேறு பயன் கருதியவை யல்ல. பெரும்பாலான நூல்களின் முகவுரையில் I, II, III என்ற எண்களே காணப்பெறு கின்றன. அவை முகவுரை, பக், 1, 2, 3 என்றே கொடுக்கப் பெற்றன. ஒரே எண் இரண்டு, மூன்று அடிக்குறிப்புகளுக்கு அமைந்துள்ளது; அது அதே நூல், அதே பக்கம் என்பதைச் சுட்டு கிறது.

சுருக்கக் குறிப்புகள்

சுவடிகளில் ஆண்டு, திங்கள், தேதி, ஆகியவை சுருக்கக் குறியீடு களால் அமைகின்றன. இவற்றைத் தனியே பின் இணைப்பில் கொடுத்து, செய்திகளைக் கூறுமிடத்தில் ஆண்டு, மாதம், தேதி என்ற சொற்களே ஆளப்பெற்றுள்ளன.

துணைநூற் பட்டியல்

எடுத்தாளப்பெறும் நூல்கள், சுவடிகள் ஆகியவற்றில் பெரும் பாலானவை ஆசிரியர் பெயர் சுட்ட முடியாதவை ஆதலின் சீர் மையும், பிற நன்மைகளும் கருதி துணைநூல் பட்டியல் நூல் பெயர் அகரவரிசையில் அமைக்கப் பட்டுள்ளது.

கலைச்சொல் அகராதி

நூலினுள் கையாளப்பெறும் தமிழ்க் கலைச் சொற்களுக்கு; இணையான ஆங்கிலச் சொற்கள் கொடுக்கப்பெற்றுள்ளன. இவ் வகராதியில் தமிழ்ச்சொல் முதலில் இடம் பெறுவதால் தமிழ் அகர வரிசையில் அமைகிறது.

இவ்வகராதி தனியே அமைக்கப்படினும் 'லெமன்கிராஸ் ஆயில்', 'லைட் டீசல் ஆயில்', 'கெமிகல் வியாபாரி' போன்ற சில சொற்களை அப்படியே தமிழ் எழுத்தால் கொடுக்க நேர்ந்தது கலைச்சொல் அகராதியில் ஆங்கிலத்தில் கொடுக்கப்பெற்றன.

இணைப்புகள்

நூலின் செய்திகளில் சுட்டியவையும், நூலோடு தொடர்புடை யவுமான இணைப்புகள் மட்டுமே சுருக்கமாக இணைப்பில் இடம் பெற்றுள்ளன.

1. சுவடி இயல்

முன்னுரை

சுவடி என்னும் சொல் கையால் எழுதிய நூலைக் குறிப்பது; காரணப் பெயராய் அமைந்தது. தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்பனவும் எழுதிய பொருள்களைக் குறித்தன. தந்திரம், தூக்கு, நூல், பனுவல், புத்தகம் என்னும் சொற்களும் சுவடியைப் போன்று அமைந்தன. சுவடியைப் பற்றி அறிவது சுவடி இயல் ஆகும். சுவடி இயல் என்னும் தொடரின் சொற்பொருள், சுவடி இயலின் நோக்கம், சுவடிகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் மூன்று தலைப்புகளில் இப் பகுதியின் ஆய்வு அமைகிறது.

சுவடி இயல்

அ. சொற்பொருள் : சுவடிகளைப் பற்றி அறிவது சுவடி இயல் எனப்படுகிறது. சுவடிகளைப் பற்றி ஆய்வது, உணர்த்துவது, படிப்பது என்பனவாகிய பொருள்களிலும் இதனைக் கருதலாம்.

உள்ளத்தைப் பற்றி அறிவது, ஆய்வது, உணர்த்துவது, கற்பது உளவியல் எனப்படுகிறது. அறிவியல், ஆய்வியல், ஆன்மவியல், உயிரியல், ஒலியியல், கல்வியியல், சமூகவியல், தமிழியல், தாவர வியல், புவியியல், பொருளியல், மானுடவியல், மொழியியல், விலங்கியல் முதலான தொடர்களும் இத்தகு பொருளில் வழங்கு வனவாகும்.

சுவடி : தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்னும் பெயர்கள் எழுதப்பெற்ற ஏட்டிற்கும் நூலுக்கும் ஆகுபெயர்களாய் வழங்கி வருவதுபோலச் சுவடி என்னும் பெயரும் காரணப்பெயராய் அமைந்தது. ஆனால் சுவடி என்ற சொல் பற்றிய செய்தியோ

எழுது பொருள் பற்றிய குறிப்போ தொல்காப்பியத்தில் சுட்டப் பெறாதது குறிப்பிடத்தக்கதாகிறது. இருப்பினும் சுவடி என்ற பெயர் நூலுக்கு ஆகிவந்த காரணத்தைச் சில இலக்கியச் சான்று களுடன் நிறுவமுடிகிறது.

சுவடு+இ=சுவடி. சுவடு உடையது சுவடி எனக் காரணப் பெயர் பெறுகிறது. எழுதப்படுதலின் எழுத்து என்றாற்போல எழுத்துச் சுவடு உடையது ஆதலின் சுவடி எனப்பெறுகிறது. பதிதலால் உண்டாகும் குறி சுவடு ஆகும். எனவே எழுத்துகள் பதியுமாறு எழுதப்பெற்ற ஏடுகளின் தொகுப்பு சுவடி எனப் பெறுகிறது.

> "பூவா ரடிச்**சுவடு**என் தலைமேல் பொறித்தலுமே"[1]
>
> வெஞ்சினத்து அரியின் திண்காற் **சுவட்டொடு** விஞ்சை வேந்தர்
>
> பஞ்சியங் கமலம் பூத்த பசுஞ்**சுவடு** உடைத்து மன்னோ"[2]

இவ்வடிகளில் அமைந்துள்ள சுவடு என்னும் சொல் பதிதலால் உண்டாகும் குறியினைச் சுட்டுகிறது.

சுவடு - பாதம் நிலத்திற் பொருந்திய தடம். சுவடு உடையது சுவடி ஆகிறது. சுவடி என்பது; இணை, கற்றை, கட்டு, பொத்தகம் என்னும் பெயர்களையும் பெறுகிறது. சுவடித்தல் - பொருத்தி அழகு படுத்துதல். சுவடி - சோடி, சோடணை - அழகுபடுத்துதல் என்னும் பொருள்களைத் தேவநேயப் பாவாணர் விளக்குவதாக எடுத்துக்காட்டுவர்.[3]

> "பட்டுச் சுவேகமொடு பாட்டுப்புறம் எழுதிய
> கட்டமைச் சுவடி பற்றிய கையினர்"[4]

என்னும் அடிகளில் ஏடுகளின் தொகுப்பாகிய கட்டு, சுவடி என்று குறிப்பிடப்பெறுகிறது. கையால் எழுதப்பெற்ற படிவம் சுவடு எனப்படும். எந்தப் பொருளிலும் எழுதப்பட்டதாக இருக்கலாம். எளிதாகவும் விரைவாகவும் எழுதக்கூடிய எழுது கருவிகளால் எழுதப்பெற்றதே சுவடியாகும். கல்லில் வெட்டுவது போன்ற கருவிகளைக் கொண்டு செதுக்கப்பெறும் கல்வெட்டுப் படிவங்களி லிருந்து வேறுபடுத்திக் காட்டக்கூடியதே சுவடியாகும். மிகப் பழங்

---

1. திருவாசகம், 241. 2. பாலகாண்டம் - 934.
3. தேவநேயப்பாவாணரின் சொல்லாய்வுகள், பக். 107.
4. பெருங்கதை, 3:1:119-120.

காலத்தில் அல்லது இடைக்காலத்தில் எழுதப்பெற்ற எழுத்துப் படிவங்களைக் குறிப்பதற்கே சுவடி என்ற சொல் பயன்படுத்தப் படுகிறது என்று கூறுகிறது ஆங்கிலப்பேரகராதி.[5]

"தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
... ...
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்"[6]

என்னும் தொல்காப்பிய நூற்பா தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்பன புறத்துக்காழுடைய பனை, தெங்கு, கமுகு முதலியவற்றின் இலையாகிய உறுப்பினைக் குறிக்கும் மரபுச் சொற்களாகும் என்பதை எடுத்துக் கூறுகிறது.

எழுதப்பெற்ற ஏடுகளும் தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்னும் பெயர்களால் சுட்டப்பெறுவதை இலக்கியங்களிலும் வழக்காற்றிலும் காணமுடிகிறது. இவற்றுள் பெரும்பாலும் கடித வடிவில் எழுதப் பெற்றவை மடல், ஓலை என்ற பெயர்களைப் பெறுகின்றன. நூல் வடிவில் அமைந்தவை ஏடு என்ற பெயரைப் பெறுகின்றன. இவை ஆகுபெயர்கள். இவ்வாகு பெயர்களைப் போலவே சுவடி என்னும் காரணப்பெயரும் அமைகிறது.

தோடு

"அணித்தோட்டுத் திருமுகத் தாயிழை எழுதிய
மணித்**தோட்டுத்** திருமுக மறுத்ததற் கிரங்கி"[7]

அழகிய தோட்டில் எழுதிய திருமுகம் என்னும் பொருளில் தாழை மடலாகிய எழுதப்படுபொருள் தோடு என்ற மரபுச் சொல்லால் வழங்கியுள்ளதையும் இவ்வடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

மடல்—(முடங்கல்)

"மலர்ந்தசெந் தாழை மென்**மடலின்** மேல்தனக்கு
இலங்கிழை யுகிரினால் எழுது பாசுரம்"[8]

"உலைவறு **முடங்கல்** தீட்டி ஒன்றிரண் டனுப்ப லாமே"[9]

---

5. Encyclopaedia Britannica Vol xviii. p. 618.
6. தொல்காப்பியம், மரபியல் - 86.
7. சிலப்பதிகாரம், 8 : 111-112. 8. நைடதம் - 70.
9. குசேலோபாக்கியானம், 283.

இவ்வடிகளில் மடல், முடங்கல் என்பன எழுதப்படுபொருளின் பெயராகவும் கடிதத்தைக் குறிக்கும் பெயராகவும் முறையே அமைந்துள்ளன.

> "கண்மணி அனையாற்குக் காட்டுக வென்றே
> மண்ணுடை **முடங்கல்** மாதவி யீத்ததும்"[10]

> "எற்பயந் தோர்க்கிம் மண்ணுடை முடங்கல்"[11]

என்னும் சிலப்பதிகார அடிகள் மாதவியால் எழுதப்பெற்ற கடிதம் முடங்கல் என்ற பெயர் பெறுவதை உணர்த்துகின்றன. தாழை மடலில் எழுதப்பெற்ற கடிதம் சுருளாக முடக்கப்பட்டு அனுப்பப் பெறுவது ஆதலின் முடங்கல் ஆகிறது.

ஓலை : இலையாகிய உறுப்பைக் குறிக்கும் ஓலை என்னும் சொல் எழுதப்பெற்ற ஓலைகளையும் குறித்து வழங்குகிறது.

> "ஒட்டித்தான் விடுத்த **ஓலை** உட்பொருள் உரைமின்
> என்ன"[12]

> "**ஓலை**யுட் பொருளைக் கேட்டே ஒள்ளெயி றிலங்க
> நக்கு"[13]

> "கணக்குத்துறை முற்றிய கடுஞ்சொல் **ஓலை**
> அரக்குப்பொறி யொற்றி யானையிற் போக்கி"[14]

இவ்வடிகளுள் காணும் ஓலை என்னும் சொல் ஆகுபெயராக மன்னர்களால் அனுப்பப்பெற்ற அரசவைச் செய்திகளும் ஆணைகளும் அடங்கிய கடிதங்களைச் சுட்டிநின்றது.

> "கொற்றவர் திருவுக் கேற்பக் குறித்துநாள் **ஓலை** விட்டார்"[15]

> "பெருகுமண நா**ளோலை** பெருஞ்சிறப்பி னுடன் போக்கி"[16]

> "தோகைமண **வோலை**கொடு தூதுவ ரடைந்தார்"[17]

இவற்றுள் உள்ள ஓலை என்னும் சொல் திருமணச் செய்தியடங்கிய கடிதங்களைக் குறித்து நின்றது.

---

10. சிலப்பதிகாரம் 13:76 - 77.
11. சிலப்பதிகாரம் 13:96.
12. சீவகசிந்தாமணி, 2140.
13. சீவகசிந்தாமணி, 2148.
14. பெருங்கதை, 1:37:208 - 209.
15. தடுத்தாட்கொண்டபுராணம், 9.
16. திருஞானசம்பந்தர் புராணம், 1169,
17. நைடதம், நளன்தூது, 3.

“மாதவி யோலை மலர்க்கையி னீட்ட”[18]

“...வேண்டிற் றெல்லாங் குறைவின்றித்
தரநாம் ஓலை தருகின்றோம்...”[19]

“தேவர்கோன் எழுதும் ஓலை”[20]

இவ்வடிகளுள் வந்துள்ள ஓலை என்னும் சொல் பலதிறப்பட்ட சொந்தச் செய்திகள் எழுதப்பெற்ற கடிதங்களைச் சுட்டி நின்றது.

“ஓடுநீ ருடன்செ லாது நிற்குமோ ஓலை...”[21]

“ஆற்றிடை சமண ரோலை அழிவினால் ஆர்ந்த தம்பம்”[22]

கடிதம் என்ற நிலைமாறி சிறந்த அறவுரை முதலான கருத்துகளடங்கிய இலக்கியமாகத் தொகுக்கும் தன்மை வாய்ந்த ஏடுகளும் இவ்வடிகளில் ஓலை என்றே குறிக்கப்பெறுகின்றன.

“மூட்சியிற் கிழித்த ஓலை படிஓலை மூலஓலை
மாட்சியிற் காட்ட வைத்தேன்”[23]

“வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கிவை
யென்எழுத்து”[24]

முறிச்சீட்டு, உரிமைச் சீட்டு ஆகிய ஆவணக் கடிதங்களும் ஓலை என்ற பெயரால் ஆளப்பெற்றுள்ளன என்பதற்கு இவ்வடிகள் சான்றாகின்றன.

ஏடு : எழுதப்பெற்ற ஓலைகள் ஏடு என்ற பெயரையும் பெறுகின்றன.

“வடமொழி வாசகஞ் செய்தநல் லேடு”[25]

“பொருவருங் கவிதை யேட்டைப் போற்றிமுன்”[26]

செய்தியும் கவிதையும் எழுதப்பெற்ற ஓலைகள் ஏடு என்ற பெயரால் வழங்கப்பட்டன என்பதை இவ்வடிகளால் அறியலாம்.

---

18. சிலப்பதிகாரம், 13 : 82.
19. கழறிற்றறிவார் புராணம், 27.
20. ஷை. இந்திரன் முடிமேல் எறிந்தது, 52.
21. திருஞானசம்பந்தர் புராணம், 807. 22. ஷை. 856.
23. தடுத்தாட் கொண்டபுராணம், 56. 24. ஷை. 59.
25. சிலப்பதிகாரம், 15 : 58.
26. திருவிளையாடல் - கிழியறுத்த - 11.

"நீடுமெய்ப் பொருளின் உண்மை நிலைபெறுந் தன்மை [யெல்லாம்
ஏடுற வெழுதி"[27]

"வேகவதிக் கெதிரேற விட்டதொரு **சிற்றேடு**"[28]

இவற்றுள் வழங்கும் ஏடு என்னும் சொல் எழுதவிருக்கும் ஓலைகள், எழுதிய ஓலைகள் ஆகியவற்றைச் சுட்டி நிற்கின்றது.

"**ஏடு** தேடி யலைந்தஊர் எத்தனை"[29]

"செய்ய சிவஞானத் திரளேட்டில் ஓர்**ஏடு**"[30]

எழுதப்பெற்ற ஓலைகளின் தொகுப்பாகிய சுவடி வடிவில் உள்ள நூலையும் ஏடு என்றே குறிக்கும் இலக்கிய அடிகளுக்கு இவை சான்றாகின்றன,

இதழ் : நாளேடு, வாரஏடு, திங்களேடு என்று வழங்குவது போலவே, நாளிதழ், வாரஇதழ், திங்களிதழ் என்னும் வழக்காற்றில் இதழ் என்னும் மரபுச்சொல் ஆகுபெயரால் வழங்குவதை இக் காலத்தில் காணுகிறோம்.

திருமுகம் : இலையாகிய உறுப்பினைக் குறிக்கும் மரபுச் சொற்களில் ஒன்றாகத் தொல்காப்பியம் குறிப்பிடாத திருமுகம் என்ற சொல்லும் ஓலையில் எழுதிய கடிதத்தைக் குறிப்பதாக இலக்கியச் சான்றுகள் உள்ளன.

"அணிந்தோட்டுத் **திருமுகத்து** ஆயிழை யெழுதிய
மணித்தோட்டுத் **திருமுகம்** மறுத்ததற் கிரங்கி"[31]

என்பது சிலப்பதிகாரச் சான்று.

இச்சான்றுகளுள் ஏடு சுவடி என்பன நூலைக் குறிக்கும் சொற் களாகப் பயன்படுகின்றன. இடை நரம்பு நீக்கப்பட்ட ஓலையின் ஒற்றை அலகு ஏடு எனப்படுகிறது. அவ்வேட்டில் எழுதப் பெற்றதால் நூலும் ஏடு என்றே பெயர் பெறுகிறது. சுவட்டினைத் தாங்கும் அவ்வேடுகளின் தொகுதி சுவடி எனப்பெறுகிறது. இவற்றைப் போலவே தந்திரம், தூக்கு, பனுவல், புத்தகம் என்னும் பெயர்களும் நூலைக் குறித்து நிற்கின்றன.

---

27. திருஞானசம்பந்தர் புராணம், 796.
28. மனோன்மணீயம் - 4. 29. தனிப்பாடல், 2 : 815.
30. தமிழ்விடு தூது, 3. 31. சிலப்பதிகாரம்- 8 : 111 - 112.

தந்திரம் ; "தரும்வகை செலுத்துதல் **தந்திர** வுத்தி"[32] என்னும் அடியில் உள்ள தந்திரம் என்றசொல் நூலைச் சுட்டுகிறது. தன்திறம் பெறுதற்குரிய வழிமுறைகளை வகுத்துக் காட்டுவது என்னும் பொருளில் தந்திரம் என்ற பெயர் பெறுகிறது.

தூக்கு : 'தூக்கு என்பது பாக்களைத் துணித்து நிறுத்துதல்' என்பர் பேராசிரியர். 'தூக்கு எனினும் ஓசையெனினும் ஒக்கும்' என்பர் இளம்பூரணர். 'தூக்கென்பது சொல்லின் முடியும் இலக்கணமாம். அது நிறுத்தலும் அறுத்தலும் பாடலும் என்றின் னோரன்னவற்று மேல் நிக்கும்' என்பது நச்சினார்க்கினியர் தரும் விளக்கம்.[33] எனவே பாக்களை அடிதோறும் துணித்து நிறுத்தி இசைத்தலாகிய ஓசை வேறுபாட்டை உணர்த்தி வரும் பெயர் தூக்கு எனக் கொள்ளமுடிகிறது.

' மன்னுடை மன்றத்து ஓலைத் **தூக்கி**னும்"[34]

"**தூக்கு** சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னால்சொல வல்லபிரான்,"[35]

என்பனவற்றுள் தூக்கு என்பது சீட்டுக் கவியையும் நூலையும் சுட்டுகிறது. ஆய்ந்து அறியத்தகும் பாக்களின் தொகுதி என்ற காரணத்தால் வந்த பெயர் எனலாம். செய்யுளால் ஆன நூல் எனினும் அமையும்.

பனுவல் : ஆழ்ந்து ஆய்ந்து எழுதப்பெற்ற காரணத்தால், பாட்டுகளின் தொகுதியாகிய நூல், பனுவல் என்னும் காரணப் பெயர் பெறுகிறது. இலக்கண, இலக்கியங்கள் பனுவல் என்ற சொல்லை நூல் என்ற பொருளில் ஆளுகின்றன.

"புலந்தொகுத் தோனே போக்கறு **பனுவல்**"[36]

"பாயிரம் இல்லது **பனுவல்** அன்றே"[37]

இவற்றுள் **பனுவல்** என்னும் சொல் நூலைக் குறித்தது,

புத்தகம் : புதிய கருத்துகளைத் தன்னகத்துத் தாங்கி நிற்பத னாலும், அக்கருத்துகளை உள்ளத்தில் பதியவைப்பதனாலும் நூல் என்பதே புத்தகம் என்னும் வேறு பெயரையும் பெறுகிறது.

---

32. நன்னூல் - 15. 33. தொல். பொருள். 399.
34. நன்னூல் - 53. 35. பெரியபுராணம், தொகுதி 4. பக்.16.
36. தொல்காப்பியம், பாயிரம். 37. நன்னூல் - 54.

புத்தகம் என்னும் சொல் பொத்தகம் என்பதன் வழிவந்த சொல். பொத்துதல், பொருத்துதல், சேர்த்தல், தைத்தல், மூட்டுதல், மூடுதல், பொத்து - பொத்தகம் - பொத்திய (சேர்த்த) ஏட்டுக் கற்றை; எழுதிய ஏட்டுத் தொகுதி. சுவடி சேர்த்தல் என்னும் வழக்கை நோக்குக என்பது தேவநேயப் பாவாணரின் கருத்து என்று காட்டுவர்.[38]

"**புத்தகம்** படிக மாலை குண்டிகை பொருள்சேர் ஞான"[39]

"**புத்தகம்** அக்க மாலை வராபயம் பொருந்து கையாள்"[40]

போன்ற பல இலக்கிய அடிகளில் புத்தகம் எனும் சொல் ஆளப் பெற்றுள்ளது.

நூல் பெயர்க்காரணம் : இவற்றுள் புத்தகம் என்ற சொல் அச்சு நூலைக் குறித்து வழங்குவதாகும். சுவடிகளில் கூறப் பட்டுள்ள செய்திகளின் தொகுப்பைத் தந்திரம், தூக்கு, பனுவல் முதலான சொற்களால் வழங்கியது போலப் பெரும்பான்மையான வழக்கில் நூல் என்ற சொல் ஆளப்பெறுகிறது. தொடக்கமும் முடிவும் முரண்படுதலின்றி, தொகுத்தும் வகுத்தும் பொருள் விளக்கி நிற்கும் பொருண்மை நோக்கி நூல் என்னும் சொல் பெருவழக்காய் வழங்குவதாயிற்று. இதனைத் தொல்காப்பியம்,

நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலு முடிவு மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
... ...
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே"[41]

என்னும் நூற்பாவினால் விளக்குகிறது. மேலும் பஞ்சினைக் கொண்டு நூற்கப்பெறும் நூலினைப்போல, சொற்களைக் கொண்டு ஆக்கப்படுதலினாலும், மரத்தின் புறக்கோட்டத்தைத் தீர்க்கும் எற்று நூலினைப் போல, மக்களின் மனக்கோட்டத்தைத் தீர்ப்பதனாலும் உவமையாகுபெயராய் நூல் என்ற பெயர் வழங்குவதாயிற்று என்னும் கருத்தினை வழங்குகிறது நன்னூல்.

"பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத

---

38. தேவநேயப்பாவாணரின் சொல்லாய்வுகள், பக். 107.
39. கம்பராமாயணம் - பாலகாண்டம், தனியன்.
40. திருவிளையாடற்புராணம், கலைமகள் வணக்கம்.
41. தொல்காப்பியம், பொருள், 478,

கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியு மாறு''[42]

''மரத்தின் - கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்
மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு''[43]

என்பன நூலென்னும் பெயர் வந்ததற்குக் காரணம் கூறும் நன்னூல் நூற்பாக்கள்.

நூல் என்னும் சொல் : இலக்கண இலக்கியங்களில் நூல் என்னும் சொல் பயின்று வருவதையும் காணமுடிகிறது.

''முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்''
(தொல். பொருள் - 649)
முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்'' (நன்னூல் - 5)

என்பன இலக்கணத் தொடர்கள்.

''நவில்தொறும் நூல்நயம் போலும்''[44]
''மாலை மார்ப! நூலறி புலவ''[45]

என இலக்கியங்களில் நூல் என்ற சொல் பெருவாரியாகப் பயின்று வருகின்றது. நூலகம், நூலழகு, நூலறிபுலவர், நூலறிவு, நூலாசிரியர், நூலுரைகாரர், நூல் குற்றம், நூல்நயம், நூல்வகை, நூல்வல்லார், நூல்வழக்கு. நூற்பா, நூற்பொருள், நூன்முகம், நூன்முடிபு ஆகிய தொடர்கள், நூல் என்னும் சொல் வழக்காற்றில் மிகுதியாக வருவதைப் புலப்படுத்துகின்றன.

சுவடி — வழக்காறு : மேலே கூறிய அனைத்துச் சொற்களின் பயன்பாட்டினை நோக்க, தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் ஆகிய சினைப்பெயர்கள் ஆகுபெயர்களாய் எழுதப்பெற்ற சுவடிகளைக் குறிக்கின்றன என்பது புலனாகும். இதே போன்று தந்திரம், தூக்கு, பனுவல், புத்தகம் என்னும் சொற்கள் காரணக் குறிகளாய் நூலை உணர்த்துகின்றன என்பதும் புலப்படுகின்றது. நூல் என்ற பெயர் பொருட்சிறப்போடு உவமையாகு பெயராகவும் காரணக்குறியாகவும் பெருவழக்கில் இருந்து வருகிறது என்பது வெளிப்படை. இவற்றைப் போலவே 'சுவடி' என்னும் சொல் நூலைக் குறித்து நிற்கும் காரணப் பெயராகி வழக்காற்றிலும் இருந்து வருகிறது என்பதும் தெளிவாகிறது.

---

42. நன்னூல். 24. 43. ஷை. 25.
44. குறள், 783. 45. திருமுருகாற்றுப்படை, 261.

இயல் : இயல் என்னும் சொல் இசை, இயற்றமிழ், இலக்கணம், ஒழுங்கு, ஒத்து, குணம், சாயல், நடை, பகுதி என்னும் பொருள்களையுடையது. சுவடி இயல் என்னுமிடத்து இயல்பை உணர்த்துவது என்னும் பொருளில் அமைகிறது. உணர்த்தும் பகுதி என்னும் பொருளிலும் இச்சொல் இலக்கண இலக்கியங்களில் கையாளப்படுகிறது.

தொல்காப்பியத்தில் இயல்

> ''எழுத்துக்களின் பிறப்பு உணர்த்துதலின் பிறப்பியல் என்னும் பெயர்த்து ஆயிற்று. மொழிகளை...புணர்க்கும் முறைமை உணர்த்தினமையின் புணரியல் என்று பெயர் ஆயிற்று.
> உருபுகளோடு பெயர் புணரும் இயல்பு உணர்த்தினமை யின் உருபியல் என்னும் பெயர் உரித்தாயிற்று''

எனத் தொல்காப்பிய இயல்களுக்கு விளக்கம் கூறுவர் நச்சினார்க் கினியர்.

> ''பெயர் இலக்கணம் உணர்த்துகின்றார் அதனால் இது பெயரியல் என்னும் பெயர்த்தாயிற்று''

என்பது சேனாவரையர் இயல் என்னும் சொல்லுக்குத் தரும் விளக்கமாகும். பிறப்பியல் தொடங்கி மரபியல் ஈறாகக் குறிப் பிடப்பெறும் இயல்கள் அனைத்தும் இவ்வாறு அமைவனவே.

இலக்கியங்களில்—இயல்

> ''வேத்தியல் பொதுவியல் என்றிரு திறத்தின்
> நாட்டிய நன்னூல் நன்குகடைப் பிடித்து''[46]

> ''எண்ணும் எழுத்தும் இயலைந்தும் பண்ணான்கும்''[47]

என்னும் இலக்கிய அடிகளும் இயல் என்ற சொல்லைப் பயன் படுத்துதற்குச் சான்றாகின்றன.

சுவடி—இயல் : சுவடிகளைப் பற்றி ஆய்வதும் அறிவதும், உணர்வதும் உணர்த்துவதும், கற்பதும் கற்பிப்பதுமாகிய பயிற்சியே '**சுவடி இயல்**' எனப்பெறுகிறது என்பதை இக்காட்டுகளும் விளக்கங் களும் உறுதிப்படுத்துகின்றன. இதே பொருளில் ஆளப்பெறும் உளவியல், சமூகவியல், தமிழியல், நடையியல், புவியியல், பொருளியல், மொழியியல், வணிகவியல் போன்ற தொடர்களும் ஒப்புநோக்கத்தக்கனவாகும்.

---

46. சிலப்பதிகாரம், 3:38-39. 47. ஷை. 3:இறுதி வெண்பா

ஆ. சுவடி இயலின் நோக்கம்

சுவடிபற்றிய செய்தி : "சுவடிகளின் தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் பொருள் தொடங்கிச் சுவடிகளின் செய்திகளை அச்சிட்டு வெளியிடும் முறை ஈறாகப் பல்வகைப் பொருண்மைகளை இத் துறை பெற்றுள்ளது. எனவே இவ்வாய்வின் விளைவாகச் சுவடி இயல் குறித்துப் பல்வேறு செய்திகள் புலனாகின்றன. அவற்றின் சுருக்கமே சுவடிஇயலின் நோக்கமாகத் தரப்படுகிறது.

தமிழ்ச் சுவடிகள் தமிழரின் பலதுறை அறிவினையும் தம்மகத்துப் பெற்றவையாகும். அவ்வனுபவ அறிவைச் சுவடி இயல் பயிற்சி எடுத்துக்காட்டுகிறது. பழங்கால எழுதுபொருள் களின் தன்மைகள் இப்பயிற்சியில் சுட்டிக்காட்டப் பெறுகின்றன. அதனால் பழங்கால எழுதுபொருள்களின் தன்மையோடு இக்கால எழுது பொருள்களின் வசதிகள் ஒப்பிட்டு அறிய முடிகிறது. பழந் தமிழரின் எழுத்து முயற்சியினைப் போலக் கடின உழைப்பினை மேற்கொண்டால் இக்கால வசதியில் பெரும்பயனைத் திரட்ட முடியும் என்ற உணர்வு இக்கல்வியால் தூண்டப்பெறுகிறது.

சுவடிகளின் அகஅமைப்பு புறஅமைப்புகளால் சுவடிகளின் வரலாறு அறியத் தூண்டுகிறது. சுவடிகளின் அழிவு எடுத்துக் காட்டப்பெற்று மேலும் அழியாவண்ணம் பாதுகாக்கச் செய்கிறது. மேலும் சுவடி திரட்டும்முறை, முறைப்படுத்தும்வழி, அச்சாகாத சுவடி அறியும் வழி ஆகியவை இக்கல்வியின்வழி கற்பிக்கப் பெறுகின்றன.

சுவடி ஆய்வுமுறை : மூலபாட ஆய்வின்வழி பாடவேறுபாடு களை அறியவும், உண்மைப் பாடத்தை நிறுவவும் வகை செய் கிறது.

சுவடிப்பதிப்பு : சுவடிப்பதிப்பு முன்னோடிகளின் அனுபவக் கருத்துகளின் நன்மை தீமைகளை ஆய்ந்து சிறந்த பதிப்பு முறையை மேற்கொள்ள வழி வகுத்துக்காட்டுகிறது. யாப்புநெறி, கடின சந்திமுறை, நூலின் ஆய்வுரை, அடிக்குறிப்புமுறை ஆகியவற்றிலும் பயிற்சியளித்துப் பதிப்புப்பணியில் அனுபவம் பெறச்செய்கிறது. இவ்வாறான கருத்துகளை ஆய்வுசெய்து சுவடிப்பதிப்புக்கான பலவகை முடிவுகளைக் காண்பதே சுவடிஇயல் ஆய்வின் நோக்க மாகும்.

இ. சுவடிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

தோற்றம்—பழைய கல்விமுறை : இக்காலத்தில் தாள்களும் அச்சுநூல்களும் பயன்படுவதுபோல மிகப்பழங்காலத்தும் இடைக் காலத்தும் ஏடுகளும் சுவடிகளுமே பயன்பட்டுவந்தன. பள்ளிகள் திண்ணைப்பள்ளிக்கூடம் அல்லது தெருப்பள்ளிக்கூடம் என்னும் பெயரால் நடைபெற்றுவந்தன. பெயருக்கு ஏற்ப அவை ஆசிரியர் வீட்டுத்திண்ணையிலேயே நடைபெறும்; கிராமப் பொது இடத்துத் திண்ணைகள், சத்திரம், சாவடி, ஊர்மன்றம், கோயில் ஆகிய இடங்களிலும் நடைபெறுவதுண்டு. ஊரின் ஒருபுறத்தே உள்ள மரங்களின் நிழலிலும் அப்பள்ளி நடைபெறுவதுண்டு.

''சிந்தைமலர் சொற்றெளிவில் செழுங்கலைகள் பயிலத்தும்
பந்தமற வந்தவரைப் பள்ளியினில் இருத்தினார்''[48]

''ஓத அணைந்த பள்ளியினில் உடன்கொண் டெய்தக்
கடிதென்றார்''[49]

இவ்வடிகள் கலைகளைப் பயிலுமிடம் பள்ளி எனப்பட்டது என்பதை உணர்த்துகின்றன. திண்ணைப்பள்ளியானதால் அவரவர் உட்காருவதற்குரிய சிறிய பாயினையும் (தடுக்கு) சுவடியுடன் சேர்த்து எடுத்துச்செல்லுவர் என்பதை,

''பள்ளித் தடுக்குங் கையேடும்
படிக்குஞ் சுவடியும் பரிந்தெடுத்து''[50]

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. இப்பள்ளிகளுக்கு எல்லார் வீட்டுக்குழந்தைகளும் செல்லுவதில்லை. தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்று விரும்பியவர் மிகச்சிலரே. வசதியும் வாய்ப்பும் பெற்றிருந்த ஒரு சிலரே இவ்விருப்பம் கொண்டனர். இவர்களிலும் பெரும்பாலோர் எண்ணும் எழுத்தும் கற்றநிலையில் திண்ணைப்பள்ளிக் கல்வியோடு தங்கள் படிப்பை முடித்துக் கொண்டனர். வாழ்க்கைக்குத் தேவையான கணக்கும் மொழியறிவும் மட்டுமே போதும் என்று கருதினர். இதனாலேயே,

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்''[51]

---

48. சிறுத்தொண்டர்புராணம், 22. 49. ஷை. 58.
50. பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை.
51. கொன்றை வேந்தன் - 7.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''[52]

என்னும் முதுமொழிகள் தோன்றலாயின. தனித்தனி ஆசிரியரை நாடிச்சென்று இலக்கண, இலக்கியங்களைத் திறம்படக் கற்றுத் தேர்ந்த வாய்ப்பினைப் பெற்றவர் மிகச்சிலரேயாவர். இந்த நிலையே,

''தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளற்கு உரைப்பது நூலே''[53]

என்னும் இலக்கணம் வகுக்கவும் துணைபுரிந்துள்ளது.

''அங்கே (திண்ணைப் பள்ளியில்) தமிழ் நூல்களைப் படித்து இன்புறுதற்குரிய அறிவைப் பெறுதற்குக் கருவிகளாகிய நிகண்டு, நீதிநூல்கள், பிரபந்தங்கள் முதலியன கற்பிக்கப்பட்டன. கணிதத்துக்கு அடிப்படையான எண்சுவடி முதலியவற்றையும் கற்பித்தனர்.''[54] என்னும் கூற்று திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வி யின் அளவைச் சுட்டுவதாகும்.

மேற்கல்வி : ''சென்னைப் பட்டணத்திலிருந்த... வேங்கடாசல முதலியார் அதனை (தொல்காப்பியப் பொருளதிகாரத்தை)ப் பாடங்கேட்கும் விருப்பமுடையரானபோது பிறையூரிற் றிருவாரூர் வடுகநாத தேசிகர் ஒருவரே தொல்காப்பியம் அறிந்தவர் இருக்கிறார் என்று கேள்வியுற்றுத் தமது ஊரை விட்டு அதிக திரவியச் செலவோடு அவ்விடம்போய் இரண்டு வருஷமிருந்து பாடங்கேட்டு வந்தமையாலும், வரதப்ப முதலியார் ஒருவரே பின்பு அதனைத் தந்தைபாற் கேட்டறிந்தவரென்பதனாலும், அதுகாரணமாக அவருக்குத் தொல்காப்பியம் வரதப்பமுதலியார் என்று பெயர் வந்தமை யாலும்... நிச்சயிக்கலாம்''[55]

என்பதனால் தனியாசிரியரைத் தேடிச்சென்று சிறந்த நூல்களைக் கற்றவர்களின் தன்மையும் அளவும் புலனாகிறது. இவ்வாறு தேடிச்சென்றபோதும் தாம் விரும்பிய நூலைக் கற்க இயலாத நிலை ஏற்பட்டதையும் வரலாறு உணர்த்துகிறது. பாடங்கேட்க ஆசிரியர் ஒருவரை நாடியபோது,

---

52. குறள், 392. 53. நன்னூல், 37.
54. மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம், பக். 5.
55. தாமோதரம். பக். 121-122.

"ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு புதையலுக்குச் சமானம்... இவ்வளவு பிரயாசைப்பட்டுக் கற்றுக்கொண்டதை...சுலபமாக உமக்குச் சொல்லி விடலாமா?...நான்போய் வருகிறேன்"[56]

என்று கூறிச்சென்ற செய்தியால் இவ்வுண்மையை அறியலாம். இக்கல்விமுறையில் ஒவ்வொரு நூலையும் உருப்போட்டு ஒப்பித்து முடிக்கவேண்டும் என்ற நிலை வழக்காற்றில் இருந்து வந்தது.

"புகவு பெறுவான் வாரம் ஓதும்பரிசு : சூத்திரத்திலும் சூத்திராணத்திலுந் துருச்சொல்லி ஒன்பது புகவினில் இரண்டு கிரம வாரம் அடுத்தோதுவது. சாகையிலுங் கற்பத்திலுங் கணத்திலுந் துருச் சொல்லி ஒன்பது புகவினில் இரண்டுவாரம் அடுத்தோதுவது. நாலு பாதத்திலுந் துருச்சொல்லி ஒன்பது புகவினில் அகத்தூஹத்தில் இரண்டுவாரம் அடுத்தோதுவது"[57]

என்னும் செப்பேட்டுத் தொடர்கள் நூல் முழுமையையும் உருப் போட்டு முடித்தல் வேண்டும் என்ற கல்விமுறையைப் புலப் படுத்துவனவாகும். இம்முறை மிகக்கொடுமையாக இருந்ததாலோ என்னவோ

"ஏடு கிழியாதா எழுத்தாணி ஒடியாதா
வாத்தியார் சாகானா வயிற்றெரிச்சல் தீராதா"

என்னும் தொடர் மக்களிடையே பரவியிருந்துள்ளது.

வாய்வழிப் பாடம் : ஆசிரியர் தாம் இயற்றிய அல்லது கற்றறிந்த நூலை வாய்மொழியாகவே பாடம் சொல்லி வந்தார். பாடம் கேட்டவர் அவற்றைத் தம் மனத்தில் இருத்தி, அந்நூலினை வாய் மொழியாகவே பிறருக்கும் கற்பித்து வந்தார்.

" நக்கீரர் செய்த களவியல் உரையைத் தம் மகனார் கீரங் கொற்றனாருக்கு உரைத்தார். கீரங்கொற்றனார் தேனூர் கிழாருக்கு உரைத்தார்......"

இவ்வாறு ஒன்பது ஆசிரியர் வழிமுறையை எடுத்துக்காட்டும் இறையனார் களவியல் உரை வாய்மொழியாகவே நூல்கள் கற்பிக்கப் பெற்று வந்தன என்பதற்கு ஒரு சான்றாக அமைகிறது. இது உரைநூலின் துணைகொண்டு பாடம் நடத்தப்பட்ட தலைமுறைகளைச் சுட்டுவதாகக் கொள்ளவும் இடமளிக்கிறது.

---

56. என் சரித்திரம், பக். 157-158.
57. கல்வெட்டு ஓர் அறிமுகம், பக். 27.

இசைப்பாடல்கள், பக்திப்பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், தொழில் ஊக்கப்பாடல்கள், உணர்ச்சிப் பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள், ஏற்றப்பாடல்கள், நாடகப் பாடல்கள் போன்றவை எழுதப் படிக்கத் தெரியாத நாட்டுப்புற மக்களிடையே வாய்மொழி வழியாகவே வளர்ந்தவை; பரவியவை யாகும். இன்றும் கிராம நாடகக் குழுக்களில் உள்ள சிறந்த நடிகர், பாடகர் ஆகியோருள் பலர் எழுத்து வாசனை அறியாதவராவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடமொழிச் சுலோகங்களைச் சொல்லி ஆலயங்களில் அருச்சனை செய்யும் பலர் வடமொழி கற்காதவர் ஆவர். இவை யாவும் வாய்மொழி வழி வளர்ந்தவை என்பது போதரும்.

எழுத்துப் பயிற்சி : எழுதும் தாள் இல்லாத அக்காலத்தில் மணலில் எழுதிப் பயிற்றுவிப்பதைத் தொடக்கநிலைப் பயிற்சி யாகக் கொண்டனர். குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும் தொடக்க நாளில் செந்நெல்லை ஒரு தட்டில் பரப்பி அதில் கைவிரலால் எழுதச் செய்தனர். நெல்லிற்குப் பதிலாக அரிசியையும் பயன்படுத்தினர். இதே முறையில் நாள்தோறும் மணலில் எழுதிப் பயிற்றுவித்தனர்.

இவ்வாறு எழுத்துகளை நன்றாக எழுதக் கற்ற பிறகு ஓலை யில் எழுதும் பயிற்சி தொடங்கப் பெறும். பிற்காலத்தில் கரும் பலகையில் (சிலேட்) எழுதும் பயிற்சி ஏற்பட்டது.

> "பிள்ளைகளுக்கு எழுத்துப் பழக்கம் உண்டாக உபாத்தி யாயர் ஓர் ஓலையில் எழுதித் தருவார். பிள்ளைகள் அதே மாதிரி எழுதிப் பழகுவார்கள். அந்த மூலஓலைக்குச் சட்டம் என்று பெயர்."[58]

இவ்வாறே தமிழ் எண்களையும் எழுத்துகளையும் பலமுறை எழுதிப் பழகினர் என்பதற்குச் சான்றாகப் பல சுவடிகள் கிடைக் கின்றன.

சுவடிகள் உருவாதல் : எழுதப் பழகும் இளைஞருக்கு ஓலை தயாரித்துத் தரும் பணி பெற்றோரைச் சார்ந்ததாயிற்று. உழைப்பு, ஓய்வின்மையாகிய காரணங்களால் பெற்றோர் அனைவருமே இப்பணியில் முழு ஊக்கம் செலுத்த முடிவதில்லை. வசதியற்ற பலர் சில ஆண்டுகளில் பள்ளிப் படிப்பை முடித்துக் கொள்ள வேண்டியவராயினர்.

---

58. என் சரித்திரம், பக்-80.

சிறிய நூல் சுவடிகள் உருவாதல் : பள்ளியில் தாங்கள் படிக்க வேண்டிய நூல்கள், படித்து முடித்த சில நீதி நூல்கள், அந்தாதி, சதகம், மாலை ஆகிய சமயம் அல்லது இறை பற்றிய நூல்கள் முதலானவற்றை மட்டுமே அவர்கள் எழுதி வைத்தனர். மேலும் பள்ளியில் கற்பித்த 'குடும்பத்துக்கு வேண்டிய வைத்திய முறைகளும், நாள் பார்த்தல், சாதகம் பார்த்தல் முதலிய சோதிட நூல் வழிகளும், ஆலய வழிபாட்டு முறைகளும்'[59] அடங்கிய சுவடிகளையும் எழுதி வைத்தனர்.

'பண்டைக் காலத்தில் பதங்களைப் பிரித்துப் பழகுவதற்கும், பலவகையான பதங்களைத் தெரிந்து கொள்வதற்கும்; மனனம் செய்வதற்கும் அனுகூலமாக இருக்குமென்று கருதி அந்தாதிகளை முதலில் மாணாக்கருக்குப் பாடம் சொல்லி வந்தார்கள்'[60] இவ்வாறு கல்வி கற்றதன் அடிப்படையிலேயே சுவடிகள் உருவாகியிருக்கின்றன. பல நூலகங்களிலும் நிறுவனங்களிலும் பாதுகாக்கப் பட்டு வரும் சுவடிகளுள் அறுபது விழுக்காடு இத்தகு சிறிய நூல்களே இருக்கின்றன.

இலக்கண, இலக்கியச் சுவடிகள் உருவாதல் : தொடக்கக் கல்வியை முடித்து, மேலும் கற்க வேண்டுமென்ற ஆர்வமும், ஏற்ற வசதியும் வாய்ப்பும் பெற்றவர், தனித்திறமுடைய ஆசிரியரை நாடிச்சென்று இலக்கண, இலக்கியங்களைக் கற்றனர். தாங்கள் கற்ற ஒரு சில நூல்களுக்கான சுவடிகளை மட்டும் எழுதி வைத்தனர்.

சுவடி உருவான தொடக்கநிலை : ஒரு சிலர் இலக்கணங்களும் பேரிலக்கியங்களுமாகப் பல நூல்களைக் கற்கும் நிலையில் அவற்றை எழுதி வைத்துக் கொண்டு பாடங்கேட்க வேண்டியவராயினர். ஆசிரியரிடமிருந்தோ பிறரிடமிருந்தோ அந்நூல்களுக்கான சுவடிகளைப் பெற்று எழுதிக் கொண்டனர். அவ்வாறு கிடைத்த சுவடிகள் ஒரே மாதிரியாக இருந்ததில்லை.

வாய்மொழியாகவே பாடங்கேட்டு நூல்களை முழுமையாக மனப்பாடம் செய்த கற்றவருள் யாரோ ஒருவர், ஏதோ ஒரு காலத்தில் தாம் மனப்பாடம் செய்து வைத்திருக்கும் நூல்களுள் ஒன்றிற்கு எழுத்து வடிவம் தருகிறார். இச்செயலையே பல்வேறு இடங்களில் உள்ளவர் மேற்கொள்ளுகின்றனர். வாய்மொழியாக

---

59. மீனாட்சிசுந்தரம்...சரித்திரம். பக்-5.
60. என் சரித்திரம், பக்-262.

வளர்ந்த அந்நூல்கள் எழுத்து வடிவம் பெறும்போது, எழுத்து வடிவம் தருவோரின் கல்வித்திறன், கேள்வியறிவு, நினைவாற்றல், கற்பனைத்திறன், எழுத்துப் போக்கு ஆகியவற்றுக்கு ஏற்ப வடிவெடுத்து விடுகின்றன.

“ தரு [1] **வனத்துள்** [2] **யாளியற்றும்** [3] **தகைவேள்விக்**
கிடையூறாத் தவம் செய் [4] **வோர்கள்**
வெருவரச் [5]**சென் றடை** காம வெகுளியென
நிருதரிடை [6]**விலக்கா** வண்ணம்
செரு [7] **முகத்துக்** [8] **காத்தியென** [9] **நின்** [10] **சிறுவர்**
[11] **நால்வரினும்** கரிய செம்மல்
ஒருவனைத் [12] **தந் தீதியென** உயிர் [13] **இரக்கும்**
[14] **கொடுங்கூற்றின்** உளையச் சொன்னான்.” [61]

வேறுபாடுகள் : 1. வனத்தில் 2. யாமியற்றும் 3. தழல், தவ, தனி 4. செய்வோரை 5. சென்றடர் 6. விலங்கா 7. முகத்தில் 8. கார்த்தியெனை 9. உன் 10. புதல்வர் 11. அனைவரினும் 12. தந்திடுதியென 13. ஈர்க்கும் 14. கடுங்கூற்றின்

ஆசிரியர் ஒருவரால் இயற்றப் பெற்ற இப்பாடல் பலசுவடிகளில் இவ்வாறான பல வேறுபாடுகளுடன் எழுதப் பெற்றுள்ளது. இந்நிலை மனப்பாடம் செய்யப்பட்ட பாடல்கள் எழுத்து வடிவம் பெற்றபோது ஏற்பட்ட முதல் நிலையாகும். இதில் பொருள் மாற்றம் பெறாத வடிவ வேறுபாடுகளே காணப்படுகின்றன. பிறகு படி எடுத்தவர்களால் ஏற்பட்ட பாட வேறுபாடுகளும் பிழைகளும் இவ்வடிவ வேறுபாடுகளிலும் வேறுபட்டவையாகும்.

வாய்மொழி வழியாகக் குறிப்பிட்ட ஒரு சில நூல்களை மட்டும் கற்க முடிந்தது. மேலும் பல நூல்களையும் உரைகளையும் கற்க வேண்டிய நிலையில் ஏடுகளில் எழுதிப் படித்தனர்.

“ஏடா யிரங்கோடி எழுதாது தம்மனத்து எழுதிப் படித்த விரகன்” [62] என்னும் அந்தகக் கவியின் கூற்று இதனைப் புலப்படுத்தும்.

சுவடிகளின் வளர்ச்சி—படியெடுக்கப்பட்டு வளர்ந்தநிலை :

நூலாசிரியர் தாம் இயற்றும் நூலினை எழுத்துவடிவில் அமைத்துத் தருகிறார். அந்நூலினைப் பிறருக்குக் கற்பிக்கும்

---

61. கம்பராமாயணம், பாலகாண்டம், 6:10.
62. தமிழ்ப் புலவர் வரிசை, பகுதி-3, பக்-38.

போது, தம் சுவடியைக் கொடுத்துத் தம் மாணாக்கரைப் படி எடுத்துக் கொள்ளச் செய்வார். ஆசிரியர் பலரும் இவ்வாறே மாணவரைப் படியெடுத்துக் கொள்ளச் செய்வர். சிதைந்துபட்ட தம் சுவடிக்குப் பதிலாக வேறு ஒருபடி எழுதித்தரச் சொல்லுவதும் உண்டு.

இயற்கையாகவே ஓலைச் சுவடிகள் நூறு ஆண்டுகளுக்கு மேல் பழுது பட்டுப்போகும். அடிக்கடி எடுத்துப் பயன்படுத்துங்கால் மிக விரைவில் பழுதாகும். அவற்றைக் காக்க வேண்டி வேறு படிகள் எழுதப் பெற்றன. ஆயினும் மூலப்படிகளும் காப்பாற்றப் பெற்று வந்தன. இதனால் சுவடிகள் பெருகின.

ஊற்றுமலை சமீன்தார் போன்ற செல்வந்தர் தம் வீட்டுப் புத்தக சாலைக்காகவும், தருமபுரம், திருவாவடுதுறை முதலான மடங்களின் மடாதிபதியர் தங்கள் மடத்துச் சரஸ்வதி பண்டாரத் திற்காகவும் பிறரைப் படியெடுத்துக் கொடுக்கச் செய்து வாங்கி வைத்தனர்.[63]

> "......திருநெல்வேலி, தம்பாபிள்ளையன் அவர்கள் ஏடு பார்த்து எழுதின ஸ்ரீவைகுண்டம் சிவசங்கரம் பிள்ளை யவர்கள் ஏடு பார்த்து, இராமாயணம் திருவேங்கடம் எழுதுவித்து எழுதின ஏட்டின் படிக்கு முதற்புத்தகம் பிழை பார்த்து முடிந்தது."[64]

என்னும் சுவடிக்கூற்று ஏடுகளின் பல தலைமுறைகளைச் சுட்டு கின்றது. மேலும் பிறர் வேண்டுகோளுக்காக ஏடுகள் படியெடுக்கப் பட்டன என்பதையும் புலப்படுத்துகின்றது.

உரையாசிரியரால் வளர்ச்சி : உரையாசிரியர்கள் தோன்றி மூல நூல்களை ஆய்ந்து பல்வேறு வகையில் உரையெழுதி யளித்ததன் பயனாகவும் சுவடிகள் பல பெருகலாயின.

புதிய ஆக்கநிலையில் வளர்ச்சி : சமயச் சான்றோர்களும் புலவர் பெருமக்களும் அவ்வப்போது தோன்றிப் பல சமய நூல் களையும் இலக்கண, இலக்கிய, நிகண்டு நூல்களையும் ஆக்கித் தந்துள்ளனர். அவையாவும் சுவடி வடிவிலேயே பிறந்தன.

பழைய சுவடிகளின் பெருக்கம் — இறையுணர்வு நூல்கள் : தமிழ் மன்னர்கள் ஆலயங்களில் தேவாரம், திருவாசகம் முதலான நூல்களை நாள் தோறும் ஓதுமாறு செய்து அதற்காக மானியமும் அளித்தனர்.

---

63. என் சரித்திரம், பக்-361. 64. சீவகசிந்தாமணி, பதிப்புரை

" உடையார் ஸ்ரீராஜராஜீஸ்வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ்செய்ய உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும்......"[65]

என்னும் கல்வெட்டுச் செய்தி இராசராசன் தேவராம் ஓதுதற்கு நிவந்தம் கொடுத்ததைக் கூறுகிறது. இச்செயலால் சுவடிகள் பல பெருகலாயின என்பதற்கு மேலும் ஒரு கூற்றினைச் சான்று காட்டலாம்.

" அருட்பாசுரங்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பல்லாயிரம் தமிழ் மக்கள் தலங்கள் தோறும் அடங்கன் முறைகளையும் திருவாசகத்தையும் ஓதி வந்தார்கள்... இவர்கள் சில சமயம் திருமுறைகளைப் பூசையில் வைத்து மலர்களால் அருச்சித்து வழிபட முற்பட்டபோது, ஆதியில் கிடைத்த திருமுறைகளின் ஏட்டுப் பிரதிகள் பல மடங்கு பெருகலாயின. இவை இரண்டு விதத்தில் பெருகின. மூலப் பிரதியைப் பார்த்துப் பெயர்த்து எழுதிக் கொண்டே போனபோது பலப்பல புதுப்பிரதிகள்உண்டாயின; இவை ஒருவகை. மற்றொன்று, திருவாசகம் முழுமையும் மனப்பாடம் செய்து வைத்திருந்தவர்கள் தங்கள் ஞாபகத்திலிருந்து ஏட்டில் எழுதி வைத்ததனால் உண்டானபிரதிகள்."[66]

இக்கூற்று மனப்பாடத்திலிருந்து சுவடிகள் உருவான முறையையும், சுவடிகள் பலவாகப் பெருகின செயலையும் உறுதிப்படுத்துகிறது.

இறையுணர்வின் மிகுதியால் பிறவாகிய தோத்திரப் பாடல்களும் மாலை நூல்களும் பலவாகத் தோன்றி, மக்களிடையே பரவி, அவர்கள் இல்லங்களில் சுவடி வடிவில் நிலைபெற்றன.

சிற்றிலக்கியங்களின் பெருக்கம் : குறுநில மன்னர்கள், வள்ளல்கள், பிறதலைவர்கள் ஆகியவர்களைப் புகழ்ந்து பாடிய சிற்றிலக்கியச் சுவடிகளும் இவ்வாறே மக்களிடையே பரவிப் பெருகின.

இதிகாசக் கதைகள் : இராமாமணம், பாரதம் போன்ற இதிகாசக்கதைகள் இசையோடு கூடிய கதைகளாக ஆங்காங்கே சொல்லப்பட்டு மக்களைக் கவர்ந்தன. அதனால் அவரவர்

---

65. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி II-, பகுதி-III, எண்-65.
66. திருவாசகக் குறிப்புக்கள், பக்.164-165.

விரும்பியவாறு அந்நூல்கள் முழுமையாகவும், ஒவ்வொரு நிகழ்ச்சிப் பகுதிகளாகவும் படியெடுக்கப்பட்டுப் பல இல்லங்களில் குடி கொண்டன.

அல்லியரசாணி மாலை, கிருட்டினன் தூது, சுபத்திரைக் கலியாணம், சூதாட்டப் போர், துரோபதை மாலையீடு, விதுரன் விருந்து, வீர அபிமன்யு முதலான சிறுசிறு நூல்கள் பாரதக் கதையின் பகுதிகளாக வடிவெடுத்தவையாகும். இவை நாடக வடிவிலும் வில்லுப்பாட்டு, அம்மானை வடிவங்களிலும் பெருகின.

மருத்துவச் சுவடிகள் : குழந்தைகள் முதல் முதியோர் வரை இருபாலாருக்கும் தேவைப்பட்ட தமிழ் மருத்துவம் சித்தர்களாலும் முனிவர்களாலும் தோற்றுவிக்கப்பட்டது. பயன்பாட்டு முறையில் கையாண்ட மருத்துவர்களாலும், பயன்படுத்திப் பலன் அடைந்த பொதுமக்களாலும் ஒவ்வொரு வகை மருத்துவமும் ஏடுகளில் பொறிக்கப் பெற்றுப் பெரும்பாலான இல்லங்களில் இடம்பெற்றன.

பிறசுவடிகள் : இவ்வாறே சோதிடம், கணிதம், இசை, நாடகம், பிற சாத்திர வகைகள் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றோர் தோற்றுவிக்க, ஆர்வமுடையோர் படியெடுத்துப் பயன்படுத்தினர்.

நூலாசிரியர் தாம் இயற்றிய நூலைச் சுவடியில் எழுதினர். மாணாக்கர் தாம் மனப்பாடம் செய்த நூலைச் சுவடியில் எழுதி வைத்தனர். மேலும் பல நூல்களைக் கற்க விரும்பியவர்கள், தாம் கற்க விரும்பிய நூலைப் பிறரிடமிருந்து பெற்றுப் படியெடுத்துக் கொண்டனர். இவ்வாறு பல வகையில் சுவடிகள் உருவாக்கப் பெற்றன. செல்வந்தர், மன்னர் ஆகியோர் அளித்த ஊக்கத்தால் பல சுவடிகள் பெருகின. உரையாசிரியர் பலரின் ஆய்வினால் உரையோடு கூடிய சுவடிகளாகப் பெருகின. மக்களின் இறையுணர்வால் பெருகிய சுவடிகள் மிகப்பல. மக்களின் தேவைக்காகவும் பல சுவடிகள் படியெடுக்கப் பெற்று வளர்ச்சியுற்றுள்ளன.

2. அமைப்பும் வகையும்

முன்னுரை

சுவடிகளை உருவாக்குவதற்கு எழுதப்படுபொருள், எழுது பொருள், எழுதுகருவி என்ற மூன்றும் தேவைப்படுகின்றன. உலகத்தின் பல பகுதிகளிலும் பபைரஸ், தோல் முதலான எழுதப் படுபொருள்கள் பயன்பட்டன. நம்நாட்டில் பெரும்பாலும் ஓலைச் சுவடிகளிலேயே பல நூல்கள் உருவாக்கப் பெற்றுள்ளன. அச்சுவடிகள் புறஅமைப்பாலும் அக அமைப்பாலும் பல திறப் பட்டுக் காணப் பெறுகின்றன; பொருளாலும் தன்மையாலும் நடையாலும் பலதிறப்படுகின்றன. சுவடிகளின் இத்தகு அமைப்பையும் வகையையும் இவ்வியல் ஆராய்கிறது.

அ. பொருள்கள் - எழுதப்படுபொருள்

பபைரஸ் : பபைரஸ் என்னும் கோரைப்புல்லைப் பல நாடு களிலும் எழுதப் பயன்படுத்தினர். கி. மு. இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே எகிப்தியர் நைல் ஆற்றங்கரையில் விளையும் இப்புல்லில் நாணல் குச்சிகளால் இலைச்சாறு, மிருகங்களின் இரத்தம் ஆகியவற்றைக் கொண்டு எழுதியுள்ளனர். எகிப்தின் அண்டை நாட்டினரான கிரேக்கர் (யவனர்), பினீஷியர், உரோமர், எபிரேயர், அர்மீனியர் ஆகிய பலரும் கி. பி. ஏழாம் நூற்றாண்டு வரை பபைரஸ் என்னும் புல்லையே எழுதப்படு பொருளாகப் பயன் படுத்தினர்.[1]

"ஒரு மரணத்தைக் குறித்து கி. மு. 1500 இல் எழுதிய கையறு நிலைப் பாடலின் பேபிரஸ் பிரதியொன்று பிரிட்டிஷ் கண்காட்சிச் சாலையில் உள்ளது."[2]

---

1. Encyclopaedia Britannica, Vol, XVIII. pp. 618-619.
2. இலக்கிய உதயம், எஸ். வையாபுரிப்பிள்ளை. பக்-25.

"உலகத்திலுள்ள நூல்களுள் மிகமிகப் பழமையானது மேற் கூறியபடி எகிப்தில் நீலநதிக் கரையிலே தோன்றியதுதான். இந்நூலின் பிரதியைத் தீப்ஸ் நகரத்தில் ப்ரீஸ்ஸி என்பவர் கண்டு பிடித்தனர். இதனைப் ப்ரீஸ்ஸி சுவடி என்று வழங்குகிறார்கள். பாரீஸ் நகரத்தில், தேசிய நூல் நிலையத்தில் இந்நூலின் பிரதி இப்பொழுது வைக்கப்பட்டுள்ளது. இப்பிரதி கி. மு. 2500-ல் எழுதப் பெற்றது. இந்நூலின் பெயர் 'ப்டாஹ்-ஹோட்டெப் உபதேசங்கள்.' ப்டாஹ்-ஹோட்டெப் என்பவர் கி. மு. 3850-ல் எகிப்து அரசனாக முடி சூடியவர். ஆகவே இந்நூல் தற்காலத்தி லிருந்து 6000 ஆண்டுகளுக்கு முற்பட்டது."[3] என்னும் இக்குறிப்பு களால் தொன்மைக் காலத்தில் பயன்படுத்திய எழுதப்படு பொருள்கள் பற்றிய செய்திகள் புலனாகும்.

பபைரஸ் என்ற சொல்லின் வளர்ச்சி : சுவடி அல்லது புத்தகம் என்ற பொருளில் பபைரஸ் சுருளைக் கிரேக்கர் பிப்லியன் என்று வழங்கினர். உரோமர் பிப்ளி என்று வழங்கினர். இதுவே கிறித்துவ வேதநூலாகிய விவிய நூலுக்கும் (பைபிள்) பெயராயிற்று. பேப்பர் என்ற சொல்லும் பபைரஸ் என்பதிலிருந்து உருவானதேயாகும்.[1]

பிறபொருள்கள் : பபைரஸ் விரைவில் அழிந்துபடுவதால் பல நாடுகளில் தோலைப் பயன்படுத்தினர். பிற நாடுகளில் தோலும் பபைரஸ் கோரையும் பயன்படுத்தப் பெற்ற போது நம் நாட்டில் பெரும்பான்மையாக ஓலையே எழுதப்படு பொருளாகப் பயன் படுத்தப் பெற்று வந்தது. களிமண் பலகை, கல், தோல், உலோகத் தகடு, இலை, மரப்பலகை, பூர்ஜப்பட்டை, துணி, மூங்கில் பத்தை முதலான பொருள்களும் எழுதப்படு பொருள்களாகப் பயன் படுத்தப் பெற்றன என்பதற்கும் சான்றுகள் கிடைக்கின்றன.

பொன் தகடு

"......பைம்பொன்செய் தவிசின் உச்சி
இருந்துபொன் ஓலைசெம்பொன் ஊசியால் எழுதி"[4]

"பைம்பொனின் ஓலை மீது பண்புற வெழுதி யின்னே
எம்பியும் ஏகு கென்றான்"[5]

---

3. இலக்கிய உதயம் பக். 18-19 .4. சீவகசிந்தாமணி, 369.
5. வில்லிபாரதம் சூதுபோர், 51.

என்பன மன்னர்களும் செல்வந்தர்களும் பொன்னாலான தகடு களை எழுதப் பெறும் ஓலையாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதைப் புலப்படுத்துகின்றன.

செப்பேடு : செம்பு என்னும் உலோகத்தின் தகடுகளையும் எழுதப் பயன்படுத்தியுள்ளனர்.

" ......அகல் ஞாலமும் உள்ளளவும்
செப்பேடு செய்து கொடுத் தருளினன்"[6]

" ......சோமாசிக் குறிச்சியிது.....காடக சோமயாஜியாருக்கு
ஏகபோகமதுவாக எழிற்செப்பேட்டொடு கொடுத்தனன்"[7]

அரசு ஆணைகளும் உறுதிமொழிகளும் செப்பேடுகளில் பொறிக்கப் பெற்றன என்பதை இச்சான்றுகள் புலப்படுத்துகின்றன.

வெள்ளித்தகடு : "டச்சுக்காரர்களுக்கு 1658 இல் தஞ்சை, விஜயராகவ நாயக்கர் அளித்த பட்டயம் வெள்ளித் தகடுகளில் பொறிக்கப்பட்டிருக்கின்றது. இத்தகடுகள் முன்னர் பட்டேவியா என்று வழங்கிய ஜாக்கர்த்தாவின் பொருட்காட்சி சாலையில் இருக் கின்றன."[8] வெள்ளித் தகட்டில் எழுதியதை இவை புலப்படுத்து கின்றன.

கல்

" நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே"[9]

என்னும் ஔவையார் கூற்று நல்லவை, நிலையானவை கல்லில் பொறிக்கப்பெற்றன என்பதை உணர்த்துகிறது. செப்பேடுகளைப் பயன்படுத்தியது போலவே அரசு செய்திகளைப் பொறிக்கக் கற்களையும் பயன்படுத்தியுள்ளனர். இச்செய்தியை,

"செம்பிலும் சிலையிலும் வெட்டுவித்துக் கொள்க"[10]

"ஸ்ரீராஜராஜ தேவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது"[11]

என்னும் கல்வெட்டுத் தொடர்களே புலப்படுத்துகின்றன.

---

6. தளவாய் புரச் செப்பேடுகள், பத்தி. 7.
7. பாண்டியர் செப்பேடு பத்து, பக். 50.
8. தென்னிந்திய வரலாறு, பக். 26.
9. மூதுரை, 2. 10. கல்வெட்டியல், பக். 126.
11. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி 2, பகுதி 3, எண். 65.

அரசு செய்திகளைப் பொறிக்கக் கற்களைப் பயன்படுத்திய தனால் அச்செய்திகள், சித்தன்னவாசல் கல்வெட்டு, மீனாட்சிபுரம் கல்வெட்டு எனக் கல்வெட்டு என்ற பெயராலேயே கூறப்பெறு கின்றன.

ஓலை : நம் நாட்டில் பயன்படுத்திய எழுதப்படு பொருள் களுள் ஓலையே மிகுதியானதும் முதன்மையானதும் ஆக விளங்கு கிறது.

> " ... நாம் சொல்ல நம் ஓலையெழுதும்...முதன்
> தீர்த்தகரன் எழுத்தினாலும்"[12]

> "ஒப்பமாய் உரைக்க வல்லான் ஒருவனோர் ஓலை கொண்டு"[13]

> "மட்டோலைப் பூவனையார் வார்ந்தோலை சேர்த்தெழுதிப்
> பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும்"[14]

செய்திகள் எழுதவும், தூதுவரின் செய்திகள் அனுப்பவும், இலக்கி யங்களை எழுதி வைக்கவும் ஓலையைப் பயன்படுத்தினர் என்பதை யும், அரசரிடம் 'ஓலையெழுதுவோர்' என்னும் பணியாளர் இருந்தனர் என்பதையும் இவ்வடிகள் உணர்த்துகின்றன.

இலை, துணி

> "கையிற் புனையும் கழிநுண் ணாளர்
> ஏட்டிலும் கிடையினும் மூட்டமை கிழியினும்"[15]

என்னும் இவ்வடிகள் இலையுந் துணியும் எழுதப்படு பொருள் களாகப் பயன்படுத்தப் பெற்றன என்பதை உணர்த்துகின்றன.

தாழைமடல்

> "முதிர்பூந் தாழை முடங்கல்வெண் தோட்டு
> விரைமலர் வாளியின்.......
> திருமுகம் போக்கும் செவ்விய ளாகி"[16]

என்னும் சிலப்பதிகாரக் கூற்று தாழைமடல் எழுதப்படு பொருளாகப் பயன்பட்டதைச் சுட்டுகிறது.

இலையும் பட்டையும் : "பதப்படுத்திய வாழை இலை பயன் படுத்தப் பெற்றுள்ளது. இன்றும் கூட வங்கத்தின் கிராமப்பகுதிப்

---

12. கல்வெட்டு ஓர் அறிமுகம், பெரிய லெய்டன் செப்பேடு, பத்தி 2. 13. சூளாமணி, 108. 14. தமிழ்விடுதூது, 8.
15. பெருங்கதை (பக். 324) : 140.
16. சிலப்பதிகாரம், 8;47-49.

பள்ளிகளில் மாணவர்கள் பயன்படுத்துகிறார்கள்... ஆல், எருக்கு முதலியவைகளில் எழுதியதாக யோகினி தந்திரம் கூறுகிறது... இமயமலைச் சாரலிலே பூர்ஜ மரங்கள் அதிகம் உள்ளன. இம் மரத்தின் பட்டை ஆதிநாள் இருந்து மொகலாயர் காலம்வரை பயன்பட்டதாக அல்பரூனி குறிப்பிடுகிறார். அசாம், வங்கப் பகுதி களில் சசி அல்லது அகர் மரவகைப் பட்டைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவைகளைத் தவிர நுணா, வேம்பு முதலியவை களின் பட்டைகள் மந்திர தந்திரங்கள் எழுதப் பயன்படுத்தப் பட்டுள்ளன''.[17]

இவற்றுள் ஓலையே பெரும் பான்மையாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளது என்பது இன்று நம்மிடையே கிடைக்கும் சுவடிகளால் அறியமுடிகிறது.

மிகுதியாக ஓலையைப் பயன்படுத்திய காரணம் : இலை, மரப் பட்டை, களிமண்பலகை போல்வன விரைவில் அழியக் கூடியவை. மரப்பலகை, மூங்கில் பத்தை போன்றவற்றில் பெரிய நூல்களை எழுதிக் கையாளுவது கடினம். தோல், துணி, உலோகத் தகடு போல்வன மிகுந்த பொருட் செலவினை உண்டாக்கும். பிற உயிர்களைக் கொன்று அவற்றின் தோலில் நல்ல கருத்துடைய நூல்களை எழுதுவது மனிதத்தன்மைக்கு முரண்பட்டதாகவும், அருவருக்கத் தக்கதாகவும் அமைகிறது. அவற்றில் விரைவாக எழுதவும் முடியாது. கருங்கல் போன்ற பிறபொருள்கள் பிற இடங் களுக்கு எடுத்துச்செல்ல இயலாதவை. ஆனால் ஓலையோ ஒன்றிரண்டு நூற்றாண்டுகள் வரை அழியாத்தன்மை வாய்ந்தது; மிகுந்த செலவு இல்லாதது; தமிழகத்தில் கிராமப்புறங்கள்முதல் எல்லா இடங்களிலும் மிகுதியாகவும் எளிமையாகவும் கிடைக்கக் கூடியது; மிகப் பெரிய அளவுடைய நூல்களையும் ஒருகட்டில் அடக்கக்கூடிய தன்மை வாய்ந்தது; பல இடங்களுக்கும் எடுத்துச் செல்லும் அளவு உடையது; பாதுகாக்க ஏற்றது. இக்காரணங் களால் ஓலைகளையே தமிழர் தேர்ந்தெடுத்து மிகுதியாகப் பயன் படுத்தினர்.

எழுது கருவிகள் : ஆணி, கூரியகல், தண்டு, நாணல், பறவை இறகு, பன்றிமுள், விலங்குகளின் எலும்பு, மெல்லிய தூரிகை போன்ற பல பொருள்களை மக்கள் எழுது கருவிகளாகப் பயன் படுத்தியுள்ளனர். என்றாலும் ஓலைகளில் எழுதும் எழுத்தாணி

---

17. இந்திய நூலக இயக்கம், பக். 79-80.

யையே மிகுதியாகப் பயன்படுத்தினர் என்பது தெளிவு. எழுத்தாணியை 'எழுத்து ஊசி' எனவும் வழங்கியுள்ளனர். இவற்றுள் சிலவற்றிற்கு இலக்கியச் சான்றுகள் :

தந்தம் : இலக்கியத்தை முனிவர் கூற இறைவன் எழுதினான் என்னும் மரபில் தந்தம் எழுது கருவியாகிறது.

> "...........முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்
> ஏடாக வடமேரு வெற்பாக அம்கூ ரெழுத்தாணிதன்
> கோடாக எழுதும் பிரானை"[18]

> "மருப்பூசி யாக மறங்கனல்வேன் மன்னர்
> உருத்தகு மார்போலை யாகத்—திருத்தக்க
> வையக மெல்லா மெமதென் றெழுதுமே"[19]

இவை தந்தமே எழுத்தாணியாகவும், வடமேரு வெற்பும் மன்னர் தம் மார்புமே ஏடாகவும் கொண்டு எழுதப்பட்டதாகக் கூறும் இலக்கியக் கூற்றுகள் ஆகின்றன.

பித்திகை முகை,?உகிர்

> "திருமுகம் போக்கும் செவ்வியள் ஆகி
> அலத்தகக் கொழுஞ்சேறு அளைஇ அயலது
> பித்திகைக் கொழுமுகை ஆணிகைக் கொண்டு"[20]

> "மலர்ந்த செந்தாமை மென்மடலின் மேற்றனக்
> கிலங்கிழை யுகிரினா லெழுது பாசுரம்"[21]

என்னும் அடிகள் பித்திகை முகையினையும், உகிரினையும் எழுதும் ஆணியாகக் கொண்ட செயல்களுக்குச் சான்றாகின்றன.

பொன் ஊசியும் எழுத்தாணியும் : ஓலையில் எழுதப் பயன்பட்டது எழுத்தாணி என்பதைப் பல்லாற்றாலும் அறிய முடிகிறது.

> "...பைம்பொன்செய் தவிசின் உச்சி
> இருந்துபொன் ஓலை செம்**பொன் ஊசி**யால் எழுதி"[22]

> "எழுத்தாணியால் எழுதப்பட்டது ஏடு"[23]

---

18. வில்லிபாரதம், துதிப்பாடல். 19. பெருந்தொகை, 518.
20. சிலப்பதிகாரம், 8:49-51. 21. நைடதம், நளன்தூது, 40.
22. சீவகசிந்தாமணி, 369. 23. வீரசோழியம், வேற்றுமை, 7.

"ஓலை தேடி **எழுத்தாணி** தேடி"[24]

இவை ஓலையில் எழுத எழுத்தாணியே பயன்பட்டது என்பதை உணர்த்துகின்றன எழுத்தாணி இரும்பினால் ஆக்கப் படுவது. மன்னரின் குழந்தைகள் பொன்னாலான எழுத்தாணியைப் பயன் படுத்தினர் என்பதும் விளங்குகிறது. இக்கருவிகள் எழுதுகோல் எனவும் வழங்கப்பட்டன.

'எழுதுங்கால் கோல்காணாக் கண்ணே போல்'[25]

என்பது இதனைத் தெளிவுபடுத்தும்.

எழுத்தாணி வகை : எழுத்தாணியானது பயன்பாட்டு அடிப் படையில் மூன்று அமைப்பினை உடையதாக அமைகிறது; குண்டெழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி என்ற பெயர்களையும் பெறுகிறது. அவற்றுள்,

குண்டெழுத்தாணி : இது அதிக நீளம் இல்லாதது; கொண்டை (மேற்புறம்) கனமாகவும் குண்டாகவும் அமைந்தது; ஓலையில் எழுதத் தொடங்குவோர் பயன்படுத்துவது; இதன் கூர்மையும் குறைவாகவே இருக்கும். இதனால் பெரிய எழுத்துக் களாகவே எழுத முடியும்.

வாரெழுத்தாணி : இது குண்டெழுத்தாணியைவிட நீள மானது; மேற்புறத்தில் கொண்டைக்குப் பதிலாகச் சிறிய கத்தி அமைந்திருக்கும். இக் கத்தி தனியாக இணைக்கப் படாமல் ஒரே இரும்பில் நுனிப்பக்கம் கூர்மையாகவும் மேலே செல்லச்செல்லக் கனத்தும் அமைந்து மேற்புறத்தில் கனத்த இரும்பானது தட்டை யாகக் கத்தி வடிவில் அமைந்து இருக்கும். இக் கத்தியினை ஓலை வாருவதற்குப் பயன்படுத்துவர். நுனிப்பக்கம் எழுதவும் மேற் பக்கம் ஓலை வாரவும் பயன்படுவதால் இது வாரெழுத்தாணி என்ற காரணப் பெயரினைப் பெறுகிறது. நன்றாக ஓலையில் எழுதும் பழக்கமுடையவர்கள், தாங்களே அவ்வப்போது ஓலையினை நறுக்கி, வாரி ஒழுங்குபடுத்தி ஏடுகளாக அமைத்துக் கொள்ளும் நிலையில் இவ்வாரெழுத்தாணியினைப் பயன்படுத்துவர். இதுவே பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்ட எழுத்தாணியாகும். இவ் வெழுத்தாணியினைப் பனை ஓலையால் உறை செய்து அதில் செருகி வைப்பதும் உண்டு. வாரெழுத்தாணியே மிகுதியாகப் பயன்பட்டது என்பதை,

---

24. தனிப்பாடல், தொகுதி, 4-717. 25. குறள், 1285.

"நான் பாடம் கேட்டு முடித்தேன். அப்போது என் ஆசிரியர் ஏடுவாரிச் சுவடிசேர்த்துக் கொடுத்தார். ஒரு வாரெழுத்தாணியையும் அளித்து அந்நூலைப் பிரதி செய்து கொள்ளும்படி சொன்னார்"[26]

என்று கூறும் ஏட்டில் எழுதிப் படித்தோரின் கூற்று உறுதிப் படுத்தும்.

மடக்கெழுத்தாணி : வாரெழுத்தாணியைப் போன்று ஒரு முனை எழுதவும், மறுமுனை கத்தியாகப் பயன்படுத்தவும் அமைந்ததே. ஆனால் இருமுனைகளையும் மடக்கி இடையில் உள்ள ஒரு கைப்பிடியில் அடக்கிக் கொள்ளுமாறு அமைந்திருக்கும். அப்பிடி மரம், தந்தம், இரும்பு, பித்தளை போன்ற ஏதேனும் ஒரு பொருளால் ஆனதாக இருக்கும். கையடக்கமாக வைத்துக் கொள்ள ஏற்றதாக இருக்கிறது. மேலும் பயன்படுத்தப்படாத போது மடக்கி வைக்கப்படுவதால் எழுத்தாணியின் முனையால் குத்துப்படுவது, கத்தியால் காயம்படுவது போன்ற எதிர்பாரா இன்னல்களிலிருந்தும் காக்கப்படுகிறது. இதுவும் காரணப் பெயராக அமைந்ததே. எழுதுகோல் பேனா என்று பெயர்பெற்ற காலத்தில் எழுதுகோலும் கத்தியுமாக அமைந்த இவ்விருவகை எழுத்தாணிகளும் பேனாகத்தி என்று வழங்கப்பெற்றுள்ளன.

பிற எழுத்தாணிகள் : வெட்டெழுத்தாணி கூரெழுத்தாணி என்ற பெயர்களும் வழக்காற்றில் இருந்தன என்பதும் அறியக் கிடக்கிறது.

"கூராக வெட்டெழுத் தாணியெழு தும்படிக்
குங்கவிதை பகர வதிலோர்
கூரெழுத் தாணிசது ரங்கமுது குப்புறங்
குதிரையடி வெண்பா வர"[27]

"நட்டிய வோலைகுளங் காலா யழித்தழித்து
வெட்டுமெழுத் தாணியுமண் வெட்டியாய்"[28]

என்னும் அடிகளில் அவ்வெழுத்தாணியின் பெயர்கள் ஆளப் பெறுகின்றன.

எழுதுபொருள்கள் : பலவகை இயற்கை வண்ணங்களை எழுது பொருள்களாகத் தமிழ்மக்கள் கையாண்டிருக்கின்றனர் என்பதைக்

---

26. என்சரித்திரம், பக். 259. 27. பெருந்தொகை, 1795.
28. பணவிடுதூது, 144.

குகைக் கோயில்கள் போன்றவற்றில் காணும் வண்ண ஓவியங்கள் புலப்படுத்துகின்றன. சுவடிக் கட்டுகளின் புறத்தே அமைக்கப் படும் கட்டைகளிலும் அவ்வண்ண ஓவியங்கள் காணப்படுகின்றன. இதுபோலவே விளக்கின்மை, இலைச்சாறு, பூச்சாறு, மிருகங்களின் குருதி ஆகிய பொருள்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஓலை களில் எழுத்தாணி கொண்டு எழுதிய எழுத்துகள் ஓலை நிறத்தி லேயே இருக்குமாதலின் அவற்றின் மீது விளக்கின்மை, இலைச் சாறு, மஞ்சள் போன்றவற்றைப் பூசி எழுத்துகள் தெளிவாகத் தெரியுமாறு செய்துள்ளனர். இதனை,

> ''மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
> மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்''[29]

> ''மனம்தனை பரியநின்ற மதலைமை யாடுகென்றே''[30]

என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன.

ஆ. ஏடு தயாரித்தல் – பதப்படுத்துதல்

பனை ஓலையைப் பதப்படுத்தி ஒழுங்குபட நறுக்கிச் சுவடி வடிவில் அமைத்து எழுதப் பயன்படுத்துவர். பதப்படுத்துவது என்பது பெரும்பாலும் ஓலைகளை நிழலில் உலர்த்தி எடுப்பதே ஆகும். முற்றிய ஓலைகளாயின் உலர்ந்தபின் ஒன்றிரண்டு நாட்கள் சேற்றில் புதைத்து வைத்துப் பின்பு எடுத்து நிழலில் உலர்த்திப் பதப்படுத்துவதும் உண்டு.

> ''பனை ஓலைகளை ஒரே அளவாக நறுக்கி, வேகவைத்து உலர்த்தி ஒன்றாகச் சேர்த்து...கட்டிய சுவடிகளே ஓலைச் சுவடிகளாகும்''[31]

என்னும் கூற்றில் உள்ள வேகவைத்துப் பதப்படுத்தும் முறை நடைமுறையில் இருந்ததாகத் தெரியவில்லை. இதனைச் சொல் விளங்கும் பெருமாள் அவர்களும் தம் ஆய்வேட்டில் எடுத்தாளு கிறார்கள்.

> ''எழுத்தாணிக்குப் பதமான பனை ஓலைகளை ஒரே அளவாக நறுக்கி வேகவைத்து உலர்த்தி ஒன்றாகச் சேர்த்து...கட்டிய சுவடிகளே ஓலைச்சுவடிகளாம்''[31(அ)]

---

29. தமிழ்விடுதூது, 25. 30. சீவக சிந்தாமணி, 367.
31. அச்சுக்கலை, பக். 11-12.
31(அ). டாக்டர் உ.வே. சாமிநாதையரின் பணி ஓர் ஆய்வு, பக். 49.

என்பது அவர்காட்டும் தொடர். இதிலும் எழுத்தாணிக்குப் பதமான ஓலைகளை எடுத்து நறுக்குவது என்பதும் பொருத்த முடையதாகத் தெரியவில்லை.

சட்டம் : ஒழுங்காக நறுக்கப்பட்ட அவ் ஓலைகள் இடையே முதுகு நரம்புடன் கூடியதாய் இரண்டு ஏடுகளாக இணைந்தே காணப்படும். இவ்வாறு நறுக்கப்பட்டவை 'சட்டம்' என்று கூறப் படும். ஓலையில் எழுதத் தொடங்கும் ஆரம்ப நிலையில் இச் சட்டங்களையே பயன்படுத்தியுள்ளனர் என்பது தமிழ் எழுத்து களும் எண்களும் மட்டுமே எழுதப்பட்டுள்ள அரிச்சுவடி, எண்சுவடி போன்ற சுவடிகளைக் காணப் புலனாகும். இச்சட்டங்களைச் சுவடிகளின் இரு புறத்தும் வைத்துக் கட்டவும் பயன்படுத்துவர்.

ஏடு : இச்சட்டங்களுக்கு இடையேயுள்ள நரம்புகளை ஒழுங்காக நீக்கினால் ஒவ்வொரு சட்டமும் இரண்டிரண்டு தனிப் பகுதிகளாகப் பிரியும். அவை ஒவ்வொன்றையும் ஏடு என்று வழங்குவர். வாழை இலையின் இடைத்தண்டு நீக்கப்பட்டுக் கிழிக்கப் பட்ட இலையினை ஏடு என்று கூறும் வழக்கு இக்காலத்திலும் இருக்கிறது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட ஏடுகள் 'வெள்ளோலை' என்றும் வழங்கப்பெற்றன. வெள்ளோலை என்பதற்கு எழுதா ஓலை என்று அகராதிகள் பொருள் கூறுகின்றன. சிறந்த கருத்து களை ஓலையில் பொறித்து வைக்கும் செயலையும் ஏட்டில் எழுதுதல் என்று வழங்கி வந்துள்ளனர்.

> "வெள்ளேட் டங்கன் வித்தக மெழுதிய"[32]
>
> "தூதொய் பார்ப்பான் மடிவெள் ளோலை"[33]
>
> "வெண்பா இருகாலிற் கல்லானை வெள்ளோலை
> கண்பார்க்கக் கையால் எழுதானை..."[33அ]

என்னும் பாடலடிகள் எதுவும் எழுதா ஓலையை வெள்ளோலை என்று சுட்டுகின்றன.

ஏட்டில் எழுதுதல்

> "நீடுபெயப் பொருளில் உண்மை நிலைபெறுந் தன்மை
> ஏடுற எழுதி..."[34] [யெல்லாம்

32. பெருங்கதை, 1:32:69. 33. அகநானூறு, 337.
33(அ.) தனிப்பாடல், 49.
34. திருஞான சம்பந்தர் புராணம், 796.

> "கற்றமந் திரங்க ளெல்லாம் தனித்தனி கனத்த வேட்டில்
> ஒற்றருந் தலைவ ரெண்ணா யிரவரு மெழுதி யிட்டார்"[35]

என்னும் அடிகள் கருத்துகளை ஓலையில் பொறித்து வைக்கும் செயலை ஏட்டில் எழுதுதல் என்று கூறும் வழக்காற்றை உணர்த்து கின்றன.

ஓலைவாருதல்: ஏடுகளைத் தயாரிக்கும் செயல் 'ஓலை வாருதல்' எனப்படும். ஏடுவாருதல் என்னும் வழக்காறும் இருந் துள்ளது.

> "படிக்கும் நூல்களை ஏட்டிலேயே எழுதிப் படித்து வந்தோம். அப்படி எழுதுவதற்கு முன்பு பனையோலை களை வருவித்து வாரித் துளையிட்டுச் சேர்த்துப் புத்தக மாக்கி எங்களிடம் கொடுத்து எழுதச் செய்வார்"[36]

> "நான் பாடம் கேட்டு எழுதி முடித்தேன். அப்போது என் ஆசிரியர் ஏடுவாரிச் சுவடி சேர்த்துக் கொடுத்தார்...அந் நூலைப் பிரதி செய்து கொள்ளும்படி சொன்னார்"[37]

என்னும் அனுபவக் கூற்றுகள் ஓலைவாருதல் என்னும் செயலை விளக்குகின்றன.

துளையிடுதல்: வாரி எடுக்கப்பெற்ற ஏடுகளை ஒழுங்காக அடுக்கி, நீள அளவினை நான்கு பாகமாக்கி அவற்றுள் முதல்பாக முடிவிலும் மூன்றாம்பாகத் தொடக்கத்திலுமாக இரண்டு துளை யிடுவது வழக்கம். அவையே ஏடுகளைத் தொகுத்துச் சுவடியாக்கப் பயன்படும். நீளம் குறைவான ஏடுகளாயின் ஒரே துளையிட்டுக் கட்டுவதும் உண்டு.

ஓலை பதம்பார்த்தல்: ஏடுகள் எழுதப் பதமாக இருக் கின்றனவா என்று அறிய எழுத்தாணியால் சுழித்துப் பார்ப்பர். சுழிக்க எளிமையாக இருந்தால் எழுதத் தொடங்குவர். எழுத் தாணி சிக்கினால் ஏடு ஈரமாக உள்ளது என்றும், எழுதும்போது கொர கொர வென்று சத்தம் ஏற்பட்டு, ஓலையில் துளைவிழுதல், ஓலை முறிதல் முதலியன ஏற்பட்டால் மிகுதியாக உலர்ந்துவிட்டது என்றும் அறிந்து சிறிது உலர விடுவதோ, ஈரமாக்குவதோ செய்து, பதமாக்குவர். இவ்வாறு சுழித்து அறியும் முறையே பிற்காலத்துப் 'பிள்ளையார் சுழி' இடும் வழக்கமாயிற்று போலும்.

---

35. திருவிளையாடல், கழுவேற்றின படலம், 18.
36. மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம், பக். 16,
37. ஷை பக். 259.

பனைவகை : கூந்தற்பனை எனப்படும் தாளிப்பனை (ஸ்ரீதாளம்), நுங்குப்பனை ஆகிய பனை மரங்களின் ஓலைகளே சுவடிகளுக்குப் பயன்படுத்தப் பெற்றன.

"நீலக் காழ்மிசை நெற்றி மூழ்கி
உள்நுகுப்பு ஓலையும்"[38]

"வெண்மணல் பொதுளிய பைங்கால் கருக்கின்
கொம்மைப் போந்தைக் குடுமிவெண் தோட்டு"[39]

என்பன பொதுவாகப் பனை மரங்களைச் சுட்டும் இலக்கியத் தொடர்கள்.

சுவடியை உருவாக்குதல் : உரோமர் பலகைத் துண்டுகளின் மேல் ஆணியால் எழுதி வைத்தனர். அப்பலகைத் துண்டுகளின் அடுக்கைக் கோடக்ஸ் (Codex) என்றனர். அதன் வழியே ஏடுகளின் தொகுப்பாகிய கட்டையும் கோடக்ஸ் என்றே வழங்கினர். அதுவே வேற்று மொழித் தாக்கத்தால் பண்டில் (Bundle) எனப்பட்டது.[40] ஆனால் தமிழரோ எழுதப்படாத ஏடுகளின் தொகுப்பையும் சுவடி என்றே வழங்கினர். எழுதப்படாத தனி ஏடுகள் மட்டும் வெள்ளோலை, வெள்ளேடு எனப்பட்டன.

இ. சுவடிகளின் அமைப்பு

புறஅமைப்பு—நீள அகலம் : ஓலைகளின் அளவிற்கு ஏற்பச் சுவடிகளின் நீள, அகலங்கள் அமையும். சுவடி தயாரிப்போரின் திறமைக்கும் அழகுணர்ச்சிக்கும் ஏற்ப அவற்றின் வடிவம் அமைவதுண்டு. தேவைக்கும் நூலின் அளவிற்கும் ஏற்றவாறு சுவடியின் கன அளவு உருவாகும்.

"பல தமிழ் நூல்களை. ஒவ்வொன்றையும் ஒரே அளவுள்ளதாகச் சுவடிகளில் எழுதி வைத்துக் கொள்வதில் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்குப் பெருவிருப்பம் இருந்தது"[41]

சுவடிகளைத் திரட்டி வைப்போரின் அழகுணர்ச்சி இக்கூற்றால் புலப்படுகிறது.

சிறிய, பெரிய சுவடிகளின் அமைப்பு : சென்னை, அரசினர் சுவடி நூலகத்திலுள்ள கரிநாள் விளக்கம் (டி. 1998) என்னும் சுவடி

38. பெருங்கதை, (பக். 323)--129. 39. குறுந்தொகை, 281.
40. Encyclopaedia Britannica, p. 620.
41, அச்சும் பதிப்பும், பக். 218.

சுமார் எட்டு செ. மீ. நீளமும், முக்கால் செ. மீ. அகலமும் உடையது. பதினாறு ஏடுகளை உடைய அச்சுவடியில் பக்கத்திற்கு இரண்டு வரிகளே எழுதப்பட்டுள்ளன. ஆனால் அதே நூலகத்தில் உள்ள கந்தபுராணச் சுவடியோ (டி. 542) ஐம்பது செ. மீ. நீளமும் நான்கு செ. மீ. அகலமும் உடையது. ஆயிரத்து நூற்று எண்பத்திரண்டு பக்கங்கங்களையுடையது. ஒரு பக்கத்திற்குப் பத்து வரிகள் எழுதப்பட்டுள்ளன. இச் சுவடியைக் காட்டிலும் நீள அகலங்களில் சிறிது குறைந்துள்ள கம்பராமாயணச் சுவடி (டி. 514), ஆயிரத்து நானூற்றுத் தொண்ணூற்றிரண்டு பக்கங்களை யுடைய மிகப் பெரிய சுவடியாகும். பெரியபுராணச் சுவடி (டி. 619), அப்பர் தேவாரம் (டி. 1131) ஆகிய சுவடிகளும் ஆயிரம் பக்கங் களுக்கு மேலானவை.

பம்பர வடிவச் சுவடி : சுமார் நான்கு செ. மீ. விட்டத்தில் வட்ட வடிவமாக நறுக்கி இடையே துளையிட்டுக் கோக்கப் பெற்ற ஒரு சுவடியில் திருமுருகாற்றுப்படை எழுதப் பெற்றுள்ளது. அவ்வட்ட வடிவமான ஏடுகள் குறுக்களவில் (விட்டம்) ஒன்றற் கொன்று ஒரு ஓலையின் கன அளவு குறைவாக வெட்டப்பட்டுக் கோக்கப்பட்டுள்ளதால் அதன் முழு வடிவம் ஒரு பம்பரம் போலக் காட்சியளிக்கிறது.

சிவலிங்க வடிவச் சுவடி : ஒரே அளவுடைய வட்டங்களை நறுக்கி இணைக்கப்பட்ட சிவலிங்க வடிவமானது, நீண்ட சதுரத் தில் பல ஏடுகளால் ஆன பீடத்தின் மேல் பொருந்துமாறு துளை யிட்டுக் கோக்கப்பட்ட சுவடியும் உண்டு. பீடமாக அமைந்த ஏடு களிலும், சிவலிங்க வடிவில் ஆன ஏடுகளிலும் திருவாசகம் எழுதி வைப்பதுண்டு. திருமுருகாற்றுப்படை, திருவாசகம் ஆகிய பாடல்கள் எழுதப்பட்ட இச்சுவடிகளைப் பூசையில் வைத்து வழிபடுவர்.

சட்டங்களின் அமைப்பு : மருத்துவச் சுவடிகள் பலவற்றின் சட்டங்களில் இலைச்சாறு, மஞ்சள், சுண்ணாம்பு, போன்ற பொருள்களால் ஆக்கப்பட்ட பலவகை வண்ணங்களால் மூலிகை களின் படங்கள் வரையப் பெற்றுள்ளன. இராமாயணம் எழுதப் பட்ட சுவடியின் சட்டத்தில் நாமம், சங்கு, சக்கரம் ஆகிய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இவற்றால் தேவைக்கும் நூலின் அளவிற்கும் ஏற்றவாறு சுவடிகள் உருவாக்கப் பெறுகின்றன என்பதோடு, சுவடி தயாரிப்

போரின் திறமைக்கும் அழகுணர்ச்சிக்கும் ஏற்பவும் சுவடிகளின் புற வடிவங்கள் உருவாகின்றன என்பதும் தெளிவாகின்றது.

சுவடிக்கட்டின் அமைப்பு : சுவடியின் முன்னும் பின்னும் முதுகு நரம்பு நீக்கப்படாத சட்டங்கள் சிலவற்றை அமைத்துச் சுவடிக் கட்டினை உருவாக்குவர். மரச்சட்டங்களை அமைப்பதும் தொடர்ந்து இருந்து வந்துள்ளது. ஓலைச்சட்டம், மரச்சட்டங் களிட்டுக் கட்டிய சுவடியினை அழகிய துணியில் சுற்றி வைக்கும் முறையும் இருந்துள்ளது. அழகான நூல்கயிறு அல்லது பட்டுக் கயிறு சுவடியின் ஏடுகளைச் சிதறாமல் பாதுகாத்து நிற்கும். ஒரு துளையில் இக்கயிறு நிற்பதுபோல் மற்றொரு துளையில் குச்சியோ ஆணியோ நின்று மேலும் அக்காவலைப் பலப்படுத்தும். இரு முக்கோணங்கள் இணைந்தாற்போல வெட்டப்பட்ட, நரம்போடு கூடிய, கிளி மூக்கு என்னும் ஓலைத் துண்டு கயிற்றின் நுனியில் கட்டப்பெற்று கயிறு கழன்று வராதபடி பாதுகாக்கும். துளை யிடப் பெற்ற செப்புக்காசு, உலோகத்தகடு, சோழி ஆகியவை கிளிமூக்கிற்குப் பதிலாக அமைவதும் உண்டு.

கலப்பு ஏடுகளுடைய சுவடிகள் : ஒரே நூல் எழுதப்பட்டுள்ள சுவடியில் புதியனவும் பழையனவுமாகிய ஏடுகள் காணப்படுவதும் உண்டு. இவை ஒரே அளவுடையனவாகவோ பலவேறு அளவுடை யனவாகவோ இருக்கும். இவற்றை நோக்க ஒரு நூல் பல காலத் திலும் எழுதி உருவாக்கப் பெற்றுள்ளது என்பதும், தேவையான ஏடுகள் அவ்வப்போது தயாரித்துக் கொள்ளப் பெற்றன என்பதும் புலனாகும். மாறாக ஒரே அளவினதாக அமைந்த சுவடிகளே மிகுதி.

சுவடிகளின் அக அமைப்பு : காப்புப் பாடலுடன் தொடங்கு வதும், நூலின் பெயர் முதலியன சுட்டுவதும், உட்தலைப்புகள் அமைப்பதும், முடிவில் வரலாறு கூறுவதும், வாழ்த்துடன் முடிப்பது மாகிய முறைகள் சுவடிகளின் அகஅமைப்புகளாகின்றன.

சுவடிகளின் தொடக்க அமைப்பு : இறைவணக்கம் அல்லது காப்புப் பாடலுடன் தொடங்குவது அனைத்துச் சுவடிகளுக்கும் பொருந்துகிறது. உரைநடை (வசனநடை) நூலாயினும் இறை வணக்கப் பாடல் அமைந்துள்ளது. இப்பாடல் பெரும்பான்மையும் நூலொடு தொடர்புடையதாகவும், நூலாசிரியரால் செய்யப் பெற்றதாகவும் இருக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட கடவுளர் மீது பாடப் பெற்ற பாடல்களும் காணப்படுகின்றன. சில சுவடிகளில் நூலொடு தொடர்புடைய இக் காப்புப் பாடல்களுக்கு முன்பு, ஏடு எழுதுவோர் சில பாடல்களை எழுதி வைத்துள்ளனர். அவை :

1. வேறு ஆசிரியர்களால் இயற்றப் பெற்றவையாகவும், வேறு நூல்களின் இறைவணக்கப் பாடல்களாகவும் இருக்கின்றன.
2. ஏடு எழுதுவோரே இயற்றிப் பயன்படுத்தி வரும் பாடல்களாகவும் அமைகின்றன.
3. அந்த நூலுக்காகவே ஏடு எழுதுவோரால் இயற்றப் பெற்றுச் சேர்க்கப்பட்டவையாகவும் உள்ளன.

இறைவணக்கப் பாடல்கள்

"தந்திமுகத் தெந்தை சதங்கைப் பதம்போற்றிச்
சிந்தை விளக்காந் **திவாகரத்துள்**—வந்த
தொகுதியொரு **பன்னிரண்டுஞ்** சோராம னேரே
பகுதி யுறமனமே பற்று"[42]

"உலகினர் பவமற மலைமக டவஞ்செயுந்
... திருப்பட் டிச்சுரன் பதம்பணிந்து ...
ஆதர **வாலக ராதி நிகண்டெ**ன
வோதினன் யாவரு முணர்ந்திட னினைந்தே"[43]

"இரவி தனைவணங்கி எப்போதும் ஈசன்
திருவடியே சென்னியின்மேற் சேர்த்து—மருவினிய
சாமுத் திரிகந் தமிழால் விரித்துரைப்பாம்
நாமுத் திரையால் நயந்து"[44]

இறைவணக்கப் பாடல்களாகிய இவை நூலொடு தொடர்புடையனவாகவும் நூலாசிரியரால் இயற்றப் பெற்றனவாகவும் விளங்குகின்றன. இறைவணக்கம் கூறியே நூலைத் தொடங்கும் தமிழ் மரபின்படி இச் சுவடிகளில் ஒவ்வொரு பாடல் மட்டுமே காணப்படுவதாலும், அனைத்துச் சுவடிகளிலும் அதே பாடல் காணப்படுவதாலும் இம்முடிவிற்கு வர முடிகின்றது.

காப்புப் பாடல்கள்

"மாதவத்தால் அஷ்டசித்தி யெட்டும் பெற்ற
வரிசையினால் வைத்தியநூல் வகையாய்ச் சொல்வேன்......
சாதகமாய் மனமடக்கி யறிவிற் கூட்டித்
தற்பரமாய் நின்றகண பதிகாப் பாமே"[45]

---

42. சேந்தன் திவாகரம், டி-4.
43. அகராதி நிகண்டு, டி-4.
44. சாமுத்திரிகா லட்சணம், ஆர், 4386.
45. அகத்தியர் வாகடம், ஆர்-1781.

''வருள்சிசு வாகடத்தை வகுக்கநான் உரையாய்ப் பாடித்
தெருளென வாழி பாதம் சீர்பெறத் தொழுதேன் காப்பு''[46]

காப்புப் பாடல்களாகிய இவையும் நூலொடு தொடர்புடையவை; நூலாசிரியரால் இயற்றப் பெற்றவையாகும்.

உரைநடைச் சுவடிகளில் காப்புப் பாடல்: இராமாயண வசனம், பாகவதசாரம் ஆகிய உரைநடைச் சுவடிகளிலும் முதலில் இறைவணக்கப் பாடல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இராமாயண வசனம் என்னும் சுவடியில் (டி. 381)

''நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்''
(கம்பரா. பா. 12)

என்று தொடங்கும் கம்பராமாயணப் பாடலே முதலில் அமைந்துள்ளது.

''வேத வியாசர் விரித்துரைத்த பாகவத
மோதிக் கருத்து ஞுறுதிபெற்றுத்—தீதகற்றி
மோட்சமுட னைசுரிய முண்டாய் முகூர்த்தமெனுங்
காட்சிபெற மும்மதத்தான் காப்பு''[47]

என்னும் பாடல் பாகவத சாரம் என்னும் உரைநடைச் சுவடியில் எழுதப் பட்டுள்ளது.

பல கடவுளர் வணக்கம்

''ஆதியாம் அகண்டபரி பூரணமாய் நின்ற
அகண்டபரா பரத்திருந்தஜுங் **கரனே** காப்பு
சோதியாம் **அறுமுகவன்** பாதங் காப்பு
துரியவெளி தனில்நின்ற**சுந் தரி**யே காப்பு
வாதியா மென்**குருவின்** பாதங் காப்பு
மகத்தான **பெரியோர்கள்** சரணங் காப்பு
பேதியா வைத்தியந்தான் அறுநூ றாகப்
பேசுகிறேன் **வாணி**பதம் பேராங் காப்பே''[48]

இப்பாடல் பல கடவுளர்மீது பாடப் பெற்றது. ஒரே பாடலில் பல கடவுளர்களைப் போற்றும் இம்முறை மருத்துவச் சுவடிகள், சோதிடச் சுவடிகள், பலவகைச் சிற்றிலக்கியச் சுவடிகள், தத்துவம், ஞானம் ஆகிய பொருளமைந்த சுவடிகள் ஆகிய பலவற்றிலும் காணப்படுகிறது.

---

46. தன்வந்திரி குழந்தை வாகடம்-202.
47. பாகவத சாரம், டி-430.
48. அகத்தியர் வைத்திய வல்லாதி-600, ஆர்-2281.

''பொய்கைபேய் பூதன் மழிசைமன் மாறன்
புகழ்மது ரக்கவி சேரன்
வையமென் பட்டர் பிரான்திருக் கோதை
வாழ்த்தடி யாரடிப் பொடியார்
மையறு பாணன் வாட்கலிக் கன்றி
வாழ்த்துவோர் மனமல மறுக்குஞ்
செப்பங் கயமாந் திருவடித் துணையே
துணையெனக் கொண்டுசே விப்போம்''[49]

திருமால் அடியார் பன்னிருவரையும் துதிக்கும் இப்பாடல் அமைந்த சுவடியில் சேனைமுதலியார், அரங்கநாயகியாகிய இலக்குமி, திருக்குருகைபிரான், எதிராசர், வேதாந்ததேசிகர் ஆகியோரைத் துதிக்கும் தனித்தனிப் பாடல்களும் காணப்பெறுகின்றன. இவை யனைத்தும் நூலாசிரியரால் பாடப்பெற்றவையாகும்.

ஒரு நூல் சுவடியில் வேறு நூல் பாடல்கள்

தொல்காப்பியத்தில் : தொல்காப்பியச் சுவடிகளில் இறை வணக்கப் பாடல்கள் இடம் பெறவில்லை. முதற்பகுதியாகிய எழுத்ததிகாரத்தில் 'எழுத்தெனப்படுப' என்னும் நூற்பாவே தொடங்குகிறது. பின்னால் சேர்க்கப்பட்டதாகப் பாயிரம் மட்டுமே காணப்படுகிறது. இரண்டாவது பகுதியாகிய சொல்லதி காரத்திலும் அடுத்த பகுதியாகிய பொருளதிகாரத்திலுங்கூட, இறைவணக்கப் பாடல்கள் இல்லை. ஆனால் சேனாவரையர் உரையோடு கூடிய சொல்லதிகாரச் சுவடிகள் சிலவற்றில் மட்டும் முறையே விநாயகன், சிவபெருமான், கலைமகள், அகத்தியர் ஆகியோர்மீது பாடப் பெற்ற நான்கு பாடல்கள் காணப்படு கின்றன.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பு (1923), ஆறுமுக நாவலர் பதிப்பு (1856), அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு (1981) ஆகியவற்றில் அப்பாடல்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

மகாபாரதத்தில்

''நீடாழி யுலகத்து மறைநாலோ
டைந்தென்று நிலைநிற்கவே''

என்னும் தொடக்க அடியையுடைய முழுப் பாடல் வில்லிபுத்தூரார் மகாபாரதம் (டி. 2102), நல்லாப்பிள்ளை பாரதம் (டி. 2101) ஆகிய இரண்டு சுவடிகளிலும் காணப்படுகிறது.

---

49. கோலாசல ஸ்தலபுராணம், ஆர்-84.

நிகண்டுகளில்

''எண்ணிய வெண்ணிய வெய்துப கண்ணுதற்
பவள மால்வரை பயந்த
கவள யானையின் கழல்பணி வோரே''

என்னும் பாடல் சூடாமணி நிகண்டு (டி. 19), அகராதி நிகண்டு (டி-4), யாப்பருங்கலக் காரிகை (டி-81) ஆகிய பல சுவடிகளில் காணப்படுகிறது.

கலைமகள் வணக்கப் பாடல்

''ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கு மென்னம்மை......[50]

''வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு...[51]

என்று தொடங்கும் கலைமகள் துதிப்பாடல்கள் கப்பல் சாஸ்திரம் (டி. 1996) என்னும் சுவடியில் காணப்படுகிறது. இவையனைத்தும் படியெடுப்போர் சேர்த்துவிட்டவையாகும்.

படியெடுப்போர் இயற்றிச் சேர்த்தவை : கபிலை வாசகம் என்னும் சுவடிகள் நான்கு உள்ளன. (டி. 388-391) அவற்றுள் 391 ஆம் எண்ணுள்ள ஒரு சுவடியில் மட்டும் ஒரு வெண்பா புதியதாகக் காணப்படுகிறது. அது அச்சுவடியில் உள்ள பிற ஓலைகளைக் காட்டிலும் வேறுபட்டதாகவும், சிறிது புதியதாகவும் உள்ள ஒரு ஓலையில் எழுதப் பெற்றுள்ளது. பொருளால் நூலொடு தொடர்புடையதாக அமையுமாறு படியெடுப்போர் இயற்றிச் சேர்த்த பாடலே என்பது தெளிவாகிறது. அவ்வெண்பா :

''வெற்பதனில் வேங்கையினால் மெய்ஞ்ஞான மும்புகழும்
சொற்கபிலை வாசகத்தைச் சொல்லவே—நற்பினுடன்
பூணார மார்பன் புலித்தோ லுடையழகன்
காணாத கண்ணே கருத்து''

நூலின் செய்தி கூறும் பாடல்-பாயிரம் : இறைவணக்கப் பாடலையடுத்து நூலின் பெயர், நூலாசிரியர் பெயர், நூல் வந்த வழி, நூல் நுவலும் செய்தி, நூலின் பயன் ஆகியவற்றில் சில, பல செய்திகளைக் கூறி நூலைத் தொடங்கும் முறையும் சில சுவடிகளில் காணப்படுகிறது.

''பன்னரும் பொருள்வி ளக்கத்
தீபிகை பகர்வேன் பாரில்''[52]

---

50. சரசுவதி அந்தாதி, காப்பு.
51. தனிப்பாடல் திரட்டு, காளமேகப்புலவர் பாடல்.
52. அரும்பொருள் விளக்கத் தீபிகை.

"முத்து முதுகுன்ற முத்த நதிவடபால்
வைத்தபுகழ்க் **கானூர்** வாழ் வவத ரித்த
பத்தன்**பரி பூரண** னுரைத்தபா மாலை
இத்தனையு மோதுவார்க் **கெட்டுஞ்சிவ பதமே**"[53]

இவற்றில் நூலின் பெயர், நூலாசிரியரின் பெயர், நூலாலாம் பயன் ஆகியவை அடங்கியுள்ளன.

"ஆதியினிற் சதுர்முகனு மறைந்தான் வீணை
யருமுனிவர் வியாசருக்கங் கறைந்தான் ஞானச்
சூதமுனி வனுக்குரைக்கச் சவுன கர்க்குச்
சொன்ன**வட மொழி**யதனைச் சூட்ச மாக
ஓதியபாத் துமகாண்ட முத்த ரத்தி
னுரைத்தபடி **தென்மொழி**யா லுரைத்தே மந்தச்
சீதரனார் பொன்**னரங்கன் காதை** யென்றும்
செப்பிடுவோர் **பரமபதஞ்** சிறந்து வாழ்வார்"[54]

"மொழிந்துமே நூல்கள் தோறும் முறைமுறை சோதித் தேறி
வழிசிசு நோய்ம ருந்து வகைவகை யுரைப்போ மன்றே"[55]

இப்பாடல்களுள் நூல் வந்த வழி, நூல் நுவலும் செய்தி, நூலின் பயன் ஆகியவை தெளிவாகக் கூறப்படுகின்றன. இவை நூலாசிரியர்களால் இயற்றப் பெற்றவை. இவை,

"ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே"[56]

என்னும் இலக்கணத்திற்கேற்பப் பாயிரச்செய்திகளாக அமைந்தவை யாகும். நூலாசிரியர்கள் பாயிரங்கூறும் இலக்கண முறையைக் கையாண்டனர் என்பதற்குச் சான்றாகும் இப்பாடலகள், பெரும் பாலான நூற் சுவடிகளில் காணப்படுகின்றன.

சுவடிகளின் நூற்பகுதி அமைப்பு : சுவடியின் எல்லா ஏடு களும் இடது, வலது ஓரங்களில் சுமார் ஓரங்குல அளவு இடம் விட்டு எழுதப் பெற்றுள்ளன. வலது ஓரத்தில் இடமே இல்லாமல் இறுதிவரை எழுதப் பெற்றுள்ள சுவடிகளும் உண்டு. இடது ஓரத் தில் உள்ள வெற்றிடம், திருச்சிற்றம்பலம் போன்ற பல தொடர் களால் அமைந்துள்ளது. அத்தொடர்களுள் சில:

53. பரிபூரணசித்தி, சுவடி. டி. 1574.
54. கோலாசலஸ்தலபுராணம், ஆர். 84.
55. தன்வந்திரி குழந்தைவாகடம், பா. 4. 56. நன்னூல், 47.

பொதுவாக

1.	சங்க இலக்கியம், இலக்கணம் புராணம் முதலான சுவடி களில்	—	திருச்சிற்றம்பலம், சிவகடாட்சம், பொன்னம் பலத்தரசே துணை, ஸ்ரீராம ஜெயம், கிருஷ்ணன் சகாயம்.
2.	சிற்றிலக்கியச் சுவடிகளில்	—	கணபதிதுணை, சரசுவதி துணை, தேவிசகாயம், குமரன் துணை, அரிஓம் நன்றாக.
3.	மருத்துவச் சுவடிகளில்	—	சிவக்கிருபையுண்டாகவும், தேவி சகாயம், குருவே துணை.

சிறப்பாக

1.	சமண நூல் சுவடிகளில்	—	சுபமஸ்து
2.	பெரிய திருமடல், பெரிய திருவந்தாதி, திருவாசிரியம் முதலான வைணவ நூல் சுவடிகளில்	—	ஆழ்வார் திருவடிகளே சரணம், பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.
3.	திருப்பாவைச்சுவடியில்	—	ஆண்டாள் திருவடிகளே சரணம், ஆழ்வார் திருவடி களே சரணம்
4.	சைவ நூற் சுவடிகளில் அவற்றுள்ளும்	—	சிவசகாயம், மீனாட்சி யம்மன் துணை.
	வள்ளியம்மை நாடகம்	—	சுப்பிரமணியர் துணை, வள்ளிநாயகி துணையுண் டாகவும்.
	சிறுத்தொண்டர்யட்சகானம்	—	திருத்தணிகையாண்டவர் துணை.

காலம் முதலிய அடிப்படையில் நோக்க இத்தொடர்கள் மூல நூலில் இருந்தவை என்று கொள்ளுவதற்கு இயலாது. பிற்காலத்துப் படி களில் படி எழுதினோரால் சேர்க்கப் பெற்றவை என்பது தெளிவா கிறது.

இத்தொடர்களை அடுத்து நூலின் பெயர், அதிகாரம், படலம். உட்பொருள் ஆகியவற்றில் ஒன்றும் பலவும் இடம் பெற்றுள்ளன, **ஏட்டின் எண்களும்** இப்பகுதியில் இடம் பெறுகின்றன. **பக்க எண்கள்** கொடுக்கும் முறை சுவடிகளில் காணப் பெறவில்லை.

எழுதும் முறை : பாடல்கள் உரைநடை போன்று தொடர்ந்து எழுதப் பெற்றுள்ளன. பாடல் அடிகளாகக்கூட பிரித்துக் காட்டப் பெறுவதில்லை. மூலம் மட்டும் அடங்கிய சுவடியாயின் ஒரு பாடல் முடிந்தவுடன் பாடலின் எண் கொடுக்கப் பெற்றுள்ளது. அவ் வெண்கள் தமிழ் எண்களாக அமைவதால் அவை ஒரு பாடலின் முடிவுச் சொல்லோடும், அடுத்த பாடலின் தொடக்கச் சொல்லோடும் தொடர்ந்து நின்று அச் சொற்களைப் பிரித்து அறிய முடியாமல் மயக்கத்தை ஏற்படுத்துவதும் உண்டு.

பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை ஆகிய உரைகளோடு கூடிய நூலாயின் பாடலை அடுத்து அவ்வுரைகள் தொடர்ச்சியாக எழுதப் பெற்றிருக்கும். அவ்வுரைகளின் முடிவில் பாடல்களின் எண்கள் கொடுக்கப் பெற்றிருக்கும். இவ்வகை அமைப்பும் உரை களைப் பிரித்தறிவதில் பெருஞ்சிக்கலை ஏற்படுத்துகிறது. இடை யிடையே கொடுக்கப் பெறும் உட்தலைப்புகளும் இவ்வாறே அமைந்துள்ளன. அல்லிகதை என்னும் ஒரு சுவடியில்,

''ஆனகுரு தன்புதல்வன் அசுபத்தா மாவுடனே'' என்னும் அடி முடிந்து விருத்தம் என்ற தலைப்புடன் ஒரு பாடல் தொடங்கு கிறது. சுவடியில் எவ்வித குறியீடும் இன்றி தொடர்ந்து எழுதப் பெற்றுள்ளதால், இதனைத் தாளில் படியெடுத்தோர்,

''ஆனகுரு தன்புதல்வன் அசுபத்தா மாவுடனே
விருத்தம் ஆனைதேரும் பரிகரியும் அம்பத்தாறு ராசாக்கள்''

என்று ஒரு அடியில் ஐந்து சீர்களாக அமைத்து எழுதினர்.[57] தொடர்ச்சியாக எழுதப் பெறும் சுவடிஎழுதும் முறையால் இவ்வாறான சிக்கல்கள் பல ஏற்படுகின்றன.

முடிவும் தொடக்கமும் : ஏட்டில் ஓர் எழுத்து எழுதக்கூடிய இடத்தைக் கூட வீணாக்குவதில்லை யாதலின் எழுத்துகளும் சொற்களும் வரி முடிவில் பிரிக்கப் பெற்று எழுதப்பட்டுள்ளன. அதாவது 'கொ' என்ற எழுத்தை எழுத ஒரு வரியின் இறுதியில் 'கெ' என்று எழுதிவிட்டு அடுத்தவரி முதலில் கால் (ா) எழுதப் பெற்றுள்ளது. இது கெ ர என்று படிக்கும் நிலையை ஏற்படுத்து கிறது. இதே நிலை ஓர் ஏட்டின் முடிவிலும் அடுத்த ஏட்டின் முதலிலுமாகத் தொடருகிறது; பக்க முடிவும் அடுத்த பக்கமும் இவ்வாறு தொடருகிறது. சில எடுத்துக்காட்டுகள்:

---

57. அல்லிகதை, சுவடி, வரி. 2356-57.

1. ... இந்திரபட்ட ாபிடேகனாய் — இந்திர பட்டாபிடேகனாய்
2. ... திரிலோகமுமெ மாரடியால் — திரிலோகமு மோரடியால்
3. ... விமலனாங்கவர் ககருள்செய — விமலனாங்கவர்க் கருள்செய
4. ... கூறியதெ னறவாறு — கூறியதென்றவாறு

அமைப்பில் சில பிரிப்பு முறைகள் : பிற்கால ஏடுகள் சிலவற்றில் எண்களுக்கு முன்னும் பின்னும் கோடுகள் போடப் பட்டுத் தெளிவாகக் காணப் பெறுகின்றன. அவ்வெண்கள் முறையே, -க-, -உ-, -உகஉ, உகூஉ என்பனவாகிய பிரிப்புக் குறிப்பு களுடன் காணப் பெறுகின்றன. இம்முறையால் ஓரளவு பாடலின் முடிவும் தெளிவாகிறது. பதவுரை, பொழிப்புரை, உட்தலைப்பு இவற்றிற்கிடையேயும் இவ்வாறான பிரிப்பு முறை காணப் பெறு கிறது. மிக நீண்ட ஏடுகளாயின் ஒவ்வொரு பக்கமும் இரண்டு பத்திகளாகப் பிரித்து எழுதப் பெற்றுள்ள சுவடிகளும் காணப் பெறுகின்றன. அம்மானை, கலிவெண்பாவாகிய கண்ணிகள், சிந்து, தரு முதலான சந்தப் பாடல்கள் ஆகிய நடையில் அமைந்த பிற்கால நூல்கள் சில பாடல் அடிகளாகப் பிரிக்கப்பட்டும் எழுதப் பெற்றுள்ளன.

சுவடிகளின் இறுதி அமைப்பு—முற்று : ஆசிரியர் பெயரும், நூலின் பெயரும், பாடல் எண்ணிக்கையும் கூறி, நூல் முற்றும் என்ற கூற்று இறுதியில் காணப் பெறும். நூலினைக் கற்போர் பெறும் பயன் கூறி வாழ்த்துடன் முடிப்பதும் உண்டு.

> "மேழித் துவசன் விளங்கிய புலியூர்
> வாழ்நற் சிதம்பர ரேவண சித்தன்
> நீதியிற் றருமக ராதி நிகண்டினிற்
> பத்தாம் வகாரா திப்பெயர்த் தொகுதி
> மொத்தஞ் சூத்திர முந்நூற்றேழ் நான்கே"[58]

இது ஆசிரியர், நூல், பாடல் தொகை, முற்று ஆகிய செய்திகளைக் கூறும் இறுதிப் பாடலாகும்.

---

58. அகராதி நிகண்டு, சுவடி, டி. 4.

இறுதி அமைப்பு—வாழ்த்து

"வேதமுனி வரனுரைத்த புராண மூவா
றாகியதிற் சிறந்துநின்ற விமலன் சீர்த்திக்
காதலினா லுரைப்பவர்கேட் பவர்ப டிப்போர்
கருதியபொய் கொலைகளவு காம நீங்கிச்
சீதரனார் பொன்னரங்க னுரத்தில் வாழுந்
திருவினரு ளால்மிகுந்த செல்வ மோங்கிப்
பூதலத்திற் புத்திரரும் பவுத்திராதி தாமும்
புகழ்பாரம் பரியமதாய்ப் பெருகி வாழ்வார்"[59]

'திங்கள்மும் மாரி பெய்க திருவறம் வளர்க செங்கோல்
நன்கினி தரச னாள்க நாடெலாம் விளைக மற்றும்
எங்குள வறத்தி னோரு மினிதூழி வாழ்க வெங்கள்
புங்கவன் பயந்த மெய்ந்நூல் புகழொடு பொலிக மிக்கே"[60]

இவை முறையே நூலின் பயனும் வாழ்த்தும் கூறி முடிக்கும் இறுதிப் பாடல்களாகும்.

இறுதி அமைப்பு—தொகுப்பு : நூலின் செய்திகளைத் தொகுத்துக்கூறும் பாடல்களும் இறுதியில் அமைகின்றன.

"தத்தைகுண மாலையொடு தாவில்புகழ்ப் பதுமை
யொத்தவெழிற் கேமசரி யொண்கனக மாலை
வித்தகநல் விமலையொடு வெஞ்சுரமஞ் சரிதான்
அத்தகையி லக்கணையொ டாகமண மெட்டே"[61]

என்பது தொகுப்புப் பாடலாகச் சீவக சிந்தாமணிச் சுவடிகளில் காணப்படுவதாகும்.

"நாமகள்கோ விந்தையொடு நற்காந் தருவதத்தை
தாமகுண மாலை தனிப்பதுமை—கேமசரி
மாகனக மாலைவிம லைசுரமை லக்கணையொ
டாகு திருமணங்க ளாம்"[62]

என்னும் இப்பாடலும் சில சுவடிகளில் காணப் பெறுகிறது. எனவே இவை நூலாசிரியரின் பாடல்களல்ல வென்பதை அறிய முடிகிறது. மேலும்

---

59. கோலாசல அரங்கன் சரிதம், இறுதிப் பாடல்.
60. சீவகசிந்தாமணி சுவடி, டி. 15.
61, 62. சீவக சிந்தாமணி இறுதி.

"தத்தைகுணமாலை என்னுங்காவியம், 'பகைமாற்று' என்னுங்காவியம் கந்தியார் கூற்று"[63]

என்று கூறும் நச்சினார்க்கினியர் கூற்றால் இப்பாடல்களைக் கந்தியார் என்பவர் பாடி இடையிலே சேர்த்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது.

இறுதி அமைப்பு—அவையடக்கம்

"ஓரா தெழுதினே னாயினு மொண்பொருளை
யாராய்ந்து கொள்க வறிவுடையார்—சீராய்ந்து
குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்"[64]

அவையடக்கமாகப் பாடப் பெறுகின்ற இது போன்ற பாடல்களும் சில சுவடிகளின் ஈற்றில் காணப்பெறுகின்றன.

இறுதி அமைப்பு — உரைநடை : சுவடியில் உள்ள நூலின் பெயர் அச்சுவடி எழுதத் தொடங்கிய அல்லது எழுதி முடித்த நாள், சுவடி எழுதியவரின் பெயர், எழுதுவித்தவரின் பெயர், பார்த்து எழுதப் பயன்பட்ட சுவடிக்குரியவர் பெயர், அச்சுவடிக்கு மூலச் சுவடி எது என்ற செய்தி ஆகிய பலவகை விவரங்கள் பெரும் பாலான சுவடிகளின் இறுதி ஏட்டில் எழுதப் பெற்றிருக்கும். இவை பிற்காலச் சுவடிகளில்—மூல நூலாயின்—நூலாசிரியரால் எழுதப் பெற்றிருக்கும். இவற்றுள்ளும் ஏற்புடைய சில செய்திகளே காணப் பெறும். பிற சுவடிகளாயின் சுவடி எழுதியவர் கூற்றாகவே இருக்கும். இதனால் நூலின் காலம் முதலியன அறிய இயலாது ஆயினும் அச்சுவடியின் காலம் முதலிய செய்திகளைத் தெளிவாக அறிய முடிகிறது.

இறுதி அமைப்பு—எழுதிய வரலாறு

"தில்லைவனப் பெரும்பற்றப் புலியூர்த் திருச்சிற்றம்பல வாண ராகிய அழகிய திருச்சிற்றம்பலமுடையார் மாணிக்கவாசகர் சொற்படிக்குத் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதியருளிய திருச்சிற்றம்பலக் கோவை முற்றும். பிரசோற்பத்தி வருஷம் தை மாதம் 29ஆம் தேதி நவமியும் அனுஷமுங் கூடின சுபதினத்தில் எழுதி நிறைந்தது"[65]

---

63. சீவக சிந்தாமணி, சுவடி இறுதி.
64. கலித்தொகை, சுவடி, டி. 210.
65. திருச்சிற்றம்பலக் கோவையார், சுவடி, டி. 1174.

"சாலிவாகன சகாப்தம் 1676க்கு மேற் செல்லா நின்ற ஸ்ரீமுக வருஷம் சித்திரை மாதம் 24ஆம் தேதி கிருஷ்ணபட்சம்... நவாசிப்பேட்டை வேலாயுத பண்டாரம் திருச்சிற்றம்பலக் கோவையார் எழுதி முடித்தான்"[66]

திருக்கோவையார் தோன்றிய செய்தியும், சுவடிகளின் காலம், எழுதியவர் ஆகிய செய்திகளும் இக்குறிப்புரைகளால் அறிய வருகின்றன.

"ஆனந்த வருஷம் பங்குனி மாதம் 15ஆம் தேதி புதன்கிழமை உரோகணி நட்சத்திரம், புதுவை மாநகரத்தில் இருக்கும் குழந்தைவேல் உபாத்தியாயர் அரும்பொருள் விளக்க நிகண்டு எழுதி நிறைவேறியது. புதுவை வித்வான் பொய்கைப்பாக்கம் சின்னய்ய உபாத்தியாயர் முதல்தாரத்து இரண்டாவது குமாரன் குழந்தைவேலு உபாத்தியாயர் எழுதினது"[67]

இம்முடிவுரை சுவடியின் காலத்தைக் கூறுவதோடு சுவடி எழுதியவரின் வரலாற்றையும் ஒரு சிறிது உணர வைக்கிறது.

இறுதியமைப்பு – எழுதியவர் செயற்பாடுகள்

"**பின்ளைக்கண்** பிள்ளையவர்கள் குமாரர் ஆதிநாத பிள்ளை அகராதி. மேற்படியார் மகன் இளையவன் பெரிய திருவடிப் பிள்ளை எழுதினது. அகராதி வயித்தியலிங்கன் பிள்ளை ஏடு பார்த்து எழுதினது.

1103 வருஷம் சர்வசித்து வருஷம் தை மாதம் 7ஆம் தேதி வெள்ளிக்கிழமை... தொடங்கி எழுதினது. மேற்படி வருஷம் மாசி மாதம் 12ஆம் தேதி வெள்ளிக்கிழமை... மேற்படி அகராதி எழுதிநிறைவேறியது. இந்த அகராதியை நான் 1104 வருஷம் மேற்படி மாதம் 19ஆம் தேதி வெள்ளிக்கிழமை... முதல், பிழை பார்த்து உயிர் எழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஒற்றெழுத்து இதுகளில் மொழிக்கு முதல் எழுத்துகளும் நூதனம் எழுதி 1104 வருஷம் பங்குனி மாதம் 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை எழுதி முடிந்தது"[68]

இதில் சுவடி எழுதிய வரலாற்றோடு நூதனமாக அகரவரிசைப் படுத்திய முறை முதலான எழுதியவர் செயற்பாடுகளும் சுட்டப் பெறுகின்றன.

---

66. திருச்சிற்றம்பலக் கோவையர், சுவடி, டி. 1173.
67. அரும்பொருள் விளக்க நிகண்டு, சுவடி, டி. 2207.
68. அகராதி, கல்கத்தா சுவடி, 2993.

இறுதியமைப்பு—சுவடித் தலைமுறை

"இந்தப் பன்னிரண்டு காந்தங்களும் விஷ்ணுபிரியர் தெலுங்கிலே புஷ்பகிரி திம்மபய்யன் எழுதினதைப் பார்த்து எவ்வார் வாத்தியார் சின்னய்யன் தமிழ் வசனத்தினாலே எழுதினார். இந்தக் கதை அட்சர சுத்தமாக விளங்கக் கடவது.

இந்தப் பாகவதக் கதையை ஈன்னே வேங்கடபதி முதலியார் எழுதி வைத்தார். அதன் பிறகு சுப்பிரமணிய முதலியார் எழுதி வைத்தார். அப்பால் நாகப்பட்டணம் செகப்ப மேஸ்திரியார் குமாரன் ராமலிங்க மேஸ்திரியாருக்கு ராமலிங்க வாத்தியார் எழுதிக் கொடுத்தார்.

துன்முகி வருஷம் மார்கழி மாதம் 17ஆம் தேதி புதன் கிழமை சுவாதி நட்சத்திரத்தில் எழுதினது.

கொழும்பிலிருக்கும் செகப்பன் சுவடி பாகவதம்."[69]

"1850ஆம் வருஷம் ஜனவரி மாதம் 18ஆம் தேதி அகத்தியநாதர் அருளிச் செய்த தண்டகம் நூறும் அயிதர் சாயபுக்கு ஆனைக் குளத்து தாவீது வாத்தியாரால் எழுதிக் கொடுக்கப்பட்டது."[70]

சுவடிகளின் முடிவில் காணப்படும் இக்கூற்றுகள், சுவடியின் காலம், சுவடிக்கு உரியவர், சுவடி எழுதியவர், சுவடியின் பரம்பரை ஆகிய வரலாறுகளை உணர்த்துவனவாகும். தமிழில் நூல்கள் அச்சிடத் தொடங்கிய காலத்திற்குப் பிறகும் (1850 ஜனவரி) ஓலையில் எழுதிப் படித்துள்ளனர் என்பதும் புலனாகிறது.

இறுதி அமைப்பு—அச்சான நூல்களின் விவரம் : சுவடியிலிருந்து அச்சிடப் பெற்ற நூல்களையும் தமிழ்ச் சான்றோர்கள் ஆராய்ந்துள்ளார்கள். அவற்றைச் சிறந்த சுவடிகளோடு ஒப்பிட்டுப் பார்த்திருக்கின்றார்கள். திருத்தங்களைச் செய்து வேறு சுவடிகளில் எழுதி வைத்திருக்கின்றனர். இவ்வரலாற்றுச் செய்திகளும் சுவடிகளின் இறுதிக் குறிப்பில் காணப் பெறுகின்றன. சான்று :

"இது பொத்தகம் கலியுகாப்தம் 4900க்கு ஆங்கிரச வருஷம் தொண்டை மண்டலம் சென்னைப் பட்டணத்தில் தஞ்சை நகரம் மலையப்பபிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது. மாசம தினச்சரிதையின் அச்சுக்

69. பாகவத வசனம், டி. 432.
70. அகத்தியர் தண்டகம் நூறு, டி. 1883.

கூடம் ஆண்டு 1812. திருநெல்வேலி அம்பலவாண கவிராயர் பிழைதீர்த்துச் சென்னைப் பட்டணத்துக்கு அனுப்பிவிச்சு அவ்விடத்திலிருந்த திருவாவடுதுறை ஆதீன வித்துவான் அம்பலவாணத் தம்பிரான், சீர்காழி வடுகநாத பண்டாரம் அவர்கள் மறுபடிக் கண்ணோட்டத்துடன் ஆராயப்பட்டு அச்சிற் பதித்த காயிதப் பொத்தகத்தை ஆழ்வார் திருநகரியில் தேவர்பிரான் கவிராயர், ஆதிநாத பிள்ளை தலத்தேடுகள் வைத்துச் சோதித்து வேறேடு எழுதியிருப்பது. மறுபடி திருநெல்வேலியில் அம்பலவாண கவிராயரிடத்தில் தீர்மான மானது. ஆழ்வார் திருநகரியில் சோதித்தது''[71]

இரண்டரை அங்குல அகலமுடைய ஒரு சுவடியில் பக்கத்திற்கு இருபத்து நான்கு வரிகள் வீதம் எழுதப்பட்டுள்ளன. பதினெட்டு அங்குல நீளமுள்ள அவ்வேட்டில் ஒரு வரிக்கு நூற்றுஇருபது எழுத்துகள் காணப்படுகின்றன. அச்சுநூலின் சுமார் ஐந்து பக்கச் செய்திகள் இச்சுவடியின் ஒரு பக்கத்தில் காணப்படுகின்றன. (டி. 2252) எழுத்துகள் தனித்தனியாகவும் தெளிவாகவும் உள்ளன. ஒரு பக்கத்திற்கு நான்கு வரி வீதம் எழுதப்பட்டுள்ள சுவடிகளும் உண்டு. எவ்வாறாயினும் பெரும்பாலும் ஒரு சுவடியின் அனைத்து ஏடுகளும் (ஒருவரால் எழுதப் பெற்ற சுவடி) ஒரே அளவுடைய வரி களால் அமைகின்றன.

''ஒரு பக்கத்திற்கு எட்டுவரிகள் வீதம் ஒரே முறையாக நூற்று முப்பது பக்கங்களும் எழுதப்பட்டுள்ளன''[72]

''இதன்கண் 93 இதழ்கள் உள்ளன. இதழின் பக்கம் ஒவ்வொன்றும் நான்கு செய்யுட்களுக்குரிய எட்டு வரிகள் கொண்டன''[73]

என்னும் கூற்றுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

ஒரு சுவடியில் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஒரு ஏட்டின் முதல் பக்க இறுதியில் ஒரு நூல் முடிவு பெற்றால் அதே ஏட்டின் பின்புறம் வேறு நூல் தொடங்கப்பட்டுள்ள நிலை பல சுவடிகளில் காணப்படுகிறது. அதனால் நூல்வாரியாக அச்சுவடியைப் பிரித்து வைத்து வகைப்படுத்த முடிவதில்லை. ஆயினும் நூல்களின் பெயரால் சுவடிகளை வகைப்படுத்தி, அவற்றை எடுத்துக் கையாளு வதற்குரிய முறையில் எளிமைப்படுத்த முடிகிறது.

71. கல்கத்தா சுவடி, 3074.
72. தன்வந்திரி குழந்தை வாகடம், பக். 34.
73. அரும்பொருள் விளக்க நிகண்டு, முன்னுரை, பக். 28.

ஈ. சுவடிகளின் வகை

இவ்வகைப்பாடு சென்னை அரசினர் சுவடி நூலகம், உ. வே. சாமிநாதையர் நூலகம், தஞ்சை, சரசுவதிமகால் நூலகம் ஆகியவற்றில் வெளியிட்டுள்ள விளக்க அட்டவணைகளின் துணை கொண்டு அமைகிறது. தமிழில் கிடைத்துள்ள சுவடிகளைப் பெரு வாரியாக, பொருள், நடை, சுவடி என்ற மூன்று அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

பொருள் : பொருள் அடிப்படையில் சுவடிகளை, அகராதி, அரிச்சுவடி, இரசவாதம், இலக்கணம், இலக்கியம், கணிதம், சமயம், ஜாலம், சோதிடம், தோத்திரம், நாடகம், புவிஇயல்' மருத்துவம், மாந்திரீகம், வரலாறு, வானவியல் என்ற பதினாறு வகைப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்க முடிகிறது.

நடை : சுவடிகளில் காணும் மொழிநடை யடிப்படையில் பாட்டு நடைச்சுவடிகள், உரைநடைச்சுவடிகள், இரண்டும் கலந்த •நடைச்சுவடிகள், மணிப்பிரவாள நடைச்சுவடிக்ள், பிறமொழியில் 'எழுதப்பெற்ற தமிழ்ச் சுவடிகள் என்ற ஐந்து பிரிவுகளாக வகுக்கலாம்.

சுவடி : சுவடிகளின் தன்மையைக் கொண்டு

மூலநூல் சுவடிகள்	—	படியெடுக்கப்பட்டவை
மூலம் மட்டும் உள்ளவை	—	உரையுடன் கூடியவை
முற்றுப் பெற்றவை	—	குறையானவை
பிழையற்றவை	—	பிழைமலிந்தவை
படிக்க இயலும் நிலையில் உள்ளவை	—	படிக்க இயலாதவை

என்ற நிலைகளில் ஐந்து இரட்டை வகையாகப் பிரித்துக் காண முடிகிறது. இவ்வைந்து வகையிலும் கூந்தற்பனை, நுங்குப்பனை ஆகிய ஓலைச் சுவடிகளும் தாளில் எழுதப் பெற்ற சுவடிகளுமாக இருவகை வடிவங்கள் உள்ளன. இவற்றுள் பொருளால் வகைப் படுத்தப் பெற்ற சுவடிகளுக்கு விளக்கம் தரலாம்.

அகராதி : அகராதிச் சுருக்கம், ஆங்கிலம்-தமிழ் அகராதி, சோதிடக் கடலகராதி, தமிழ்ச்சொல்லகராதி, திவ்வியப்பிரபந்த அகராதி, நிகண்டுகள் (பலவகை), பிரஞ்சு-தமிழ் அகராதி, மருத்துவ அகராதி ஆகிய பெயர்களில் பல அகராதிகள் காணப் பெறுகின்றன.

அரிச்சுவடி : அகரவரிசையில் உயிர், மெய், உயிர்மெய் ஆகிய எழுத்துகள் அடங்கியவை; ஈரெழுத்துச் சொற்கள் முதலாக ஆறெழுத்துச் சொற்கள் ஈறாக உள்ள பாலபாடம் ஆகியவை இவ்வகையின.

இரசவாதம் : அகத்தியர், இராமதேவர், தட்சிணாமூர்த்தி ஆகிய ஆசிரியர் பெயரால் தண்டகம், பட்சணி, பரிபாஷை, பரிபூரணம் என்னும் நூல்கள் பல இவ்வகையில் உள்ளன.

இலக்கணம் : தமிழ்ச் சுவடிகளில் ஐவகை இலக்கணங்களும் காணப்படுகின்றன. உவமான சங்கிரகம் உவமைக்குரிய தனிநூல். இலக்கிய அமைப்பைக் கூறும் பாட்டியல் நூல் சுவடிகள்; பிற மொழியைக் கற்பிக்கும் லத்தீன் போதகத் தமிழிலக்கணம் ஆகிய வையும் இவ்வகையைச் சார்ந்தவை.

இலக்கியம் : பேரிலக்கியம், சிற்றிலக்கியம், புராணம் என்ற மூவகையில் இலக்கியச் சுவடிகள் உள்ளன. சிற்றிலக்கியங்களுள் சுமார் முப்பது வகைக்கான சுவடிகள் கிடைக்கின்றன. புராணம் என்பது புராணம், இதிகாசம், மகாத்மியம், தலபுராணம் என்ற பெயர்களில் வகைப்படுத்தப் பெற்றுள்ளது. அட்டாதசபுராணாதி விஷய விவரணம், இலிங்க புராணம், கந்தபுராணம், கூர்மபுராணம் போல்வன புராணம் என்ற பெயராலும், இராமாயணம், பாரதம், பாரதவெண்பா, குசலவர்கதை முதலியன இதிகாசம் என்ற பெயராலும், அருணாசலபுராணம், ஆவிடையார்கோயில் புராணம், ஆறுகாடுமகாத்மியம், உத்திரகோசமங்கைத்தல புராணம், ஸ்ரீரங்க மகத்துவம் முதலானவை மகாத்மியம் அல்லது தலபுராணம் என்ற பெயராலும் வகைப்படுத்தப் பெறுகின்றன. அறநெறிச்சாரம், ஆசாரக் கோவை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, நல்வழி, நன்னெறி, நீதிசாரக்கரு, பஞ்சதந்திரம், பழமொழி, முதுமொழிக்காஞ்சி, வாக்குண்டாம், வெற்றிவேற்கை என்னும் சுவடிகள் நீதி இலக்கியம் என்ற பெயரால் வகைப்படுத்தப் பெற்றுள்ளன.

கணிதம் : அளவைவாய்பாடு, எண்சுவடி, கணக்கதிகாரம், கணிதநூல், கணிதாமிருதம் என்னும் பல பெயர்களில் பலவகைக் கணித நூற் சுவடிகள் அமைகின்றன.

சமயம் : சமணம், சைவம், வீரசைவம், வைணவம் ஆகிய சமய நூல்கள் சுவடி வடிவில் உள்ளன. ஆன்ம நிர்ணயம், ஏதுமனுஷாவதாரம், கித்தேரியம்மாள்சரிதை, கிறிஸ்துமத சித்தாந்தம், தெய்வசகாய சிகாமணிமாலை, ஞாயிற்றுக்கிழமை புதுமைவிவேகம் ஆகிய கிறித்தவ சமய நூல் சுவடிகளும், அமானல்லாகதை, அமீன்தோத்திரம் ஆகிய முகமதிய சமய நூல் சுவடிகளும் சமய நூல் சுவடி வகையைச் சார்ந்தவையாகும்.

ஜாலம் : அகத்தியர் ஜாலத்திரட்டு, ஜாலநிகண்டு ஆகிய சுவடிகள் ஜாலம் பற்றிய சுவையான செய்திகளைத் தருவனவாகும்.

சோதிடம் : அட்டகவர்க்கம், அரிட்டநவநீதம், ஆருட சாத்திரம், இராசிபலன், இருதுசாத்திரம், இலக்கினபலன், கரிநாள் விளக்கம், பஞ்சபட்சி சூத்திரம் முதலான சிறுசிறு நூல்கள் முதல் சப்தரிஷிநாடி என்னும் நாடி சோதிடம் ஈறாகப் பலவகைச் சோதிட நூல்கள் இவ்வகையில் அடங்குவனவாகும்.

தோத்திரம் : சமயங்களுக்கேற்ற தனித்தனிக் கடவுளர் பெயரால் இயற்றப்பெற்ற தனித்தனிப் பாடற்றொகுதிகள் இவ் வகையைச் சாரும்.

நாடகம் : நாடகம், விலாசம், நொண்டி நாடகம் ஆகிய வகை களில் கதை தழுவிய நாடகச் சுவடிகள் பல இவ்வகையில் அமை கின்றன.

மருத்துவம் : அகத்தியர் குருநூல். அம்பிகானந்தர்முப்பூ, இராமதேவர் தண்டகம், கருவூரார் வைத்தியம், கொங்கணர் கற்பம், நந்திதேவர் பெருநூல் என ஆசிரியர் பெயரால் அமைவன ஒருவகை. கற்பம், கியாழம், குளிகை, சரக்கு, சூரணம், தைலம், லேகியம் என்பன மருந்து முறைகளால் வகைப்படுத்தப்படுவன. குன்மரோக சிகிச்சை, நயனரோக சிகிச்சை, வாதரோக சிகிச்சை என்பவை நோயால் பெயர் பெறும் வகையின. குழந்தை வாகடம், பால சிகிச்சை, பிள்ளைப்பிணி மருத்துவம், மகளிர் மருத்துவம், மாட்டுவாகடம், மிருக வைத்தியம் என்பன நோயாளியின் பெயர் பெற்றவை. அனுபவவைத்தியம், பதார்த்தகுணசிந்தாமணி, வைத்திய சிந்தாமணி போன்றவை பொதுவகையால் அமைந்த மருத்துவச் சுவடிவகையாகும்.

மாந்திரீகம் : ஒட்டிய நூல், கருடபஞ்சாட்சரம், தண்ணீரோது மந்திரம், போன்ற மந்திர நூற் சுவடிகளும் ஒருவகையாகின்றன. இவற்றுள் ஒட்டிய நூல் வர்மசாத்திரம் பற்றிய செய்தியாகவும் அமைகிறது.

வரலாறு : கல்வெட்டு, கைபீது, சரித்திரம், சாசனம், சிலாசாசனம், வமிசாவளி, வரலரறு என்னும் இறுதிச் சொற்களில் அமையும் வரலாற்றுச் சுவடிகள் பல இவ்வகையில் உள்ளன. இவ்வகைகளைத் தவிர, கப்பல் சாத்திரம், கூவநூல், சாமுத்திரிகம், சிற்பசாத்திரம், தர்மசாத்திரம், நாவாய் சாத்திரம், பாண சாத்திரம், மயநூல், மனையடி சாத்திரம், போன்ற பலவகைச் சுவடிகளும் காணப் பெறுகின்றன.

பொருள்வகைச் சுவடிகளாகிய இவை அனைத்தும் மேலே குறிப்பிட்ட ஐந்து வகை நடைகளிலும், ஐந்து வகைச் சுவடி வடிவிலும் கலந்தே அமைந்துள்ளன.

3. அழிவும் திரட்டுதலும்

முன்னுரை

சங்ககாலந்தொட்டுத் திரட்டப்பெற்றும் இயற்றப்பெற்றும் பாதுகாக்கப்பெற்றும் வந்த சுவடிகள் அனைத்தும் இன்று நம்மிடையே இல்லை. கிடைக்கும் ஒருசில சுவடிகளும் முழுமை யாகவே அழிந்தன. பல பூச்சிக்கு இரையாகிப் பலபகுதிகள் விளங்காத நிலை அடைந்தன. இவ்வாறான சுவடிகளின் இன்றைய நிலைக்கு இயற்கையும் செயற்கையுமாகிய இருவகைச் செயல்களும் காரணமாகின்றன.

அ: அழிவு

இயற்கைச் சூழலால் அழிவு : கல்லின்மீது எழுதப்பெற்றவை தட்பவெப்ப நிலைகளால் கற்கள் பிளத்தல், விரிதல், பொடியாதல் ஆகியவற்றால் இயற்கையாகவே அழிகின்றன. கற்களை உடைத் தெடுத்தல், சுண்ணாம்பு, பிறவண்ணங்கள் பூசுதல் ஆகியவற்றால் செயற்கையாகவும் அழிகின்றன.

ஓலைச்சுவடிகளோ குறுகிய வாழ்நாள் உடையவை. றையான், இராமபாணம், ஓதம், புகை, எரி ஆகியவற்றால் இயற்கையாகவும் விரைவாகவும் பாதிக்கக்கூடியவை. பெருமழை, காற்று, வெய்யில் ஆகிய இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் அழிவு களில் சிக்கக்கூடியவை. சான்றாக, ''தமிழுக்குக் காலாந்தரத்தில் இரண்டு பெரும் பூதங்களால் இரண்டு பெரிய இடையூறுகள் நிகழ்ந்தன. குமரியாறும் அதன் தெற்கின் கணுள்ள நாடுகளுஞ் சமுத்திரத்தின் வாய்ப்பட்டமிழ்ந்திய போது...கபாடபுரம் அதன் கண் இருந்த எண்ணாயிரத்தொருநூற்று நாற்பத்தொன்பது கிரந்தங்களோடு வருணபகவானுக்கு ஆசமனமாயிற்று...மறுபடியுந்

தமிழ் தலையெடுத்தபோது நாடு முகமதியர் கைப்பட, அவர்கள் கொறானுக்கு மாறாகவும் வீறாவதோ கிரந்தங்கள் **மண்மேல்** என்று மத வைராக்கியங்கொண்டு அந்தோ! நமது நூற்சாலைகள் அனைத்தும் நீறாக அக்கினி பகவானுக்குத் தத்தஞ் செய்தனர்''[1] என்னும் சான்றோர் கூற்று இயற்கைச் சீற்றத்திற்குச் சுவடிகள் பலியாயினதையும், பலியாக்கப்பட்டதையும் சுட்டுகின்றது.

செயற்கையாக அழிவு : தமிழ்ச் சுவடிகளைப் பொறுத்தவரையில் பலவகையான செயற்கைத் தன்மைகளாலும் அழிவு ஏற்பட்டுள்ளது. அதாவது, மன்னரிடை நிகழ்ந்தபோர், அரசியல் மாற்றம், மக்களின் குடிபெயர்ச்சி, வெளிநாட்டினருக்கு விற்றல், எரியிலிடல், நீரில் எறிதல், கவனமின்மை, பாதுகாப்பின்மை, கையாளும் முறைகேடு ஆகிய செயற்கைத் தன்மைகளாலும் சுவடிகள் அழிந்துள்ளன.

அந்நியர் கவர்தல் : ''கால வெள்ளத்திலும் கடல்வெள்ளத்திலும் அழிந்தவை பல; இராமபாணப்பூச்சிக்கும் கறையானுக்கும் இரையானவை பல; மாற்றாரின் சூழ்ச்சிக்கு இலக்காகி நெருப்பிலும் நீரிலும் அழிந்தவைபல...இந்த அழிவுகளுக்கெல்லாம் பலியாகாமல் எஞ்சிநின்ற ஏடுகளிலும் ஒரு பகுதியை அந்நியர்கள் கொண்டு போய்விட்டனர்...அந்நியர்கள் வாரிச்சென்ற எண்ணற்ற செல்வங்களுள் நம்முடைய ஏட்டுச் சுவடிகளும் அடங்கியே இருந்தன. லிஸ்பன், கோப்பன்ஹாகன், பாரிசு, லண்டன், ரோம் போன்ற பெருநகரங்களின் நூல் நிலையங்களிலுள்ள தமிழ்ச் சுவடிகளே அதற்குச் சான்று பகரும்,''[2] என்று கூறும் அ. தமோதரன் அவர்களின் அனுபவக்கூற்று இயற்கையாலும் செயற்கையாலும் தமிழ்ச்சுவடிகளுக்கேற்பட்ட அழிவினுக்குச் சான்றாகிறது.

பேணாக்குறை : ''தொல்காப்பியனார்க்கு முன்னும் பின்னும் வாழ்ந்த செந்நாப் புலமைச் செல்வர்களால் யாக்கப் பெற்றுக் கடல்கோள்களாலும் **பேணாப் பெருங்குறையாலும்** கிட்டாதொழிந்தன போக எஞ்சியவற்றைப் பாட்டெனவும் தொகையெனவுங் கட்டித் தொகுத்தனர்' என்பர் சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்.[3]

''முதனூல் உயர்ந்தது, வழிநூல் தாழ்ந்தது; வழிநூல் தூயது. முதனூல் தெளிவில்லது என்று பிணங்கி வேறுபட்டு

1. தாமோதரம். பக். 45.
2. லண்டன் தமிழ்ச்சங்க ஆண்டுமலர், பக். 47-48.
3. புறநானூறு, பதிப்புரை, பக். 1.

ஒதுக்கும் நிலை முன்னாளில் மக்களிடையே தோன்றவில்லை. தெளிவில்லாத சிலரிடையே அச்செயல் சில காரணம் பற்றித் தோன்றியதுண்டு. அதன் விளைவாக நூல்கள் பல பேணுவாரற்று இறந்தன.''[4]

இவ்வாறு கருத்து மாறுபாட்டினால் அழிந்த நூல்கள் எத்துணையோ?

மறக்கேடு: ''காடக சோமாஜியார்க்கு ஏகபோகமதுவாக எழிற் செப்பேட்டோடு குடுத்தனன்...இவ்வூரிரண்டின் செப்பேடு மறக்கேட்டில் இழந்து போயின...சொல்லிய ஊரிரண்டுந் தம்மில் எல்லை கலந்து கிடக்குமாதலின்...''[5]

போர் முதலிய கேடுகளால் செப்பேடுகள் போன்றவையே அழிவுற்றன என்னும் இக்கூற்று ஓலைச்சுவடிகளுக்கு மிகச்சாதாரணமாகவே பொருந்தும்.

குதிரைக்கு வெந்நீர் போட : ''பழங்காலத்துத் தமிழ் வேந்தர் மேற்கொண்டிருந்த போர்முறைகளுள் பகைவரூரைத் தீக்கு இரையாக்குதல் ஒன்று. அதனால் நூல்கள் அழிதற்கு இடமுண்டு. வேற்று நாட்டவர் போந்து, இந்நாட்டு மக்கள் இவர்தம் தொன்மையுணர்ந்து செம்மை நிலைபெறாவாறு செய்வது குறித்து நூல்களை அழித்ததுமுண்டு. மதுரை மாநாட்டுக்குத் தலைவராய்ப் போந்திருந்த வேற்று நாட்டவர் ஒருவர் தேடித் தொகுத்திருந்த பழைய தமிழ் ஓலையேட்டுச் சுவடிகள், இருநூறு நாட்கள் **குதிரைக்கு வெந்நீர் காய்ச்சுதற்குப்** பயன்பட்டன என்பர்...வெள்ளையராட்சி இந்நாட்டில் நிலைபெறுமுன்...பலதிற வேந்தர் ஆட்சி நிலைநின்று நடந்ததெனக் கல்வெட்டுக்களும் பிறவும் கூறுகின்றனவே! அவ்வாட்சி நிகழ்ச்சிகளைக் குறித்த ஏடுகள் இப்போது சிலவேனும் உண்டா?...இவற்றின் வேறாகக் கடல்கோள்களும்... மறக்காலங்களும் தம்மாலியன்ற அழிவினைச் செய்துள்ளன,''[6]

என்னும் சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் கூறும் காரணம் வேதனைக்குரியதாக உள்ளது.

எப்படியோ அழிந்தவை : எப்படியோ காணாமற்போயின என்ற பட்டியலில் பல சுவடிகள் சேருகின்றன. அவை பெரும்பாலும் ஆசிரியரால் இயற்றப்பட்ட மூலச்சுவடிகளாகும் என்பதும்,

---

4. கழகப் பொன்விழா மலர், பக். 53-54.
5. தளவாய்ப்புரச் செப்பேடு.
6. மதுரைக் குமரனார், பக். 9-10.

இவ்வாறு மறைந்த சுவடிகளுக்கு எக்காலத்தும் வேறுசுவடிகள் காண்பது இயலாதென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இச்செய்தியை,

> "உத்தமதானபுரத்திலிருந்த லிங்கப்பையர் என்பவர் சுவாமி பற்றிய ஒரு குறவஞ்சி நாடகத்தையும், உத்தமதானபுரம் அம்பிகைமீதும் கணபதிமீதும் பல கீர்த்தனங்களையும் இயற்றியிருக்கிறார். அவர் குமாரர்களும் பிறரும் பாடக் கேட்டிருக்கிறேன். இப்பொழுது ஒரு கீர்த்தனமும் கிடைக்க வில்லை."[7]

என்னும் உ.வே.சா. அவர்களின் கூற்று தெளிவுபடுத்துகிறது.

மேலும், உ. வே. சா. அவர்கள் படித்த காலத்தில் திருவாவடுதுறை மடத்துப் புத்தகசாலையில் 'வளையாபதி' என்னும் சுவடியைப் பார்த்திருக்கிறார். ஆனால் அவர் சுவடிப் பதிப்பில் ஈடுபட்டபோது அச்சுவடி காணப்படவில்லை. தமிழ்நாடு முழுவதும் தேடியும் அச்சுவடி கிடைக்கவில்லை.[8] சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களுக்குச் சிறுவயதில் அவருடைய தந்தையார் சில நூல்களைக் கற்பித்தார். அவற்றைப் பிள்ளை யவர்கள் பதிப்பிக்க எண்ணியபோது தமிழ் நாடெங்கும் தேடியும் அச்சுவடிகள் அவருக்குக் கிடைக்கவில்லை.[9] இச்சுவடிகளெல்லாம் எப்படியோ காணாமற்போயின என்னும் பட்டியலைச் சார்வன வாகும்.

அறியாமையால் அழிவு—அந்நியருக்கு விற்றல் : "தமிழ்ச் சுவடி களைப் புதுவகை அபாயமொன்று இப்பொழுது சூழ்ந்திருக் கிறது...ஆராய்ச்சி செய்யும் மேலைநாட்டு அறிஞர்கள் இந்தியாவுக்கு வந்து களனாய்வுப்பணி செய்வது பெருவழக் காகி வருகிறது....சாதனப்பொருள்களைத் தேடுவதே இவர் களுடைய தலையாய நோக்கமாகும்....நகல்களுக்குப் பதிலாக அசல் நூல்களையே பெற முயலுகின்றனர்...மேலும் இந்த முயற்சியில் அவர்களுடைய எண்ணம் ஈடேற நம்நாட்டுச் சூழ் நிலையும் ஓரளவு வாய்ப்பளித்து விடுகிறது. அவர்கள் தேவை யறிந்து ஒத்துழைப்பதற்கென்றே ஆங்காங்கு வியாபாரிகளும் தரகர்களும் காத்திருக்கிறார்கள். இவர்களுக்குப் பொருளே

7. என் சரித்திரம், பக். 29-30.
8. மேற்படி பக். 858.
9. தாமோதரம், பக். 45.

குறிக்கோளாதலின்... அரிய பதிப்புகளையும் சுவடிகளையும் சேகரித்து அவர்களிடம் இரகசியமாக விற்றுவிடுகின்றனர்,''[10]

என்பர் அ. தாமோதரன் அவர்கள். தமிழரின் அறியாமை மட்டுமின்றி ஏழ்மை காரணமாகவும் சுவடிகள் விற்கப்படுகின்றன என்பதை இக்கூற்று உறுதிப்படுத்துகிறது.

''இடைக்காலத்தும் பிற்காலத்தும் வாழ்ந்த தமிழ்ப் பெருமக்களின் தமிழ்ப் பாசுரங்களும் எத்தனையோ வழங்கியிருத்தல் வேண்டும். அவையெல்லாம்...மறைந்தொழிந்தன. இதன் காரணம் முன்னோர்போல அவற்றைப் பின்னோரும் சேமித்துத் தொகுத்துதவத் தவறியதேயாகும்.''[11]

''காலப்போக்கில் சிறிது சிறிதாய் இயற்கையின் நிலநடுக்கம், போன்ற சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில **மேலைநாட்டு நூல் நிலையங்களுக்கு** எடுத்துச் செல்லப்பட்டன...''[12]

என்பனவும் முறையாகப் பாதுகாத்து வைக்காத காரணத்தால் சுவடிகள் பல அழிந்துபட்டன; மேலைநாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன என்னும் செய்திகளை உணர்த்துகின்றன.

மூடப்பழக்கம் : இவற்றையெல்லாம்விடத் தமிழரின் சில பழக்கவழக்கங்களும், அவற்றின் உண்மையறியாது அப்பழக்க வழக்கங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றிய தமிழ்மக்களின் அறியாமையும் பெருவாரியான தமிழ்ச்சுவடிகளை அழித்து ஒழித்திருக்கின்றன. இவ்வுண்மை,

''பழைய ஏடுகளைக் கண்டகண்ட இடங்களிலே போடக்கூடாதாம். அவற்றை நெய்யில் தோய்த்து ஹோமம் செய்துவிட வேண்டுமாம். இங்கே அப்படித்தான் செய்தார்கள்''[13]

என்று கரிவலம் வந்த நல்லூர் தேவஸ்தானத்தில் ஒருவர் கூறிய கூற்றால் தெளிவாகும்; மேலும்,

''எங்கள் வீட்டில் ஊர்க்காட்டு வாத்தியார் புத்தகங்கள் வண்டிக் கணக்காக இருந்தன...அவற்றில் என்ன இருக்கிறதென்று

10. லண்டன் தமிழ்ச்சங்க ஆண்டுமலர், பக். 48-49.
11. பெருந்தொகை, முகவுரை.
12. அனுபோகவைத்திய நவநீதம், முன்னுரை, பக். 11.
13. என் சரித்திரம், பக். 928.

பார்ப்பதற்கோ எனக்குத் திறமை இல்லை...ஆடிப் பதினெட்டில் சுவடிகளைத் தேர் போலக் கட்டிவிடுவது சம்பிர தாயமென்றும் சில முதிய பெண்கள் சொன்னார்கள். நான் அப்படியே எல்லா ஏடுகளையும் ஓர் ஆடிமாதம் பதினெட்டாந் தேதி வாய்க்காலில் விட்டுவிட்டேன்"[14]

என்பது திருநெல்வேலி, தெற்குப் புதுத்தெருவு, வக்கீல் சுப்பையா பிள்ளை கூறியது. இதுவும் சுவடிகள் அறியாமையால் அழிந்தன என்பதைப் புலப்படுத்துகிறது.

முன்னோரைப் பின்பற்றியதில் அறியாமை : நெருப்பிலிடு வதும் நீரில் விடுவதுமாகிய இச்செயல்கள் முன்னோர்களால் கையாளப்பட்டுவந்தது உண்மையே. ஆனால் அவர்களின் செயல் கள் அறியாமையால் நிகழ்ந்தனவல்ல. நீண்ட நாட்களாய்ப் பயன் படுத்தப்பட்ட சுவடிகள் மேலும் பயன்படுத்த முடியாத நிலையில் பழுதாகிவிட்டால் புதியபடி எழுதிக்கொள்ளுவது உண்டு. அவ்வாறு புதியபடி ஒன்று எழுதிக்கொண்டபின் பழைய சுவடி பயனற்றதாகிறது. மேலும் அதுபோன்ற சுவடிகளை வைத்துப் பாதுகாப்பதும் கடினம். அச்சுவடிகள் ஏடு ஏடாகச் சிதறி' மிதிபட்டு அழியக்கூடாது என்ற கருத்தில் அவை நீரில் விடப் பட்டன; ஆகுதியிலிடப்பட்டன. அச்செயல்களை மட்டும் கண் டிருந்த முதியவர்கள் படியெடுத்த செயலைவிட்டு, ஆண்டுதோறும் ஆற்றில் விடுவதை ஒரு மரபாகக் கொண்டு மக்களிடையே பரப்பினர். அதைக் கேட்ட பிறரும் காரணமறியாது பின்பற்றினர். இம்முறைகேடான பழக்கம் மக்களிடையே பரவியபொழுது, அச் சுவடிகளைப் படித்தறியும் பழக்கமும் திறனும் குறைந்து வந்தன. இச்சூழ்நிலைகளே மிகப்பல சுவடிகளின் அழிவிற்குக் காரணங் களாயின.

ஆ. சுவடி திரட்டுதல்

முன்னுரை : சுவடிதிரட்டும் பணி சங்ககாலத்திலேயே தொடங்கியுள்ளது. ஆயினும் இடைக்காலத்தே இயற்கைச் சூழல்கள், செயற்கைத் தன்மைகள், அறியாமை ஆகியவற்றால் சுவடிகள் பல அழிந்துபட்டன. அவையும் கேட்பாரற்றுக் கிடந்தன. ஆய்வுத் திறனுடைய சிலரால் சுவடிதிரட்டும்பணி மேற் கொள்ளப்பட்டது. அச்சு வசதி ஏற்பட்டபிறகு மொழியுணர்வும். பழம்பொருளுணரும் ஆர்வமும். நிலையான பணிபுரியும் வேட்கையு

14, மேற்படி பக். 934.

முடைய சான்றோர் சிலர் தங்களால் இயன்றவரை சுவடிகளைத் திரட்டி அச்சிட்டு வெளியிடத் தொடங்கினர்; சில நிறுவனங்களின் மூலமும் திரட்டிவைக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டனர். இம் முயற்சியில் அரசினரும் பங்குகொண்டனர். அப்பணி இன்றும் நடைபெற்று வருகிறது; தொடர்ந்து நடைபெற வேண்டியுள்ளது. இச்செய்திகளையும் அவற்றாலாம் பயன்பாடுகளையும் இப்பகுதி ஆய்வு செய்கிறது.

சுவடி திரட்டுதலில் — சங்ககாலப்பணி—மன்னர்பணி : தமிழ் மன்னர் பலர் பலவிடத்தும் வாழ்ந்துவந்த பெரும் புலவர்களை ஒன்றுகூட்டினர். இடம் அமைத்து உதவினர். பல நூல்களைத் தொகுக்கச் செய்தனர். எழுதச்செய்தும் பாதுகாத்துவந்தனர். இதனை,

> ''இத்தொகை முடித்தான் பூரிக்கோ; இத்தொகை பாடியகவிகள் இருநூற்றைவர். இத்தொகை நாலடிச் சிற்றெல்லையாகவும் எட்டடிப் பேரெல்லையாகவும் தொகுக்கப்பட்டது.''[15]

என்னும் தொன்மைச்சான்றே நன்கு புலப்படுத்தும். மேலும்,

> ''பலவகை நூல்களும் செய்யுட்களும் கால நிலையினால் தமிழ் நாட்டவரால் புறக்கணிக்கப்பட்டோ வேறுவகையில் மறைந்தோ அருகின போலும். பிறகு கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந்த புலவர்களும் அரசர்களும் தமிழா ராய்ச்சியில் ஊக்கங்கொண்டு பழந்தமிழ்ச் செய்யுட்களைத் தொகுக்கத் தொடங்கினர். அங்ஙனம் தொகுத்தனவே பாட்டு, தொகை, கீழ்க்கணக்கு என்ற மூன்றுவகை நூற் றொகுதிகளாதல் வேண்டும்''[16]

என்பார் உ. வே. சா. இதனால் சங்க நூல்கள் யாவும் பலவிடத் திருந்தும் திரட்டித் தொகுக்கப்பட்டனவே என்பது தெளிவா கிறது.

அறிஞர், புலவர் பணி : மன்னரின் ஆதரவோடு புலவர் பெருமக்களும் தமிழறிஞர்களும் சுவடிகளைத் திரட்டித் தொகுப் பதில் பெரும்பங்கு கொண்டிருந்தனர். இப்பணியினை நன்கு உணர்ந்த சான்றோர்,

---

15. குறுந்தொகை, நூல் இறுதி. (சுவடிகளில்)
16. குறுந்தொகை, முன்னுரை.

> "இத்தனை முதுமக்களது அரும்பெரும் வாக்குகளை நாமெல்லாம் அறிந்து சுவைக்கும்படி திரட்டிக்கொடுத்த பழைய சான்றோர்களை யாம் எங்ஙனம் புகழவல்லோம்!"[17]

என்று கூறி அவர்களைப் பாராட்டினர். மேலும்,

> "நாட்டில் அங்கங்கே சிதறிவழங்கிய தனிப்பாக்களை முயன்று தொகுத்துக் குறிப்புக்களுடன் இன்னோர் நமக்களித்திலரேல், சங்ககாலத்துப் புலவர்களின் அருமைப் பெயர்களையேனும், பெருமைச் செய்திகளையேனும், முற்காலத்து நிலைமை நிகழ்ச்சிகளையேனும் நாம் சிறிதேனும் அறிய இடமுண்டோ?"[18]

என்று கூறி நன்றி செலுத்தினர்,

> "சங்ககாலச் சான்றோர்கள் அவ்வப்போது பாடிய புறத்திணைக் குரிய பாட்டுக்களுள், நானூறு பாட்டுக்களைத் தேர்ந்து, பண்டைநாளைச் சான்றோர் ஒருவரால் தொகுக்கப்பெற்றது இப்புறநானூறு என்பது உலகறிந்த செய்தி."[19]

என்று பாராட்டி அச்சுவடியை ஆய்ந்து பதிப்பித்தனர். இச் சான்றோர் கருத்துகள் சங்க நூல்கள் திரட்டித் தொகுக்கப் பட்டனவே என்பதை வலியுறுத்துகின்றன.

இ. சுவடிதிரட்டுதலில்—இடைக்காலப்பணி

சமயச் சார்புடைய நூல்கள் பல தேவாலயங்களிலும் மடாலயங்களிலும் திரட்டிப் பாதுகாக்கப்பட்டன; பல்லவர், சோழர் காலத்தில் ஆலயங்கள் கல்விச் சாலைகளாகவும் விளங்கின; பாண்டிய மன்னர் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்தனர்; அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட நூல்கள் பல தமிழ்ச்சங்கத்தில் திரட்டி வைக்கப்பட்டன என்னும் செய்திகள் இடைக்காலத்தில் சுவடிகளைத் திரட்டிப் பாதுகாத்ததை எடுத்துக் காட்டுகின்றன.

வரலாற்றுச் சான்று

> "இராசராசன் தேவாரப்பாக்களைத் திரட்டி முறைப்படுத்த எண்ணினான். அதற்கு உதவி செய்பவர் நம்பியாண்டார் நம்பி என்பவரே என்பதை வல்லார் கூறக்கேட்டுத் திருநாரையூர் சென்றான். அவரிடம் தன் கருத்தை அறிவித்தான்...

---

17. தனிச்செய்யுட் சிந்தாமணி, முகவுரை.
18. பெருந்தொகை, முகவுரை, பக். 2.
19. புறநானூறு, கழகம், முன்னுரை, பக். V.

ஏடுகள் சிதம்பரத்தில் பொன்னம்பலத்தின் மேற்றிசையில் மூவர் கையிலச்சினை பெற்ற காப்பினையுடைய அறையில் இருத்தலை உணர்த்தினார். அரசன் அவருடன் பொன்னம்பலம் சென்று தில்லைவாழ் அந்தணர் கூறியபடி அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் படிமங்களை ஊர்வலமாக வரச்செய்து அரண்மிக்க அறையிலிருந்த தேவார ஏடுகளை எடுத்தான்.

சில ஏடுகள் புற்றினால் அழிந்து கிடந்தன. எஞ்சியவற்றை நம்பியார் முறைப்படுத்தினார்.

வச்சிரநந்தி என்னும் சமணப்பெரியார் திரமிளசங்கம் என்னும் தமிழ்ச்சங்கத்தை நிறுவிப் பல சுவடிகளைப் பாதுகாத்து வைத்திருந்தார் என்பன வரலாற்றுச் செய்திகள்.''[20]

இலக்கியச்சான்று

பெருங்கதை மூன்றாங்காண்டத்தினிறுதியில்,

''முன்னாளின் மூவருரைகண்ட சோழன் முறைமையைப்போல்
இந்நாளிலே கொங்கு வேண்மாக் கதை கண்டெழுதுவித்தான்
பன்னாளுங் கீர்த்திப் பழைசை யடைஞ்சான்மெய்ப் பாலினியன்
நன்னா வலர்புகழ் சின்னடைஞ் சான்றொண்டை
நாட்டவனே''

என்னுங் கட்டளைக் கலித்துறை காணப்படுகிறது, இதனால் மூவரருளிச்செய்த திருமுறைகளைப் போலவே இந்நூல் பண்டைக் காலத்திலேயே படிப்பாரும் ஆதரிப்பாருமின்றி அருகி வழங்கி வந்தது என்பதும், அத்திருமுறைகளில் அருமையறிந்து முயன்று பெற்றுக் கிடைத்த அளவில் எழுதுவித்த திருமுறை கண்ட ராஜ ராஜ அபய குலசேகரசோழ மகாராசாவைப் போலவே இதன் அருமையறிந்து முயன்று பெற்றுக் கிடைத்த அளவில் எழுதுவித்த உபகாரி பழைசை என்னும் ஊரிலுள்ள அடைஞ்சான் என்பவருடைய புதல்வராகிய சின்னடைஞ்சான் என்னும் பெயரினரென்பதும்...வெளியாகின்றன.[21]

இந்த இலக்கிய இறுதிப் பாடலும் பதிப்பாசிரியர் விளக்கமும் தேவாரத்திருமுறைகளைத் தொகுத்த செய்தியைப் புலப்படுத்துகின்றன.

---

20. சோழர் வரலாறு, இருண்டகாலம், பக். 90.
21. பெருங்கதை, முகவுரை, பக். 165.

கல்வெட்டுச்சான்று

"அகத்திய னொடு தமிழாய்ந்தும்......
நூற்கடலைக் கரைகண்டு நோன்பகடா யிரம் வழங்கியும்
மண்ணெதிரா வகைவென்று தென்மதுரா புரஞ்செய்தும்
அங்கதனி லருந்தமிழ்நற் சங்கம்இரீஇத் தமிழ்வளர்த்தும்"[22]

"வளமதுரை நகர்கண்டும் மற்றதற்கு மதில்வகுத்தும்
உளமிக்க மதியதனால் ஒண்டமிழும் வடமொழியும்
பழுதறத்தா னாராய்ந்து பண்டிதரில் மேந்தோன்றியும்"[23]

என்பன செப்பேட்டுச் செய்திகள். இவற்றால் இடைக்காலத் தமிழ் மன்னர் சுவடிகள் திரட்டுவதில் பங்கு கொண்டிருந்த நிலை தெளிவாகிறது.

ஈ. சுவடி திரட்டுதலில்—பிற்காலப்பணி

பாதுகாக்கும் நிலையில் சுவடி திரட்டுதல் : தமிழ்மன்னர் ஆட்சிக்குப்பிறகு அந்நியராட்சிக்காலத்தில் பலவாறான அழிவுகளி லிருந்தும் தப்பிய தமிழ்ச்சுவடிகள் பிற்காலத்தில் ஓரளவு தேடித் திரட்டப்பட்டுப் பாதுகாக்கப்பெற்றுள்ளன. அவ்வாறு திரட்டும் பணிகள் முறையே காலின் மெக்கன்சி, அ. முத்துசாமிப்பிள்ளை. எடோர்ட் ஏரியல், சரபோஜி மன்னர், பாண்டித்துரைத் தேவர் நிறுவிய தமிழ்ச் சங்கத்தினர், வி. கனகசபைப் பிள்ளை ஆகியோ ரால் சிறப்புற மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மெக்கன்சி : 1753இல் ஸ்காட்லாந்தில் பிறந்த காலின் மெக்கன்சி, தமது இருபத்தொன்பதாவது வயதில், ஆங்கில அரசுப் படையின் ஒரு பிரிவுக்கு அதிகாரியாக நியமிக்கப்பட்டுச் சென்னை யில் தங்கினார். ஈழத்திற்குச் சென்றபோது, ஈழம்பற்றிய செய்தி களையும் தொல்பொருள்களையும் திரட்டத் தொடங்கினார், தொடர்ந்து தென்னிந்தியா முழுவதிலும் இப்பணியை மேற் கொண்டார். 1811இல் லார்டு மிண்டோ பிரபுவின் அனுமதி பெற்று ஜாவாவில் சுவடிகளையும் செய்திகளையும் திரட்டினார். இறுதியாக இந்தியா முழுவதிலும் இப்பணியை மேற்கொண்டிருக் கிறார்.

இலட்சுபணய்யா போன்ற அறிஞர்களைத் தம்சொந்தச் செல வில் இப்பணிக்காக அமர்த்திக்கொண்டு, அவர்களைக் கிராமங்கள்

22. தளவாய்புரச் செப்பேடு, பக். 35-47.
23. சின்னமனூர் பெரிய செப்பேடு, பக். 19-21.

தோறும் அனுப்பி இவற்றைத் திரட்டியிருக்கிறார். இவரது சுவடிகளுள் பெரும்பாலானவை வரலாற்றுச் செய்திகளடங்கியவையேயாகும். அவையும் செல்வாக்குமிக்க மக்களிடம் எழுதிவாங்கப் பெற்றவையாகும். எவ்வாறாயினும் அந்நியர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் சுவடி திரட்டும் பணிக்கு வித்திட்டவர் காலின் மெக்கன்சியே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மெக்கன்சி சுவடிகள் : மெக்கன்சி இறந்தபிறகு 1821இல் கவர்னர் ஜெனரல் ஹேஸ்டிங்ஸ் பிரபு திருமதி மெக்கன்சியிடமிருந்து அச்சுவடிகளைப் பத்தாயிரம் பவுன் விலை கொடுத்து, கம்பெனி சார்பாக வாங்கினார். பிறகு வில்சன் என்பவரால் அவை அட்டவணைப்படுத்தப்பட்டன. அவற்றுள் ஒருபகுதி இங்கிலாந்திற்கு அனுப்பப்பெற்று இந்திய அலுவலக நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளது. ஒருபகுதி கல்கத்தா பண்டைப்பொருள் சேமிப்பு நிலையத்தில் இருக்கிறது. தென்னாட்டுச் சுவடிகள் சென்னை, அரசினர் சுவடி நூலகத்தில் இருக்கின்றன.

லெய்டன் : 1803 முதல் 1811 வரை இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்துவந்த டாக்டர் லெய்டன் என்பவர் ஓலைச்சுவடிகளைத் திரட்டியுள்ளார். அவை தமிழ் உட்பட பலமொழிகளில் ஆனவை. அச்சுவடிகளையும் கிழக்கிந்தியக் கம்பெனியார் விலைக்கு வாங்கி இலண்டனில் உள்ள இந்திய அலுவலக நூலகத்தில் வைத்தனர்.

பிரௌன் : 1837க்குப் பிறகு இந்திய அரசுபணியில் (Indian Civil Service) உயர் அலுவலராகப் பணியாற்றிய சி. பி. பிரௌன் என்பவர் சிறிது சிறிதாகப் பல சுவடிகளைத் திரட்டினார். அவை பெரும்பாலும் தாள்-சுவடிகள். சி. பி. பிரௌனின் முயற்சியால் இலண்டனிலிருந்த டாக்டர் லெய்டன் திரட்டிய சுவடிகள், லெய்டனின் மறைவுக்குப் பிறகு இந்தியாவிற்குக் கொண்டுவரப் பெற்றன. மெக்கன்சி, லெய்டன் ஆகியோர் திரட்டிய சுவடிகளுடன் பிரௌன் திரட்டிய சுவடிகளையும் அவ்வப்போது சென்னைக் கல்விச் சங்கத்தில் சேர்த்துப் பாதுகாக்கச் செய்தனர். இம்மூவரின் சுவடிகளும் 1855ஆம் ஆண்டுவரை இக்கல்விச் சங்கத்தில் சேர்க்கப்பெற்றுள்ளன. இவை 1870இல் சென்னை மாநிலக்கல்லூரிக்கு மாற்றப்பட்டன, பேராசிரியர் பிக்போர்டு அவர்களின் தலைமையில் இவற்றிற்கு விளக்க அட்டவணையும் தயாரிக்கப்பட்டது.[24]

---

24. அரசினர் சுவடி நூலக அட்டவணைகளிலிருந்து திரட்டப் பட்டவை.

அரசினர் சுவடி நூலகம் : மேற்குறிப்பிட்ட சுவடிகளையும் விளக்க அட்டவணைகளையும் கொண்ட தனி நூலகம் ஒன்று 1939 சனவரியில் அமைக்கப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகக் கட்டடத்தில் அமைக்கப்பெற்ற இந்நூலகம் இன்றுள்ள, மிகப் பெரிய, அரசினர் சுவடி நூலகமாகும். தமிழ்நாடு அரசு இந் நூலகத்தின் மூலம் தொடர்ந்து சுவடிகளைத் திரட்டி, முறைப் படுத்தி, சுவடிகளின் அகரவரிசைப்பட்டியல், விளக்க அட்டவணை ஆகியவற்றை வெளியிட்டுப் பாதுகாத்துவருகிறது.

எல்லிஸ் : வீரமாமுனிவர் எழுதிய ஏட்டுச்சுவடிகள் பல்வேறு இடங்களில் சிதறிக் கிடந்தன. பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ் என்பவர் சென்னை மாவட்ட ஆட்சியாளராக இருந்தபோது 1816இல், சென்னைக் கல்விச்சங்க மேலாளராக இருந்த புலவர் முத்துசாமிப் பிள்ளையைத் தமிழ் மாவட்டங்களுக்கு அனுப்பி வீரமாமுனிவர் எழுதிய சுவடிகளைத் திரட்டச்செய்தார். அதன்படி தென்னாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து திரட்டப்பெற்ற சுவடிகளுள் கொடுந் தமிழ், சதுரகராதி, தேம்பாவணி, பரமார்த்த குருவின் கதை, பேதக மறுத்தல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை; முழுமை யானவை. அவை தொடர்ந்து அச்சிடப்பெற்றன.[25]

சரபோஜி மன்னர் : தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1798-1832) சித்த, ஆயுள்வேத, யுனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதிமகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின.[26]

எடோர்ட் ஏரியல் : புதுச்சேரியில் கடற்படைத் தளபதியாகப் பணிபுரிந்த எடோர்ட் ஏரியல் என்னும் பிரஞ்சுக்காரர் 1854 வரை ஓலைச்சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் திரட்டி வைத்திருந் தார். அவருடைய மரணத்திற்குப் பிறகு அவை பாரிஸ் தேசிய நூல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு வைக்கப்பட்டுள்ளன.[27]

பாண்டித்துரைத்தேவர் : (சுமார் 1880)

“மதுரையம் பெரும்பதியில், ஸ்ரீபாண்டித்துரைத் தேவர் அவர்கள் தமிழ்ச்சங்கம் நிறுவினார்கள்...இச்சங்கத்தின் அங்கங் களுள் ஒன்றாக, தமிழ் நாட்டிலுள்ள அரிய தமிழ் நூல்களனைத்தை யும் ஒன்றாகத் தொகுத்து வைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்

---

25. அச்சும் பதிப்பும், பக். 84.
26. அனுபோக வைத்திய நவநீதம், பக். 11.
27. அச்சும் பதிப்பும், பக். 193.

'பாண்டியன் புத்தகாலயம்' ஒன்றும் நிலையிடப் பெற்றது. அச்சில் வாராத தமிழ் நூல்கள் நூற்றுக்கணக்காக இப்புத்தகாலயத்தில் தொகுக்கப் பெற்றன.''[28]

கனகசபைப்பிள்ளை (சுமார் 1890)

சென்ற இடங்களில் எல்லாம் அச்சில் வாராத தமிழ் நூல்களின் ஏட்டுப் பிரதிகளைத் தேடிப் பெறுகின்ற முயற்சியைக் கைக்கொண்டவர் கனகசபைப்பிள்ளைவர்கள். ஏராளமான ஏட்டுப் பிரதிகளைத் தொகுத்து வைத்திருந்தார். அவற்றைத் தாளிற் பெயர்த்தெழுதுவதற்கு அப்பாவுப்பிள்ளையென்ற ஒருவரை அமர்த்தி 20 ஆண்டுக் காலமாகத் தம்முடனே வைத்துக் கொண்டிருந்தார்.[29]

ரா. இராகவையங்கார் (1900)

இராகவையங்கார் அவர்கள் அரிதில் தொகுத்த ஏட்டுச் சுவடிகள் இப்பொழுது பலருக்கும் பயன்படுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து நூல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.[30]

திருநெல்வேலி—ஈசுவரமூர்த்திப்பிள்ளை: திருநெல்வேலி மேலை வீதியில் உள்ள கவிராஜ ஈசுவரமூர்த்திப்பிள்ளை வீட்டில் இருந்த புத்தக அறையைக்கண்ட உ.வே.சா. அவர்கள், தமிழ்ச் சங்கத்தில் முன்பு இப்படித்தான் சுவடிகளை வைத்திருந்தார்களோ என்று விம்மித மடைந்தாராம். ஏட்டுச் சுவடிகளை அடுக்காகவும் ஒழுங்காகவும் வைத்திருந்தார்கள்...புழுதி இல்லை; பூச்சி இல்லை; ஏடுகள் ஒன்றோடொன்று கலக்கவில்லை என்று கூறி வியப்படைகிறார். வியப்படைந்த உ.வே.சா. அவர்களைக் கண்ட கவிராஜ ஈசுவரமூர்த்திப்பிள்ளை அவர்கள், "இந்த வீடு ஒன்றுதான் இப்படி இருக்கிறதென்று நீங்கள் நினைக்க வேண்டாம். இங்கே இன்னும் சில வீடுகளில் பலவகையான ஏட்டுச்சுவடிகள் இருக்கின்றன... ஸ்ரீவைகுண்டம் முதலிய ஊர்களில் பல கவிராயர்கள் வீடுகள் உண்டு. ஆயிரக் கணக்கான ஏடுகளை அவ்வீடுகளிற் காணலாம்''[31] என்று கூறினாராம். இவ்வாறு நிறுவனங்கள், தனியார் என்ற பாகுபாட்டில் சுவடிகள் திரட்டப்பெற்றன. என்றாலும், அனைத்தும் பாதுகாத்துவைக்கும் நோக்கமுடையனவாகவே அமைந்தன. அக் காலக்கல்வி முறையில் சுவடிகளைத் தேடிப்

---

28. தமிழ்ச்சுடர்மணிகள், பக். 391. 29. ஷெ. பக். 276.
30. ஷெ. பக். 325. 31. என்சரித்திரம், பக், 873-874,

பெற்றே கற்க வேண்டிய சூழ்நிலை காணப்பட்டமையின் கற்பதற்காகச் சுவடியைத் தேடித் திரட்டிய சில நிகழ்ச்சிகளையும் காண வேண்டியுள்ளது.

கற்கும் நிலையில் சுவடிதிரட்டுதல் : தொடக்ககல்வியை முடித்தபின் ஒருசிலர் மேலும் சில சிறந்த நூல்களைக் கற்க விரும்பினார்கள். விரும்பியவர்கள் தாம் விரும்பிய நூலைக் கற்பிக்கும் ஆசிரியரைத் தேடிச் சென்றனர். விரும்பிய நூலைப் பலவிடத்தும் தேடிச் சென்றே பெற்றனர். பெற்ற நூல்களைப் படியெடுத்துக் கொண்டு உரியவரிடம் திருப்பிக்கொடுத்து வந்தனர். கற்பதற்காக நூல்களைத் திரட்டியவரின் அனுபவங்கள் கல்வியில் ஊக்கமளிக்க வல்லவையாகும்.

மீனாட்சி சுந்தரம்பிள்ளை : "அக்காலத்தில் நூல்கள் பெரும்பாலும் அச்சிற்பதிக்கப்படாமையால் படிப்பவர்கள் அவற்றைப் பிரதிசெய்து படித்தல் இன்றியமையாத வழக்கமாக இருந்தது."[32]

ஒருசமயம் திரிசிரபுரத்தில் பரதேசி ஒருவர் வந்திருந்தார். அவர் நன்றாகப் படித்தவர் என்பதையும் அவரிடம் தண்டியலங்காரப் பிரதி இருப்பதையும் கேள்வியுற்றார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. எவ்வாறேனும் அவரிடம் தண்டியலங்காரத்தைப் பெற்றுப் பாடங்கேட்க வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டார். அவர் பிச்சையெடுக்கவரும் காலமறிந்து தெருத்தோறும் கூடவே தொடர்ந்து பேசிக்கொண்டு செல்வார். அவருக்குப் பிரியமான கஞ்சாவை வாங்கிவைத்திருந்து உரியகாலத்தில் அவருக்குக் கொடுப்பார். பலநாட்களுக்குப்பின், ஒருநாள் அவர் உவகையோடு இருந்த சமயத்தில் தம் கருத்தை மெல்லப்புலப்படுத்தி, அவரிடமிருந்த புத்தகத்தைப் பெற்று எழுதிக்கொண்டு பாடமுங்கேட்டார். இவ்வாறு ஐந்திலக்கணங்களையும் முறையே தெரிந்தவர்களிடம் சென்று இவர் கற்றுக்கொண்டார்.[33]

பிள்ளைவர்கள் கந்தபுராணம், பெரியபுராணம்...ஆகியவற்றில் இருந்த ஐயங்களைக் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடத்தும், கல்லாடம், திருவாசகம்...ஆகியவற்றிலிருந்த ஐயங்களைத் திருவம்பலத்தின்னமுதம் பிள்ளையிடத்தும் கேட்டுத் தெளிந்தார்...இம் மூவரிடமும் இருந்த அரிய நூல்களைப் பெற்றுப் பிரதி செய்து

32. மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம், பக். 10.
33. ஷை பக். 19-20.

கொண்டு பாடங்கேட்டு வந்தார்.[34] ஐந்திலக்கணங்களையும் பல இலக்கியங்களையும் கற்க விரும்பிய திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், அவற்றைச் சுவடிகளில் எழுதிவைத்தே படிக்க வேண்டியிருந்த சூழ்நிலையில் கஞ்சாவை வாங்கிக் கொடுக்கவும் தயங்கினாரில்லை. இவ்வாறு தமிழ்ச் சான்றோர் பலரும்

"எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்
அறத்தில் திரியாப் படர்ச்சிவழி பாடே."[35]

என்னும் வழிபாட்டிலக்கணத்திற்கு இலக்கியமாய் நின்று கற்றிருக்கின்றனர் என்பதற்குப் பிள்ளையவர்கள் எடுத்துக்காட்டாகிறார். ஒவ்வொரு நூலையும் தக்கார் ஒருவரை நாடிச்சென்று கற்றிருக்கின்றனர் என்பதற்கும் அவர் சான்றாகிறார்.

உ.வே. சாமிநாதையர் : பிள்ளையவர்களுடைய மாணாக்கராக விளங்கிய உ.வே.சா. அவர்களும் இவ்வகையில் கற்றவரே என்பதற்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன.

முதன்முதலில் சடகோபையங்கார் தாம் இயற்றிய ஆலந்துறையீசர் பதிகத்தை உ.வே.சா.வுக்குக் கற்பித்தார். அடுத்து கார்குடி கஸ்தூரி ஐயங்காரிடம் உ.வே.சா.வின் தந்தை அழைத்துச் சென்றபோது "நான் பாடம் சொல்லுவதற்கு ஒருதடையும் இல்லை. கார்குடிக்கு வந்தால் வேண்டிய சௌகரியம் செய்வித்து இவனைப் படிப்பிக்கிறேன்" என்றார் கஸ்தூரி ஐயங்கார். கார்குடியில் கஸ்தூரி ஐயங்காரும் சாமி ஐயங்காரும் தங்கள் தங்களால் இயன்ற அளவு பாடம் சொல்லிவந்தார்கள்.[36] விருத்தாசலரெட்டியாரிடம் சென்றபோது "நீர் நன்னூல் காண்டிகை உரையைப் பாடங் கேட்டிருத்தலால் நான் முதலில் யாப்பருங்கலக்காரிகையைப் பாடம் சொல்லுகிறேன்" என்று கூறிக் காரிகையைத் தொடங்கினார்.[37] இறுதியாக மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடத்தில் உ.வே.சா.வை அழைத்துச் சென்ற அவருடைய தந்தையார் "தங்களுடைய உத்தரவு இல்லாமல் இவன் எங்கும் செல்ல மாட்டான்...அதிக ஆவலுடன் தங்களிடம் அடைக்கலம் புக இவன் வந்திருக்கிறான்...தங்களிடம் ஒப்படைத்துவிட்டேன்" என்று கூறி அங்கேயே விட்டுவந்தார்.[38] பல ஆசிரியரையும் தேடிச்சென்று அடைக்கலம் புகுந்து பல நூல்களைக் கற்றவர் உ.வே.சா. என்பதை இவ்வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறு

34. ஷை. பக். 59-60. 35. நன்னூல், நூற். 46.
36. என் சரித்திரம், பக். 148-153. 37. ஷை. பக். 198.
38. ஷை. பக். 231.

ஆசிரியரைத் தேடிச்சென்றவர்கள் சுவடிகளையும் பல ஊர்களுக்குக் கால்நடையாகவே சென்று தேடிப்பெற்றுக் கற்றிருக்கின்றனர்.

பிறர் படிப்பதற்காக—சுவடிதிரட்டியமை : திருக்குற்றால யமக அந்தாதியையும் திருக்குற்றாலப் புராணத்தையும் படிக்கவிரும்பிய மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்குச் சண்பகக் குற்றாலக் கவிராயர் அச்சுவடிகளை வருவித்துக் கொடுத்திருக்கிறார்.[39]

சிவதருமோத்திரம் என்னும் நூலைப் படிக்கவிரும்பினார் பிள்ளையவர்கள். அச்சுவடி திருச்சியில் தேசிகர் ஒருவரிடம் இருந்தது. அவர் கொடுக்க மறுத்து விட்டார். செய்தியறிந்த பிள்ளையவர் களின் மாணாக்கராகிய சுந்தரம்பிள்ளை என்பவர் கனவானைப் போல வேடந்தரித்துச் சென்று பலவாறு நடித்து அச்சுவடியினைப் பெற்று வந்தளித்திருக்கிறார்.[40]

இவையாவும் படிப்போருக்கு உதவச் சுவடிகளைத் தேடித் தந்த நிலையை உணர்த்துவனவாகும்.

அச்சிடுதற்காகச் சுவடிதிரட்டுதல் : சுவடிகளைப் பாது காக்கும் பொருட்டும் கற்க வேண்டியும், நிறுவனங்களும் தனியார் பலரும் செயல்பட்டுள்ளனர். அடுத்த நிலையில் அச்சிடும் வசதிகள் ஏற்பட்ட பிறகு பலர் தமிழ் நூல்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற பரந்த நோக்கம் கொண்டனர். தாங்கள் கற்றுச் சுவைத்த நூல்களையும், கற்றுச் சுவைத்தவர் கூறிய பிற நூல்களையும் தமிழர் அனைவரும் சுவைக்குமாறு செய்ய வேண்டும் என்று விரும்பினர். மேலும் ஏட்டு வடிவில் வைத்துக் கற்போர் மிகக் குறைந்தவர்களே ஆதலின் பலரும் கற்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் எண்ணினர். இக்காரணங்களால் ஏடுகளை முயன்று தேடிப் பதிப்பிக்கத் துணிந்தோர் பலராவர். அவர்களின் முயற்சியால் பலவழிகளில் ஏடுகள் திரட்டப் பட்டுள்ளன.

சி. வை. தாமோதரம்பிள்ளை : சி. வை. தாமோதரம் பிள்ளை யவர்கள் இலக்கண விளக்கம் என்னும் நூலைப் பதிப்பித்தபோது அந்நூலின் இறுதி இயல்களுக்குச் சுவடிகள் கிடைக்கவில்லை. அச்சிடப்படாமல் கிடக்கும் நூல்கள் இவ்வாறு விரைவில் அழிந்து விடுகின்றன என்பதை உணர்ந்த அவர் 'சொற்பகாலத்திற்கு

39. ஷை. பக். 304.
40. மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம், பக். 110-111.

முன்னர் உதித்த இந்நூலின் கடைசி இயல்களுக்குத் தமிழ் நாட்டிலே பிரதிகள் அகப்படாமையும்.....சான்றுபகரும்'' என்கிறார்[41] மேலும், ''பழைய சுவடிகள் யாவுங்கிலமாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்பாரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதன்மேல் இலட்சிய மில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்துவான் களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை''[42] எனவும்,

''சரஸ்வதியின் திருநடனஞ் சொலிக்கப்பெற்றனவாகிய சங்க மரீஇய நூல்கள் சிதைந்தழியவும், அவைகளில் அவர்களுக்குச் சற்றேனுந் திருட்டி சென்றிலது. இதனைக் கண்டு சகிக்கலாற்றாது மனநொந்து அழிந்துபோகுஞ் சுவடிகளை இயன்றமட்டுந்தேடிப்... பரிசோதித்து அச்சிடுவித்தேன்''[43] எனவும் கூறும் சி. வை. தா. அவர்கள், அவ்வாறு தாம் அச்சிடத்துணிந்தமைக்குரிய காரணத் தைத் தொல்காப்பியப் பதிப்பின் போதும் வலியுறுத்துகிறார்.

''ஐயந்திரிபறத் தாங்கற்றறியாததோர் நூலை இவர் இங்ஙனம் வழுவுற அச்சிடவேண்டியதென்னையென யாரும் வினவுவாராயின் வழுச்செறிந்ததாயினும் அடியோடழிந்து போகின்ற நூலை அடியேன் பாதுகாத்தது பேருபகாரமன்றோவென்க''[44] என்பது அப்பதிப்புரைக் கூற்று. சிறந்த தமிழ் நூல்கள் சுவடிகளாகவே இருந்து அழிந்து படாமல் காக்கவேண்டும் என்ற பரந்த நோக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள இந்த நூல்களின் வரலாறுகள்' சுவடி திரட்டப்பட்ட உண்மையையும் புலப்படுத்துகின்றன.

சுவடியில் ஐந்திலக்கணமும் பல இலக்கியங்களும் எழுதப் பட்டுள்ளன. ஆனால் அவை அச்சிடப் பெறாமையால் அனை வருக்கும் கிடைப்பதில்லை; அவற்றின் முழுப்பயனையும் தமிழுலகம் அடையவில்லை. எனவே ஏட்டுப்பிரதிகளில் மறைந்து கிடக்கும் அவற்றைத் தேடி அச்சிடுவதனால் தமிழ்நாடு பயனடையும் என்ற நோக்கத்தோடு கலித்தொகையும் இலக்கண விளக்கமும் அச்சிடப் பட்டன.[45]

சிவன்பிள்ளை : பிங்கலநிகண்டின் சுவடிகளை மிகவும் வருந்தித் தேடிப் பதிப்பித்த சிவன்பிள்ளையும் இப்பயன்பாட்டினை வற்புறுத்திக் கூறுவார். அதாவது,

---

41. தாமோதரம், பக். 77.
42. ஷெ. பக். 68.
43. ஷெ. பக். 46.
44. ஷெ. பக். 124.
45. ஷெ. பக். 76-77.

"இதுகாறும் ஏட்டுப்பிரதி ரூபமாய்க் கற்றோர்பால் அருகி வழங்கி வந்தமையால் இது உபயோகமாய்ப் பலர்க்கும் பயன்படப் பல பிரதிகளைப் பலநாளும் வருந்தித் தேடிப் பல இடங்களினின்றும் பெற்று, ஆதி திவாகரம், கயாகரம் முதலிய நிகண்டுகளையும் ஓர் பற்றுக்கோடாகக் கொண்டு வழுவறப் பரிசோதித்து அச்சிட்டிருக்கிறேன்" என்பது அவர் கருத்து.[46]

கனகசபைப்பிள்ளை : அக்காலத்தில் சங்க இலக்கியங்களில் பெரும்பாலானவை அச்சில் வெளிவரவில்லை; ஏட்டுப் பிரதிகளாகவே சிலரிடத்தில் அருகியிருந்தன. இவையின்றி இலக்கியக் கல்வியும் இலக்கிய ஆராய்ச்சியும் நடைபெற இயலாது. ஆகவே சென்ற இடங்களிலெல்லாம் அச்சில் வாராத தமிழ் நூல்களின் ஏட்டுப் பிரதிகளைத் தேடிப் பெறுகின்ற முயற்சியைக் கைக்கொண்டார் கனகசபைபிள்ளை.[47]

உ. வே. சாமிநாதையர் : ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் திருமயிலைத் திரிபந்தாதியைப் பார்க்க நேர்ந்தபோது, ...அதைப் படித்துப் பார்த்துவிட்டு, படித்து இன்புற்று இந்நூலை அச்சிட்டால் தமிழ் படிப்பவர்களுக்கு நல்ல பயனை அளிக்கும் என்றார்களாம். அதனாலேயே அச்சுவடிகளைத் தேடித் திரட்டிப் பதிப்பித்ததாகக் கூறுவார் உ.வே.சா.[48]

பாரிசிலிருந்த ஜூலியன் வின்சோன் என்பவர் அனுப்பிய சுவடிகளின் பட்டியலில் வில்லைப்புராணம் இருந்ததையறிந்த உ.வே.சா அதனை வரவழைத்துப் பதிப்பிக்க முனைந்தார். அப்புராணத்தின் தலமாகிய வில்வநல்லூரைத் தேடிக் கண்டுபிடித்தார். அதோடு அன்றி அவ்வூரிலும் பலரிடத்து விசாரித்து இலட்சுமி நாராயண ஐயர் என்பவர் மூலம் இரண்டு சுவடிகளைப் பெற்றார்.[49]

சுவடியாகவே இருப்பின் அனைவராலும் கற்க இயலவில்லையாதலின் அனைவரும் கற்றுப் பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்தால் பல நூல்கள் அச்சிடப்பட்டன என்பது மேற்கண்ட செய்திகளால் வெளியாகின்றது.

திருத்தப் பதிப்பிற்காகத் திரட்டுதல் : சுவடிப் படிப்பில் தேர்ச்சியுடைய சான்றோர் பலர் அச்சுநூல்கள் வெளிவந்த பிறகும்

46. பிங்கலநிகண்டு, முகவுரை.
47. தமிழ்ச் சுடர்மணிகள், பக். 276.
48. திருமயிலைத்திரிபந்தாதி, முகவுரை.
49. வில்லைப்புராணம், முகவுரை.

சுவடிகளோடு ஒப்பிட்டுப் படித்தார்கள். அப்போது அச்சு நூல்களுள் பல விடுபட்டிருந்தன; பல பாட வேறுபாடுகள் இருந்தன. இவற்றை அறிந்து மேலும் திருத்தப் பதிப்பாக வெளியிடுதற்காகவும் சுவடிகளைத் திரட்டியிருக்கின்றனர்.

ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை : "பள்ளியூர் சேனை நாட்டாரவர்கள் ஒரு சுவடியைக் கொடுத்தார்கள். அப்பிரதியையும் அச்சாகியிருந்த புறநானூற்றையும் ஒப்பு நோக்கியதில்...சில பாட்டுகளில் அச்சுப்பிரதியில் விடுபட்டிருந்த சில அடிகளும் சிலவற்றில் சில திருத்தங்களும் காணப் பெற்றன" என்பார் சு. துரைசாமிப் பிள்ளை.[50]

"சீகாழி கோவிந்தசாமி ரெட்டியாரவர்கள் வைத்திருந்த ஐங்குறுநூற்றுக் கையெழுத்துப் படியையும் அச்சாகி வெளிப்பட்டிருந்த ஐங்குறு நூற்றையும் ஒப்புநோக்கும் வாய்ப்புப் பெற்றேன். அப்போது அப்பிரதியில் காணப் பெறாத சில வேறுபாடுகள் கிடைத்தன. அதனால் டாக்டர் திரு. ஐயரவர்கள் முயற்சிக்கும் அகப்படாத நிலையில் ஏடுகள் பல தமிழ்நாட்டில் உள்ளன என்று ஐயம் தெளிந்தேன். இத்தெளிவால் பழைய ஏடுகளைத் தேடுவதில் வேட்கையொன்று என் உள்ளத்தே கிளர்ந்தெழுவதாயிற்று."

"ஞானாமிர்தத்துக்குரிய ஏடுகள் திருக்கோவலூர்த் தாலுகா சிறுமதுரை (ஏனாதிவாடி)யினின்றும், திருநெல்வேலிக்கண்மையிலுள்ள இராசவல்லிபுரத்துச் செப்பறையினின்றும் பிறவிடங்களினின்றும் கிடைத்தன",[51] என்னும் செய்திகள் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையின் பதிப்புக்களுக்குச் சுவடிகள் திரட்டப் பெற்றதன் காரணத்தைப் புலப்படுத்துகின்றன. இதே போல அச்சிட்ட புத்தகங்களிலுள்ள பிழைகளைத் திருத்திக் கொள்ளுவதற்கும், நல்ல பாடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவதற்குமாகவும் சுவடிகள் திரட்டப் பெற்றன என்னும் உ.வே.சா. அவர்களின் கூற்று திருத்தப் பதிப்புகளுக்காகவும் சுவடிகள் திரட்டப் பெற்றன என்பதை உறுதிப்படுத்துகின்றது.[51] (அ)

எஸ். இராசம் வெளியீட்டுக் குழு, கம்பன் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகிய நிறுவனங்களும் சுவடிகளைத் திரட்டித் திருத்தப் பதிப்பினை வெளியிட்டுள்ளன.

---

50. புறநானூறு, முன்னுரை, பக். V-VI. 51. ஷை. பக். VI.
51. (அ). என் சரித்திரம், பக். 920-921.

இவ்வாறு சுவடிகள் அழியாமல் காத்தற்காகவும், கற்றற்காகவும், அச்சிடுதற்காகவும், ஆராய்ச்சிக்காகவும், திருத்தப் பதிப்பிற்காகவும் திரட்டப் பெற்றுள்ளன. அவ்வாறு திரட்டுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளும், கையாண்ட முறைகளும் குறிப்பிடத் தக்கன. அம்முயற்சிகளில் தோல்வி கண்டோரும் உண்டு. தாமே விரும்பிச் சுவடிகளை அனுப்பி உதவியோரும் உண்டு.

தாமே சுவடிகளைத் தந்து உதவியோர் : சேலம் இராமசாமி முதலியார் சீவகசிந்தாமணிச் சுவடிக்காக ஸ்ரீவைகுண்டத்தில் முனிசீபாக இருந்த ஏ. இராமச்சந்திர ஐயரிடம் சொல்லி வைத் திருந்தார். ஐயரிடம் ஒரு வழக்கில் சாட்சியாக வந்த ஒருவர் கவிராயர் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதையறிந்த ஐயர், அவரைத் தனியே அழைத்து, சீவகசிந்தாமணி ஏடு இருந்தால் கொண்டு வருமாறு கூறினார். அவ்வாறே அவர் கொண்டு வந்த போது, முப்பத்தைந்து ரூபாய் கொடுத்து வாங்கி அதை இராமசாமி முதலியாருக்கு அனுப்பி வைத்தார்.[52]

சுவடிகளைத் திரட்டிப் பாதுகாத்தும், ஆள் வைத்து அவற்றைப் படியெடுத்தும் வைத்திருந்த வி. கனகசபைப் பிள்ளையவர்கள் பத்துப்பாட்டு. புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியச் சுவடிகளை உ. வே. சா.வுக்குக் கொடுத்து உதவி புரிந்திருக்கிறார்.[53]

திருநெல்வேலி ஸ்ரீமத்பால்வண்ண முதலியார், தன்நகரத்து நெல்லையப்பக் கவிராயரின் புத்தக சாலையிலிருந்து கன்னியா குமரித் தலபுராணம் என்னும் சுவடியைக் கண்டெடுத்து மு. ரா· அருணாசலக்கவிராயரிடம் கொடுத்துப் பதிப்பிக்கச் செய்திருக் கிறார்.[54]

வேலூரிலிருந்த வீரசைவராகிய குமாரசாமி ஐயரென்பவர்... விசாகப் பெருமாளையருடைய மருமகர். அவர் பழைய வித்துவான்களுடைய வீடுகளில் ஆதரவற்றுக் கிடக்கும் ஏட்டுச் சுவடிகளை இலவசமாகவாவது, சிறு பொருள் கொடுத்தாவது அவ் வீட்டுப் பெண்பாலார் முதலியவர்களிடம் வாங்கி, விரும்பியவர் களுக்குக் கொடுத்து ஊதியம் பெற்றுக் காலக்ஷேபம் செய்பவர்...

---

52. ஷை. பக். 732-733. 53. தமிழ்ச்சுடர்மணிகள், பக். 276
54. கன்னியாகுமரித் தலபுராணம், முகவுரை, பக். 2.

அவர் பத்துப்பாட்டுப் பிரதியைக் கொண்டு வந்து உ.வே.சா. அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்.[55]

சுவடிகளைத் தர மறுத்தவர்கள் : தஞ்சாவூர் விருஷபதாச முதலியாரிடம் உ. வே. சா. அவர்கள் நேரில் சென்று சீவகசிந்தாமணிச் சுவடியைக் கேட்டார். முதலியார் அதைப் பூசையிலிருந்து எடுக்கக்கூடாது என்று கூறிவிட்டார். பிறகு மிகவும் பணிவாக வேண்டிக் கொண்டபோது, ஜைனர்களுக்குத் தான் கொடுப்பேன். மற்றவர்களுக்குக் கொடுக்கமாட்டேன் என்று மறுத்துவிட்டார். மீண்டும் முதலியாருக்கு வேண்டிய நண்பர் ஒருவரை அழைத்துச் சென்றார் உ. வே. சா. அந்த நண்பர் 'கும்பகோணம் கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறார்; திருவாவடுதுறை மடத்திற்கு மிகவும் வேண்டியவர்' என்று உ. வே. சா.வை அறிமுகப்படுத்தினார். உடனே சைவ மடத்தில் பழகினவருக்கு ஜைன நூலில் அன்பு ஏற்பட நியாயமில்லை; அந்நிய மதத்தவருக்குத் தருவது எங்கள் சம்பிரதாயத்துக்கு விரோதம்; எங்களுக்குப் பாவம் சம்பவிக்கும் என்று கூறி மறுத்து விட்டார்.[56]

அம்பாசமுத்திரத்தின் அருகில் இருந்த ஓர் ஊரில் அபிஷிக்தர் (சைவர்குரு) ஒருவரிடம் சுவடிகள் இருக்கின்றன என்பதைக் கேள்வியுற்று உ. வே. சா. அவரிடம் சென்று கேட்டாராம். சுவடிகளை அவ்வளவு சுலபமாகக் காட்டிவிட முடியுமா? இப்போதெல்லாம் அவற்றைத் தொடக்கூடாது. சரஸ்வதி பூசையில் தான் அர்ச்சனை பண்ணிப் பூசை செய்து எடுக்க வேண்டும் என்று கூறி விட்டாராம்.[57]

இவ்வாறு பலவாறாக முயற்சி செய்து தேடித் திரிந்தும், பணம் கொடுத்தும் சுவடிகளைத் திரட்டியிருக்கின்றனர். சுவடிகளைக் கொடுக்காமல் மறுத்தவர்களிடமிருந்து வெறுங்கையோடு திரும்பியோரும் காணப்படுகின்றனர். சுவடிகளைத் திரட்டி ஆய்வு செய்து பதிப்பிக்கிறார் என்பதை அறிந்து, தாமே தம்மிடம் உள்ள சுவடிகளைக் கொடுத்து உதவிய சான்றோரையும் காண முடிகிறது.

---

55. என்சரித்திரம், பக். 841.
56. ஷை. பக். 766. 57. ஷை. பக். 937.

உ. சுவடிகளைத் திரட்ட வேண்டிய முறை

தனியார் திரட்டும் முறை : ஒரு குறிப்பிட்ட நூலைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபடும் ஒருவர் அந்த நூல் எந்தப் பகுதியில் வாழ்ந்த ஆசிரியரால் எழுதப்பட்டது? எந்தப் பகுதியில் பெரு வழக்காகக் கற்றுவரப்பட்டது? அல்லது கற்று வரப்படுகிறது? என்னும் செய்திகளை அறிய வேண்டும். அப்பகுதியில் உள்ள நண்பர்கள், சான்றோர்கள் ஆகியோர் மூலம் அச்சுவடிகளைப் பெற முயற்சி செய்ய வேண்டும்.

இக்காலத்து உள்ள வசதிகளைப் பயன்படுத்தி, ஒரு குறிப்பிட்ட அல்லது தேவையான சுவடியைக் குறித்தோ பொது வாகவோ இதழ்களில் விளம்பரம் செய்து பெறுவதும் ஒருவழி யாகும். துண்டுத்தாள்களாக — வேண்டுகோளாக — அச்சிட்டுக் கிராமங்கள் தோறும் கிராம அலுவலர், ஆசிரியர், தக்க சான்றோர், ஆர்வமுடைய நண்பர் ஆகியோருக்கு அனுப்பி, அவர்கள் மூலம் செய்தியைப் பரப்பியும் அவர்கள் மூலமே செய்திகளைப் பெற்றும் அவர்கள் கருத்தின்படி அணுகலாம்.

அரசினர் அல்லது நிறுவனங்கள் திரட்டும் முறை : மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் கிராமங்கள் தோறும் தண்டோரா மூலம் தெரிவித்து வட்ட ஆட்சியர் அலுவலகங்களில் திரட்டி வைக்கச் செய்து, அவ்விடங்களுக்கு வல்லுநரை அனுப்பி விலை நிர்ணயம் செய்து பெற்று வருமாறு செய்யலாம்.

தாள்களில் விளம்பரம் செய்து உரிய நூலகங்கள் போன்ற நிறுவனங்களுக்கு அனுப்பி உரிய தொகையினைப் பெறச் செய்ய லாம். தமிழ்விழாக்கள், நூலக வார விழாக்கள், கண்காட்சிகள் முதலிய நிகழ்ச்சிகளுக்குச் சுவடிகளைக் கொண்டு வந்து காட்சியில் வைக்குமாறு விளம்பரம் செய்து அங்குவரும் சுவடிகளை ஆய்ந்து உரிய தொகை கொடுத்துப் பெற்று வரலாம்.

சோதிடக் கலையில் அரிய நூல்கள் தமிழ்நாட்டின் பல விடத்தும் நிறைந்து கிடக்கின்றன. உரியவர்களை நேரில் அணுகி, அவர்களைக் கவரும்படியான பணத்தைக் கொடுத்து அனைத்துச் சுவடிகளையும் திரட்டிப் பாதுகாக்கலாம்.

அரசு நிறுவனங்களில் தமிழ் வல்லுநர்களை, தமிழார்வம் உடையவர்களை, சிறப்பாகச் சுவடிப் பதிப்பில் அனுபவமும்

ஆர்வமும் உடையவர்களைத் தலைவர்களாக நியமித்தலும், சுவடி களை விலைக்கு வாங்குவதில் அவர்களுக்கு முழுஉரிமையளித்தலும் சுவடி திரட்டுவதில் நல்ல பயனை விளைவிக்கும்.

தனியாராயினும் அரசு நிறுவனங்களாயினும் தமிழரின் அரிய கலைகள் பொதிந்த சுவடிகளைத் திரட்டுவதில் கணிசமான தொகையைச் செலவழிப்பதே இக்கால நிலைக்கும், இக்கால நாட்டு நிலைக்கும் பொருந்துவதாயமைந்து முழுப்பயனை அளிக்கும்.

மேலைநாட்டு அறிஞர் நம்நாட்டுக்கு வந்து களஆய்வுப் பணியை மேற்கொள்ளுவதன் மூலம் சுவடிகளை—மூல ஏடு களையே—பெற்றுச் செல்லுகின்றனர். இந்த முயற்சியில் அவர் களுடைய எண்ணம் ஈடேற நம்மவரிடம் வேரூன்றியிருக்கும் பாமரத்தன்மையும் வறுமையும் அவர்களுக்குத் துணையாகி விடுகின்றன என்று கூறும் அ. தாமோதரன் அவர்களின் கருத்து[58] சுவடி திரட்டுவோர் நினைவு கூரத்தக்கதாகும்.

ஊ. சுவடி திரட்டுதலின் பயன்

பழங்காலச் சுவடி திரட்டும் செயலின் பயனாகத்தான் தொகை நூல்கள் நமக்குக் கிடைத்தன. அச்சு வசதி ஏற்பட்டதன் பின் சான்றோர் திரட்டியதன் பயன் இன்றைய பதிப்புகள் நம்மிடை நிலவுகின்றன. மேலும் திரட்டுவதனால் அச்சாகாத சுவடிகளும் வெளியிடப்படுதல் வேண்டும்; மேலும் சிறந்த பதிப்புகள், ஆராய்ச்சிப் பதிப்புகள் தோன்றுதல் வேண்டும். இவை சுவடி திரட்டுதலின் பயனாகும் என்பது இப்பகுதியில் ஆய்வு செய்யப் பெறுகிறது.

எழுத்து வடிவம் பெற்றுப் பலவிடத்தும் முடங்கிக் கிடந்த தமிழ்ச் சுவடிகளைத் தொகுத்ததன் பயனாக நமக்குக் கிடைத்தவை பாட்டும் தொகையும் கீழ்க்கணக்கு நூல்களுமாகும். தொகுக்கப் பெற்ற இந்நூல்கள் மீண்டும் புதிய, புதிய ஏடுகளில் ஏறி ஆங்காங்கு முடங்கிக் கிடக்கும் நிலையையே பெற்றன.

சென்னைக் கல்விச் சங்கத்தினர் காலம் தொடங்கி இன்று வரை நிறுவனத்தினரும் தனிப்பட்டவர்களும் சுவடிகளைத் தேடித்

58. லண்டன் தமிழ்ச்சங்க ஆண்டுமலர், பக். 49.

திரட்டிப் பதிப்பித்து வருவதனால் சுவடிகள் காக்கப் பெறுகின்றன. சுவடிச் செல்வங்கள் பலர் கைக்கும் நூல்களாக எட்டிப் பயன் தந்து வருகின்றன.

இன்றைய நிலையிலும் அனைத்துச் சுவடிகளும் அச்சு இயந்திரத்தைக் கண்டுவிட்டன என்று கூறமுடியாது. ஒவ்வொரு சுவடியும் நூல் வடிவில் நம்மிடையே உலவ வேண்டும். இந்நோக்கத்தை முழுமை செய்வதே இனியும் சுவடிகள் திரட்ட வேண்டுவதன் முக்கியமான பயனாகும்.

கிடைக்கும் சுவடிகள் — அச்சானவை : சுவடி திரட்டும் முயற்சியில் ஈடுபட்டு அதனால் பெறும் பயனாக—அச்சான நூல்களின் சுவடிகளே கிடைக்கலாம். அவற்றிலும் அந்நூலின் மூலம் மட்டும் கிடைக்கலாம்; அல்லது அதன் உரைமட்டும் கிடைக்கலாம். அவ்வுரையும் அச்சானதாக இருக்கலாம்; அல்லது புதிய உரையாகவும் இருக்கலாம். அவை முழுமையாக அல்லது ஒரு சில, பல பகுதிகள் மட்டும் உள்ள, முதலும் முடிவுமில்லாத, இடையிடையே சில பகுதிகள் இல்லாத தன்மையுடைய குறையான சுவடிகளாகவும் இருக்கலாம். கிடைத்த அளவிலும் சுவடி தூய்மையுடையதாக, எழுத்துத் தெளிவானதாக இருக்கலாம்; அல்லது இருநிலையிலும் மாறுபட்டதாகக் கிடைக்கலாம்.

பேரூர்க் கோவை : சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் பேரூர்க் கோவையினைப் பதிப்பித்தபோது, அந்நூலுக்குரிய மூன்று சுவடிகள் கிடைத்தன. இந்த மூன்று பிரதிகளிலும் நூல் முழுமையுமாக எழுதப் பெறவில்லை. நாளது வரை முந்நூற்று அறுபது பாடல்கள் மட்டுமே கிடைத்தன என்று அவர் தம் முன்னுரையில் குறிப்பார்.[59]

புறநானூறு : புறநானூற்றினைப் பதிப்பிக்க உ.வே.சா.வுக்குப் பல சுவடிகள் கிடைத்தன. அவற்றுள் "சில முதற்பாகங் குறைந்தும், சில இடைப்பாகங் குறைந்தும், சில கடைப்பாகங் குறைந்தும்... இன்னும் பலவகைப்பட மாறியும் கையெழுத்துப் பிரதிகள் இருந்தன".[60]

சீவகசிந்தாமணி : சீவகசிந்தாமணியைப் படித்தபோது தம் ஆசிரியரின் சுவடியையும், சேலம், இராமசாமி முதலியார் கொடுத்த சுவடியையும் வைத்து ஒப்பிட்டுப் படித்துள்ளார்கள். முதலியார்

59. பேரூர்க்கோவை, முகவுரை. 60. புறநானூறு, முடிவுரை.

பிரதியில் மூலமும் பொழிப்புரையுமே இருந்தன. முதலில் சில பாடல்களுக்கு மட்டும் விசேட உரை இருந்தது. பிள்ளையவர்கள் பிரதியிலோ முழுவதற்கும் விசேட உரை இருந்தது.[61]

பரிபாடல் : பரிபாடல் எழுபது பாடலையுடையதென்று...... தெரிகின்றது. ஆனால் இப்பாடல்களுள் முதலிலிருந்து தொடர்ச்சியாகவுள்ள இருபத்திரண்டு பாடல்களும், ... சில உறுப்புகளுமே சுவடிகளிலிருந்து கிடைத்தன.[62]

இவற்றால் கிடைக்கும் சுவடிகளில் ஒரு நூலுக்குரிய சுவடிகள் அனைத்தும் ஒரே மாதிரியாக இருப்பது கடினம் என்பதும், பரிபாடல் முதலான சில நூல்கள் குறையுள்ளனவாகவே பதிப்பிக்கப் பெற்றுள்ளன என்பதும் தெளிவாகின்றன.

அச்சான சுவடிகளின் பயன் : அச்சான நூல்களின் சுவடிகளுள் மூலம் மட்டும் கிடைப்பின் மூல வேறுபாடுகள் திருத்தம் பெறுகின்றன. உரையுடன் கிடைப்பின், மூலபாட வரிகள், உரையில் மீண்டும் எடுத்தாளப்பட்டுள்ள அவ்வரிகள், உரையின் பொருத்தம் ஆகியவற்றின் துணைகொண்டு பொருத்தமான மூல பாடத்தை உறுதிப்படுத்தலாம்.

புதிய செய்திகள் கிடைத்தல் : அச்சான நூல்களுக்கான சுவடிகளை ஒப்பிட்டதால் "முன்பு உள்ள அச்சுப்படிகளில் காணப் பெறாத அடிகள் பல கிடைத்தன; சில சொற்கள் புலப்பட்டன; சில திருத்தம் பெற்றன. இலக்கணக் குறிப்புகள், பாடினோர் பாடப் பட்டோர் குறிப்புகள் இவற்றில் பல திருத்தங்கள் கிடைத்தன. பல அடிகள் செம்மையாக வரையறை செய்யப்பட்டன."[63] என்கிறார் சங்க இலக்கியப் பதிப்பாசிரியர்.

தேடத்தூண்டுதல் : எனக்குக கிடைத்த ஏட்டுச் சுவடிகளுள் ஒரு பிரதியின் தொடக்கத்தில் 'அறநிலை' என்று வரையப் பெற்றிருந்தது. அப்படியே பொருள்நிலை, இன்பநிலை என்ற பகுதிகள் எந்தெந்தப் பாடலிலிருந்து தொடங்குமோ என்று தேடிப் பார்த்தேன்[64] என்னும் பதிப்பாசிரியரின் கூற்று, ஒரு சுவடியின்

---

61. என் சரித்திரம், பக். 736-737.
62. பரிபாடல், முகவுரை.
63. சங்க இலக்கியம், முகவுரை, பக். 17.
64. புறநானூறு, முகவுரை.

ஒரு தொடர், தொடர்ந்து சில தொடர்கள் உள்ளன என்பதை உணரச் செய்து, அவற்றையும் தேடிக் காணும் வாய்ப்பினை அளிக்கிறது என்பதை உணர்த்துகிறது.

திருத்தம் பெறுதல் : உ. வே. சா. அவர்களின் பதிப்பில் வெளி வந்த பாடற் பகுதிகளில் சிதைந்து காணப்படும் அடிகளிற்சில, பழைய ஏடுகளுடன் ஒப்பு நோக்கப்பட்டு ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை உரையமைந்த கழகப் பதிப்பு ஓரளவு திருத்தம் பெற் றுள்ளது. புறம் : 328, 337, 355, 357, 361, 362, 366, 370 என்னும் எண்ணுள்ள பாடற்பகுதிகள் இவ்வாறு திருத்தம் பெற்றவையாகும்.[65]

அச்சான நூலில் இல்லாத பல அடிகள் நிரப்பப் பெற்றும், திருத்தம் பெற்றும் உள்ளன என்னும் இச்செய்தி பழைய சுவடி களின் பயனை விளக்குகின்றது. மேலும்,

புறம் 384 ஆம் பாடலில் 'அரிகாற் கருப்பை யலைக்கும் பூழின்' என்ற ஐந்தாம் அடியும், 'கரும்பனூரன்' என்ற பத்தாம் அடியின் தொடரும் உ. வே. சா. பதிப்பில் விடுபட்டன. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை உரையுள்ள கழகப் பதிப்பில் சேர்க்கப் பட்டுள்ளன.

''பதிற்றுப்பத்தின் ஏடுகள் இரண்டு பெற்று அச்சுப்படியையும் அவற்றையும் ஒப்புநோக்குவது முதற்கண் செயற்பாலதென உணர்ந்து செய்ததில் சில வேறுபாடுகளும் சில பாடங்களிற் காணப் பட்ட ஐயங்கட்குத் தெளிவும் கிடைத்தன''[66] என்னும் துரைசாமிப் பிள்ளை அவர்களின் கூற்றும் அச்சான நூல் சுவடிகளின் பயனைத் தெளிவுபடுத்துகிறது.

கிடைக்கும் சுவடிகள் - அச்சிடப்பெறாதவை : சுவடிதேடும் முயற்சியின் பயனாக இதுவரை அச்சிடப்பெறாத சுவடிகள் கிடைக்குமாயின் அவற்றை வெளியிட்டுத் தமிழுலகிற்கு அளிக்கும் பேறு பெறுகிறோம். வெளியிடும் நூல் இதுவரை பெயர் கூட அறியாத அளவு புதிய நூலாக அமையலாம். அல்லது பிற நூல் களின் வழியோ பிற உரைகளின் வழியோ அந்நூலின் பெயரும், ஆங்காங்கு சில அடிகளும் தெரிந்துள்ள நூலாகவும் இருக்கலாம். இவையும் முன்கூறிய நிறை, குறைகளை உடையனவாகவே இருக்கும். பலவிடங்களிலிருந்தும் பல படிகள் கிடைக்கக்கூடும்.

65. புறநானூறு, கழகம், அணிந்துரை, பக். 12.
66. பதிற்றுப்பத்து, கழகம், முகவுரை, பக், 13.

அச்சிடப்பெறாத பல சுவடிகளின் பயன் : இதுகாறும் அச்சாகாத நூல்களுக்கான சுவடிகள் கிடைப்பின் அவற்றை வெளியிட்டுத் தமிழுலகிற்கு அளிப்பதோடன்றி அந்நூல் அழியாத வாறு காத்த பெருமையினைப் பெறுகிறோம். ஆறுமுகநாவலர் முதலாகப் பல சான்றோர் இப்பெருமையினைப் பெற்ற பதிப்பாசிரியராவர்.

அச்சாகாத சுவடி, நூலாசிரியரின் மூலப்படியாகவோ அவரால் திருத்தம் செய்யப்பெற்றதாகவோ கிடைத்தால் பதிப்பில் இடையூறு நேராது. அண்மைப்படிகளாயினும் ஓரளவு பிழை யின்றியே இருக்கக்கூடும். அவ்வாறு இல்லாத வழி ஏடுகள் சில, பல கிடைப்பின் முன் கூறிய அச்சான சுவடிகளின் நிலையைப் போலவே பலவகை மாறுபாடுகளுடன் காணப்படும். அவற்றை ஒப்புநோக்கி முறையே பாடவேறுபாடுகள், நூலின் தலைப்பு வேறுபாடுகள், உள்தலைப்புகளின் பெயர் வேறுபாடு, இடவேறு பாடுகள், பாடல்களின் எண், எடுத்துக்காட்டுகளின் வேறுபாடுகள் ஆகியவற்றை ஆய்ந்து மூலபாடத்தை வரையறை செய்ய அச்சுவடிகள் பெரிதும் உதவியாக இருக்கும்.

இவ்வேறுபாடுகள் உள்ள சுவடிகளுக்குச் சில சான்றுகள் : **நூலின் பெயர்** : (ஒவ்வொரு சுவடியிலும் வெவ்வேறாகக் காணப் படுதல்) மனைசாஸ்திரம் (ஆர். 165); மனைவாஸ்து லட்சணம் (ஆர். 238); சிற்பசாஸ்திரம் (ஆர். 243).

உட்தலைப்பு :	நாற்பொருட்பயன்	(நூற்பா. 10 - ஆர். 5175)	
	நூற்பயன்	(” ” - ஆர். 2127)	
எண் :	சிறப்புப்பாயிரப்பாடல்கள்	1-8	(டி. 19)
	ஒரே பாடல்		(டி. 13)
எண்ணிக்கை :	பாடல்எண்ணிக்கை	1-93	(டி. 19)
	பாடல் எண்ணிக்கை	1-101	(டி. 13)

வீரசோழியம் என்னும் நூலைப் பதிப்பித்தபோது சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களுக்கு மதுரை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், தஞ்சை, சென்னை ஆகிய பகுதிகளிலிருந்து சுவடிகள் கிடைத்தன. அவற்றை ஒப்பிட்டபோது எழுத்து, சொல் தவிர்த்த பிற மூன்று அதிகாரங்களிலும் செய்யுள், உரை, உதாரணம் யாவும் மாற்றம் பெற்றிருந்தன. பழைய உதாரணங் கள் நீக்கப்பட்டுப் பின்னூல்களிலிருந்து புதிய உதாரணங்கள் சேர்க்கப்பட்டிருந்தன.[67]

67. வீரசோழியம், முகவுரை.

''திருவிளையாடற் பயகரமாலை என்ற ஒரு பிரபந்தம் உரையோடு கிடைத்தது. திருவிளையாடற் பயங்கரமாலை என்ற பெயரோடு ஒரு சிறிய நூல் மிகப்பிழையாக அச்சிலிருப்பதை நான் படித்திருக்கிறேன். அதற்குப் பயங்கரமாலையென்று ஏன் பெயர் வந்ததென்பது விளங்காமலேயிருந்தது. மிதிலைப்பட்டியிற் கிடைத்த பிரதியில் பயகரமாலை என்ற பெயர் இருந்தது கண்டு உண்மை விளங்கியது. பயத்தை நீக்கும் மாலை என்னும் பொருளைத் தரும் பயஹரமாலை, பயங்கரமாலையாகி அச்சேறியது''[68] என்பர் உ. வே. சா. அவர்கள். இவை பல்வேறு சுவடிகளில் காணப்படும் வேறுபாடுகள். எவ்வாறாயினும் பல சுவடிகளையும் கொண்டு மூலபாட ஆய்வின் அடிப்படையில் உண்மையான அல்லது சிறந்த பாடத்தைத் தேர்ந்தெடுக்கலாம். பிறபாடங்களையும் வேறுபாடுகளாகக் காட்டிப் பதிப்பிக்க இச்சுவடிகள் பயன்படுவனவாகும்.

பிறநூல் சுவடிகளின் பயன் : ஒரு நூலைப் பதிப்பிக்கும்போது அதே நூலுக்குரிய பல சுவடிகள் பயன்படுவது போல வேறு நூல்கள் எழுதப்பட்ட சுவடிகளும் பயன்படுகின்றன. பிறநூல்களில் உரையாசிரியர் உரை, விளக்கவுரை, சான்றுகள், பிறநூல் மேற்கோள்கள் போன்றவற்றைக் கூறுமிடத்து வேறுநூலின் பாடல்களும் கருத்துகளும் எடுத்துக்காட்டப்படுகின்றன. எழுதினோர் செய்த பிழையாலும், எழுத்துத் தெளிவின்மையாலும், சுவடியின் சீர்கேடுகளாலும் நன்கு விளங்காத அல்லது பழுதுபட்டுவிட்ட பகுதிகளைப் பிறநூல்களில் காட்டப்பெற்றுள்ளவற்றின் துணை கொண்டு திருத்தம் செய்துகொள்ளவும் முழுமைப் படுத்திக் கொள்ளவும் முடிகிறது.

புறநானூறும் தொல்காப்பிய மேற்கோளும்

''பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே
ஆடுநர்க் கீத்த பேரன் பினனே
அறவோர் புகழ்ந்த வாய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே''

என்பன புறநானூற்று 221 ஆம் பாடலின் தொடக்க அடிகள். பலபதிப்புகளிலும் இவ்வடிகளே காணப்படுகின்றன. இவற்றுள் 'பேரன் பினனே' — என்பதற்கேற்ற ஒலி அமைப்பில் 'பல்புக ழினனே' என்றிருப்பதும், 'திண்ணன் பினனே' — என்பதற்கேற்ப 'ஆய்கோ லினனே' என்றிருப்பதும் பொருத்தமுடையதாகும்.

---

68. என்சரித்திரம், பக். 945.

தொல்காப்பியப் பொருளதிகாரம், புறத்திணை இயல் 24 ஆம் நூற்பாவின் மன்னைக் காஞ்சித்துறைக்கு இப்பாடல் எடுத்துக் காட்டப்படுகிறது. ஒரு தொல்காப்பியச் சுவடியில் உள்ள பல்புகழினனே, ஆய்கோ லினனே என்னும் தொடர்கள் பாடவேறு பாடாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவையே சிறந்த பாடமாகக் கொண்டு பதிப்பிக்கப்பெறவேண்டியவையாகும்.

புறநானூறு - உரையும் - பிறநூல் உரைகளும் : "யாற்று நீரும் ஊற்று நீரும் மழைநீரு முடைமையான், கடற்கு முந்நீரென்று பெயராயிற்று. அன்றி முன்னீரென்று பாடமோதி நிலத்திற்கு முன்னாகிய நீரென்று முரைப்ப" என்பது புறநானூற்றின் 9 ஆம் பாடலில் வரும் முந்நீர் என்ற சொல்லுக்கு உரையாசிரியர் தரும் விளக்கம். ஆனால், பெரும்பாணாற்றுப்படையின் உரை, முந்நீர் நாப்பண் (வரி 441) என்ற தொடருக்கு, 'நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலையுடைய நீர்க்கு நடுவே' என்று கூறுகிறது.

"முந்நீர் - கடல்; ஆகுபெயர்; ஆற்றுநீர்; ஊற்றுநீர், மேனீர் என இவை என்பார்க்கு அற்றன்று; ஆற்றுநீர் மேனீராகலானும், இவ்விரண்டு மில்வழி ஊற்றுநீருமின்றா மாதலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந்தியதன்று. முந்திய நீரெனின், 'நெடுங் கடலுந் தன்னீர்மை குன்றும்' (குறள் . 17) என்பதனால் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாது. ஆனால் முந்நீர்க்குப் பொருள் யாதோவெனின், முச்செய்கையையுடைய நீர் முந்நீரென்பது. முச்செய்கையாவது மண்ணைப்படைத்தலும் மண்ணையழித்தலும் மண்ணைக்காத்தலுமாம்"[69] என்பது சிலப்பதிகார உரை. இவ்வாறு பல நூல் சுவடிகளிலும் ஒரு தொடருக்குப் பலவகையான உரைகள் கிடைக்கின்றன. சிறந்த உரையைத் தேர்ந்தெடுக்க முடிகிறது.

பரிபாடலும் பிறநூல் மேற்கோள்களும் : பரிபாடல் எழுபது பாடலையுடையதாயினும் சுவடியில் இருபத்திரண்டு பாடல்களே கிடைத்துள்ளன. அவற்றைத் தவிர "பழைய உரைகளிற் காட்டப் பெற்ற மேற்கோள்களிலிருந்து கிடைத்த இரண்டு முழுப்பாடல் களும், சில உறுப்புக்களும், புறத்திரட்டு முதலியவற்றிலிருந்து கிடைத்த சில உறுப்புக்களுமே நூலாக அச்சாகியுள்ளன."[70]

---

69. சிலப்பதிகாரம், 17 : உள்வரி, அடியார்க்கு நல்லார்.
70. பரிபாடல், முகவுரை.

பிறநூல் சுவடிகளால் பாடல், உரை ஆகியவை திருத்தம் பெற்றன; முழுமை பெற்றன என்பதற்கும் பொருள் விளக்கமுற்றன என்பதற்கும் பதிப்பாசிரியர்களின் அனுபவக்கருத்துகளும் துணை நிற்கின்றன.

பிறநூல் சுவடி பற்றி உ. வே. சா : (குறுந்தொகை)

"குறுந்தொகைப் பிரதிகளை ஒப்புநோக்கிய பிறகு தொல் காப்பிய உரை முதலியவற்றைப் படித்து அங்கங்கே மேற்கோளாக ஆளப்பட்ட இந்நூற் செய்யுட்களையும் செய்யுட்பகுதிகளையும் தொகுத்து அவற்றிற் கண்ட பாடபேதங்களையும் குறித்துக் கொண்டேன். இம்முயற்சியால் பல அருமையான திருத்தங்கள் கிடைத்தன; பல ஐயங்கள் நீங்கின."[71]

உ. வே. சா. புறநானூறு : இந்நூலிலிருந்து வேறு நூல்களி னுடைய பழையவுரைகளினிடையே உரையாசிரியர்களால் பூர்த்தி யாகவும் சிறிது சிறிதாகவும் எடுத்துக் காட்டப்பட்டிருந்த உதாரணங்கள், சிற்சில பாடல்களிலிருந்த வழுக்களை நீக்கிச் செவ்வைசெய்து கொண்டு பொருளுண்மை காணுதற்கும் பெருந் துணையாக விருந்தன.[72]

உ. வே. சா. பதிற்றுப்பத்து : எட்டுப்பத்திலும் இல்லாத இந் நூற்பாடல்கள் சில தொல்காப்பியப் பொருளதிகார உரையால் தெரியவந்தன. அவை வருமாறு : (தொல். பொருள் - 84 இன் காட்டுகள்) என்பன உ. வே. சா. அவர்களின் அனுபவக் கருத்துகள்.[73]

பிறநூல் சுவடிபற்றி எஸ். வையாபுரிப்பிள்ளை : (களவியற் காரிகை)

"கற்கந்து மெறிபோத்தும்...சிலம்புடைப்ப - இவற்றுள் விடு பட்ட இடங்கள் இறையனாரகப்பொருளுரையினின்று பூர்த்தி செய்யப்பட்டவை. (...)"[74]

என்கிறார் எஸ். வையாபுரிப்பிள்ளை. இவ்வனுபவச் செயல் முறைக் கருத்துகள் பிறநூல் சுவடிகளின் பயனை மேலும் உறுதிப் படுத்துகின்றன. இவ்வனுபவத்தினால்,

---

71. குறுந்தொகை, முகவுரை. 72. புறநானூறு, உ. வே. சா. முகவுரை.
73. பதிற்றுப்பத்து, முகவுரை. 74. களவியற்காரிகை, முகவுரை, பக், 38-39.

முடிவு :

"முதலில் ஏடுதேடுகையில் அச்சிட்ட புத்தகங்களின் ஏடுகளாக இருந்தால் அவற்றை அதிகமாகக் கவனிப்பதில்லை. நாளடைவில் செய்து வந்த ஆராய்ச்சியால் அச்சிட்ட புத்தகங்களிலுள்ள பிழைகளைத் திருத்திக் கொள்வதற்கும், நல்ல பாடங்களைத் தெரிந்து கொள்வதற்கும் ஏட்டுப் பிரதிகள் மிக்க உதவியாக இருப்பதை உணர்ந்தேன். ஆதலின் அது முதல் அச்சிட்டவற்றின் ஏட்டுப் பிரதிகள் கிடைக்குமேல் அவற்றையும் பொன்னே போலப் போற்றி ஆராய்ச்சி செய்யும் வழக்கத்தை மேற்கொண்டேன்"[75] என்கிறார் உ. வே. சா.

சங்ககாலம் முதல் இன்றுவரை சுவடிதிரட்டும்பணி மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் தமிழ்ச்சுவடிகள் பல இயற்கையாகவும் செயற்கையாகவும் அழிந்துள்ளன. நூல்களைக் கற்கும் ஆர்வம் பெற்றவர், அச்சிட்டு வெளியிடத்துணிந்தவர் ஆகியோரால் திரட்டிச் சேர்க்கப்பெற்ற சுவடிகளைத்தவிர மேலும் சிதறுண்டு கிடக்கும் சுவடிகள் பலவாகும். அவற்றை முறையாகத் திரட்டி வெளியிட வேண்டியது இன்றியமையாததாகும்.

75. என் சரித்திரம், பக். 920 - 921.

4. சுவடிகளைப் பகுத்தலும் காத்தலும்

கற்பதற்கும் காப்பதற்கும் பதிப்பிப்பதற்கும் என்ற மூன்று நிலையில் சுவடிகளைத் திரட்டினர். அச்சு நூல்கள் பெருகிவிட்ட இக்காலத்தில் கற்பதற்காகச் சுவடிகளைத் தேடுதல் இல்லையாயிற்று. அழியாது காத்தற்கும் பதிப்பித்தற்குமே சுவடிகளைத் தேடித் திரட்டும் செயல் வழக்காற்றில் இருந்து வருகிறது. தனியார் ஒருசில சுவடிகளை மட்டுமே வைத்திருக்கும்போது அவற்றையும் பாதுகாக்க வேண்டியுள்ளது. பதிப்பிப்பதற்காக ஒருசில சுவடிகளை வாங்கி வைப்பவர்களும் அவற்றைக் காக்க வேண்டியுள்ளது. பெரிய நிறுவனங்களில் மிகப்பலவாகிய சுவடிகளைத் திரட்டி வைத்துப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே இந்நிறுவனங்களில் சேர்த்து வைத்துள்ள சுவடிகளை முறைப் படுத்திப் பயன்படுத்த எளிமையாக்கி வைப்பதும், தூய்மை செய்து வைப்பதும், மேலும் பூச்சி அரிக்காதவாறு பாதுகாப்பதும் இன்றியமையாதவையாகின்றன. தனியாரும் நிறுவனங்களும் சுவடிகளை முறைப்படுத்திப் பாதுகாக்கும் வழிவகைகளை இப்பகுதி ஆராய்கிறது.

அ. பகுத்தல்

தூய்மை செய்தல் : கிடைக்கும் சுவடிகள் தூய்மை இன்றி, ஏடுகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு கிடப்பதுண்டு. பாதுகாப்புக்குரிய சட்டங்களும் கயிறும் பெரும்பாலும் ஒழுங்காயிரா. முதலில் இவற்றைத் தூய்மை செய்ய வேண்டும். சுவடிகள் பழமையடைந்து, நன்கு உலர்ந்து கிடக்குமாதலின் தூரிகை, துணி முதலிய கருவிகளைக் கொண்டு துடைக்கக் கூடாது. முதலில் லைட் டீசல் ஆயில், லெமன் கிராஸ் ஆயில் ஆகியவற்றில்

ஒருவகை எண்ணெயைப் பூசவேண்டும். உட்புறமெல்லாம் நன்கு நனையுமாறு பூசிச் சிறிது நேரங் கழித்து ஒன்றோடொன்று ஒட்டிக் கிடக்கும் ஏடுகளைப் பொறுமையோடு தனித்தனியாகப் பிரிக்க வேண்டும். அதன் பிறகு தூரிகை போன்ற கருவிகளால் தூய்மை செய்யவேண்டும்.

சுவடியின் இருபுறமும் பாதுகாப்புக்குரிய சட்டங்களையும் கயிற்றையும் சரிசெய்தோ புதுப்பித்தோ சுவடிக்கட்டினை ஒழுங்கு படுத்தினால் கையாளுவதற்கு எளிமையாக இருக்கும்.

கூர்ந்து ஆய்தல் : ஏடுகளை வரிசைப்படுத்துதல் வேண்டும். ஏடுகளுக்கு எண்கள் கொடுத்திருப்பின் இப்பணி எளிதாக முடியும். சில சுவடிகள் வரிசை எண் மாறாமல் இருக்கவும் கூடும். மாறியிருந்து ஏட்டு எண்ணும் இல்லாமலிருந்தால், பாட்டு எண் களைக் கொண்டும், முதல் ஏட்டின் முடிவும் அடுத்த ஏட்டின் தொடக்கமும் பொருந்துவதைக் கொண்டும் ஏடுகளை வரிசைப் படுத்த வேண்டும். முடிவும் முதலும் பாட்டு, தொடர், பொருள் பொருத்தம் ஆகியவற்றில் ஒன்றாலும் பலவற்றாலும் பொருந்து மாற்றினால் வரிசையை அறிதல் முறையாகும்.

பலநூல் சுவடிகாணல் : ஒரு சுவடிக் கட்டினைக் கூர்ந்து ஆய்வு செய்யும்போது பலவகைச் செய்திகள் புலனாகும். அதாவது, ஒரு சுவடிக் கட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட நூல்கள் இருத்தல் கூடும்; அவை தனித்தனியே பிரிக்க முடியாதபடி, ஒரு நூலின் முடிவு ஒரு பக்கத்திலும், அடுத்த நூலின் தொடக்கம் அதே ஏட்டின் மறுபக்கத்திலுமாக எழுதப்பட்டிருக்கக் கூடும். அவற்றுள் ஒன்று தோத்திரம், மற்றொன்று மருத்துவம் போன்று பொருள் வேறுபாடுகளுடன் இருத்தலும் உண்டு. இக்காரணங்களால் சுவடிகளைத் தனித்தனிக் கட்டுகளாகப் பிரித்து வைப்பதிலும், பொருள் வாரியாகப் பிரித்து வைப்பதிலும் சிக்கல் ஏற்படுகிறது. இவ்வாறான சிக்கல் ஏதுமின்றி தனித்தனியான ஏடுகளில் அமைந்த பல நூல்களின் தொகுப்பில், முதல் ஏடு, இறுதி ஏடுகளில் ஆசிரியர், சுவடிக்கு உரியோர், சுவடி எழுதிய காலம், சுவடி வரலாறு, சுவடியை எழுதியவர், எழுதக் காரணம் ஆகிய பல குறிப்புகள் காணப்படும். அச்சுவடியிலிருந்து நூல்களைத் தனித்தனியாகப் பிரித்தால் இக்குறிப்புகள் ஒரு நூலுக்கு மட்டுமே உரியதாகிவிடும். மற்ற நூல்களுக்கான வரலாறுகள் மறைக்கப்பட்டுவிடும், எனவே கட்டில் உள்ளவாறே ஏடுகளை வரிசைப்படுத்தி, இருக்கும் நூல் களுக்கான பட்டியலைத் தயாரிக்க வேண்டும்.

எண் இடுதல் : பலநூறு சுவடிகள் உள்ள நிறுவனங்களில் நூல்களுக்குரிய பெயர்களை மட்டும் சுவடியின்மேல் எழுதி வைப்பது பயன் தராது. சுவடிகளை விரைவில் எடுப்பதற்குரிய முறையில் சுவடிகளுக்கும், அதில் உள்ள நூல்களுக்கும் வரிசை எண் கொடுத்து வைப்பது முறையானதும் பயனுடையதும் ஆகும்.

சுவடிக் கட்டுகளுக்குக் கொடுக்கப்பெறும் வரிசைஎண், கட்டு எண் எனப்படும். அச்சுவடிக் கட்டிலுள்ள நூல்களுக்குக் கொடுக்கப் பெறும் வரிசைஎண் நூல்எண் எனப்படும். ஒரு சுவடிக் கட்டில் நான்கு நூல்கள் அடங்கியிருக்குமாயின் முறையே,

கட்டுஎண்	**நூலக எண்**	**நூலின் பெயர்**	**ஏடுகள்**
1.	1.	அகத்தியர் ஆயிரம்	1-17
	2.	தேரையர் வயித்தியம்	18-62
	3.	மாரியம்மன் தாலாட்டு	63-70
	4.	சடகோபர் ஊசல்	71-85

என இவ்வாறான தகவல்கள் அடங்கிய தாளினைச் சுவடிக் கட்டின்மீது பொருத்த வேண்டும். அத்தாள், கட்டின் மேலுள்ள சட்டத்தின் அகல அளவில் சுமார் 13 செ. மீ. நீளமுள்ளதாக இருத்தல் நல்லது, கீழே துணியும் மேலே தாளுமாக ஒட்டப்பட்ட தாயின் விரைவில் அழியாமல் இருக்கும். அதனைக் கயிற்றில் கோத்துச் சட்டத்தோடு பொருந்துமாறு வைத்துக் கட்டி வைக்கலாம். இதேபோல,

கட்டுஎண்	**நூலக எண்**	**நூலின் பெயர்**	**ஏடுகள்**
2.	5.	தக்க நாடகம்	1-92
3.	6.	பிள்ளையந்தாதி	1-60
	7.	திருவங்கமாலை	61-110

என எண்கள் தொடர்தல் வேண்டும். பயன்படுத்துவதற்கு எளிமையாக இருக்கும். விரும்பும் நூலினை அகரவரிசை அட்டை களின் துணைகொண்டு விரைவாக எடுக்க முடியும். ஒரு நிறுவனத்தில் உள்ள சுவடிகளில் இறுதிச் சுவடியை எடுத்துப் பார்த்தால் இந்நிறுவனத்தில் இத்தனைச் சுவடிகள் உள்ளன இத்தனை நூல்கள் அடங்கியுள்ளன என்பதையும் அறியலாம்.

பதிவேடுகள் : தூய்மை செய்து, ஒழுங்குபடுத்தி, எண் கொடுத்து முடித்த சுவடிகளைப் பதிவு செய்து வைக்க வேண்டும். அதுவே சுவடிகள் நிலையாக இருப்பதற்குரிய வழியாகும். இப்பதிவேட்டு முறையை இரண்டு வகைப்படுத்தலாம். ஒருவகை, **பதிவேடுகள்** எனவும், மற்றொருவகை **வழிகாட்டிகள்** எனவும் பெயர்பெறும்.

சுவடி வரவுப் பதிவேடு, சுவடி இருப்புப் பதிவேடு, சுவடிக்கட்டு எண் பதிவேடு என்னும் மூன்று வகைப் பதிவேடுகள் இன்றியமையாதவை. அகரவரிசை அட்டைகள்,விளக்க அட்டவணை என்னும் இரண்டு வகை வழிகாட்டிகள் மிகவும் பயன்படுபவை.

மாதிரிப் பதிவேடுகள் - சுவடிவரவுப் பதிவேடு : சுவடிகளைப் பெற்றவுடன் அவற்றைப்பற்றிய செய்திகளைப் பதிவேடுகளில் முறையாகப் பதிந்து வைப்பது சுவடி திரட்டிய வரலாறாக அமையும். பதிவு செய்தபிறகு அச்சுவடிகள் நிலையான இடத்தைப் பெற்றுவிடுகின்றன. சுவடி ஆய்வாளருக்குச் சுவடியை எடுக்கவும் வரலாறு அறியவும் துணையாகிறது. இப்பதிவேடுகளுக்குரிய சில மாதிரிகள் கீழே தரப்படுகின்றன. முதலாவதாகச் சுவடி வரவுப் பதிவேடு என்பது தனியாரிடமிருந்து பெற்ற செய்திகளைப் பதிவு செய்து வைப்பதாகும். ஓலை, தாள் ஆகிய இரண்டிற்கும் பொதுவானது; ஒரே வரிசையில் நூலக எண்கள் கொடுக்கப்படும்.

1 **நாள்**	2 **நூலின் பெயர்**	3 **சுவடிக்கு உரியவர் (அல்லது) சுவடியைக் கொடுத்தவர் முகவரி**	4 **கொடுத்த முறை**	5 **விலை (அ) மதிப்பு**	6 **நூலக எண்**	7 **ஓலை/ தாள்**
2-6-‘85	கபிலபடலம்	திரு. பாலன் (கொடுத்தவர்) 28, பெரிய தெரு, சேலம்-2	அன்பளிப்பு	ரூ. 50.00	170	ஓலை
	கடலூர் பள்ளு	,,	,,	ரூ. 50 00	171	,,
	கணக்கதிகாரம்	,,	,,	ரூ. 40.00	172	தாள்
12-6-‘85	சரநூல்	திரு. நாதன் 44, அரசமரத்தெரு புதிய அகரம் ஈரோடு-3	விலைக்கு	ரூ. 45.00	173	ஓலை
	கையனார் வில்லுப்பாட்டு	,,	,,	ரூ. 50.00	174	,,

இருப்புப் பதிவேடு : நூலகத்தில் உள்ள சுவடிகளைப் பற்றிய சுருங்கிய செய்திகளையறியவும், அடிக்கடி கையாளவும் பயன்படுவது இருப்புப் பதிவேடு. ஓலை, தாள்—இரண்டுக்குப் பொதுவானது.

மாதிரி :

நூலக எண்	நூலின்பெயர்	ஆசிரியர்	ஏடுகள்	ஓலை/தாள்	பதிவுசெய்தவர் ஒப்பம்
170	கபில படலம்	சுந்தர முனிவர்	82 ஏடுகள்	ஓலை	,,
171	கடலூரர் பள்ளு	கந்தசாமிப் புலவர்	114 ,,	,,	,,
360	தொல். எழுத்ததிகாரம்	நச்சினார்க்கினியர் உரை	260 ,,	,,	,,
361	தொல். பொருளதிகாரம் செய்யுளியல்	பேராசிரியர் உரை	276 ,,	தாள்	,,

கட்டுஎண் பதிவேடு : ஒவ்வொரு கட்டிலும் உள்ள நூல்களை யறியப் பயன்படுவது இப்பதிவேடு. இதன் **மாதிரி :**

கட்டு எண்	நூலக எண்	நூலின் பெயர்	ஏடுகள்
1	1.	அகத்தியர் ஆயிரம்	1- 17
	2.	தேரையர் வயித்தியம்	18- 62
	3.	மாரியம்மன் தாலாட்டு	63- 70
	4.	சடகோபர் ஊசல்	71- 85
2	5.	தக்க நாடகம்	1- 92
3	6.	பிள்ளை யந்தாதி	1- 60
	7.	திருவங்கமாலை	61-110

சுவடியைப் பற்றிய வரலாறு அறிய உதவுவது சுவடி வரவுப் பதிவேடு; சுவடிகளைப் பயன்படுத்துவோர் சுவடிகளின் இருப்பை அறிய உதவுவது இருப்புப் பதிவேடு; ஒரு எண்ணுள்ள சுவடி எந்தக் கட்டில் உள்ளது என்பதை அறியவும், சுவடிகளைச் சரிபார்க்கவும் துணைபுரிவது கட்டுஎண் பதிவேடு. ஒவ்வொரு சுவடியையும் பெற்று ஒழுங்குபடுத்தியவுடன் இம்மூவகைப் பதிவேடுகளிலும் தெளிவாகப் பதிவு செய்தல் வேண்டும். ஓலைச் சுவடி, தாள் சுவடிகளுக்குத் தனித்தனிப் பதிவேடுகள் வைக்கலாம். ஓரே பதிவேடாயின் முதல் இருவகைப் பதிவேடுகளிலும் ஒரு வரிசை ஒதுக்கி, ஓலை அல்லது தாள் என்பதை அந்தந்த வரியில் குறிப்பிடலாம். கட்டுஎண் பதிவேட்டிற்கு ஓலை/தாள் என்பது பொருந்தாது. தனித்தனிப் பதிவேடுகளே வேண்டும். கட்டு எண்களும் தனித்தனி வரிசையாக அமையும்.

வழிகாட்டிகள் — அகரவரிசை அட்டைகள் : அகரவரிசை அட்டைகளை மூன்று வகையில் தயாரித்து, தனித்தனி அறைப் பெட்டிகளில் வரிசைப்படுத்தி வைப்பது சுவடியைப் படிக்க வருவோருக்குப் பயன் அளிக்கும். அவை நூல்பெயர் அகரவரிசை (பொதுப் பட்டியல்); ஆசிரியர் பெயர் அகரவரிசை; பொருள்வாரி அகரவரிசை என்பனவாகும். அச்சு நூலுக்குரிய அட்டைகளுக்கும், சுவடிகளுக்குரிய அட்டைகளுக்கும் வேறுபாடு உண்டு. சுவடிக்குரிய அட்டையில் பதிப்பு, ஆண்டு முதலிய விவரங்கள் கிடையாது.

நூல்பெயர் அகரவரிசை (மாதிரி அட்டை)

கடலூர் பள்ளு
ஆ. கந்தசாமிப் புலவர்
எண். 171.

தொல்காப்பியம் — எழுத்ததிகாரம்
நச்சினார்க்கினியர் உரை
எண். 360.

ஆசிரியர் பெயர் அகரவரிசை (மாதிரி அட்டை)

கந்தசாமிப் புலவர், ஆ.
சடலூரர் பள்ளு
எண். 171.

நச்சினார்க்கினியர் உரை
தொல்காப்பியம்—எழுத்ததிகாரம்
எண். 360.

பொருள்வாரி அகரவரிசை : நூல்பெயர் அகரவரிசை அட்டைகளையே மீண்டும் ஒரு தொகுதி எழுதிக்கொள்ள வேண்டும். அவற்றை அகராதி, நிகண்டு, சங்க இலக்கியம், இலக்கணம், சிற்றிலக்கியம், சமயம், மருத்துவம், இசை என்ற பொருள் அடிப் படையில் பிரித்துப் பொருள் வகையை வரிசைப்படுத்திக்கொண்டு-ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தனி அட்டை விளக்கத்துடன்—உயர்த்திப் பிரித்துக் காட்டுமாறு அறைப் பெட்டியில் அமைத்து, அவ்வப்பொருளில் பிற சுவடி, நூல்பெயர் அட்டைகளை அகர வரிசைப்படுத்தி அகரவரிசை அறைப்பெட்டிக்குள் வைக்கவேண்டும்.

பயன்படுத்த வோருக்கு நூல்பெயர் மட்டும் தெரியும்போது நூல் பெயர் அகரவரிசையின் துணைகொண்டு நூல்களை எடுத்துக் கொள்ளலாம். குறிப்பிட்ட ஒரு ஆசிரியருடைய சுவடிகள் என்னென்ன உள்ளன என்பதை அறிய ஆசிரியர் பெயா அகர வரிசை பயன்படும். தேவையான ஒரு பொருளில் என்னென்ன சுவடிகள் உள்ளன என்பதைப் பொருள்வாரி அகரவரிசை அட்டை களின் வழி தேர்ந்தெடுக்கலாம்.

விளக்க அட்டவணை : தேவைப்படும் சில சுவடிகளை அகர வரிசை அட்டைகளின் மூலம் தேர்ந்தெடுக்கிறோம். அச்சுவடிகளில் என்னென்ன செய்திகள் உள்ளன? பாடலா? உரைநடையா? எத்தனைப் பாடல்கள் உள்ளன? சுவடி முழுமையாக உள்ளதா? என்பனவாகிய செய்திகளை அறிய ஒவ்வொரு சுவடியையும் எடுத்துப் பிரித்துப் பார்க்கவேண்டும். பிற இடங்களில் உள்ளவர் கள் இந்நிறுவனத்தில் உள்ள சுவடிகளைப் பற்றி மேற்குறித்த

செய்திகளை அறியவேண்டும். இவ்விரண்டு நிலைகளுக்கும் முழுமையாகப் பயன்படுவது விளக்க அட்டவணை. இவ் அட்டவணையை முறையாகத் தயாரித்து அச்சிட்டுவிட்டால் பல இடங்களிலும் உள்ளவர்கள் இவ் அட்டவணையைப் பெற்றுப் பயன்பெற இயலும். இவ் அட்டவணையில் அடங்கவேண்டுவனவற்றை மாதிரி ஒன்றின் மூலம் விளக்கலாம்.

மாதிரி

எண். 2363. தண்டலையார் சதகம் (பழமொழி விளக்கம்) ஓலை. 38×3 செ.மீ. ஏடு 36. வரி 5. மொழி—தமிழ். எழுத்து—தமிழ். பழுதடைந்தது. முழுமையானது. அச்சாகியுள்ளது.

தொடக்கம் தண்டலையார் சதகம்

காப்பு

சீர்கொண்ட கற்பகத்தை வாதா விநாயகனைத் தில்லை வாழும்
....
ஏர்கொண்ட நவகண்ட மிசைந்தபழ மொழிவிளக்க மியம்பத் தானே.

நூல்

வரமளிக்குந் தண்டலையார் திருக்கோவி லுட்புகுந்து வலமாய் வந்தே
....
திருவிளக்கிட் டார்தமையே தெய்வமறிந் திடும்வினையுந் தீருந் தானே (1)

முடிவு

நித்தமெழு நூறுநன்றி செய்தாலு மொருதீது நேரே வந்தால்
....
எத்தனைசெய் தாலுமென்ன பித்தளைக்குத் தன்னாற்ற மியற்கை யாமே. (100)

(பாடல்களை முழுமையாக எழுதவேண்டும்)

குறிப்பு : இந்நூல் பொன்விளைந்த களத்தூரைச் சேர்ந்த படிக்காசுப் புலவரால் இயற்றப்பெற்றது. தண்டலை நீணெறி என்னும் சிவத் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது பாடப்பெற்றது. ஒவ்வொரு பாட்டின் ஈற்றடியும் ஒரு பழமொழியை அடிப்படையாகக் கொண்டது. இது சிறந்த அறவுரைகளை உள்ளடக்கிய நூல். நூறு பாடல்களும் முழுமையாக உள்ளன. எழுத்துப் பிழைகள் உள்ளன. ஆயினும் பல நுண்ணிய பாடவேறுபாடுகளை உடையது. இவ்வாறு விளக்கம் கொடுத்து வைப்பது மேற்குறித்த இரண்டு நிலையிலும் பயன்தருவதாகும்.

அகரவரிசை அட்டவணை : விளக்க அட்டவணைகளைப் போலச் சுருங்கிய அளவில் செய்திகள் அடங்கிய அகரவரிசை அட்டவணை ஒன்றை நிறுவனத்தில் உள்ள அனைத்துச் சுவடிகளுக்கும் தயாரித்து அச்சிட்டு வைப்பது பிற இடங்களில உள்ளவர்களுக்குப் பயன்படுவதாகும். இதனையும் நூல்பெயர், ஆசிரியர் பெயர், பொருள்வாரித் தலைப்பு என்ற மூன்று அடிப்படையில் தயாரித்து அச்சிடலாம். அகரவரிசை அட்டைகள் நிறுவனத்தில் வந்து காண்போருக்குப் பயனபடுவதுபோன்ற பயனை வெளியில உள்ளவர்களுக்கு இந்த அச்சு அட்டவணை அளிக்கும். நூலின் இரண்டு பக்கங்களிலும் தொடர்ந்து செய்திகளை அமைக்கலாம். சில வரிகள் மாதிரிக்குக் காட்டப்படுகின்றன.

வரிசை எண	நூலின் பெயர்	ஆசிரியர்	பொருள்	ஓலை, தாள	முழுமை/குறை	நூலக எண்
1.	அகத்தியர் வாகடம்	அகத்தியர்	மருத்துவம்	ஓலை	முழுமை	826
2.	ஆதியுலா	...	சிற்றிலக்கியம்	,,	,,	270
3.	இடைக்காடர் சூத்திரம்	இடைக்காடர்	தத்துவம்	,,	,,	119
3.	எண் சுவடி	...	கணிதம்	,,	,,	392

இது நூல்பெயர் அடிப்படையில் அமைந்த அகரநிரல் அட்டவணையாகும். இதேபோன்று ஆசிரியர் பெயரை அகரநிரல்படுத்தி முதலில் அமைத்து அவர் பெயரால் காணப்பெறும் நூல்களை அடுத்த வரிசையில் குறித்தல் வேண்டும். பிற விவரங்கள் அந்தந்த சுவடிக்குரியன எல்லா அட்டவணையிலும் ஒரே வகையாகஇருக்கும். பொருள்வாரி அட்டைகள் தயாரித்தது போலவே இவ்வகை அகரநிரலை அச்சிடலாம். இம் மூவகை அட்டவணைகளும் மேற்குறித்த அட்டைகளைப்போலப் பலருக்கும் பல்லாற்றானும் பயன் தருவதாக அமையும்.

ஆ. காத்தல்

சுவடிகளின் பாதுகாப்பு : சிறந்த கருத்துகளையும் ஆணை களையும் பழங்கால முதலே பாதுகாத்து வந்தனர். அவ்வாறு காப்பாற்றி வைக்கப்பட்டவையே இன்று நம்மிடையே உலவும் இலக்கிய இலக்கணங்களும் பிறவாகிய கலைகளும் அரசு ஆணை களுமாகும். பழங்காலத்தில் இவற்றை இரண்டு வழிகளில் பாது காத்து வந்தனர். ஒன்று மனப்பாடம் செய்து மனத்தில் காத்தல்; மற்றொன்று சுவடிகள் முதலான எழுதப்படு பொருள்களில் பொறித்து வைத்தல். உள்ளத்தில் காத்தவை அவரவர் மறைவோடு மறைந்தன. சுவடிகளில் பொறித்து வைத்தவை நிலைத்தன. சுவடி களும் நிலையானவை அல்ல. அச்சுவடிகளைப் பாதுகாப்பதே பழந்தமிழர் கருத்துகளைக் காப்பதாகும்.

பழங்காலக் காப்புமுறை : கூர்மையான எழுத்தாணி கொண்டு ஓலையில் எழுதப்பட்ட எழுத்துகள் ஓலை நிறத்திலேயே இருக்கும். அவை தெளிவாகத் தெரிவதற்காக மஞ்சள், இலைச்சாறு, கரிய மை வகை ஆகியவற்றில் ஒன்றைத் தேய்ப்பது வழக்காற்றில் இருந்தது. இவையே பூச்சிக் கொல்லிகளாகவும் இருந்தன. மேலும் பாதுகாப் பிற்காக வேப்பிலை, வசம்பு ஆகியவற்றையும் பயன்படுத்தினர். ''சமையலறையில் புகைபடியுமாறு சுவடிகளைத் தொங்கவிட்டு வைத்துப் பாதுகாத்தனர்; புகைபடிவதனால் பூச்சிகள் இறப்ப தோடு எழுத்துகளும் நன்றாகத் தெரியும்'' என்றும் கூறுவர்.[1] இது வழக்காற்றில் இருந்ததாகத் தெரியவில்லை.

இக்காலக் காப்புமுறை : பழைய சுவடிகளைத் தாள்களில் பெயர்த்து எழுதிவைப்பது ஒருவகைப் பாதுகாப்பாகும். ஆனால் இம்முறை, செய்தியைப் பாதுகாத்ததாகக் கருதப்படுமே ஒழிய, மூலத்தைப் பாதுகாத்ததாகாது. நுண் நிழற்படமாகவும், புகைப் படப் படியாகவும் எடுத்துப் பாதுகாப்பது மூலபாடத்தில் வேறு பாடில்லாத பாதுகாப்பு முறையாகும். இம்மூன்று வழிகளில் சுவடிச் செய்திகளைப் பாதுகாக்க முடியும். மேலும் மூலச் சுவடி யைப் பாதுகாத்தற்கும் சில முறைகள் கையாளப்பெறுகின்றன. அவற்றுள் சிஃபான் என்னும் மெல்லிய துணியைத் தாள்களின்மீது ஒட்டி வைத்துப் பாதுகாப்பது (மெண்டிங்) தாள்சுவடிகளைப் பாது காக்கும் முறையாக இருந்து வருகிறது. ஓலைச் சுவடிகளைப் பூச்சி முதலியன அரிக்காவண்ணம் பாதுகாக்கலாம்; நாளடைவில் மக்கி அழிவதிலிருந்து பாதுகாக்க முடியாத நிலையே காணப்படுகிறது.

---

1. அரசினர் சுவடி நூலக அறிக்கை, பக். 3-4.

பூச்சிகளை அழிப்பதற்கும் மேலும்வராமல் பாதுகாப்பதற்கும் கையாளும் சில முறைகளாவன : காற்றுப் புகாத பெரிய பெட்டியில் (Fumigation Box), அறை அறையாகத் தடுத்து அதில் சுவடிகளைவைத்து, மருந்தைத் தூவிச் சிலநாள் அப்பெட்டியை நன்றாக மூடிவைப்பதுண்டு.[2] பிறகு சுவடிகளை எடுத்து உரிய இடத்தில் வைப்பர். அதே மருந்தையும், மருந்து கலந்த எண்ணெய் வகையையும் சுவடிகளின்மீது அடிக்கடி (மாதம் இரண்டு முறையாவது) தெளிக்கலாம். தாள் சுவடிகளைத் துணியிட்டு (மெண்டிங்)த் தூய்மை செய்யும்போதும் கட்டமைப்பின்போதும் பயன்படுத்தும் பசையில் பூச்சிக்கொல்லி மருந்துகளைக் கலந்து பயன்படுத்தலாம்.

மருந்து வகையைப் பயன்படுத்துவதில் ஓலைச்சுவடிகளுக்கு எண்ணெயைப் பயன்படுத்துவது சிறந்த பலனைத் தரும். சுவடியைப் பிரித்து ஓலைகளை நன்றாகப் பரப்பிவிட்டு பூச்சிகொல்லி எண்ணெயைப் பெரிய தூரிகையினால் (பிரஷ்) பூசவேண்டும். சிறிது காற்றாடிய பிறகு எடுத்துக் கட்டி வைக்கலாம். இவ்வாறு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை எண்ணெயிட்டுக் காக்கும் முறையே மிகவும் சிறந்தது. இதனால் எழுத்தும் நன்றாகத் தெரியும். சுவடியும் தூய்மையாகி, எடுத்துக் கையாள எளிமையாகவும் இருக்கும். மிகுதியான சுவடிகள் உள்ள நிறுவனங்களில் சுவடி துடைப்பதற்கெனப் பணியாளர்கள் இருந்தும் ஒவ்வொரு சுவடியாக எடுத்து எண்ணெய் பூசுவதற்குச் சோம்பல் பட்டு எண்ணெய் தெளிப்பானால் தெளிப்பது மட்டுமே செய்யப்படுகிறது. அழுத்தமாகக் கட்டப்பெற்றுள்ள சுவடிக்குள் சென்று அம்மருந்து முழுப்பயன் தருவதில்லை.

பொதுவாக—சுவடிகள் உள்ள அறை காற்றோட்டமுடையதாக, பரந்த இடவசதி உள்ளதாக, வெளிச்சமுடையதாக இருத்தல் வேண்டும். சுவடிகளை அடுக்கி வைக்கும் தட்டுகளிடையில் இடைவெளி நன்றாக இருத்தல் வேண்டும்; அதேபோல சுவடிகளையும் நெருக்கமில்லாமல் அடுக்கி வைப்பது நல்லது. தட்டுகளில் தூசு படியாதவாறு சுத்தம் செய்தல் அவசியம். சுவடிகளை வெளியில் எடுத்துப் பிரித்து நன்றாகத் துடைத்து வைப்பதும் எண்ணெயிடுவதும் செய்தால் நீண்டநாள் காக்கமுடியும்.

பயன்படுத்தும் மருந்துகள்

1. Lemon Grass Oil
2. Java Citranella Oil

---

2. மருந்துகளின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

3. Para-Di-Chloropenzene
4. Mercuric Chloride
5. Gemaxin Powder
6. Polyethylene Glycol
7. D.D.T. Oil
8. Napthaline Balls & Napthaline Bricks.

இவற்றுள் முதல் இரண்டு எண்ணெய் வகையும் அரசினர் சின்கோனாத் துறையினரால் தயாரிக்கப்படுவன.[3] பிற மருந்துகள் எல்லா கெமிகல் வியாபாரிகளிடமும் கிடைக்கும். முதலிரண்டு வகை எண்ணெயும் சுவடியின்மேல் பூசுவதற்குரியவை. ஏழாவது எண்ணெய் சுவடிகளின்மேல் தெளிப்பானால் தெளிப்பதற்குரியது. பிற மருந்துகள் சுவடிகளின்மேல் தூவி வைக்கவும் காற்றோட்டமில்லாப் பெட்டியில் போடவும் பயன்படுவனவாகும்.

பல புதிய முறைகள் எடுத்துக் காட்டப்பெறுகின்றன. 'சுவடிப் பாதுகாப்பு முறை' என்றே பல நாட்கள் வகுப்புகளை நடத்துகிறார்கள். அந்த முறைகளில் கூறப்பெறும் மருந்துகளாலும், அளவுக்கு மீறிய பூச்சிகொல்லி முறைகளாலும் சுவடிகள் நைய்ந்து அழியும் நிலை உருவாகுமேயன்றி பயன் சிறிதுமில்லை. சான்றாக, காற்றுப்புகாத பெட்டி முறை, பூச்சிகளை அழிப்பது போலச் சுவடிகளையும் நையச் செய்கிறது என்பது செய்முறையில் சோதித்தறிந்த ஒன்றாகும்.

3. மேலாளர், அரசினர் சின்கோனாத்துறை, நடுவட்டம், உதகமண்டலம்-1, நீலமலை மாவட்டம்.

ஆய்வு

5. பாடவேறுபாடு

சொற்பொருள் : பாடம் வேறுபடுவது பாடவேறுபாடு எனப் படுகிறது. படாம் என்பது மூலபாடம்; நூலாசிரியர், உரையாசிரியர் ஆகியோர் கூறிய உண்மைத் தொடர் மூலபாடம் எனப்பெறுகிறது.

"பாடம் ஏறினும் ஏடது கைவிடேல்" என்னும் பழமொழியில் பாடம் என்பது நூலாசிரியரின் உண்மைத் தொடராகிய மூல பாடத்தையே சுட்டுகிறது. அவ்வுண்மைத் தொடர் சொல்வோ ராலும் படிப்போராலும் எழுதுவோராலும் வேறுபட்டு வழங்கப் பெறுமாயின் அது பாட வேறுபாடு என்று பெயர் பெறுகிறது.

ஒரு சொல்லுக்குப் பிரதியாகவரும் பிறிதொரு சொல்லைப் பாடபேதம் என்று குறிப்பர். உதாரணமாக, கோளரி மாதவன் (556) கோளரிவாமனன் போல்வன பாடபேதங்கள் என்பர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள்.[1] மேலும்

> "துரியோதனன், திரியோதனன்...என்று வருவன போல்வன ரூபபேதங்கள். ஒரு சொல்லையே இரண்டுவிதமாக வாசித்து உண்மைப் பாடம் இதுவென்று கொள்வதில் மயக்கம் அடை தலும் உண்டு"[1]

என்பனவாகிய அனுபவக் கருத்துகள் பாடவேறுபாட்டின் தன்மையை உணர்த்துவதோடு அதன் வகைப்பாடுகளையும் சுட்டிக் காட்டுகின்றன.

> "இவைகளேயன்றிப் பிழையெனக் கொள்ளும் பல சொற்களும் தரப்பட்டுள்ளன...அப்பொழுது பிழையென்ற கருத்தேயின்றிச்

1. திவ்வியப் பிரபந்தம், முதலாயிரம்—பதிப்புரை. பக். X.

சொற்கள் உச்சாரண பேதத்தால் எவ்வாறு மாறி வருகின்றன என்பதே நமக்குமுன் புலப்படுகின்றது. பிழையென்று முன்பு கொண்டன இப்பொழுது உயிர்த்தத்துவத்தோடு விளங்கு கின்றன. ஒரு காலத்தில் வழங்கிய உண்மை ரூபம் இன்னது என்பதை ஒருவாறு புலப்படுத்துகின்றன"[1]

என்னும் கருத்து எழுத்துப்பிழை என்பதையும் ஒருவகை வேறு பாடாகக் கொள்ளவேண்டும் என்று உணர்த்துகின்றது. இங்ஙனம் தமிழ்ச் சுவடிகளிலும் சுவடிப் பதிப்புகளிலும் காணப்பெறும் வேறு பாடுகள் மிகப்பலவாகும்.

சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் காலத் திலேயே பாடவேறுபாடு கண்டறியப்படுகிறது. தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய நச்சினார்க்கினியர், சேனாவரையர் ஆகி யோரும் பாட வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுவர். ஆனால் உரை யாசிரியர்கள் **'என்பதும் பாடம்'**, 'எனப்**பாடம்** கொண்டால் பொருள் பொருந்துமாறு இல்லை' எனப் பாடவேறுபாட்டைப் பாடம் என்று மட்டுமே சுட்டினர். **'எனவும் பாடம்'** என்பதை உ.வே.சா. முதலான பதிப்பாசிரியரும் கையாண்டனர். சுவடிப் பதிப்பை மேற்கொண்டபோது பிழை தீர்த்து அச்சுக்களிக்கப்பட்ட தாக மட்டுமே தெரிகிறது, பல ஏடுகளை வைத்துச் சோதித்து வேறேடு எழுதப் பெற்றதாகவும் சுவடிகளில் காணப்பெறு கிறது.[1] (அ)

சுவடியைப் பதிப்பித்த சி. வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர், எஸ். வையாபுரிப்பிள்ளை போன்றோர் பாட பேதம், ரூபபேதம், பிரதிபேதம் என்ற சொற்களைக் கையாண் டுள்ளனர். மறுபதிப்புகளாகவும் திருத்தப் பதிப்புகளாகவும் வெளி யான கழகப்பதிப்புகள், தொல்காப்பியம் அடிகளாசிரியர் பதிப்பு, அண்ணாமலைப் பல்கலைப் பதிப்புகள், உ.வே.சா. அவர்களின் பிற்காலப்பதிப்புகள் ஆகியவற்றில் இச் சொற்கள் முறையே பாட வேறுபாடு, வடிவ வேறுபாட்டினை வகைப்படுத்தி, வேறுபாடு தோன்றுதற்குரிய காரணங்களை ஆய்வு செய்கிறது.

பாடவேறுபாடு—வகை : இடம், பொருள், காலம், வடிவம், தன்மை, எண் என ஆறு நிலையில் பாடவேறுபாடுகள் தோன்று கின்றன. அவற்றுள்,

---

1.அ. திருவள்ளுவர்—கல்கத்தா தேசிய நூலகச் சுவடி, 3074.

1. நூலின் தலைப்பு, உட்தலைப்பு, பாடல் ஆகியவற்றில் தோன்றும் வேறுபாடுகள், இட அடிப்படையில் மூன்று வகையாகின்றன.
2. பாட வேறுபாடு, வடிவ வேறுபாடு, பிழை என்னும் மூன்று வகை, பொருளால் அமைகின்றன.
3. ஆசிரியர் காலத்தில் தோன்றியவை, உரையாசிரியருக்கு முன் தோன்றியவை, பிற்காலத்துத் தோன்றியவை என்று காலத்தால் மூன்று வகைப்படுகின்றன.
4. எழுத்து, சொல், தொடர் என்பனவற்றால் வடிவ வேறு பாடுகள் மூன்று வகைப்படுகின்றன.
5. தோன்றல், கெடுதல், திரிதல் என்று தன்மையால் அவை மூன்று வகைப்படுகின்றன.
6. பாடல்களின் எண், எண்ணிக்கை என எண்ணால் இரண்டு வகைப்படுகின்றன.

இவ்வேறுபாட்டு வகைகளைப் பின்வருமாறு அமைக்கலாம்.

அ. இடம் (தலைப்பு)

நூலின் தலைப்புகளாகவும் உட்தலைப்புகளாகவும் காணப் பெறும் தொடர்களிலும், பிறபாடல் அமைப்புகளிலும் உள்ள வேறுபாடுகள் இடத்தால் அடையும் வேறுபாடுகள் எனப்பகுத்துக் கொள்ளப்படுகின்றன.

நூல் தலைப்பு—இறையனார் களவியல் : 'இறையனார் அகப் பொருள்-நக்கீரர் உரையுடன்' என்பதே பதிப்புகளில் காணப்பெறும் நூற்பெயர். ஆனால்,

> "பிற்காலத்துப் பெருமானடிகள் **களவியல்** செய்தாங்குச் செய்யினும்"[2]

> "கடைச் சங்கத்தாருட் **களவியல்** பொருள் கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரர்"[2]

> " அங்ஙனம் கொண்ட **இறையனார் களவியலுள்**ளும்...... நான்கு வருணமுங்கூறி"[3]

என்னும் உரையாசிரியர் கூற்றுகள் இறையனார் களவியல் என்றே குறிப்பிடுகின்றன, சுவடிகளிலும் களவியல் என்ற பெயர் காணப்

2. தொல். மரபியல்-94, பேராசிரியர் உரை.
3. தொல். அகத்திணைஇயல், 53, நச்சர் உரை.

படுகிறது. இது பதிப்புகளில் - நூல் பெயரில் - வேறுபாடு நேர்ந்து விட்டது என்பதற்குச் சான்றாகிறது.

திருச்சிற்றம்பலக் கோவையார் . "திருச்சிற்றம்பலக் கோவையார் - பேராசிரியருரையுடன்"[4] என்பதே சுவடிகளில் காணப்படும் நூல் தலைப்பு. 'மாணிக்க வாசகசுவாமிகள் அருளிச் செய்த திருக்கோவையார்' என்பதே ஆறுமுக நாவலர் பதிப்பு. பிற பதிப்புகளும் இவ்வாறே காணப்பெறுகின்றன. இது நூல் தலைப்பில் ஏற்பட்ட மற்றொரு வேறுபாட்டினைச் சுட்டுவதாகும்,

களவியற் காரிகை : 'இறையனாரகப் பொருட்டுறைக்குச் சங்கச் செய்யுளாக உதாரணம் எழுதியது'[5] என்னும் சுவடித் தலைப்பு 'களவியற் காரிகை' என்று பதிப்பிக்கப் பெற்றது.

மனை நூல் : 'மனை வாஸ்து லட்சணம், சிற்ப சாஸ்திரம், மயநூல் என்னும் தலைப்புகளில் காணப்படும் சுவடிகள்'[6] மனையடி சாஸ்திரம், மனை நூல் என்னும் பெயர்களால் பதிப்பிக்கப்பெற்றன.

இராமகாதை :

" நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி உத்த ரத்தில்" [7]

" இத்த லத்தி னிராமாவ தாரமே
பத்தி செய்து பரிவுடன் கேட்பவர்"[8]

என்பவனாகிய இராமாயணப் பாடலடிகள், நூலுக்கு இராம காதை, இராமாவதாரம் என்னும் பெயர்களே சூட்டப் பெற்றன என்பதை உணர்த்துகின்றன. ஆனால் முதல் நூலின் அடிப்படையில் இராமாயணம் என்று வேறுபடுத்தப்பட்டு விட்டது.

உட்தலைப்பு : திருக்குறள், யாப்பருங்கலக் காரிகை, கம்பராமாயணம் ஆகியவற்றின் அதிகாரம், இயல் ஆகிய தலைப்புகளில் காணப்பெறும் வேறுபாடுகளை உள்தலைப்பு வேறுபாட்டிற்குச் சான்றாகக் காட்டலாம்.

திருக்குறள் பரிமேலழகர் உரை [9]	**மணக்குவடவர் உரை** [10]
அதிகாரம் - 7. புதல்வரைப் பெறுதல்	— மக்கட்பேறு.

4. டி. 1169 - 1176 சுவடிகள். 5. ஆர். 435. சுவடி.
6. ஆர். 239, 5951, 243. 1021 சுவடிகள்.
7. கம்ப. பாலகாண்டம், காப்பு-12. 8. மேற்படி 20
9. வை. மு, கோபால கிருஷ்ணமாச்சார்யார் பதிப்பு
10. வ. உ. சிதம்பரம் பிள்ளைப் பதிப்பு,

23. ஈகை — ஈகையுடைமை
24. புகழ் — புகழுடைமை
27. தவம் — தவமுடைமை
30. வாய்மை — வாய்மையுடைமை

யாப்பருங்கலக்காரிகை — மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்களின் பதிப்பு, சிறப்புப்பாயிரம், உறுப்பியல் ஒத்து, செய்யுளியல் ஒத்து, ஒழிபியல் ஒத்து, என்ற தொடர்களை உட்தலைப்புகளாகக் கையாளுகிறது. கா, ர.. கோவிந்தராஜ முதலியார் அவர்களின் பதிப்பு இத்தலைப்புகளை முறையே பாயிரம், உறுப்பியல் செய்யுளியல், ஒழிபியல் என்றே எடுத்தாளுகிறது. இருபதிப்புகளும் சுவடிகளை ஆய்ந்து பதிப்பித்தவையாகும்.

கம்பராமாயணம் யுத்தகாண்டம் வெ.நா.**ஸ்ரீநிவாஸையங்கார்** பதிப்பு		**வை. மு. கோபாலகிருஷ்ண மாச்சாரியர்** பதிப்பு
5. இலங்கை அளவறிபடலம்	—	இலங்கை கேள்விப்படலம்
6, வருணன் அடைக்கலப்படலம்	—	வருணனைவழிவேண்டு படலம்
14. இராவணன் முதல் நாளையில் தோற்றபடலம்	—	முதற்போர்புரி படலம்
29. மூலபெல வரவுகாண்படலம்	—	படைக் காட்சிப் படலம்

மேற்கண்ட பதிப்புகளில் இவ்வகைப் படல வேறுபாடுகள் காணப்பெறுவதோடு மண்டோதரி புலம்புறுபடலம், வீடணன் முடிசூட்டு படலம் போன்ற பல படலங்கள் ஸ்ரீநிவாஸையங்கார் பதிப்பில் தனித்தனிப் படலங்களாகக் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகள் அனைத்தும் நூலின் உட்தலைப்புகளில் காணப்பெறுவனவற்றிற்குச் சான்றுகளாகின்றன,

பாடல் வேறுபாடு : ஒரே பாடல் வெவ்வேறு நூல்களுள் காணப்படுகிறது. அதுவும் ஆசிரியர் பெயர் வேறுபட்டுக் காணப்படுகிறது. வடிவத்தால் மாறுபட்டுக் காணப்படுகிறது. இந்த வேறுபாட்டு நிலை பாடல் வேறுபாடு என்று கொள்ளப்பட்டது. ஒரு கடவுள் வணக்கப்பாடல் பல நூல் சுவடிகளிலும் காணப்பெறுவதையோ தன்னடக்கமாகப் பாடப் பெறும் பாடல் அவ்வாறே காணப்படுவதையோ இங்குச் சுட்டவில்லை.

புறநானூறு - தனிப்பாடல்

“ ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி......
சுவைத்தோ றழூஉந்தன் மகத்துமுக நோக்க......
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண......

என்பன புறநானூற்றுப் பாடலடிகள் (164). குமணனைப் பெருந் தலைச்சாத்தனார் பாடியது என்பது ஆசிரியர் பற்றிய செய்தி. இந்த முழுப் பாடலின் வடிவம் பல வகை வேறுபாடுகளோடு, தனிச்செய்யுட் சிந்தாமணி, தனிப்பாடல் திரட்டு ஆகிய நூல்களில் காணப்படுகின்றது. அவ்வடிவம் :

“ ஆடெரி படர்ந்த கோடுய ரடுப்பில்
ஆம்பிப் பூப்பத் தீம்பசியுழல......
குழவி தாய்முக நோக்க
மனைவி யென்முக நோக்க யாமும்
நின்முக நோக்கி வந்தனங் குமுணா”[11]

என்பது தனிப்பாடலில் காணப்பெறும் வடிவம். ஒப்பிலாமணிப் புலவர் பாடல். குமுணராசன் காட்டில் இருந்தபோது பாடிய அகவல் என்பது அத்தனிப் பாடலில் காணப்பெறும் செய்தி.

பாடலின் வடிவம், அடிகள், ஆசிரியர், நூல் ஆகிய அனைத்திலும் வேறுபட்டு அமைந்த இப்பாடல், வறுமையுற்ற புலவர் பரிசில் வேண்டிக் குமணனைப் பாடியதாக உள்ள பொருள் புலப்பாட்டால் ஒருவர் பாடலே என்பது மட்டும் தெளிவாகிறது.

ஆ. பொருள்

ஆசிரியரின் உண்மைத் தொடர்களில் வேறுபட்டனவெல்லாம் பாடவேறுபாடுகளே. ஆயினும் அவை அமையும் பொருட்தன்மையால், வடிவ வேறுபாடுகளும் பிழைகளுமாகிய இரண்டு வகையும் பாட வேறுபாடுகளிலிருந்து வேறுபட்டு நிற்கின்றன. எனவே வேறுபாடுகள் இம்மூவகையில் அமைகின்றன. இவற்றுள்,

பாடவேறுபாடு : ஆசிரியரின் மூலபாடத்தினின்றும் வேறுபட்டுப் பாட்டின் கருத்தை மாற்றி அமைப்பது; தொடரின் பொருட்போக்கைத் திருப்பி அமைப்பது; ஆனால் பாட்டின் நடைக்கு ஏற்பச் சீரும் தளையும் சிதையாது, ஓசை நயம்படத் தோன்றி நிற்பதாகும்.

---

11. தனிப்பாடல் திரட்டு 1 பக்.29.

நச்சினார்க்கினியர்—இளம்பூரணர்—வேறுபாடு

" வாழிய வென்னும் **செயவென்** கிளவி
இறுதி யகரம் கெடுதலும் உரித்து"
என்னும் நூற்பாவிற்கு 'வாழும் காலம் நெடுங்காலமாகுக என்னும் பொருளைத்தரும் வாழிய என்று சொல்லப்படும் **செயவென் எச்சக்கிளவி** இறுதி 'ய' ஒற்றுடன் கெடுதலும் உரித்து'[12]

என்று உரை கூறினார் நச்சினார்க்கினியர். ஆனால் இதனை,

" வாழிய வென்னும் சேயென் கிளவி" என்று கொண்டு வாழிய என்று சொல்லப்படுகின்ற அவ்வாழுங்காலம் அண்மையது அன்றிச் சேய்மையது என்று உணர்த்தும் சொல் இறுதி 'ய' கெடுதலும் உரித்து[13] என்றார் இளம்பூரணர்.

வாழிய என்பதை எச்சக்கிளவி என்றும் சொல் என்றும் கொண்ட உரையாசிரியர் இருவரும் 'வாழி கொற்றா' என்ற சான்றினையே காட்டினர்.

நீதிவெண்பா - அச்சுநூல் - சுவடி வேறுபாடு

" அரிமந்தி ரம்புகுந்தால் ஆனை மருப்பும்
பெருகொளிசேர் முத்தும் பெறலாம்-**நரிநுழையில்**
வாலுஞ் சிறிய **மயிரெலும்புங்** கர்த்தபத்தின்
தோலுமல்லால் வேறுமுண்டோ சொல்"[14]

என்பது அச்சு நூலிற்காணும் பாடல். இதே பாடல்

வேறு : " ......முத்தும் பெறலாம் — **நரிபுழையில்**
வாலுஞ் சிறிய **மறியெலும்பும்** கத்தபத்தின்
தோலுமல்லால் வேறுமுண்டோ சொல்"[15]

என்னும் வேறுபாட்டோடு சுவடியில் காணப்படுகிறது.

மயிரெலும்பும் என்று பாடங்கொண்ட அச்சுநூல்கள் 'எளிய வால்களும் **மயிர்களும் எலும்புகளும்**......' என்று உரைகூறின. ஆனால் சுவடியிலோ 'மறியெலும்பும்' என்ற பாடமும், எலிவாலுஞ் சிறிய ஆட்டெலும்பும்......என்ற உரையும் காணப்படுகின்றது. இது பொருட்போக்கால் மாறுபடும் வேறுபாடாகும்.

12. தொல். எழுத்து, 211. நச்சினார்க்கினியர் உரை.
13. தொல். எழுத்து, இளம்பூரணர் உரை.
14. நீதிவெண்பா, 2. 15. நீதிவெண்பா சுவடி. டி. 2283.

முன்னிலை சேர்தல்

" பெண்ணொருத்தி பேசில் பெரும்பூமி தானதிரும்
பெண்ணிருவர் **பேசில்** விழும்வான்மீனே - பெண்மூவர்
பேசில் அலைசுவறும் பெண்பலர்கள் தான்கூடிப்
பேசிலுல கென்னாமோ பின்" [16]

என்பது அதே நூலிலுள்ள மற்றொரு பாடல்.

வேறு : "..............................பெண்மூவர்
பேசில் அலைசுவறும் **பேதையே**! பெண் பலர்தாம்
பேசிலுல கென்னாமோ பின்" [17]

முதல் அமைப்பிலுள்ள ஆசிரியரின் பொதுக்கூற்று, பாடவேறு பாட்டினால் முன்னிலையாரிடத்துக் கூறும் கற்றாக வேறுபட்டு விடுவதை வேறுபாட்டோடு கூடிய இரண்டாம் அமைப்பில் காணலாம்.

குற்றமின்று - குணமின்மையின்மை

" இது முனைவனாற் செய்யப்பட்ட நூலாகலாற்
குற்றமின்றாயினமையிற் கேட்டாரையின்றென்பது" [18]

வேறு : " இது முனைவன்றன்னால் சொல்லப்பட்ட நூலாகலாற்
குணமின்மை யின்மையின் கேட்டாரையின்றென்பது"

குற்றமின்று, குணமின்மை யின்மை என்னும் தொடர்கள் வேறு பாடாகின்றன. முடிவுப் பொருள் ஒன்றேயாயினும் உணர்த்து மாற்றால் குற்றம், குணம் என எடுத்துக் கொள்ளப்பட்ட மறுதலைப்பட்ட சொற்களுக்கேற்ப இன்று என நேரேயும், இன்மை இன்மை என மறுதலைப்படவும் பொருள் தந்து ஒரே பொருளை உணர்த்தும் வேறுபாடுகளாகின்றன. இது உரையிற்காணும் வேறு பாடாகும். இதனை வடிவ வேறுபாடாகவும் கொள்ளலாம்.

இருப்பார் - இரப்பார்

" இலம் என்று அசைஇ **இருப்பாரைக்** காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்" (குறள் - 1040)

வேறு : "இலம்என்று அசைஇ இரப்பாரைக் காணின்"

இலம் என்று சோம்பி இருப்பாரும், இலம் என்று இரந்துஉண்பாரும் என்ற பொருள்தரும் இவ்வேறுபாடுகள். பொருட்போக்கால் வேறு

16, நீதிவெண்பா, பா. 31. 17. நீதிவெண்பா சுவடி,டி. 2283.
18. இறையனார் அகப்பொருள், சூத்-1, உரை.

படுவனவாகின்றன. இவ்வேறுபாடுகளால் சீர், தளை கெடுதலோ ஓசை வேறுபடுதலோ நிகழாமை குறிப்பிடத்தக்கதாகும்.

வடிவ வேறுபாடு : மூலபாடத்தினின்றும் வேறுபட்டதேயாயினும் சொல்லின் வடிவத்தால் மட்டுமே வேறுபட்டு நின்று மூலபாடத்தின் கருத்தைச் சிறிதும் மாற்றாதது வடிவவேறுபாடு எனப்படுகிறது. இதனால் பாடலின் பொருட்போக்கும் மாறுபடுவதில்லை. பாட வேறுபாட்டினைப் போலவே சீர், தளை சிதைவதில்லை, ஓசைநயமும் கெடுவதில்லை.

உருபுகள் வேறுபடுதல்

" குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்
பலவின் **பழத்துள்தங்கும்** மலை கெழு வெற்பனை" [19]

வேறு : "**பலவின் பழத்தில்** தங்கும் மலைகெழு வெற்பனை"

"......**கடலென** முழங்குங் கூர்நுனை
வேலு **மின்னின் விளங்கு முலகத்து**" [20]

வேறு : "......**கடலி னொலிக்கும் வைந்நுதி**
வேலு மின்போ லவிர்வரு ஞாலத்து" [21]

இவற்றுள் பழத்துள், பழத்தில் என்னும் வேறுபாட்டில் உள், இல் என்னும் இடைச் சொற்கள் வேறுபட்டு நின்று ஒரே பொருளைத் தருகின்றன. கடலென, கடலின்; மின்னின், மின்போல் என்னும் உவமைகளுள் முறையே என, இன், (இன்-போல்) என்னும் உவமை உருபுகள் மட்டுமே வேறுபட்டன. உவமைப் பொருளில் வேறுபடவில்லை. கூர்நுனை-வைந்நுதி என்பன பொருளால் வேறுபடாது வடிவத்தால் மட்டும் வேறுபட்டு நிற்கும் தொடர்களாகும். உலகத்து என்னும் வடிவம் அதே பொருளில் ஞாலத்து என்று வேறுபட்டு நின்றது. விளங்கும் என்றது அவிர்வரு என்று வேறுபட்டதும் வடிவத்தால் மட்டுமே. இவ்வடிவங்களால் பாடலின் ஓசைநயம் எதுவும் கெடவில்லை என்பதையும் அவற்றின் அசைகளால் அறியலாம்.

குறில், நெடில், ஒற்று - வேறுபாடு

"கள்ளுண்ணாப் **போழ்தில்** களித்தானை" (குறள்-930)

வேறு : "கள்ளுண்ணாப் **போதில்** களித்தானை"

---

19. கலித்தொகை, 41. வரி 15-16. 20. புறநானூறு, 42.
21. புறநானூறு சுவடி, டி. 284.

"...........விழிக்குங் கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து" (குறள்-1218)

வேறு : **நெஞ்சத்தா ராவார்** விரைந்து" - இவ்வேறுபாடுகளில் போழ்து - போது என்பன ஒரே பொருள்தரும் இருவடிவங்கள் நெஞ்சத்தர் - நெஞ்சத்தார்; ஆவர்-ஆவார் என்பனவும் குறில் நெடில் வேறுபாடுகளைத் தவிர பிறவற்றால் ஒரேதன்மையன.

சுட்டுச் சொல்லால் - வேறுபாடு

"......வல்லெழுத் தியையின் **அவ்வெழுத்து** மிகுமே" [22]

வேறு : "வல்லெழுத் தியையின் **வல்லெழுத்து** மிகுமே" [23]

"அடிதொறுந் **தலையெழுத்** தொப்பது மோனை" [24]

வேறு : "அடிதொறு **முதலெழுத்** தொப்பது மோனை"

இவற்றுள் அவ்வெழுத்து என்பது எழுவாய்க்குரிய சுட்டுச் சொல் லாகும்; வல்லெழுத்து என்பது அச்சுட்டுச் சொல்லின் விளக்கமாக எழுவாய்ச் சொல்லே மீண்டும் வந்தது. தலையெழுத்து-முதலெழுத்து என்பன ஒரே பொருளைச் சுட்டும் வெவ்வேறு வடிவங்கள். இவையும் வடிவ வேறுபாடுகளாகின்றன.

ஆ-ஒ ஆதல் - வேறுபாடு

"தாவிவரும் பரிப்பாகன் தாழ் **சடையோன்** வரக்கூவாய்" [25]

வேறு : "தாவிவரும் பரிப்பாகன் **தாழ்சடையான்** வரக்கூவாய்"

"அன்றறிவாம் என்னாது அறம்செய்க" (குறள்-36)

வேறு : "அன்றறிவோம் என்னாது அறம்செய்க"

னகர ஈற்றுப் பெயரின் ஈற்றயல் ஆகாரம் செய்யுளுள் ஓகாரமாகத் திரிந்தது; ஆம் ஈற்று முன்னிலை உளப்பாட்டுப் பன்மை ஓம் ஈறாகிப் படர்க்கை யுளப்பாட்டுப் பன்மையாகத்திரிந்தது. இவ் வேறுபாடுகள் பொருள் திரியா வடிவ வேறுபாடுகளாகவே கருதப் பெறுகின்றன.

பிழை : தமிழ்ச் சுவடிகளைப் பொறுத்தவரை மூலபாடங்களி லிருந்து வேறுபட்டுக் காண்பனவற்றுள் பெரும் பாலானவை பிழை களாகவே காணப்படுகின்றன. பாடவேறுபாடு, வடிவ வேறுபாடு களைப் போலன்றி எவ்வகையாலும் பொருந்தாமலும் பொருள் தராமலும். சரியான சொல்லாக இல்லாமலும் தோன்றும் வேறு

22. தொல். எழுதது. 357. 23. ஷி. எஸ். ராஜம் வெளியீடு.
24. " செய்யுள், 92. 25. திருவாசகம், 353.

பாடுகளைப் பிழைகள் என்றே கொள்ளத்தகும். பிழைகளைக் களைந்து உண்மைப் பாடத்தையறிந்து பதிப்பிப்பதில் பதிப்பாசிரியர்கள் பெரிதும் உழைத்துள்ளனர். அப்பிழை வகைகளுள் சிலவற்றிற்குச் சான்று காட்டலாம். விரிவு பிழை தோன்றும் காரணங்களுள் ஆய்வு செய்யப்படுகிறது.

ஒலி ஒத்தபிழை

தொடர் சங்கிலிகை — வேறு : **துடர்** சங்கிலிகை[26]

ஆவி **தொலைவி**யேல் — வேறு : அவி**துலைவி**யேல்[27]

அமிழ்த மூறும் — வேறு : **அமிர்த** மூறும், **அமுர்த**மூறும்[28]

தொடர், தொலைவு, அமிழ்து ஆகிய தூய சொற்களை மோனை, எதுகை போலும் காரணமேதுமின்றி வேறுபட எழுதுதல் பிழையே யாகும்.

கொச்சைச் சொற்களால் பிழை

துதித்திறைஞ்சக் கிடந்தான்—வேறு : துதித்தெறைஞ்சக் கிடந்தான்

புகர்குழறும் புனலரங்கம் — ,, புகழ் குளறும் பொனலரங்கம்[29]

சங்கரனுந் தொழுதேத்தும் — ,, சங்கரனுந் தொழு தேற்றும்[30]

''மன்னுபுகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே''[31]

வேறு :

''மன்னுபுகழ் கவுசிலைதன் மணிவயறு வாய்த்தவனே''

எறைஞ்ச, குளறும் பொனல், ஏற்றும், வயறு, கவுசிலை என்பன தவறுடைய சொற்களே.

ஒலிப்புக்கேற்ப எழுதும் பிழை

புனற்கணின்ற நான்குமாய்—வேறு : புனற்கணின்ற நாங்குமாய்[32]

தீமை மாய்த்து — ,, தீய்மை மாய்த்து[33]

வெய்யோன் கதிரெரிப்ப — ,, வெய்யோன் கதிரெறிப்ப[34]

---

26. திவ்வியப்பிரபந்தம், முதலாயிரம், 415. 27. ஷெ. 598.
28. குறுந்தொகை, 286.
29. திவ்வியப்பிரபந்தம், முதலாயிரம், 415.
30. அரங்கன்சரிதம், 858.
31. திவ்வியப்பிரபந்தம், முதலாயிரம், 718. 32. ஷெ. 751.
33. அரங்கன்சரிதம், 751.
34. அளகேசுவரராசன் கதை, பா. 15. வரி. 114.

நாங்கு, தீய்மை, எறிப்ப, என்னும் கொச்சை மொழிச் சொற்களும் பிழையான சொற்களும் அமைந்த வேறுபாட்டுத் தொடர் களாலானவை இச்சான்று அடிகள்.

ஓசை சிதைந்த பிழை

"வானமுள்ள போதே மழையதுவு முள்ளதே"[35]

வேறு : "வான **முள்ளதே** மழையதுவு முள்ளதே"

"பின்னைகேள்வன் என்பருன் பிணக்குணர்ந்த பெற்றியோர்"[36]

வேறு : "பின்னைகேள்வன் என்பாரின் **பெரும்**பிணக்குணர்ந்த பெற்றியோர்"

இவற்றுள் காட்டப் பெற்ற வேறுபாடுகள் தளையும் ஓசையும் சிதைந்து பிழைபட எழுதப் பெற்றவையாகும்.

இ. காலம்

ஆசிரியர் கால வேறுபாடு — சிந்தாமணி உரை : சீவகசிந்தா மணிக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதிய எட்டுச் சுவடிகள் இரண்டு வகையாகக் காணப்பட்டன. "ஜைன அன்பர்களுடைய பழக்கத்தால் ஏட்டுப்பிரதி இரண்டு வகையாக இருந்ததற்குக் காரணம் தெரிந்து கொண்டேன். நச்சினார்க்கினியர் முதலில் சிந்தாமணிக்கு உரை எழுதினாராம். பிறகு அதை ஜைனர்களிடம் படித்துக் காட்டிய பொழுது சம்பிரதாய விரோதமாகச் சில பகுதிகள் உள்ளனவென்று சொன்னார்களாம். அதனால் அவர் சிற்றாம்பூர் ஜைனமடத்திற்கு வந்து சில காலம் தங்கி ஜைன நூல் களையும், ஜைன சம்பிரதாயங்களையும் கற்றுச் சென்று மீட்டும் புதிய உரையை எழுதினாராம். விசேஷ உரையுடன் இருக்கும் பிரதியிலுள்ளது பின்பு எழுதிய உரை என்று தெரிய வந்தது"[37] என்னும் செய்தி உரையாசிரியர் காலத்திலேயே உரையாசிரிய ராலே வேறுபாடு தோன்றிவிட்டது என்பதை உணர்த்துகிறது.

மொழிபெயர்ப்பு — வேறுபாடு : பங்கிம் சந்திர சட்டோ பாத்தியாயர் வங்காள மொழியில் இயற்றிய வந்தேமாதரம் கீதத்தைச் சுப்பிரமணிய பாரதியார் இரண்டுமுறை மொழி

35. ஷை. பா. 2.
36. திவ்வியப்பிரபந்தம், முதலாயிரம், 763.
37. என் சரித்திரம், பக். 741.

பெயர்த்திருக்கிறார். கருத்தால் ஒன்றேயாயினும் வடிவத்தால், சொல்லமைப்பால் இரண்டும் வேறுபட்டவையாகும். தனித்தனி சில தொடர்களில் வேறுபாடுகளைக் காட்ட முடியாத நிலையில் பாடல் முழுமையுமே வேறுபட அமைந்துள்ளது. என்றாலும் ஆசிரியர் காலத்திலேயே—ஆசிரியராலேயே சில வேறுபாடுகள் தோன்றிவிட்டன என்பதற்கு இப்பாடல்களையும் சான்றாகக் கொள்ளலாம். முதல் மொழிபெயர்ப்பில் முதற்பாடல்:

''இனியநீர்ப் பெருக்கினை! இன்கனி வளத்தினை!
தனிநறு மலயத் தண்காற் சிறப்பினை!
பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை![38]

இரண்டாவது மொழிபெயர்ப்பில் அதே பாடல்:

நளிர்மணி நீரும் நயம்படு கனிகளும்
குளிர்பூந் தென்றலும் கொழும்பொழிற் பசுமையும்
வாய்ந்துநன் கிலகுவை வாழிய அன்னை![39]

பாஞ்சாலி சபதம்—வேறுபாடு : 'கண்ணன் பாட்டு' என்னும் பாரதியாரின் படைப்புக்கு வ. வே. சுப்பிரமணிய ஐயர் முன்னுரை வழங்கியிருக்கிறார் (இரண்டாம் பதிப்பு).

''தமிழபிமானிகள் இப்பதிப்பை ஆதரித்து வாங்கி ஆசிரியனுடைய உற்சாகத்தை உயர்த்தி அவரால் தமிழில் புதிய இலக்கியங்கள் பிறக்கும்படி செய்வார்கள் என நம்புகிறேன்''.[40]

என்னும் அம்முன்னுரைக் கூற்று ஆசிரியர் காலத்திலேயே எழுதப் பட்ட முன்னுரை என்பதைக் காட்டுகிறது. அம்முன்னுரையில் ஆசிரியரின் பாடலடிகள் சிலவற்றைச் சான்றாகக் காட்டுகிறார். அதாவது,

''நமது ஆசிரியரின் நூல்களை நம் நாட்டவர் சரிவர ஆதரிக்காததனாலே,

''சுற்றிநில்லாதே போ—பகையே
துள்ளி வருகுது வேல்''

என்றும்,

''கைதனில் வில்லுமுண்டு; காண்டீவம் அதன்பேர்''

என்றும் உள்ள அக்ஷரலக்ஷம் பெறுமான பாக்களை எழுதியிருக்கும் அவருடைய உற்சாகம் குன்றிப் போயிருக்கிறது என்பன அவருடைய காட்டுகள்.

38. பாரதியார் கவிதைகள், தேசியகீதங்கள், 18.
39. ஷெ. 19.
40. ஷெ. பக். 607.

"தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்
தனுஉண்டு காண்டீவம் அதன்பேர் என்றான்"[41]

என்னும் பாரதியாரின் பாடலடிகளே வ. வே. சு. ஐயரால்,

கைதனில் வில்லுமுண்டு; காண்டீவம் அதன்பேர்" என்ற வேறுபாட்டினை அடைந்தது. இது ஆசிரியர் காலத்திலேயே பிறரால் ஏற்பட்ட பாட வேறுபாடாகும்.

உரையாசிரியர் காலத்தில் வேறுபாடு : உரை எழுதுங்கால் மூல பாடங்களில் தோன்றியிருந்த வேறுபாடுகளைக் கண்ட உரையாசிரியர்கள் சிறந்த பாடங்களைத் தேர்ந்து உரை கூறினார்கள். பிற பாடங்களையும் எடுத்துக்காட்டி, என்பாரும் உளர், என்பதும் பாடம் என்று சுட்டியும், 'என்னும் பாடம் பொருந்தாமையறிக' என்று மறுத்தும் காட்டியுள்ளனர். இந்நிலை உரையாசிரியர் காலத்தில் சுவடிகளிலேயே வேறுபாடுகள் தோன்றி யிருந்தன என்பதைக் காட்டும். அத்தகு சான்றுகளுள் சில:

பாடினோர் பாடப்பட்டோர் பெயர்களில் வேறுபாடுகள்

1. மாந்தரஞ் சேரலிரும்பொறை.
2. சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறை.
3. யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறையார்.
4. சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை.
5. கோச்சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறை

என்பன சேரமன்னன் ஒருவனைக் குறிக்கும் பெயர்கள். ஒரே பெயர் ஒவ்வொரு சுவடியிலும் வெவ்வேறு வகையாகக் காணப் படுவதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இவ்வாறே பாடினோர் பெயர்களுள்,

1. நச்செள்ளையார், 2. காக்கைபாடினியார் என்பன வெவ் வேறு பெயர்களாகக் குறிப்பிடப் பெறுகின்றன. சிலவிடத்தில் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்றே காணப்படுகிறது.[42]

பெயர் வேறுபாடு

"மத்திம நன்னாட்டு வாரணந் தன்னுள்
உத்தர கௌத்தற் கொருமக னாகி[43]

41. பாரதியார் பாஞ்சாலி சபதம், 283.
42. பதிற்றுப்பத்து, ஆறாம்பத்து.
43. சிலப்பதிகாரம் 15; 178-179.

வேறு : "**உத்தரன் கவிப்பற் கொருமக னாகி**"

"உத்தரன் கவிப்பற் கொருமகனாகி" என்று பாடமோதி, இக்குரங்கு உத்தரன் என்னும் பெயரோடு கவிப்பனென்னும் வாணிகற்கு ஒரு மகனாகப் பிறந்து என்பாரு முளர்" என்று காட்டு வார் அடியார்க்கு நல்லார். இவ்வேறுபாடு அவர் காலத்திற்கு முன்பே தோன்றிவிட்டது என்பதோடு பொருளும் கூறப்பட்டுள்ளது என்பதும் விளங்குகிறது. இதேபோல,

"இந்திர குமரரின் யாங்காண் குவமோ"[44] என்பதை,

"இனி அந்தர குமரரென்பாருமுளர்" என்று காட்டுவார்.

வினை வேறுபாடு

"சிந்தா குலமுற் றென்னோ வென்னை **வாட்டந் திருத்துவதே**"[45]

வேறு :

"சிந்தா குலமுற் றென்னோ வென்னை **வாட்டத் திருத்துவதே**"

"வாட்டந் திருத்துவதே யென்னும் சொற்கள் ஒரு சொன்னீர வாய், வாட்டுவதேயென்று பொருள்பட்டு, இரண்டாவதற்கு முடிபாயின. வாட்டத்திருத்துவது என்று பாடமாயின் வாட்டத்தின்கணிருத்துவது என்றுரைக்க"

என்பது உரையாசிரியர் கூற்று.

பிற்காலத்து நிகழ்ந்த வேறுபாடு : உரையில் குறிப்பிட்ட வேறுக் பாடுகளைத் தவிர இக்காலத்துள்ள சுவடிகளிலும், சுவடிகளை கொண்டு பதிப்பித்த பதிப்புகளிலும் காணப்படும் வேறு பாடுகள் பிற்காலத்துப் படியெடுத்தோரால் நிகழ்ந்த வேறுபாடுகள் எனலாம். இவ்வேறுபாடுகளே இப்போதுள்ள சுவடிகளில் மிகுதி யாகக் காணப்படுகின்றன. இவற்றையே சுவடி வேறுபாடு என்று குறிப்பிடுகின்றனர். இவற்றுள் சில சான்றுகள்:

சிலப்பதிகாரத்தில் சில வேறுபாடுகள்

"முந்தை யென்னும் தார நரம்பிற்கு வலப்பக்கத்தே
விளரி நின்ற தென்க"[46]

வேறு : "முந்தை**யாகிய அசோதையென்னுந்** தாரநரம்பிற்கு"

---

44. சிலப்பதிகாரம் 16;173-உரை. 45. திருக்கோவையார், பா. 12.
46. சிலப்பதிகாரம், 17. எடுத்துக்காட்டு, வரி. 14-17, உரை.

"கன்றுகுணிலா என்பது முதலிய மூன்றும், இரண்டாமடி களிரட்டிக்கப் பெற்று நந்நான் கடியினவாக மிதிலைப்பட்டிப் பிரதியில் காணப்படுகின்றன"[47]

"அறுவை யொளித்தான் வடிவென் கோயாம்"[48]

வேறு : "அறுவை யொளித்தான் வடிவென்பே மோயாம்"

சிலப்பதிகார உரையாசிரியர்கள் காலத்திற்குப்பின் படியெடுத்தோரால் நிகழ்ந்தவை இவ்வேறுபாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

'சிலப்பதிகாரத்தின் முதற்பகுதியை ஸ்ரீநிவாசராகவாசாரியரும் சென்னையிலிருந்த சோடசாவதானம் சுப்பராய செட்டியாரும் பதிப்பித்திருந்தனர்... சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய சிலப்பதிகாரம் என்று முகப்புப் பக்கத்தில் பதிப்பித்திருந்தனர்"[49] என்பது பதிப்பில் ஏற்பட்ட வேறுபாட்டிற்குச் சான்றாகும்.

பிரித்து எழுதியவர் செய்த வேறுபாடு

"ஆதர வாலக ராதி நிகண்டென
வோதினன் யாவரு **முணர்ந்திட னினைந்தே**"[50]

வேறு : "வோதினன் யாவரு முணர்ந்திட நினைந்தே"

உணர்ந்திடல் நினைந்தே என்பது உணர்ந்திடனினைந்தே என்று எழுதப்பட்டது. படியெடுத்தோர் னினைந்தே என்பது தவறு என்று நினைந்தே என்று திருத்தி எழுதியதனால் ஏற்பட்டவேறுபாடு.

"அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்"[51]

வேறு : "அமரர்ப் பேணி யாவுதி யருத்தியும்"

எண்ணும்மை ஒரு தொடரின் இறுதியில் குறைந்த இவ்வேறுபாடு ஏடு எழுதினோரால் நிகழ்ந்ததாகும்.

ஈ. வடிவம்

எழுத்து வேறுபடுதல் : பொருள் மாறுபட்டும் மாறுபடாதும் தோன்றும் வேறுபாடுகளுள் ஓரிரு எழுத்துகள் மட்டுமே வேறுபட நிற்பதும், சொல்லே வேறுபட்டு நிற்பதும், தொடரோ அடியோ

47. சிலப்பதிகாரம், 17. பாட்டு அடிக்குறிப்பு.
48. சிலப்பதிகாரம், 17. பாட்டு. 49. என்சரித்திரம், பக்.175.
50. அகராதிநிகண்டு, பு. 4 (காப்புப் பாடல்).
51. புறநானூறு, 99.

வேறுபட்டு அமைவதுமாகிய வடிவ வேறுபாடுகள் பல சுவடிகளிலும் பதிப்புகளிலும் காணப்படுகின்றன.

ஓர் எழுத்து வேறுபடுதல்

"**கருங்கோற் குறிஞ்சிப்** பூக்கொண்டு"[52]

வேறு : "**கருங்காற் குறுஞ்சிப்** பூக்கொண்டு"

"சீறூர்க் குரைமின்கள் **சென்னெறியே**"[53]

வேறு : "சீறூர்க் குரைமின்கள் **சின்னெறியே**"

"கதிரவன் குணதிசைச் சிகரம்வந் **தணைந்தான்**
கனையிரு ளகன்றது **காலையம்** பொழுதாய்"[54]

வேறு : "கதிரவன் குணதிசைச் சிகரம்வந் **தடைந்தான்**
கனயிரு ளகன்றது **காலையும்** பொழுதாய்"

ஓர் எழுத்து மட்டுமே மாறுபட்டு வரும் இவ்வேறுபாடுகளுள் கோட்டுப் பூவாகிய குறிஞ்சிப்பூ-கருங்கோல் குறிஞ்சி எனப்பட்டது. அது கருங்கால் எனவும் குறுஞ்சி எனவும் முறையே பொருத்தமற்ற சொல்லும் பொருளற்ற சொல்லுமாக வேறுபட்டு நின்றன. செல்லும வழியைக் கூறுங்கள் என்ற பொருளில் வரும் சென்னெறி என்பது, சிறியதாகிய வழியை என்னும் பொருளாக வேறுபட்டு விட்டது. இவ்வாறே அணைதல்—அடைதலாயிற்று; கனையிருள்-கனஇருளாயிற்று; காலையம்பொழுது—காலையும் பொழுதாயிற்று. பொருளால் பெரிதும் வேறுபடவில்லையாயினும் சிறப்பில்லாச் சொற்களாயின,

எண்ணும் திணையும் வேறுபடுதல்

"காமஞ் செப்பாது கண்டது மொழிமோ"[55]

வேறு : "காமஞ் செப்பாது கண்டன மொழிமோ"

"தந்நலம் பாரிப்பார் தோயார்"[56]

வேறு : "தன்னலம் பாரிப்பார் தோயார்"

"நல்காமை தூற்றா ரெனின்" (குறள்-1190)

வேறு : "நல்காமை தூற்றா தெனின்"

"விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்" (குறள்-1209)

52. குறுந்தொகை, 3. 53. திருக்கோவையார், 54.
54. திவ்வியப். முதலாயிரம், 916. 55. குறுந்தொகை, 2.
56. குறள், 916.

வேறு : "விளியுமென் இன்னுயிர் வேறல்ல வென்பார்"

இவ்வெழுத்து வேறுபாடுகளுள் கண்டது-கண்டன; தனநலம்-தம் நலம் என்பன ஒருமை, பன்மைப் பொருளால் வேறுபடுகின்றன. தூற்றாரெனின்—தூற்றாதெனின்; வேறல்லம்—வேறல்ல என்பன முறையே அவர்—அது; யாம்—அவை என்னும் எழுவாய்களைப் பெற்றுத் திணையாலும் இடத்தாலும் வேறுபட்டுப் பொருள் பயக்கின்றன.

ஓசையை மாற்றும் எழுத்து வேறுபடுதல்

"அடுத்தது காட்டும் **பளிங்குபோல்** நெஞ்சம்" (குறள்-706)

வேறு : "அடுத்தது காட்டும் **பளிங்கேபோல்** நெஞ்சம்"

"**கோலதூஉங்** கோடா தெனின்"—(குறள்-546)

வேறு : "**கோலதுங்** கோடா தெனின்"

பளிங்குபோல்—பளிங்கேபோல்; கோலதும்—கோலதூஉம் **என்பன** இயற்சீர் வெண்டளையினை வெண்சீர் வெண்டளையாக மாற்றி இனிய ஓசையைத் தோற்றுவித்து வரும் எழுத்து வேறுபாடுகளாகும்.

பெயர், பண்பு வேறுபடுதல்

"நல்லா றெனினுங் கொளல் தீது" (குறள்-222)

வேறு : "நல்லா ரெனினுங் கொளல் தீது"

"நல்லா றெனப்படுவ தியாதெனின்" (குறள்-324)

வேறு : "நல்லா ரெனப்படுவ தியாதெனின்"

"ஒற்று முரைசான்ற நூலும் இவையிரண்டும்"(குறள்-581)

வேறு : "ஒற்று முறைசான்ற நூலும் இவையிரண்டும்"

நல்லாறு—நல்லார் என்பன தொழிற்பெயரும் உயர்திணைப் பெயருமாக வேறுபட்டு நின்றன. உரை—முறை என்பன புகழும் முறையும் ஆகிய பண்புகளால் மட்டும் வேறுபட்டன. இவ்வெழுத்து வேறுபாடுகள் பதிப்பாசிரியர்களின் ஆய்விடை நின்று தேர்ந்து கொள்ளப்படுவனவாகும்.

சொல் வேறுபாடு : சொற்கள் மாறுபட நின்று பொருள் மாற்றந் தந்தும் தராதும் வரும் வேறுபாடுகள் சிலவற்றைச் சான்றுடன் விளக்கலாம்.

தேர், தோள் — கள்வர், கணவர், கானவர் – என்னும் சொற்கள் வேறுபடுதல

"திண்டேர்ப் பொறையன் தொண்டி"[57]

வேறு : "திண்டோட் பொறையன் தொண்டி"

"உள்ளார் கொல்லோ தோழி **கள்வர்தம்**
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்"[58]

வேறு : "உள்ளார் கொல்லோ தோழி **கணவர்தம்**"
"உள்ளார் கொல்லோ தோழி **கானவர்**"

திண்தேர்ப் பொறையன்—திண்தோள் பொறையன் என்பன வற்றுள் பிறிதின்கிழமை—தற்கிழமைப் பொருள்கள் உரியவாயின. கள்வர்—கணவர் ஒருவரையே சுட்டின ஆயினும் பொருளமைப்பில் சிறிது விளக்கம் பெற்றன. கானவர் என்பது செலவால் பொருத்த முடையதாகிறது.

தொடர் வேறுபாடு : எழுத்தாலும் சொல்லாலும் வேறுபாடு தோன்றுதலல்லாது சிலதொடர்களே மாறுபட்டு அமைய, பொருள் பொருந்தியும் பொருந்தாதும் காணப்பெறும் வேறுபாடு களுக்கும் சான்றுகள் காட்டலாம்.

குறுந்தொகையில் சில தொடர் வேறுபாடு

"ஞாயிறு **காயாது மரநிழற் பட்டு**
தண்மழை **தலையின் றாகாநந் நீத்துச்**
சுடர்வாய் நெடுவேற் காளையொடு
மடமா வரிவை போகிய சுரனே"[59]

வேறு :

"ஞாயிறு **காணாத மாணிழற் படீஇ**
தண்மழை **தலையலாரைக் குகந்த தீறித்துச்**
சுடர்படு நெடுவேற் காளை யொடு
மடவர லரிவை போகிய கானே"

ஞாயிறு என்ற சொல்லைத் தவிர பிறசொற்கள் மாறுபட்டு வரும் முதலடி பொருளால் ஓரளவு பொருந்துகிறது. இவ்வாறே முதற்சீரினைத் தவிர பிற வேறுபட்டு வந்த அடுத்த அடியில் பொருள் புலப்பாடு சிறிதும் இல்லை. ஈற்றடி பொருள் தந்து வேறுபடுகிறது. தொடர்கள் பலவும் சிதைந்தும் மாறுபட்டும் வரும் தொடர் வேறுபாடாகிறது.

---

57. குறுந்தொகை 128. 58. ஷை. 16. 59. குறுந்தொகை, 378.

உ. தன்மை—வேறுபடுந்தன்மை

பாடல் அடிகளிலும் உரைத் தொடர்களிலும் எழுத்தோ சொல்லோ புதியதாகத் தோன்றி மூல பாடத்தினின்றும் வேறு பட்டு விடுவதுண்டு. இதே போல இருக்கும் எழுத்தோ சொல்லோ கெட்டு வேறுபாடு தோன்றுதலும், திரிந்து வேறுபாடு தோன்று தலும் மூல பாடங்களினிடையே காணப்படுகின்றன. இவற்றைத் தோன்றல், கெடுதல், திரிதல் என்னுந் தன்மை வேறுபாடுகளாகக் கொண்டு சான்று தர முடிகிறது.

தோன்றல்—சொல் தோன்றல்

"கண்டன கண்க ளிருப்பப் பெரும்பணைத்தோள்"[60]
வேறு : "கண்ட கருங்கண் ணிருப்பப் பெரும்பணைத்தோள்"

"புலாஅன் மறுகிற் சிறுகுடிப் பாக்கத்து"[61]
வேறு : "புலாஅனாறு மறுகிற் சிறுகுடிப் பாக்கத்து"

இப்பாடலடிகளுள் கருமை, நாறும் என்னும் சொற்கள் புதியன வாகத் தோன்றி மூல பாடங்களில் வேறுபாட்டினை உண்டாக்கி யுள்ளன.

எழுத்து—தோன்றல்

"மற்றுயான் என்னுளேன் மன்னோ"[62]

வேறு : "மற்றுயான் என்னுள்ளேன் மன்னோ"

இவற்றுள் ளகர ஒற்று தோன்றி வெண்சீர் வெண்டளையா யிற்று. இது புதிய எழுத்துத் தோன்றியதாலான வேறுபாடாகும்

கெடுதல்

"ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்"[63]
வேறு : "ஓங்குவரை யடுக்கம் பாய்ந்துயிர் செகுக்கும்"
அடுக்கத்து அத்துச் சாரியை கெட அடுக்கம் ஆயிற்று.

"யானூடத் தானுணர்த்த யானுணரா **விட்டதற்பின்**"[64]
வேறு : "யானூடத் தானுணர்த்த யானுணரா **விட்டபின்**"

விட்டதன்பின் என்பதில், 'தன்' கெட்டு, விட்டபின் என்றாயிற்று இவை எழுத்தும் சொல்லும் கெட்டு நின்ற வேறுபாட்டு வகைக்குச் சான்றுகளாகின்றன.

60, பழமொழி. 61. அகநானூறு 270. 62. குறள், 1206.
63. தொல். செய். 23 சான்று. 64. முத்தொள்ளாயிரம், 104.

திரிதல் — எழுத்துஞ் சொல்லும் திரிதல்

"அப்போது மலர்தூவி... என்மனத்தே வைத்தேனே"[65]

வேறு : "அப்போடு மலர்தூவி ,, என்மனத்தே வைத்தேனே"

அப்போது—அப்போடு என ஓர் எழுத்துத் திரிந்த வேறுபாட்டில் அப்போது என்னும் சொல், நீரால் அபிடேகம் செய்து மலர்தூவி என்னும் பொருளில் அப்போடு எனத் திரிந்தது.

"திங்களஞ் செல்வன் **யாண்டுளன்** கொல்லென"[66]

வேறு : "திங்களஞ் செல்வன் **யாங்குளன்** கொல்லென"

யாண்டு என்பது யாங்கு எனச் சொல்லால் திரிந்த இவ்வேறு பாடு பொருள் மாற்றம் பெறாதாயிற்று.

இலக்கண வேறுபாட்டில் திரிதல்

"வேளாளர் என்றவர்கள் **வள்ளன்மையால்** மிக்கிருக்கும்"[67]

வேறு : "வேளாளர் என்றவர்கள் **வண்மையால்** மிக்கிருக்கும்"

"மரந்தொறும் பிணித்த **களிற்றினி** ராயினும்"[68]

வேறு : "மரந்தொறும் பிணித்த **களிற்றின** ராயினும்"

வெண்டளைகளே பொருந்திவரும் தேவாரப் பாடலுள் வண்மையால் என்னும் சீர். தளை கெடாது நிற்க,வள்ளன்மையால் எனத் திரிந்து கனிச்சீராகித் தளைகெடச் செய்கிறது. களிற்றினிர் என்னும் முன்னிலைப் பெயர், களிற்றினர் எனப் படர்க்கைப் பொருளில் திரிந்தது. இத்திரிதல் வேறுபாடுகள் இலக்கண அமைப்பில் வேறுபட்டனவாகும்.

பொருள் வேறுபடத் திரிதல்

"**கேட்பது** விரும்பி நாய்கன் கிளைக்கெலா முணர்த்தி யார்க்கும்"[69]

வேறு : "கேட்டலும் விரும்பி நாய்கன்..."

கேட்பது—கேட்டலும் என்ற வேறுபாட்டில்—கேட்கத் தகுவதாகிய அதனை விரும்பி, சுற்றத்திற்கு உணர்த்தினான் என்ற பொருளில் திரிந்தது.

---

65. தேவாரம், 4233. 66. சிலப்பதிகாரம் 4:3.
67. தேவாரம், 1919. 68. புறநானூறு, 109.
69. சீவக சிந்தாமணி, 2078.

ஊ. எண் வேறுபாடு

பாடல் எண், அதிகார எண்களில் சுவடிகளிலும் பதிப்புகளிலும் வேறுபாடுகள் பல காணப்படுகின்றன. அதேபோல இயல், நூல் ஆகியவற்றின் மொத்தப் பாடல் எண்ணிக்கையிலும் வேறுபாடுகள் உள்ளன. இவற்றை முறையே எண்வேறுபாடு, எண்ணிக்கை வேறுபாடு எனக்கொண்டு அவற்றிற்குரிய சான்றுகள் காட்டப்படு கின்றன.

திருக்குறள் பரிமேலழகர் உரை[70]		மணக்குடவர் உரை[71]
இனியவை கூறல்	— அதிகார எண்—10	அதிகார எண்—26
அடக்கமுடைமை	— ,, ,, —13	,, ,, —27
பொறையுடைமை	— ,, ,, —16	,, ,, —13
தவம்	— ,, ,, —27	,, ,, —28
வாய்மை	— ,, ,, —30	,, ,, —10

பாடல் எண்களும் அதிகாரத்திற்கேற்ப முழுமையும் வேறு பட்டுள்ளன. **கம்பராமாயணம்**, பாலகாண்டம், திருஅவதாரப் படலத்தில்—

'அரசர்தம்' பெருமகன் அகிலம் யாவையும், என்று தொடங்கும் பாடல் வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சார்யர் பதிப்பில் 137ஆம் எண்ணில் காணப்படுகிறது. உ. வே. சா. நூலகப் பதிப்பில் கையடைப் படலத்தின் முதற்பாடலாகக் காணப்படுகிறது. இப் பாடலின் வரிசை எண் முன்னவர் பதிப்பில் 317; பின்பதிப்பில் 315.

எண்ணிக்கை வேறுபாடு

பாலகாண்டம் முதற்படலம் முதல் பரசுராமப் படலம் ஈறாக உள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை—

உ. வே. சா. நூலகப் பதிப்பு	—1389.
வை. மு. கோ. பதிப்பு	— 1397.
அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு	— 1398.

யுத்த காண்டம்—

ஆழ்வார் திருநகரி சுவடி கொண்டு பதிப்பித்த நூல்[72]	வை. மு. கோ. பதிப்பு
படலங்களின் தொகை—46	படலங்கள்—39
பாடல்களின் தொகை—4336	பாடல்கள்—4358

---

70. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சார்யர் பதிப்பு, 1949.
71. வ. உ. சிதம்பரம்பிள்ளை பதிப்பு, 1917.
72. வெ. நா. ஸ்ரீநிவாஸையங்கார் பதிப்பு, 1954.

சூடாமணி நிகண்டு—சிறப்புப் பாயிரப் பாடல்கள் சுவடியில் பத்துப் பாடல்கள் உள்ளன. வேறு சுவடியைக் கொண்டு பதிப்பித்த பதிப்பில் இச்சுவடியில் காணும் இரண்டு பாடல்கள் மட்டுமே அச்சாகியுள்ளன.[73]

சிந்தாமணிப் பாடல் எண்ணிக்கை வேறுபாடு

"மெய்ந்நீர்த் திருமுத்து இருபத்தேழ் கோத்துமிழ்ந்து திருவில் வீசும்
செந்நீர்த் திரள்வடம்போல் சிந்தா மணியோதி யுணர்ந்தார் கேட்டார்"

உரை : "இருபத்தேழ் என்றார் ஒன்றைப் பத்தாற் பெருக்கின இருநூற்று எழுபதைப் பத்தாற் பெருக்கின இரண்டாயிரத்து எழு நூற்றை"[74]

இந்தச் சிந்தாமணிச் செய்தி திருத்தக்க தேவரால் செய்யப் பெற்ற பாடல் இரண்டாயிரத்து எழுநூறே என்பதைப் புலப்படுத்துகிறது.

ஆனால் சுவடிகளிலும், பல்வேறு பதிப்புகளிலும் மூவாயிரத்து நூற்று நாற்பத்தைந்து பாடல்கள் வரை எண்ணிக்கையால் வேறு பட்டுக் காணப்படுகின்றன.

வேறுபாட்டுப் பொருத்தம்

சுவடிகளிலும் பதிப்புகளிலும் காணப்பெறும் வேறுபாடுகளைப் பெரும்பான்மைத் தலைப்புகளில் ஆறுவகைப்படுத்தியும், அவை அமையும் தன்மையால் உட்தலைப்புகளில் பதினேழு வகைப்படுத்தியும் சான்றுகள் காட்டப் பெற்றன. இச்சான்றுகள் அனைத்தும் அந்தந்தத் தலைப்புகளுகெனெ ஆக்கப்பட்டவை அல்ல. சுவடிகளிலிருந்தும் சுவடிப் பதிப்பு நூல்களிலிருந்தும் தேர்ந்தெடுத்து வகைப் படுத்தப்பட்டவையாகும். எனவே ஒரு தலைப்பிற்குக் காட்டப் பட்ட சான்றுகள் அத்தலைப்பிற்கு மட்டுமே பொருந்தியவை ஆகா. அவற்றைப் பொருத்திக் காட்டுமாற்றால் பிற வேறு பாட்டுத் தலைப்புகளுக்கும் காட்டலாம். சான்றாக,

அம்பொன்—அஞ்சொல்[75] என்ற வேறுபாட்டினைச் சொல் வேறுபாடு, பொருள் வேறுபாடு என்னும் இரு தலைப்புகளிலும் பொருத்திக் காட்டலாம். இவ்வேறுபாட்டு வகைகளும் சான்று

73. சூடாமணிநிகண்டு, சுவடி, டி. 19.
74. சீவகசிந்தாமணி, 3143. நச்சர்உரை.
75. உரையாசிரியர் காலவேறுபாடு, பக். 4.

களும், மூலபாட ஆய்வியல் நோக்கில், காரணமறிந்து ஆசிரியரின் உண்மைப் பாடத்தைத் தேர்ந்தெடுக்கும் சுவடிஇயல் பயிற்சிக்குரிய பலவகை அனுபவத்தைப் பெற வைப்பதற்குத் துணையாக அமைவனவாகும்.

பாட வேறுபாடுகள் தோன்றுதற்குரிய காரணங்கள்

சுவடிகள் உருவான முறை : மனப்பாடத்திலிருந்து சொன்ன போது இடையிடையே மறதி ஏற்பட்டு, பல நூல்களை மனப் பாடம் செய்ததனால் உள்ளத்திலிருந்த சொற்களஞ்சியமும், நூலி லிருந்த கருத்தாழமும் ஓசை நயமும் யாப்பறிவும் துணை நிற்க வேறுபட்ட பாடங்கள் தோன்றியுள்ளன.

மனப்பாடத்திலுள்ளதை எழுதி வைக்க வேண்டுமென்ற நோக்கத்தாலும், மாணாக்கரை எழுதிக் கொள்ளச் செய்ய வேண்டும் என்ற கருத்தாலும் பிறரை எழுதச் சொல்லும்போது உச்சரிப்பில் ஏற்படும் குறைபாட்டாலும், சில ஒலிகளின் ஒப்புமை யாலும் உரிய சொற்களும் தொடர்களும் மாற்றி எழுதப் பெற்று விடுகின்றன.

சுவடிகள் எழுதப் பெற்ற முறையால் வேறுபாடுகள் : ஒரு சுவடியைப் பார்த்துப் படியெடுக்கும் பணி இரண்டு அடிப்படையில் நடைபெற்றுள்ளது. ஒன்று தங்கள் உபயோகத்திற்காக எழுதுவது; மற்றொன்று பிறருக்காக எழுதுவது. எந்த நிலையில் எழுதப் பட்டாலும் தற்செயலாகவே சில விடுபடுதலும் சில மிகுதியாக எழுதப்படுதலும் ஏற்படுவதுண்டு. சுவடியில் உள்ள வரியைப் பார்த்துவிட்டு எழுதுவதும், மீண்டும் சுவடியைப் பார்ப்பதுமாகிய செயல்களால், ஒரே மாதிரியான முடிவுச் சொற்கள் அமைந்த, முதற் சொற்கள் அமைந்த வரிகளுள் ஒன்று விடுபடுவதோ, மீண்டும் எழுதப்படுவதோ நிகழக்கூடும்.

முன் பின் வரிகளில் இடையே ஒரே மாதிரியான சொற்கள் காணப்படுமாயினும் ஒரு வரியில் உள்ளதை எழுதிய பிறகு அடுத்த வரியில் அல்லது முன்வரியில் உள்ள அதே சொல்லைக் கண்டு அது வரை எழுதப்பட்டுவிட்டதாகக் கருதி அதைத் தொடர்ந்து எழுது வதும் இயல்பாக நிகழக்கூடிய செயலாகும். இதனால் விடுகையும் மிகையும் ஏற்படும்.

ஒன்றுபட்ட இறுதித் தொடர்கள்

"அல்லற்பட் டிருந்தாரை யயர்ப்பிய வந்தாயோ;
....
ஆரஞ ருற்றாரை யணங்கிய வந்தாயோ;
....
காய்ந்தநோ யுழப்ப ரைக் கலக்கிய வந்தாயோ;"[76]

"நான்மறையோர் தான்வாழும் நல்லதொரு வீதிகளும்
தான்எதிர்த்தா ரைத்துணிக்கும் சத்திரியாள் வீதிகளும்
மேன்மைபெறுங் கலமணிகள் விற்கும்வணி காள்தெருவும்
தான்ஏவ லேபுரியும் தாழ்சூத்திரர் தன்தெருவும்"[77]

இவ்வடிகளுள் உள்ள ஈற்றுச் சொற்கள் பார்வையில் மயக்கத்தை ஏற்படுத்தி விடுகையையோ மிகையையோ உண்டாக்கக் கூடியன வாகும்.

ஒன்றுபட்ட தொடக்கத் தொடர்கள்

"ஓஒகடலே தெற்றெனக் கண்ணுள்ளே...
....
ஓஒகடலே ஊர்த்தலைக் கொண்டு...
....
ஓஒகடலே எற்றமி லாட்டியென்..."[78]

"போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொன்பாதம்"[79]

இவ்வடிகளுள் முதற்சொற்கள் ஒரே மாதிரியாயமைந்து விடுகை முதலான வேறுபாடுகள் தோன்ற வாய்ப்பளிக்கின்றன.

ஒன்றுபட்ட இடை, ஈற்றுத் தொடர்கள்

"ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
நேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி"[80]

"பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அனேகன் காண்க"[81]

---

76. கலித்தொகை, 120.
77. சுசீலவள்ளல் அம்மானை, வரி 69-72.
78. கலித்தொகை, 144. 79. திருவாசகம், 174.
80. திருவாசகம், 1:11-12. 81. திருவாசகம் 3:37-39.

''மூதாக்கள் செய்தவமோ முடிவேந்து செய்தவமோ
மாதாக்கள் செய்தவமோ மாதடியாள் செய்தவமோ''[82]

இவ்வடிகளில் இடையிலும் ஈற்றிலுமாக அமைந்துள்ள போற்றி, காண்க, தவமோ என்னும் சொற்கள் சுவடி எழுதுவோருக்கு மயக்கத்தை அளித்து மீண்டும் மீண்டும் எழுதும் வாய்ப்பையோ சில தொடர்களை விடும் வாய்ப்பையோ அளித்துவிடக்கூடியன வாகும். முதலும் ஈறும் இடையுமாக எடுத்துக் காட்டப் பெற்ற இச்சொற்கள், சுவடிகளில் இங்குக் காட்டப் பெற்றது போல அடிவரையறையுடன் காணப் பெறாமல் தொடர்ச்சியாக எழுதப் பெற்ற நிலையில் மாறி மாறி அமையும். அதனால் பல குழப்பங் கள் ஏற்பட்டு இவ்வகை வேறுபாடுகள் நிகழும் வாய்ப்பு மிகுதி யாகிறது.

இடைவிடுகை : கையெழுத்துத் தெளிவின்மை, ஏடு பூச்சி யரித்துப் பழுதடைதல் ஆகிய காரணங்களால் எழுத்தோ சொல்லோ தொடரோ விளங்காத நிலை ஏற்படும்போது ஏட்டில் போதுமான இடம் விட்டு மேலே தொடர்ந்து எழுதியிருப்பர். மறதியால் அவ்விடம் நிரப்பப் பெறாமலே இருந்து விடுமேயானால், அச்சுவடி யைப் பார்த்து வேறு படி எடுப்போர் விடுபட்டுள்ள அவ்விடத்தைப் பற்றிக் கவலைப்படாமல் உள்ளதைத் தொடர்ச்சியாக எழுதி விடுவர். இதனால் அவ்விடுகை சுவடியில் நிலைத்து விடுகிறது.

ஏடுபிறழ்ச்சி : சுவடியில் ஏடுகள் மாறியிருந்ததைக் கூடக் கவனியாமல் எழுதப் பெற்றுள்ள செயலையும் படியெடுப்போரிடம் காணமுடிகிறது. சான்றாகத் திருவேங்கடநாதன் வண்டுவிடுதூது என்னும் நூலில் பின்னிணைப்பாகத் தரப்பட்டிருக்கும் தனிப் பாடல்கள் சுவடியில் அமைந்திருக்கும் முறையைக் காட்டலாம். இத்தனிப்பாடல் பகுதி முப்பது பாடல்களைக் கொண்டது. அவற்றுள் கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் பத்து. அவை பத்தும் ஒழுங்காகவே உள்ளன. ஏடு எழுதியவர் தாம் பார்த்து எழுதிய மூலச் சுவடி ஏடு பிறழ்ந்திருந்ததை அறியாமல் எழுதியிருக் கிறார். அதாவது எட்டாம் பாடலின் நான்காம் அடியே தொடக்க அடியாக உள்ளது. பிறகு ஒன்பது, பத்தாம் பாடல்கள் அமை கின்றன. அடுத்து ஐந்து வெண்பாக்கள் அமைகின்றன. அவற்றின் பின் அக்கட்டளைக் கலிப்பாக்கள் ஏழும் எட்டாம் பாடலின் முதல்

---

82. சுசீல வள்ளல் அம்மானை. வரி. 356-57.

மூன்று அடிகளும் அமைந்து நிறைவு பெறுகின்றன. முதல் ஏழு பாடல்கள் கிடைக்கவில்லை என்ற குறிப்போடு நூல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.[83]

சேர்க்கைகள் : ஆசிரியர் ஒரு நூலைக் கற்பிக்கும்போது தம் திறமைக்கு ஏற்பச் சிலவற்றை இயற்றிக் கூறுவதுண்டு. கற்போர் அவற்றை ஏட்டின் ஓரப்பகுதிகளில் குறித்து வைப்பர். அவை படியெடுப்போரால் ஏதேனும் ஓரிடத்தில் சேர்த்து எழுதப் பெற்று விடும்.

படியெடுப்போர் சிறந்த அறிஞர்களாக இருந்தால் நூலில் இடத்திற்கேற்பச் சில சேர்க்கைகள் சேர்ந்துவிடுவதும் உண்டு. இடம், கருத்து ஆகியவற்றிற்கேற்பப் பொருத்தமாகச் சேர்க்கப் படும் அச்சேர்க்கைகள் அவர்களே இயற்றியனவாகவோ முன் வேறு நூல்களில் தாம் கற்றனவாகவோ இருக்கும். ஆனால் அவற்றைப் பற்றிய குறிப்புகள் சுவடியில் சேர்க்கப் பெறுவதில்லை. பிற்காலப் படிகளில் அச்சேர்க்கைகள் மூலநூலின் பாடல்கள் போலவே அமைந்துவிடும்.

சேர்க்கைகளின் நோக்கம் : இடையே ஏற்படும் இச்சேர்க்கை மூலநூலாசிரியருக்கு மாசு கற்பிக்க வேண்டுமென்ற நோக்கமுடைய தன்று. மூல நூலின் இன்பத்தில் முழுகித் தாமும் அதுபோலவே பாடல் எழுத வேண்டும் என்ற ஆர்வத்தால் நிகழ்வதாகும்; நூலின் சுருக்கமான செய்திகளை விரிவாகச் சொன்னால் மேலும் சுவையாக இருக்கும் என்னும் நோக்கத்தால் நிகழ்வதாகும்; இடையிடையே குறிப்பால் உணருமாறு விடப்பெற்ற அல்லது குறிப்பால் உணர்த்தப்பெற்ற இடங்களைக் கதைகளின் மூலமாக, பிற சான்று களின் மூலமாக விளக்கினால் நூல் சிறப்படையும் என்ற கருத்தால் நிகழ்வதாகும். இதே போலப் பலவகைத் திருத்தங்களும் நடை பெற்றுள்ளன.

எழுதுவோரால் ஏற்படும் வேறுபாடுகள்

> "பாமரரும் பிரதி செய்தார்கள்; பண்டிதரும் பிரதி செய்தார் கள். பாமரர்கள் கூலிக்காகவே பிரதி செய்தல் பெரும்பான்மை யான வழக்கு. புலமையில்லாமையால்...சொற்பிழைகள், எழுத்துப்பிழைகள் நிரம்ப ஏற்பட்டன"[84]

---

83. திருவேங்கடநாதன் வண்டுவிடுதூது, பின்னிணைப்பு, 2.
84. திருவாசகக் குறிப்புக்கள், பக். 164.

இவ்வாறு கூலிக்காகச் சுவடி எழுதுவோரிடை இரண்டு வகையான குறைபாடுகள் எழுகின்றன. ஒன்று எழுதுவோர் நலம்; மற்றொன்று சுவடியின் தன்மை. இவற்றுள் எழுதுவோரின் உடல் நலக்குறைவு, வயது முதிர்வு, பார்வை சரியின்மை, கவனச்சிதைவு, பணத்தேவை, இடம் முதலிய வசதியின்மை ஆகியவற்றால் பிழைகளும் விடுகைகளும் மிகைகளும் பலவாறாகத் தோன்றிவிடுகின்றன. அவர்களின் கல்விக் குறைபாட்டிற்கு ஏற்ப, சுவடிகளின் கையெழுத்துப் புரியாத தன்மையும், பழுதடைந்து எழுத்துகள் இராமபாணம் முதலிய வற்றால் உழப்பட்டுள்ள தன்மையும் சேரும்பொழுது மேலும் பல பிழைகள் ஏற்பட்டு விடுகின்றன. பேச்சு நடையும் பிறமொழிச் சொற்கள் கலந்த நடையும் காணும்பொழுது சொற்களின் பொருள் புரியாமல் மாற்றி எழுதிவிடும் நிலையும் ஏற்படுகிறது.

எழுதச் செய்வோரால் ஏற்படும் வேறுபாடுகள் : வேறுபாடுகள் தோன்றுவதற்குச் சுவடியை எழுதச் செய்வோரும் காரணமா கின்றனர். சுவடி நூலகம் போன்ற நிறுவனங்களில் தமக்கு வேண்டியவர் என்ற தகுதியால் மட்டுமே சுவடி எழுதுவோர் தேர்ந் தெடுக்கப்பெறுகின்றனர். அவர்கள் செய்யும் பிழைகளை மேற் பார்வையாளர் சுட்டிக் காட்டியபோதும் கவனிக்கப் படுவதில்லை. தங்கள் தேவைக்காகப் படியெடுப்போரை விரைவுபடுத்துவதும் ஒரு காரணமாகிறது. விரைவு காரணமாக மிகவும் பிழைபட எழுதுவ தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பணியும் ஒப்புக்காகவே நடைபெறு கிறது. ஒருவர் படிக்க ஒருவர் எழுதுவது என்ற முறையும் பயன் படுத்தப்படுகிறது. இம்முறை கல்வியிற் குறைபாடுடையவர்களுக்கு இரண்டு வகையில் பிழைபுரியத் தூண்டிவிடுகிறது. ஒன்று படிப் போரின் ஒலிவேறுபாடுகள்; மற்றொன்று ஒலிக்கு ஏற்ப எந்த எழுத் தையும் எழுதுவது. பிழை, வேறுபாடு ஆகியவை ஏற்படுவதற் குரிய இக்காரணங்கள் எழுதச் செய்வோரால் ஏற்படுபவையாகும்.

இக்காரணங்களால் பலவற்றையும் தொகுத்து ஐந்துவகையுள் அடக்கி அவற்றிற்குரிய சான்றுகளைத் தந்து விளக்குகிறது இப் பகுதி.

வகைப்பாடு

1. சுவடிகள் மனப்பாட நிலையிலிருந்து உருவாகியுள்ளன. அவ்வாறு சொல்லும்போதும், சொல்ல வேறொருவர் எழுதும்போதும் வேறுபாடுகள் தோன்றுகின்றன.
2. சுவடியைப் பார்த்து எழுதும்போது தற்செயலாகவே சில விடுகைகளும் மிகைகளும் தோன்றிவிடக்கூடும்.

3. நூலின் இடை யிடையே சேர்க்கைகளையும் திருத்தங்களை யும் தெரிந்தே செய்துள்ள நிலையும் காணப்படுகிறது.
4. சுவடியில் எழுதப்பெறும் எழுத்து முறையாலும் கை யெழுத்துத் தெளிவின்மையாலும் குழப்பங்கள் ஏற்பட்டு வேறுவிதமாக எழுதிவிட்டதாலும் வேறுபாடுகள் தோன்றியுள்ளன.
5. பேச்சுமொழி, வேற்றுமொழிச் சொல் கலப்பு ஆகிய வற்றால் ஏற்பட்ட மொழி நடையினால் தோன்றிய வேறுபாடுகளும் உண்டு.

அ. மனப்பாடம்

பாடம் போற்றல் : எந்த நூலையும் மனப்பாடம் செய்து கற்றலே பழங்காலக் கல்விமுறையாக விளங்கியுள்ளது. இறைய னார் களவியல், ஒன்பது தலைமுறையாகப் பாடம் சொல்லப் பெற்று வந்த முறையினை எடுத்துக் காட்டுகிறது.[85] மாணாக்கர் பயிலும் முறைகளில் 'பாடம் போற்றல்' என்பது ஒன்று என்பதை இலக்கணங்கள் வற்புறுத்துகின்றன.[86] பாடம் போற்றல் என்பது மூலபாடத்தை மனப்பாடம் செய்தல் என்பதேயாகும். உரை யாசிரியர்கள் காட்டும் சான்றுகள் பலவும் அவர்கள் மனப்பாடத்தி லிருந்து தோன்றியவையாகும்.

பண்டைக்காலத்தில் முறையாகப் பாடஞ்சொல்லிவந்த ஆசிரி யர்கள், நூலாசிரியர்களுடைய வரலாற்றை மாணாக்கருக்கு முதலில் சொல்லிவிட்டு அதன்பிறகே நூலை உரைப்பார்கள் அதனால்தான் புலவர்களுடைய வரலாற்றை எழுதி வைக்கும் வழக்கம் இல்லாமற் போயிற்று. அவ்வரலாறுகள் வழிவழியே வழங்கிவந்தன. முறையாகப் பாடஞ் சொல்லுதலும் கேட்டலும் தவறிய பிற்காலத்து, ஆசிரியர் வரலாறுகள் பலபடியாக வழங்கத் தலைப்பட்டன.[87]

மனப்பாடத்தால் விட்டதை அறிதல் : விருத்தாசல ரெட்டியார் என்பவரின் மகன் தன் தந்தையிடம் கம்பராமாயணத்தைப் பாடங் கேட்டு வந்தார். ஒருநாள் அவர் திருசிரபுரம் கோவிந்தபிள்ளை பதிப்பித்த அச்சுநூலை வைத்துக் கும்பகருணப்படலத்தைப்

---

85. இறையனார் அகப்பொருள்-1, உரை.
86. நொல், பாயிரம்—இளம். உரை; நன்னூல். 41.
87. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், முகவுரை, பக். 11.

படித்துக் கொண்டிருந்தார். அப்போது உ. வே. சாமிநாதையர் அவர்களும், அவ்வூர் பண்ணையார் ஒருவரும் உடனிருந்தனர். படித்துவரும்போது அப்பெரியவர் இடைமறித்துச் சில ஏடுகளைத் தள்ளி விட்டீர்களே என்றார். இல்லையே! தொடர்ச்சியாகத்தான் படித்துவருகிறேன் என்றார் மாணாக்கர். சில பாடல்கள் விடு கின்றன என்று கூறித் தன்னிடமிருந்த சுவடியை எடுத்துவந்து காட்டினார். அச்சு நூலில்லாத சில பாடல்கள் சுவடியில் இருந்தன.[88]

ஒப்பிக்கும் வழக்கம் : சிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியர் அங்கங்கே அந்நூற் செய்யுட்பகுதிகளை மேற்கோளாகக் காட்டி யிருக்கிறார். உ.வே சா. அவர்கள் அச்செய்யுட் பகுதிகளைச் சொன்னவுடன் சந்திரநாத செட்டியார் என்பவர் அவை, இன்ன இன்ன இடத்தில் உள்ளன என்று சொல்லி முழுப்பாட்டையும் சொல்லுவார்.[89]

> ''படித்தவர் யாரேனும் வந்தால் கஸ்தூரி ஐயங்கார் எனக்குப் பாடம் சொல்லிய நன்னூல் சூத்திரங்களையும் உரையையும் என்னைச் சொல்லும்படி செய்வார். அவற்றை நான் ஒப்பிப்பேன்''[90]

மனப்பாடத்திலிருந்து தொகுத்தல் : பெருந்தொகைப் பதிப்பில் உள்ள பாடல்கள் பல புத்தகசாலைகளிலிருந்தும், தனியார் பலரிட மிருந்தும் கிடைத்த ஏட்டுச் சுவடிகளிலிருந்தும் திரட்டப்பெற்றவை. மேலும் பரம்பரைப் புலவர்கள் மூலமாகவும், தமிழ் மக்கள் மூல மாகவும் வாய்மொழியாகக் கிடைத்த தனிக்கவிகளும் பல தொகுக்கப்பட்டுள்ளன.[91]

பண்டைத் தமிழ்ப் புலவர்கள் அக்காலத்திலுள்ள எல்லா நூல் களையும் நன்கு மனப்பாடம் செய்திருந்தார்கள்... கற்றலுக்குப் பொருள் நிற்றல் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். கற்றல் என்றால் என்றும் மனத்திலே நிறுத்துதல் என்றுதான் பொருள். பண்டிதனுக்குத் தன் ஞாபகம்தான் உதவியதேயன்றி, புரட்டு வதற்குச் சுவடிகள் பயன்பட்டதில்லை.[92]

---

88. என் சரித்திரம், பக். 209-210. 89. ஷை. பக். 740-741.
90. ஷை. பக். 151.
91. பெருந்தொகை, முகவுரை, பக். 3.
92. திருவாசகக் குறிப்புக்கள், பக். 163-164.

"பண்டு வாய்மொழிக் கல்வியே பரவலாக இருந்து வந்தது. ஏட்டிலே எழுதிக்கற்பது அருகிய வழக்கே. 'உரை' என்கிற சொல் இவ்வாய்மொழிவழிக் கல்வியை நமக்கு உணர்த்து கிறது".[93]

இச் செய்திகள் எந்த நூலையும் மனப்பாடம் செய்து கற்ற பழங் கால முறையைப் புலப்படுத்துகின்றன.

மனப்பாடத்திலிருந்து உருவான சுவடிகளில வேறுபாடுகள் : நூல்களை மனப்பாடமாக வைத்திருந்தவர்கள் அந்நூல்களைப் பிறருக்குப் பாடம் நடத்தும்போது சுவடிகளின் உதவியின்றியே நடத்தினார்கள். வாய்மொழியாகவே சொல்லி மாணாக்கரை எழுதிக்கொள்ளவும் செய்தார்கள். அவ்வாறு சொல்லும்போது பல வேறுபாடுகள் தோன்றிவிட்டன. மிகப்பல பாடல்களை மனப் பாடம் செய்திருந்த அவர்கள் பாடல்களைச் சொல்லும்போது சில சொற்களை, தொடர்களை மறந்திருக்கிறார்கள். ஆனால் அந்த நூலின் ஆழ்ந்த பொருளை உணர்ந்திருந்த காரணத்தாலும், பல நூல்களை மனப்பாடம் செய்திருந்த காரணத்தாலும் அத்தொடர் கள் அவர்களுக்கு மறதியாகத் தோன்றவில்லை. ஆற்றொழுக்காக வேறு தொடர்களைக்கூறி அவ்விடத்தை நிரப்பியிருக்கிறார்கள். அவர்களின் கல்வித் திறத்தால் கருத்து அமைதி, சீரின் அளவு, எதுகை மோனைப் பொருத்தம், ஓசை நயம் ஆகியவற்றிற்கு ஏற்ப அத்தொடர்கள் அவர்கள் வாயினின்றும் தோன்றியிருக்கின்றன. இப்பாடவேறுபாடுகள் மனப்பாடப் பழக்கத்தால் தோன்றியவை யாகின்றன.

இவ்வாறு மனப்பாடப் பழக்கத்தால் ஏற்பட்ட வேறுபாடுகளை,

1. ஆசிரியர் சொல்லுவதில் (அல்லது) அவரே எழுதுவதில் ஏற்படும் வேறுபாடு

2. ஆசிரியர் சொல்லிப் பிறரை எழுதச் செய்வதில் ஏற்படும் வேறுபாடு என இருவகையாகப் பிரிக்கலாம். அவ்வாறு சொல்லும் போது, 1. சொல் வேறுபடுதல் 2. சொல் இடம் மாறுதல் 3. சொல்திரிதல் 4. தொடர்; அடி வேறுபட்டு அமைதல் ஆகிய நிலைகளில் வேடுபாடுகள் தோன்றியுள்ளன.

---

93. சொல்புதிது சுவைபுதிது-பக். 1.

சொல் வேறுபாடு

"தண்டலை மயில்க **ளாடத்** தாமரை விளக்கந் **தாங்கக்**
கொண்டல்கண் முழவி **னேங்கக் குவகளைகண்** விழித்து
நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் **தேம்பிழி மகர** யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் **றிருக்கு மாதோ**"[94]

வேறு :

"தண்டலை மயில்க **ளாலத்** தாமரை விளக்க **மேந்தக்**
கொண்டலை முழவி **னோங்கக் குவளைகள்** விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் **தேமபொழி மதுர** யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் **றிருந்த மன்னோ**"

ஆல, ஏந்த, கொண்டலை, ஓங்க, குவளைகள், தேம்பொழி, மதுர யாழின் வீற்றிருந்த, மன்னோ என்பனவாகிய சொற்கள் அனைத்தும் மனப்பாட நிலையிலிருந்து இடத்திற்கும் ஓசை நயத்திற்கும் ஏற்ப, வாய்மொழியாகச் சொல்லப்பட்டு, வடிவம் பெற்றவை யாகும். இவற்றில் வடிவவேறுபாடாகவும் சில சொற்கள் அமை கின்றன.

சொல் இடமாற்றம்

"புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்"[95]

வேறு : 'வாளிற் கொள்ளலிர் தாளிற் றாரலன்'

சொற்கள் இடமாற்றம் பெற்றுவரும் இவ்வேறுபாட்டில் பொருளும் வேறுபடுகிறது. உங்கள் முயற்சியினால் கொள்ளமுடியாது; வாள் வலிமைக்கு அஞ்சியும் தரமாட்டான் என்னும் முதற்பாடத்தின் பொருள், உங்கள் வாள் வலிமையால் கொள்ளமுடியாது; முயற்சி யினாலும் அவன் தரமாட்டான் என்று பாடவேறுபாட்டால் பொருள்மாற்றம் பெற்றுவிடுகிறது. இவ்வேறுபாடு மனப்பாடத்தி லிருந்து கூறியதால் ஏற்பட்டதாகலாம்.

சொல் திரிதல்

வழிவழியாகப் பாடப்பட்டுவரும் இறைப்பாடல்களாகிய பக்திப் பாடல்கள் பலவற்றிலும் சொற்கள் திரிந்து வந்த வேறுபாடு கள் வாய்மொழியாக வழங்கப்பட்டு வந்து இறுதியில் எழுத்து வடிவமும் பெற்றுள்ளன.

---

94. பாலகாண்டம் 2-4. 95. புறநானூறு, 109.

"செல்வச் சிறுமீர்காள் — என்பது—செல்வச் சிறுமியர்காள் என்றாயிற்று.

"பாரேரார் புகழப் **படிந்தேலோ** ரெம்பாவாய்"—என்பது

"பாரோர் புகழப் **பணிந்தேலோ** ரெம்பாவாய்"

என்று வடிவம் பெற்றது.[96]

இவை வாய்மொழியாகத் திரிந்து வழங்கி வந்து எழுத்து வடிவம் பெற்றுவிட்ட வேறுபாடுகளாகும். பாடுங்கால் ஓசை நயத்தோடு பாடப்பெற்று வழக்காற்றில் நிலைத்துவிட்ட இவ்வேறுபாடுகள் பொருளால் மாற்றம் பெறுகின்றன.

தொடர், அடி மாற்றம்

"செவியறி வாயுறை புறநிலை யென்றிவை"[97]

வேறு : "புறநிலை வாயுறை செவியறி வென்றிவை"

இவ்வடிகளில் சொற்றொடர்கள் மாறியமைந்துள்ளன. இவை மனப்பாட நிலையினின்று தோன்றியவை. உரையாசிரியர்களும் இவ்வாறு மாறிமாறியே பொருள் கொண்டுள்ளதால் இவ்வேறுபாடு உரையாசிரியர்களுக்கு முன்பே தோன்றியதாகக் கொள்ளலாம்.

"அடிசிற் கினியாளை யன்புடை யாளைப்
படுசொற் பழிநாணு வாளை—யடிவருடிப்
பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான் பிரிந்தா
லென்றூங்கு மென்க ணெனக்கு"[98]

வேறு : "அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் கடவாத பாவா—யடிவருடிப்
பின்றூங்கி முன்னெழூஉம் பேதையே போதியே
வென்றூங்கு மென்க ணினி."

என்பதில் ஒலி ஒப்புமையால் ஐகாரங்கள் நீட்டி இசைக்கப்பட்ட போது கேட்பவருக்கு ஏகார ஒலியாகப்பட அவ்வாறே பயிலப் பெற்று எழுத்து வடிவமும் தரப்பட்டுவிட்டன. படுசொல் என்பதும் அவ்வாறே படிசொல் ஆயிற்று. பழிநாணுவாளை என்னும் தொடர் அடியோடு மறக்கப்பட்டு வெண்பாவின் சீருக்கேற்ப, கடவாத பாவாய் என்ற வேற்றுவடிவம் பெற்றுவிட்டது. அதே போல முன்னுணரும் பேதை என்பதும் செப்பலோசை வழுவா

96. திருப்பாவை-1.
97. தொல். செய்யு-160, பேராசிரியர், நச்சர்.
98. தாமோதரம், பக். 126.

வண்ணம் முன்னெழூஉம் பேதையென அளபெடையோடு வடி வெடுத்தது. ஏகார ஈற்று விளியாக அமைந்த தொடர்களுக்கேற்ப இறுதியடியும் வடிவம் மாறியது. இவ்வேறுபாடுகள் பலவும் மனப் பாடம் செய்த நிலையிலும், மனப்பாடமாகக் கூறப் பிறர் கேட்ட நிலையிலும், கற்றவரின் புலமை நிலையிலும் தோன்றியவை யாகின்றன.

சொல்லி எழுதுவதில் வேறுபாடு : மனப்பாடமாக உள்ள நூலையோ புதியதாகத் தாம் இயற்றிய நூலையோ ஆசிரியர் பாடம் நடத்தும் முறையில் அல்லது எழுதி வைக்கவேண்டும் என்ற நிலையில் தாம் சொல்ல, வேறு ஒருவரை—மாணாக்கரை—எழுதச் செய்து நூல்வடிவாக்குவது வழக்காற்றில் இருந்துள்ளது. அந்த நூல் ஆசிரியருக்காக அல்லது மாணாக்கர் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பெறும்.

> "இந்த நூலை ஆரம்பித்து ஒரு வருஷமாகிறது...இதை முன்பு நான் சொல்லச் சொல்ல ஒருவர் எழுதினார். அவர் திருத்த மாக எழுதக் கூடியவர் அல்லர். நான் ஏதாவது சொன்னால் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் சில இடங்களில் வேறாக எழுதியிருக்கிறார். இப்படி இவர் செய்திருப்பா ரென்று சந்தேகப்பட்டுத்தான் மறுபடியும் படிக்கச் சொன் னேன். சொல்வதைச் சரியாக எழுதுவோர் கிடைப்பது அருமையாக இருக்கிறது."[99]

தாம் எழுதிய திருவம்பர் புராணத்தைத் திருத்திய மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் கூறிய இக்கூற்று ஆசிரியர் சொல்ல, வேறு ஒருவர் எழுதி சுவடி உருவாகின்ற நிலைக்குச் சான்றாகிறது. மீண்டும் ஆசிரியர் திருத்தம் செய்தபோது பிழைகளைக் காண நேர்ந்தது. இவ்வாறு சொல்லும் போது மாணவர் தங்களுக்கென எழுதிய சுவடிகள் அனைத்துமே திருத்தம் பெற இயலுவதில்லை. அவற்றில் பல வேறுபாடுகள் தோன்றி நிலைத்து விடுகின்றன. சிலவற்றிற்குச் சான்றுகள் தரலாம்.

ஒலிமுறையால் நிகழ்ந்த வேறுபாடு

உயிர் ஒலி ஒப்புமை

"பலகுடை நீழலுந் **தங்குடைக்** கீழ்க்காண்பர்"[100]

---

99. என் சரித்திரம்-பக். 386-87.
100. குறள் - 1034, பரிமேலழகரும் காளிங்கரும் கொண்ட பாடங்கள்.

வேறு : " பலருடை நீழலுந் **தங்கொடைக்** கீழ்க்காண்பர்"

"சேலுண்ட **வொண்க** ணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்"[101]

வேறு : "சேலுண்ட **உண்க** ணாரிற் றிரிகின்ற......"

குடை-கொடை என்னும் வேறுபாடு சொல்லிச் சொல்லி மனப்பாடம் செய்தபோதும் சொல்லி எழுதியபோதும் உயிர் ஒலி ஒப்புமையால் ஏற்பட்டுள்ளது. இவ்வேறுபாடு உரையாசிரியர்கள் காலத்துக்கு முன்பே ஏற்பட்டுப் பொருளும் வெவ்வேறு கண்டுள்ளனர். ஒண்கண்-உண்கண் என்பதும் இவ்வாறு உயிர் ஒலி ஒப்புமையால் ஏற்பட்டதேயாகும்.

" இலமென் றசைஇ **இருப்பாரைக்** காணின்"[102]

வேறு : "இலமென் றசைஇ **இரப்பாரைக்** காணின்"

இருப்பாரை - இரப்பாரை என்பது உயிரொலிகளின் ஒப்புமை யால் தோன்றிய வேறுபாடாகும்.

ண, ந, ன—ஒலி ஒப்புமை

" தள்ளாத சும்மைமிகு தக்கந னாடுநண்ணி"[103] தக்கநல் நாடு-தக்கணநாடு என்றாயிற்று. இது ண, ந, ன என்னும் ஒலி ஒப்புமையால் எழுதப் பெற்ற வேறுபாடாகும்.

ழ, ள — ஒலி ஒப்புமை

" இவையெல்லாம் **கிழமை** பற்றி வந்தமையின்" [104]

வேறு : " இவையெல்லாம் **கிளமை** பற்றி வந்தமையின்"

" ஆசினி மென்பழம் **அளிந்தவை** உதிரா"[105]

வேறு : " ஆசினி மென்பழம் **அழிந்தவை** உதிரா"

கிழமை — கிளமையாகவும், அளிந்தவை — அழிந்தவையாகவும் வேறுபட்டுள்ள இவ்வேறுபாடுகள் ழகர, ளகர ஒலிகளின் மயக்கத் தால் நிகழ்ந்தவையாகும். இதனைச் சில வட்டார வழக்கு எனவும் கொள்ளலாம்.

ற்று, ட்டு, ற, ர—ஒலி ஒப்புமை

" அம்பி **னாற்றுதும்** என்றகல் குன்றின்மேல்"[106]

வேறு : " அம்பி **னாட்டுதும்** என்றகல் குன்றின்மேல்"

" அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்"[107]

---

101. பாலகாண்டம். 2-13. 102. குறள் - 1040, பரிமேலழகரும் காளிங்கரும் கொண்டவை. 103. சீவகசிந்தாமணி-20.
104. தொல். செய்யுளியல்-94, பேராசிரியர் உரை.
105. கலித்தொகை. 41-12 106. பாலகாண்டம், 1-3,
107. குறள் - 78.

வேறு : " அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பார்கண்"

" நல்லா றெனப்படுவது யாதெனில்" [108]

வேறு : " நல்லா ரெனப்படுவது யாதெனின்"

இவற்றுள் தோன்றிய ற்று-ட்டு வேறுபாடும், ரகர, றகர வேறு பாடும் ஒலி ஒப்புமையால் நிகழ்ந்தவையாகும்.

பிற ஒலிஒப்புமை

ஓடியதுணர்தலும் — ஊடியதுணர்தலும் (சிறுபாணா-214)

மாசறக் கழீஇய — மாசறக்கெழீஇய (குறுந் - 13)

அளவைச் செறிதொடி — அளவைச்சிறுதொடி (குறுந்-379)

ஒருவர் சொல்ல ஒருவர் எழுதும் போது ஒலி ஒன்றுபோல இருக்கும் தன்மையால் சுவடிகளில் இவ்வாறு பலவகை வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

ஆ. தற்செயலாக வேறுபாடு நிகழ்தல்

ஆசிரியரே எழுதியோ ஆசிரியர் சொல்லப் பிறர் எழுதியோ சுவடிகள் உருவாகின்றன. அந்நூல்களைக் கற்க விரும்பியவர்கள் சுவடிகளைப் பெற்றுப் படியெடுத்துக் கொண்டு படிக்க வேண்டிய நிலை இருந்தபோது படியெடுக்கும் பணி நடைபெற்றது. தங்களுக்கென சுவடிகளைப் படியெடுக்கும்போதும் சில வேறு பாடுகள் தோன்ற வாய்ப்பு உண்டு. ஓர் ஏட்டைப் பார்த்து எழுதும் போது எழுதுபவரின் பார்வை விரைந்து இரண்டு பணி யாற்ற வேண்டியுள்ளது. மூல ஏட்டையும் தாம் எழுதும் ஏட்டையும் மாறி மாறிப் பார்க்க வேண்டியிருக்கிறது. இதனால் பார்வை வரிகளின் மீது மாறுபட்டுச் செல்லக்கூடும். அதனால் பல சொற்கள் அல்லது அடி விடுபட நேரலாம். சோர்வாலும் வேற்று நினைவுகளாலும் கைத்தவறுகள் நிகழலாம். இத்தவறுகளால் தோன்றும் வேறுபாடுகளில் விடுகைகளும் மிகைகளும் குறிப்பிடத் தக்கவையாகும். பிற பொதுவானவை.

விடுகை — முழுஅடிவிடுகை

" படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
மறப்பரும் பணைத்தோள் மரீஇத்
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே" [109]

---

108. குறள் - 324. 109. சங்க இலக்கியம், 1370.

வேறு : " படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே"[110]

உ. வே சா. பதிப்பில் இடையடி இல்லை. அவ்வாறே பதவுரையும் எழுதப்பட்டுள்ளது. அவருக்குக் கிடைத்த சுவடிகளில் இல்லாத அவ்விடையடி ஒரு சுவடியில் கிடைத்து சங்க இலக்கியம் என்னும் நூலில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. சில சுவடிகளில் இல்லாத நிலை தற்செயலாக நிகழ்ந்த விடுகையேயாகும்.

சாரியை, எழுத்து விடுகை

" ஓங்குவரை **யடுக்கத்துப்** பாய்ந்துயிர் செகுக்கும்"[111]

வேறு : " ஓங்குவரை **யடுக்கம்** பாய்ந்துயிர் செகுக்கும்"

இவ்வேறுபாட்டில் அத்துச் சாரியை தற்செயலாக விடுபட்டதாகும்.

கொம்பு, கால், எழுத்து, சொல் விடுகை

" சொலத்திக ழிகபரத்தை **வேண்டியே** தொல்லோர்
கேட்க"[112]

வேறு : " சொலத்திக ழிகப ரத்தை **வேண்டிய** தொல்லோர்
கேட்க"

" உயிரும் **உயிர்மெய்யும்** வல்லினமும்"[113]

வேறு : " உயிரும் **மெய்யும்** வல்லினமும்"

இவற்றுள் முறையே கொம்பும் உயிர் என்னும் சொல்லும் விடுபட்டன.

பாடல் விடுகை

" நேரே யெனக்கிளைய நெடுவீமன் காணீரோ"

" ஆர்க்கு மிகுந்தழக னர்ச்சுனரைக் காணீரோ"

" நாட்டுப் பரிநகுலன் நாரணரை... காணீரோ"

" வீடுவை குந்தமதில் வேத சகாதேவன்
..................................சொல்வீரோ"[114]

தம்பியரைப் பிரிந்த தருமனின் புலம்பல் கூற்றாக வரும் இப்பாடல்கள் முறையாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. ஆனால்

110. குறுந்தொகை. 266.
111. தொல் செய்யுள் 23க்கு எடுத்துக்காட்டு.
112. அரும்பொருள் விளக்க நிகணடு-5.
113. தொல். செய்யுள். 2-உரை. 114. ஐவர் அம்மானை, கொச்சகம். 59-62,

நூலகச் சுவடியில் இரண்டாவது பாடலாகிய அருச்சுனனைப் பற்றிய பாடல் இல்லை.[115]. இவ்வேறுபாடுகள் அனைத்தும் ஏடு எழுதினோரால் தற்செயலாக ஏற்பட்ட விடுகைகளாகும்.

மிகை : தற்செயலாக விடுகைகள் நிகழ்ந்துள்ள தன்மை போலவே கால், கொம்பு. எழுத்து, உருபு ஆகியவற்றின் மிகைகளும் தற்செயலாக நிகழ்ந்துள்ளன. இம் மிகைகளால் பொருள் வேறு பாடுகளும் தோன்றுகின்றன. சான்றாக,

கொம்பு, கால் — மிகை

" எழில் நகை **கண்டுநின்** திருவடி தொழுகோம்"[116]

வேறு : " எழில் நகை **கொண்டுநின்** திருவடி தொழுகோம்"

இவ்வடிகள், காலும், கொம்பும் மிகைப்பட எழுதப்பட எழுதப் பட்டு வேறுபாடுகள் தோன்றியுள்ளன என்பதைச் சுட்டுகின்றன.

உருபு மிகை

" குன்ற நாடன் உறீஇய **நோயே**"[117]

வேறு : " குன்ற நாடன் இறீஇய **நோய்க்கே**"

" ஆடிப்பாவை போல, மேவனசெய்யும்" [118]

வேறு : " **ஆடியிற்பாவை** போல, மேவன செய்யும்"

" **ஆடியுட்பாவை** போல, மேவன செய்யும்"

நோயே — நோய்க்கே; ஆடிப்பாவை — ஆடியுட்பாவை — ஆடியிற் பாவை என்பனவற்றுள் கு என்னும் நான்கன் உருபும், உள், இல் என்னும் ஏழன் உருபுகளும் மிகையாயின.

எழுத்து மிகை

" திருவிளையாடற் பயகர மாலையைச் செப்பிடவே"[119]

வேறு : " திருவிளை யாடற் பயங்கர மாலையைச் செப்பிடவே"

இதனுள் ஙகர ஒற்று மிகையாகி வேறுபாடாயிற்று.

இ. தெரிந்து செய்யும் வேறுபாடுகள்

மூலச்சுவடியிலிருந்து படியெடுக்கும்போது பல வகை வேறு பாடுகள் தோன்றியுள்ளன. அவற்றுள் சில புதிய **சேர்க்கைகளும்**

115. சுவடி எண். டி. 2740.
116. திருவாசகம், 366.
117. ஐங்குறு. 246.
118. குறுந்தொகை. 8.
119. சுவடி-டி. 2227,

திருத்தங்களும் படியெடுப்போரால் செய்யப்பட்டுள்ளன என்பதற்கும் சான்றுகள் கிடைக்கின்றன.

இடைச்செருகல்

> " தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனவொருவார்
> நிலையாமை கண்டவர் போ னின்று"[120]

இவ்வெண்பா ஓரிரு சுவடிகளில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. பிற சுவடிகளில் இல்லை.

சிலப்பதிகாரத்தில் இடைச் செருகல் : மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டுச் சிலப்பதிகார மூலப்பிரதியில் மட்டும்,

> " திருவின் செல்வியொடு பெருநில மடந்தையை
> ....
> எண்ணுவரம் பறியா விசையொடு சிறந்த"

என்னும் பதின்மூன்று அடிகள் கொண்ட பகுதி மனையறம்படுத்த காதையின் உரைத் தொடக்கத்தில் எழுதப்பட்டுள்ளது.[121]

சீவகசிந்தாமணியில் இடைச் செருகல் : சீவகசிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம் 34-ஆம் பாடலின்பின் 'என்றவனுரைப்பக் கேட்டே' எனவும் 'சேட்டிளம் பரிதிபோம்' எனவும் தொடங்கும் இருபாடல்கள் இருந்துள்ளன. அவை பயிலவழங்கா என்று உரை கூறாது விடுத்துள்ளார் நச்சினார்க்கினியர். இச்செய்திகள் சுவடிகளுள் **இடைச் செருகல்கள்** பல நிகழ்ந்துள்ளன என்பதை உணர்த்துகின்றன. இவ்விடைச் செருகல்கள் மூலநூலில் உள்ள சுருங்கிய செய்திகளுக்கு மேலும் விளக்கம் தரும் நோக்கத்தோடு நிகழ்ந்துள்ளன என்பதையும் உரையாசிரியர் கூற்று புலப்படுத்துகிறது. சான்றாக, 'கைகட்டி யிவனையுய்த்தால்'[122] என்னும் தொடரிலுள்ள 'கைகட்டி' என்பதை விளக்க, கட்டி என்று தொடங்கும் பாடலைக் கந்தியார் செய்துள்ளதாகக் குறிப்பிடும் நச்சினார்க்கினியரின் விளக்கத்தைச் கூறலாம்.[123]

சூடாமணி நிகண்டில் இடைச்செருகல் : சூடாமணி நிகண்டு என்னும் நூலின் சுவடியில் கூறப்பெறாத ஒரு சொல் பல்பொருட் பெயர்களையெல்லாம் தொகுத்து எதுகை முறை பற்றிச்

---

120. சிலப்பதிகாரம்-2 : இறுதிவெண்பா.
121. ஷை. அடிக்குறிப்பு. 122. சீவகசிந்தாமணி - 1089.
123. சீவகந்தாமணி - 1089 - உரை.

செய்யுட்களை இயற்றி, அவற்றை அந்நூலின் இடையிடையே கோத்துச் சுமார் அறுநூறு செய்யுட்களைக் கொண்ட நூலாக, யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சங்கத்தார் வாயிலாக, 1842 இல் வெளியிட்டுள்ளனர்.[124]

கதை சொல்லுவதன் மூலம் இடைச்செருகல் : சுப்பையர் என்பவர் இயற்றிய மயில்ராவணன் சரித்திரக் கீர்த்தனங்களை உத்தமதானபுரம் லிங்கப்பையரின் குமாரர்கள் பாடிப்பொருள் சொல்லி வந்தனர். இடையிடையே செய்திகளைச் சொல்லிப் பின் கீர்த்தனங்களைப் பாடினால் மேலும் சுவைக்கும் என்று அவர்கள் கருதினார்கள். தங்கள் விருப்பத்தை மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களிடம் கூறினார்கள். பிள்ளையவர்கள் அச்சரித்திரத்தை முழுமையாகக் கேட்டு நூறு செய்யுட்களாகப் பாடித் தந்தார்கள். லிங்கப்பையரின் குமாரர்கள் கீர்த்தனங்களோடு இடையிடையே அச்செய்யுட்களையும் சொல்லிக் கதை நிகழ்த்தி வந்தார்கள்.[125]

இச்செய்தி இடைச் செருகல் ஏற்படும் சூழலைப் புலப்படுத்துகிறது.

திருத்தம் சான்றோர் கூற்று : திவாகர நிகண்டின் சூத்திரங்களை அகராதி வரிசையில் அமைத்துப் பதிப்பித்துள்ளனர்.

> "இம்முறை பதிப்பித்தோர் தாமாகவே வகுத்துக் கொண்டதென எண்ணுதற்கிடமில்லை. ஏனெனின் இன்றைக்கு 229 வருடங்கட்கு முன்னர் (கொல்லம்-877ல்) எழுதப் பெற்ற ஏட்டுப் பிரதியில் இம்முறையே காணப்படுகிறது......இம்முறைதானும் பிரதிகடோறும் சிற்சில வேறுபாடுகளுடன் உள்ளது"[126]

தனிச்செய்யுட் சிந்தாமணியின் பாடல்கள் பெரும்பான்மையும் கர்ணபரம்பரைபற்றி வந்தவையாதலின் அவை பல்லோர் வாய்பட்டு வெளிவருங்கால் உண்மையுருமாறியும், வெவ்வேறான கதைக்கூறுகளை யுடையனவாகவும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.[130]

இவ்வுண்மைகள் சுவடிகளில் திருத்தங்கள் பல தெரிந்தே செய்யப் பெற்றுள்ளன என்பதைப்புலப்படுத்துகின்றன. இவ்வாறான சேர்க்கை, திருத்தம் ஆகிய இரு நிலைகளுக்கும் பாடலடிகள் சிலவற்றைச் சான்று காட்டலாம்.

---

124. அரும்பொருள் விளக்கநிண்டு, முன்னுரை - பக். 7.
125. என் சரித்திரம், பக். 31-32.
126. அரும்பொருள் விளக்க நிகண்டு, முன்னுரை. பக்-2.
127. தனிச் செய்யுட் சிந்தாமணி, முகவுரை.

சேர்க்கை—சொற்கள் சேர்த்தல் : ''வெண்பாட்டீற்றடி முச்சீர்த் தாகும்''[128] என்னும் நூற்பாவுக்கு உரை கூறிய பேராசிரியர்,

> '' அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
> நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
> கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
> சுட்டாலும் வெண்மை தரும்''

என முச்சீரடி இடையும் வந்ததால் வெண்பாவினுள் எனின்' முச்சீர்த்து என்னாது, ஆகும் என்று ஆக்கங்கொடுத்துக் கூறினமை யான் ..இடையுஞ் சிறுபான்மை வருமெனக் கொள்க' என்று விளக்கங்கொடுத்தார். அவர் காட்டிய மூதுரைப்பாடல் (4) வெண்பாவாதலின் ''இடையே முச்சீரடி கண்டு மயங்கிய பிற்காலத் தார், கெட்டாலும் என்பதைத் தனிச்சீராக்கி, 'தான்மிக்க வெண்மைதரும்' என இருசொற்கள் மிகையாகப் பெய்து வெண்பா வை வச் சீர்ப்படுத்திவிட்டனர்.''[129]

திருத்தம் : சுவடியில் உள்ளவற்றைப் பிரித்து எழுதி எளிமைப் படுத்துவதாகக் கருதியும், சிறந்த சொற்களாக அமைக்கவேண்டும் என்ற நோக்கத்திலும், எளிய சொற்களாக மாற்ற நினைத்தும் பலவகையான திருத்தங்கள் சுவடிகளில் செய்யப்பட்டுள்ளன.

> ''ஆசிரியர் வழிக் கேட்டுக் கற்றதை எழுதி வைக்கப் புகுந்த காலத்தே சில புதுக்கலும் திருத்தலும் விடுதலும் நேர்ந்திருக்கக் கூடும். இதனாலேயே மூலபாடங்களிலும் உரைகளிலும் சிற்சில வேறுபாடுகள் காணலாயின.''[130]

என்னும் கருத்தும் சுவடிகளில் திருத்தங்கள் பல நிகழ்ந்துள்ளன என்பதை உறுதிப் படுத்தும். இத்திருத்த முறைகளையும் சில சான்றுடன் விளக்கலாம்.

பிரிப்பதாக எண்ணித் திருத்தியவை

''நெடுவெண்ணிலா—**வேனல்** பூத்த மராம் கோதையோடும்''[131]

வேறு : ''நெடுவெண்ணிலா—**ஏனல்** பூத்த மராம் கோதையோடும்''

சுட்டப்பெற்றுள்ள இவ்வேறுபாடு, பிரித்து எழுதுவதாக எண்ணிச் சுவடி எழுதியவர் செய்தது ஆகலாம். இவற்றுள் வேனல்

128. தொல். செய்யுள், 72.
129. தொல். செய்யுள், 72 அடிக்குறிப்பு.
130. சொல்புதிது சுவைபுதிது, பக்.1. 131. தேவாரம்—2725.

—ஏனல் என்பதில் வகரம் உடம்படுமெய்யெனக்கொண்டு ஏனல் பூத்த என்று பிரிக்கப்பட்டது. ஏனல்—தினை ஆதலின் மராமரம் வேனிலில் பூத்தது என்பதனால் வேனல் பிரிக்கப்படவேண்டிய தன்று.

பிரித்தலில் வேறு பிழைகள்

"இடையும் இறுதியும் மேலோதியவ**ாற்றான் நேரசையா** மென்பது"[132]

வேறு : "இடையும் இறுதியும் மேலோதியவ**ாற்றானே யசையா** மென்பது"[133]

"வந்தார் தேசத்திலுள்ள **மகாகோடி** ராசாக்கள்"

வேறு : "வந்தார் தேசத்திலுள்ள **மகரக்கொடி** ராசாக்கள்"

ஓதியவாற்**றா னே**ரசையாம் என்றிருந்திருக்கக்கூடும். வாற்றானே என்று பிரிக்கப்பட்டது. ரகரம் பொருந்தவில்லையென விட்டு அசையாம் எனக் கொள்ளப்பட்டுள்ளது. மகாகோடி என்பதில் காலினை ரகரமாகக் கொள்ளப் பொருள் பொருந்துவதுபோலக் காணப்பட்டதால் ககரஒற்று சேர்த்துப் புணர்த்தப்பட்டது. இவை பிரித்து எளிமைப்படுத்த வேண்டுமென்று கருதிய முயற்சியினால் ஏற்பட்ட வேறுபாடுகளாகக்கூடும்.

தவறு என்று கருதித் திருத்தியவை

"மகளிடத்தில் **நண்ணா** நிற்ப"[134]

வேறு : "மகளிடத்தில் **நன்றாய்** நிற்ப"

"உசிதமதா யன்பா **லேத்த**"[135]

வேறு : "உசிதமதா யன்பா **லேற்ற**"

"தூங்குசிறை யன்னந் துயில்வதியுஞ் **சோணாட்டே**"[136]

வேறு : "தூங்குசிறை யன்னந் துயில்வதியுஞ் **சோர நாட்டே**"

இவற்றுள் தவறாக எழுதப்பட்டுள்ளதாகக் கருதி, நண்ணா என்பது நன்றாய் எனவும், ஏத்த என்பது ஏற்ற எனவும் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. சோணாட்டே என்பதில் காலினை ரகர மாகக் கொண்டதால், நாடு என்பது தவறாக ணாடு என்று எழுதப் பட்டுள்ளது என்று எண்ணவேண்டிய நிலை ஏற்பட்டது. அதுநாடு

132. தொல். செய்யுள், 6-உரை. 133. அல்லிகதை-வரி 3105.
134. கோலாசல...சரிதம்-772. 135. ஷை. 795.
136. முதுமொழி வெண்பாயிரம்-50.

எனத்திருத்தப்பட்டது. இவை சிறந்த சொற்களால் அமைக்க வேண்டும் என்று கருதிச்செய்த திருத்தங்களாகத் தோன்றுகின்றன.

எளிமையாக்க எண்ணிச் செய்தவை

"**துகளொடும்** பொருளொடும் புணர்ந்தன் றாயிற்
செவியுறைச் செய்யு ளதுவென மொழிப"[137]

வேறு : "**புகழொடும்** பொருளொடும் புணர்ந்தன் றாயிற்..."

"ஏர்ப ரந்தவய னீர்பரந்த **செறுவின்**"[138]

வேறு : "ஏர்ப ரந்தவய னீர்பரந்த **வயலின்**"

இவ்வடிகளில், கடின சொற்களை எளிமையாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு துகள் புகழாகவும், செறு—வயலாகவும், திருத்தி எழுதப்பட்டுள்ளன என்று எண்ணமுடிகிறது.

ஈ. குழப்பம்

'பொருடடொகுதி' என்ற சுவடித்தொடர்,
பொருட்டொகுதி, போருட்டொகுதி
பேரர்உட்டொகுதி, பேர்அருட்டொகுதி
பேரருட்டோர்குதி, போருட்டோர்குதி
பொருட்டோர்குதி—எனப் பலவாறாகப் பொருள் தரும் நிலையில் மயக்கம் ஏற்பட்டுள்ளது.[139]

"சரகத்தைச் சாகமென்றும், அளபை அன்பென்றும், இதர விதரத்தை இதாவிதாவென்றும், திகந்தராளத்தைத் திகந்தாரளமென்றும், மென்மையை மேன்மையென்றும், தபுதார நிலையைத் தபுநரா நிலையென்றும், மூதலவன் என்பதை முதலவன் என்றும் இன்னும் பலவாறாக மயங்கினோர் பெயர் பெற்ற வித்துவான்களே"[140]

என்பர் சி.வை. தாமோதரம்பிள்ளை.

"இதுகொம்பு இதுசுழி என்று வேறுபிரித்து அறியமுடியாது. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியே யிராது. ரகரத்துக்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது"[141]

என்று கூறுவர் உ.வே.சா.

"யானை நாதத்தில் தோற்றுதலின் அதற்கு வணங்குதல்
இயல்பு"[142]

---

137. தொல். செய்யுள்-128. 138. புறநானூறு-338.
139. தொல். பொருள், பதிப்புரை, பக். 8.
140. ஷை. பக். 8. 141. என் சரித்திரம், பக். 768.
142. சீவகசிந்தாமணி, 743, உரை.

என்னும் வாக்கியம் பல சுவடிகளில் நாகத்தில் என்று காணப்பட்டதால் நாகமா, நரகமா என்று பலவாறு சிந்திக்க நேர்ந்தது என்னும் வரலாறு சுவடிகளில் குழப்பம் நிகழ்தற்குச் சிறந்த சான்றாகும்.[143]

சரபம்—சாபமாகவும், சரடு—சாடு ஆகவும், தரன்—தான் ஆகவும், குருதி—குந்தியாகவும் மாறி மயங்கிய நிலையும் காணப்படுகிறது.[144]

மணிமேகலையில், எட்டி குமரனிருந்தோன்றன்னை என்பது எட்டிகுமானிருந்தோன்றன்னை எனவும், ஆறறி யந்தணர் என்பது ஆற்றியந்தணர் எனவும் பதிப்பிக்கப்பட்டன என்பர்.[145]

''பிரதிசெய்து வந்தவர்கள் ஓரெழுத்தை மற்றோரெழுத்தாகக் கொண்டு எழுதிவிட்டதனாலும், தெரியாத இடங்களில் தாமே ஊகித்துப் புதியனவாக எழுதிச் சேர்த்துவிட்டமையாலும் உண்டான மாறுபாடுகள் அளவில. பழம் பிரதிகளில் ஈகார ஏகாரங்களின் பின்னர் யகர வொற்று எழுதப்பட்டிருந்தது...மகர ழகரங்கள், ழகரளகரங்கள், ககர சகர தகரங்கள், ஙந் நகர றன்ன கரங்கள், லகரவகரங்கள், ரகரறகரங்கள் என்பவை ஒன்றனுக் கொன்று மாறாக எழுதப்பட்டிருக்கும். டு, ரு, கு என்பனவும், அ, கு. சு என்ற மூன்றும் தமக்குள் வேற்றுமை தெரியாதபடியிருந்தன. ற்ற எனவருமிடங்களில் த்த என்ற பாடம் காணப் பட்டது''[146] என்ற செய்தி சுவடி எழுத்துகளில் காணப்படும் குழப்பங்களை எடுத்துக்காட்டுகிறது.

இச்செய்திகள் சுவடிகளில் காணப்படும் புள்ளியில்லா நிலை, கால், கொம்பு ஆகிய எழுத்துத்தன்மை, பிறவாகிய கையெழுத்து வேறுபாடுகள் ஆகியவற்றால் பலவகைக் குழப்பங்கள் தோன்றி, எழுதுவதில் பல வேறுபாடுகளை உண்டாக்கியுள்ளன என்பதைப் புலப்படுத்துகின்றன. இவ்வாறான குழப்பங்களால் நிகழ்ந்துள்ள வேறுபாடுகளுக்குச் சில சான்றுகளைக் காட்டலாம்.

புள்ளியின்மையால் குழப்பம்

பாடம்	வேறுபாடு	
துயிலவர் மறந்தனர்	—துயில்வர மறந்தனர்	(குறுந். 254)
சுக்ரீபனண்டகடாகம்	—சுக்ரீபன்ணட கடாகம்	(கையேடு பக். 37)

143. சீவகசிந்தாமணிபக். 768.
144. என் சரித்திரம், பக். 768. 145. ஷை. பக். 1019.
146. குறுந்தொகை-முதற்பதிப்பின் முகவுரை, பக். 20.

பாரநெடுங்கொண்டல் —பார்நெடுங்கொண்டல் (” பக். 36)
மணமுழவம் ததும்ப —மண்முழவம் ததும்ப (தேவாரம். 2053)

சுவடிகளில் புள்ளியின்மையால் ஏற்பட்ட இவ்வேறுபாடுகள் ஓலைச் சுவடியிலிருந்து தாள் சுவடிகளில்பெயர்த்து எழுதிய வர்களாலும் ஏற்பட்டுள்ளது. அச்சிட்டவர்களும் இவற்றை வேறு பாடுகளாகக் காட்டியுள்ளனர். அடுத்துவரும் குழப்ப வகை களுக்கும் இக்கருத்து பொருந்தும்.

காலும் ரகரமும் செய்யும் குழப்பம்

கழனி மாத்து —கழனி மரத்து (குறுந். 8)
வயாவிடத்து —வியர்விடத்து (கலி. 40-22)
சோராமனேரே —சேர்ராமன் நேரே (திவாகரம்-1)
வீரரதி கோபங்கொண்டு —வீராதி கோபங்கொண்டு (அல்லி. 3105)

கொம்பினால் குழப்பம்

சாற்றுவேன்மன் —சாற்று வென்மன் (குறள்-1212)
புலப்பேன்கொல் —புலப்பென்கொல் (1267)
பொற்றிரு வேட்களம் —போற்றிருவேட்களம் (தேவாரம்-5663)

அகர, இகரக் குழப்பம் (உயிர், உயிர்மெய்களில்)

நீர்மல்கச் சாகற்பின் —நீர்மல்கச் சாகிற்பின் (குறள்-780)
நோயளவன்றிப்படும் —நோயளவின்றிப்படும் (” -947)
நாட்டின் எழில்காட்ட—நாட்டின் எழில்காட்டி (பாலகாண்-10-22)

க-ச-த க்களில் குழப்பம்

தன்ஊன்பெருக்கற்கு —நன்ஊன் பெருத்தற்கு (குறள். 251)
கடிதோச்சி மெல்ல —கடிதோக்கி மெல்ல (குறள். 562)
விளங்குஞ் சிறுநுதல் —விளங்குந் திருநுதல் (குறள்-129)
பசலையாகி —பகலையாகி (குறள்-381)

த-ந க்களில் குழப்பம்

மூவகை புணர்ந்தும் —மூவகை புணர்த்தும் (தொல். செய். 12)
மகிழ்ந நின்றேரே —மகிழ்ந்த நின்றேரே (ஐங்குறு. 62)
நின்பரத்தை மார்பே —நின்பரந்த மார்பே (ஐங்குறு. 84)

ப-ம-ய க்களில் குழப்பம்

படுபதம் பார்க்கும் —படுமதம் பார்க்கும் (குறுந். 6)
புகழில்லை மெய்யாமை —புகழில்லை பொய்யாமை (குறள்-296)
மாற்றாரை மாற்றும் படை —மாற்றாரையாற்றும் படை (குறள்-985)

ர-ற க்களில் குழப்பம்

பெரிய கூறி	—பெறியகூறி (குறுந். 248)
பயிர்ப்பெடையகவும்	—பயிற்பெடையகவும் (ஐங்கு-60)
துறைவற்கினிய	—துறைவர்க்கினிய (ஐங்கு-60)

ல-வ க்களில் குழப்பம்

புணையுமாரிவ்வென	— புணையுமாரில்லென	(குறுந். 247)
அதுவரலன்மையோ	— அதுவரவன்மையோ	(” 248)
சாரலவர் நாட்டு	— சாரலலர் நாட்டு	(” 249)

ழகர, ளகரங்களில் குழப்பம்

கற்கொண்டழித்து	— கற்கொண்டளித்து (புறம்-383)
விளைதினைக் கடீஇயர்	— விழைதினைக் கடீஇயர் (குறுந்-141)
வேலாள் முகத்தகளிறு	— வேலாழ் முகத்த களிறு (குறள்-500)

ளகர, ணகரங்களில் குழப்பம்

பெறாள் என	— பெறான் என	(தொல் பொருள்-16)
இராநாளறியா	— இராநன்றறியா	(ஐங்குறு-56)
பூகவனம் பொழில்	— பூகவளம் பொழில்	(தேவாரம்-37)
நுதலாளையும்	— நுதலானையும்	(,, 1261)

னகர, ணகரங்களில் குழப்பம்

நாண்மலர் மயக்கி	— நன்மலர் மயக்கி (குறுந்-381)
பொன்றுந் துணையும் புகழ்	— பொன்றுந்தனையும் புகழ் (குறள்-561)
ஊனைக் குறித்த	— ஊணைக் குறித்த (குறள்-1013)

ன — நக்களில் குழப்பம்

ஆர்ந்தன குவளை	— ஆர்ந்தநங்குவளை	(குறுந்-13)
நன்னிலையர் ஆவர்	— நந்நிலையர் ஆவர்	(,. 1189)
தந்நேரில்லா	— தன்னேரில்லா	(பாலகா 10-30)

ல — ளக்களில் குழப்பம்

கொல்லா நுலகெனின்	— கொள்ளா துலகெனின் (குறள்-256)
பகல்கொள் விளக்கோடு	— பகல்கொல் விளக்கோடு (ஐங்குறு-56)

உ. நடையால் வேறுபாடு நிகழ்தல்

சில சிற்றிலக்கியச் சுவடிகள், மருத்துவம், சோதிடம் ஆகிய சுவடிகளில் பேச்சுநடைச் சொற்களும் பிறமொழிச் சொற்களும்

அமைந்து பலவாறாக வடிவம் பெற்றுள்ளன. தமிழ்ச் சுவடியைப் படியெடுப்போர் சிலர் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய பிற மொழிகளைத் தாய்மொழியாகப் பெற்றவர்களாக இருந்துள்ளனர். பேச்சுநடை, வேற்று மொழி என்ற இரண்டு நிலையிலும் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளை நடையால் நிகழ்ந்தவை என்று கொண்டு அவற்றிற்குச் சில சான்றுகளைக் காட்டலாம். ஒரே சுவடியில் பல வகைச் சொற்களுக்குரிய சான்றுகள் கிடைக்கின்றன. எனவே பேச்சு நடைச்சொற்களுக்கு நீலியட்சகானம் என்னும் சுவடியும், செஞ்சிராசாக்கள் கைபீது என்னும் சுவடியும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

பேச்சு நடைச் சொற்கள் — (நீலி யட்ச கானம்)

அப்புறம் போனதே யவமதி யென்பாள்	(ஏடு-8)
ஒத்தையாய்த் திருவாலஞ் சித்திர முத்தாளே	(,, -9)
கொண்ணுதின் பீரென்று குடுத்தனன் சிலவு	(,, -6)
நெத்திக்கு நீறிட்டு	(,,)
பந்து சினங்களும் சிவிகையாதியர்	(,, 13)

சுவடிகளில் பரவலாகக் காணப்படும் சொற்களுள் சில

அதற்கு இருபிரமும்; எழுதிமுகிந்தது
காலயுத்திவருஷம்; குருவே தொணை; கேள்க்க
கோர்வையாக; கோலாறு; சிரியோர்
சொல்க்கேளான்; தலைப்பேட்டில்; பதனோராவது நிகண்டு
பிரைனிலவு; வயர்; வயறு — வைய்த்திருந்தான்

"தறயில் பன்னீர் தெளித்து—சந்தணத்தால் கோலமிட்டு"[147]

"அடியிணை அன்ம்புடனே தொழும்"[148]

"சிங்காரச் சிங்கனும்ந் தோன்றினான்"[149]

"கோறோசனம் மாட்டின் வயத்திலே பிறக்கும்;...சேத்திலே பிறக்கும்;...காட்டுமிறுகத்தின் வாலில்;......மரத்திலும் மத்தும் துற்க்கந்தமான விடத்திலும் பிறக்கும்;...சிங்கத்தினிடக் கெவியிலே புகுந்தவன் பலன்பெத்தாற்போல"[150]

வழக்காற்றில் உள்ள சில ஒலிப்புமுறை, சுவடிகளிலும் வடிவம் பெற்று விட்டன. இவை பெரும்பாலும் திண்ணைப் பள்ளிக்கல்வியோடு படிப்பை முடித்துக்கொண்டவர்களால் எழுதப்பட்டவை

147. கௌளக்குறிவஞ்சி, ஏடு-15, 148. ஷை, ஏடு-16.
149. ஷை, ஏடு-17. 150. நீதிவெண்பா. பா-1-2 உரை.

யாகும். நீதிநூல்கள், சில சிற்றிலக்கியங்கள், சோதிடநூல்கள், அனுபவவைத்திய நூல்கள் ஆகிய சிறு வகைச்சுவடிகள் மட்டுமே இவ்வாறு, மிகுதியான பிழைகளோடு எழுதப்பட்டுள்ளன. எனவே தான் இம்முறை தொடக்கக்கல்வி மட்டுமே உள்ளவர்களால் எழுதப்பட்டது என்று நினைக்கமுடிகிறது.

வேற்றுமொழி : தமிழ்மொழியல்லாத பிறமொழியைத் தாய் மொழியாய் உடையவர்கள் தமிழ் மொழியை ஓரளவு கற்றபின், தங்களுக்காகவோ பிறருக்காகவோ சுவடி எழுதத் தொடங்கி யுள்ளனர். நாட்டுப்புறப் பாடல்கள் சிலவற்றை வாய்மொழி யாகக் கற்று அவற்றைச் சுவடிகளில் எழுதிவைத்துள்ளனர். இவற்றுள் பலவகையான வேற்றுமொழிச் சொற்கள் கலந்துவிட்ட தோடு தமிழ்ச் சொற்களின் அமைப்பும் அவர்களின் தாய்மொழிச் சாயலைப் பெற்றுள்ளன.

'கொங்கண மூர்த்தியாரருளிச் செய்த கற்பசூத்திரம் முற்றிற்று. 1848ஆம் வருஷம் ஆடி மாதம் 15ஆம் தேதி பல்லாரியில் எழுதி நிறைந்தது'[151]

வேற்றுமொழிச் சொற்கள் : (செஞ்சி ராசாக்கள் கைபீது - பேச்சு நடைச் சொற்களுடன்)

வெள்ளைநிசான் கறுப்புநிசான் மீதியுள்ள சிகப்புநிசான் — (வரி 119)

ஒட்டடையும் குலாறுவண்டி ஒளிபிறவே றவுத்தவர்களும் — (வரி 123)

தேசி அலங்கரித்து சீக்கிரமாய்க் கொண்டு வந்தார் — (,, 152)

புரவிக்கி றுத்திராட்சம் பூட்டுமெண்ணார் போர்வேந்தர் — (வரி 159)

இப்படிப் பல தொடர்கள், வேற்றுமொழிச் சொற்களால் ஆகித் தமிழ்மொழியில் இரண்டறக் கலந்துள்ளன.

---

151. கொங்கணர் கற்பசூத்திரம் - ஆர் - 2289.

6. மூலபாட ஆய்வு

முன்னுரை : மூலபாடம், மூலபாட ஆய்வு, மூலபாட ஆய்வியல் என்பவற்றின் சொற்பொருள், மூலபாட ஆய்வின் தோற்றமும் வளர்ச்சியும், மூலபாட ஆய்வு முறை, மூலபாடத் தேர்வுமுறை என்னும் தலைப்புகளில் இப்பகுதி ஆய்வு செய்கிறது.

அ. சொற்பொருள்

மூலபாடம் : நூலாசிரியர் இயற்றிய உண்மைத் தொடர்களே மூலபாடம் எனப்பெறுகின்றன. அம்மூலபாடம் செய்யுள் நடையாகவோ உரைநடையாகவோ இருக்கலாம். மூலம் என்ற சொல்லாலும் இதனைக்குறிப்பதுண்டு.

தொல் காப்பியம் - மூலம்; புறநானூறு - மூலம்;

நன்னூல் - மூலமும் காண்டிகையுரையும்;

சிலப்பதிகாரம் - மூலமும் அடியார்க்கு நல்லார் உரையும் என்னும் நூல் தலைப்புத் தொடர்கள், நூலாசிரியரின் உண்மைத் தொடர்களை மூலம் என்றே சுட்டுகின்றன.

மூலபாடம் என்பது 'உரையில்லாப் பாடம்' என்று அகராதிகள் கூறுகின்றன. ஆனால் உரையாசிரியர் எழுதிய உரைகளும் மூல பாடம் ஆகின்றன என்பதை அறியமுடிகிறது. நூலாசிரியரின் மூலபாடம் நூற்பாவாகவோ பாடலாகவோ இருக்குமாயின் அவற்றிற்கு உரையாசிரியர்கள் குறிப்புரை, பதவுரை, பொழிப் புரை, விளக்கவுரை என்ற பெயர்களால் விளக்கங்களை எழுதினார் கள். இத்தகு மூலமும் உரையும் எழுதப்பட்ட சுவடிகள் பழுதடைந்த காலத்தும், வேறு சிலருக்குத் தேவைப்பட்ட காலத்தும் வேறுபடிகளாக எழுதப்பெறுகின்றன. இவ்வாறு அச்

சுவடிகள் பல தலைமுறைகளாக வடிவெடுக்கின்றபோது, பிழைகள், சேர்க்கைகள், விடுகைகள் எனப் பல்வேறு மாற்றங்களோடு தோன்றிவிடுகின்றன. உரையாசிரியர்கள் எழுதியவையும் மாற்றம் பெற்றுவிடுகின்றன. உரையாசிரியர்கள் எழுதிய மூல உரை வேறு, சுவடியில் காணப்பெறும் உரைத் தொடர்கள் வேறு என்ற நிலை ஏற்படுகின்றபோது உரையாசிரியர்களால் எழுதப்பட்ட உண்மைத் தொடர்கள் **மூலபாடம்** என்ற பெயரையே பெற்றுவிடுகின்றன.

''முற்றத் துறத்தலாவது - சுற்றந்தானே விட்டமையின் ஒருவாற்றால்
துறந்தாராயினார், நின்ற தம் உடம்பினையுந் துறத்தல்''
என்று உரை கூறிய பரிமேலழகர்,

''முற்றத்துறத்தலாவது - துப்புரவில்லாமையின் ஒருவாற்றால் துறந்தாராயினார் பின் அவற்றை மனத்தால் **துறவாமை** என்று உரைப்பாருமுளர்'' என்று பிறர் உரையை எடுத்துக் காட்டினார். பிறர் உரையாகக் கூறப்பெற்றதில் **துறத்தல்** என்று இருக்க வேண்டுவது, குறட்பாவின் தொடரை நோக்கித் துறவாமை என்று எழுதிவிட்டனர். இது பிழையான பாடமே. இங்கு துறத்தல் என்பதே மூலபாடம் என்று கொண்டு பதிப்பித்துள்ளனர்.[1]

''மிக முதிர்ந்திறும் எல்லைத்தாயகனி
நுகர்வார்க்கு மிகவும் இனிமை **செய்தலின்**'' என்று பல சுவடிகளிலும் காணப்பட்டது. ஒரு சுவடியில் மட்டும் இனிமை **செய்யாமையில்** என்று காணப்பட்டது. செய்யாமையில் என்பதே பொருளமைதியுடைய பாடம் என்று ஏற்று, செய்தலின் என்பதைப் பாடவேறுபாடாகக் காட்டினார்.[2]

இவ்வாறு பிழை ஏற்பட்ட இடங்களில் உரையாசிரியர்களின் தொடர்கள் மூலபாடம் என்ற பெயரைப் பெற்றுவிடுகின்றன. இவற்றால் நூலாசிரியர், உரையாசிரியர் ஆகியோர் கூறிய உண்மைத் தொடர்களே மூலபாடம் என்ற பெயர் பெறுகின்றன என்பதை அறியலாம். ஒருவருடைய உரையில் இவ்வாறு பிழைகள் ஏற்பட்டுக் காணப்படும் வேறுபாடுகளைச் சுவடி வேறுபாடு என்று சுட்டுவர்.[3] அவ்வாறாயின் மூலநூலில் தோன்றும் வேறுபாடுகளும் சுவடிக்குச் சுவடி வேறுபட்டனவேயாகும். ஆனால் மூலநூல்

1. குறள், 1050, பரிமேலழகர் உரை. வை. மு. கோபால கிருஷ்ணமாச்சார்யார் பதிப்பு.
2. குறள், 1306, பரிமேலழகர் உரை, ஷை. பதிப்பு.
3. அடிகளாசிரியர், தொல்காப்பியப் பதிப்பு.

வேறுபாடு உரையாசிரியர்களுக்கு முன்பே ஏற்பட்டுவிட்டமையின் உரையில் காணும் வேறுபாடுகளை இக்காலத்தவர் சுவடி வேறுபாடு என்று சுட்டினர். அது பொருந்துவதாகாது.

> "அப்பால் மூன்று அதிகாரங்களிலும் பிற்காலத்தோரால் செய்யுள், உரை, உதாரணம் என்று இவையெல்லாம் தங்கள் தங்கள் மனம் போனவழியே மாற்றப்பட்டன... தென்தேசப் பிரதிகளில் அலங்காரத்தின் பிற்பகுதி முழுவதும் யாப்பிற் சிலபகுதியும் மூலமும் உரையும் ஒருங்கு பிறழ்ந்து செய்யுட் டொகையோடு மாறிப்போயின"[4]

என்னும் பதிப்பாசிரியர் கூற்று செய்யுளில் மட்டுமன்றி உரையிலும் வேறுபாடுகள் பல தோன்றியுள்ளன என்பதைச் சுட்டுகின்றது.

ஆ. மூலபாட ஆய்வு

நூலாசிரியர், உரையாசிரியர்களின் கூற்றுகளும் தொடர்களும், படியெடுப்போரால் காலந்தோறும் வேறுபட்டுவிடுகின்றன. ஒரே நூலுக்குக் கிடைக்கும் பல சுவடிகளிலும் மூலத் தொடர்கள் வெவ்வேறாக அமைந்து விடுகின்றன. அவற்றில் காணப்பெறும் பலவகைத் தொடர்களையும் ஒப்பிட்டு ஆய்ந்து ஆசிரியரின் மூல பாடம் இதுதான் என்று காண முயற்சி செய்வது **மூலபாட ஆய்வு** எனப்பெறுகிறது. நூல், நூலாசிரியர், நூலின் காலம், நூல் இடம், பொருளமைதி, தொடரமைதி, நடையமைதி, யாப்பமைதி ஆகியவற்றின் பொருத்தத்திற்கு ஏற்ப, ஆசிரியரின் மூலபாடம் இது தான் என்று முடிவு செய்வது அவ்வாய்வின் முடிவாகிறது. அம்முடிவால் நூல் தெளிவான முழுமை பெறுகிறது. அம் முழுமையே அவ்வாய்வின் பயனாகிறது.

> "ஆசிரியரால் இயற்றப்பெற்ற மூலபாடத்தில் பிற்காலத்துப் பிழைகள் உண்டாயின. அவற்றை நீக்கி உண்மை வடிவை நிறுத்துதலே மூலபாட ஆய்வாகிறது."[5]

> "நூலாசிரியர், காலம், படியெழுந்த காலம், காலத்தால் உண்டான வேறுபாடுகள் ஆகியவற்றால் உண்டான மூலத்தின் நிலைபேறு தகுநிலை எனப்படும்"[6]

---

4. வீரசோழியம், பதிப்புரை - பக். 26.
5. Chambers Twentieth Century Dictionary P. 1 396 B and The Random House Dictionary P. 1468 C
6. Encyclopaedia Britannica Vol. 21 P. 918-B.

"முன்னோர் எழுதிய நூல்களின் உண்மையான மூலச்சொற்கள், அவற்றின் முழுத்தன்மை, அதிகாரபூர்வம் ஆகியவற்றைக் கண்டு முடிவு செய்ய மேற்கொள்ளப்படும் அறிவியல் ஆய்வு மூலபாட ஆய்வு எனப்படும்"[7]

"மூலநூலில் ஏற்பட்ட பிழைகளைக் காணும் கண்டுபிடிப்பும், அவற்றை நீக்கும் கலையுமாகிய அறிவியலே மூலபாட ஆய்வு ஆகும்"[8]

என்பன மூலபாட ஆய்வு பற்றிய சில கருத்துகள்.

"வரம்பெலாம் முத்தம் தத்தும் மடையெலாம் பணிலம்மாநீர்...
கரம்பெலாம் செந்தேன் சந்தக் காவெலாம் களிவண்டீட்டம்"[9]

இப்பாடலில் **கரம்பெலாம்** என்னும் சொல் பல சுவடிகளிலும் பதிப்புகளிலும் **கரும்பெலாம்** என்றே காணப்பெறுகிறது. வரம்பு, குரம்பு, பரம்பு என்னும் முதல் மூன்று அடிகளின் முதற்சீர்களை நோக்க, எதுகை நடையமைதியாகக் கரம்பெலாம் என்பதே சிறந்த பாடமாகிறது. இப்பாடமும் சில சுவடிகளிலும், பதிப்புகளிலும் காணப்பெறுகின்றது. மேலும் வரம்பு, மடை, குரம்பு, மேதிக்குழி, பரம்பு, சாலிப்பரப்பு, சந்தக்கா ஆகிய இடப்பெயர்களினிடையே கரும்பு என்னும் பொருட் பெயர் அமைவதிலும் கரம்பு என்னும் இடப் பெயரே பொருத்த முடையாதாகிறது. வரம்பெலாம் முத்தம் முதலான உயர்வு நவிற்சிப் பொருள்களுக்கேற்பக் கரம்பெலாம் செந்தேன் என்பதும் உயர்வு நவிற்சியாகப் பொருந்த' கரும்பெலாம் செந்தேன் என்பது தன்மை நவிற்சியாகவே அமைந்து பிறவற்றோடு பொருந்தாத் தன்மையைப் பெற்றுவிடுகிறது. எனவே சொல்தோன்றும் இடம், பொருள், பாநடை, அணிநலம் ஆகிய பொருத்தங்களுக்கு ஏற்ப ஆசிரியரின் பாடம் இதுவே எனத் தேர்ந்தெடுக்க முடிகிறது.

"மாதர்கள் **கற்பின்** மிக்கார் கோசலை மனத்தையொத்தார்"

"மாதர்கள் **வயதின்** மிக்கார் கோசலை மனத்தையொத்தார்"[10]

இவற்றில் கற்பின், வயதின் என்னும் சொற்களுள் நூலாசிரியர் காலம், நூல்மாந்தர் ஆகிய சிறப்புகளுக்கேற்பக் கற்பின் மிக்கார் என்பதே ஆசிரியரின் பாடமாகக் கொள்ளப்பெறுகிறது. இவை மூலபாட ஆய்வின் வழி அறியப்படும் உண்மை வடிவங்களாகும்.

7. Encyclopaedia Americana Vol. 26.
8. Art and Error P. 2.
9. கம்பராமாயணம், பாலகாண்டம், நாட்டுப்படலம் - 2.
10. ௸ - 12.

இ. மூலபாட ஆய்வியல்

நூலின் அகச் செய்திகள், பலவகையிலும் துணைநிற்கும் புறச் செய்திகள் ஆகியவற்றின் துணைகொண்டு செய்யப்பெறும் மூலபாட ஆய்வினை மேற்கொள்ளும் முறைகள், அவ்வாய்வின் தன்மைகள், அல்லது கொள்கைகள், ஆய்வின் வகைப்பாடுகள், ஆய்வின் முடிவு களைக் காணும் அடிப்படைகள், அம்முடிவுகளின் பயன் ஆகிய வற்றை அறிவதும் அறிவிப்பதுமாகிய அறிவியற் கல்வி அல்லது பயிற்சி **மூலபாட ஆய்வியல்** ஆகிறது.

ஈ. மூலபாட ஆய்வின் தோற்றமும் வளர்ச்சியும்

அ. பொது : ஐரோப்பிய நாடுகளில் பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளிலேயே மூலபாட ஆய்வுக்கலை உருவாகியுள்ளது. ஹிப்ரூ மொழியில் எழுதப்பெற்றுப் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பெற்ற விவிலிய நூலின் மூல பாடங்களை ஆய்ந்தறியும் நோக்கத்திலேயே இக்கலை தோன்றியுள்ளது. அந்த நூலில் இடைக்காலத்தில் ஏற்பட்ட பிழைகளை நீக்கி அதன் உண்மைத் தன்மையை நிலை நிறுத்த இவ்வாய்வு பயன்படுத்தப்பட்டு வளர்ச்சி பெற்றுள்ளது.[11]

அரசு ஆணைகளிலும் சான்றிதழ்களிலும் பிறப்பிக்கப்பெற்ற உண்மைத் தொடர்கள் பிழையின்றி வெளியாகின்றனவா என்பதைக் கண்காணிக்கப் பயன்படுத்திய போது இக்கலையைச் **சாசனவியல்** என்று வழங்கியுள்ளனர். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த **ஜீன் மாபில்லன்** முதலான மௌரிஸ்ட் துறவியர் இச் சாசனவியலை உருவாக்கிப் புனித நூலியல் தொகுப்பு வரிசை ஒன்றினைப் பதிப்பிக்கத் தொடங்கினர். ஆனால் பெல்ஜியம் நாட்டு இயேசு சங்கத்தைச் சேர்ந்த ஜீன் போலண்ட் முதலான அறிஞர்கள் அத்தொகுப்பு வரிசை அதிகார பூர்வமற்ற நூல்களை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப்பெறுகிறது என்று குறை கூறினர். அதற்கு மறுப்பாக மாபில்லன், சாசனவியல் என்ற நூலை எழுதி வெளியிட்டார். 1681 இல் வெளியான அந்நூல் மூலபாட ஆய்வுக் கலையில் வெளியான முதல் நூலும், மிகப்பெரிய அளவிலான நூலும் ஆகும்.[12]

1967இல் வெளியாகியுள்ள ராண்டம் அவுஸ் அகராதி, 1972இல் வெளியிடப்பட்ட பிரிட்டானிகா பேரகராதி ஆகியவற்றாலும்

---

11. Encyclopaedia Americcanna Vol 3. PP. 658-59.
12. மூலபாட ஆய்வியல், பக். 11 - 12.

இக்கலை பற்றிய வரலாற்றினை அறியமுடிகிறது. அவையும் (மிகப் பழமையான) மேனாட்டுச் செய்திகளையே விளக்குகின்றன.

ஆ. நம் நாட்டில் மூலபாட ஆய்வுக்கலை : பூனாவிலுள்ள பண்டார்க்கர் கீழைக்கலை ஆராய்ச்சி நிலையம் 1-4-1919இல் மூல பாட ஆய்வுக்கலை, ஆய்வுப்பதிப்பு ஆகியவற்றைப் பற்றி விரிவான திட்டமொன்றினை வகுத்தது. தொடர்ந்து பதிப்பித்தும் வருகிறது.[13]

பூனா, தக்காணக் கல்லூரியும் இவ்வாய்வினை மேற்கொண்டு பலநூல்களை வெளியிட்டு வருகிறது.

புதுவைப் பிரஞ்சு நிறுவனம் (பாண்டிச்சேரி) இக்கலையின் அடிப்படையில் மிக ஆழ்ந்து ஆய்வுசெய்து, சந்திபிரித்துப் பதிப்பித்தல் முறையையும் மேற்கொண்டு தேவாரப் பண்முறைப் பதிப்பில் ஈடுபட்டுள்ளது. 1984இல் முதற் பகுதியினை 150 பக்க விரிவான முன்னுரையுடன் வெளியிட்டுள்ளது.

இ. தமிழ் நாட்டில் மூலபாட ஆய்வுக்கலை-உரையாசிரியர்கள் : தமிழ் நூல்களைப் பொறுத்தவரை மூலபாட ஆய்வு என்ற தொடர் கையாளப்பெறவில்லையே தவிர, மூலபாட ஆய்வினை உரையாசிரியர்கள் மிக நுட்பமாகக் கையாண்டுள்ளனர். உரிய பாடத்தைக் காரண காரியங்களோடு நிறுவி அதற்கு உரை கண்டுள்ளனர். பிறபாடங்களை மறுத்தும், ஏற்றும் விளக்கம் கூறியுள்ளனர். உரையாசிரியர்கள் தொல்லோர் பாடங்களை ஆய்ந்தறிந்து உரை வகுத்த முறையினை, உடனிருந்து அறிந்த சான்றோர் அவர்களது மூலபாட ஆய்வு முறையினைப் பாராட்டியுள்ளனர். இச்செயல்கள் அனைத்திற்கும் சான்றுகள் கிடைக்கின்றன.

பரிமேலழகரின் மூலபாட ஆய்வுத்திறன் : கந்தி என்பவர் சான்றோர் பாடல்களின் இடையே தம்முடைய சில பாடல்களையும் செருகிவந்துள்ளார். மேலும் எழுத்தின் வடிவத்தால் ஒத்து வரும் சில சொற்கள் பாடியவர்களாலும் எழுதியவர்களாலும் பிழைபட உணர்ந்து பாடப்பெற்றும் எழுதப்பெற்றும் வந்துள்ளன. இவ்வாறு பல்லாற்றானும் பொருந்தாப் பாடங்கள் பல சான்றோர் நூல்களிடையே தோன்றிவிட்டன. அவற்றை நுட்பமாக அறிந்து இடைச் செருகல்களையும் பிழைகளையும் களைந்து, சான்றோர்

13. Maha Bharata, The Bhandarkar Oriental Research Institute, Poona.

பாடிய உண்மைப் பாடங்களை நிறுவி அவற்றிற்கு உரை கண்டார் என்னும் பரிபாடலின் உரைப்பாயிரப்பகுதி, பரிமேலழகரின் மூலபாட ஆய்வின் திறத்திற்குச் சான்றாகிறது.

"பாடிய சான்றோர் பீடுநன்கு உணர
மிகைபடு பொருளை நகைபடு புன்சொலில்
தந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பும்
எழுதினர் பிழைப்பும் எழுத்துரு ஒக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்
ஒருங்குடன் கிடந்த ஒவ்வாப் பாடம்...
மதியின் தகைப்பு விதியுளி யகற்றி
எல்லையில் சிறப்பின் தொல்லோர் பாடிய
அணிதிகழ் பாடத்துத் துணிதரு பொருளைச்
சுருங்கிய உரையின் விளங்கக் காட்டினன்...
பரிமே லழகன் உரிமையின் உணர்ந்தே"[14]

என்பது பரிமேலழகரின் மூலபாட ஆய்வினை எடுத்துக் காட்டிய சான்றோர் கூற்று. பரிமேலழகர் உரிய பாடத்தைத் தேர்ந்து, பிறர்கொண்ட வேறுபாடத்தைச் சுட்டுங்கால் அப்பாடமும் பொருந்தும் என ஏற்றும், அப்பாடம் பொருந்தாதென மறுத்தும் கூறும் இடங்கள் அவர்தம் மூலபாட ஆய்வுக்கு எடுத்துக்காட்டு களாகும்.

'அளவிறந்து - ஆவது போலக் கெடும்' (குறள்-283) என்பது அவர் கொண்டபாடம். 'அளவறிந்து' என்று பாடமோதி, அவர் பயன்கொள்ளும் அளவு அறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடும் என்று உரைப்பாரும் உளர் என்று பிறர் பாடத்தை எடுத்துக் காட்டி பொருந்து மாற்றினைச் சுட்டினார்.

'சிறுமை - பெருமிதம் ஊர்ந்து விடல்' என்று பாடம் கொண்ட பரிமேலழகர், 'விடும் என்று பாடம் ஓதுவாரும் உளர்; முற்றுத் தொடரும் எழுவாய்த் தொடரும் தம்முள் இயையாமையின் அது பாடமன்மைஉணர்க' என்று பிறர் பாடத்தை எடுத்துக் காட்டி மறுக்கிறார். (குறள் - 979)

அடியார்க்கு நல்லார் : "நாவொடு நவிலாது நவைநீர் உகுத்து"[15] என்னும் அடிக்கு நவை-குற்றம், நவநீர் - புதியநீர் என்பாருமுளர் என்று காட்டியுள்ளதும் உரையாசிரியரின் மூலபாட ஆய்வின் திறத்தையே சுட்டும்.

---

14. பரிபாடல் - உரைப்பாயிரம்.
15. சிலப்பதிகாரம், 5;137,

நச்சினார்க்கினியர் : "இதன்பின் என்றவன் சேட்டிளம் என இருகவி கூறுவாருமுளர். அவை பயில வழங்கா"[16] என்னும் நச்சினார்க்கினியர் கூற்று, இடைச் செருகல்களைக் கண்டு விலக்கிய மூலபாட ஆய்வு நெறியின் விளைவாகும்.

சேனாவரையர் : "பெண்டன் கிளவி என்று பாடமோதி அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி என்பாருமுளர்"[17]

> "ஒன்றுவினை மருங்கி னொன்றித் தோன்றும்" என ஒரு சூத்திரமாக உரையாசிரியர் பிரித்தாராலெனின்... அது போலியுரையென்க"[18]

> "சிறுவனை யானை யென்றலும் ஒன்றன்பெயர் ஒன்றற்காதல் ஒப்புமையான் ஆகுபெயரென்பாருமுளர்."[19]

"ஈங்ஙன' மென்று பாடமோதுவாருமுளர்"[20]

என மூலபாடத்தைத் தேர்ந்தெடுத்தபின் பிறபாடங்களைச் சுட்டிக் காட்டினார் சேனாவரையர். இவை முறையே பாடவேறுபாடு கள், நூற்பா அமைப்பு வேறுபாடுகள், உரைவேறுபாடுகள் ஆகிய வற்றையும் நுணுகி ஆய்ந்து நூலாசிரியரின் மூலபாடத்தை யும் கருத்தையும் உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

இவ்வாறு தமிழ் இலக்கிய இலக்கணங்களில் உரையாசிரியர்கள் காலத்திலேயே மூலபாட ஆய்வுமுறை தோன்றி மிகநுட்பமான ஆய்வு நடைபெற்றுள்ளது என்பது தெளிவாகிறது. பிற்கால உரையாசிரியர்களும் பதிப்பாசிரியர்களும் இவ்வாய்வினை ஒரு தனிக்கலையாக உருவாக்கவில்லையாயினும் இவ்வாய்வினை முறையாகக் கையாண்டு வருகின்றனர்.

இக்கால மூலபாட ஆய்வுமுறை

அரசினர் சுவடி நூலகம் : தமிழ்நாட்டில் மிகப்பெரிய சுவடி நிறுவனமான சென்னை, அரசினர் சுவடிநூலகம், சுவடிப்பதிப்புப் பணியினை மேற்கொண்டு அறுபத்திரண்டு தமிழ்நூல்களை வெளியிட்டிருக்கிறது. இவைதவிர ஆறுமாதத்திற்கு ஒருமுறை யாக வெளியாகும் நூலக மலரின் வழி சுமார் நாற்பது சிறு நூல்கள் தமிழில் வெளியாகியுள்ளன. வடமொழி, தெலுங்கு, மலையாளம்,

---

16. சீவகசிந்தாமணி, 442, உரை
17. தொல், சொல். சேனாவரையம் - 163.
18. ஷை - 54
19. ஷை - 56
20. ஷை - 163.

கன்னடம், உருது, அராபி ஆகிய மொழிகளிலும் பலநூல்கள் இந் நூலகத்தின் வழி வெளிவந்துள்ளன. ஆனால் இவற்றுள் பல நூல்கள் மூலபாட ஆய்வு முறையினை மேற்கொள்ளாமல் சுவடி களில் உள்ளவாறு பதிப்பிக்கப்பெற்று வெளியாகியுள்ளன.

பிற நூலகங்கள் : திருவான்மியூரிலுள்ள உ.வே. சாமிநாதையர் நூலகம் மூலபாட ஆய்வினை முறையாகப் பின்பற்றிப் பலவகை விளக்கங்களோடு இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது.

தஞ்சை சரசுவதிமகால் நூலகமும் சுவடிப்பதிப்பினை மேற் கொண்டு சுமார் நாற்பது நூல்களை வெளியிட்டுள்ளது.

பல்கலைக் கழகங்கள் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவ்வாய்வு முறையினைப் பின்பற்றிக் கம்பராமாயணம் முழுவதை யும் தனித்தனி காண்டங்களாகவும், சில காண்டங்களை இரண்டு பகுதிகளாகவும் பதிப்பித்துள்ளது. மேலும் தொல்காப்பியம், யாப்பருங்கலக்காரிகை, அகப்பொருள் விளக்கம், ஐங்குறுநூறு ஆகிய நூல்களையும் பதிப்பித்துள்ளது.

மதுரை, காமராசர் பல்கலைக்கழகம், மூலபாட ஆய்வினை மேற்கொண்டு சுவடிகளைப் பதிப்பிக்க டாக்டர் பட்டமும் எம்.ஃபில் பட்டமும் வழங்கிவருகிறது. இம்முறையில் முதன் முதலில் பதிப்பிக்கப்பெற்ற நூல் ஐவர் அம்மானை ஆகும். மதுரை வீரன் அம்மானை. மாவைப்பள்ளு, பவளக்கொடி நாடகம் ஆகிய பதிப்புகளும் தொடர்ந்து நடைபெற்றுள்ளன.

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகம், முறையான சுவடிப் பதிப்புகளை உருவாக்கும் திட்டத்தில், சுவடிப்புலம் என்னும் தனித் துறையை உருவாக்கியுள்ளது. அதிலும் ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள் ஆகிய இரண்டு வகைக்குமாக இருபிரிவுகளை அமைத்துப் பெருமளவில் செயல்பட்டு வருகிறது.

கல்லூரி : பேரூர், சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி, தம் எம்.ஃபில் மாணாக்கருக்குச் சுவடிப்பதிப்பு முறையினை உருவாக்கித்தந்து பட்டம் வழங்கிவருகிறது.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் : சென்னை, உலகத்தமிழா ராய்ச்சி நிறுவனம் முதன்முதலாகச் 'சுவடிஇயல் பயிற்சி வகுப்பு' என்ற வகுப்பினை 1979, அக்டோபர் மாதம் தொடங்கியது. மூல பாட ஆய்வினை முறையாகப் பின் பற்றி இதுவரை இருபது நூல் களையும், நாற்பதிற்கு மேற்பட்ட ஆய்வேடுகளையும் உருவாக்கி யுள்ளது.

பவானந்தம் அகாடமி, எஸ். ராஜன் - வெளியிடுவோர், கம்பன் கழகம் ஆகிய தனியார் நிறுவனங்களும் இத்துறையில் வழிகாட்டியுள்ளன. மூலபாட ஆய்வின் வளர்ச்சிநிலைக்காக இங்கு முறையான நிறுவனங்கள் மட்டுமே சுட்டப்பெற்றன. தனியார் மேற்கொண்ட பதிப்புமுறைகள், பதிப்புக்கலை முன்னோடிகள் என்னும் தலைப்பில் ஆய்வுசெய்யப்பெறுகின்றன.

3. மூலபாட ஆய்வுமுறை

முன்னுரை : கிடைக்கும் சுவடிகளை வகைப்படுத்தி மூல ஏடாக ஒன்றினைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிறசுவடிகளை வழி ஏடுகளாக வரிசைப்படுத்தி, ஒப்பிட்டுப் பாடவேறுபாடுகளைக் காண வேண்டும். அவற்றுள் உண்மையான பாடம் எது அல்லது சிறந்த பாடம் எது என்பதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இம் முறைகளை ஆய்வு செய்து தெளிவுபடுத்துவதே இப்பகுதியின் நோக்கமாகும்.

அ. சுவடிகளை வகைப்படுத்தும் முறை

யூகமூலஏடு : நூலாசிரியரால் எழுதப்பெற்ற சுவடி மூலச் சுவடி எனப் பெறுகிறது. நூலாசிரியர் சொல்லப் பிறரால் எழுதப்பெற்றதும் ஆசிரியர் எழுதியதைப் பார்த்து எழுதப்பெற்றதுமாகிய சுவடிகளாயினும் ஆசிரியரால் திருத்தப்பெற்றிருக்குமேயானால் அவையும் மூலச்சுவடிகளாகும். மூலப்படியிலிருந்து படியெடுக்கப் பெற்றவை அண்மைப்படிகள் ஆகின்றன. அண்மைப் படிகளிலிருந்து பின்னால் பல நிலைகளில் படியெடுக்கப்பெற்றவை வழிஏடுகள் ஆகின்றன. கீழ்வழிஏடு ஒன்றினைக்கொண்டு அது எந்த ஏட்டின் வழி வந்தது என்பதைக் காணும்போது, அதன் மூல ஏடுகளின் வரிசை மேல் வழிஏடுகள் எனப்பெறுகின்றன. வழிஏடுகள் சிலவற்றின் துணைகொண்டு ஒப்பிட்டு எழுதப்பெறும் ஏடு கலப்பு வழிஏடு ஆகிறது. இவற்றுள் பலவகை ஏடுகள் கிடைத்து, மூலப்படி கிடைக்காத நிலையில், கிடைத்த ஏடுகளின் வரிசை முறையை ஆய்ந்து, மேலேட்டு வரிசை முறையில் முதல்நிற்பதையே மூல ஏடாகக் கருதி இவ்வாய்வினை மேற்கொள்ளவேண்டியுள்ளது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெறும் மூலஏடு, உண்மையான மூலப்படி அன்று ஆதலின் அது **யூகமூலஏடு** என்று கொள்ளப்பெறுகிறது. இவ்வாறு அமையும் ஏட்டுவரிசைகளை வரைபடங்களின் மூலம் தெளிவுபடுத்தலாம்.

படம் ஒன்றின்படி, மூ = மூலப்படி. அதிலிருந்து படியெடுக்கப் பெற்ற அ, ஆ இரண்டும் அண்மைப்படிகள்.

இ, ஈ, உ ஆகியவை 'அ' என்னும் அண்மைப்படியிலிருந்து படியெடுக்கப்பெற்ற கீழ்வழி ஏடுகள். ஊ, எ, ஏ என்பன 'ஆ' என்னும் அண்மைப்படியின் வழிவந்த கீழ்வழி ஏடுகள்.

இ—ஏ என்னும் சுவடி ஒவ்வொன்றிலிருந்தும் இவ்வாறே கீழ்வழிஏடுகள் பல தோன்றக் கூடும். ஐ, ஒ என்பன உ வின் வழியும், ஓ, ஔ என்பன ஊ வின் வழியும் தோன்றிய கீழ்வழி ஏடுகளாகும். ஒ என்ற ஒரு ஏட்டினைக் கொண்டு நோக்குவோமாயின் ஐ,உ,அ, மூ என்பன அதன் மேல்வழி ஏடுகளாகின்றன.

வழி ஏடுகள்

படம்-1



படம் இரண்டின்படி அ, ஆ ஆகியவை அண்மைப்படிகள். அவற்றின் கீழ்வழி ஏடுகள் ஐ, ஓ ஆகிய இரண்டும். இவ்விரண்டின் துணையோடு தோன்றிய 'ஔ' கலப்பு வழிஏடு ஆகிறது. இவ்வரிசையில் உ, ஐ, ஔ என்னும் மூன்று ஏடுகள் மட்டுமே கிடைக்கின்றன என்றால், ஔவின் மேலேடு ஐ; ஐயின் மேலேடு 'உ' எனத் தேர்ந்தெடுக்கப்பெற்று அதற்கு மேலேடு கிடைக்காமையின் உ என்னும் ஏடே யூக மூலப்படியாக அமைய அதன்வழி ஆய்வு மேற்கொள்ளப்பெறுகிறது.

படம்-2



குடும்ப வழி ஏடுகள்

படம்-3



படம்-4



ஆ. வழிஏடுகள்

மூல ஏட்டிலிருந்து பிறந்த அண்மைப்படிகளோ அவற்றின் பின் தோன்றிய வழிஏடுகளோ பல்வேறு பகுதிகளுக்குக் கொண்டு செல்லப் பட்டு, ஆங்காங்கு அவற்றின் வழிஏடுகள் பல தோன்றுதல் இயல்பு. அவ்வழிஏடுகள் அவ்வவற்றின் மேலேட்டினை ஒட்டியே அமையும். மேலேட்டின் தன்மைகளைத் தவிர புதிய சில வேறு பாடுகளும் தோன்றக்கூடும். இவ்வாறு பல பகுதிகளிலிருந்து கிடைக்கின்ற ஒரு நூலுக்குரிய பல சுவடிகளையும் சில குடும்பங் களாகப் பிரித்துக்கொள்ளமுடியும். ஒரே மாதிரியான விடுகைகள் மட்டும் உடையவை; ஒரே மாதிரியான சேர்க்கைகள் மட்டும் கொண்டவை; ஒரே மாதிரியான விடுகை, சேர்க்கை பிறவகை வேறு பாடுகள், பிழைகள் கொண்டவை என மூன்று வகைக்குடும்பங் களாகப் பிரித்துக்காணமுடியும்.

விடுகைவழிக் குடும்பம் : இரண்டு அல்லது சில ஏடுகளில் சொற்களோ தொடர்களோ பாடல்களோ குறிப்பிட்ட சில, பல இடங்களில் ஒன்றுபோல விடுபட்டிருக்கலாம் அல்லது முன்பின்னாக மாறி அமைந்திருக்கலாம். இவ்விடுகைகளும் மாற்றங்களும் எல்லா ஏடுகளிலும், குறிப்பிட்ட எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக அமைவது தற்செயலாக நிகழ்ந்திருக்க முடியாது. எனவே இவ்வேடுகள் இதே விடுகைகளையும் மாற்றங்களையும் பெற்றுவிட்ட ஒரே மூலஏட்டினைப் பார்த்து எழுதப்பெற்றவையாகவோ ஒன்றைப் பார்த்து ஒன்றாக எழுதப்பெற்றவையாகவோ இருத்தல் வேண்டும். எனவே இவை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என வரையறுக்க முடிகிறது. இதனை **விடுகைவழிக்** குடும்பம் அல்லது **இன்மைவழிக்** குடும்பம் எனலாம்.

சேர்க்கைவழிக் குடும்பம் : இதே அடிப்படையில் இரண்டு அல்லது சிலசுவடிகளில் கூடுதலான சிலசொற்கள் அல்லது தொடர்கள் அமைந்து பொருந்தியிருக்கலாம். ஒன்றிரண்டு பாடல்கள் கூடுதலாக அமைந்திருக்கலாம். பாடவேறுபாடுகள், பிழைகள் ஆகியவை காணப்படலாம். இக்கூடுதல் தொடர்களும் பாடல்களும் வேறுபாடுகளும் ஒன்றுபோல எல்லா இடங்களிலும் பொருந்தியிருக்குமாயின் அச்சுவடிகள் அனைத்தும் ஒரு மூல ஏட்டின் வழிவந்த ஒருகுடும்பத்தைச் சேர்ந்தவையாக வரையறுக்கலாம். இதனைச் **சேர்க்கை** வழிக் குடும்பம் அல்லது **உண்மைவழிக்** குடும்பம் என்று கூறலாம்.

ஒத்தல்வழிக் குடும்பம் : விடுகைகள் மட்டுமே ஒரு குடும்பத்திலும் சேர்க்கைகள் மட்டுமே ஒரு குடும்பத்திலும் இருக்கும் என்று கூறமுடியாது. சில விடுபட்டிருக்கலாம்; சிலவிடத்து சேர்க்கைகள் நிகழ்ந்திருக்கலாம். இவ்விரண்டு முறைகளும் ஆங்காங்கு அமைந்தே காணப்படும். ஒன்றுபோல ஒத்திருக்கும் இவற்றையும் ஒத்தல் வழிக் குடும்பம் என ஒருதனிக் குடும்பமாகப் பிரித்தறியலாம்.

குடும்பவழிமுறை என்பது மேற்கூறிய மூன்று வகையில் அடங்குமாயினும் ஒருவகையான விடுகைகள் அல்லது மாற்றங்கள் சில சுவடிகளில் பொருந்தியிருக்கும். வேறொருவகையான விடுகைகளும் மாற்றங்களும் சில சுவடிகளில் பொருந்தியிருக்கும். இதே நிலையில் கூடுதல் தொடர்களோ பாடல்களோ வேறுபாடுகளோ ஒருசில சுவடிகளில் ஒரேமாதிரியாகவும், வேறுசில சுவடிகளில் வேறொரு மாதிரியாகவும் பொருந்தியிருக்கக்கூடும். இவை ஒவ்

வொன்றும் ஒரு குடும்ப வழியைச் சார்ந்ததாகக் கொண்டு ஒவ்வொன்றையும் இரண்டிரண்டு வகைகளாகவும் பிரிக்க நேரிடலாம்.

மூன்றாவது படம் காட்டும் வரிசையினைக் குடும்பவழி முறைக்கு எடுத்துக் காட்டாக விளக்கலாம்.

மூலச்சுவடியிலிருந்து அ, ஆ என்னும் அண்மைப்படிகளும் இ, ஈ, உ, ஊ ஆகிய வழிப்படிகளும் உருவாயின. பிறகு இ என்னும் சுவடியிலிருந்து க, ங, ச, ஞ என்ற நான்கு சுவடிகளும் ஈயிலிருந்து ட, ண, த என்ற மூன்று சுவடிகளும் படியெடுக்கப்பட்டன. இதே போல உ, ஊ ஆகிய அண்மைப்படிகளிலிருந்தும் முறையே ந, ப,ம, என்ற மூன்றும், ய, ர, ல என்ற மூன்றும் எழுதப்பட்டன. இவற்றுள் அ முதல் ஊ வரையிலான அண்மைப்படிகளும் வழிஏடுகளும் கிடைக்காத நிலையில் கீழ்வழியேடுகள் க-ல-பதின்மூன்றும் கிடைக்கின்றன. இப்போது விடுகைவழி, சேர்க்கை வழி முறைகளில் ஆய்ந்து வகைப்படுத்தினால் நான்கு, மூன்று என்ற அளவில் நான்குவகைக் குடும்பங்கள் கிடைக்கும். இவற்றைப் பொதுவாக **ஒத்தல்வழிக்** குடும்பங்கள் எனலாம்.

வழிஏடுகள் தோன்றுவதில் வேறொரு வகையாகவும் தோன்றக் கூடும் என்பதை நான்காவது படம் விளக்குகிறது. முறைமாறினாலும் க, ங, ச, ஞ என்பன 'இ'யின் வழியேடுகளே. இது போலப் பிறவழி ஏடுகளும் ஒன்றையொன்று பார்த்து எழுதப்பெற்றும் தோன்றலாம்.

இ சுவடிகளின் காலம் அறிதல்

இவற்றுள் காலத்தால் முந்திய சுவடி எது என்பதையும், திருத்தமான, முழுமையான சுவடி எது என்பதையும் காண வேண்டும். சுவடியின் தொடக்கம் அல்லது முடிவில் காணப்பெறும் சுவடி எழுதியது பற்றிய குறிப்புகளால் காலம், அதன் முன்ஏடு ஆகியவற்றை அறியலாம்.

> "920ஆம் ஆண்டு குரோதனவருஷம், சித்திரை மாசம் 15ஆம் தேதி முதல், சிந்தாமணி, திருநெல்வேலி தம்பா பிள்ளையன் அவர்கள் ஏடு பார்த்து எழுதின, ஸ்ரீவைகுண்டம், சிவசங்கரம் பிள்ளையவர்கள் ஏடு பார்த்து இராமாயணம் திருவேங்கடம் எழுதுவித்து எழுதின ஏட்டின் படிக்கு முதற் புத்தகம் பிழைபார்த்து முடிந்தது."[21]

---

21. சீவகசிந்தாமணி, முகவுரை. (வானமாமலைத்தாதர் அவர்கள் ஏடு)

"ஆங்கிரச வருஷம், சித்திரை மாதம், 9ஆம் தேதி சோம வாரம் திருதியை......எழுத ஆரம்பம். ஷை. வருஷம் வைகாசி மாதம், 29ஆம் தேதி புதவாரமும்......ரேவதி நட்சத்திரமும் பெற்ற சுபதினத்தில், திருச்சிராப்பள்ளியிலிருக்கும் குமாரசாமி வாத்தியார் குமாரர் வேலாயுத வாத்தியார் சேலத்திலிருக்கும் அட்டாவதானச் சொக்கநாத முதலியாரவர்கள் (தஞ்சை வாணன்கோவை உரையாசிரியர்) மேலேடு பார்த்து எழுதியது."[22]

சுவடிகளின் இறுதியில் காணப்பெறும் இத்தொடர்கள் சுவடியின் காலமும் முன்ஏடும் அறியத் துணைபுரிகின்றன.

இக்குறிப்புகள் கிடைக்கவில்லையானால் சுவடியின் நிலை, பிழை, வேறுபாடுகளின் மிகுதி, விடுகை போன்ற அகச் சான்று களால் உறுதிப்படுத்தலாம். அதாவது ஏடுகள் மிகப் பழமை யானவை-ஓரளவு புதியவை என்ற வேறுபாடுகளால் சுவடிநிலை கொண்டு முந்திய சுவடி, பிந்திய சுவடி என்று அறியலாம். ஒரு சுவடியிலுள்ள பிழையோ வேறுபாடோ மற்றொன்றிலும் இருந்து மேலும் சில பிழைகள், வேறுபாடுகள் தோன்றியிருப்பின் பிழை மிகுதியான சுவடியைப் பிந்திய சுவடியாகக் கொள்ளலாம். ஒரு சுவடியில் நன்கு அமைந்துள்ள ஒரு பாடல் அல்லது ஒன்றிரண்டு அடிகள் மற்றொன்றில் விடுபட்டிருந்தால், விடுபட்ட சுவடி முந்திய தாக இருக்கவே முடியாது என்று உணரலாம். அதே சமயம் பிழை மிகுந்தது பிற்காலச் சுவடி; பிழையற்றது அல்லது பிழை குறைந்தது முந்தைய சுவடி என்ற ஒரே முடிவையும் கொண்டுவிட முடியாது. பிழையற்ற ஒன்றினைப் பார்த்துப் பிற்காலத்தில் படியெடுக்கப் பெற்றது அதன் மூலச் சுவடியை ஒத்துப் பிழையின்றியிருக்கலாம். அதன் மூலச் சுவடி கிடைக்காமல் பின்னால் படியெடுக்கப்பெற்றதே கிடைக்க, பிழை மிகுந்தது மிகப் பழையதாகவும் அமையலாம். இவற்றில் காலத்தை நோக்காது, தூய்மையையே கருதி முதல் வரிசையில்—யூக மூலப்படியாக வைக்கலாம்.

ஈ. சுவடிகளை வரிசைப்படுத்துதல்

யூகமூலப்படியையும் அடுத்த வழி ஏடுகளையும் வரிசைப் படுத்தி எண்கொடுக்கவேண்டும். அல்லது கிடைத்த இடத்தைக் கொண்டோ கொடுத்தவர் பெயரைக் கொண்டோ சுருக்கக்குறியீடு கள் கொடுத்தும் வரிசைப் படுத்தலாம்.

---

22. ஷை முகவுரை, (சேலம், இராமசாமி முதலியார் அவர்கள் ஏடு)

1-மூலப்படி; 2, 3, 4, 5, வழியேடுகள். அல்லது
அ - சுவடி (அல்லது) அ -நூ - அரசினர் சுவடி நூலகச் சுவடி
உ.வே.சா – உ.வே.சா. நூலகச் சுவடி
தஞ்சை - தஞ்சை, சரசுவதிமகால் நூலகச் சுவடி.
திருநெல்வேலி - தனியார்:

த. ச. - தமிழ்ச் சங்கச் சுவடி. என்பனபோல வசதியான, எளிமையான முறையில் குறியீடுகள் கொடுத்துச் சுவடிகளை அறிய வழிவகுக்கலாம். மூலப்படியுடன் ஒவ்வொரு படியாக வைத்து ஒப்பிடவேண்டும். மூவர், நால்வர் இவ்வாய்வுப் பணிக்கு உதவி செய்பவர் இருந்தால் ஒரே சமயத்தில் ஒவ்வொருவரும் ஒரு சுவடியை வைத்துக் கொள்ள - மூலப்படியுடன் ஒப்பிடலாம். அவரவர் சுவடியில் காணும் வேறுபாடுகளைக் குறித்துக் கொள்ள வேண்டும். இறுதியாக ஆசிரியரின் உண்மைப் பாடம்-இது-என்பதை முடிவுசெய்து தேர்ந்தெடுக்க வேண்டும். பிறருடன் சேர்ந்து ஒப்பிடும்போது, பதிப்பாசிரியருடன் ஒப்பிடுவர் உண்மையிலேயே சுவடியில் அனுபவமும் ஆர்வமும் உள்ளவராகவும், பதிப்புத்தூய்மையில் அக்கறை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

உ. வேறுபாடுகளைக் குறித்தல் : கிடைத்துள்ள வேறுபாடுகளைக் குறிக்கும் முறை - சான்றுகள் :

"கூற்றுண் டோசொலாய் கூற்றுறழ் வேலினாய்"[23]

வேறு : 1. கூற்றுண்டோ சொல்க
2. கூற்றுண்டோ சொலும்
3. கூற்றுண்டோ சொலை
4. கூற்றுண்டோ உரை
5. கூற்றுண்டோ சொலக் கூற்றுறழ்.

"சூல மற்றன துண்டங்கள் கண்டனர்"[24]

வேறு : சூலம் அற்றுறு துண்டங்கள்
2. சூலம் அற்றிரு துண்டங்கள்
3. சூலம் அற்றதன் துண்டங்கள்
4. சூலம் இற்றதன் துண்டங்கள்

பல சுவடிகளிலிருந்து வேறுபாடுகளைக் குறிக்கும்போது இவ்வாறு முழுத் தொடராகக் குறிப்பது ஆய்ந்து பொருளறிய எளிமையாக

23. பாலகாண்டம், 7-63.
24. ஷை. 7:69.

இருக்கும். மீண்டும் சுவடியைப் பார்க்க வேண்டிய நிலை ஏற்படாது. ஆய்வு விரைந்து நடைபெறும்.

4. மூலபாடத் தேர்வுமுறை : முதல்நிலைப் படியாக - யூக மூலப்படியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட சுவடிக்கும், பிற சுவடி களுக்குமிடையே எழுத்து, சொல், தொடர், அடி, பாடல், பொருள் எண்,' இடம் ஆகிய பலவகைகளில் வேறுபாடுகள் காணப்படலாம். இவ்வேறுபாடுகளை **ஐந்து** வகையான பெரும்பிரிவுகளாகப் பிரித்து அறியலாம்.

1. எழுதியவர்களால் ஏற்பட்டபிழை 2. பொருத்தமற்ற, பிழையான பாடம் 3. ஓரளவு பொருத்த முடைய பாடம் 4. இடைச் செருகலாக நுழைந்து பொருந்திவிட்ட பாடம் 5. நூல், ஆசிரியர், காலம் ஆகியவற்றிற்கு ஏற்ற, ஆசிரியரின் உண்மையான பாடம் என்பன அவ்வேறுபாடுகளின் வகைகளாகும்.

எழுத்து, சொல், தொடர்...ஆகிய எவ்வகை வேறுபாடுகளா யினும் ஆசிரியரின் உண்மையான பாடம் என்று ஏற்றவற்றை நூலிற் பதிப்பிக்க வேண்டும். இடைச் செருகல்கள், ஓரளவு பொருத்தமுடைய பாடங்கள் ஆகியவற்றை வேறுபாடுகளாகச் சுட்டிக்காட்டவேண்டும். எழுதினோர் பிழை, பொருத்தமற்றவை என்று முடிவு செய்தவற்றை நீக்கலாம். அல்லது அவை ஆய்வுக்குப் பயன்படுமென்று கருதினால் தனியே அட்டவணையிட்டுக் காட்டலாம்.

மூலபாடத் தேர்வுக்கான துணைக்கருவிகள் : இவ்வகை களை மனத்துட்கொண்டு சுவடிகளைத் தேர்ந்தெடுத்து வகைப் படுத்தி மூலபாட ஆய்வினை மேற்கொள்ளும் போது மூன்றுவகை யான கருவிகள் நமக்குத் துணைநிற்கின்றன.

பொருளமைதி, உரை, இடப்பொருத்தம், நடை ஆகிய கருவிகள் அகச்சான்றுகளாக முதல்துணையாகின்றன.

பிறநூல் கருத்துகள், மேற்கோள் ஆகிய கருவிகள் புறச்சான்று களாக இரண்டாம் நிலைத்துணையாகின்றன.

யாப்பு அமைதி, பிற இலக்கண அமைதி ஆகிய கருவிகள் ஆய்வு நிலைத்துணைகளாக அமைகின்றன.

இம் மூன்று கருவிகளாகிய துணைகளோடு எழுத்து, சொல் முதலான வேறுபாடுகளிலிருந்து மூலபாடத்தை நிறுவும் முறை களைச் சில சான்றுகளுடன் நிறுவலாம்.

அ. அகச்சான்றுகள்

பொருளமைதி : முதல் நிலையில் பொருட் சிறப்பால் மூல பாடத்தைத் தேர்ந்தெடுக்க முயற்சி செய்கிறோம். அப்பொருட் சிறப்பினை அறியவும் மூன்றுவகைக் கருவிகள் துணையாகின்றன. 1. அந்நூலிலேயே காணப்படும் ஒரே பொருளில் வரும் பிற தொடர்களாகிய அகச்சான்றுகள் 2. அதே பொருளில் வரும் பிற நூல் கருத்துகள் 3. பொதுவாக ஆய்ந்தறியக் கூடிய பொருட் சிறப்புகள் என்பன அம்மூவகைக் கருவிகளாகின்றன.

போர்ச் செயப்பாவை - பொற்செயப்பாவை

> ''பூமேல் அரிவையும் **போர்ச்**செயப் பாவையும்''[25]

வேறு : ''பூமேல் அரிவையும் **பொற்**செயப் பாவையும்''

பொன்னால் செய்யப்பட்ட வெற்றிமடந்தை, பொன்போன்ற வெற்றி மடந்தை என்னும் பொருள்தரும் 'பொற்செயப்பாவை' என்னும் பாடத்தைக் காட்டிலும், போரில் பெற்ற வெற்றியாகிய மடந்தை என்னும் பொருள்தரும் 'போர்ச்செயப்பாவை' என்னும் பாடமே சிறப்புடையது. பொற்செயப்பாவை என்பது தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள் பலவற்றில் அச்சாகியுள்ளது.

மேலும், அதே குலோத்துங்கனின் வேறு மெய்க்கீர்த்திகளில் அமைந்த,

> ''விளங்குசய மகளை இளங்கோப் பருவத்து......
> புதுமணம் புணர்ந்து''[26]
>
> ''போர் மகள் காப்பச் சீர்மகள் போற்ற''[27]
>
> ''புகழ்மாது விளங்க சயமாது விரும்ப''[28]

என்னும் தொடர்களில் சயமகள், போர்மகள், சயமாது ஆகிய தொடர்களால் மன்னன் வெற்றிமடந்தையை ஏற்றான் என்றே குறிக்கப்படுவதால் போர்ச் செயப்பாவை என்பதே சிறப்புடைய பாடமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

உரிமை - முறைமை

> ''திருமணி மகுடம் உரிமையிற் சூடி''[29]

வேறு : ''திருமணி மகுடம் முறைமையிற் சூடி''

---

25. மெய்க்கீர்த்திகள், பக். 97. 26. மெய்க்கீர்த்திகள், பக் 97.
27, மெய்க்கீர்த்திகள், பக். 101. 28. ,, பக். 100.
29. ,, பக். 97.

தந்தைக்குப்பின் மகன் பட்டம் பெற்று நாடாளுதல் என்பது தமிழ் மன்னர் முறைமையாக இருந்துள்ளது. அவ்வாறு முடிசூடும் முறைமை உரிமையினால் வருவதேயாகும். எனவே பாட வேறு பாடுகளாகக் காணப்படும் உரிமையில், முறைமையில் என்னும் இரண்டு தொடர்களும் பொருத்த முடையனவே. ஆயினும் இங்கு எடுத்துக்காட்டப்படும் வரிகள் முதலாம் குலோத்துங்கனின் மெய்க் கீர்த்தியடிகளாகும். அவன் அரசமுறைப்படி சோழநாட்டின் மன்னனாக முடிசூடும் உரிமை பெற்றவன் அல்லன். அதிராசேந்திர னுக்குப் பிறகு சோழர் குடியில் ஆண்மக்கள் இல்லாத காரணத்தால் தாய்வழி உரிமை பாராட்டிச் சோழநாட்டின் மணிமுடியை ஏற்றான் என்பது வரலாறு. எனவே முறைமையில் என்பதைக் காட்டிலும் **உரிமையில்** சூடினான் என்பதே பொருத்தமுடைய பாடம். இதனை உறுதிப்படுத்த,

> ''உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி''[30]

என்னும் பிறிதொரு மெய்க்கீர்த்தியடியும் துணையாகிறது.

பொருளமைதி - புறச்சான்றுடன்
களகம் - கழகம்

> ''அங்**களகச்** சுதைமாடக் கூடல்''[31]

வேறு : ''அங்**கழகச்** சுதைமாடக் கூடல்''

சொல்லாலும் பொருளாலும் வேறுபடுகின்ற களகம், கழகம் என்னும் சொற்களுள் பொருளமைதியைப் பிறநூல் சான்றோடு காட்டிச் சரியான மூல பாடத்தை நிறுவுகிறார் பதிப்பாசிரியர்.

> ''...அழகிய தமிழ்ச் சங்கத்தையுடைய, சுண்ணாம்புச் சாந்தால் கட்டப்பட்ட மாடத்தையுடைய கூடல் என்று இத் தொடருக்குப் பொருள் செய்கின்றனர். கழகம் சங்கத்தைக் குறிப்பதாகக் கொள்கின்றனர்.
>
> 'கவறும் கழகமும் கையும் தருக்கி' —குறள் - 935.
>
> 'கழகத்துக் காலை புகின்' —குறள் - 937.

முதலிய இடங்களில் கழகம் என்பது சூதாடும் இடத்தைக் குறிக்கவே பயன்படுத்தப் பட்டுள்ளது.

கழகம் என்பது சங்கத்தைக் குறிப்பிடப் பிற்காலத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ள சொல்லாகும். இராமாயணத்தில்,

---

30. மெய்க்கீர்த்திகள், பக். 100.
31. தேவாரம், பா. 66.

'கந்தனை அனையவர் கலைதெரி கழகம்' - 79
எனச் சிறுவர்கள் தாம் கற்றவற்றை ஆராயும் இடமாகவே அது குறிப்பிடப்பட்டுள்ளது.

'கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து' எனப் பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணத்தில் கழகம் என்றசொல் சங்கத்தைக் குறிப்பிடுவதாகக் காண்கிறோம். எனவே மூவருக்கும் பிற்பட்ட காலத்திலேயே கழகம் சங்கத்தைக் குறிப்பிடப்பயன்படும் சொல்லாயது தேற்றம்.

......களகம் என்பது சுண்ணாம்பை உணர்த்துதல்,

'பண்களகத் தோதாப் பரந்தெழுந்து மாளிகைமேல்
வெண்களகத் தாலே விரிந்து' (வீர. பக். 211)

என்ற வீரசோழியப் பாடலால் புலனாகும்.

அங்களகச் சுதை மாடக்கூடல் என்ற பாடம் சுவடிகளில் உள்ளது. 'அழகிய சுண்ணாம்புச் சாந்தால் கட்டப்பட்ட மாடங்களை உடைய கூடல் என நேராகப் பொருள்படும்' என்பது பதிப்பாசிரியரின் விளக்கம்.[32]

தோழம் - தோழன்

"ஓத உலவா ஒரு**தோழம்** தொண்டர் உளன்"[33]

வேறு : "ஓத உலவா ஒரு**தோழன்** தொண்டர் உளன்"

தோழன் என்றே இதுவரை அச்சிடப்பட்டுள்ளது. புகழ்ச்சி முற்றுப்பெறாத ஒப்பற்ற உயிர்த்துணைவன், அடியார் உள்ளத்தினன் என்று உரை எழுதப்பட்டுள்ளது. ஆனால் ஏடுகளில் ஒரு **தோழம்** தொண்டர் உளன் என்றே காணப்படுகிறது. தோழம் என்ற சொல் ஒரு பேரெண்ணைக் குறிக்கும்.

"உண்ணற் கரிய நஞ்சையுண் டொரு**தோழந் தேவர்**
விண்ணிற் பொலிய அமுதளித்த விடைசேர்கொடி யண்ணல்"
என்பது சம்பந்தர் தேவாரம் (304).

'ஒரு தோழம் காலம்' என்பது பரிபாடல்.
இங்குப் பொருளாவது, இறைவன்...எண்ணிறந்த தொண்டர்களை உடையவன் என்பது. எனவே தோழம் என்ற சொல்லே திருத்தமான பாடம் என்பது தெளிவாகின்றது.[34]

32. தேவரரம், முன்னுரை, பக். 128-129
33. தெருவம்பாவை, பா. 10
34. திருவாசகக்குறிப்புகள், பக், 158-159,

வல்லாட்டை - வல்லரட்டை

''கடக்கும் திறல்ஐவர் கண்டகர்தம் **வல்லாட்டை**
அடக்கும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே''[35]

வேறு : ''கடக்கும் திறல்ஐவர் கண்டகர்தம் **வல்லரட்டை...**''

ஐம்புலன்களின் வலிய ஆட்டத்தை அடக்கும் ஆண்டான் என்பது பொருத்தமான பாடம். ஆயினும் வல்லரட்டை என்று கொண்டு ஐம்புலன்களின் வலிய குறும்புகளை, சேட்டைகளை அடக்கும் ஆண்டான் எனக்கொள்ளுவது சிறப்புடையது.

''அரட்டர் ஐவரை ஆசறுத் திட்டுநீர்'' (அப்பர் தே-5294)

என்பது அப்பர் வாக்கு. ஏடுகளில் 'வலலாடடை' என்று காணப் படும் தொடர் வல்லாட்டை என்று படிக்கப்பட்டதால் ஏற்பட்ட குறை இது. அதே தொடரை வல்லரட்டை என்றும் படிக்கலாம். எனவே வல்லரட்டை என்பதே சிறப்பான பாடம்.[36]

உருமானாய் - உருவானாய்

''மின் ஆனாய் உரும்ஆனாய்''[37]

வேறு : ''மின் ஆனாய் உருவானாய்''

இறைவனே! நீ மின்னலாக, நல்ல நிறத்தை (அல்லது வடிவத்தை) உடையவனாக உள்ளாய் என்னும் இப்பொருளில் சிறப்போ, பொருள் தொடர்போ இல்லை. 'கருவி தொகுதி' என்னும் நூற்பாவின் (தொல். சொல்-354) உரையில் 'கருவி வானம் கதழ் உறை சிதறி' (அகம்-4) என்று காட்டி, கருவி - இடி, மின்னல் முதலியவற்றது தொகுதி என்றார் நச்சினார்க்கினியர். எனவே மின்னலொடு தொடர்புடைய இடியினைக் குறிக்கும் உரும் என்பதே சிறப்புடைய பாடம் எனத்தேர்ந்தெடுத்தார்.[38]

சிற்றடக்கம் - சிற்றட்டகம் - சிற்றெட்டகம்

சிற்றடக்கம், சிற்றட்டகம் எனப் பலவாறாக வழங்கப்பட்ட நூலின் பெயர் களவியற் காரிகையுரையால் பொருள் பொருத்தத் துடன் சிற்றெட்டகம் என்று தெளிவு பெற்றது.

''மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்றும் வெளியிட்டுள்ள நம்பியகப்பொருள் விளக்கவுரையில் (அகத்திணையியல்,

---

35. சென்னிப்பத்து, பா. 8.
36. திருவாசகக் குறிப்புகள், பக். 160-161.
37. தேவாரம், பா. 4300.
38. தேவாரம், முன்னுரை, பக். 135.

சூத்திரம்-6) ‘பத்துப்பாட்டும் கலித்தொகையும்...சிற்றட்டகமு முதலாகிய சான்றோர் செய்யுட்களெல்லாம்'' எனக் காணப்படு கிறது. இதன் அடிக்குறிப்பில் சிற்றடக்கம் என்பது பிரதி பேதமாகக் காட்டப்பட்டுள்ளது. களவியற்காரிகையுரை **சிற்றெட்டகம்** எனவே நூற்பெயரை யாண்டும் வழங்குகிறது... ஐந்திணைகளுள் ஒவ்வொரு திணைக்கும் எட்டுச்செய்யுட் களாக நாற்பது செய்யுட்கள் கொண்ட சிறியதொருநூல்'' என்று இதனைக் கோடல்தகும்.[39]

பிறநூல் சான்றுகளோடு ஒப்பிட்டு, ஏடுகளில் உள்ள பல பாடல் களில் திருத்தமானதும் பொருட்பொருத்தமுடையதுமாகிய பாடத்தைத் தேர்ந்தெடுக்கும் முறைகளை இச்சான்றுகள் விளக்கு கின்றன.

பொருளமைதி - பொது - (ஆய்ந்தறிதல்)

தறிசெறுகளிறு - தறிசெறிகளிறு

''**தறிசெறு** களிறும் அஞ்சேன்''[40]

வேறு : ''**தறிசெறி** களிறும் அஞ்சேன்''

கட்டுத்தறியில் செறிக்கப்பட்ட (கட்டப்பட்ட) களிறு அஞ்சேன் என்பது சிறப்பில்லை. கட்டுத்தறியை முறித்துக் கொண்டு (செறுத்து - முறித்து) ஓடிவரும் களிற்றுக்கும் அஞ்சேன் என்பதே பொருட் சிறப்புடைய பாடம்.[41]

செயற்கரிய - செயற்குரிய

''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்''[42]

இக்குறட்பாவிற்கு, செய்தற்கு எளியவற்றைச் செய்யாது அரிய வற்றைச் செய்வார்; பெரியவர், அவ்வெளியவற்றைச் செய்து அரியவற்றைச் செய்யமாட்டாதார் சிறியர்'' என்று உரை கூறுவார் பரிமேலழகர்.

''ஒருவராலும் செயற்கரிய துறவறத்தைச் செய்வார் பெரியர்;

சிறியர் செய்யும் தொழிலாகிய இல்லறமும் செய்ய அறியார்'' என்பது பரிதியார் உரை. ''அவரது (பரிதியாரது) உரையின்படி

39. களவியற்காரிகை, பக். 164-165,
40. திருவாசகம், அச்சப்பத்து. பா. 8.
41. திருவாசகக் குறிப்புகள், பக். 157-158. 42. குறள், 26.

அவர்கொண்ட மூலபாடம் 'செயற்கெளிய செய்கலாதார்' என்றே இருத்தல் வேண்டும்'' என ஊகிக்கிறார் அ. விநாயகமூர்த்தி அவர்கள்.[43]

ஆயின், செயற்கு அரிய...செய்வார் பெரியர்; செய்யுந் தொழிலாகிய இல்லறமும் செய்ய அறியார் சிறியர்என்னும்பரிதியார் உரை பரிமேலழகர் உரையினும் முற்பட்டது. அரிய செய்வார் பெரியர்; செய்தற்கு உரியதாகிய இல்லறமும் செய்யார் சிறியர் என்னும் பரிதியார் உரையை நோக்க அரிய செய்வார்—உரியவும் செய்யார் என்னும் பொருள்கள் தெளிவாகின்றன. மேலும் சுவடிகளில் க, கு ஆகிய எழுத்துக்களில் பெரும் வேறுபாடு இன்றிக் காணப்படுவதும் உண்டு.எனவே ஏடுபடித்தோர் 'கு' என்ற எழுத்தையும் முன் அடித்தொடர் நோக்கிக் 'க' என்றே படித்து விட்டனர் என்று கொண்டால்',

''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்குரிய செய்கலா தார்''

என்று கொள்ளுவது மேலும் பொருத்தமுடையதாகிறது.

பாடல்களை யடுத்துக் காணப்பெறும் உரையின் துணை கொண்டு உரிய பாடங்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை இச் சான்றுகள் விளக்குகின்றன.

இட அமைதி : ஒரு சொல்லுக்கு அல்லது தொடருக்கு ஏற்ற பல பாடங்கள் கிடைக்கின்றபோது அந்த இடத்திற்குப் பொருத்த முடைய பாடமாக நூலாசிரியர் எந்தப் பாடத்தைக் கொண்டிருப்பார் என்று தேர்ந்தெடுப்பதை **மூன்றாம் நிலையாகக்** கொள்ளலாம். பாடமாகக் கிடைக்கும் சொற்கள் பொருளுடையனவாக இருக்கலாம். ஆனால் பாடற்பொருள் நிகழும் இடத்திற்கு, முன்பின் அமைந்த தொடர்களுக்கு அல்லது பாடல் அடிகளுக்கு ஏற்ப அவ்விடத்திற்குப் பொருத்த முடையதைக் காண்பதே இட அமைதியால் மூலபாடம் தேர்ந்தெடுத்தல் ஆகிறது. இம்முறையினைச் சில சான்றுகளால் விளக்கலாம்.

கடலே—கழலே

''செம்பொருட் துணிவே! சீருடைக் **கடலே!**
செல்வமே சிவபெரு மானே![44]

43. ஐவர் அம்மானை, பக். 61.
44. திருவாசகம், பிடித்தபத்து, பா. 1.

வேறு : ''சீறுடைக் **கழலே**''

கடலே, கழலே என்பன கிடைத்துள்ள பாடங்கள். கழலே என்பது அச்சு நூல்களில் காணப்படுவது. கடலே என்பது சில சுவடிகளில் காணப்படும் பாடம்.

உம்பர்கட்கு அரசே! யோகமே, மருந்தே, துணிவே, செல்வமே, சிவபெருமானே! என்பன இப்பாடலில் அமைந்துள்ள பிற விளித் தொடர்கள். அவ்வரிசையில் கழலே! என்ற விளியும் அமைகிறது. அரசே! மருந்தே! என்னும் தொடர்களால் இறைவனை விளிப்பது மரபு. கழலே! என்பது நேரே இவ்விடத்திற்குப் பொருந்தாத தாகிறது. விளிப்பதும் மரபு அன்று. மாணிக்கவாசகர் பல இடங் களில் கடலே! என்று விளிக்கிறார். 'கருணைமாக்கடலே!' என்பது பிடித்தபத்தின் இரண்டாம்பாடல். எனவே பிற சுவடிகளில் கிடைப் பதும் இவ்விடம் விளிக்குப் பொருந்துவதுமாகிய **கடலே** என்பதையே பாடமாகக் கொள்ளலாம்.[45]

ஆறாறுக்கு—யாவைக்கும்

''.......................அஞ்செழுத்தே
ஆனந்தத் தாண்டவமும் ஆறாறுக் கப்பாலாம்''[46]

வேறு : ''ஆனந்தத் தாண்டவமும் யாவைக்கும் அப்பாலாம்''

ஆறாறு தத்துவமேது? என்பது முதலான வினாக்களுக்கு விடைகூறும் உபதேசமாக அமைந்தது உண்மை விளக்கம் என்னும் நூல். 'ஆறாறு தத்துவமும் சொன்னோம்'; 'ஆறாறு தத்துவமும்... வகுத்துரைத்தீர்' என்னும் தொடர்களையுடையன பாடல்கள். மேலும்

> ''யாவைக்கும் என்ற மூலம் தத்துவாதீதம் என்ற பொருளுக்கு ஏற்ற மூலமன்று. **ஆறாறுக்கப்பாலாம்** என்ற பாடம் பல ஏடு களில் காணப்படுகிறது. இது முப்பத்தாறு தத்துவங்களுக்கு அதீதமாகிய என்ற பொருள்தரவல்லது. எனவே, மூலம்... ஆறாறுக்கப்பாலாம்' என்றிருக்க வேண்டும்''[47]

என்ற விளக்கமும் இங்கு ஏற்புடையதாகிறது. எனவே யாவைக்கும் என்பது பொருள் பொருத்தமுடையதாய், அச்சு நூல்களில் காணப் பட்டாலும் வினாவிடைகளின் கருத்துகளை நோக்கும்போது

45. திருவாசகக் குறிப்புக்கள், பக். 128-131.
46. உண்மை விளக்கம், பா. 44. (எ-டு. திருவாசகக் குறிப்புக்கள்) பக். 166.
47. திருவாசகக் குறிப்புக்கள், பக், 166.

இவ்விடத்தில் **ஆறாறுக்கப்பாலசம்** என்பதே திருந்திய பாடமாக ஏற்க முடிகிறது.

நடை : ஒவ்வொரு நூலாசிரியரும் ஒவ்வொரு வகை நடையினைக் கையாளுவர். நூலுட் காணப்படும் அவ்வாசிரியரின் சொல்லாட்சி, தொடரமைப்பு, விளித்துக் கூறும் நடை, யாப்பு நடை ஆகிய நடை யமைப்புகள் பெரும்பான்மையாக ஒத்துக் காணப்படும். சில தொடர்கள் அடுக்கு முறையில் எண்ணலங்காரம், சொல்லலங்காரம் பெற்று அமைவதும் காணப்படும். இவ்வாறான ஆசிரியரின் நடையை நுண்ணிதின் அறிந்து, பாடவேறுபாடுகளும் ஐயங்களும் நிகழுமிடத்து ஆசிரியரின் நடையமைப்பின் துணை கொண்டு உண்மையான மூலபாடத்தைத் தேர்ந்தெடுப்பதை நான்காவது நிலையாகக் கொள்ளலாம். அவ்வாறு நடையின் துணையால் தேர்ந்தெடுத்துள்ள பாடங்களுக்குச் சில சான்று களைக் காட்டி விளக்கலாம்.

வகுத்தான்—வகுத்தார்

"வகுத்தான் வகுத்த வகையல்லால்" (குறள்-377)

வேறு : "வகுத்தார் வகுத்த வகையல்லால்"

ஆதிபகவன் (1)	வாலறிவன் (2)
மலர்மிசை ஏகினான் (3)	வேண்டுதல் வேண்டாமையிலான் (4)
இறைவன் (5)	ஐந்தவித்தான் (6)
உவமை இல்லாதான் (7)	அறவாழி அந்தணன் (8)
எண்குணத்தான் (9)	பற்றற்றான் (350)

தாமரைக் கண்ணான்—(1103) என்பன வள்ளுவர் இறைவனைக் குறிப்பிடும் சொற்கள். இவை அனைத்தும் ஒருமை நடையால் அமைந்தவை. இறைவனைக் குறிப்பிடும் வள்ளுவர் நடையிது என்பதை உணர்ந்த பரிமேலழகர்,

வகுத்தார், வகுத்தான் என்ற வேறுபாடுகளை உடைய குறட்பா சொற்களில் 'வகுத்தான்' என்ற சொல்லையே தேர்ந் தெடுத்தார் (குறள். 377). காளிங்கர் முதலான சில உரை யாசிரியர்கள் வகுத்தார் என்றே கொண்டுள்ளனர். மேலும் ஒருவற்குச் சொல்லுமாற்றால் உலகுக்கு அறிவிக்கும் நடையே வள்ளுவர் நடை என்று முடிவு செய்த பரிமேலழகர், தமக்கு முற்பட்ட உரையாசிரியர்களாகிய மணக்குடவர், காளிங்கர் ஆகியோர் கொண்ட பாடத்தினின்றும் வேறுபட்டுப் பெரும் பாலான உயர்திணை, அஃறிணைச் சொற்களில் ஒருமை நடையையே தேர்ந்தெடுத்து உரை கூறியுள்ளார். அவ்வாறு அவர்கள் கொண்ட பாடங்களுள் சில :

குறள்.	பரிமேலழகர்		மணக்குடவர்
58.	பெற்றான்பெறின்	—	பெற்றார்ப் பெறின்
205.	இலன் என்று	—	இலமென்று
250.	தன்னை நினைக்க	—	தம்மை நினைக்க
1052.	ஒருவற்கு இரத்தல்	—	ஒருவர்க்கு இரத்தல்
			காளிங்கர்
387.	வல்லாற்கு	—	வல்லார்க்கு
622.	அறிவுடையான்	—	அறிவுடையார்
702.	அறிவிலான்	—	அறிவிலார்
1328.	தும்மினேனாக	—	தும்மினேமாக

இவற்றுள் பரிமேலழகர் கொண்டபாடங்கள் வள்ளுவரது நடையை உணர்ந்து மேற்கொள்ளப்பெற்றவையாகும்.

இளநாகனார்—ஔவையார்

''அவனை **அவர்** பாடியது'' (மருதன் **இளநாகனார்**)
(புறம். 140)

வேறு : ''அவனை **ஔவையார்** பாடியது''

புறநானூற்றின் 138, 139ஆம் பாடல்கள் மருதன் இளநாகனார் பாடியவை. 140ஆம் பாடல் 'அவனை அவர் பாடியது' என்று காணப்படும் சுவடிகளைக் கொண்டு அவ்வாறே அச்சாகியுள்ளது.[48] ஆனால் சில சுவடிகளில் 'அவனை ஔவையார் பாடியது' என்ற வேறுபாடு உள்ளது; கழகப் பதிப்பில் அச்சிடப்பட்டுள்ளது.[49]

பாட்டுடைத் தலைவனின் பெருமையைக் கூறுங்கால் தெவ்விர்! மறவீர்! எனப் பல்லோரை விளித்துக் கூறும் நடை ஔவையாருக்கே உரியதாகிறது. அந்நடையியல்பாகிய அகச்சான்றுகளால் 140ஆம் பாடல் 'ஔவையார் பாடியது என்று காணும் பாடமே உண்மைப் பாடம் என்று நிறுவுகிறார் டாக்டர் அ. விநாயகமூர்த்தி.[50] ஔவையாரின் பலர்பால் விளிக்குரிய சான்றுகள் :

''களம்புகல் ஓம்புமின் தெவ்விர்! (புறம். 87)

48. புறநானூறு, உ.வே.சா. பதிப்பு 1894 (ஔவையாரென்றும் பிரதிபேதமுண்டு).
49. புறநானூறு கழகப்பதிப்பு. 1947. உ.வே.சா. பதிப்பு 1935 (அவனை அவர் பாடியது பிரதிபேதம்).
50. ஐவர் அம்மானை, பக். 71-72.

"யாவிராயினும்...யாம் பொருது மென்றல் ஓம்புமின்"
(புறம். 88)

"(தெவ்விர்) செம்மல் மூதூர் நுமக்குரித்தாகல் வேண்டில்
சென் றவர்க்கு இறுக்கல் வேண்டும் திறையே" (புறம். 97)

"போற்றுமின் மறவீர் சாற்றுதும் நும்மை" (புறம். 104)

செந்நாப் புலவீர்! (140) என்னும் பன்மைவிளி மேற்காட்டிய விளி நடையினை ஒத்தது என்னும் கருத்து இப்பாடத்தேர்வுக்குத் துணைநிற்கிறது.

ஆ. புறச்சான்றுகள்

பிறநூல் தொடர்களால் மூலபாடத்தைத் தேர்ந்தெடுத்தல்

நூலின் அகச்சான்றுகளைத் துணையாகக் கொண்டு நான்கு முறைகளில் மூலபாடம் தேர்ந்தெடுக்கும் வழிகளைக் கண்டோம். பிறநூல் தொடர்கள், மேற்கோள்கள் ஆகிய இருவகைப்புறச் சான்றுகளின் துணைகொண்டும் மூலபாடங்களை உறுதிப்படுத்த லாம். அவற்றுள் முதலாவதாகப் பிறநூல் தொடர்கள் மூலபாடத் தேர்வுக்குத் துணையாகின்றன என்பதற்குச் சில சான்றுகளைக் காட்டலாம்.

எலிப்படை—எலிப்பகை

"ஒலித்தக்கால் என்னாம் உவரி **எலிப்படை**
நாகம் உயிர்ப்பக் கெடும்" (குறள். 763)

வேறு : "ஒலித்தக்கால் என்னாம் **உவரி எலிப்பகை**
நாகம் உயிர்ப்பக் கெடும்"

எலிப்படை, எலிப்பகை என்பன பாடங்கள். **படைமாட்சி** என்னும் அதிகாரத்தில் வருவது இக்குறட்பா.

'ஊறு அஞ்சா வெல்**படை**' (761)

'தொலைவிடத்துத் தொல்**படை**' (762)

'வன்கண் அதுவே **படை**' (764)

'ஆற்றல் அதுவே **படை**' (765)

'எனநான்கே ஏமம் **படை**க்கு' (766)

'**படை**த்தகையால் பாடு பெறும்' (768)

'இல்ஆயின் வெல்லும் **படை**' (769)

என்பன அவ்வதிகாரத்துள் ஆளப்பட்டுள்ள தொடர்முறை. மேலும், குகனது கூற்றாகப் பேசும் கம்பரின் வாக்காகிய

'எலிஎலாம் இப்படை அரவம் யான்என'[51] என்னும் அடியும் அக்குறட்பாவின் (763) தொடரையே எடுத்தாளுகிறது. 'எனவே 'எலிப்படை' என்பது சிறந்த பாடமாதல் வேண்டும்.

மரபியல்—மரபியல்பு : 'பிரபந்த மரபியல்'— 'பிரபந்த மர பியல்பு' இவை பாடங்கள் நூலின் இறுதியில் பிரபந்த மரபியல்பு முற்றும். ஆக இயல்பு ஐந்துக்கும் பாயிரம், செய்யுளியல்பு... மூல பாடம் முற்றும் என்று எழுதப் பெற்றுள்ளது. ஆனால்,

''பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்
தொண்ணூற் றாறெனும் தொகைய தான
முற்பக **ரியல்லை** முன்னுறப் பாடும்
பிரபந்த மரபியலது பிரபந்த மரபியலே''[52]

என்னும் நூற்பா பிரபந்த மரபியல் என்றே குறிக்கின்றது. மேலும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இறுதி இயல் மரபியல் என்று அமைகிறது. அவ்வியலின் முதல் நூற்பா,

'மாற்றருஞ் சிறப்பின் **மரபியல்** கிளப்பின்' என்றும், அந்நூற் பாவின் பேராசிரியர் உரை, இவ்வோத்து... **மரபியல்** என்னும் பெயர்த்து என்றும், அவ்வியலின் முடிவு 'ஒன்பதாவது **மரபியற்குப்** பேராசிரியர் உரை முற்றிற்று' என்றும் குறிப்பிடுகின்றது. இறுதி யாக இயல் கோப்பு முறை என்னும் தலைப்பில்,

''... ... ...
பொருளியல் மெய்ப் பாடுவமம் போற்றிய செய்யுள்
மரபியலு மாம் பொருளின் வைப்பு''

என்னும் வெண்பாத் தொடரும் காணப்படுகிறது. இவையனைத் தும் மரபியல் என்ற சொல்லையே குறிப்பிடுவதால் மரபியல்பு என்பதை விடுத்து **மரபியல்** என்பதை உண்மைப் பாடம் எனத் தேர்ந்தெடுக்கலாம்.

மேற்கோள்களால் உண்மைப்பாடம் கிடைத்தல் : தமிழ் இலக்கண நூல்களின் இலக்கண வரையறைகளை இலக்கியங்களைக் கொண்டே வரையறுத்தனர். அவற்றிற்கு விளக்கம் கூறும் போது அவ்விலக்கியத் தொடர்களை மேற்கோளாகக் காட்டினர். இலக்கியங்களுக்கு உரையும் விளக்கமும் எழுதிய உரையாசிரியர்கள் பலரும் தம் நூலறிவினால் ஒப்புடைய இலக்கியத் தொடர்களையும்

51. கம்ப. அயோத்தியா. 11 : 10.
52. பிரபந்த மரபியல், 1.

பாடல்களையும் மேற்கோளாகக் காட்டிவிளக்கினர். இவ்வாறான வழக்காற்றினால் ஒரு இலக்கியத்தின் பாடல் இலக்கண நூல்களி லும் பிற இலக்கியங்களிலும் ஒருபகுதியாகவோ முழுமையாகவோ இடம் பெற்றுவிட்டன. ஒரு குறிப்பிட்ட நூலைப் பதிப்பிக்குங்கால் காணப்படும் பல்வேறு பாட வேறுபாடுகளை ஆய்ந்து உண்மைப் பாடத்தைத் தேர்ந்தெடுக்கப் பிறநூல்களில் காணப்படும் மேற் கோள்களாகிய குறிப்பிட்ட நூலின் பாடல்கள் புறச்சான்றுகளாக நின்று இரண்டாம் நிலையில் துணைபுரிகின்றன. இவ்வாறு மேற் கோள் தொடர்களால் மூலபாடம் தேர்தெடுக்கப்படுகின்றன என்ப தற்குச் சில சான்றுகளைக் காட்டலாம்.

கண்டோர் கூறியது - கண்டோர் செவிலிக்குச் சொல்லியது :

"செலவின்கண் இடைச்சுரத்துக் கண்டோர் கூறியது"[53]

வேறு : "கண்டோர் செவிலிக்குச் சொல்லியது"

குறுந்தொகைப் பாடலின் துறை விளக்கம் தரும் தொடர்கள் சுவடி களில் இவ்வாறு இருவகையாக வேறுபட்டுக் காணப்படுகின்றன. இக்குறுந்தொகைப்பாடலை மேற்கோளாக எடுத்துக்காட்டும் போது,

'இஃது இடைச் சுரத்துக் குறும்பினுற்றோர் இவரைக்கண்டு கோள் இழைப்புற்றார்க்கு அவர் பெண்டிர் கூறியது. இவை செலவின்கண் கூறியது' என்று தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் உரை சுட்டுகிறது.[54] 'கண்டோர் அயிர்த்தற்குச் செய்யுள்' என்று இச்செய்யுளைக் காட்டுவர் அகப்பொருள் விளக்க உரைகாரர்.[55]

தேரன் - தேரின்

"மணிநா வார்த்த மாண்வினைத் **தேரன்**
உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்"[56]

வேறு : "... மாண்வினைத் **தேரின்**
உதுக்காண் தோன்றும் ..."

தேரன், தேரின் என்பன பாடங்கள். குறும் பொறை நாடன் தோன்றும் என்னும் முடிவினை உடையது இத்தொடர். தேரன், நாடன் தோன்றும் என்று இயைக்க, நாடன் தேரினை உடைய னாய்த் தோன்றும் என்று கொள்ள வேண்டும். ஆனால் தொல்

53. குறுந்தொகை, 7.
54. தொல். அகத்திணையியல், 40. நச்சினார்க்கினியர்.
55. தொல்காப்பியம். பொருள் 182
56. அகநானூறு, பா. 4.

காப்பிய நச்சினார்க்கினியர் உரையில் மேற்கோளாகக் காட்டப் படும் இவ்வடிகளில் தேரின் தோன்றும் என்றே காணப்படுகிறது.[57] நாடன் தேரில் தோன்றும் என்று பொருள் கொள்ளும் எளிய நடையுடைய இத்தொடர் சிறப்புடையதாகிறது.

இ. ஆய்வுநிலையில் மூலபாடத்தை நிறுவுதல்

அகச்சான்று புறச்சான்றுகளின் துணை கொண்டு மூல பாடத்தை நிறுவ இயலாத போது பொதுநிலையில் ஆய்ந்து தக்க பாடத்தை நிறுவ வேண்டியுள்ளது. இவ்வாய்வுக்குத் துணை நிற்பன சீர், தொடை, வகையுளி, அளபெடை முதலான யாப்பமைதிகளும் பிற இலக்கண அமைதிகளுமாகும். இத்துணைகளின் வழி சிறந்த பாடத்தைத் தேர்ந்தெடுக்கும் முறையைச் சில சான்றுகளால் விளக்கலாம்.

யாப்பு—சீரமைதியால் மூலபாடம் தேர்தல்
புரத்தரரே—புரத்தாரே

"காடது அணிகலம் காரரர வம்பதி காலதனில்...
பீடது அணிமணி மாடப் **பிரமபு ரத்தரரே**[58]

வேறு : பீடது அணிமணி மாடப் **பிரமபு ரத்தாரே**"

'பிரம புரததரெ' என்பது சுவடிகளில் காணப்பெறும் வரி வடிவம். இதனைப் பிரமபுரத்தரரே, பிரமபுரத்தாரே என்னும் இரண்டுவடிவத்தாலும் எழுதலாம். முதலில் பிரமபுரத்தாரே என்று பிழையாகப் படித்து விட்டதனால் அப்பாடமே நிலைத்துவிட்டது. பல பதிப்புகளிலும் அச்சாகிவிட்டது. மேலும் ஓசைகுறைதலோ பொருட் சிதைவோ ஏற்படவில்லை என்பதும் காரணமாகிறது. ஆனால் பாடலுக்கேற்ற சீர் அமைதி நோக்கி ஆய்ந்துபார்க்க, 'பிரம புரத்தரரே' என்பதே சரியான பாடமாகிறது. அச்சீர் அமைதி யினைச் சுருக்கமாக விளக்கலாம்.

காட தணிகலங் காரரர வம்பதி காலதனில்
....
பீட தணிமணி மாடப் பிரம புரத்தாரே

இவற்றின் முதலடியில் ஒற்று நீக்கிப் பதினாறு எழுத்துகள் உள்ளன. இவ்வடியைப் போலவே அடுத்த இரண்டடிகளும் அமை

57. தொல். அகத்திணை. 55.
58. சம்பந்தர் தேவாரம், 1159.

கின்றன. இறுதியடியோ பதினைந்து எழுத்துகளைக் கொண்டுள்ளது. திருப்பிரமபுரம் பற்றிய இப்பதிகப்பாடல்கள் பன்னிரண்டும் கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் ஆகும்.

> "... கடையொரு சீரும் விளங்கா யாகி
> நேர்பதி னாறே நிரைபதி னேழென்று
> ஓதினர் கலித்துறை ஓரடிக் கெழுத்தே"[59]

என்பது இலக்கணம். பாடலின் முதல் மூன்றடிகளும் நேரசையால் தொடங்கிப்பதினாறு எழுத்துகளைப் பெற்று, இறுதிச்சீர்கள் காலதனில், தூர்ச்சிலம்பர், லுங்கொடுப்பர் என்று கூவிளங்காய்ச் சீர் பெற்றுள்ளன. ஈற்றடிமட்டும் நேரசையில் தொடங்கி பதினைந்தெழுத்துகளையுடையதாய் **ரத்தரரே** என தேமாங்காய்ச் சீர் பெற்றுள்ளது.

இப்பதிகத்தின் பிறபாடல்களும் வேதியரே, புண்ணியரே, ருந்தவரே, சந்தரரே... எனக் கூவிளங்காய் இறுதிச்சீர்களையே பெற்று முடிகின்றன. எனவே இப்பாடலின் ஈற்றடி இறுதிச்சீர் பிரமபுரத்தரரே! (பிரமபுரத்து அரரே) என்றிருப்பதே சீர் அமைதியுள்ள சிறப்புடைய பாடம் ஆகிறது.[60]

யாப்பு—தொடையமைதியால் பாடம் அறிதல்
சேர்ந்தார்க்கியாண்டும்—சேர்ந்தார்யாண்டும் (யில-யிலர்) இயல்பு

> "வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
> கியாண்டு மிடும்பை யில" (குறள்-4) பரிமேலழகர்

வேறு : "வேண்டுதல் வேண்டாமை யில்லா னடிசேர்ந்தார்
யாண்டு மிடும்பை யிலர்" (மணக்குடவர்)

மணக்குடவர் பாடம் அடியெதுகை, இணைமோனை, இணையெதுகை அமைய வகையுளி இன்றி இயல்பாக அமைகிறது. சேர்ந்தார்க்கு இடும்பை இல என்பதைக்காட்டிலும் சேர்ந்தார் இடும்பை இலர் என்பது தெளிவுடைய நடை. 'சேர்ந்தார்-நீடுவாழ் வார்' (3); 'நின்றார் நீடுவாழ்வார்' (6); 'நீந்தார்-அடிசேராதார்' (10) என்பன போன்ற முடிவையுடையதே இடும்பை இலர் என்பது. எனவே மணக்குடவர் பாடம் சிறப்புடையதாகிறது.

---

59. யாப்பருங்கலக் காரிகை, 1-மேற்கோள்.
60. தேவாரம், முன்னுரை, பக். 128.

மடியுளாள்—மடியுளான்—முரண்தொடை

"**மடியுளாள்** மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்" (குறள்-617) பரிமேலழகர்

வேறு : "**மடியுளான்** மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்"[61]

மாமுகடி ஒருவன் மடியின்கண்ணே உறையும் என்னும் பரிமேலழகர் உரையில் ஒருவன் என்பது வரவழைக்கப்படுகிறது; மடி என்பதும் அவன் மடியாகிய இடத்தைச் சுட்டி அமைகிறது. ஆனால் பழைய உரைகாரர் கொண்ட பாடத்தில் மடியுளான்- மடியிலான் ஆகிய இருவரின் தன்மைகளே சுட்டப்படுகின்றன. இப்பொருட் சிறப் போடு 'ஒரூஉ முரண்தொடை' நயமும் காணப்படுவதால் மடியுளான் என்பதைச் சிறந்த பாடமாகக் கருதமுடிகிறது.

யாப்பு—வகையுளி இல்லாத பாடம் தேர்தல்

பாடல்களில் தளை சிதைந்து ஓசைகெடாதவாறு சீர்களை முறைப்படுத்திப் பதிப்பித்தல் வேண்டும். இம்முறையால் சில சொற்கள் இரண்டு சீர்களில் பிரிந்து நிற்பதுண்டு. இதனை வகையுளி என்பர். பொருட் சிறப்போடு உடைய சில பாடங்கள் இவ்வகையுளியை விலக்கி இயல்பான நடையமைய துணைபுரி கின்றன. அப்பாடங்களைத் தேர்ந்தெடுத்துள்ள முறைகளுக்கும் சில சான்றுகளைக் காட்டலாம்.

சேராதார்-சேராதவர்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்" (குறள்-10) (பரிமேலழகர்)

வேறு : "இறைவனடி சேரா தவர்" (மணக்குடவர்)

பரிமேலழகர் கொண்ட பாடம் வகையுளியாய் அமைகிறது. பொருளமைப்பில் சிறிதும் மாறாமல் இயல்பாக அமையும் மணக் குடவர் கொண்ட பாடமே பழமையானது என்பதை அறிய முடிகிறது. இவ்வாறு வகையுளி இன்றியமையும் இயல்பான பாடங்களைத் தேர்ந்தெடுக்க இவ் எடுத்துக்காட்டு பயன்படும்.

யாப்பு—அளபெடையால் பாடம் தேர்தல்

கோலதூஉம்—கோலதும்

"வேலன்று வென்றி தருவது மன்னன்
கோலதூஉங் கோடா தெனின்" (குறள்-546) பரிமேலழகர்).

வேறு : "**கோலதுங்** கோடா தெனின்" (மணக்குடவர்)

61. திருக்குறள், பழைய உரை, உ.வே.சா. நூலகப்பதிப்பு

அளபெடுக்காத வழி இயற்சீர் வெண்டளையாகித் தளை கெட வில்லையாயினும், அளபெடுத்து நிற்க வெண்சீர் வெண்டளையாகி ஏந்திசைச் செப்பலோசை பெறுவதால் இனிய ஓசை தரும் அளபெடையுடைய பாடத்தையே பரிமேலழகர் கொண்டுள்ளார்.

பிற இலக்கண அமைதிகளால் பாடம் தேர்ந்தெடுத்தல்
வேற்றுமைத் தொகை—வினைத்தொகை

"எறிசுறவங் **கழிக்கானல்** இளங்குருகே"[62]

வேறு : "எறிசுறவங் **கழிகானல்** இளங்குருகே"

எறிசுறவு அம்கழி-மற்ற உயிர்களைத் தாக்குகின்ற சுறாமீன்களை யுடைய காண்டற்கு அழகிய உப்பங்கழி. கானல்-கடற்கரைச் சோலை, கழி + கானல்—கழிக்கானல்; உப்பங்கழியையடுத்த கடற்கரைச் சோலை. இரண்டன் உருபும் அதன் பயன்தரும் இடைச் சொல்லும் தொக்க தொகை. இரண்டன் உருபு மட்டும் தொக்கி வந்ததாயின் 'விகாரத்து இயல்பு' (நன். 255) அமையு மாதலின், அணி கொணர்ந்தான், அணி பெற்றான் என்றாற் போல இயல்பாகப் புணர்தல் கூடும். இது உருபும் பொருளும் தொக்க தொகையாதலின் 'கழிகானல்' என்று கூறின் கழிந்த கானல், கழி கின்ற கானல், கழியும் கானல் என வினைத் தொகையாகப் பொருள் தர வாய்ப்பு ஏற்படும். எனவே இலக்கண மரபுக் கேற்றதும், பொருள் புலப்பாட்டில் மயக்கம் இல்லாததுமாகிய கழிக்கானல் என்பதே சிறப்புடைய பாடமாகிறது.

இல் உருபு

"கடிகொள் தென்றல் முன்றிலில் வைகும் கலிக்காழி"[63]

வேறு : "கடிகொள் தென்றல் **முன்றினில்** வைகும் கலிக்காழி"

முன்றில் என்பது பெயர்ச்சொல். இல் என்னும் இடப் பெயரோடு முன் என்னும் சொல் புணர இல்முன் என்றாகிறது. இதே சொற்கள் இடம் மாறிப்புணர்ந்து முன்-இல்-முன்னில் முன்றில் என்று அமைந்து மரூஉச்சொல்லாகிறது. இலக்கணப் போலி என்பர். இல்லத்தின் முற்பகுதி என்ற பொருளில் வருவது. வேறு பாடாக வந்துள்ள 'முன்றினில்' என்பது பலபதிப்புகளில் காணப்

62. சம்பந்தர் தேவாரம், 646. தேவாரம், முன்னுரை பக். 121-122.

63. தேவாரம் முன்னுரை பக். 1111
தேவாரம் முன்னுரை பக். 122-123.

படுகிறது. மூன்று அல்லது மூன்றின் என்பதை அடிப்படைச் சொல்லாகக் கொள்ளவேண்டும். ஏழன் உருபு சேர்ந்து வந்துள்ளது. இச்சொற்களுள் எதுவும் பொருள் தருவதாக இல்லை. ஓசை நயமும் வேறுபடவில்லை. மூன்றில் என்பதே மூன்றினில் எனச்சிதைந்திருக்க வேண்டுமாதலின் மூன்றில் என்பதே பொருத்தமுடைய பாடமாகிறது.

னகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி

"**இளையவற்** பயந்தனள் இளைய மென்கொடி"[64]

வேறு : "**இளையவள்** பயந்தனள் இளைய மென்கொடி"

இளையவன்-பயந்தனள்-என்னும் புணர்ச்சியில்

"னகர விறுதி வல்லெழுத் தியையின்
றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே"[65]

என்னும் விதிப்படி னகரம் றகரமாகத் திரிந்தது. இளைய மென் கொடியாகிய சுமித்திரை இளையவனாகிய இலக்குவனைப் பெற்றெடுத்தாள் என்பது இவ்வடி தரும் பொருள். இளையவள் பயந்தனள் என்பதைப் பாடமாகக் கொண்டால் இளையமென் கொடி இளையவள் பயந்தனள் என்றாகி பெண்பாற்குழந்தையைச் சுட்டுவதாகிவிடும். எனவே இளையவற் பயந்தனள் என்பதையே பாடமாக ஏற்கமுடிகிறது.

ஒருமை-பன்மை-ஆண்பாலுள்

"வந்த நம்பியைத் தம்பி தன்னொடும்
முந்தை நான்மறை முனிக்குக் காட்டிநல்
தந்தை நீதனித் தாயு **நீயிவர்க்கு**"[66]

வேறு : "தந்தை நீதனித் தாயு **நீயிவற்கு**"

இவர்+கு—இவர்க்கு; இவன்+கு—இவற்கு என்பன பெயர்ச் சொல்லொடு கு உருபு புணர்ந்து நிற்கும் சொற்களாகும். இவர்க்கு என்பது பன்மைச் சொல்; இவற்கு என்பது ஆண்பால் ஒருமைச் சொல். இரண்டும் கு உருபு ஏற்றுவந்தன. கம்பர் பாடலுள் அங்குவந்த நம்பியாகிய இராமனை அவன் இளவல் இலக்கு வனோடு சேர்த்துக் கௌசிக முனிவனிடம் காட்டிய தசரதன், முனிவரை நோக்கி இவர்களுக்குத் (இவர்கள் இருவருக்கும்) தந்தையும் தாயும் நீயே யாவாய் என்று கூறினான் என்பது இவ்

64. கம்ப பாலகாண்டம், 5;105. 65. தொல். எழுத்து, 333,
63. கம்ப. பாலகாண்டம், 6 : 17,

வடிகளின் பொருள். இதில் அமைந்த பாடம் இவர்க்கு என்பதாகும். இவற்கு என்பதைப் பாடமாகக் கொண்டால், இருவரையும் காட்டி, இவனுக்குத் தந்தையும் தாயும் நீயே என்று கூறினான் தசரதன் என்பதே பொருளாகிவிடும். ஒருமை பன்மைத் தொடர்கள் மயங்கி இலக்கணப்பிழை ஏற்படுகிறது. எனவே இவர்க்கு என்பதே பிழையற்ற பாடமாகிறது.

ஒருமை-பன்மை-பெண்பாலுள்

''நல்லோள் கணவன் இவனென''[67]

வேறு : ''நல்லோர் கணவன் இவனென''

அரிவையை நான் பெறுவேனாக; அதனை இவ்வூரார் அறிவாராக; நல்லோள் கணவன் இவன் என்று சொல்வாராக என்னும் பொருள் தந்து நிற்பன இப்பாடலின் பிற அடிகள். அரிவையாகிய நல்லோளின் கணவன் இவன் என்பது பெண்பால் உணர்த்தும் நல்லோள் என்ற சொல்லுடன் தொடர்ந்த தொடராகும். நல்லோர் என்பது உயர்திணைப்பன்மையாகி, பலருடைய கணவன் இவன் என்னும் பொருள்தந்து பொருத்தமற்ற தொடராகி விடுகிறது. எனவே, நல்லோள் கணவன் என்பது இலக்கண முடைய பாடமாகும்.

ஒருமை-பன்மை-தன்மையிடத்தில்

''**யென்போல்** பெருவிதுப் புறுக இம் மையலூரே''[68]

வேறு : ''**யெம்போல்** பெருவிதுப் புறுக...''

யான் அஞ்சுவல்; **என்**போல் இவ்வூர் விதுப்புறுக என்பது பாடற் பொருள். யான் அஞ்சுவல் என்று தன்மை ஒருமையில் தொடங்கிய பின் எம்போல் விதுப்புறுக என்று தன்மைப்பன்மையில் முடிப்பது முறையன்று. ஆதலின் என்போல் என்பது முறையான பாட மாகும்.

ஒருமை-பன்மை-அஃறிணையில்

''............... அடியளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு''[69]

வேறு : தாஅய வெல்லாம் ஒருங்கு''[70]

தாயது-தாய (தாயவை) என்பன வேறுபாடுகள். எல்லாம் என்ற முடிப்புச் சொல்லால் தாயவை என்பது சரியான பாடம் என்று

67. குறுந்தொகை, 14.
68. புறநானூறு, 83. 69. குறள், 610. பரிமேலழகர்.
70. குறள் 610, பழைய உரையிற் காணும் பாடம்.

கொள்ளலாம், என்றாலும் திருமால் தன் அடியால் அளந்து கடந்த நிலம் எல்லாம் என்னும் பொருள்தரும் இவ்வடியில் நிலம் எல்லாம் என்று கூறுவதால் நிலம் பன்மையாகாது; எல்லாம் என்பது அவ்வொருமைக்கும் பொருந்தும். ஆதலின் தாயது ஆகிய நிலம் எல்லாம் என்ற பொருள் அமைப்பில் தாயது என்று கொள்ளுவதே பொருத்தமான பாடமாகும்.

முற்று-எச்சம்

"குரம்புகொண் டின்தேன் **பாய்த்தினன்**; நிரம்பிய"[71]

வேறு : "குரம்புகொண் டின்தேன் **பாய்த்தி** நிரம்பிய"

பாய்த்தி நிரம்பிய என்பது வினைஎச்சத் தொடராய் நின்று பொருள் தருகிறது. ஆயினும் இப்பாடலின் முன் பின் தொடர்கள் முறையே ஒடுக்கினன்; ஒல்லகில்லேன்; செய்தனன்; ஏற்றினன்; அமைத்தனன் என்பனவாகிய முற்று வினைகளையே கொண் டுள்ளன. ஆதலின் இவ்வடியிலும் முற்று வினைகொடுத்து மீண்டும் வேறு தொடரைத் தொடங்குவதே இலக்கணமுடையது ஆதலின் பாய்த்தினன் என்ற சொல்லையே பாடமாகக் கொள்ளவேண்டும்.

இலக்கணமுடையது-கொச்சைச்சொல்

"உம்பர்கட்கரசே... யோகமே! **ஊத்தையேன்** தனக்கு"[72]

வேறு : "......யோகமே! **ஊற்றையேன்** தனக்கு"

ஊத்தையேன் என்பது கொச்சைச்சொல் என்றும் ஊற்றையேன் என்பதே இலக்கணமுடைய தூய சொல் என்றும் கொண்டு ஊற்றையேன் என்று பதிப்பித்துள்ளனர். மலமுடையேன் என்னும் பொருள்தரும் தூய சொல் ஊத்தையேன் என்பதேயாகும். (ஊத்தை-அழுக்கு) ஊற்றை என்பது அப்பொருள் தருவதில்லை. அறிவுடைமை, ஆற்றல் என்னும் பொருள் தரும் ஊற்றம் என்பதன் திரிபேயாகும். எனவே ஊத்தையேன் என்பது இலக்கணமுடைய பாடமாகிறது.

5. முடிவு-மூலபாடம்-சிறந்த பாடம் : அகச்சான்று புறச் சான்றுகளும் இலக்கண அமைதிகளும் துணைக்கருவிகளாக அமையத் தேர்ந்தெடுக்கப்படும் பாடங்களையே மூலபாடம் என்று உறுதிப்படுத்துகிறோம். ஆயினும்,

---

71. திருவாசகம். திருவண்டப்பகுதி, வரி-173.
72. திருவாசகம், பிடித்தபத்து-1.

"அனைத்து மாறுபாடுந் திருத்தி ஆதிரூபங் காட்டுதல் இனி எத்துணை வல்லார்க்கும் அரிது"[73]

"பழைய காலத்து ஏட்டுப் பிரதிகள் அடைந்திருக்கும் ஈனஸ்திதியையும்...நோக்க அனேக வித்துவான்களாய் ஒருசபை சேர்ந்து ஒருவரோடொருவர் தீர்க்க ஆலோசனை செல்து... பதிப்பிப்பினும் பல வழுக்கள் புகுதற்கிடனாய இவ்வரிய நூலை"[74]

என்னும் சான்றோர் அனுபவக் கருத்தையும், இன்றைய தமிழ்ச் சுவடிகளை ஆய்வு செய்யும் அனுபவத்தையும் கொண்டு மூலபாடம் என்ற சொல்லைப் பற்றி ஒரு முடிவுக்கு வரமுடிகிறது. அதாவது தமிழ்ச்சுவடிகளை ஆய்வு செய்து உண்மைத் தொடர்களைக் காண்பது அல்லது மூலபாடம் இதுவே என நிறுவுவது என்னும் கருத்து பொருந்தாது. கிடைத்துள்ள தமிழ்ச் சுவடிகளின் தலை முறையை நோக்கியும், சுவடிகளில் காணும் வேறுபாடுகளின் தன்மை, அளவு ஆகியவற்றை நோக்கியும் ஆய்ந்து பார்க்கும் பொழுது கிடைத்துள்ள பாடங்களில் பொருத்தமுடைய, சிறந்த பாடம் எது என்பதை முடிவு செய்து தேர்ந்தெடுப்பதை இவ்வாய்வின் முடிவாகக் கொள்ளலாமே தவிர மூலபாடத்தைத் தேர்ந்தெடுத்தோம் என்பது பொருத்தமுடையதாகாது.

பதிப்பாசிரியர்-ஆய்வாளர் : பொருத்தமுடையது, சிறந்தது என்று முடிவு செய்வதும் பதிப்பாசிரியரின், ஆய்வாளரின் கருத்தைப் பொறுத்தே அமைவதாகும். அதுவே முடிவு வேறொரு பதிப்பாசிரியருக்கு, ஆய்வாளருக்குப் பொருத்தமற்றதாகத் தோன்றியுள்ளது. அன்றியும் ஒரு பதிப்பாசிரியருக்கே ஒருநூலின் முதற்பதிப்புக்கும் மறுபதிப்புக்கும் இடையே இக்கருத்து வேறுபாடு தோன்றியுள்ளதை எடுத்துக் காட்ட முடிகிறது.

இரண்டு பதிப்பாசிரியர்கள்-அனந்தராமையர்-காசிவிசுவநாதன்

"ஊரில்கூறும் அம்பலும் பொய்யாகிய **களவிற்** கூட்டமும் நீங்க"

என்று பதிப்பித்த அனந்தராமையர் '**கனவிற்** கூட்டமும் நீங்க' என்ற வேறுபாடும் உண்டு என்று காட்டினார்.[75] இவ்வுரையையே

73. வீரசோழியம், பதிப்புரை. (சி.வை.தா. பதிப்பு)
74. தொல், பொருள்,பதிப்புரை, பக். 28-29.
75. கலித்தொகை, 39 உரை

'**களவிற்** கூட்டமும் நீங்க' என்று பதிப்பித்துக் '**களவிற்** கூட்டமும் நீங்க' என்பதை வேறுபாடாகக் காட்டியது பாகனேரி வெளியீடு. (காசிவிசுவநாதன்)

'இளமழையாடும் குன்று'[76] என்பதன் சிறப்புரையாக, **கருத்தங்கிவந்து** சூல் முதிர்ந்தற்கு, மலையில் **பெய்கின்ற** மழை என்பது தோன்ற இளமழை என்றாள்' என்னும் பாடத்தை வேறு பாடாகக் காட்டியது பாகனேரி வெளியீடு. இவ்வுரையையே 'மலையில் **மேய்கின்ற** மழை' என்று பதிப்பித்து, 'மலையில் பெய்கின்ற மழை' என்ற வேறுபாடும் உண்டு என்று காட்டிய அனந்தராமையர், மேகம் மழையில் மேய்தல் என்பதைத் திருவிளை யாடல், இந்திரன் முடிமேல்-41ஆல் அறிக என்று தம் கருத்துக்கு ஆதாரமும் காட்டினார்.

இவ்வாறு இரண்டு பதிப்பாசிரியருக்கு இருவேறு பாடங்களும் கிடைத்துள்ளன. ஆனால் தேர்ந்தெடுத்த முறை மாறுபட்டுள்ளது. எனவே எது சிறந்தபாடம் என்பதை முடிவுசெய்வது பதிப் பாசிரியரை அல்லது ஆய்வாளரைச் சார்ந்தது என்பது தெளிவா கிறது.

ஒரே பதிப்பாசிரியர் - உ. வே. சாமிநாதையர்

உ. வே. சாமிநாதையரின் சிலப்பதிகாரப் பதிப்புகள் இரண்டில் (1892 பதிப்பு, 1927 பதிப்பு) அமையும் இவ்வேறுபாட்டு மாற்றங் களையும் இங்கு சான்றாகக் காட்டலாம்,

"பாசவர் வாசவர் **பன்னிண** விலைஞரோடு"[77]

வேறு : பாசவர் வாசவர் **மைந்நிண** விலைஞரோடு"

"பாசவர் வாசவர் **பைந்நிண** விலைஞரோடு" இது 1892 பதிப்புமுறை.

"பாசவர் வாசவர் **மைந்நிண** விலைஞரோடு"

வேறு : பாசவர் வாசவர் **பன்னிண** விலைஞரோடு" இது 1927 பதிப்புமுறை.

"இடர்புக் **குருமின் விடை**யிழ்வல் கண்டாய்"[78]

வேறு : இடர்புக் **கிடுகு மிடை**யிழவல் கண்டாய்"

என்பது இவ்வாறே இருபதிப்புகளிலும் மாற்றிப் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இக்காட்டுகள் ஒரே பதிப்பாசிரியர் பாடம் தேர்ந்

76. கலித்தொகை, 41.
77. சிலப்பதிகாரம், 5 : 26. 78. சிலப்பதிகாரம், 7 : 17

துள்ள முறையிலும் கருத்துவேறுபாடு தோன்றியுள்ளது என்பதைச் சுட்டுகின்றன. இவற்றால் 'மூலபாடம்' என்பது பதிப்பாசிரியரின் அல்லது ஆய்வாளரின் கருத்திற்கேற்ப அமையும் சிறந்த பாடமே தவிர நூலாசிரியரின் பாடம் என்று உறுதியாகக் கூறமுடியவில்லை.

"மூலபாடம் என்பது விளங்காத, உயர்ந்த சொல் அன்று; காரணத்தோடு கூடிய பொது அறிவினை உடையது. தவறாக அச்சானவற்றை நாம் காணும்போது உடனே திருத்துகிறோம். அங்கேயே மூலபாட ஆய்வு தொடங்கிவிடுகிறது. பழக்கத்தினால் இக்கலை வளர்ச்சியடைகிறது, ஆனால் மறதி உள்ளத்தில் இது முழுமை அடைவதில்லை"[79] என்னும் கருத்து நினைவு கூரத்தக்க தாகும்.

---

79. Art and Error. PP. 1-2.

7. பதிப்புமுறை

பதிப்பும் அச்சும்

> "நூல்களைப் பதிப்பிப்பதில் ஆராய்ச்சி என்பதற்கு இடமில்லையே; ஏட்டிலுள்ளதை அப்படியே பதிப்பிடத்தானே வேண்டும் என்று சிலர் கருதுவர்... முதலாவது தமிழ் ஏடுகளில் எழுதப்பட்டிருப்பனவற்றை வாசிப்பதே மிக்க சிரமமான வேலையாகும். உதாரணமாக, பொன் என்பதை—பொன், போன, பேரன் என்று வாசிக்கலாம். இதை நிச்சயப்படுத்தப் பொருளுணர்ச்சி, செய்யுளோசையுணர்ச்சி இருத்தல் வேண்டும்...
>
> 'யாரினு மினியன் பேரன் பினனே' என்பதை
> 'யாரினு மினியன் போன பின்னே'

என்று அச்சிட்டனர்".[1] சுவடியின் தன்மையை உணர்த்தும் இக்கூற்று பதிப்பின் அருமையை எடுத்துக் காட்டுகிறது. சுவடியின் தன்மை ஒருபுறமிருக்க, பொதுவாக அச்சிடுதல் என்பது வேறு; பதிப்பித்தல் என்பது வேறு என்பதையும் அறிய வேண்டும்.

> "இப்பதிப்பில் பலவான புதிய பாடங்களை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். யாவும் திருத்தமான பாடங்கள். அந்த வகையில் இதுவே சிவக்கொழுந்து தேசிகருடைய பதிப்புக்குப் பிறகு முதன் முதலாக வந்த பதிப்பு. மற்றவை யாவும் மறு அச்சுக்களே; பதிப்புக்கள் அல்ல"[2]

என்பது இவ்வுண்மையைத் தெளிவுபடுத்தும்.

---

1. தமிழ்ச் சுடர் மணிகள், பக். 316.
2. திருவாசகக் குறிப்புக்கள், பக். 156.

திருத்தமான பாடம் : இங்குத் திருத்தமான பாடம் என்றதனால் மூலபாடத்தைத் திருத்தி, மாற்றிப் பதிப்பிப்பது என்பது பொருளன்று. ஒரே சுவடி அல்லது ஒருசில சுவடிகளைக் கொண்டு வெளியிடும் ஒரு பதிப்பைக் காட்டிலும், பல சுவடிகளை ஆய்ந்து திருத்தமான, சிறந்த பாடத்தைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பிப்பதே திருத்தமான பாடமுடைய பதிப்பு ஆகும். ஒன்றிரண்டு ஏடுகளைப் பார்த்துப் பதிப்பிக்கும்போது, முன் இயல்களில் கூறியவாறு, பார்த்த ஏடுகளில் பிழைகள் இருந்திருக்கக் கூடும்; ஏட்டைப் படிப்பதிலும், ஏட்டிலிருந்து படியெடுப்பதிலும் பிழை நிகழ்ந்திருக்கக் கூடும். பல சுவடிகளை ஒப்பிடுவதில் அப்பிழைகள் திருத்தம் பெற்றுத் திருத்தமான பாடம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். அவ்வாறு கிடைக்கும் பாடமே திருத்தமான பாடம் ஆகிறது.

> ''திருத்தமான பாடம் என்று நாம் பேசும்போது திருத்தப்பட்ட பாடம் என்று யாரும் கருதாமல்... ஏடுகளில் உள்ள செம்மையான உண்மைப் பாடம் என்று அன்பர்கள் கருதுவார்களாக''[3]

என்னும் கருத்து இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

பதிப்பிக்கும் நூல் : சுவடிகளிலிருந்து பதிப்பிக்கத் தேர்ந்தெடுக்கும் நூல் இரண்டு வகையில் அமையும். ஒன்று இதுவரை அச்சாகாத நூல். மற்றொன்று எப்போதோ அச்சிடப் பெற்றது ஆயினும் இன்று கிடைக்காத நூல். இக்காலத்துக் கிடைப்பதாயினும் பலவகைத் திருத்தங்களோடு கூடிய ஆராய்ச்சிப் பதிப்பாக வெளியிடத் தகுதி வாய்ந்ததாகவும் இருக்கும். கிடைக்கும் சுவடியில் காணப்பெறுவது அச்சாகாத நூல் என்று எப்படி அறிவது? தமிழ் நூல்களைச் சார்ந்தவரை இக்கண்டுபிடிப்பு மிகக் கடினமானதாக அமைகிறது.

'அச்சாகாத நூல்' என்று அறியும் வழி : இச்சுவடியில் உள்ள நூல் இதுவரை அச்சாகவில்லை என்பதை முதலில் பதிப்பாசிரியர் அல்லது ஆய்வாளரின் பட்டறிவின் மூலம் அறியலாம். நூலகங்களிலுள்ள நூல் பட்டியல்களை ஆய்ந்து பார்த்து அப் பெயருடைய நூல் வெளியாகியுள்ளதா எனக் கண்டறியலாம். நூலகங்களில் காணும் முறையில் அந்தந்தத் துறையில் அமைந்துள்ள நூலகங்

---

3. திருவாசகக் குறிப்புக்கள், பக். 162.

களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது பெரும்பயன் அளிக்கும். நூலறிவு மிக்க சான்றோர்களை அணுகுவது பெரிதும் உதவியாக இருக்கும்.

தமிழ் நூல் விவர அட்டவணை : தமிழ்நாடு அரசினர் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற வெளியீடாக, அச்சான தமிழ் நூல்களுக்கான அட்டவணைகள் பத்துக்கு மேற்பட்ட தொகுதிகள் வெளி வந்துள்ளன. அவற்றுள் 1867 முதல் 1900 வரை அச்சான நூல் களுக்கான அட்டவணையே முதல் தொகுதியாகும். இத் தொகுதி களைத் தவிர,

1. Classified Catalogue of Tamil Printed Books, By John Murdoch, (1867-1910)
   Tamil Development and Research Council, Government of Tamil Nadu. Reprint-1968
2. British Museum Catalogue
   By Dr. L.D. Barnett & Dr. G.U. Pope—Year 1909 Upto –1900.
3. A Supplementary Catalogue of the Tamil Books, British Museum, 1931
   By Dr. L.D. Barnett.

ஆகிய அட்டவணைகளும் பயன்படுவனவாகும். சென்னை, மாவட்ட மைய நூலகத்தின் சார்பில் ஆண்டுதோறும் ஓர் அட்டவணை வெளியிடப் பெறுகிறது. நூலகம் போன்ற இதழ்கள், தினத்தாள்கள் ஆகியவற்றில் சில நூல்கள் மதிப்புரை யாக வெளியாகின்றன. இவை அனைத்துமே அச்சான நூல்களை நமக்கு எடுத்துக் காட்டுவன. இவற்றை ஆய்ந்து இந்தச் சுவடி அச்சாகவில்லை என்ற முடிவுக்கு வரவேண்டும்.

1. பதிப்பின் முன்னேற்பாடு : திருத்தமான பதிப்பை மேற் கொள்ளுவதற்குச் சில முன்னேற்பாடுகள் தேவைப்படுகின்றன. பதிப்பிற்குத் துணை நிற்பன முதற் கருவிகளும் துணைக் கருவி களும் என இருவகைப்படும். ஓலைச் சுவடிகள், தாள் சுவடிகள், பழைய பதிப்புகள் ஆகியவை முதற் கருவிகளாகும். மொழி

பெயர்ப்புகள், மேற்கோள் நூல்கள், உரை நூல்கள், அகராதிகள் ஆகியவை துணைக் கருவிகளாகும். இக்கருவிகளுடன் பதிப்புப் பணியைத் தொடங்கலாம். தேர்ந்தெடுக்கப்பெற்ற மூலச் சுவடியை வைத்துத் தூய படியினைத் தயாரிப்பது முதற்பணியாகிறது. பிற சுவடிகளின் துணைகொண்டு முறையாகப் பாட வேறுபாடுகளைக் குறித்துக் கொள்ளுவது இரண்டாவது பணியாகும். மூன்றாவதாகப் பதிப்பு ஆய்வுப்பணி மேற்கொள்ளப் பெறும்.

அ. முதற்பணி—படியெடுத்தல்

படியெடுத்தலில் ஏற்படும் சிக்கல்கள் : சுவடிகளில் பாடல், உள்தலைப்பு, உரை, விளக்கம், பாடல்எண், சுருக்கக் குறியீடுகள், திணை துறை விளக்கம், இலக்கணக் குறிப்பு, மேற்கோள், ஒப்புமைப் பகுதி, பாடவேறுபாடு, அவ்வேறுபாட்டு விளக்கம், பிற உரையாசிரியர் கருத்து, அதற்கான மறுப்பு ஆகியவை ஒன்றற்கொன்று பிரித்து அறிய இயலாதவாறு தொடர்ந்து எழுதப் பெற்றிருப்பது முதல் சிக்கல். புள்ளியின்மை, கொம்பு, கால், ரகரம் இவற்றில் வேறுபாடின்மை, சில எழுத்துகளின் வடிவ வேறுபாடு, கையெழுத்துத் தெளிவின்மை ஆகிய குழப்பங்கள் இரண்டாவது சிக்கல்.

ஆ. சிக்கல் நீக்கும் வழி

சுவடிகளில் காணும் இச் சிக்கல்கள் முதன்முதலில் சுவடிப் பதிப்பில் ஈடுபட்டவர்களுக்குப் பெருந்துன்பத்தை அளித்தன. இச்சிக்கல்களை அறுத்து உண்மைத் தொடர்களை அறியப் பெரும் பாடுபட்டனர். ஆழ்ந்த நூலறிவும், நினைவாற்றலும், பதிப்பில் ஊக்கமும், அதற்கேற்ற உழைப்பும் உடைய ஒரு சிலரே சிறந்த பதிப்புகளை உருவாக்கி வெற்றி பெற்றனர். ஆனால் இக்காலத்தில் பதிப்புக்கலை முன்னோடிகளின் அனுபவங்கள் துணை நிற்கின்றன. துணைக் கருவிகளும் பலவாகக் கிடைக்கின்றன. அவற்றின் துணையால் இச்சிக்கல்களை எளிமையாக நீக்கிக் கொள்ளலாம். பாட வேறுபாடுகள், மூலபாட ஆய்வு ஆகிய இயல்களில் கூறப்பெற்ற செய்திகள் முன்னோடிகளின் அனுபவங்களை அளிக்கின்றன. சுவடிகளில் காணப்பெறும் எழுத்து முறைகள், பாட்டு அமைப்புகள் ஆகியவற்றில் பயிற்சி பெறுவது குழப்பங்களிலிருந்து விடுபடத் துணைபுரியும்.

இ. சுவடிகளில் எழுத்துமுறை

சுவடியில் காணப்பெறும் எழுத்து முறையினை நான்கு வகைப் படுத்தலாம். 1. பழைய எழுத்து வடிவம் 2. கையெழுத்து வேறுபாடு 3. கிரந்த எழுத்துகள் கலந்திருத்தல் 4. கூட்டெழுத்து கள் என்பன அவ்வகைகளாகும்.

சுவடிகளில் காணும் வடிவம்



பழைய எழுத்து வடிவம் : சுவடிகளில் காணும் பழைய எழுத்து வடிவங்கள் அடுத்த பக்கத்தில் காட்டப் பெற்றுள்ளன. சுவடிகளில் புள்ளியின்மைக்குச் சில காரணங்களை உணர முடிகிறது.

புள்ளியின்மை : 'புள்ளி வைப்பதனால் பனையேட்டில் ஓட்டை விழும்; கல்லில் சிதறலுறும்; உடைப்பும் ஏற்படும்' என்பதனால் புள்ளி வைப்பதில்லை.[4] மேலும், புள்ளி வைப்பதனால் ஒருவரி எழுதும் இடம் வீணாகிறது என்னும் கருத்துகள் பரவலாக இருந்து வருகின்றன. ஆனால்,

"உட்பெறு புள்ளி யுருவா கும்மே"[5]

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்"[6]

"மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்"[7]

என்பன சுவடிகளில் புள்ளியிட்டு எழுதியமையை உணர்த்துகின்றன.

'ஏனை உயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்' என்பதற்கு உரை விளக்கம் தரும் நச்சினார்க்கினியர், 'கா, ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியை வளைத்து எழுதினர்' என்பர்.[8] இதனால் ஆகார உயிர்மெய்கள் அருகில் புள்ளியிட்டே எழுதப்பட்டன என்பதும் பெறப்படுகிறது. எனவே புள்ளி வைப்பதனால் ஓலையில் ஓட்டை விழும் என்பது பொருந்துவதாக இல்லை. புள்ளி வைத்து எழுதப்பெற்ற சுவடிகள் சில காணப்படுகின்றன. அவை புள்ளியினால் எவ்விதச் சேதமும் பெறவில்லை. (ஆர். 778, டி. 159 ஆகிய சுவடிகள்)

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை புள்ளியிட்டு எழுதும் வழக்காறு இருந்தது. அதன் பிறகே அவ்வழக்காறு கைவிடப் பட்டுப் புள்ளியின்றி எழுதும் நிலை உருவாகியுள்ளது என்பர்

---

4. பாண்டியர் வரலாறு, பக். 220. 5. தொல். எழுத்து, 14.
6. மேற்படி, 15. 7. மேற்படி, 104.
8. மேற்படி, 17. நச்சினார்க்கினியர் உரை.

த.ந. சுப்பிரமணியன்.[9] ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழ்மொழியில் வடமொழியின் தாக்கம் மிகுதியாகிவிட்டது. அதனால் கிரந்த எழுத்துகள் தமிழ்மொழியில் கலக்கத் தொடங்கின. புள்ளியிட்டு எழுதும் வடிவம் கிரந்த எழுத்துகளுக்குக் கிடையாது. கிரந்தம் தெரிந்தவர்கள் தமிழ்ச் சுவடிகளை எழுதும்பொழுது சிறிது சிறிதாகச் சில கிரந்த எழுத்துகளையும், புள்ளியின்றி எழுதும் கிரந்த எழுத்து முறைகளையும் சுவடிகளில் புகுத்தி விட்டனர் என்பது எஸ். சௌந்தர பாண்டியனின் கருத்தாகும்.[10]

இவற்றிலிருந்து, சுவடியில் ஓட்டை விழும் என்பதனால் புள்ளியின்றி எழுதினார்கள் என்னும் கருத்து பொருத்தமுடையதாகத் தெரியவில்லை; கிரந்த எழுத்துகளின் தாக்கத்தினால் இம்முறை ஏற்பட்டதாகலாம் என்று அறிய முடிகிறது. சொற்களை இடம், பொருள் உணர்ந்து புள்ளிகளைச் சேர்த்துப் பதிப்பிப்பது பதிப்பாசிரியர் கடமையாகும்.

'பெரிய இரதத்தை நடாத்தித் திரிகின்ற கருணைக் கடல்'[11] என்ற தொடரில் 'திரிகின்ற' என்ற சொல் சுவடியில் 'திரிகினற' என்று காணப்படுகிறது. படியெடுத்தவர் 'கி' என்ற எழுத்தைக் 'க' என்னும் உயிர்மெய்யாகக் கொண்டு புள்ளியை அடுத்த எழுத்திற்கு மாற்றி வைத்து—திரிகனற் கருணைக் கடல் என்று எழுதினார். பொருள் பொருத்தமில்லாமற் போயிற்று.

பிற்காலச் சுவடிகள் சிலவற்றில் புள்ளியின்றி சிறு கோடிட்டுக் காட்டப் பெற்றுள்ளது. ஆனால் அச்சிறு கோடு புள்ளி வைத்துப் படிக்கக் கூடாது என்பதைச் சுட்டுவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

'தாவிக கனஙக ளருதது முன னாணடரு ளஞச லெனற'[12]

'பலலுயிரதள புகழநதுவர'[13]

என்பனவற்றுள் ள, ர இவற்றின்மீது புள்ளி வைத்தும் படிக்கலாம். ஆனால் இங்கு புள்ளி வைக்க வேண்டாம் என்பதற்காக, மேலே கூறியபடி சிறு கோடு இடப்பெற்றுள்ளது. இதே அடிப்படையில்,

9. தென்னிந்திய கோயிற் சாசனங்கள், 3-2, பக். 1532.
10. Tamil Civilization, p. 90.
11. அரங்கன் சரிதம், 617 உரை.
12. மருதூ ரந்தாதி, டி. 263.
13. நசரைக் கலம்பகம், டி. 298.

'பயத் தொடும் வரவிடும் ஒற்றரை'—

என்ற பொருள்படுந் தொடர்

'பயத்தொடு மவர்விடும் ஒற்றரை'

என்றே அச்சாகி உள்ள நிலையையும் காண முடிகிறது.[14]

ஏகார, ஓகார உயிர்மெய்கள் : சுவடிகளில் எகர, ஏகார உயிர்மெய்களும், ஒகர, ஓகார உயிர்மெய்களும் ஒற்றைச் சுழிக் கொம்புடனே எழுதப் பெற்றுள்ளன. எகர ஒகரங்கள் மெய் போலப் புள்ளிபெறும் இயல்பிற்று. எனவே ஏகார ஓகாரங் களுக்குப் புள்ளி இல்லை யாயிற்று. இஃது உயிர்மெய்க்கும் ஒக்கும்[15] என்பது நச்சினார்க்கினியர் கூற்று. இதனால் எகர ஒகர உயிர்மெய்கள் புள்ளியிட்டும், ஏகார ஓகார உயிர்மெய்கள் புள்ளி யின்றியும் ஒற்றைச் சுழிக் கொம்புடன் எழுதப்பெற்றன என்பது தெளிவாகிறது. புள்ளி வைக்கும் வழக்காறு மறைந்த காலத்தில் அக் குறில் நெடிகளில் வேறுபாடு அறிய இயலாத நிலை ஏற்பட்டு விட்டது. இக் குறில் நெடில்களைப் பாடல்களில் ஓசை நயத்தா லும், சீர்தளை சிதைவுறாத் தன்மையாலும் அறிந்து ஒழுங்குபடுத் தலாம். உரைநடையாயின் பொருள் அமைப்பிற்கேற்ப ஒழுங்கு படுத்த வேண்டும்.

''சேரன் மடவன்னம் சேர னடையொவ்வாய்''[16]

என்னும் சிலப்பதிகார அடி, உ. வே. சா.வின் முதற் பதிப்பில் (1894), ''சொன் மடவன்னம் சொன்னடையொவ்வாய்'' என்று அச்சிடப் பெற்றது. மறு பதிப்புகளிலும், பிற உரையுடன் கூடிய பதிப்புகளிலும் 'சேரன்' எனத் திருத்தம் பெற்றது. கொம்பினால் குறில் நெடில் அறிய இயலாத நிலையும், காலும் ரகரமும் மயங்கிய நிலையும் இப்பிழை தோன்றியதற்குக் காரணங்களாயின. ஓசை நயத்தால் திருத்தம் பெற்றது; பொருள் பொருத்தமும் இணைந்தது.

தொல்காப்பியம், சொல்லதிகார நூற்பா அறுபத்தாறில் 'வியங்கொள வருதல்' என்று கு. சுந்தரமூர்த்தி பதிப்பித்துள்ள தொடர், சி. வை. தாமோதரம் பிள்ளை பதிப்பில் 'வியங்கோள் வருதல்' என்று காணப்படுகிறது. புள்ளியின்மையும் ஒற்றைச்

---

14. மெய்க்கீர்த்திகள், பக். 43.
15. தொல். எழுத்து, 16. 16. சிலப்பதிகாரம், 7:23.

சுழிக் கொம்பின் அமைப்பும் இவ்வேறுபாடுகளைத் தோற்றுவித்துள்ளன.

''படியானையெ பிணிப்புண்பன
செலொடையே கலக்குண்பன''[17]

என்பன அச்சில் காணப்படும் அடிகள். இவற்றுள், யானையே, செலோடையே என்பன யானையெ, செலொடையே என அச்சிடப்பட்டன. இவை எகர ஒகரக் கொம்புகளால் நிகழ்ந்துள்ள பிழைகளாகும்.

'சோணாடெங்கும் சோற்றுமலை கண்டருளி' என்னும் தொடர் பொருள் பொருத்தமின்றி, ஓசை நயமின்றி, 'சேர நாடெங்குஞ் சொற்றுமலை கண்டருளி' என்று பதிக்கப் பெற்றுள்ளது.[18] இவை சுவடி இயல் பயிற்சிக்குச் சிறந்த அனுபவம் ஊட்டுவனவாகும். எழுத்து அட்டவணையில் காணும் பிற எழுத்து முறைகளையும் கூட்டெழுத்துகளையும் அறிவதால் மேலும் சுவடிப் படிப்பை எளிதாக்கிக் கொள்ளலாம்.

கையெழுத்துத் தெளிவின்மை : எழுதுவோரின் பழக்கத்திற்கேற்பச் சில எழுத்துகள் ஐயம் தருவனவாக இருக்கும். இந்த முறை இக்காலத்திலும் சிலரிடையே காணப்படுவதை அறியலாம். ஐயம் தரும் எழுத்துகளின் பட்டியலும் கீழே தரப்படுகிறது. கையெழுத்துத் தெளிவின்மையால் ஏற்படும் ஐயங்களை யூகத்தாலும், இடம், பொருள் பொருத்தங்களாலும் நீக்கிக் கொள்ளலாம். மேலும், ஒரு சுவடியில் ஒரு சில ஏடுகளைப் பொறுமையாகப் படிப்பதாலும் ஐயத்தைப் போக்கிக் கொள்ள முடியும். ஐயம் ஏற்படும் ஓர் எழுத்து மேலும் சில இடங்களில் அவ்வாறே இருக்கும். அங்கு உள்ள சொல்லின் பொருத்தத்தால் அவ்வெழுத்தைப் புரிந்து கொள்ளலாம். சுவடி முழுமையும் எழுதி முடித்தபின் அச்சுவடியின் கையெழுத்து முறையை நன்கு புரிந்து கொள்ளலாம். எனவே மீண்டும் ஒருமுறை அச்சுவடியையும் எழுதிய படியையும் வைத்துக்கொண்டு ஒப்பிட்டுப் பார்ப்பதனால் பல எழுத்துகள் தூயவடிவம் பெறும்.

---

17. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி-17, எண். 592.
18. மேற்படி, தொகுதி-3, எண். 85; புதுக்கோட்டைக் கல்வெட்டுகள், எண். 180.

கையெழுத்தில் ஒன்றுபோலக் காணும் சில வடிவங்கள்

அ, சு, தமிழ் எண்-8 (அ)
ஆ, சூ
இ, டு, ரு, கு, ந, தமிழ் எண்-5 (ரு)
உ, 2, தமிழ் எண்-௨ (உ) பிரிப்புக்குறி (உ)
எ, ெ, ஒ, தமிழ் எண்-7 (எ)
ஐ, ஜ,
ஓ, எ, ஞ,
க, ச, த, ந, தமிழ் எண்-1 (க), 4(ச), 9 (கூ)
ங, ந, தமிழ் எண்-3 (ங)
த, சு, ந,
ப ம, வ, மு, மூ
ம, ய, பி, தமிழ் எண்-10 (ய)
ா, ா, ெ, ற (ந)
ல, வ, ழ, டி
ள, ன, ை, தமிழ் எண்-100 (ம)
ற, ள, த

கையெழுத்துத் தெளிவின்மையால் ஏற்பட்ட சில வேறுபாடு களுக்கு அச்சு நூல்களில் சான்றுகள் கிடைக்கின்றன.

சோழனென்னும் பதிகெழு கோவிராசகேசரி என்னும் தொடருக்குப் மதிகெழு கோவிராசகேசரி என்ற வேறுபாடும் அச்சாகியுள்ளது.[19] இதே போல,

அளபிறந்தனவே என்பது அளவிறந்தனவே எனவும்[20]

நூலார் கடுந்திரளார் என்பது நூலராக இந்திரளார் எனவும்[21]

சாலகத்தினால் புகைபோம் என்பது சாலகத்தினால் புகையோம் எனவும்[22]

கள்ளுண்பன பூங்கொடியே என்பது தள்ளுண்பன பூங்கொடியே எனவும்[23]

---

19. மெய்க்கீர்த்திகள், பக். 158.
20. தொல். சொல். சேனாவரையம், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பும்-தெய்வச்சிலையார் உரையும்.
21. அல்லி கதை, வரி. 3385.
22. அளகேசுவரராசன் கதை, வெண்பா-13.
23. மெய்க்கீர்த்திகள். பக். 141.

சிறையெனப்படுதல் என்பது சினையெனப்படுதல் எனவும்[24]
புலியாணையும் என்பது புலியானையும் எனவும்[25]

அச்சாகியுள்ள சான்றுகள் கையெழுத்துத் தெளிவின்மையால் நிகழ்ந்தவை எனலாம். இவை படியெடுப்போருக்குச் சிறந்த அனுபவத்தை ஊட்ட வல்லவையாகும். ஐயம் ஏற்படுமிடங்களில் இவ்வனுபவங்களைப் பயன்படுத்தித் தெளிவு பெறலாம். கிரந்த எழுத்துகளையும், கூட்டெழுத்து முறைகளையும் அடுத்த பக்கத்தில் காணலாம். அவ்வெழுத்துகளை ஓரளவு நினைவிற் கொள்ளுவது, சுவடிகளில் அவ்வெழுத்துகள் கையாளப் பெறும் இடங்களில் பயன்படும்.

கிரந்த எழுத்துகள் உயிர் (அச்சு)

24. மேற்படி, பக். 124.
25. மேற்படி, பக். 158.

கிரந்த எழுத்துகள் - மெய் (அல்)



கூட்டெழுத்து

கூ = க்க		ணு = ணம் - வண்ணு = வண்ணம்
கூ = க்கு		பு = பம - விருபு = விருப்பம
ட = ட்ட		யு - யம் - வையயு - வையயம்
கு = தத		
து = த்து		
பு = ப்பு		

குறியீடுகள் — ஹூ - ஆண்டு
மீ - மாதம்
உ - தேதி

௬ பாட்டு அமைப்பு

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா என்பன யாப்புறுப்புகள். அவற்றுள் முதல் ஆறும் பாவின் உறுப்புகளாகும். இவ்வுறுப்புகளுள் சீரும் தளையும் பொருந்தி வருவதும், தொடை நயம் தோன்றி வருவதும் பாடலுக்குரிய அமைப்புகளாகும். இப்பாடல் அமைப்புகளில் நல்ல பயிற்சி ஏற்பட்டால் சுவடிகளி லிருந்து பாடல்களை முறைப்படுத்தி எழுதுவது எளிமையாகிவிடும். இப்பயிற்சியால் சுவடி எழுதுவதில் தோன்றும் பல சிக்கல்கள் நீங்கும்.

சீர் அளவு ஒத்து வருதல்: ஒரு அடியில் ஆறு சீர் அமைகிறது என்றால் அப்பாடலின் நான்கு அடிகளிலும் ஆறு ஆறு சீர்கள் அமைதல் வேண்டும் என்பது மட்டும் சீர். அளவு ஒத்து வருதல் ஆகாது. முதலடியின் முதற்சீர் மாச்சீராயின் அப்பாடலின பிற மூன்றடிகளிலும் முதற்சீர்கள் மாச்சீர்களாகவே அமைதல் வேண்டும். இரண்டாம் சீர் முதலாகிய பிற சீர்களும் முதலடியில்

வந்தவாறே பிற மூன்றடிகளிலும் பொருந்தி வருதல் வேண்டும் இதுவே சீர் அளவு ஒத்து வருதல் என்பதாகும்.

விருத்தவகை : பாடற் பொருளின் வன்மை, மென்மைகளுக் கேற்ற நடையை அமைக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டது விருத்தப்பா வடிவமாகும். இவ்வடிவம் பயிற்சிக்கும் எளிமையுடையதாகும். அறுசீர் விருத்தம், எழுசீர், எண்சீர் விருத்தங்கள் ஆகியவை ஆசிரிய விருத்த வகைகளில் சிறப்புடையன. கலிவிருத்தம், கலித்துறை• கலிவெண்பா ஆகியவையும் பயின்றுவருவன. இவற்றுள், விருத்தப் பாக்கள் நான்கு அடிகளை உடையவை.

அறுசீர் ஆசிரிய விருத்தம் : ஆறு சீர்களாலான அடிகள் நான்கு கொண்டது அறுசீர் விருத்தம் எனப்படும். ஆயினும் சீரளவினால் பலதிறப்படும். அவற்றுள் கீழே காட்டப்பெறும் ஏழுவகை விருத்தங்கள் பயின்று வருவனவாகும். அவற்றுள் நல்ல பயிற்சி பெறுவது பயனுடையதாகும். பிறவகைகளை அறிய இப்பயிற்சி துணையாகும்.

வகை-1 (விளம் மா மா விளம் மா மா)

"ஆடகச் செம்பொன் கிண்ணத் தேந்திய அலங்கல் தெண்ணீர்
கூடகங் கொண்ட வாழ்நாள் உலர்ந்ததேற் கொல்லும் பவ்வத்
தூடகம் புக்கு முந்நீர் அழுந்தினும் உய்வர் நல்லார்
பாடகம் போலச் சூழ்ந்த பழவினைப் பயத்தி னென்றான்"[26]

இவ்வறுசீர் விருத்தத்தில் முதலடியின் முதற்சீரும் நான்காம் சீரும் விளச்சீர்கள். பிற நான்கும் மாச்சீர்கள். இதே சீர் அளவுகள் அடுத்த மூன்று அடிகளிலும் ஒத்து நிற்கின்றன. மாறினால் ஓசை கெடும். ஓர் அடியின் இவ்வமைப்பை வரையறை செய்துகொண்டு ஓசையைப் புரிந்துகொண்டால் பிற அடிகளை இதே அமைப்பில் எழுதுவது எளிமையாகிவிடும். தொடர்நிலைச் செய்யுட்களில், தொடர்ந்து பல பாடல்கள் ஒரே வகையில் அமையும். சுவை வேறுபடும்போது இவ்வமைப்பு மாறுபடுவதுண்டு. மாறுபடுமிடத் திலும் ஓர் அடியின் அமைப்பை இவ்வாறே வரையறுக்க வேண்டி வரும்.

சுவடிகளிலிருந்து தனித்தனி அடிகளைப் பிரித்தெழுதப் பயன் படுவது தொடையமைப்பாகும். இப்பாடலில் அடியெதுகை

26, சீவகசிந்தாமணி, 510.

அமைகிறது. இது எல்லா விருத்தங்களுக்கும் உரியது. இரண்டிரண்டு அடிகளுக்கு ஒருவகை எதுகையாக - இருவிகற்பமாக - அமையவும் கூடும், ஒவ்வொரு அடியிலும் காணப்பெறும் தொடை விகற்பங்கள் சீர்களைப் பிரித்தறிய ஏதுவாக இருக்கும். இப்பாடலில் அடி தோறும் முதற்சீரும் ஐந்தாம் சீரும் மோனைத் தொடையால் அமைவது, சீர்பிரித்து எழுதுவதற்குத் துணைபுரியும்.

வகை-2 (மா மா காய் மா மா காய்)

அங்கைத் தலத்துத் தனரேகை
 யளவில் செல்வந் தருமுனது
செங்கைத் துடிதென் மதுரேசர்
 செம்பொற் புயத்தில் சேர்க்குமால்..."[27]

இதில் அடியெதுகை அமைகிறது. முதற் சீருக்கேற்ற மோனைத் தொடை எல்லா அடிகளிலும் மூன்றாஞ் சீரில் அமைகிறது.

வகை-3 (வெண்டளைகளாக வரும் அறுசீர்கள்)

"சீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவின் பாதளம் ஏழினுக் கப்பால்..."[28]

இது முதலும் நாலுமாகிய சீர்கள் மோனையும், அடியெதுகையும் உடையது.

இவ்விருத்தப் பாக்களைக் கையாண்டுள்ள நூலாசிரியருள் பலர், தாம் எடுத்துக்கொண்ட ஒருவகைப் பாவினையே நூல் முழுமையும் கையாளுகின்றனர். சோதிடம், தோத்திரம், நிகண்டு, மருத்துவம் முதலிய நூல்களில் தொடக்கத்தில் அமையும் வகை விருத்தப் பாக்களே நூல் முழுமையும் காணப்படுகின்றன. திருவருட்பாவில் காணப்பெறும் அறுசீர் விருத்தப் பாக்கள் பெரும்பாலும் ஒரே நடையின. சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் ஆகியவை பொருளுக் கேற்பப் பலதிறப்பட்ட விருத்தப் பாக்களை மேற்கொள்ளுகின்றன. இவ்வமைப்புகள் சுவடிகளில் சேர்ந்து காணப்படும் அடிகளையும் சீர்களையும் பிரித்தறியப் பயன்படுவனவாகும்.

எழுசீர் ஆசிரிய விருத்தம் : இரண்டாம் சீர், நான்காம் சீர், ஏழாம் சீர் ஆகிய மூன்றும் மாச்சீர்களாகவும், பிற நான்கும் விளச்

---

27. மீனாட்சியம்மை குறம்-30.
28. திருவாசகம், குயிற்பத்து, 1.

சீர்களாகவும் வரும் ஒருவகையினையே எழுசீர் விருத்தமெனவும், பிறவற்றை எழுசீர் சந்த விருத்தம் எனவும் கொள்வர் டி. வீரபத்திர முதலியார்.[29] ஆயினும், சீர் அளவு ஒத்து வரும் எழுசீர் விருத்தங்கள் பலவகை காணப்படுகின்றன. அவற்றில் அமையும் அடியெதுகை முறையும், அடிதோறும் பொருந்தி வரும் மோனையும் சுவடியிலிருந்து பிரித்து எழுதுவதற்குப் பயன்படுவன வாகும்.

வகை-1 (விளம் மா விளம் மா விளம் விளம் மா)

"கண்ணுதல் மதுரைப் பிரானையிவ் வாறு
கருதிய பாணியாற் கனிந்து
பண்ணுதல் பரிவட் டனைமுதல் இசைநூல்
பகர்முதற் றொழிலிரு நான்கும்..."[30]

அடிதோறும் முதற்சீரும் ஐந்தாம் சீரும் மோனைப் பொருத்தம் உடையது. எழுசீர் விருத்தங்கள் இம்முறையிலேயே அமைகின்றன.

வகை-2 (மா மா மா மா மா மா காய்)

"காரார் குழலாள் உமையோ டயில்வேற்
காளை யொடுந்தான் அமர்கின்ற
ஏரார் கோலங் கண்டு களிப்பான்
எண்ணும் எமக்கொன் றருளானேல்..."[31]

வகை-3 (காய் காய் காய் காய் காய் மா மா)

"ஆறுதலை வைத்தமுடி நீணிலவெ றிப்பவெமை
ஆளுடைய பச்சை மயிலோ
டீறுமுதல் அற்றமது ராபுரியி லுற்றபர
மேசரொடு சற்று முணரார்..."[32]

எழுசீர் விருத்தங்களுக்கான இவ்வகைகளில் சீர் அளவு ஒத்து வரும் ஓசை நயம் அறிந்து பயிற்சி பெற்றால் சுவடிகளிலிருந்து எடுத்து எழுதுவது எளிமையாகிவிடும்.

எண்சீர் ஆசிரிய விருத்தம் : மேற்கூறிய இருவகை விருத்தங் களைப் போன்று சீர் அளவால் பல வகைகளை உடையது இவ்

---

29. விருத்தப்பாவியல், பக். 14.
30. திருவிளையாடற்புராணம், இசைவாது வென்றது-37.
31. திருவருட்பா, 2 : 24 : 1. 32. மதுரைக் கலம்பகம், 20.

விருத்தம். பெரும்பாலும் முதல் நான்கு சீர்கள் பெறும் அளவினையே அடுத்த நான்கு சீர்களும் பெற்று வரும்; அடிதோறும் முதற்சீறும் ஐந்தாவது சீரும் மோனை பொருந்தி வரும். இவ் வகையிலும் சந்த விருத்தங்களைப் பிரித்துக் காட்டுவர்.[33]

வகை-1 (காய் காய் காய் மா காய் காய் காய் மா)

"மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரும் நாண
முழுதுலக மூடியெழில் முனைவயிரம் நாற்றித்
தூவடிவி னாலிலங்கு வெண்குடையின் நீழல்
சுடரோய்நின் அடிபோற்றிச் சொல்லுவதொன்
றுண்டால்"[34]

கலிவிருத்தம் : நான்கு சீர்களாலான அடிகள் நான்கு வரப் பாடுவது கலிவிருத்தமாகும். எத்தகு சீர்களும் அமையலாம். 'வெண்பாவின் நான்காமடி நான்கு சீராகப் பாடுவோமானால் அது கலிவிருத்த மன்றோ' என்பர் வீரபத்திர முதலியார்.[35] ஆனால் பலவிடத்து வெண்தளை வழுவி வருவது கலிவிருத் தத்தின் இயல்பாகிறது. அளவடி நான்காயமைவது கலிவிருத்த மாகிறது. சீர் அளவு ஒத்து வருதலிலும் சிலவிடத்து மாற்றம் பெறுகிறது. சீர் அளவு ஒத்து வரும் கலிவிருத்தம், சீர் அளவு ஒத்து வராத கலிவிருத்தம் என இரண்டு வகையிலும் அமைகிறது. அடி எதுகை கொண்டு அடியைப் பிரித்து அறியவும், பொழிப்பு மோனை அமையும் தன்மையில் சீர்களைப் பிரித்து அறியவும் இயலும்.

வகை-1 (மா விளம் விளம் விளம்)

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே"[36]

வகை-2 (காய் மா மா காய்)

"வேகமுறு நெஞ்ச மெலிவு மெளியேன்றன்
தேக மெலிவுந் தெரிந்து மிரங்காயேல்..."[37]

---

33. விருத்தப்பாவியல், பக். 64.
34. யாப்பருங்கலம், உறுப்பியல், 25 (எ-டு.)
35. விருத்தப்பாவியல், பக். 19. 36. பாலகாண்டம், பாயிரம்-1,
37. திருவருட்பா, 2 : 74 : 1.

இவை கலிவிருத்த வகைகளுள் சில. இரண்டாவது வகை நான்கு சீர் என்ற அளவில் அடிதோறும் அமைந்தாலும் அளவொத்து அமைதல் இல்லை. பொழிப்பு மோனையுமில்லை. இவை பொருந்து மாற்றினை அறிந்து பிரித்து எழுதுவதற்குப் பாடலின் பலவகை களையும் அறிதல் பயன்தரும்.

கலித்துறை : நெடிலடி நான்காய் வருவது கலித்துறை. முதற் சீரோடு ஐந்தாம் சீர் மோனை ஒன்றிவரும். சீர் அளவு பொருந்தி வரும் அமைப்பினைக் கொண்டு கலித்துறைப் பாடலையும் வகைப் படுத்தலாம். இவ்வகைகளை அறிவதன்மூலம் சுவடிகளில் இணைந்து கிடைக்கும் அடிகளையும் சீர்களையும் எளிமையாகப் பிரித்து எழுத முடியும்.

வகை-1 (காய் விளம் மா காய் காய்)

"நான்செய்த புண்ணியம் யார்செய் தனரிந்த நானிலத்தே
வான்செய்த தேவருங் காணாத காட்சி மகிழ்ந்து
கண்டேன்..."[38]

இவ்வாறான சீர் அளவு ஒத்து வரும் நெறிமுறைகளை நன்கு பயின்று பாடல்களைப் பதிப்பிக்கும் முறையை எளிமைப்படுத்திக் கொள்ளலாம்.

கட்டளைக் கலித்துறை : நெடிலடி நன்காய் வருவது; முதற் சீர் நான்கும் வெண்டளை பொருந்தி கடைச்சீர் கருவிளங்காய், கூவிளங்காய் ஆகிய இரண்டில் ஒன்றாகி வருவது கட்டளைக் கலித்துறை ஆகிறது. முதற்சீர் நேரசையில் தொடங்குமாயின் ஓரடிக்குப் பதினாறு எழுத்தும், நிரையசையில் தொடங்குமாயின் பதினேழு எழுத்துமாக அமையும். ஏகாரத்தில் முடியும். வெண்டளை பொருந்த வரும். முதற்சீர்கள் நான்கும் பெரும்பாலும் ஈரசைச் சீர்களாக வரும். சிறுபான்மை தேமாங்காய், புளிமாங் காய்ச் சீர்கள் வருவதும் உண்டு. எவ்வாறாயினும் விளங்காய்ச்சீர் வருவதில்லை. ஈற்றுச்சீர் கனிச்சீராய் முடிவதும் சிறுபான்மை. ஒரு பாடலில் ஓரடியின் இறுதிச் சீரும் அடுத்த அடியின் முதற்சீரும் வெண்டளை பொருந்த வரவேண்டிய கட்டாயம் இல்லை. முதல் சீரும் ஈற்றுச் சீரும் மோனைப் பொருத்தத்துடன் வரும்.

---

38. திருவருட்பா, 6 : 76 : 2.

வகை-1 (இயற்சீர் வெண்டளையால் ஆனது)

"பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு
தொண்டர்..."[39]

இதில் இயற்சீர் வெண்டளை பொருந்தி முதல் நான்கும் ஈரசைச் சீர்களாயின. இறுதியில் விளங்காய்ச்சீர் அமைந்து முதற்சீருக் கேற்ற மோனை பெற்றது. முதற்சீர் நேரசையால் தொடங்கு தலின் அடிதோறும் பதினாறு எழுத்துகள் வந்துள்ளன. சகலகலா வல்லியே என ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிகிறது.

இதுபோல் பலவகைகளில் அமையும் கட்டளைக் கலித் துறையின் சீர் அளவுகளைக் கண்டு பிரித்து அமைக்கலாம்.

கலிவெண்பா : உலா, தூது போன்ற சில சிற்றிலக்கியங்கள் கலிவெண்பாவில் இயற்றப்படுதல் மரபு. அச் சிற்றிலக்கியங்களைச் சுவடிகளிலிருந்து பெயர்த்து எழுத, கலிவெண்பாவின் சீர் வரையறை களில் பயிற்சி பெறுதல் வேண்டும்.

வெள்தளைதட்டு, வெள்ளோசை பெற்று, ஈற்றடி முச்சீரால் முடிவது வெண்பா எனப்படுகிறது. அதே இலக்கணமுடையதாய் அடிவரையறையின்றி நடப்பது கலிவெண்பாவாகிறது. இரண்டடி ஓரெதுகையாய் வருவது அடிகளைப் பிரித்து எழுதத் துணைசெய் கிறது. இரண்டாமடியின் ஈற்றுச்சீர் அவ்வடியின் முதற்சீருக்கேற்ற எதுகை பெற்ற தனிச் சொல்லாய் வருவது நேரிசைக் கலிவெண்பா எனப்படுகிறது.

"இம்மைப் பிறப்பில் இருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கண் மோசித்துத் - தம்மைவிடுத்து...
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்டு
அடியேற்கு முன்னின் றருள்"[40]

இது நேரிசைக் கலிவெண்பா. தனிச்சொல் இன்றி அடி நிரம்பி நடப்பது இன்னிசைக் கலிவெண்பாவாகும். சீர் அளவு ஒத்து வரும் விருத்தப்பாவின் தன்மை கலிவெண்பாவிற்கு இல்லை. ஆனால் இயற்சீர் வெண்தளை வெண்சீர் வெண்தளைகள் பொருந்த வருமாற்றினை அறிந்து பிரித்து எழுதுவது முறையாகும். அடி

39. சகலகலாவல்லி மாலை, 7.
40. கந்தர் கலிவெண்பா, இறுதியடிகள்.

தோறும் பொழிப்பு மோனை அமைவதும் சீர்பிரித்து எழுதத் துணைபுரியும்.

வெண்கலிப்பா : கலிவெண்பாவினைப் போன்று அமைந்து, கலித்தளை தட்டு வருமேயாயின் அது வெண்கலிப்பா என்று பெயர் பெறுகிறது.

இவ்வாறான பா இனங்களின் வகைகளைத் தவிர நால்வகைப் பாக்களையும் இலக்கணமுறைப்படிப் பிரித்தமைக்க அறிதல் வேண்டும். வழக்காறு மிகுதியின்மையாலும், இலக்கண மரபுகள் தெளிவாகக் கூறுவதாலும் அவை இங்கு விடப்படுகின்றன.

> "இலக்கிய ஆசிரியர் கையாளும் செய்யுளமைப்பு முறையையும் நன்கு தெரிதல், சுத்தப் பதிப்பிற்கு இன்றியமையாதது. பாடத் தெளிவில்லாத இடமொன்றில் மட்டும், செய்யுளமைப்புக் கெட்டிருக்குமாயின், இருக்கும் பாடம் தவறானது என்பது கூறாமலே விளங்கும்"[41]

என்னும் வி. அய். சுப்பிரமணியம் அவர்களின் கருத்து, பாட்டு அமைப்பை அறிதலின் இன்றியமையாமையை உணர்த்துகிறது.

உ. ஒப்பிடும் பணி

கையெழுத்துத் தெளிவின்மை, சுவடி எழுத்துமுறை, பாட்டு நடை, பாட வேறுபாடு, மூலபாட ஆய்வு ஆகிய பயிற்சிகளின் வழி ஒரு சுவடியிலிருந்து தூய படியினை உருவாக்கிய பிறகு அதே நூலுக்குரிய பிற சுவடிகளோடு ஒப்பிடுதல் வேண்டும். அப்போது கிடைக்கும் பாடங்களைத் தனியே குறித்து வைத்து இறுதியில் பொருள் பொருத்தமுடைய பாடத்தைப் பதிப்புக்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். பிறவற்றை அடிக்குறிப்பில் சுட்ட வேண்டும். இடைச் செருகல்கள் காணப்படின் அவற்றின் உண்மையறிதல் தேவை, அவ் இடைச்செருகல் இடம், பொருள், நடை, முன்பின் பாடலோடு தொடர்பு ஆகிய பொருத்தங்களால் மூல நூலாசிரியரின் செய்திகளாக இருந்து நாம் படியெடுத்த சுவடியில் விடுபட்டிருக்கக் கூடுமா என்பதை முதலில் அறிதல் வேண்டும். புறச் சான்றுகளின் வழியும் அப்பொருத்தத்தை ஆய்வு செய்தல் வேண்டும். பொருத்தமுடையதாயின் நூலினிடை

---

41. சில கட்டுரைகள், தொகுதி-1, பக். 130.

யில் சேர்த்தும், அற்றதாயின் அடிக்குறிப்பில் கொடுத்தும் பதிப்பித்தல் வேண்டும். இதைப்போலவே பாடல் அடி மாற்றங்கள், பாடல் இடமாற்றங்கள், ஓரங்களில் காணப்படும் பலவகைக் குறிப்புகள் ஆகியவற்றையும் உறுதி செய்தல் வேண்டும். சுவடி அண்மை நூலகங்களிலிருந்தால் நேரில் சென்று ஒப்பிட்டுக் கொள்ளலாம். சேய்மை நூலகமாயின் படிஎடுக்கச் செய்து பெற்றுக் கொள்ள வழியுண்டு. அச்சாகியிருப்பின் பழைய அச்சு நூல்களையும் பெற்று ஒப்பிடலாம். இன்று கிடைக்காத சுவடிகளைக் கொண்டு அச்சிடப்பட்டவை ஆயின் அந்த அச்சு நூல்களும் சுவடிகளுக்குச் சமமாகும்.

ஒப்பிடுதலின் பயன் : எழுதுவதற்குத் துணையாயிருந்த மூலச் சுவடியில் பிழை, விடுபட்டது, விளங்காதது, எழுத்துத் தெளிவின்மை, ஓலை முறிவு போன்றவற்றால் ஐயம் ஏற்பட்ட இடங்கள் வேறு சுவடிகளால் திருத்தம் பெறும். பாட வேறுபாடுகள் பல கிடைக்கும். அவற்றுள் சிறந்த பாடத்தைத் தேர்ந்தெடுக்கலாம். பிற நூல் சுவடிகளின் பயன் கூறிய செய்திகள் யாவும் ஒப்பிடுதல் பணியின் பயனாகவே அமைவனவாகும்.

> ''கலிங்கத்துப் பரணி ஏட்டுப் பிரதியொன்றைக் கொண்டு அப்பரணி யச்சுப் பிரதிகளைச் சோதிக்க நேர்ந்தபோது பொருணயமுள்ள சுத்த பாடங்கள் பல கிடைத்தமையாற் பெருமகிழ்ச்சி விளைத்தது''

என்பர் மு. இராகவையங்கார்.[42]

> ''ஒத்திட்டுப் பார்த்ததில் சில விஷயம் முரண்பட, அம்முரண்பட்ட விஷயங்களுக்கெல்லாம்...சபாபதிப் பிள்ளையவர்களைக் கொண்டே...திருத்தியும் புதுக்கியும்...அச்சிட்டு வெளிப்படுத்தினேன்''

என்பர் இ. ஒன்னைய கவுடர்.[43]

இவற்றால் அச்சான நூலையும் சுவடியோடு ஒப்பிட்டுத் திருத்தம் செய்து சிறந்த பாடங்களோடு மீண்டும் அச்சிடப்பட்டது என்பதும், ஒப்பிடுவதால் பல திருத்தங்கள் அமைந்தன என்பதும் வெளியாகின்றன.

42. கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி, முன்னுரை, பக்-1.
43. தேவாங்க புராணம், முன்னுரை.

ஊ. மீட்டுருவாக்கம்

ஒப்பிடும்போது கிடைத்த எல்லாச் சுவடிகளிலும் ஒரு சொல், தொடர்...பகுதி ஒரே மாதிரியாக விடுபட்டிருப்பதைக் காணலாம். அல்லது ஒரு சுவடி மட்டுமே கிடைத்திருப்பின் அதில் மேற்கூறிய வாறு விடுபட்டோ ஏடு ஒடிந்தோ துளையாகியோ இருக்கலாம். அவ்விடங்களை நிரப்பிப் பதிப்பித்தல் மீட்டுருவாக்கம் எனப்படும். இச்செயலை மேற்கொள்ளுவதற்குச் சில வழிகள் துணை நிற்பன. அவை:

1. அதே நூலின் உரையில் கிடைக்கும் சொற்கள், சொற் பொருள்கள், பிற செய்திகள் இவற்றைக் கொண்டு விடுபட்ட மூலத்தை உறுதிப்படுத்தலாம்.

2. மேற்கோளாக வந்துள்ள பிற சுவடிகள், நூல்களின் துணை கொண்டு நிரப்பலாம்.

3. பிற நூல்களில் காணும் ஒத்த கருத்துகள் அல்லது சொற் களின் துணையாலும் நிரப்பலாம்.

4. பதிப்பாசிரியர் பொருட்தொடர்பிற்கு ஏற்பத் தம் நுட்பத் தால் நிரப்பவும் செய்யலாம்.

எவ்வாறாயினும் நிரப்பப்பட்ட பகுதிகளை அடைப்புக் குறிக்குள் காட்டி, அதன் காரணத்தை முன்னுரையில் சுட்டுதல் வேண்டும்.

நூலின் உரை, பிறநூல் கருத்து ஆகியவற்றின் துணைகொண்டு மீட்டுருவாக்கம் செய்து பதிப்பிக்கப்பட்டுள்ளதற்குக் களவியற் காரிகையை எடுத்துக் காட்டாகக் கூறலாம். மேலும்,

> "மிகவும் முயன்று, பொருள் தொடர்பைக் கொண்டும் சிதம்பரப் பாட்டியல், பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல் என்பவற்றின் துணை கொண்டும், இயன்றவரை ஊகித்தறிந்து, பொடிந்து போன எழுத்துக்களையும் சொற் களையும் பெய்து பொருந்திய முறையில் இங்கு நிறைவு செய் யப்பட்டுள்ளன. இவ்வாறு செய்த இடங்கள் இருதலைப் பகரக்குறியிட்டுக் காட்டப் பெற்றுள்ளன"[44]

---

44. பிரபந்த மரபியல், முன்னுரை. பக்.45.

என்ற குறிப்புகளோடு, விடுபட்டுள்ள இடங்களை நிரப்பியுள்ளார் மு. அருணாசலம். பிற நூல் கருத்துகளும், பதிப்பாசிரியரின் நுட்பமும் துணை நிற்க, மீட்டுருவாக்கம் நடைபெற்றுள்ளதற்குப் பிரபந்த மரபியல் எடுத்துக் காட்டாகிறது.

2. பதிப்புரை

சுவடிப் பதிப்புகளை 1. பழைய பதிப்பு 2. திருத்தப் பதிப்பு 3. தெளிவுப் பதிப்பு 4. ஆராய்ச்சிப் பதிப்பு 5. தொகுப்புப் பதிப்பு 6. மறுபதிப்பு என ஆறு பிரிவுகளாக வகைப்படுத்திக் காண முடிகிறது.

அ. பழைய பதிப்பு

சுவடி வேறு அச்சுநூல் வேறு என்று பிரித்து அறிய முடியாத அமைப்பினை உடையவை. பாடல், அதன் கீழ் உரை என்ற பிரிப்பு முறையால் மட்டும் வேறுபட்டுக் காணப்படும்; பாடல் அடிகளாகவோ அடிகள் சீர்களாகவோ பிரித்துக் காட்டாதவை பழைய பதிப்புகள். மூலம் மட்டுமுள்ள நூலாயின் பாடல்கள் மட்டும் தனித்தனியே எண்களிட்டுக் காட்டப்படுவதுண்டு; பாடலுக்குப் பாடல்கூட இடைவெளியிராது.

இராசகோபாலப் பிள்ளையின் தொல்காப்பிய, சொல்லதிகாரப் பதிப்பினைப் பற்றி கு. சுந்தரமூர்த்தி கூறும் கூற்று இப்பழைய பதிப்பு முறையை எடுத்துக் காட்டும்.

> ''இப்பதிப்பு, உரைகளையோ அன்றி நூற்பாக்களையோ கூடப் பிரித்துப் பதிப்பிக்காமல், நெடுங்கணக்காகவே பதிப்பிக்கப்பட்டிருந்தது''[1]

என்பது அக்கூற்று.

ஆ. திருத்தப் பதிப்பு

> ''ஓர் இலக்கியத்தின் 'சுத்தப் பதிப்பு' பாடத்தில் காணும் ஐயங்களை நீக்கிப் பொருள் தெளிவு ஏற்பட வழி செய்ய வேண்டும். படிப்பவர்கள் தாமே பாடத்தை உறுதி செய்து கொள்வதற்காக எல்லாப் பிரதிகளிலும் காணும் பாடங்களையும் ஒழுங்காகப் பிழையின்றிக் கொடுக்க வேண்டும்... இலக்கியத்தை அனுபவிப்பதற்குப் பாடத் தெளிவு மிகவும் இன்றியமையாதது''[2]

---

1. தொல். சொல். சேனாவரையம், பதிப்புரை.
2. சில கட்டுரைகள், பக். 122.

என்னும் கருத்துப்படி அமைவது திருத்தப் பதிப்பு ஆகும். பழைய பதிப்பு முறைகளிலிருந்து சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து இத்திருத்தப் பதிப்புமுறை அமைந்துள்ளது. பாடல்கள் தனித்தனி அடிகளாகப் பிரிக்கப்பட்டன. அடிகள் தோறும் ஓசை நயம் குன்றாமல் சீர்கள் பிரித்தமைக்கப்பட்டன. பாடவேறுபாடுகள் சுட்டப்பட்டன.

இ. தெளிவுப் பதிப்பு

கடின சந்திகளைப் பிரித்துப் பதிப்பிப்பதும், தெளிவுரை எழுதிப் பதிப்பிப்பதும் இப்பதிப்பு வகையைச் சாரும். இதனை எளிய பதிப்பு எனவும் கூறலாம். பல சுவடிகளை ஆய்ந்து, சிறந்த பாடத்தைத் தேர்ந்து சந்திகளைப் பிரித்துப் பதிப்பிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் பதிப்புகள் இவ்வகைக்குச் சான்றுகளாகும்.

எஸ். ராஜம் வெளியீடு, சென்னை - (தனித்தனி நூல்களாக)
சங்க இலக்கியங்கள்-

திவ்யப் பிரபந்தம் - முதலாயிரம் - 1955
,, - திருவாய் மொழி - 1956
திருவாசகம் - 1984
புதுவை பிரஞ்சு நிறுவனம் - தேவாரம் - 1984

ஆகியவை தெளிவுப் பதிப்புகளாகும். எஸ். ராஜம் வெளியீட்டினர் சங்க இலக்கியங்கள் உட்படச் சுமார் நாற்பது நூல்களை இவ்வாறு பதிப்பித்துள்ளனர்.

ஈ. ஆராய்ச்சிப் பதிப்பு

திருத்தப் பதிப்பு முறைகளோடு, நூலின் முழுத்தன்மையையும் ஆய்ந்து நூலில் காணப்படும் சிறப்புச் செய்திகள், நூலாசிரியர், உரையாசிரியர், பாட்டுடைத் தலைவர் ஆகியோர் வரலாறுகள், ஆய்வாளருக்குப் பயன்படும் அருஞ்சொல் முதலியவற்றின் அகரநிரல்கள், பதிப்பு வரலாறு ஆகிய பகுதிகளைக் கொண்டதாய் அமைவது ஆராய்ச்சிப் பதிப்பு ஆகும். பதிப்பித்த முறையாலும், ஆய்வாளருக்குப் பயன்படும் முறையாலும் இப்பெயர் பொருத்த முடையதாகிறது. உ. வே. சாமிநாதையரின் பதிப்புகள் பெரும் பான்மையும் இவ்வகையைச் சார்ந்தனவாகும். பதிப்பு வரலாற்றோடு மேலும் சிறப்புற அமைந்தவை என எஸ். வையாபுரிப்பிள்ளையவர்களின் கீழ்க்காணும் பதிப்புகளைச் சுட்டலாம்.

செந்தமிழ்ப் பிரசுரம் - 54 } - அரும்பொருள் விளக்க
மதுரைத் தமிழ்ச் சங்க முத்திரசாலை } நிகண்டு - 1931
ஆசிரியரின் சொந்த வெளியீடு - களவியற்காரிகை - 1931

போன்ற பல பதிப்புகள் அவருடைய சிறந்த ஆராய்ச்சிப் பதிப்பு களாகும். மு. சண்முகம்பிள்ளையின் சுவடிப் பதிப்புகள் எஸ். வையாபுரிப்பிள்ளையின் பதிப்பு முறைகளைப் பின்பற்றியவை எனலாம். அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்புகளுள் சில இவ்வகைக்குரியவையாகும். சான்றாக, கம்பராமாயணம் - தனித் தனி காண்டங்கள் (1960-63), யாப்பருங்கலக் காரிகை (1968), ஐங்குறு நூறு (1958) ஆகிய பதிப்புகளைச் சுட்டலாம்.

உ. தொகுப்புப் பதிப்பு

இப்பதிப்பு முறையை இரண்டு வகைப் படுத்தலாம். 1. ஒரு பொருள் பற்றிய செய்திகள் பல சுவடிகளில் பலவகையாகக் காணப் படும்; அல்லது ஒரு சுவடியில் ஒரு பகுதியும் மற்றும் சில சுவடிகளில் அதே போல ஒவ்வொரு பகுதியுமாக ஒரு பொருள் பற்றிய செய்தி கள் பல சுவடிகளில் கிடைக்கலாம். இவற்றைத் தொகுத்துப் பயன் படுமளவில் ஒரு நூலில் பலவகைச் செய்திகளாகவும், ஒரு முழுமை யான நூலாகவும் பதிப்பிப்பது ஒருவகை. பிள்ளைப்பிணி வாகடம் (அரசினர் சுவடி நூலகம், சென்னை-1951) என்னும் நூலில் ஒரு நோய்க்குப் பல மருந்துகள் பல சுவடிகளிலிருந்து தொகுத்துக் கொடுக்கப்பட்டன. அனுபவ வைத்தியம் (அரசினர் சுவடி நூலகம், சென்னை-1956) சுரரோக சிகிச்சை (சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்) போல் வனவும் இவ்வகையின.

ஒவ்வொரு சுவடியிலும் ஒன்றிரண்டு செய்திகள் சிறப்பாகக் காணப்பட்டவற்றைத் தொகுத்து ஒரு பொருளுக்குரிய 12 தலைப்பு களைத் தொகுத்துப் பதிப்பிக்கப்பட்ட நூல் மனை நூல் ஆகும்.[3]

2. ஒரு தலைப்பில் பல்வேறு பொருள்கள் காணப்படும்; அவை பல சுவடிகளில் காணப்படும். அவற்றைத் தொகுத்து ஒரு தொகுப்பாக வெளியிடுவது தொகுப்புப் பதிப்பில் இரண்டாவது வகையாகும். அகம், புறம் என்பன பொருளாலும் கலித்தொகை பாட்டாலும் குறுந்தொகை அளவாலும் அமைந்த தொகுப்புப்

3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு, 8191.

பதிப்புகளாகும். ஆனால் சுவடி நிலையிலேயே தொகுக்கப் பட்டவை, பதிப்பு நிலைக்கு,

பிள்ளைத் தமிழ்க் கொத்து, அரசினர் சுவடி நூலகம், சென்னை - 1957
தூதுத் திரட்டு ,, ,, - ,,
கும்மிப் பாடல்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ,, - 1983
ஊஞ்சல் இலக்கியம், ,, ,, - 1982

ஆகிய நூல்களைக் குறிப்பிடலாம். பிள்ளைத்தமிழ் என்பது ஒரு வகை இலக்கியம். பல பாட்டுடைத் தலைவர்கள் மீது பாடப் பெற்ற பல பிள்ளைத் தமிழ்ச் சுவடிகளைத் தொகுத்து வெளியிடப் பட்டதே பிள்ளைத்தமிழ்க் கொத்து. பிறவும் இத்தகைய பதிப்பு களாகும்.

ஊ. மறுபதிப்பு

முதலில் அச்சிட்ட நூல்கள் தீர்ந்துபோன நிலையில் மீண்டும் அச்சிடப்பெறுவது மறுபதிப்பு எனப்படுகிறது. இது பதிப்புத் தன்மையால் **மறுஅச்சு** எனவும் **மறுபதிப்பு** எனவும் இருவகைப் படும். இவற்றுள்,

மறுஅச்சு : முதற்பதிப்பில் பெரிதும் மாற்றம் இல்லாதது; திருத்தம் இல்லாதது; சேர்க்கைகள், நீக்கல்கள் இல்லாதது; இவ்வாறு மீண்டும் அச்சிடும் பதிப்பு மறுஅச்சு எனப்படும், இதில் முதற்பதிப்பில் நிகழ்ந்த அச்சுப்பிழைகள். பிறவாகிய சிறுசிறு பிழைகள் திருத்தம் பெறுவதுண்டு.

மறுபதிப்பு : மறுபதிப்பில் நூலின் ஒவ்வொரு வரியும் படிக்கப் பெறும்; தேவையான திருத்தங்கள் செய்யப்பெறும்; ஒவ்வாத செய்திகள் நீக்கப்படலாம்; அப்பதிப்பிற்குப் பிறகு வேறு சுவடிகள், பிற சான்றோர் கருத்துகள் ஆகியவற்றின் மூலம் கிடைத்த புதிய சேர்க்கைகள் இடம்பெறும்; கடிதங்களின் மூலம் கிடைத்த தகுதி வாய்ந்த மாற்றங்கள் இடம்பெறும்; நூலில் இடம்பெற்ற நிகழ்ச்சி களுக்கேற்ற துணைச் சான்றுகள், படங்கள், பிற விளக்கங்கள், ஆண்டுக் குறிப்புகள் சேர்க்கப்பெறும்; பதிப்பாசிரியரின் கருத்து வளர்ச்சிக் கேற்பவும், கிடைத்த புதிய நூல்களின் செய்திகளுக் கேற்பவும், ஆய்வு நெறி வளர்ச்சிக் கேற்பவும் புதிய ஆய்வு முன்னுரை அமைக்கப் பெறும்; துணை நூற் பட்டியல் திருத்தம் பெறும்; கலைச்சொல் பட்டியல் மாற்றம் பெறும். இத்தகு மாற் றங்கள் பெற்றுப் பதிப்பிக்கப் பெறுவது மறுபதிப்பு எனப்படும்.

3. பதிப்புக்கலை முன்னோடிகள் தரும் பட்டறிவு

சுவடிப் பதிப்பினை மேற்கொண்டோர் பலர், ஆயினும் சிறந்த வழிகாட்டிகளாய் விளங்கியவர் சிலரே. சுவடிப் பதிப்பினைத் தொடங்கிய காலத்தில் பலவகை இன்னல்களை யடைந்தனர். இருந்தும் சுவடி தேடுதல், கருத்துத் திரட்டுதல், முன்னுரை, வரலாறு, உரை, சிறப்புரை ஆகியவை எழுதுதல், அருஞ்சொல்லகராதி தயாரித்தல் போன்றவற்றில் வழிகாட்டி யுள்ளனர். பதிப்புக்கலையில் ஈடுபடுவோர் பெற வேண்டிய அவ்வனுபவங்களை இப்பகுதி ஆய்வு செய்கிறது.

அ சுவடிப் பதிப்பின் காலம்

சுவடிப் பதிப்புப் பணி தொடங்கி, வளர்ச்சியுற்ற காலம் எனப் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சுட்டலாம். கி. பி. 1812இல் திருக்குறள் அறத்துப் பாலினை, எஃப். டபிள்யூ. எல்லீஸ் என்பவர் சுவடியிலிருந்து எடுத்துப் பதிப்பித்தார் என்ற செய்தி கிடைக் கிறது[4] வீரமா முனிவர் எழுதிய சதுரகராதியின் பெயர், தொகை, தொடையகராதிப் பகுதிகள் 1824இல் தாண்டவராய முதலியார், இராமச்சந்திர கவிராயர் ஆகியோரால் சென்னைக் கல்விச் சங்கத்தில் பதிப்பிக்கப் பெற்றன. 1836இல் கோட்டை, கல்லூரிக் கல்விச் சங்கத்தின் சார்பில், புதுவை நயனப்ப முதலியார் தஞ்சை வாணன் கோவை, நேமிநாதம் மூலம் ஆகிய நூல்களை முழுமை யாகப் பதிப்பித்தார். 1838இல் திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் திருக்குறளைச் சிறந்த உரையுடன் முழுமையாகப் பதிப்பித்தார். தாண்டவராய முதலியார் முதல் இன்றைய பதிப்புச் செம்மல் மு.சண்முகம்பிள்ளை ஈறாகப் பல பதிப்பாசிரியர் சுவடிப் பதிப்பில் ஈடுபட்டிருந்தனர்.[5]

தொடக்ககாலப் பதிப்பின் முகப்பு : நூல் பதிப்பிக்கப்பட்ட முறை முதல் பக்கமாகிய நூல் தலைப்புப் பக்கத்தில் கூறப்பட்டு வந்தது. அதைத் தவிர வேறு வரலாறுகள் தொடக்ககாலப் பதிப்புகளில் இல்லை. இந்தத் தலைப்புப் பக்கத்திற்கு எடுத்துக் காட்டாக 'நைடதம் மூல பாடம்' என்னும் பதிப்பைக் காட்டலாம். பதிப்பாசிரியரின் ஆற்றலை மட்டும் கூறும் முன்னுரையும் அந்த நூலில் அமைகிறது.

---

4. அச்சுக்கலை, பக் 234.
5. அச்சும் பதிப்பும், பக். 146, 201, 206 (பதிப்பாசிரியர் பட்டியல் பின்னிணைப்பில்

ஆ. பதிப்புக் கலையில் வழிகாட்டியோர்

சுவடிப் பதிப்பை மேற்கொண்ட பதிப்பாசிரியர் பலர் காணப் பட்டாலும், பதிப்புப்பணியை ஒரு கலையாகக் கருதி, அக்கலையின் நுணுக்கங்களைத் தங்கள் அனுபவத்தின் மூலம் பிறருக்கு எடுத்துக் கூறி வழி காட்டியுள்ளோர் மிகச் சிலரே. அவருள்ளும் சி. வை. தாமோதரம்பிள்ளை, உ. வே. சாமிநாதையர், எஸ். வையாபுரிப் பிள்ளை ஆகிய மூவரின் பதிப்புரைகளே இங்கு பதிப்பு வழிகாட்டி களாகச் சுட்டப்படுகின்றன. சங்க இலக்கியப் பதிப்பை முதன் முதலில் மேற்கொண்ட பெருமையுடையவர் சி. வை. தா. ஆவார் (கலித் தொகை-1887.) சுவடிப் பதிப்பாக மட்டும் எழுபத்து நான்கு நூல்களைப் பதிப்பித்த பெருமையுடையவர் உ. வே. சா. பதிப்பு முறையில் புதிய பல திருத்தங்களை மேற்கொண்ட பெருமைக் குரியவர் வையாபுரிப்பிள்ளை. இம்மூவரின் அனுபவங்கள் பதிப்புப் பணி மேற்கொள்ளுவோருக்குப்போதுமான வழிகாட்டிகளாக அமையுமாதலின் அவை மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

பதிப்பில் பழைய இன்னல்: மேற்குறிப்பிட்ட பதிப்பாசிரி யர்கள் பதிப்புப் பணியினை மேற்கொண்டபோது ஏடுபடித்தல் என்னும் வழக்காறு குறைந்துவிட்டது. அதனால் ஏடு கிடைப்பது அரிதாயிற்று. புலவர், பெருஞ்செல்வர் போன்றோர் வீடுதோறும் தேடவேண்டிய நிலை ஏற்பட்டது. சுவடிகளில் காணப்படும் நூல் களின் பெயர்கள்கூட அறியப்படாமல் இருந்தது. எட்டுத் தொகை நூல்கள் யாவை என்பதை அறியாத நிலை இருந்தது. சிலப்பதி காரமா? சிறப்பதிகாரமா? என மயங்கிய காலம் அது. சீவகசிந்தா மணி என்ற காவியத்தின் பெயரை உ. வே. சா. அவர்களே அறியா திருந்த காலம். பதிப்புச் செலவு மிகக் குறைவாக இருந்தது. பதினாறு பக்கங்கள் கொண்ட ஒரு பாரத்திற்கு அச்சுக்கூலி மூன்றரை ரூபாயாக இருந்தது.[6] இருந்தும் நூல்கள் விற்பனை யாகாமல் பொருட் செலவால் பதிப்பாசிரியர் தொல்லைபட்டனர்.

> "...ஏட்டுப் பிரதிகள் தேடிப் பரிசோதித்து அச்சிடுவதில், புத்தகங்கள் விலை போகாமல் நேரிடும் நஷ்டத்தைக் குறித்து விய வருஷம் ஆடி மாதம் ஹிந்து பத்திரிகை வாயிலாக ஓர் அபயம் எழுதித் தமிழபிமானமும் தரும சிந்தையுமுடைய பிரபுக்கள் என் நஷ்டத்தை நன்கொடை முதலிய சகாயஞ் செய்து பரிகரிக்குமாறு வேண்டிக்கொண்டேன்"[7]

---

6. என் சரித்திரம். பக்.-797, 7. தொல், எழுத்து பதிப்புரை.

"இதனைப் பதிப்பித்தலின் அச்சிற்குங் காகிதத்திற்கும் வந்த செலவினும், பரிசோதனைச் செலவு இருமடங்கிற்கு மேலே சென்றதாகலானும், இப்பெயர் பெற்ற அரிய நூல் களைப் படிக்க விரும்பி வாங்குவோர் சிலரே யாதலானும் இதுவித முயற்சியிற் கையிடுவது முதலுக்கே நஷ்டத்தை விளைவிக்கின்றது... இதுவரை பதிப்பித்த நூல்களால் எனக் குண்டான நஷ்டங் கொஞ்சமன்று"[8]

என்று கூறும் சி.வை.தா. அவர்களின் கூற்றுகள் பதிப்பாசிரியருக் கேற்பட்ட நட்டத்தை நினைவூட்டுகின்றன. பதிப்பாசிரியர் மீது கண்டனங்கள் பல வெளியான காலம் அது. கண்டன செய்தி களைப் பார்த்து உ.வே.சா. வேண்டியவற்றைக் குறித்துக் கொள்ளு வார். மறுப்பு எழுதுவதை விட்டுவிட்டார்.[9]

தமிழ் நூல்களை, தமிழ்நூல் வெளியீட்டாளரை ஆங்கிலம் கற்ற தமிழர்கள் அலட்சியம் செய்து வந்தார்கள்; தமிழ்ப் புலவர் களும் பொறாமைக் காரணத்தால் எள்ளியும் எதிர்த்தும் வந்தார்கள். இத்தகு இன்னல்கள் பல பதிப்பாசிரியருக்கு இருந்து வந்தன என்பதைப் பதிப்பாசிரியர் பலரின் பதிப்புரைகள் தெரிவிக் கின்றன.

"இவர்கள் அந்நிய மொழிகளைத் தங்கள் தாய்மொழி யாகவே கருதினர்; தங்கள் தாய்மொழியைப் புறக்கணித்த லைச் செய்தனர். ஆனால் ஒருசிலர் இவர்களுக்கு விலக்காய் அமைந்து தாய்மொழியாகிய தமிழையும், அதன் இலக்கியங் களையும் போற்றி வரலாயினர். இச்சிலருள் ஒருவர் ஸ்ரீராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையாவார்கள்"[10]

என்பது பதிப்பாசிரியரின் பெருமையை எடுத்துக் காட்டுவதாகும்.

பதிப்பாசிரியரிடை மனவேறுபாடு

"பிறரால் ஒன்றும் காண முடியாதபடி தனியாக அமைந்த ஓர் அறையில்... நூல் பரிசோதனையைச் செய்து வரலாயினர்.

ஏட்டுப் பிரதிகளேயன்றி இவர்கள் படித்து வந்த அச்சுப் புத்தகங்களைக்கூட இரவல் வாங்க முடியாது... விலக்க முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டால்தான் இவர் உதவுவார்.

8. தொல்; பொருள், பதிப்புரை.
9. தமிழ்ச் சுடர்மணிகள், பக். 297.
10. தமிழ்ச் சுடர்மணிகள், பக். 229.

அவ்வாறு தரும் பிரதிகளும் பெரும்பாலும் பயனற்றனவாகவே இருக்கும்...

தாம் உதவாதது மாத்திரமேயன்றி, பிற பேரறிஞர்களும் நூலைப் பதிப்பிடுவோர்க்கு உதவுதல் கூடாது என்று கடிந் துரைத்ததை நான் நன்கு அறிவேன்''[11]

என்னும் எஸ். வையாபுரிப் பிள்ளையின் கூற்றுகள் பதிப்பாசிரிய ரிடையேயும் மனவேறுபாடுகள் இருந்தன என்பதைப் புலப்படுத்து கின்றன.

சுவடி தேடிய பணி : சுவடி தேடித் திரிந்த பதிப்புக்கலை முன்னோடிகள் பலரின் அனுபவங்கள் நமக்கு ஊக்கமூட்டுவன வாகும்.

''விருஷபதாச முதலியார் என்பவர் வீட்டில் பல பழைய ஏட்டுச் சுவடிகள் உள்ளனவென்று தெரிய வந்தது. சுவடிகள் தேடும் யாத்திரையை அப்பொழுது தொடங்கினேன்; இன்னும் ஓயவில்லை. ...இவ்வாறு பலவகையில் முயன்று தேடியதில் சிந்தாமணிப் பிரதிகள் 23 கிடைத்தன''.[12]

''திருச்சிராப்பள்ளியிலிருந்து குழித்தலை சென்று அதன் அருகிலுள்ள ஊர்களில் ஏடுகளைத் தேடினேன். எனக்கு உதவியாக ஒன்றும் கிடைக்கவில்லை. அப்படியே சேலத்தை அடைந்தேன்''.[13]

என்பவை முன்னோடிகளின் உழைப்பை எடுத்துக் காட்டுபவை யாகும். சுவடி தேடுவதில் பெரிதும் உழைத்த உ.வே.சா. சிந்தாமணிப் பதிப்புக்கு இருபத்து மூன்று சுவடிகளைத் திரட்டி யிருக்கிறார். சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரைச் சுவடியி லிருந்த ஐயங்களைப் போக்கிக் கொள்ள மேலும் சுவடி தேடி ஐம்பது ஊர்களுக்கு மேல் பயணம் செய்திருக்கிறார்[14] என்னும் செய்திகள் சுவடி திரட்டுவதில் ஊக்கமளிப்பனவாகும்.

மூலநூல் பதிப்பு : முதலில் மூலநூல்கள் மட்டும் அமைந்த பதிப்புகளே மிகுதியாகத் தோன்றின. திருத்தொண்டர் புராணம் முதலாய புராணங்கள், தேவாரம், திருவாசகம்,

11. மேற்படி, பக். 297-99.
12. என் சரித்திரம், பக். 766.
13. மேற்படி, பக். 921. 14. மேற்படி, பக். 705.

நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் போன்ற சமயப் பாசுரங்கள், நேமிநாதம், தஞ்சைவாணன் கோவை ஆகிய இலக்கண இலக்கியங்கள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை போன்ற சிறு நூல்கள் உரையின்றி பதிப்பிக்கப்பட்டன.

மூலம் மட்டுமுள்ள பதிப்பின் பயன் : திருக்குடந்தைப் புராணந்தைப் பதிப்பித்த உ.வே.சா. அவர்கள் "மூலத்தை மாத்திரம் ஒழுங்கு செய்து அச்சிட்டு வந்தோம். குறிப்புரையுடன் வெளியிட்டால்தான் படிப்பவர்களுக்கு உபயோகமாக இருக்கு மென்ற கருத்து அப்போது எனக்கு எழவில்லை" என்று கூறுவார்.[15] இது, மூலம் மட்டும் அடங்கிய நூலைப் பதிப்பிப்பதில் **பயனில்லை** என்ற அனுபவத்தை அளிப்பதாகும். ஆனால் உரை நூல்கள் பல பதிப்பிக்கப்பட்ட பின்பு, சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்) என்னும் நூல் இரண்டு பகுதிகளாக 1940இல் வெளி யாயிற்று. இது சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்பு. மூலம் மட்டும் அடங்கிய பதிப்பாயினும் புலவர் வாரியாகத் தொகுக்கப் பட்டது ஆதலின் குறிப்பிட்ட ஒரு புலவரின் பாடல் திறனறியப் பெரிதும் பயன்படுவதாகும், இம்முறை மேலும் பாடல்களைத் திணைவாரியாகவும், தலைவன், தலைவி, தோழி, தாய் ஆகியோர் கூற்றுவாரியாகவும் பகுத்துப் பதிப்பிக்க வழிகாட்டியாக அமைகிறது. கற்றவர் குறிப்புக்குக் கையடக்கமாக அமைதலின் மூலம் மட்டும் அடங்கிய எஸ். ராஜம் வெளியீடுகள் (மர்ரே பதிப்பு) மறுபதிப்பு களாகவும் வெளியாயின. பண்முறையாகவும், தலமுறையாகவும் தொகுத்துப் பதிப்பிக்கப்பட்ட மூவர் தேவாரம் வழக்காற்றில் பயன்படும் நூல்களாகும். ஒவ்வொரு திருத்தலத்தைப் பற்றியும் ஒருவர் பல சமயத்தில் பாடிய பாடல்கள், இருவர், மூவர் பாடிய பாடல்கள் ஆகியவை ஒருசேரக் கண்டு ஓதுதல் வேண்டும் என்ற நோக்கத்தால் உமாபதிசிவம் காலத்தில் தோன்றியது தேவாரத் தலமுறைத் தொகுப்பு.[16] தொல்காப்பியம் முதலான ஐந்திலக்கண நூல்கள், திருக்குறள் முதலிய இலக்கியங்கள் மூலம் மட்டுமே பதிப்பிக்கும் முறை பிற்காலத்தும் தோன்றியது. கையடக்கமாக வைத்து மனப்பாடம் செய்யவும், அவ்வப்போது தோன்றும் ஐயங் களைப் போக்கிக் கொள்ளவும் பயன்படுவது இப்பதிப்பு.

---

15. என் சரித்திரம், பக். 753.
16. தேவாரம், முன்னுரை, பக். 80.

இ. முன்னோடிகள் கருத்துத் திரட்டிய முறை

சுவடிப் பதிப்பில் குறிப்புரை முதலான விளக்கங்களை எழுதுவது பதிப்பாசிரியரின் பணியாகும். சில தொடர்களுக்கான சிறந்த விளக்கங்களை எழுத, பலவகையிலும் செய்திகளைத் திரட்டியுள்ள பதிப்பாசிரியரின் அனுபவங்கள் பின்பற்றத் தகுந்தவையாகின்றன.

மணிமேகலையைப் பதிப்பிக்க எண்ணினார் உ. வே. சாமிநாதையர். பௌத்த சமயக் கருத்துகள் பலவற்றையும் ரங்காச்சாரியார் என்பவரிடம் ஐந்து ஆண்டுகளாகக் கேட்டுத் தொகுத்து வந்தார். அதனால் அந்நூல் பதிப்பு நன்றாக அமைந்தது.[17]

''இடைமகன் கொன்ற வின்னா மரத்தினேன்''[18]

என்ற அடிக்கு 'உயிருடன் இருந்தேனாய்ப் பகையை வென்றேனுமல்லேன்; உயிரை நீத்தேனுமல்லேன் என்று கருதி மரத்தினேன் என்றார்'' என்று உரை எழுதினார் நச்சினார்க்கினியர். இதன் விளக்கத்தைத் தம் அனுபவத்தால் அறிந்து 'இடையன் எறிந்த மரம்' என்னும் கட்டுரையாக எழுதியிருக்கிறார் உ.வே,சா.[19] 'இடையன் வெட்டு அறா வெட்டு' என்ற பழமொழியையும் எடுத்துக் காட்டுகிறார்.

திருச்சிற்றம்பலக் கோவையின் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் என்பதைப் பலர் வாயிலாக அறிந்தார் உ.வே.சா. சீவகசிந்தாமணியின் முதற்பதிப்பில் அதைச் சுட்டினார். வெள்ளூர்க் கவிராயர் வீட்டில் இருந்த அந்நூற்சுவடி ஒன்றின்மேல் அவ்வுரை பேராசிரியருடையது என்ற குறிப்பு இருந்தது நச்சினார்க்கினியர் திருச்சிற்றம்பலக் கோவைக்கு உரை எழுதினார் என்ற கருத்தை உடனே மாற்றிக் கொண்டார்.[20]

திருத்தக்கதேவர் வரலாற்றை எழுத ஒரு குறிப்பும் கிடைக்காத நிலையில் உ.வே.சா. சமணர்களிடம் கர்ண பரம்பரையாக வழங்கி வந்த செய்திகளைக் கேட்டறிந்து அவற்றைக் கோவைப்படுத்தி அவ்வரலாற்றை எழுதினார்.[21]

---

17. நினைவு மஞ்சரி-1, பக். 22. 18. சீவகசிந்தாமணி, 1914.
19. நினைவு மஞ்சரி-1, பக். 33-35.
20. என் சரித்திரம், பக். 887. 21. மேற்படி, பக். 836.

மணிமேகலையில் வரும் பிடமர் என்ற சொல்லுக்குப் பொருளறிய முயன்று மஞூர் ரங்காச்சாரியர் மூலம் அறிந்தார் உ.வே.சா.[22]

சூளாமணி என்னும் நூலைப் பதிப்பித்தபோது சி.வை.தா.வுக்கு ஆருகத சமயக் கோட்பாடுகள், தத்துவ பேதங்கள், புராணக் கதைகள்... ஆகியவற்றில் ஐயங்கள் ஏற்பட்டன. அதற்காக வீடூர் வித்துவான் அப்பாசாமி சாஸ்திரியை வரவழைத்து மூன்று மாதம் உடன் தங்கச் செய்து ஐயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். அவர் சென்ற பிறகு ஏற்பட்ட ஐயங்களைக் கடிதம் எழுதியும் தெரிந்து கொண்டார்.[23]

கருத்துகளைத் திரட்டுவதில் முன்னோடிகள் எடுத்துக்கொண்ட இம் முயற்சிகள் ஊக்கமளித்து அவ்வழியில் தூண்டுவனவாகும். கிடைக்கும் பலவகை நூல்களை ஆய்வதிலும், அறிஞர்களைக் கலந்து கருத்துரை பெறுவதிலும் ஊக்கம் காட்டினால் பதிப்புகள் சிறப்புற அமைதல் திண்ணம்.

ஈ. முன்னோடிகளின் முன்னுரை

> ''அக்காலத்தில் அச்சிடப்பெற்ற தமிழ்ப் புத்தகங்கள் பலவற்றில் முகவுரை முதலியன காணப்படவில்லை. அவை இருந்தால் படிப்பவர்களுக்கு மிக்க உபயோகமாக இருக்கு மென்பதை உணர்ந்த நான் சிந்தாமணிக்கு அங்கமாக அவற்றை எழுதிச் சேர்த்துப் பதிப்பிக்கலாமென்று எண்ணி னேன்... நூலைப் படிப்பதற்கு முன் அதிலுள்ள முக்கியமான விஷயங்களையும் நூலின் பெருமையையும் உரையின் தன்மை முதலியவற்றையும் படிப்பவர்கள் தெரிந்துகொள்ளுவது நல மென்பது எனது கருத்து'' என்பர் உ.வே.சா.[24]

1887இல் பதிப்பித்த சீவகசிந்தாமணியில் முன்னுரை எழுதிய உ.வே.சா. அடுத்த பதிப்புகளில் பலவகைப்பட்ட ஆய்வுரைகளைத் தந்துள்ளார். ஆனால் 1881இல் வீரசோழியம் என்னும் நூலைப் பதிப்பித்த சி.வை.தா. அந்நூலில் முப்பது பக்க அளவில் ஆய்வு முன்னுரையை அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதே போல கலித்தொகை, இலக்கண விளக்கம், சூளாமணி ஆகிய பதிப்புகளிலும் சிறந்த ஆய்வுரைகளைப் பதிப்புரைகளாகத் தந்துள்ளார்.

---

22. நினைவு மஞ்சரி-1, பக். 20.
23. சூளாமணி, பதிப்புரை. 24. என் சரித்திரம், பக். 835.

நூலுக்குப் புறம்பான, ஆனால் நூற்பொருளோடு தொடர் புடைய பல செய்திகளையும் விரிவாக ஆய்ந்து, பிறகு நூற் பொருளை ஆய்ந்து கூறுவன சி. வை. தா.வின் பதிப்புரைகள். நூற்பொருளை முதற்பத்தியிலேயே தொடங்குவன உ.வே.சா.வின் முன்னுரைகள்.

தமிழும் சமஸ்கிருதமும், தமிழ் என்னும் சொல், தமிழ்மொழி, அபோத காலம், அட்சரகாலம், இலக்கணகாலம், சமுதாயகாலம், அநாதாரகாலம், சமணர் காலம், இதிகாச காலம், ஆதீன காலம் ஆகிய செய்திகளை வரன்முறையாக ஆய்ந்து, தக்க சான்று காட்டி நிறுவிய பிறகு இந்நூலின் காலம் என்ற தலைப்பை எடுத்துக் கொள்ளுகிறார் சி.வை.தா. (வீரசோழியப் பதிப்புரை, 1881).

> "...உத்தமர் புகழுமிப் பத்துப் பாட்டும், பாண்டி வளநாட்டில் மதுரைப்பதியில்... தமிழாராய்ந்த மகிமை பொருந்திய நக்கீரனார் முதலிய நல்லிசைப் புலவர்களால் அருளிச் செய்யப்பட்டு அச் சான்றோராலேயே தொகுக்கப் பட்டவை".[25]

> "புறநானூ றென்பது... கடைச்சங்கப் புலவர்கள் அருளிச் செய்த எட்டுத் தொகையுள் ஒன்று".[26]

> "பதிற்றுப்பத்து என்பது... நல்லிசைப் புலவர்களருளிச் செய்த சங்கச் செய்யுட்களாகிய எட்டுத் தொகைகளில் நான்காவது"[27]

என்பன உ.வே.சா. பதிப்புரைகளின் தொடக்கங்கள்.

நூலுக்காம் சொற்பொருள், அந்நூல்களின் வகை, நூலின் காலம், நூலாசிரியர், சுவடிகள், பதிப்பு முயற்சிகள் என்னும் வகை யில் புதிய வரன்முறைகளைத் தேர்ந்து, முன்னுரைகளை அமைத்துக் காட்டியவர் எஸ். வையாபுரிப் பிள்ளை ஆவார்.

> "முற்காலத்தே தமிழ் கற்கப் புகுந்தார் இலக்கணம், நிகண்டு என்ற இருவகைக் கருவி நூல்களைக் கையாண்டு வந்தனர். நிகண்டுகளில் ஒருசில ஒவ்வொரு பொருளுக்குமுரிய பல பெயர்களையும் நெறிமுறையே கூறிச் செல்வன. அவை ஒருபொருட் பல்பெயர்த் தொகுதி எனப்படும்'[28]

---

25. பத்துப்பாட்டு, முகவுரை (முதற்பதிப்பு-1889).
26. புறநானூறு, முகவுரை (முதற்பதிப்பு-1894).
27. பதிற்றுப்பத்து, முகவுரை (முதற்பதிப்பு-1904).
28. அரும்பொருள் விளக்க நிகண்டு முன்னுரை.

எனப் பொருள் விளக்கத்தோடு பகுத்துக் காட்டுகிற முறையைக் கையாண்டவர் எஸ். வையாபுரிப் பிள்ளை.

நூலால் அறியப்படும் செய்திகளாக, முதல், கரு, உரி ஆகிய பொருள், நாடு, ஊர், இடம், தாவரம், பிராணி, கருவி, ஊர்தி, உணவு, நீதி, உபகாரிகள், சாதி, ஆடவர், மகளிர், வழக்கங்கள், வாழ்க்கை, அரசியல், நிமித்தம் ஆகிய பலவகைச் செய்திகளின் தொகுப்பும், மொழி அமைப்பாக, இலக்கணச் செய்திகள், நால்வகைச் சொற்கள், வடசொற்கள், உவமைகள் ஆகியவற்றின் சிறப்பும் நூலைப் பற்றிய ஆய்வுரைகளாக, முன்னோடிகளின் பதிப்புகளில் காணப்படுகின்றன.[29]

நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, பாடினோர், பாடப்பட்டோர் வரலாறுகள் ஆகிய வரலாறுகள் அமைகின்றன. நூலுடைத் தலைவனின் செய்திகள் பலவாறு விளக்கப்பட்டுள்ளன. சான்றாக, சீவகன் சரித்திரச் சுருக்கத்தைக் கூறி, ஸ்ரீபுராணத்துள்ள சீவக சரித்திரத்தோடு ஒப்பிடப்படுகிறது. நூலில் காணப்படும் செய்திகளுக்கும் தொடர்களுக்கும் ஒப்புமையான பிற நூல்களின் செய்திகளும் தொடர்களும் எடுத்துக் காட்டப்படும் இடங்கள் பதிப்பாசிரியரின் பரந்த நூலறிவையும், ஆழ்ந்த நினைவாற்றலையும் புலப்படுத்துகின்றன.

பிற பதிப்பாசிரியரின் பழைய பதிப்புகளில் இல்லாத செய்யுள் முதற்குறிப்பு, அருஞ்சொல் அகரநிரல் போன்றவையும் இப்பதிப்புகளில் அமைகின்றன.

உ. பாடினோர் வரலாறு

முன்னோடிகளில் ஒருவரான உ.வே.சா. பாடினோர், பாடப்பட்டோர் வரலாறுகளைத் தொகுத்தளித்தது போலவே தொகுத்தவர், தொகுப்பித்தவர் வரலாறுகளையும் (ஐங்குறுநூறு), இசை வகுத்தோர் பற்றிய குறிப்புகளையும் (பரிபாடல்) ஆய்ந்தளித்துள்ளமை பதிப்பாளர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகிறது. இவை சொந்த முயற்சியால் உருவானவையாதலின் பதிப்பு தோறும் வளர்ச்சி பெற்றுள்ள நிலை உருவாகியுள்ளது. முழுமையாகத் தரும் அனுபவத்தை அளிக்கிறது. பாடினோர் பெயர்க்

29. புறநானூறு சீவகசிந்தாமணி, குறுந்தொகை ஆகிய உ.வே.சா.வின் பதிப்புகள்.

காரணங்களைப் பல்லாற்றானும் சிந்திக்குமாறு பொருத்திக் காட்டுகிறார் உ.வே.சா. பிற நூல்களில் அவர்கள் பாடிய பகுதிகளையும் சுட்டுகிறார்.

"அரிசில் கிழார்—கொள்ளிடத்தின் வடபால் அரியிலூர் அல்லது அரியில் என்று வழங்கும் ஓரூரின் பெயர் அரிசில் என்பதன் மரூஉவாகக் கருதப்படுகிறது; சகரயகரங்கள் தம்முள் மயங்குவது இயல்பு... கிழார்—உரியவர்... வேளாண் மரபினர்".

"அள்ளூர் நன்முல்லையார்—அள்ளூரென்பது பாண்டி நாட்டில் மருத நிலத்தின் கண்ணதோரூர். இது 'கொற்றச் செழியன், பிண்ட நெல்லி னள்ளூரன்னவென் னொண்டொடி' (அகநா. 46) என்னும் இவர் பாடலால் விளங்குகிறது".

"உறையூர் முதுகண்ணன் சாத்தனார்—முதுகண் என்பது பிராயத்தாலும் அறிவாலும் முதிர்ந்து, அரசர்க்கும் பட்டத் தேவிகளுக்கும் உசாத் துணையாகவிருந்து, நீதிகளைச் செவியறிவுறுத்தும் ஆண்பாலார் பெண்பாலார்களுக்குரிய பெயராகச் சிலாசாசன முதலியவற்றிற் காணப்படுகிறது... இவர் உறையூர் அரசர்பால் அத்தொழிலை உடையவராக இருந்தார் போலும்".

"கள்ளில் ஆத்திரையனார் — கள்ளில் — ஓரூர்; இது தொண்டை நாட்டிலுள்ளதும் தேவாரம் பெற்றதுமான ஒரு சிவஸ்தலம். ஆத்திரையன்—அத்திரி குலத்திற் பிறந்தவன். இவர்க்கு இப்பெயர் குடிப்பெயர்".[30]

என்பன போன்ற பல பெயர்க்காரணங்கள் பதிப்பாசிரியரின் ஆற்றலால் பிறந்தவை பிற பதிப்பாசிரியருக்கு ஊக்கமூட்டி வழி காட்டுபவை.

முன்னோடிகளின் உரை, சிறப்புரைகள் : உரையில்லாத சுவடிகளைப் பதிப்பிக்கும்போது பதிப்பாசிரியர் சிறந்த உரை விளக்கத்தைத் தரவேண்டும் என்பதற்கும் முன்னோடியர் வழி காட்டியுள்ளனர். சொற்கள் பிரிக்கப்பட்டுள்ளன. முறைப்படுத்தி தேவையான விளக்கங்களைத் தந்துள்ள முறை காணப்படுகிறது. உ.வே.சா. எழுதியுள்ள குறுந்தொகை உரை முழுமையான வழி

30 புறநானூறு, பாடினோர் வரலாறு.

காட்டியாகிறது. உரைகளில் காணப்படும் மேற்கோள்களை விளக்குவதோடு இடம் சுட்டிக் காட்டுதலும், இடம் விளங்கா மேற் கோள்களைப் பிரித்துக் காட்டுதலும் பதிப்புக் கலைக்குப் பயன் படுவதாகும்.

பதிப்பாசிரியர் சிலரின் பதிப்பு அனுபவங்களைத் துணையாகக் கொண்டு, சுவடிப் பதிப்புகள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை நிரல்படுத்திக் காட்டுவது பயனுடையதாகும். இவ்வனு பவங்களைப் பின்பற்றும்போது,

> "பதிப்புப் பணியில் உ. வே. சாமிநாதையர் பழைய முறையைப் பின்பற்றியவர் என்றால், வையாபுரிப் பிள்ளை புதுமுறையைப் பின்பற்ற ஆயத்தம் செய்தவர் எனலாம்"[31]

என்னும் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்களின் கருத்தையும் உட்கொள்ள வேண்டும்.

4. பதிப்புப் பணிகள்

பதிப்புக்கலை முன்னோடிகளின் அனுபவங்களோடு பதிப்புப் பணியினை மேற்கொள்ளும் நமக்குச் சில எளிய வழிவகைகள் கிடைக்கின்றன. அச்சுப்படி தயாரிப்பதை முதலிலேயே தூய்மை யாகச் செய்ய முடிகிறது. சீர்களையும் சொற்களையும் முறையே ஓசையும் பொருளும் தோன்ற பிரித்து அமைக்க வழி கிடைத் துள்ளது. முறையான நிறுத்தற் குறிகளை அமைத்து, பொருட் புலப்பாட்டினை உண்டாக்க முடிகிறது. மேற்கோள், அடிக் குறிப்பு, ஆய்வடங்கல், சொல்லடைவு ஆகியவற்றை அமைத்து, பதிப்பினைச் செம்மை செய்ய முன்னோடிகளின் அனுபவம் துணை புரிகிறது. இத்தகு அனுபவங்களோடு சுவடிப் பதிப்பில் இம்முறை களைக் கையாளும் வழிவகைகளை இப்பகுதி ஆய்வு செய்கிறது.

அச்சுப்படி தயாரித்தல் : அச்சகத்திற்கு அனுப்பப்பெறும் தூய படி அச்சுப்படி எனப்படும். எல்லாவகையான திருத்தங்களுக்குப் பிறகு இப்படியினைத் தயாரித்தல் வேண்டும். அடித்தல், திருத்தல்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வரிப் பிளப்புகளாகச் சிறிய எழுத்தில் எழுதிப் புகுத்துதல் கூடாது. பக்கக் கோட்டில் எழுதிச் சேர்த்தலும் அம்புக் குறிகளிட்டு ஆங்காங்கு சேர்க்குமாறு காட்டுதலும் இல்லாமல் பார்த்துக்

---

31. சில பட்டுரைகள், பக். 122.

கொள்ள வேண்டும். இவை அச்சுக் கோப்பவரைத் திணறச் செய்யும். அச்சுத் தாள்கள் வந்த பிறகு அவற்றில் சில தொடர்களையோ வரிகளையோ சேர்த்து அனுப்புதல் அல்லது நீக்கி யனுப்புதல் ஆகியவை ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுவது நல்லது.

பிரித்து அமைத்தல் : சொற்களை அல்லது சீர்களை இடைவெளிவிட்டுப் பிரித்துக் காட்டவேண்டும். அவ்வாறு தூய படியில் காட்டாமல் அச்சுத்தாள் வந்த பிறகு அதில் சில இடங்களைப் பிரித்து அமைக்குமாறும், சில சொற்களைச் சேர்த்து அமைக்குமாறும் குறியீடுகளின் மூலம் கட்டளை இடுவது கூடாது. ஒவ்வொரு பக்கமும் வரிகள் ஒரே அளவில் அமையுமாறு எழுதுவது அச்சில் எவ்வளவு பக்கமாகும் என்று கணக்கிடவும், பிரித்துச் சீர்மை செய்யவும் உதவியாக இருக்கும்.

நிறுத்தற்குறி : காற்புள்ளி முதல் அடைப்புக்குறி ஈறாக அனைத்து நிறுத்தற் குறிகளையும் தெளிவாகக் குறித்துக் காட்ட வேண்டும். வரிகளைத் தொடர்ச்சியாக எழுதிவிட்டு அச்சுத்தாள் வந்த பிறகு ஆங்காங்கு குறியிட்டுக் காட்டி, நிறுத்தற் குறிகளைச் சேர்க்கச் செய்வது '**பதிப்பு அறம்**' ஆகாது.

தலைப்பு : இயல் தலைப்பு, உட்பிரிவுத் தலைப்பு, ஆகியவற்றைத் தெளிவாக எழுதி அடிக் கோடிடுவது அவசியம். அடிக் குறிப்புகளைத் தனியே பிரித்து எழுதி அமைக்க வேண்டும். தூய படியின் இருபுறமும் சுமார் மூன்று செ.மீ. அளவு பக்கக் கோடுவிட்டு எழுதி, இடதுபுறப் பக்கக் கோட்டில் மேற்கூறிய தலைப்புகள். பாடல் அல்லது உரைநடைப்பகுதி, அடிக்குறிப்பு ஆகியவை எந்தெந்த அச்சுப் புள்ளிகளில் அமைய வேண்டும் என்பதை வேறு நிற மையினால் குறிப்பிட வேண்டும். சான்றாக இயல் தலைப்பு வரிக்கு நேரே இடப்புறப் பக்கக் கோட்டில் '**14 புள்ளி**' எனவும், பத்தித் தலைப்புக்கு நேரே '**12 புள்ளி**' எனவும், அடிக்குறிப்பு வரிகளுக்கு நேரே '**8 புள்ளி**' எனவும் குறிக்கவேண்டும். பாடல், உரை நடை போன்ற பகுதிகளுக்குப் பொதுவாக அச்சுப்புள்ளிகளை முதற் பக்கத்தில் குறிப்பிட்டால் போதும். அடிக்கோடு இடும் இடங்கள், தடித்த எழுத்தில் அமையும் சொற்கள் ஆகியவற்றையும் தெளிவாக வேறு நிற மையினால் குறித்துக் காட்டவேண்டும்.

படங்கள் : படங்கள், அட்டவணைகள், ஆகியவை இருப்பின் அச்சுப்படியின் இறுதியில் இணைத்து அவற்றிற்கு 1, 2, 3 என எண் கொடுத்து, அவை எந்தெந்தப் பகுதியில் அமையவேண்டும் என்ற

குறிப்பை அடிப்பாகத்தில் எழுதிவிட வேண்டும். நூலின் உட்பகுதியிலும் அவை அமைய வேண்டிய இடத்தில் படம் 1, அட்டவணை 1 அமைக்க என்ற குறிப்பைத் தருதல் வேண்டும்.

பக்க எண் : எழுதிய அச்சுப்படியினை மொத்தமாகச் சேர்த்துப் புத்தகம் போலத் தைத்து விடுதல் கூடாது. தலைப்பில் தைப்பதோ, கோத்துவிடுவதோ செய்தல் வேண்டும். அச்சுக் கோப்பவருக்குத் தனித்தனித் தாளாக எடுத்துக் கொடுக்குமாறு அமையவேண்டும். கோத்து ஒழுங்கு செய்த பிறகு கடைசிவரை முறையாகப் பக்க எண் கொடுப்பது அவசியம். பிரித்துக் கொடுத்து, மீண்டும் தொகுக்க அதுவே துணைபுரியும்.

முடிவு : இவ்வாறு தெளிவாக அமையும் அச்சுப்படியின் உதவியால் அச்சுக் கோப்பது எளிமையாகிறது; தவறு குறைகிறது; அச்சுத்தாள் (மெய்ப்பு) திருத்துவதில் கடினம் ஏற்படுவதில்லை; மீண்டும் மீண்டும் அச்சுத்தாள் பார்க்க வேண்டிய அவசியம் இராது; அச்சுக் கோக்கும் பணியும், திருத்தும் பணியும் ஒருசேர விரைவில் முடிவு பெறும்.

அ. பிரிப்புமுறை—பழந்தமிழ் இலக்கியம் பரவாமை

கல்விஅறிவும் படிக்கும் பழக்கமும் பெருகி வருவது இவ் இருபதாம் நூற்றாண்டு. ஆயினும் பழந்தமிழ் இலக்கியங்கள் மக்களிடையே பரவிப் பயன்தரவில்லை. காரணம் என்ன? அவை செய்யுள் நடையில் அமைந்துள்ளன; அவற்றின் பொருளை எளிமையாக உணர்ந்துகொள்ளுமாறு அவை பதிப்பிக்கப் பெறவில்லை. கடின சந்திகளுங்கூடப் பிரிக்கப்படவில்லை; ஓரளவு தமிழ் பயின்றவர் அவற்றைத் தாமே துய்க்க முடிவதில்லை; மொழியில், எளிதில் பின்பற்றக்கூடிய நெகிழ்ச்சித் தன்மை ஏற்பட்டு அனைவராலும் கையாளப்படுகிறது; எளிய நடையில் பேசுவதும் எழுதுவதும் மிகுந்து வருகிறது; அந்த நூல்களைப் படிப்பதே வழக்கமாகி வருகிறது; இந்த அடிப்படையில் சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை, கவிதை ஆகியவை எழுதப்படுகின்றன; அவற்றை விரும்பிப் படிப்போரும் பெருகி வருகின்றனர். இந்த எளிய நடைப் பயிற்சியில் உள்ளவர்களுக்குப் பழந்தமிழ்ப் பதிப்புகள் ஐயத்தையும் மயக்கத்தையும் விளைவித்து விடுகின்றன. காலமின்மையும் விரைவும் அந்த நூல்களில் வெறுப்பை உண்டாக்கிவிடுகின்றன. இவை பழந்தமிழ் இலக்கியங்கள் மக்களிடை பரவாமைக்குக் கூறப்படும் காரணங்கள்.

கடினத்தன்மை : அசத்தோத்து, கடறாவு படலம், நேர்பசை, நிரைபசை, பஃறொடை, பரிசிற்றுரை, பாடாண்டிணை, மலை மகணாயகர், நந்தெய்வச் செந்தமிழ், தொல்காப்பிய வேட்டுப் பிரதி, கரும்பயிலக் கூலியா என்பன போன்ற தொடர்கள் கற்போரை மயக்குவனவாகின்றன என்றும் எடுத்துக் காட்டப் படுகின்றன.[32]

''காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப''[33]

''புரவல னாடூர் பெயர்கொடை பராஅ
யாங்குநீர் செல்கென விடுப்பதாற் றுப்படை''[34]

என்னும் அடிகளில் முறையே, கன்னித்துறைச் சேர்ப்ப! என்பது போன்று காதுசேர்ந்த தாழ்குழையாய்! என்பதும் விளியாகப் பொருள் கொள்ளும் தன்மையை அடைகிறது; புரவலன், ஆடு, ஊர் எனவும், யாங்குநீ செல்க எனப் பிழையாகவும் பிரித்துப் பொருள் காண இயலும். எனவே இவற்றை முறையே கா, து, சேர், தாழ், குழை, ஆய் என்று பிரித்தும் புரவலன், நாடு, ஆங்குநீர் செல்க என்று பிரித்தும் பதிப்பித்திருந்தால் பொருள் காண்பதில் ஐயம் ஏற்பட்டிராது.

''...யனைத்தும்வென் றாரியத்தோ
டுறழ்தருதமிழ்த் தெய்வத்தை...''[35]

இவ்வடிகளில், ஆரியத்தோடு—உறழ்தருதமிழ் என்று பிரித்திருந் தால் 'டு' அடி முதலில் வந்திருக்காது.

''... ... ... வேதத்தே
வாதவனங் கண்டா தடைத்தகத வந்திறந்தாய்''[36]

என்பதில் வேதத் தேவு, ஆதவன் அங்கு அண்டாது அடைத்த கதவம் திறந்தாய் என்னும் உரைநடையைக் காண்பதற்குப் பெருமுயற்சி தேவைப்படுகிறது.

---

32. ஆய்வுக்கோவை—பதினான்காவது கருத்தரங்கு தொகுதி -2, பக். 159-160.
33. யாப்பருங்கலக் காரிகை விளை நிரல்நிறைக்கு எடுத்துக் காட்டு. 34. பன்னிருபாட்டியல், 149.
35. ஸ்ரீகாளத்தி புராணம், தமிழ் வாழ்த்து.
36. தமிழ்விடு தூது, 127.

பதிப்பில் சுவடிமுறை : பழைய அச்சு நூல்கள் சுவடியில் எழுதப்பட்டுள்ள முறையிலேயே காணப்படுகின்றன. செய்யுள் அடி, சீர் பிரிக்கப் பெறவில்லை. சேர்ந்த சந்தி வடிவங்களும் ஒரே தொடராகக் காணப்படுகின்றன. இடைவெளி காணப்படுவ தில்லை. இவற்றால் கற்போர், செய்யுள்களைப் பலமுறைப் படிப்பதிலும், எதுகை, மோனைகளின் உதவியால் அடிகளைப் பிரித்து அறிவதிலும் பாட்டு வகையைக் காண்பதிலும் காலத்தைச் செலவிட நேருகிறது. பொருள் அறிவதில், நயம் உணர்வதில், சுவைத்து இன்புறுவதில் காலத்தைச் செலவழிக்க இயலாமல் போகிறது. சுவடியில் காணும்,

''ஒருபெயர் பொதுச்சொலுள் பொருளொழியத் திரிபுவேறு
கிளத்தல்...''[37]

என்னும் நூற்பாவில் அமைவன எளிய சொற்கள். ஆயினும் பிரித்துக் காண்பதில் பொருள் வேறுபாடு அமைகிறது. 'பொதுச் சொலுள் பொருள் ஒழிய' என்று பிரிக்கலாம். 'பொதுச்சொல் உள்பொருள் ஒழிய' என்றும் பிரிக்கலாம். பிரிப்பு நிலைக்கேற்பப் பொருளும் வேறுபடும்.

''நசைகொண்டு தந்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்
இசைபரந் துலகேத்த ஏதில்நாட் டுறைபவர்''[38]

இதில் தாங்கித்தம் -இசைபரந்து எனப் பதிப்பித்து, 'தம் புகழ் உலகெங்கும் பரகையினாலே' என்று பொருளும் காணப்பட்டது. ஆனால் இவ்வடிகள்,

''......சேர்ந்தாரைத் தாங்கித்தம்
மிசைபரந் துலகேத்த...''[39]

என்று பிரித்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. பொருள் வேறுபடப் பிரித்ததற்கு இவை சான்றாகின்றன. தவறாகவோ, பொருள் வேறு படுமாறோ பிரித்துப் பதிப்பிப்பதைக் காட்டிலும் பிரிக்காமல் பதிப்பிப்பதே சிறப்புடையதாகும் என்று எண்ணத் தோன்றுகிறது.

பிற்காலப் பதிப்புகள் : அடிகளாகப் பிரித்தும், அடிகளில் சீர்களைப் பிரித்தும் அச்சிட்ட முறை சிறிது சிறிதாக வளர்ந் துள்ளது. ஆயினும் சீரும் தளையும் பொருந்த சொற்கள் வகையுளி செய்யப்பட்டன.

37. தொல். சொல. 49.
38. கலித்தொகை. 26.
39. தொல். பொருள். 28, மேற்கோள்.

"பொருள்நோக்கா தோசையே நோக்கி"[40]
"நிலமிசை நீடுவாழ் வார்"[41]

என்பன தளை கெடாது பிரிக்கப்பட்ட அடிகள். பாவினை அறியவும், ஏற்ற சந்தம் கொடுத்து இசையுடன் படித்து மகிழவும் இம்முறை பயனுடையதாயிற்று. ஆனால் பொருள்காண முயற்சி தேவைப்படுவதாயிற்று.

பிரிப்பு முறையில் முன்னோடிகள் கருத்து

"நூலைப் படிக்கும்போது புணர்ச்சி பிரிந்திருந்தால் தமிழின்பம் பெறலாம் என்று நாம் மயங்குகின்றோம். இன்பத்திற்கு இது இயற்கையன்று. பிரித்துக் காணும் மொழிப் பயிற்சி பெறுவதே நேர்வழி. ஓரைம்பது பாட்டுக்களைப் பிரித்தும் புணர்த்தும் பார்க்கும் சிறுநன்முயற்சி நமக்கு வேண்டும். இச்சிறு முயற்சிக்குச் சோம்பறப்பட்டு, ஒருகோடிப் பாடல்களை முற்றும் பிரிவினை செய்து பதிப்பிக்கும் போக்குக்கு இடங்கொடுத்தலாகாது"

என்பார் வ. சுப. மாணிக்கம்.[42]

"ஒருகாலத்தில் அடிவரையறை தெரியக்கூடாத வண்ணமே செய்யுட்களை ஏட்டில் எழுதிவந்தனர். அச்சில் அடிவரை யறையைக் காமா, உடுக்குறி முதலிய குறியீடுகளால் காட்டி வந்தனர்...பின்னர் சீர்பிரித்து அச்சிடத் தொடங்கினர்...இம் முறையில் பெரும்பயன் உண்டாயிற்று. செய்யுட்களின் இயல்பு நன்கு புலனாயிற்று. பிரிப்பதில் செய்யுள் இலக் கணத்தை முக்கியமாகக் கவனித்து வந்தமையினாலே அச் செய்யுட்களில் பிழையிருக்குமாயின் அவை எளிதில் புலப்படு தற்கும் இடம் ஏற்பட்டது...மேலும் சீர்களைப் பிரித்தல் இசை யின்பத்தை உணர்தற்கும் பயன்பட்டது.

"பொருளுணர்ச்சிக்குச் சீர்பிரிப்பதைக் காட்டிலும் சந்தி பிரிப்பது அவசியம். ...அடிபிரித்தல், சீர்பிரித்தல், சீருள்ளே சந்திபிரித்தல், பதங்களைப் பிரித்தல் எனவரும் பரிணாமக் கிரமப்படியும் இது உண்மையாதல் காணலாம். எனினும் இசையும் ஓரோ இடங்களில் கவனிக்கும்படி யாயிற்று"

---

40. யாப்பருங்கலக் காரிகை, வகையுளி—எடுத்துக்காட்டு.
41. குறள், 4.
42. இரட்டைக் காப்பியங்கள், பதிப்புரை, பக். 72.

என்பர் எஸ். வையாபுரிப்பிள்ளை.[43]

சந்தியும் மொழியும் : சீரில் அமையும் கடின சந்தியைப் பிரித்துப் பதிப்பிப்பது நூலை எளிமைப்படுத்தித் தரும் முறை யாகும். ஆனால், சந்திமுறை என்பது தமிழ்மொழியின் ஒரு தனிச் சிறப்பு ஆகும். இது ஓசை அடிப்படையில் அமைந்தது ஆயினும் பொருளை அடிப்படையாகக் கொண்டே விளங்குகிறது. எனவே சிலவிடத்துப் பொருளுக்காகவும் சந்தி மாற்றம் ஏற்படுகிறது. இச் சந்திகளைப் பிரித்து அறியும் விதி முறைகளை அறிந்த பிறகே இலக்கியத்தை நுகர வேண்டும் என்பது மொழியைத் தனி உரிமைப் பொருளாகக் கருதுவதாகிவிடக் கூடும் என்ற கருத்தும் வெளியாகி யுள்ளது.[44]

முடிவு : பொருள் உணர, சந்தி பெருந்தடையாகிறது. பிரித்து அமைப்பதால் ஓசை இன்பம் கெடுகிறது; சீர்தளை சிதை கிறது; ஆனால் பொருளைப் புரிந்துகொள்ள எளிமையாகிறது. இந்த இருவேறு கருத்துகளையும் பதிப்பாசிரியர் உளங்கொள வேண்டும். பாட்டின் ஓசை குறையாவண்ணம், சீர், தளை சிதையா வண்ணம், மொழி இயல்பு மாறாவண்ணம் அமைத்துப் பதிப்பிப்பதே பாடல், உரைநடை ஆகியவற்றின் வேறுபாடுகளை உணர்ந்து பதிப்பிப்பதாகும். சந்திகளைப் பிரித்துக்காட்டுதல் என்ற வகைகளில் கொண்டு, பாடலின் கீழோ அடிக் குறிப்பிலோ அமைத்துப் பதிப்பிப்பதே சிறந்ததாகும்.

பாட்டும் உரைநடையும் : பாட்டில் சீர்தளை சிதையாது ஓசை யின்பத்தை உணருமாறு பதிப்பித்தல் வேண்டும் என்பது போலவே உரைநடையிலும் சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் பதிப்பிப்பது பொருள் விளக்கத்திற்கு அவசியமாகிறது. சான்றாக,

தமிழ் என்பது ஒரு தனிச்சொல்; மொழி என்பதும் ஒரு தனிச் சொல். தமிழ்மொழி என்று வரும்போது தனித்தனியே இடை வெளிவிட்டுப் பதிப்பித்தல் கூடாது. இரண்டும் இணைந்து ஒரு பொருளை உணர்த்துகின்றன. இணைந்த அவை ஒரு சொல் தன்மையைப் பெறுகின்றன.

பேச்சுமொழி, எழுத்துமொழி, வடமொழி, வடசொல், உரை நடை, செய்யுள்நடை, மொழிநடை, தமிழ்நாடு, ஆந்திரநாடு, ஆய்வடங்கல், அடிக்குறிப்பு போன்றவை இத்தகையன.

---

43. திவ்யப்பிரபந்தம், முதலாயிரம், பதிப்புரை, பக்.
44. ஆய்வுக்கோவை, 14-2; பக். 164.

ஆ. பிரித்து அமைப்பதில் சில வரன்முறைகள்

பெயர்ச் சொற்கள் : அடையோடு கூடியும், இருசொல் இணைந்தும் வரும் பெயர்களைப் பிரித்தல் கூடாது. சான்றாக மேலே கூறிய சொற்களோடு மேலும் சில பெயர்களைச் சுட்டலாம். அவை :

அரசமரம், ஆடித்திங்கள், இலவம்பஞ்சு, எம்பெருமான், காமராசர், காலைநேரம், கும்பகோணம் கூன்பாண்டியன், சுந்தர மூர்த்தி, தலை ஓடு, நாவுக்கரசர் இவற்றைப் போன்ற சொற்கள் ஒரு சொல் நீர்மையவாய் அமைதல் வேண்டும்.

உருபுகள் : வேற்றுமை உருபுகள் தனித்து நின்று பொருள் தாரா இடைச்சொற்கள் ஆதலின் அவை சேர்ந்து வரும் பெயர்ச் சொற்களிலிருந்து அவற்றைப் பிரித்து அமைத்தல் கூடாது.

அன்பால் திருத்தினன்; சாந்தொடு வந்தனள்; அடியாரது பெருமை; மடவார்கண் காண்பன்

என உருபுகளைச் சேர்த்து எழுதுதல் வேண்டும்.

உருபுப் பொருள் சொற்கள் : உருபின் பொருளில் வரும் பிற சொற்கள் தனித்து நின்று பொருள் தருவனவாயினும் அவற்றைப் பிரித்து எழுதுதல் கூடாது. பிரித்தால் தனிப் பொருளைத் தருவ தாகிவிடும். பிரித்து எழுதலாம் என்று கூறி—'வான் புலன்கள் அகத்து அடக்கி; 'கொடிமேல் உயர்த்தினான்' என்பனவற்றைக் காட்டுவர்.[45]

புலன்களை அகத்து அடக்கி எனவும், புலன்களின் அகத்து அடக்கி எனவும் பொருள் கொள்ள வாய்ப்பளிக்கும். புலன் களகத்து எனச் சேர்த்துப் பதிப்பிப்பதே கருதிய பொருளைத் தருவ தாகும். கொடிமேல் என்பதும் இவ்வாறே அமையும்.

இயல்பு புணர்ச்சிகள் : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது, உடம்படுமெய் பெறுவது, குற்றியலுகர ஈற்றின் முன் உயிர் வந்து இயைவது ஆகியவை இயல்பாக ஏற்படும் சந்திகள். இவை சொற் றொடர்களில் விட்டிசை இன்றி இனிமை பயப்பவை. விரைந்து பேசவும் எழுதவும் பயன்படுபவை. ஐயமும் கடினத் தன்மையும் ஏற்படும் சில இடங்களைத் தவிர பிறவற்றைச் சேர்த்து அமைத்தலே மொழிக்கு இனிமை பயப்பதாகும்.

---

45. தேவாரம், முன்னுரை, பக். 173.

காரிருள், ஈரிரண்டு, நாலாறு, இடமில்லை, மரமாகி, மனிதராய், தேவராய் என்பன கார்இருள், ஈர்இரண்டு, நால்ஆறு... என வழக்காற்றிலும் பிரித்து வழங்கப்படுவதில்லை. எளிமையாக விளங்குவன பிரித்தமைப்பது தேவை இல்லாதது. இவற்றைப் போல,

போகவில்லை, வரவில்லை, அறிவில்லை, திருவாரூர், புழுவாய், அலியாய், கையிலங்குபொன், மெய்யிலங்குநீறு

என்பனவாகிய உடம்படுமெய்ப் புணர்ச்சித் தொடர்கள் எளிய வழக்காற்றில் உள்ளவை; சந்தி பிரித்தலோ. பிரித்து அமைத்தலோ தேவையில்லாதவை. இவற்றுள் புழுஆய், அலிஆய் எனப் பிரிப்பது புழுஆகி, அலிஆகி என்னும் ஆக்கப் பொருளைத் தருவதாகும். புழுவாய், அலியாய் என்பன புழுவாக, அலியாக என்னும் இயற்கைத் தன்மையைச் சுட்டுவனவாகப் பொருள்படும். பொருளுக்கேற்பப் பிரித்தல் வேண்டும் என்பர்.[46] கையிலங்கு, மெய்யிலங்கு என்பன—கை இலங்கு, மெய் இலங்கு எனப் பிரிக்கப் படுவதும் அவ்வாறே பொருள் தெளிவுக்காக என்பர். ஆயினும் சொற்கள் விட்டிசை உடையனவாகித் தொடரமைப்பைக் கெடுக்கின்றன.

வேறிலாப்பதப்பரிசு. ஈறிலாதநீ, தோடுடையசெவி என்னும் குற்றியலுகரப் புணர்ச்சிகளுள் வேறுஇலா, ஈறுஇலா. தோடுஉடைய என்பனவும் விட்டிசையுடையனவாகின்றன. சேர்த்து அமைப்பதே வழக்காறுடையதும் இனிமை வாய்ந்ததுமாகும்.

'இல்' என்பது : இல் என்பது வீடு, உருபு, இன்மை என்பனவாக வரும். உருபாக வரின் முன்பு உருபுவிதி கூறியதுபோல வீட்டில், அறையில், கண்ணில் எனச் சொல்லோடு இணைந்து நிற்கும். இன்மைப் பொருளில் வரின் சந்தி தோன்றாது. வழுவில் கொடை, ஏதமில் கொள்கை, கோளில் பொறியிற் குணமிலவே என்பன போன்று இயல்பாகவே நிற்கும். இங்கும் பெயர்களோடு சேர்த்தே அமைக்க வேண்டும்.

சுட்டு, வினா இடைச்சொல் : சுட்டுச்சொல், வினாச்சொற்களின் முன் உயிர்வர வகரம் தோன்றி இரட்டிக்கும். அல்லது வருமொழி முதலெழுத்து மிகும். இவ்விடங்களில் வருமொழியைப் பிரித்து அமைக்கலாம். அதாவது,

46. ஷை. தேவாரம், முன்னுரை, பக். 173.

அவ் வேளை; இவ் உலகம்;
அத் தேவர்; இம் மனிதர் எனவும்,
எவ் உலகம்; எம் மனிதர் எனவும் அமைக்கலாம்.

எகர இடைச்சொல் : வினாப் பொருளில் வராமல் எல்லாம் என்னும் பொருளில் வரும் எகர இடைச் சொல்லைப் பிரித்து அமைக்கக் கூடாது.

எவ்வுலகும், எக்காலமும், எவ்வகையாலும்,
எப்பொழுதும், எந்நாளும்

என்பனபோல அமைக்க வேண்டும்.

தனிக்குறில்முன் ஒற்று : தனிக்குறில்முன் ஒற்றுடைய மொழி முன் உயிர் வரின் நின்ற ஒற்று இரட்டும். அவற்றைச் சேர்த்து அமைத்தல் வேண்டும்.

இன்னிசை, கல்லூரி, தன்னுடைமை, மன்னுயிர், வெள்ளருவி போல்வன இவ்வகையைச் சார்ந்தவை.

மண்ணுலகு, விண்ணுலகு என்பன போன்று இவ்விலக்கணத்தில் வரும் இருபெயர் ஒட்டுகளும் சேர்த்து எழுதப்பட வேண்டியவையாகும்.

தொகைநிலைத் தொடர் : வேற்றுமைத்தொகை முதலான தொகைநிலைத் தொடர்களைச் சேர்த்து எழுதுதல் வேண்டும்.

தலைவணங்கு, புலவர் மகன், வள்ளல்கை, மழைக்கை,
துடியிடை, இராப்பகல், புலிவில்கயல், பூங்குழல்,
அலைகடல், செங்குமுதம்

ஆகிய தொகைச் சொற்கள் இருசொல்லுடையவை யாயினும் ஒரு சொல் தன்மையவாய் எழுதப்படுதல் வேண்டும்.

உவமை உருபுகள் : பெயருடனும் வினையுடனும் இணைந்து வரும் உவமை உருபுகள் இணைத்து எழுதப்படுதல் வேண்டும்.

பால்போலும் இனியசொல்; நிலவன்ன தன்மை;
நாயனையார்; பொன்திரண்டன்ன புரிசடை

என்பன போல உவமை உருபுகளைச் சேர்த்து எழுத வேண்டும்.

தொறும் என்னும் இடைச்சொல் : நாள்தொறும், வீடு தோறும், பக்கந்தோறும்-எனச் சேர்த்து எழுதுதல் தொறும், தோறும் என்னும் இடைச்சொற்களுக்கு உரிய முறையாகும்.

இரட்டைக் கிளவியும் அடுக்குத் தொடரும் : சொற்றொடர் களில் வரும் இரட்டைக் கிளவிகளையும் இணைத்து எழுத வேண்டும். உடன்வரும் 'என' என்னும் உருபையும் சேர்த்து எழுதவேண்டும்.

கலகல; கலகலவென; பலபல; இடைஇடையே-என ஒரு சொல் நீர்மைத்தாய் அமைக்க வேண்டும்.

பெயரோடு வரும் சொல்லுருபு : திருவாரூர் என்பது, இட மாவது,கற்றோர் என்போர், அருகர் ஆனவர் என்பனபோன்று பெயர்களை விளக்க இடையிலே வரும் சொல்லுருபுகளைப் பிரித்து அமைக்கக் கூடாது.

எச்சத் தொடர்கள் : பெயரெச்சச் சொற்களின்முன் சுட்டுச் சொல் வரின் சேர்த்தும், பெயர்ச் சொற்கள் வரின் பிரித்தும் எழுதுதல் வேண்டும். வினையெச்சத் தொடர்களைப் பிரித்து அமைக்க வேண்டும்.

கற்றஅவர், வாழும்அவை, வணங்குமவன் என்பன சுட்டுச் சொல்லோடு வந்த எச்சங்கள். இவை வாழும் அவை எனப் பிரிக்கப்பட்டாலும், வணங்குமவன் எனச் சேர்ந்திருந்தாலும் எழுதும்போது, வாழும்அவை எனச் சேர்ந்து அமைதல் வேண்டும்.

கற்ற சான்றோர், வாழும் உயிர்கள். வணங்கும் சிறுவன் என்பன பெயர்கொண்டு முடிந்தவை. பிரித்துக் காட்டப்பட்டன.

பகுதிப்பொருள் விகுதி : பகுதிப் பொருள்தரும் விகுதிகளைச் சேர்த்து எழுதுதல் வேண்டும்.

திருவாரூர் அதனுள், கோட்டை யாகியவற்றை என்பன முறையே திருவாரூருள், கோட்டைகளை எனப் பகுதிப் பொருளைச் சுட்டிய விகுதிகளுடன் வந்தன. அவை சேர்த்து எழுதப்பெறுதல் வேண்டும்.

காரணப்பெயர், வினைமுதற் பெயர்கள்

வரைமார்பன், நெற்பொரி, புரமெரித்தோன், மழுவேந்தி என்னும் காரணப்பெயர், வினைமுதற் பெயர்கள் இரண்டிரண்டு சொற்களால் வந்தவை ஆயினும் பிரிதது எழுதுதல் கூடாது.

துணைவினை : 'செய்' என்னும் அடியாகிய சொற்களும், அவ்வாய்பாட்டுச் சொற்களும் துணைவினையாகுமிடத்துச் சேர்த்து எழுதுதல் வேண்டும்.

ஒலிசெய், பொடிசெய்த, அருள்செய்தவன், வைதுநின்ற, நடை பயின்ற என்பன துணைவினை சேர்ந்து வந்தவை; சேர்த்து எழுதப் பட்டன.

உரைநடைத் தொடர்களில் தனித்து நின்று பொருள் தராத உருபு முதலானவற்றையும், இரண்டு மூன்று சொற்களாயினும் ஒரு பொருள் தருவனவற்றையும் சேர்த்து ஒருசொல் தன்மையவாய்க் காட்டுதல் மரபு. தனித்தனி பொருள் தருவன, விளக்கம் பெற்று நிற்பனவற்றைப் பிரித்து அமைத்தல் வேண்டும். இவை பதிப்பில் தெளிவை ஏற்படுத்துவனவாகும்.

இ. நிறுத்தற் குறிகள்

சொற்களையும் சொற்றொடர்களையும், சொல்லமைதி, பொருளமைதிகள் விளங்குமாறு படித்து உணரக் குறித்துக் காட்டும் குறியீடுகள் நிறுத்தற் குறிகள் எனப்படுகின்றன.

உரையாடும்பொழுதும் பேசும்பொழுதும் செய்திக்கு ஏற்ப எடுத்தும் படுத்தும் பேசுகிறோம்; சொற்களின் இடையிடையே நிறுத்திப் பேசுகிறோம்; தொடர்ச்சியாகப் பேசி முடிக்கிறோம்; வினா, வியப்பு, அச்சம், வருந்தம் ஆகிய உணர்ச்சிகளைத் தனித்தனி ஒலிக் குறிப்புகளால் உணர்த்துகிறோம். இவை கேட் போருக்குப் பொருள் தெளிவை உண்டாக்குகின்றன. இவ் ஒலிக் குறிப்புகளைப்போல், எழுத்து நடையில் பொருள் தெளிவைக் காட்டப் பயன்படுவன நிறுத்தற்குறிகள். இக்குறிகளும் இவற்றைப் பயன்படுத்தும் முறைகளும் இங்கு தரப்படுகின்றன.

சுவடிகளில் நிறுத்தற்குறிகள் : சுவடிகளில் நிறுத்தற்குறிகள் கையாளப்படவில்லை. சுவடிகளின் அக அமைப்பில் கூறப்பட்ட, பாடல் முடிவில் காணும் குறிகளே சுவடிகளில் கையாளப்பட் டுள்ளன. அவையும் ஒரே மாதிரியாக எல்லாச் சுவடிகளிலும் காணப்பெறாதனவாகும். பழைய பதிப்புகளிலும் இக்குறிகளைக் கையாளும் முறை தெளிவாக அமையவில்லை.

,, இந்நூலுரையிலே காட்டப்பட்ட குறிகள்

, இம் முளை கூட்டுச்சொல் முதலியவற்றின் பின்னும்,

\- இச்சிறு கீற்றுச் சொற்களின் பிரிவுக்குப் பின்னும்,

— இப்பெருங்கீற்றுப் பதசாரத்துக்குப் பின்னும்,

( ) இவ்விருதலைப் பிறை வருவிக்கப்பட்ட சொற்களுக்கும்,

• இக்குத்து முற்றுச் சொல்லுக்குப் பின்னும்,

[ ] இவ்விருதலைப் பகரந் தாத்பரியத்துக்கும்,

* இத்தாரகை அடியிற் காட்டப்பட்டவற்றிற்கும் வைக்கப் பட்டன''

என்னும் நிறுத்தற்குறிகளைப் பற்றிய குறிப்பு 'நிஷ்டாநுபூதிமூலம்' (1887) என்னும் நூலில் முதன் முதலாகக் குறிக்கப்பட்டுள்ளது.

பலவகை வளர்ச்சி நிலைகள் துணைபுரியும் இக்காலத்துத் திருத்தப் பதிப்புகளில் நிறுத்தற் குறிகளைத் தெளிவாகப் பயன் படுத்த வேண்டும் என்பதற்காக இப்பகுதி அமைகிறது. செய்யுள் நடையில் நிறுத்தற்குறிகளைக் கையாள்வது ஓசையைக் கெடுப்ப தாக அமையும்; உரைநடைக்கே இக்குறிகள் பயன்படுவனவாகும். பிரித்துப் பதிப்பிக்கும் முறையில் முன்பு குறிப்பிட்ட எஸ். ராஜம் வெளியீடுகள், பிரஞ்சு நிறுவனத் தேவாரப் பதிப்பு ஆகியவை செய்யுள் நடையிலும் நிறுத்தற்குறிகளைக் கையாண்டுள்ளன.

காற்புள்ளி (,) — காற்புள்ளி வரவேண்டிய இடங்கள் : பெயர்கள் பல அடுக்கி வரும் இடம் : நிலம், நீர், விண், தீ, காற்று என்பன ஐம்பூதங்கள். இத்தொடரில் பிரித்துக் காட்ட காற் புள்ளிகள் இடப்பட்டன. ஆனால் இறுதிப் பெயரையடுத்து வாக் கியத்தின் பிறசொற்கள் தொடரும் இடத்தில் இப்புள்ளி வரக் கூடாது.

வினை எச்சங்கள் அடுக்கி வரும் இடம் : ஈறாகி, முதலுமாகி, குணம்பலவாய், மறைநான்காகி நின்றானைப் போற்றுதும் என்னும் இத்தொடரிலும் ஈற்றில் நின்ற எச்சச் சொல் புள்ளியிடப்பெற வில்லை.

பெயரெச்சங்கள் அடுக்கி வரும் இடம் : நலம் எலாம் விளைந்த. நள்ளாறமர்ந்த, உமையொருபாகனாம் பெருமான். இவ் வாக்கியத்திலும் ஈற்று எச்சத்தொடர் தவிர பிற எச்சத்தொடர்கள் காற்புள்ளி பெற்றன.

முற்றெச்சங்கள் அடுக்கி வருமிடம் : பொடிகொள் உருவர், புலியின் அதளர், கலந்த நீற்றர், கறைசேர் கண்டத்தர் கயிலை மலையாரே. ஈற்றுத் தொடர் தவிர பிற முற்றெச்சத் தொடர்கள் காற்புள்ளி பெற்றன.

உம்மைகள் அடுக்கிவரும் இடம் : மயிலுக்குப் போர்வை ஈந்த பேகனும், முல்லைக்குத் தேர் தந்த பாரியும் கடையெழு வள்ளல்களிலே இருவர். இவ்வாறு நீண்ட தொடரிடையமைந்த உம்மையில் காற்புள்ளி வந்தது. ஈற்றுத் தொடர் புள்ளியின்றி தொடர்ந்தது. கபிலரும் பரணரும் நக்கீரரும் சங்கப் புலவராவர் என உம்மையாகிய இடைச்சொல் நெருங்கி வருமிடத்தில் காற்புள்ளி வேண்டாம்.

அரைப்புள்ளி (;) : ஓர் எழுவாயினை உடைய வாக்கியம். பல முடிபுகளைப் பெற்று வரின் அம்முடிபுச் சொற்களையடுத்து அரைப்புள்ளிகளிட்டுக் காட்டவேண்டும். அம்முடிபுச் சொற்கள் வாக்கிய முடிபுகள் அல்ல என்பதை அரைப்புள்ளிகள் புலப்படுத்தும்.

தோடணி செவியினர்; சுண்ணவெண்ணீற்றவர்;
சுடலையில் ஆடுவர்; தோலின் உடையினர்; பீடுடை
பெரியவர் பிரம்மாபுரத்தவர்.

பல முடிபுச் சொற்களின் பின்னும் அரைப்புள்ளி வந்தது.

தனிக் கருத்தைக் காட்டும் தனிச் சொற்களும் அரைப்புள்ளி பெற்று பொருள் விளக்கி வரும்.

சடையன்; பிறையன்; அடியவர்பெருமான் அவன்
காணே. பெருமான்-சடையன், பிறையன் என

முடிபுடைய சொற்களாய் நின்று அரைப்புள்ளி பெற்றன.

முக்காற்புள்ளி (:) : ஒருவரை விளித்து அவரிடத்தில் ஒன்று கூறுவதாகத் தொடங்குமிடம்; தான் கூறிய ஒன்றுக்கு மேலும் விளக்கம் தரத் தொடங்குமிடம் ஆகியவற்றில் முக்காற் புள்ளி இடம்பெறும்.

மாபெருந்தேவி; கேள் : ஒருபாலன் ஈங்கிவன்.
உரைசெய்வன் நான் : வாது செய்யத்திரு உள்ளமே.
அவை பலவாகும். அவையாவன : உயிரும் உடலும்
முதலாயின.

என்பன முக்காற்புள்ளி பெறும் இடங்களாகும்.

முற்றுப்புள்ளி (.) : கருத்து முடிவுபெறும் ஒவ்வொரு வாக்கியத்தின் இறுதியிலும் முற்றுப்புள்ளி இடம்பெறும். அவ்வாறே

ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இடம்பெறும். அம்முடிவிடம் வினாக்குறியோ வியப்பு முதலான உணர்ச்சிக் குறியோ பெறுமாயின் அங்கு முற்றுப்புள்ளி வைத்தல் கூடாது.

அறம், பொருள், இன்பம் என்பன நூலால் பெறும்
பயன்களாகும்.

சென்றது பரிதி வட்டஞ் செம்மலு மசைவு தீர்ந்தான்.

இவற்றுள் முறையே வாக்கிய இறுதியும் பாடலின் முடிவிடமும் முற்றுப்புள்ளி பெற்றன.

எங்கு எழுந்தருளுவதினியே?
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க !

என்பவற்றின் முடிவிடம் முறையே வினாக்குறியும் உணர்ச்சிக் குறியும் பெற்றன. கருத்து முடிந்த விடமாயினும் இவ்விடங்களில் முற்றுப்புள்ளி இடம்பெறாது. பாடல்களுக்கும், பத்தி முதலான வற்றிற்கும் அமைக்கும் தலைப்புத் தொடர்களின் முடிவில் முற்றுப் புள்ளி தேவை இல்லை.

சுருக்கக் குறிப்புகளில் : சுருக்கக் குறிப்புகளின் பின் முற்றுப் புள்ளியிட்டுக் காட்டி அவை முழுச் சொற்கள் அல்ல என்பதை உணர்த்த வேண்டும்.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு; கி. மு. முதலாம் நூற்றாண்டு;

தெ. ஆ. மாவட்டம்; ஆ. பி.; ம. ஆரூரன்; திரு. மணிவண்ணன்

என்பன சுருக்கக் குறிப்புகள். கிறித்துவுக்குப் பின் ஐந்தாம் நூற்றாண்டு என்று விரிந்து நின்ற சொற்களிடை புள்ளி எதுவும் வைப்பதில்லை. இதேபோல முறையே, தென்னார்க்காடு மாவட்டம். ஆந்திரப் பிரதேசம், மணியன் ஆரூரன், திருவாளர் மணிவண்ணன் என விரிந்து நின்றவிடங்களில் முற்றுப்புள்ளி இடுவ தில்லை. டாக்டர் (முனைவர்) ம. ஆரூரன் என்ற விடத்திலும் 'ம' என்னும் சுருக்கக் குறியின் பின்பே முற்றுப்புள்ளி வந்தது டாக்டர் என்ற முழுச்சொல்லையடுத்து முற்றுப்புள்ளி வருவ தில்லை.

எடுத்துக்காட்டுத் தொடர்களில் : இலக்கணக் குறிப்புகளை விளக்குமிடத்து, விளக்கத்திற்காகக் காட்டப்படும் எடுத்துக் காட்டுகள், சான்றுகள் ஆகிய சொற்றொடர்களின் இறுதியில் கருத்து முடிவுற்றதாயினும் முற்றுப்புள்ளி இட்டுக் காட்ட வேண்டுவதில்லை.

யானைக்கோடு கிடந்தது
மதிமுகம் வியர்த்தது
கருங்குதிரை ஓடிற்று

எனவரும். விளக்கத்திற்காகப் பிறநூல் மேற்கோள்கள் எடுத்துக் காட்டப்படுமாயின் உரிய புள்ளிகளிட்டுக் காட்டவேண்டும். தொடருக்கேற்ற முற்றுப்புள்ளியும் பெறும்.

உணர்ச்சிக்குறி (!) : விளிச்சொல், முன்னிலைச்சொல், வியங்கோள், வியப்பு, உவப்பு, இரக்கம், இகழ்ச்சி, அவலம் ஆகிய உணர்வுகளைப் புலப்படுத்தும் சொல் ஆகியவை நிற்குமிடங்களில் உணர்ச்சிக்குறி இடம்பெறும்.

கொற்கை வேந்தே ! என்காற் பொற்சிலம்பு மணியுடையரியே
வேய்புரையும் மென்தோளீ ! ... என்று வேண்டுவரே,

என்பனவற்றுள் அண்மைவிளி, மகடூஉமுன்னிலைச் சொற்கள் உணர்ச்சிக்குறி பெற்றன.

தேவரும் அறியாச் சிவனே காண்க ! (வியங்கோள்)
நங்கைமீர்கள் ! இதுஓர் அற்புதம் கேளீர் ! (வியப்பு)
என்னுடைய இன்னமுதே ! இராகவனே ! தாலேலோ !
(உவப்பு)
கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ காகுத்தா !
கரிய கோவே ! (இரக்கம்)
விதியின்றி, மதியிலியேன்... காய்ந்த வாறே ! (இகழ்ச்சி)
அம்மானைக் கூறாத நாவெல்லாம் கூறாத நாக்களே !
(அவலம்)

இவை வியங்கோள் முதலாய பொருளில் வந்த உணர்ச்சிக் குறிகளின் எடுத்துக் காட்டுகளாகும்.

ஏவற்பொருளில் : ஒருமைஏவல். பன்மைஏவல், உடன்பாட்டு ஏவல் எதிர்மறை ஏவல் ஆகிய பொருள்களிலும் உணர்ச்சிக்குறி இடம்பெறும்.

பசுபதியீசுரம் பாடு நாவே (ஒருமைஏவல்)
திலகயன்மின் பேதைகாள் (பன்மைஏவல்)
மன்னவனே அடியேனை மறவன்மின் : (எதிர்மறை)

இவற்றில் உடன்பாட்டுப் பொருள் எதிர்மறைப் பொருள்களில் ஒருமை, பன்மையில் வந்த ஏவல் முற்றுகள் உணர்ச்சிக்குறி பெற்றன.

வினாக்குறி (?)

வினாப்பொருள் நிகழும் தொடர்களின் இறுதியின் மட்டும் வினாக்குறி இடப்பெறும்.

தீவினை கெடுமாறு உண்டோ? என வினாப் பொருளில் வினாக்குறி வந்தது.

வினாச்சொல் நின்று, மேலும் சொற்கள் தொடர்ந்து வாக்கியம் முடிவுறுமாயின் வாக்கியத்தின் இடையில் வினாக்குறி வருதல் கூடாது.

நீவிர் யாவர்? என்பது வினா; நீவிர் யாவர் என அவர் வினவினார் என்னும் தொடரில் யாவர் என்பதன் முன் வினாக்குறி இடுதல் கூடாது.

மேற்கோள் குறி (“ ”) : ஒருவர் தம் கருத்துகளுக்கு வலுவூட்ட, பிறர் உரைகளை மேற்கோளாக எடுத்தாளும்போது, அத்தொடர்களை மேற்கோள் குறிக்குள் அமைப்பதே வழக்காற்றில் உள்ளது.

“நிற்க அதற்குத் தக” என்பார் வள்ளுவர்-என்று காட்டுவது வழக்காறு.

ஒருவர் கூற்றில், மற்றொருவர் கூற்றினை எடுத்துக் காட்டுவதற்கும் இக்குறியினைப் பயன்படுத்த வேண்டும். இது ஒற்றை மேற்கோள் குறியில் அமையும்.

‘ஈங்கிவர்க்கு-உண்டோ உலகத்து ஒப்போர்’ என்று
அக் கருந்தொழிற் கொல்லன் சொல்ல...

கொல்லன் கூற்று ஒற்றை மேற்கோளில் காட்டப்பெற்றது.

ஒருவர்தம் உள்ளத்து எண்ணும் எண்ணங்களையும் கருத்துகளையும் இவ்வாறே ஒற்றை மேற்கோளில் அமைப்பர்.

‘...தென்புலங்காவல் என்முதல் பிழைத்தது; கெடுகஎன்
ஆயுள்’ என மன்னவன் மயங்கி வீழ்ந்தனன்.

இவை மேற்கோள் குறி அமைய வேண்டிய இடங்களாகும்.

சிறுகோடு (-) : பாடல்களில் வெண்பா, கலிவெண்பாக்களில் தனிச் சொல்லைப் பிரித்துக் காட்டச் சிறுகோடு பயன்படுத்தப்படும். உட்தலைப்பு, பத்தித் தலைப்புகள் கொடுத்து அதே வரியில் செய்தி தொடர்ந்து எழுதப்பெறுமாயின் சிறுகோடு அமைக்கலாம்.

ஒரு தொடரில் ஒருசொல் அமைந்து, அந்தச் சொல்லின் பொருளையே தரும் வேறொரு சொல் முதல் நின்ற சொல்லின் விளக்கத்திற்காக அமையுமானால் அச்சொல்லின் இருபுறமும் சிறுகோடு இடுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக -உதாரணமாக -ஒரு குறட்பாவினைக் கூற லாம். இத்தொடரில் எடுத்துக்காட்டாக என்பதையே மீண்டும் உதாரணமாக என்னும் சொல்லால் கூறப்பட்டது. இங்கு இருபுறமும் சிறுகோடுகள் அமைந்தன. இயைந்து நிற்கும் தொடர் களைப் பிரித்துக் காட்டவும் சிறுகோட்டினைப் பயன்படுத்தலாம்.

இணைகோடு (—) (தொடர்கோடு)

ஒரு வரியின் முடிவில் வரும் சொல்லை உடைத்து அடுத்த வரியில் வைக்க நேரும்போது இடையே (வரியின் இறுதியில்) இணைகோடு இடுவது தமிழில் அவசியமில்லை என்பது வழக்காறு. ஆயினும் அவ்வாறு உடைத்து அமைப்பதால் பொருள் வேறுபடு மிடத்து இணைகோடு இடுவது நல்லது.

'முல்லை வேலியையுடைய கோடை

மலைக்குத்தலைவ ! வில்லையுடைய வேட்டுவ !

என அமையும் வரிகளில், 'கோடை மலைக்குத்தலைவ !' என்னும் தொடர் இவ்வாறு பிரியுமாயின் பொருள் மயக்கம் ஏற்படுமாதலின் கோடை என்பதை அடுத்து இணைகோடிடுதல் அவசியம்.

ஒருசொல் நீர்மைத்தாய தொகைநிலைத் தொடர்போன்ற சொற்கள் உடைபடுமாயினும் இணைகோடிடுதல் வேண்டும். ஒரு சொல்-லையோ; தொட-ரையோ என்பன போன்று உடைபடு மாயின் இணைகோடிடுதல் வேண்டும்.

பொருள் விளக்கம் வேண்டி பிரித்துக் காட்டப்பெறும் சொல்லாயின் இடையே இணைகோடிடுதல் நல்லது.

பஃறலை -பல்-தலை; பாடாண்டிணை -பாடு-ஆண்-திணை; உண்ணின்று-உள்-நின்று எனப் பிரித்துக் காட்டுமிடத்து இணை கோடு இடப்பட்டது.

அடைப்புக்குறி (பிறைவளைவு)

ஒரு சொல்லையோ தொடரையோ எழுதி, அதனை இவ்வாறும் குறிப்பர் என்று காட்ட. வேறு சொல்லையோ

தொடரையோ பயன்படுத்தும்போது அதனை அடைப்புக் குறிக்குள் காட்டுவது உண்டு. இந்தப் பத்தித் தலைப்பையே இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

சுவடிப்பதிப்புத் தலைப்புகளில் : சுவடிப் பதிப்பில் இக்குறி மிகுதியாகப் பயன்படும். அதாவது, சுவடியில் இல்லாத சில தலைப்புகள், பெயர்கள், விளக்கங்கள், குறிப்புகள் ஆகியவற்றைத் தெளிவு கருதி பதிப்பாசிரியர் ஆங்காங்கு அமைக்க நேர்ந்தால் அவற்றை அடைப்புக் குறிக்குள் அமைக்க வேண்டும். இல்லையேல் அத்தலைப்பு முதலானவை சுவடியில் உள்ளவையே என்று ஆகி விடும்.

காப்பு, அவையடக்கம், நகரச்சிறப்பு, ஆற்றுவளம் எனவும், விருத்தம், வெண்பா, கலித்துறை எனவும், நாட்டை, தோடி, புன்னாகவராளி எனவும் பாடற்பொருள், பாட்டுநடை, பண் முதலியவற்றைப் பதிப்பாசிரியரே ஆய்ந்து அமைக்கும்போது இவற்றை அடைப்புக் குறிக்குள் அமைக்க வேண்டும். இவை சுவடியிலேயே இருந்து பதிப்பித்தால் இக்குறி இடவேண்டாம்.

இடைப்பகுதி : சுவடிப்பதிப்பில் பாடலாயினும், உரைநடையாயினும் இடையில் விடுபட்டதைச் சேர்த்தல், தவறுகளைத் திருத்தியமைத்தல், மிக்கு வருவதை விலக்கிக் காட்டுதல் ஆகியவை நிகழுமாயினும் அவற்றை அடைப்புக் குறிக்குள் காட்டுவர். இம்முறை கற்போருக்குத் தடையாகிறது. ஆதலின் அவற்றை அடிக்குறிப்பில் தருதல் வேண்டும் என்பது இவ்வாய்வில் காட்டப் பெறும் முடிவு ஆகும். விடுபட்டதைச் சேர்த்தல், திருத்தல் ஆகிய வற்றால் முழுமையாக்கித் தருவது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

உய்யும் வண்ணம் (ந்) நினைமின் (மிகுதி)
ஏலா(தி) உருண்டையது (விடுபட்டது)
சரக்குவகை கழ(ள)ஞ்சு ஆகும் (திருத்தம்)

என்னும் இடங்களில் அடைப்புக்குறி இடப்பெறும்.

அடைப்புக்குறியும் பிறகுறிகளும்

ஒரு சொல்லுக்கு அல்லது தொடருக்கு இறுதியில் அடைப்புக் குறியில் அமைந்த சொல் அல்லது தொடர் வருமாயின் அடைப்புக் குறிக்குப் பின்னால் புள்ளியிடுதல் வேண்டும்.

சான்று : குற்றங்கள் மூன்று : அவை —இணைவிழைச்சு(காமம்), வெகுளி (குரோதம்), மயக்கம் (மோகம்) என்பனவாகும்.

விளக்கமாக வரும் முழுத் தொடரும் அடைப்புக் குறிக்குள் இருப்பின் அடைப்புக் குறிக்குள்ளேயே முற்றுப்புள்ளியைப் போட வேண்டும்

சான்று : திருவாதவூரர் குருவருளைப் பெற்ற இடம் திருப் பெருந்துறையாகும். (அது இக்காலத்தில் ஆவுடை யார்கோயில் என வழங்கப்படுகிறது.)

பகர அடைப்புக் குறி ([ ])

அடைப்புக்குறிக்குள் விளக்கம் தரவேண்டியிருந்தால் அங்கும் அதே அடைப்புக் குறியைத் தரலாம். பகர அடைப்புக்குறி அவசியமில்லை.

சான்று : வடநூலார் உயிர்களுக்கு வரும் துன்பங்களைத் 'தாபத்திரயம்' என்பர். (தாபத்திரயங்கள் மூன்று அவை: ஆத்யாமிகம் (தன்னைப் பற்றியன), ஆதி பௌதிகம் (பிற உயிர்களைப் பற்றியன), ஆதிதை விகம் (தெய்வத்தைப் பற்றியன) என்பனவாகும்.)

ஆனால் பிறர் உரைகளை மேற்கோளாக எடுத்தாளும்போது, நூலாசிரியர் இடையே தம் கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினால் அதனைப் பகர அடைப்புக் குறிக்குள் அமைக்க வேண்டும்.

சான்று : "மெய்கண்டாரின் குலகுருவாகிய சகலாகம பண்டிதர், [பிற்காலத்தில் அருணந்தி] தம் பெயருக் கேற்ப, எல்லா ஆகமங்களிலும் வல்லவராக விளங்கினார்.

இதன் பொருள், என்றவாறு என்னும் உரையின் தொடக்கம், முடிவுகளாகிய தொடர்களிலும் அடைப்புக் குறியினைப் பயன் படுத்தினர். சுருக்கக் குறிப்புகளாயினும் இக்குறியில் அமைப்ப துண்டு. இதன் பொருள், என்றவாறு என்பன போன்ற யாவும் சுவடியில் இல்லையாயின் மட்டும் அடைப்புக் குறியைப் பயன் படுத்தலாம். இவ்வாறான அடைப்புக்குறி முறைகள் சுவடிப் பதிப்பில் பெரிதும் பயன்படுவனவாகும்.

சமக்குறி (=)

பதவுரை தந்துவந்த பழைய முறைப் பதிப்புகளில் மூலச் சொல்லையடுத்துச் சமக்குறியிட்டு அதனைத் தொடர்ந்து அச்சொல்லுக்கான உரை எழுதப்பட்டது. சொற்பொருள் அகர நிரலிலும் இக்குறி பயன்படுத்தப்பட்டது. இக்காலத்துப் பதிப்பு களில் சிறுகோடு இடும் முறையே கையாளப் பெறுகிறது. சமக்குறி வழக்கற்றது என்றே கூறலாம்.

விளக்குங்குறி :- உட்தலைப்புகள் கொடுக்கப் பெற்று அதே வரியில் செய்தி தொடருமாயின் விளக்குங்குறியிடுதல் உண்டு. அவையாவன: சில சான்றுகள் போன்ற சொற்களைக் கொடுத்துத் தொடர்ந்து விளக்கங்கள் தரப் பெறுமாயினும் இக்குறியிடுதல் உண்டு. ஆனால் இது போன்ற இடங்களில் சிறு கோடிட்டு எழுதும் வழக்காறு தோன்றி, விளக்குங்குறி கைவிடப்பட்டது. சமக்குறியைப் போன்றே விளக்குங்குறியும் வழக்கொழிந்த நிலையை அடைந்துவிட்டது என்றே கூறலாம்.

புள்ளிகள் (...)

சுவடியில் எழுத்து கெட்டோ அல்லது வேறு வகையாலோ விடுபடுமாயின் அவ்விடத்தை நிரப்ப இயலாதபோது புள்ளியிட்டுக் காட்டுவதுண்டு. மேற்கோள்களைக் கையாளும்போது, தேவை யில்லாத ஒன்றிரண்டு சொற்களை விட்டு எழுதினால் விடுபட்ட இடத்தில் இரண்டு புள்ளிகள் இடுதல் வேண்டும். பல சொற்களை விட நேர்ந்தால் மூன்று புள்ளிகள் இட்டால் போதும். மேலும் சில தொடர்களோ பகுதியோ விட நேர்ந்தால் பல புள்ளிகள் வைத்து எழுதலாம்.

இணைப்புக்குறி : ஒரு வரியில் காட்ட வேண்டிய ஒரு தொடர் இரண்டு மூன்று வரிகளாக மடக்கி எழுதப்படுமாயின் ஒரு பொருள் குறித்து வரும் அவற்றை இணைப்புக் குறியிட்டுக் காட்டலாம்.

இக்குறிகளைத் தவிர, உடுக்குறி, சிலுவைக்குறி, வாட்குறி போன்ற பலவகையான குறிகளை அடிக்குறிப்புகள் தருவதற்குப் பயன்படுத்தியுள்ளனர். அம்முறை இக்காலத்தில் எண்கள் தந்து பதிப்பிக்கும் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

ஈ. அடிக்குறிப்பு

ஒரு கருத்தை வலியுறுத்தவும் விளக்கவும் நிலைநிறுத்தவும் பிறருடைய கருத்துகளை எடுத்துக் காட்டுவது ஆய்வாளரின் கடமையாகும். ஆனால் அக்கருத்துப் பிறருடையது என்பதைத் தெளிவாகக் கூறுவது ஆய்வு மரபு. எடுத்தாளப்பட்ட பிறர் கருத்தை இடம்சுட்டிக் காட்டுவது அடிக்குறிப்பு எனப்படுகிறது. அக்கருத்தைக் குறிப்பிட்டு முடித்தபின் அதன் முடிவில் இடம் சுட்டுவதனால் அடிக்குறிப்பு ஆகிறது. முடிவில் தனிக்குறியிட்டு அப்பக்க முடிவில் அல்லது அவ்வியல் முடிவில் அல்லது நூல் முடிவில் குறிப்பிடுவதும் உண்டு. அடிக்குறிப்பு முறை, ஆய்வு

நெறிமுறைகளைச் சார்ந்தது; ஆயவு நெறிமுறைகளில் பலராலும் குறிப்பிடப்பட்டதே ஆயினும் பதிப்பு இலக்கணங்களுள் அடிக் குறிப்பு முறையும் ஒன்று ஆதலின் இங்குச் சுருக்கமாகக் காட்ட வேண்டியதாயிற்று.

மேற்கோள் :

"முன்னோர் மொழிபொருளேயன்றி அவர் மொழியும்
பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கும்-முன்னோரின்
வேறு நூல் செய்துமெனும் மேற்கோள்இல் என்பதற்கும்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்"[47]

என முன்னோர் கூற்றுகளை எடுத்தாள்வதற்குரிய இலக்கணம் வகுக்கிறது நன்னூல். இவ்வாறு எடுத்துக் கூறப்பெறுபவை 'மேற்கோள்' எனப்படுகின்றன.

மேற்கோள் தோற்றம் : சான்றோர் கருத்துகளை எடுத்தாள்வது தொன்மை வாய்ந்த மரபாக இருந்து வருகிறது இம்மரபு, என்மனார் புலவர், என்ப, மொழிப என்னும் தொல் காப்பியத் தொடர்களிலேயே தொடங்குகிறது.

மேற்கோள்—வளர்ச்சி

"குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே"[48]

"அத்தின் அகரம் அகரமுனை இல்லை"[49]

"இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா"[50]

என்பனவாகிய பல தொலகாப்பிய நூற்பாககளைத் 'தானெடுத்து மொழிதல்' என்னும் உத்தியால் பவணந்தியார் எடுத்தாண்டு இருக்கிறார்.

"மடன்மாப் பெண்டிர் ஏறார் ஏறுவர்
கடவுளர் தலைவ ராய்வருங் காலே"[51]

என்னும் தன் கருத்தை நிலைநிறுத்த, "கடவுளர் மேற்றே காரிகை மடலே" என்னும் வேறொரு நூற்பாவினை எடுத்துக் காட்டுகிறது பன்னிருபாட்டியல்.

---

47. நன்னூல், 9.
48. தொல். எழுத்து, 38; நன்னூல், 90.
49. தொல். எழுத்து, 126, நன்னூல், 90.
50. தொல். சொல். 48; நன்னூல, 396.
51. பன்னிருபாட்டியல், 147.

'என்றார் பிறரும்', 'என்பது இதன் இலக்கியமாகும்', 'என்னும் கூற்றால் உணர்க' என்று கூறும் உரையாசிரியர் கூற்றுகள்[52] சான்றோர் கருத்தை எடுத்தாண்ட செய்தியை உணர்த்துகின்றன. ஆனால் அக்கருத்துகளின் இடம் சுட்டப்பெற வில்லை. இக்குறையை நீக்குதற்கு எழுந்தது 'அடிக்குறிப்பு' முறையாகும்.

மேற்கோள் விதிமுறை : ஒருவர் கருத்தை அவர் நூலிலிருந்து எடுத்தாள்வதற்கு அந்நூலாசிரியரின் இசைவு பெறவேண்டும். இசைவு பெறாமல் எடுத்தாள்வது சட்டப்படி குற்றமாகும். இந்த இடைக்காலச் சட்டம் இக்காலத்துத் தளர்த்தப்பட்டது. எடுத் தாண்ட கருத்தை இடம்சுட்டிக் காட்டிவிட்டால் அது தவறாகாது. அவ்வாறு இடம் சுட்டுவதே இன்றைய அடிக்குறிப்பு முறையாகும்.

அடிக்குறிப்பு ஆய்வுநெறி : அடிக்குறிப்புத் தருவது நன்றி செலுத்தும் கடப்பாட்டைச் சுட்டுகிறது; ஆய்வாளருக்கும் பிறருக் கும் நன்மை பயக்கிறது. எனவே அடிக்குறிப்புத் தருவதில் ஆய்வு மரபு ஒரு சீர்மையை வற்புறுத்துகிறது.

அடிக்குறிப்பின் அமைப்பு : அடிக்குறிப்பின் அமைப்பினை இரு வகைப்படுத்தலாம். ஒன்று ஆய்வேட்டின் அடிக்குறிப்பு; மற்றொன்று சுவடிப் பதிப்பின் அடிக்குறிப்பு ஆகும். விளக்கத்திற் காக ஆய்வேட்டின் அடிக்குறிப்புமுறை பொதுப்படக் கூறப்பட்டது. ஆயினும் அமைப்பு முறையில் சுவடிப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டு கூறப்படும்.

சுவடிப் பதிப்பில் பாடவேறுபாடு, குறிப்புரை, ஒப்புமைப் பகுதி, பதிப்பிக்கும் நூல் கையாளப்பட்டுள்ள வேறு இடம் இலக்கணக் குறிப்பு ஆகியவை அடிக்குறிப்பில் இடம்பெறும். சுவடியில் காணப்பெறும் மூலநூல், உரை ஆகியவற்றை முறைப் படுத்தி அச்சிடும்போது, அச்சில் அமையும் வரிகளில் உரிய சொற் களின் முடிவில் வரிக்குச் சிறிது மேலாக எண் கொடுத்து அதே எண்ணைக் கீழே அடிக்குறிப்பில் கொடுத்து அச்சொல்லுக்குரிய விளக்கத்தையோ வேறுபாட்டையோ குறிப்பிடுதல் வேண்டும்.

பாடவேறுபாடுகளைச் சுட்டுவதோடு, பிழைபட்ட தொடர் களையும், ஐயமுள்ள தொடர்களையும் எடுத்துக் காட்டலாம். திருத்தம் பெற்ற இடங்களைக் காரணத்தோடு அடிக்குறிப்பில் சுட்டவேண்டும். கருத்து வேறுபாடுகளையும் சுட்டிக் காட்டலாம்.

---

52. தொல். செய்யுளியல், நூற்பா 1; பேராசிரியர் உரை.

ஆய்வு முன்னுரையில் மேற்கோளும் அடிக்குறிப்பும் : சுவடிப் பதிப்பாயினும் நூலைப் பற்றிய ஆய்வு முன்னுரை, ஒரு சிறந்த ஆய்வேட்டின் தன்மையில் விளங்குவதாகும். அம்முன்னுரைக் குரிய அடிக்குறிப்பு, ஆய்வேட்டின் அடிக்குறிப்பு போன்றதாகும்.

மேற்கோள் : அம்முன்னுரையில் எடுத்தாளப் பெறும் மேற் கோள்கள் மிகமிக இன்றியமையாததாக, நூல் கருத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக, முழுமையும் தெளிவுமுடையதாக இருத்தல் வேண்டும். கருத்தை மறுப்பதற்கும் மேற்கோள் அமைய லாம். மூலமொழி மேற்கோள் சிறப்புடையது. பிறமொழி மேற் கோளாயின் மொழிபெயர்த்துத் தரலாம். வேண்டுமாயின் மூலமேற்கோளை அடிக்குறிப்பில் தரலாம். மேற்கோள் தொடர்கள் தனித்து நிற்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேற்கோள் தொடர்கள் மாற்றப்படக் கூடாது. தவறாயிருப்பின் பகர அடைப்புக் குறிக்குள் திருத்திக் காட்டவேண்டும். இரட்டை மேற்கோள் குறிக்குள், வரி அமைப்புக்குச் சிறிது உள்ளே அடங்குமாறு அமைத்தல் வேண்டும். அச்சில் எழுத்துப் புள்ளியை மாற்றி அமைத்துக் காட்டலாம்.

அடிக்குறிப்பு : ஆய்வு முன்னுரையில் அமையும் அடிக்குறிப்பு பெரும்பாலும் மேற்கோளை இடம் சுட்டுவதாகும். மேற்கோள் குறியை அடுத்து வரிக்குச் சிறிது மேலே அமையுமாறு எண் இடுதல் வேண்டும். அந்த எண்ணுக்குரிய மேற்கோளின் இடத்தை அடிக் குறிப்பில் தெளிவாகச் சுட்டவேண்டும். இவ்வாறு இடஞ்சுட்டுவது பதிப்புகளில் நான்கு முறையில் அமைகிறது.

அந்தந்த மேற்கோள் வரிகளின் கீழ் இடத்தைச் சுட்டுவது ஒருமுறை. ஒரு இயலின் முடிவில் அவ்வியலில் காணும் மேற்கோள் களுக்குரிய இடத்தைச் சுட்டுவதும், நூலின் முடிவில் சுட்டுவதும் அடுத்த இரண்டு முறைகளாகும். மேற்கோள் அமையும் அதே பக்கத்தின் இறுதியில் கோடிட்டுப் பிரித்துக் காட்டி இடத்தைச் சுட்டுவது நான்காவது முறை. நான்காவது முறையே நூலைப் படிப்போருக்குத் துணையாக அமையும் எளிய முறையாகும். நூல், ஆசிரியர், வெளியீடு, ஆண்டு முதலான விளக்கங்கள் ஆய்வடங்கலில் அமைவதால், அடிக்குறிப்பில் நூல், பக்க எண் அல்லது பாட்டு எண் ஆகியவை மட்டும் சுருக்கமாக அமைந்தால் போதும். ஒரே தலைப்பில் இருவேறு ஆசிரியரின் நூல்கள் இருக்கு மானால் ஆசிரியர் பெயரும் கொடுப்பது இன்றியமையாததாகும்.

உ. ஆய்வடங்கல்

எடுத்துக் கொண்ட ஆய்விற்குத் துணைபுரிந்த நூல்களையும் சுவடிகளையும் தொகுத்துக் காட்டும் அட்டவணை ஆய்வடங்கல் எனப்படுகிறது. சுவடிப் பதிப்பிற்குரிய துணை நூல்கள், ஆய்வு முன்னுரைக்குரிய துணைநூல்கள் என இரண்டு வகையிலும் பயன் பட்டவை இப்பகுதிக்குரியனவாகும்.

பதிப்பில் பயன்பட்டவை : சுவடிப் பதிப்பில் நூலுக்குரிய மூலச்சுவடி, ஒப்பிட உதவிய பிற சுவடிகள், தாள்—சுவடிகள், பழைய பதிப்புகள் ஆகியவை பதிப்பிற்கு உதவிய ஆய்வடங்கலில் இடம்பெறுவனவாகும். ஆய்வு முன்னுரையில் எடுத்தாளப்பட்ட மேற்கோள் நூல்கள், சுவடிகள் ஆகியவை ஆய்வுரைக்கு உதவிய ஆய்வடங்கலில் இடம்பெறுவன. ஆய்வு முன்னுரையோடு கூடிய சுவடிப் பதிப்பில் இவ்விருவகை ஆய்வடங்கல்களும் இணைந்து இடம் பெறும். மிகுதியாக இருப்பின் தனித்தனியாகவும் அமைக் கலாம்.

ஆய்வடங்கலின் அமைப்பு : ஆய்வடங்கலை நூலின் இறுதி யில் அமைப்பதே மரபு. எடுத்தாண்ட நூல்கள் விடுபடாமல் பார்த்துக் கொள்ளுவது இன்றியமையாத ஒன்று. அவற்றை அச்சு நூல்கள், சுவடிகள் (ஓலை, தாள்), பிறவாகிய இதழ்கள், கட்டுரைகள், அறிக்கைகள், ஆவணங்கள், அகராதிகள் எனப் பிரித்துப் பகுத்து அமைப்பது முறையாகும்.

ஆய்வடங்கலை அகரவரிசையில் அமைக்கவேண்டும். இதில் கருத்து வேறுபாடு இல்லை. அவ் அகர வரிசையை ஆசிரியர் பெயர் அடிப்படையில் அமைப்பதா? நூலின் பெயர் அடிப்படையில் அமைப்பதா? ஆய்வேடுகளில் ஆசிரியர் பெயர் அகரவரிசையே காணப்படுகிறது. அச்சு நூல்களில் இருமுறையும் அமைந்துள்ளன. ஆசிரியர் வரிசை ஆங்கில முறையைப் பின்பற்றியது. தமிழில் இம் முறைக்குச் சில குறைபாடுகள் ஏற்படுகின்றன.

ஆசிரியர் பெயர்வரிசை—குறைபாடுகள் : தொகை நூல்கள் ஆசிரியர் பலரின் பாடல்களைக் கொண்டவை. ஒருநூல் பதிப்பாசிரியர் பலரால் வெளியிடப்பட்டுள்ளது. ஒரு நூலுக்குப் பலருடைய உரைகள் வெளியாகியுள்ளன. ஒரே உரைநூலைப் பலர் வெளியிட்டுள்ளனர். பல நூல்களுக்கு நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இக்குறைகளால் ஆசிரியர் பெயரை முதலில் அகர நிரல் படுத்துவதில் ஒரே மாதிரியான அமைப்பு ஏற்படுவதில்லை,

கம்பர், சங்குப்புலவர் உரை, சாமிநாதையர், உ.வே. (பதி), கந்தசாமி கவிராயர் (தொகு) என்பன ஆசிரியர் வரிசையில் வரும் பெயர்கள். ஒரு ஆய்வேட்டில் இவ்வாறு முதல் வரிசை அமைகிறது.[53]

.........இறையனார் அகப்பொருள், கழகம், சென்னை, 1953)[54]

.........கலைக்களஞ்சியம் தொகுதி, 1, ந.வ.க. ,,)

.........சுவடிகளின் விளக்கம், 2. உ.வே.சா. நூலகம் ,,)

இதில் முதல் வரிசை வெற்றிடமாகவே அமைகிறது. இவ்வகைக் குழப்பங்களால், நூல் பெயர் அகரவரிசையில் ஆய்வடங்கலை அமைப்பது சிறந்தது எனத் தோன்றுகிறது.

நூல் பெயர் வரிசை : ஆய்வடங்கலை நூல் பெயரால் நிரல் படுத்துவதனால் ஆய்வடங்கலின் முதல் வரிசை முழுமை பெறு கிறது. நூல்பெயர் தெரியாத நூலோ சுவடியோ இருக்க முடியாது. ஆதலின் இரண்டாவது வரிசையில் ஆசிரியர் பெயர் அமைந்தால் அதில் வெற்றிடம் வந்தாலும் தவறில்லை. அவ்வரிசை யில் ஆசிரியர் எவரேனும் ஒருவர் பெயரை (பதி, தொகு, உரை, மொழிபெ.) நிரப்பிக் கொள்ளவும் கூடும். புறநானூறு, அகநானூறு, கலித்தொகை, நாலடியார் போன்ற நூல்களுக்கும் இம்முறை பொருத்தமாகிவிடுகிறது.

முதல் வரிசையில் ஆசிரியர் பெயர் அமையவேண்டும், என்பதே ஆய்வுநெறிமுறை. நூல்களின் ஆசிரியர் அனைவரும் கூறும் கருத்து. ஆனால் அவர்கள் அனைவரும் இரண்டாவது வரிசையில் அமைக்கப் பெறும் நூலின் பெயர் அல்லது கட்டுரையின் பெயர் ஆகியவற்றை அடிக்கோடிட்டுக் காட்டவேண்டும் என்கின்றனர்; அச்சிடுவதாயின் தடித்த எழுத்தில் அமைக்க வேண்டும் என்கின்றனர். இதனாலும் தமிழ் நெறிமுறையில் நூலின் பெயர் சிறப்பிடம் பெறுவது உறுதியா கிறது. எனவே நூற்பெயரில் முதற்பகுதியை அமைப்பது சிறந்த ஆய்வடங்கலாகும் எனலாம்.

பிற வரிசைகள் : இரண்டாவதாக ஆசிரியர் பெயர் அமையும். நூலாசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மொழிபெயர்ப் பாசிரியர்களில் பொருத்தமுடையதை அமைக்கலாம். ஆசிரியரின்

---

53. டாக்டர் உ.வே. சாமிநாதையரின் பணி—ஓர் ஆய்வு பக். 409.
54. ஐவர் அம்மானை—பதிப்பு முன்னுரையுடன், ஆய்வேடு, பக்,. 262.

பெயரின் தலைப்பெழுத்துகள் பின்னால் அமைய வேண்டும் என்ற அவசியமில்லை. ஆசிரியர் பெயர் நிரலில், அகரவரிசைக்காக, வரதராசன், மு., என்று குறிப்பிட நேர்ந்தது. ஆனால் இரண்டாவது வரிசையில் அவர் பெயர் வழங்கும் இயல்பிலேயே மு. வரதராசன் என்று குறிப்பிடலாம். இம்முறை மரபு மாறாத தாகவும் அமையும். பெயருக்குப் பின்னால் பதிப்பாசிரியர் முதலான விளக்கத்தைச் சுருக்கமாக அடைப்புக்குறியில் அமைக்க வேண்டும். (பதி), (தொகு); (மொ.பெ) என்பன அச்சுருக்க முறை களாகும். கட்டுரையாயின் இதழின் பெயர் அல்லது நூலின் பெயர், மேற்கோள் குறிக்குள் கட்டுரையின் தலைப்பு இவற்றை அமைத்து, ஆசிரியர் பெயரின்பின் (கட்டுரை) என்று குறிப்பிட லாம். நூல் பெயரைத் தொடர்ந்து தொகுதி, பதிப்பு ஆகிய வற்றின் எண்களும் அமையவேண்டும் தொகுதி 3; (பதி-2) என்று கொடுக்கவேண்டும்.

நூல் வெளியீட்டாளருடைய பெயர், முகவரி, இடம் என்ற வரிசையில் அடுத்த வரிசை அமையும். இறுதியாக வெளியான ஆண்டு அமைதல் வேண்டும்.

ஊ. சொல்லடைவு

சுவடிப் பதிப்பானது மூலம் மட்டும் கொண்டதாயின் அருஞ் சொற்பொருள் அகரநிரலும், உரையோடு கூடியதாயின் அருஞ் சொல் அகரநிரலும் நூலில் இடம்பெறும். இவ்அகராதி அதனைப் பயன்படுத்துவோரின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்வ தாகும். நூலில் சாலும் வெறும் சொற்கள் மட்டுமன்றி, சொற் பொருளும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. மேலும் இலக்கணக் குறிப்பு, உவமை, மெய்ப்பாடு, குறிப்பு ஆகிய இலக்கியக் கூறுகள், துறைக்குறிப்பு ஆகிய பலவும் செறிந்தமைவதே சிறந்த சொல்லடைவு ஆகும்.

சொல்லடைவின் அமைப்பு : மூலம், உரை, விளக்கவுரை, இலக்கணக் குறிப்பு ஆகிய அனைத்துப் பகுதிகளிலிருந்தும் சொற் களைத் திரட்டவேண்டும். அவற்றை முறைப்படுத்துவதற்குரிய வகையினை ஒரு சான்றினால் விளக்கலாம்.

குறுந்தொகை, பதின்மூன்றாம் பாடலுக்குரிய சொல்லடை வினை உ.வே.சா. பதிப்பின் அடிப்படையில் காணலாம். ஐந்து அடிகளை உடைய இப்பாடலிலிருந்து மாசு, யானை, உழத்தல், இருமை, பைதல், தலை, நாடன், சேக்கும், நோய், பசப்பு, குவளை

என்னும் பதினோரு சொற்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. பெரும், பிணர், கழிஇய என்ற சொற்கள் தொடரமைப்பிற்காக எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன. 'பெரும் பெய லுழந்த விரும்பிணர்த் துறுகல்' என்ற அடிக்கு, பெரும்பெயல், பெயல் உழந்த, பெயல் உழந்த துறுகல், இரும்பிணர்த் துறுகல் பிணர்த் துறுகல், துறுகல் என்று பகுத்துத் தரப்பட்டுள்ளது. இது சங்க இலக்கியத் தொடர்நிலையை மனத்திற் கொண்டு பகுத்துக் காட்டப்பட்டதாகும் என்பர் குளோறியா சுந்தரமதி.[55] இவ்வாறு அரியசொற்கள் அனைத்தையும் சொல்லின் அடிப்படையில் பிரித்துத் தொகுத்துக் கொள்ள வேண்டும். எளிய சொற்களை அவசியமில்லை என்று விட்டுவிடுதல் கூடாது. அவையே இடம் சுட்டி அறியப் பயன்படுவன.

சொல்லடைவின் பயன் : ஒரு நூலில் ஒரு பாட்டின் முதற் குறிப்பு நினைவுக்கு வரவில்லை; ஆனால் அப்பாட்டில் உள்ள ஓர் அரிய சொல் அல்லது தொடர் நினைவில் இருக்கிறது என்றால் அந்தச் சொல்லைச் சொல்லடைவில் கண்டு அப்பாடலின் எண்ணை அறியலாம். சொல்லாய்வு செய்வோர், கட்டுரை எழுதுவோர் ஆகியோருக்கு அவருடைய ஆய்வுக்குரிய சொல்லும், கட்டுரைக் குரிய சொற்களும் அந்த நூலில் எந்தெந்தப் பாடலில் அமைந் துள்ளன என்பதை எளிமையாகக் காணலாம். இது கற்போருக்குப் பயன்படும் எளிய முறை.

சொல்லடைவு தயாரிப்பதன்வழி பதிப்பாசிரியர் நூலில் ஆழ்ந்த அனுபவத்தைப் பெறுகிறார். எனவே பதிப்பாசிரியர் சுவடியிலிருந்து தூய படி எடுத்து முடிந்தவுடன் சொல்லகராதிக் குரிய சொற்களைத் தொகுத்துவிட வேண்டும். பிறகு குறிப்புரை, விளக்க உரைகள் எழுதலாம். குறிப்புரை எழுதும்போது ஒரு சொல் எந்தெந்த பாடலில் வருகிறது என்பதை அறிவதால் முதலில் வந்தவிடத்தில் விளக்கம் கொடுத்து, அடுத்த பாடல்களில் முன் எண்ணைக் கொடுத்து, அதன் விளக்க உரை காண்க என்று எளிமையாகக் கூறிவிடலாம். அதே நூலில் ஒப்புமைப் பகுதி களைச் சுட்டவும் சொல்லடைவு பயன்படுகிறது. சொற்களைத் திரட்டும் பணிக்காக நூலை ஒருமுறை ஆழ்ந்து படிக்க வேண்டி யுள்ளது. அதனால் நூலின் பொருள் முழுமையாக உணரப்படு கிறது. முன்பின் உள்ள கருத்துகளைத் தொடர்புபடுத்தி விளக்கம் தரவியலும். பாடவேறுபாடு முதலான அடிக்குறிப்புகளைத்

---

55. டாக்டர் உ.வே.சா. சங்க இலக்கியப் பதிப்புகள், பக். 94.

தரவும் இத்தொகுப்பு மிகுதியாகப் பயன்படும். இவ்வாறு பல்லாற்றானும் பதிப்பாசிரியருக்கும் ஆய்வாளருக்கும் மிகுதியாகப் பயன்படுவது சொல்லடைவு ஆகும். நூலுக்கான ஆய்வுரையில், பிறமொழிச் சொற்கள், கொச்சைச் சொற்கள், தலைவன் முதலானோர் பெயர்கள், நாடு, ஊர் ஆகியவற்றின் பெயர்கள் ஆகிய சிறப்பு அகரநிரல்களைத் தனித்தனியே தொகுத்து அமைக்கவும் சொல்லடைவு பயன்படுகிறது.

> "இலக்கிய ஆசிரியரின் சொற்பிரயோகங்களையும் ஊன்றிக் கவனிக்க வேண்டும். இதற்குச் சொல்லடைவு ஒன்று மிகவும் துணைசெய்யும்"[56]

என்னும் வி. ஐ. சுப்பிரமணியம் அவர்களின் கருத்தை நோக்க, ஆசிரியர் காலத்திய சொல்லாட்சியை அறியப் பயன்படுவது சொல்லடைவு என்பது புலனாகும். அச்சொல்லாட்சிக்குரிய காலத்தை அறியவும் அது பயன்படுகிறது.

எ. ஆய்வு முன்னுரை

சுவடிப் பதிப்பினைச் சிறந்த ஆராய்ச்சிப் பதிப்பாக வெளியிடுவது இன்றைய பதிப்பாசிரியரின் கடமையாகும். நூலினுள் கொடுக்கப் பெறும் விளக்கவுரை, ஒப்புமை ஆகிய பலவகை விளக்கங்களோடு நூலைப் பற்றிய ஆய்வு முன்னுரையினை அமைப்பது பயனுடைய பதிப்பாகிறது. பதிப்பில் சொல்லடைவு இறுதியாக அனைத்துப் பணிகளும் முடிந்த பிறகு ஆய்வு முன்னுரை எழுதத் தொடங்கவேண்டும். நூலை முழுமையாக உணர்ந்துள்ள காலம் அதுவே ஆதலின் ஆய்வு முன்னுரை விரைவாகவும் முழுமையாகவும் அமையும்.

ஆய்வு முன்னுரையின் இன்றியமையாமை : ஆக்கியோன் வரலாறு முதலாக நூலின் சிறப்புகள் அனைத்தும் ஆய்ந்து சொல்லப்படுவது இம்முன்னுரை யாதலின் பொதுவாக யாவரையும் கற்கத் தூண்டுவது முன்னுரை எனலாம். ஆக்கியோன் சிறப்பாலும், நூற்பொருள் தன்மையாலும் கற்க விரும்புவோர் பலராவர். நூலுக்கு அழகையும் சிறப்பையும் தருவது முன்னுரை. எனவே நூலுக்கு முன்னுரை இன்றியமையாததாகிறது. எனவே இம் முன்னுரை, கற்போரை நூலுக்குள் ஆற்றுப்படுத்துவதாக

56. சில கட்டுரைகள், பக். 130.

அமையவேண்டும். அதற்குத் துணையாக நூலின் தனிப் பண்பு களைப் புலப்படுத்த வேண்டும்; நூலுள் காணப்பெறும் சிக்கல் களைத் தெளிவாக எடுத்துக் காட்ட வேண்டும்.

ஆய்வு முன்னுரையில் சுட்டப்பெறுவன : கீழே தொகுத்துக் காட்டப்பெறும் வகை முதலான செய்திகள் முன்னுரையில் இடம் பெறுகின்றன. அத்தொகுப்புச் செய்திகள் நூலைக் கற்கத் தூண்டுவனவாக அமைவதோடு, நூலின் ஆழ்ந்த பொருள்களை நுணுகிக் காணவும் வழி வகுத்துக் காட்டுகின்றன.

வகை : முதல்நூல், வழிநூல் என்னும் வகைகளுள் பதிப்பிக் கும் நூல் எவ்வகையைச் சார்ந்தது என்பதைக் காரணங்காட்டி விளக்குதல் வேண்டும். சிலப்பதிகார ஆய்வுரையில் அதனை முதல் நூல் என்று சுட்டலாம். நிகழ்ந்த வரலாற்றைக் கண்டும், கேட்டும் அவ்வரலாற்றை நூலாகச் செய்தார் இளங்கோவடிகள் ஆதலின் அது முதல் நூலாயிற்று. வழிநூலாயின முதல் நூலினும் இது எவ்வெவ்வாறு விகற்பம் பெற்றுள்ளது? தொகுத்துக் கூறப் பட்டதா? விரிவுடைய நூலா? தொகை விரியாய் அமைந்ததா? மொழிபெயர்ப்பா? என்னும் தன்மைகளையும் சுட்டவேண்டும்.

பயன் : நூலாலாம் பயன்களுள் அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி, நூலில் அமைந்த மிகுதிப் பொருளால் ஆம் பயனை எடுத்துக் காட்டலாம்.

கொள்கை : பதிப்பாசிரியர் ஆழ்ந்து காணும் நூலின் கொள்கை களால் நூலின் பெருமையும், நூலாசிரியரின் சிறப்பும் உலகிற்கு எடுத்துக் காட்டப்பெற வேண்டும். அவற்றுள் நூலாசிரியர் கூறும் கருத்து பிறநூல், பிறமொழி, உலக வழக்கு, சமுதாய வழக்கு, அரசியற் கொள்கை ஆகியவற்றிற்கு உடன்பட்டு அமைகிறதா? காரண காரியங்களோடு மறுதலையாக அமைகிறதா? என்பனவற் றைச் சுட்டிக் காட்டி அதன் பயன்பாட்டினை எடுத்துக்காட்டலாம்.

பிற நூலாசிரியர் கருத்து ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு, இன்ன காரணத்தால் அதில் சில மாற்றங்கள் உண்டு என்பதாகக் கூறுவாராயின் அதனை நுணுகி ஆய்ந்து சுட்டலாம். மீண்டும் மீண்டும் கூறுவதாக அமையும் சில கருத்துகளை ஒப்பிட்டுப் பார்த்து அது நூலாசிரியரின் புதிய படைப்பு; அது ஆங்காங்கு சுட்டப்படுகிறது என்ற உண்மையை எடுத்துக் காட்டலாம். வழக்கில் இருக்கும் இருபெரும் கருத்துகளைச் சீர்தூக்கி, ஒன்றினைத் துணிந்து கூறும் ஆசிரியர் கொள்கையை ஆய்ந்து

வெளிப்படுத்தலாம். பிறருடைய கருத்துகளில் உள்ள குற்றங்களை எடுத்துக்காட்டும் பகுதிகளிருப்பின் அவற்றின் வன்மை, மென்மைகளை உலகிற்குக் காட்டலாம். பிற கருத்துகளோடு சேராத, ஆசிரியரின் தனித்தன்மைகளை எடுத்துக் காட்டலாம். இவ்வாறான பல திறக் கொள்கைகளை நூலினின்றும் எடுத்துக் காட்டுவது ஆய்வு முன்னுரையில் சிறப்பாக அமைய வேண்டிய பகுதியாகும்.

சிறப்பும் குற்றமும் : சொல்லப்புகுந்த செய்திகளைச் சுருக்கமாகச் சொல்லி நன்கு விளங்குமாறு அமைக்குந் திறம், இடத்திற்கு ஏற்ற சொற்களை ஆண்டுள்ள வன்மை ஆகியவற்றை நுணுகி ஆய்ந்து எடுத்துக் காட்டலாம். செய்யுள் வகைகளைப் பொருளொடு பொருந்தத் தேர்ந்து கூறும் பாங்கினைச் சுட்டி. அவை வெறும் ஓசையோடு மட்டும் பொருந்தாமல் பொருளாழமுடையனாய் இருத்தலை வகைப்படுத்திக் காட்டலாம். கருத்துகளை ஆற்றொழுக்காக வைக்குமாற்றினைத் தொடர்புபடுத்திக் காட்டுவதால் நூலின் முழுமையைப் புலப்படுத்த முடியும். ஏற்புடைய கருத்துகள், உயர்ந்த கருத்துகள் ஆகியவற்றைப் பகுத்துக் காட்டி, எடுத்தாண்டுள்ள சான்றுகள், ஆசிரியர், அவரது காலம், அக்காலச் சூழல் ஆகியவற்றோடு பொருந்துமாற்றினை ஆய்ந்து கூறலாம்.

இச் சிறப்புகளைக் காணுங்கால் தொட்டுக் காட்டி விளங்காது விட்டவற்றையும் மிகைபடக் கூறியவற்றையும் பிரித்துக் காட்டவும் தவறக் கூடாது. ஓரிடத்துக் கூறிய கொள்கை மற்றோரிடத்து மாறுபடுவதாக அமைந்திருப்பினும் கூறியதையே காரணமின்றி பலவிடத்துக் கூறியிருப்பினும் அவற்றைத் தொகுத்துக் காட்ட வேண்டும். சிறப்புடைய சொற்களை விட்டு வேறு சொற்களையும், பயனற்ற சொற்களையும் ஆண்டுள்ள தன்மை, எடுத்துக்கொண்ட கருத்தை விட்டு வேறு கருத்துகளை விரித்துக் கூறியுள்ள செயல் ஆகியவற்றையும் சுட்டலாம். இச்செயல் குறை கூறுவதாக அமையாது; பிறருக்கு வழிகாட்டியாக இருக்கக் கூடியதாகும்.

உத்திகள் : நூலாசிரியர் கையாண்டுள்ள நூலுக்கான சிறந்த உத்திகளைச் சுட்டிக் காட்டுவது பயனுடையதாகும். இவ்வுத்தி பல திறத்தான் அமையும். ஆயினும சிலவற்றை இங்குச் சுட்டிக் காட்டலாம். நூலில் காணும் இயல் பொருத்தங்களைத் தொடர்புபடுத்திக் காட்டுவது நூலின் முழு அமைப்பைச் சுட்டுவதாக அமையும். முன்பு கூறிய கருத்துத் தொடர்பினைப் போன்றதே இனி இயல் வைப்பு முறை எனலாம். தொகுத்தும் வகுத்தும் முறைப்படுத்தியுள்ள

அமைப்பு, பிறநூல் தொடர்புகளைத் தம் நூலுள் எடுத்தாளும் பண்பு, மேற்கோளாகச் சுட்டும் தன்மை. இரட்டுற மொழிதல் முதலான பொருள் நுட்பம் ஆகிய பலவகை உத்திகளை ஆய்வுரையில் எடுத்துக் காட்டி விளக்குவது இன்றியமையாததாகும்.

சொல்லாய்வு : இலக்கணமுடையது, உலக வழக்குடையது, அவ்வக் காலத்திற்குரியது, அவ்வட்டாரத்திற்குரியது, பிறமொழிச் சொல் என்னும் பல்லாற்றானும் சிறப்புடைச் சொற்களைத் தொகுத்துக் காட்டுவதன்மூலம் நூலாசிரியரின் கொள்கையை எடுத்துக்காட்ட இயலும்.

நூலாசிரியர் , அகச்சான்று, புறச்சான்றுகளைப் பயன்படுத்தி நூலாசிரியர் வரலாற்றை உறுதிப்படுத்த வேண்டும். நூலாசிரியரின் பெருமைகள் நூலின் பெருமையை உயர்த்தும்; பலரையும் படிக்கத் தூண்டும். உரையிருப்பின் உரையாசிரியர் வரலாற்றையும் கொடுக்க வேண்டும்.

நூற்பெயர் : இடுகுறியாயினும் காரணப் பெயராயினும் நூலின் பெயருக்குரிய சொற்பொருள் விளக்கங்களோடு நூற் பெயரை எடுத்துக் காட்டுதல் வேண்டும். முதனூலின் பெயராலேயே வழிநூலும் நடைபெறுமாயின் முதல்நூலால் பெயர் பெற்றது என்பர். இதேபோல நூலாசிரியர், நூலின் அளவு, நூலில் காணும் மிகுதியான பொருள், நூற்பொருள், நூலின் தன்மை ஆகிய காரணங்களால் பெயர் பெற்றிருப்பின் சுட்டிக் காட்டலாம்.

காலம் · நூலின் கருத்துகளை முழுமையாக அறிந்துகொள்ளக் கால ஆராய்ச்சி பெருந்துணையாகிறது. இலக்கிய வரலாற்றை முறைப்படுத்தக் கால ஆய்வு தேவைப்படுகிறது. இலக்கியச் சான்று களால் நிறுவப்படும் நாட்டு வரலாற்றுக்குத் துணைபுரிவது கால ஆராய்ச்சி. மொழி வரலாற்றை வரையறை செய்யவும் கால ஆய்வு பயன்படுகிறது. எனவே நூலின் காலத்தைத் தக்க சான்றுகளுடன் ஆய்ந்து கூறுவது பதிப்பாசிரியரின் கடமையாகும்.

காரணம் : நூல் தோன்றவும் உரை வகுக்கவும் சில தூண்டு தல்கள் நிகழ்ந்திருக்கக் கூடும். அவ்வாறாயின் அவற்றைக் கண்டு தெளிவுபடுத்த வேண்டுவது வரலாற்றுக்கு இன்றியமையாததாகும்.

ஆய்வு முன்னுரைக்குச் சில சான்றுகள் :

சொல்லாய்வுக்குச் சான்று :

"திருவாங்கோடு என்பது எதன் திரிபு என்று அறிதல் வேண்டும். ஒரு சாரார் இது 'திருவாழுங்கோடு' என்பதன் திரிபாக

இருத்தல் வேண்டும் என்பர். திருவாழுங்கோடு என்பதற்குப் பழைய நூல் வழக்கு இல்லையென்பது மிக்க வன்மையுள்ள ஒரு தடையாகும்.

திருவாங்கோடு என்பதனைத் 'திருவிதாங்கோடு' எனச் சிலவிடங்களிலும், திருவதாங்கோடு எனச் சிலவிடங்களிலும் வழங்குகின்றனர்... திருவதாங்கோடு என்பதில் 'திரு' என்ற அடைமொழியை நீக்கினால் எஞ்சியுள்ள பெயர் 'அதங்கோடு'. இப்பெயருடைய ஓரூர் உளதாகவும் அறிகிறோம். ஆகவே அதங்கோட்டாசான் என்பவர் திருவாங்கோடு அல்லது அதங்கோடு என்று இன்று வழங்கும் ஊரினர் என்று கொள்ளலாம். தமிழ்நாட்டில் பிற பகுதிகளில் அதங்கோடு என்ற பெயருடைய ஊர் வேறொன்று இருப்பதாகத் தெரியவில்லை என்பதும் இங்கே குறிக்கத்தக்கது''[57]

என்னும் எஸ். வையாபுரிப்பிள்ளையின் ஆய்வு முடிவு ஊர்ப்பெயர் முதலானவற்றை ஆய்ந்து தெளிவான முடிவைத் தருவதற்கு வழி காட்டியாய் அமைகிறது.

சில உண்மை காண்பதற்குச் சான்று

''சிறப்புப் பெயர்களாக அமைந்துள்ள புலவர் பெயர்களைக் கொண்டு ஆராய்ந்தால் எட்டுத்தொகையில் முதலில் தொகுக்கப் பட்ட நூல் குறுந்தொகை என்பது தெரியவரும். காக்கைபாடினியார் நச்செள்ளையா ரென்பது ஒரு புலவர் பெயர். அவருடைய இயற்பெயர் நச்செள்ளையாரென்பது. விருந்துவரக் கரைந்த காக்கையைப் பாராட்டினமையின் காக்கை பாடினியார் நச்செள்ளையார் எனக் குறிக்கப்பட்டார். அப்பால் தொகுக்கப்பட்ட நூல்களில் அவ்வாறே வழங்கப் பட்டார். கள்ளிலாத்திரையனார், ஓரேருழவர் என்னும் பெயர் களும் குறுந்தொகைப் பாடல்களால் பெயர் பெற்றுப் பின் புறநானூறு போன்றவற்றில் இதே பெயர்கள் குறிக்கப் படுகின்றன, பிற நூல்களில் இவ்வாறு பெற்ற பெயர்களுள் ஒன்றேனும் குறுந்தொகையில் வரவில்லை''[58]

என்னும் உ. வே. சா.வின் முடிவுகள் எட்டுத்தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட வரலாற்றுக்குச் சிறந்த சான்றாகி, இத்தகு வரலாறு காண வழிகாட்டுகின்றன.

---

57. தமிழ்ச் சுடர்மணிகள். பக். 18.
58. குறுந்தொகை, முகவுரை.

"பரத கண்டத்தில் வழங்கும் பாஷைகளுள் ஆதிகாலந் தொட்டுள்ளன சமஸ்கிருதமும் தமிழுமாம்"

என்று தொடங்கி தமிழ்மொழியின் தொன்மைக்குப் பல சான்றுகளைக் காட்டி, அது உயர்தனிச் செம்மொழி என்பதை நிறுவுகிறார். சி. வை. தாமோதரம் பிள்ளை.[59] இது பல பக்கங்களைக் கொண்டது. அபோத காலந் தொடங்கி, இந்நூலின் காலம் என்பது முடிய பல வகையில் ஆய்ந்து வீரசோழியத்தின் காலத்தை நிறுவுகிறார். இவ்வாறு மிகப் பரந்துபட்ட ஆய்வு முன்னுரையின் மூலம் பல பொருள்களையும் நிறுவ வழிகாட்டுகிறது வீரசோழியப் பதிப்புரை.

புறநிலைக்குச் சான்று : கீழ்க்கணக்கு நூல்களுக்குப் பலலாறு ஆய்ந்து விளக்கம் தந்துள்ள சி. வை. தா.[60] தமது இலக்கண விளக்கப் பதிப்புரையில், கலித்தொகை பதிப்பித்தபின் திணை பற்றிய நான்கு நூல்களும் எனக்குக் கிடைத்தன; ஐந்திணை பற்றி நான் கூறியவை தவறு என்று ஒப்புக் கொள்ளுகிறேன் என்றும் குறிப்பிடுகிறார். நேர்மைக்குச் சான்றாகிய இது பதிப்பாசிரியருக்கு ஒரு வழிகாட்டியாகிறது. தவறு நிகழாவண்ணம் காத்துக் கொள்ளவும் உதவுகிறது.

கலித்தொகையில் வடமொழி மணமே இல்லை; இதுபோன்றே நற்றிணை முதல் புறநானூறு ஈறான அனைத்தும் வடமொழி மணமற்றன. இந்நிலை இருக்க, ஈசான தேசிகர், 'ஒன்றே யாயினும் தனித் தமிழுண்டோ' என்றார். இந்நூல்கள் அவர் கைக்குக் கிட்டாமையே காரணம் என்பது போன்ற புறநிலை ஆய்வுகள் பல சி. வை. தா. வால் கொடுக்கப்பட்டவை.[61]

பொருட் பாகுபாட்டிற்குச் சான்று : உ. வே. சா. வின் பத்துப் பாட்டு முகவுரை, கீழ்க்கண்ட பொருட் பாகுபாட்டில் அமைகிறது. இந்நூல் நக்கீரர் முதலியோரால் பாடப்பெற்றது; சங்கப் புலவர்களால் தொகுக்கப் பெற்றது (மலைபடு-145. நச்சர்); தமிழுக்கே உரிய ஒழுக்கம், நிலம், பொழுது இவற்றைக் காட்டி இன்பம் பயப்பது; தமிழ் மன்னர், மக்கள் ஆகியோரின் சிறப்புகளை விளக்குவது; முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றுவது; அடியளவு, பாடியோர், பாடப் பட்டோர், துறை, கூற்று, செய்திகள் ஆகியவற்றின் தெளிவை

59. வீரசோழியம், பதிப்புரை. 60, கலித்தொகை, பதிப்புரை. 61. மேற்படி.

உட்கொண்டது என்பன போன்ற பல பொருட்பாகுபாடுகள், பத்துப்பாட்டின் நூல்வாரியாக அமைவது பிற பதிப்பாசிரியருக்கு வழிகாட்டியாகிறது.

ஆய்வுநிலை-அகநிலை ஆய்வு : ஆய்வு முன்னுரைக்குத் துணைநிற்பன பல; பதிப்பிக்கும் நூல் மட்டுமன்று. எனவே ஆய்வு நிலையினை இரண்டு வகையாகக் கொள்ளலாம். நூலின் உட்செய்திகளைத் திரட்டி, சொற்கள்முதல் அணிகள் ஈறாக ஆய்வது '**அகநிலை ஆய்வு**' எனக் கொள்ளலாம். இதற்குப் பதிப்பிக்கும் நூலுக்கான மூலச்சுவடியுடன் ஒப்பிடும் பிற சுவடிகளும் துணையாகின்றன. அவற்றோடு பழைய அச்சு நூல்களும் துணைபுரிவனவாகும். அந்த அச்சு நூல்களும் சில சுவடிகளைக் கொண்டு பதிப்பிக்கப்பட்டவை ஆதலின் அவையும் பழைய சுவடிகளாகவே கருதப்படலாம். அப் பதிப்பாசிரியரின் முறையும் துணைபுரியும்.

புறநிலை ஆய்வு : தமிழ் மொழியிலுள்ள பிறநூல்களோடு ஒப்பிட்டு அப்பகுதிகள் யாவற்றையும் ஆய்வது 'ஒருமொழி ஒப்பீட்டு ஆய்வு' என்னும் **புறநிலை ஆய்வாகக்** கொள்ளப்படும். தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம்... போன்ற பிறமொழி நூல்களோடு ஒப்பிட்டு ஆய்வது 'பன்மொழி ஒப்பீட்டு ஆய்வு' என்னும் புறநிலை ஆய்வாகும். புறநிலை ஆய்வில் நூல் வடிவ அமைப்பு முதல் (பா, உரைநடை) பொருட்பாகுபாட்டுச் சிறப்பு ஈறாக அனைத்துச் செய்திகளும் எடுத்துக் கொள்ளப்படும். உடன்பாட்டு முறையிலும் எதிர்மறை முறையிலும் ஒப்பிடப்பட்டு, ஒற்றுமை, வேற்றுமைகள் புலப்படுத்தப்படுவது ஆய்வு நெறியாகும்.

பதிப்புரை : படிப்போருக்கு நூலை எளிமையாக்கித் தந்து, பதிப்பின் தரத்தை மதிப்பிடும் உரைகல்லாக அமைவது ஆய்வு முன்னுரை. ஆனால் பதிப்பின் உழைப்பையும், பதிப்பு வரலாற்றையும் அறிந்து வியக்கச் செய்வது பதிப்புரை. பதிப்புக்குப் பயன்பட்ட மூலச்சுவடி, ஒப்புநோக்கப் பயன்பட்ட சுவடிகள், அச்சுநூல்கள் ஆகியவற்றின் முழு விவரங்களையும் பதிப்புரையில் குறிப்பிட வேண்டும். சுவடிகளைப் பெற்ற வரலாறு, அவற்றின் காலம் ஆகியவற்றை விளக்கி வரிசைப்படுத்திக் கையாண்ட முறையினைக் கூறவேண்டும். மொத்தமாகப் பாடல் எண்ணிக் கையில் இருந்த வேறுபாடுகள், அவற்றைச் சரிசெய்த முறை, உரையில் காணப்பட்ட வேறுபாடுகள், அவற்றைப் பதிப்பித்த

முறை ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டவேண்டும். பாடவேறு பாடுகளைத் தொகுத்த முறையினைச் சுட்டுவதனால் பிற பதிப்பாசிரியருக்குத் துணைபுரிய வழி உண்டு. அதேபோல மூல பாடத்தைத் தேர்ந்தெடுக்கக் கையாண்ட உத்திகளைக் காரண காரியங்களோடு முழுமையாகத் தொகுத்துக் காட்டுவதன் மூலம் தம் அனுபவத்தைப் பிறரும் பெறுமாறு செய்யலாம். அதுவன்றி, நாம் மேற்கொண்ட காரண காரியங்கள் சரியானவையா என்பதை ஆய்வாளர்கள் சிந்திக்குமாறு தூண்டுவதாகவும் அவை அமையும். முன்பதிப்புகள் இருப்பின் அவற்றின் குறை நிறைகளைச் சுட்டி, இப்பதிப்பில் அமைந்த வேறுபாடுகளை எடுத்துக் காட்டலாம். மூலபாடங்களில் திருத்தங்கள் செய்திருந்தால் விவரங்களைத் தொகுத்தளிக்க வேண்டும். இச்செய்திகளடங்கிய பதிப்புரை, பதிப்பின் வரலாற்றுக்கு உறுதியான சான்று பகர்வதாகும்.

அணிந்துரை முதலியன : "தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும், தான்தற் புகழ்தல் தகுதி யன்றே"[62] என்பது சிறப்புப் பாயிரம். நூலாசிரியரைத் தவிர பிறரால் செய்யப்பட வேண்டும் என்பதற்குக் கூறப்பட்ட காரணம் ஆகும். நூலின் சிறப்பியல்புகளையும், நூலாசிரியரின் உயர்ந்த குறிக்கோளையும் உலகிற்கு எடுத்துக்காட்டி நூலை அறிமுகப்படுத்த உதவுவது அணிந்துரை, பிறவுரை, தந்துரை என்னும் பெயர்களால் அமையும் சிறப்புரையாகும். இது சான்றோர் பிறரால் செய்யப்படுவது ஆகும். நூல் அமைந்த துறையில் உலகறிந்த சான்றோரால் அச்சிறப்புரை அளிக்கப்படுமாயின் நூலைக் கற்போர் மிகுதியாவர்; நூல் வெளியிட்டதன் முழுப்பயன் கிட்டும். பதிப்பாசிரியர் சிறந்த சான்றோரைத் தேர்ந்து இச்சிறப்புரையைப் பெறுவது நூலை மக்களிடையே பரப்புவதற்குரிய வழிகளுள் ஒன்றாக அமையும்.

சுவடிப் பதிப்பில் நூலாசிரியர் அணிந்துரை எழுதும் நிலைக்கு இடம் இருக்காது. பதிப்பாசிரியரே இடம்பெறுகிறார். அவர் நூலின் சிறப்பியல்புகளைத் தம் ஆய்வுரையில் தருகிறார். எனவே இச்சிறப்புரைக்குப் பிறரைத் தேர்ந்தெடுப்பது தேவையாகிறது.

ஏ. பதிப்புரை-பொதுக் கொள்கைகள்

தலைப்பு கொடுத்தல் : அச்சுப்படி தயாரிப்பதன் முறைகள் கூறப்பட்டன. அவ்வாறு தயாரிக்கும்போது நூல் அமைப்பில் சில கருத்துகளைப் பதிப்பாசிரியர் உளங்கொள்ள வேண்டும். அதாவது

62. நன்னூல். 52.

அச்சுப்படியிலேயே பாக்களுக்குரிய தலைப்புக் கொடுத்தல், பிழைகளைத் திருத்தி அமைத்தல், பாடல்களுக்குத் தொடர் எண் கொடுத்தல். சொற்களைச் சீர்மையாக்குதல், முன்னுரை முதலியவற்றின் மொழிநடையை முறைப்படுத்துதல், அச்சு முறைகளைக் கண்காணித்தல் ஆகியவற்றில் பதிப்பாசிரியர் கவனம் செலுத்துதல் இன்றியமையாததாகும்.

நூற்பா. பாடல், பத்தி ஆகியவற்றிற்கு, உட்பொருளுக்கு ஏற்பச் சுருக்கமான தலைப்புக் கொடுத்துப் பதிப்பிப்பது இன்றியமையாதது. கருத்துக்கு ஏற்ப ஒரு தலைப்பில் பல பாடல்கள் அமையலாம் அடிகளாசிரியரின் தொல்காப்பியப் பதிப்பு (எழுத்து-1969) தலைப்பின்றி அமைந்துள்ளதால், குறிப்பிட்ட செய்தியை விரைந்து காண இயலாமை குறிப்பிடத்தக்கதாகும்.

திருத்தி அமைத்தல் : "சற்வசித்து வருஷம்... எழுதி வச்சது. ராமசாமி செட்டியார் கையில் தற்மந்திரியார் அருளிச் செய்த நிகண்டு முன்னூறும் எழிதி நிறவேறியது"[63] என்பது சுவடியில் காணப்பெறும் வடிவம். விளக்க அட்டவணை வெளியிட்ட நூலகம் இதனை,

> "ச[ற்] (ர்) வசித்து வருஷம்... எழுதி (வை) வ [ச்ச] (த்த)து.
> [றா] (ரா) மசாமி செட்டியார் கையில் த [ற] (ன்) [ம] (வ)
> ந் [தி] (த)ரியார் அருளிச் செய்த நிகண்டு மு[ன்னூறு]
> (ந்நூ)றும் எ [ழி] (ழு) தி நி(றை)ற வேறியது"[64]

என்று பதிப்பித்துள்ளது. சுவடி வடிவமும் திருத்த வடிவமும் இணைந்த இம்முறை நூலில் வெறுப்பையூட்டிவிடும். எனவே இதனைத் தனித்தனியே அமைத்தல் பயனுடையதாகும். தனித்தனியே அமைப்பதில் இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன. அவற்றுள்,

> "மூலத்தினை ஏட்டில் உள்ளபடி கொடுத்துவிட்டு, அடிக்குறிப்பில் தாம் நினைக்கும் திருத்தத்தினைக் கொடுத்து, காரணத்தினை முன்னுரையில் வழங்குவதே நேர்மையானது"[65]

என்பது ஒரு முறை. இதன்படி நூல் அமையுமாயின் மேலே கொடுக்கப்பட்ட செய்தியைப் படித்தறிய பொறுமை தேவைப்

63. தன்வந்திரி நிகண்டு முந்நூறு, ஆர். 145.
64. தன்வந்திரி நிகண்டு முநநூறு, ஆர். 145, விளக்க அட்டவணை, தொகுதி-1. 65. பதிப்புப் பார்வைகள், பக். 34.

படும். நூலைப் படிப்பதில் சலிப்பு ஏற்படும். மேலும் சுவடியில் உள்ள வடிவம் என்பது மேலும் பொருளை ஆழ்ந்து, ஆய்ந்தறிய விரும்பும் ஆய்வாளருக்கும், காலந்தோறும் மாறுபட்ட எழுத்து வடிவை ஆய்வுசெய்ய விரும்பும் ஆய்வாளருக்கும் மட்டும் பயன் படுவதாகும். நூலைப் படித்துப் பொருளை அறிந்து பயன்படுத்த விரும்பும் சாதாரண மக்களுக்கு இம்முறை தேவையற்றதாகும். ஆய்வாளரும் முதலில் செய்தியைத் தெளிவாக அறிந்துகொள்ளவே விரும்புவர். பிறகே ஆய்வினை நிகழ்த்துவர். திருத்தமில்லாத பதிப்பு ஆய்வாளருக்கும் பயன்படாமல் போவதும் உண்டு. காரணம் பொருள் விளங்காமையே; அதாவது திருத்திப் படிக்க இயலாமையே. எனவே அனைவருக்கும் பயன்படும் வகையில் பதிப்பினைத் திருத்தி அமைத்து, சுவடி வடிவத்தை அடிக்குறிப்பில் தருவது இரண்டாவது முறையாகும். இதுவே பயனுள்ள முறையு மாகும். இம்முறை சுவடியைத் திருத்திப் பதிப்பித்ததாகக் கருதக் கூடியதன்று. சுவடி வடிவத்தை உள்ளடக்கிய திருத்தப் பதிப்பு முறையேயாகும்.

> ''முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும் பொன்னேபோல் போற்றுவர் பொற்புலவர்-அன்னோர் நடையிடையத் தம்வழியே நாட்டி மொழிமாற்றல் கடையிடையர் மாட்டுவினை காண்-என்னும் செய்யுளில் கூறியபடி சுவடிகளில் காண்பதைத் தம் மதத்தின்படி திருத்துதல் ...விபரீத அறிவினையுடைய மத்திமர்க்கும், சந்தேக ஞானத் தையுடைய அதமர்க்கும் உரிய தொழில் என்று உணர்க... அவர் நூலையே அச் சொரூபமாக எடுத்துப் பதிப்பிப்போர் ஓர் அக்ஷரமாவது மாற்றுதல் பெருந் தவறு என்பது யாருக்கும் உடன்பாடே. இக் கருத்துகளைக் காரண காரியங்களுடன் நன்கு அறிவோம். என்றாலும்... படியெடுப்போரால் பல பிழைகள் நேர்ந்துள்ளன என்பதையும் அறிவோம்... அத் திருத்தங்களினால் ஏதேனும் பொருள் மாற்றம் உண்டானால் கற்போர் அறிதல் கூடும் என்ற எண்ணத்தினால் இவ்வாறு திருத்தம் செய்த இடங்களை எல்லாம் ஒன்றுவிடாமல் தொகுத்து, பாட்டு எண் கொடுத்து-'சுவடியில் உள்ள தொடர்-திருத்தம் செய்யப்பட்ட தொடர்' என்ற தலைப்பில் பதிப்பித் திருக்கிறேன்''[66]

என்னும் பகுதி இங்கு நோக்கத் தக்கதாகும்.

---

66. மனை நூல், பதிப்புரை, பக். 34-36.

தொடர் எண் கொடுத்தல் : பாடல், நூற்பா போன்றவற்றிற்கு வரிசை எண் கொடுப்பது இன்றியமையாதது. ஒரு நூலில் பல இயல்கள் அமைந்து, ஒவ்வொரு இயலும் பல பாடல்களை அல்லது பல அடிகளைக் கொண்டதாக அமையும். இவற்றுள் பாடல் களுக்குத் தொடர்ச்சியாக எண்களை அமைக்கலாம். ஆசிரியப்பா நடையிலான தொடர் அடிகளாயின் ஐந்து அல்லது பத்து அடிகளுக்கு ஒருமுறையாக, ஆனால் தொடர்ந்த அடி எண்களைத் தருதல் இன்றியமையாதது. எண் கொடுப்பதில் நூல் முழுமைக்கும் தொடர்ச்சியாக அமைவதே எடுத்தாள்வதற்கு எளிமையாக இருக்கும். இவ்வாறு இல்லாது இயல்கள்தோறும் ஒன்று, இரண்டு என்று தொடங்கித் தொடர் எண் கொடுக்கும் முறையும் காணப் படுகிறது.

சீர்மை செய்தல் : ஒரே சொல் சுவடிகளில் பலவிடங்களில் பலவாறாக எழுதப் பெற்றுள்ள நிலையும் காணப்படுகிறது. ஏதேனும் ஒரு முறையில் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அதே முறையில் அச்சொல்லை நூல் முழுவதிலும் கையாள வேண்டும். வேறுபட்ட அவ்வகைகளை அடிக்குறிப்பிலோ தனித்த தலைப்பிலோ குறிப்பிட்டுக் காட்டலாம்.

> "பதிப்பாசிரியரின் கடமைகளுள் ஒன்று சொல், பொருள் போன்றவற்றில் சீர்மை அமையச் செய்தல். அதாவது ஒரு நூலுள் வரும் 'இராசராசன்' என்ற பெயரை நூல் முழுமையிலும் ஒரே மாதிரியாக அமைக்காமல் ராஜராஜன், இராஜராஜன், ராசராசன் என்பன போன்று மாற்றி மாற்றி அமைப்பது ஐயத்தை விளைவிப்பதாக அமைந்துவிடும். சுவடியுள் மாறுபாடாகக் காணின் சிறந்த ஒன்றைத் தேர்ந்து, பிறவற்றைச் சுட்டிக் காட்டிவிட வேண்டும் என்பதே ஒழுங்கு முறையாகும்"[67]

என்னும் கருத்து சீர்மை செய்தலை எடுத்துக் காட்டுகிறது. சீர்மையில்லாப் பதிப்புகளுக்குச் சிலவற்றை எடுத்துக் காட்டலாம்.

" தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் **சுவடிகள் நூல் நிலையம்**"

" தமிழ்நாடு அரசு கீழ்த்திசை **நூலகச் சுவடி**"[68]

என்பன ஒரே நூலில் தலைப்புப் பக்கத்திலேயே காணப்படும் தொடர்களாகும், இந்தப் பதிப்புகளில் '**வம்சாவளி**' என்பது நூல்

---

67. எண்பத்தொன்றில் தமிழ், பக்.489.
68. பாளையப்பட்டுகளின் வம்சாவளி, தொகுதி I.

களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பு. இது நூலின் அட்டையில் அமைந்துள்ள பெயர், ஆனால் நூலின் உள்ளே, தலைப்புப் பக்கத்தில் பாளையப்பட்டுக்களின் **வரலாறு**-தொகுதி-1. என்று காணப்படுகிறது. நூலினுள் வமிசாவளி (பக்.35); வம்சாவளி (பக்.39); வம்முசாவழி (பக்.48); வமுஸ்தாவழி (பக்.72): வம்முஷா வழி (பக்.105) என்னும் பல சொற்களில் தலைப்புகள் காணப் படுகின்றன.

குமாரபட்டம் பெற்ற ஒருவன், சோதெய நாயக்கன், சோதைய னாயக்கர், சொசெய னாயக்கர், சொதேய னாயக்கற் என்ற பல தொடர்களால் ஒரே வம்சாவளியில்[69] குறிக்கப்படு கிறான். இவ்வாறன்றி எவ்வாவகையிலும் சீர்மை அமையுமாறு பதிப்பை அமைப்பது பதிப்பாசிரியரின் கடமையாகும்.

மொழிநடை : சுவடிப் பதிப்பில் மொழி நடையினை ஒழுங்கு படுத்தும் உரிமை பதிப்பாசிரியருக்கு இல்லை, என்றாலும் பெருந் தவறுகள் காணுமிடத்தில் திருத்தம் செய்து, அச்செயலுக்கான காரணத்தை அடிக்குறிப்பில் சுட்டலாம். ஆனால் பதிப்பாசிரியர் தரும் ஆய்வு முன்னுரை போன்ற பகுதிகளில் நடை சிதையாதவாறு பார்த்துக் கொள்ளுவது அவரது கடமையாகும். ஆய்வு முன்னுரை என்பது அவரது சொந்தப் படைப்பு. ஆதலின் அவர்தம் மொழித் திறன் அம்முன்னுரை விளக்கவுரைகளின் மூலமே வெளியாகும். எனவே பதிப்பாசிரியர் நினைவிற் கொள்ள வேண்டிய சில இடங்கள் இங்குச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

திணை—இதனை அமைக்க ஏற்பாடு **செய்தது** யார்?
பதிப்புக் கலையில் ஆர்வம் கொண்டு **விளங்கியது** சி வை. தா. அவர்களே.

புலவன் **தமது** மன்னனைப் பாடினான்

எண்—கல்வி கேள்வி**யில்** சிறந்தவர் கபிலர்
கபிலர் **தனது** கருத்தை எடுத்துக் கூறினார்

பல பொருள் தொடர்

புலவர் விரும்பித் தேடிய வள்ளல். வீரசோழியம் பதிப் பித்த வைரநாத பிள்ளை மகன் தாமோதரம் பிள்ளையால் கூறப்பட்டது. அவர் உன்னைவிட என்னை அதிகம் விரும்பு கிறார். அவன் தம்பி வீட்டுக்குப் போனான்.

---

69. பாளையப் பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி-௧. பக். 35-36.

சொல் அமைப்பால் பொருள் வேறுபடுதல்

நம் நாட்டில் **இரண்டு** மொழிக் கொள்கை கையாளப்படுகிறது. **மூன்று** மொழித் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இலக்கண அமைதி

ஏதேனும் ஐந்தினுக்கு விடை தருக.

பிரதி திங்கள் தோறும் விடுமுறை.

மனைதை, அவைகளுடன், பணமோ அல்லது நெல்லோ கொடு. போன்ற தொடர்களிலும் சொற்களிலும் விழிப்பாக இருத்தல் வேண்டும்.

தொகை : நற்றிணை, குறுந்தொகை...புறம் என ஏழு நூல்களைக் கூறி- 'என்பன எட்டுத் தொகை நூல்களாகும்' என்று அமைந்து விடுவதும் உண்டு.

அதியமான், ஆய், ஓரி, காரி, பாரி, **குமணன்**, பேகன் என்போர் கடையெழு வள்ளல்களாவர். என பெயர் ஏழு அமையவும் வேறு தவறு நிகழக் கூடும்.

பாரதி 1869-இல் பிறந்தார்; காந்தி 1882-இல் பிறந்தார் என மாறுபடுவதும் ஏற்படலாம்.

ஒரே சொல் பலவாறாக அமைதல் : எழுத்துகள், கருத்துகள், கல்வெட்டுகள் நாள்கள்-என்பனவும் எழுத்துக்கள், கருத்துக்கள், கல்வெட்டுக்கள், நாட்கள் என்பனவும் முறையே ஒரே நூலில் இருவகையாக எழுதப்பட்டு விடுவதுண்டு. இவற்றைப் போல,

பிரான்சு, பிரான்ஸ், ஃபிரான்சு, ஃபிரான்ஸ்;
ஜெர்மனி, செர்மனி, செருமனி;
பிரச்சினை, பிரச்சனை, பிரச்னை, பிரஸ்னை;
அக்கறை, அக்கரை; கறுப்பு, கருப்பு;
காக்ஷி, காட்சி; அறுவெறுப்பு, அறுவறுபபு, அருவருப்பு

ஆகிய சொற்கள் ஒரே நூலில் வேறுபட்டு அமைந்து விடுவதுண்டு.

பதிப்பாசிரியர் இவற்றைச் சீர்மைப்படுத்தி அமைப்பதில் கருத்தைச் செலுத்த வேண்டும்.

சொற்களை மிகுதியாகப் பெய்தல், சில சொற்களை அல்லது சில சொற்றொடர்களைத் திரும்பத் திரும்பக் கையாளுதல் ஆகியவை நிகழாமல் திட்பமும் நுட்பமும் உடையனவாகச் சொற்றொடர்களை அமைத்தல் வேண்டும்.

8. ஆச்சு

அ. அச்சுமுறைகளைக் கண்காணித்தல்

நூலின் முழு அமைப்பினை மனத்திற்கொண்டு ஒவ்வொரு பகுதியும் கவனிக்கப் பெற வேண்டும். அந்தப் பகுதிகள் அச்சில் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைப் பதிப்பாசிரியர் முன் கூட்டியே திட்டமிட்டுச் செயல்பட வேண்டியவை எனச் சில வரன் முறைகளை வகுக்கலாம். இவ்வரன்முறை பதிப்பாசிரியருக்குப் பெருமை தரக்கூடியவை என்பதோடு, இவ்வரன்முறையோடு அமையும் நூல் எல்லாவகையிலும் பயனுடையதாய் விளங்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நூலின் அமைப்பு

1. முன்புற, பின்புற மேலட்டைகள்
2. அட்டைஉறை
3. முன், பின் ஒட்டுத்தாள்கள்
4. சுருக்கத் தலைப்புத்தாள்
5. தலைப்புத்தாள்
6. தகவல் பட்டி
7, படையல்
8. முகப்புப்படம்
9. அறிமுக உரை
10. பதிப்பாளர் உரை
11. நன்றியுரை
12. பொருளடக்கம்
13. நூல் ஆய்வுரை
14. படப்பட்டியல்
15. சுருக்கக் குறிப்பு
16. குறியீட்டுப்பட்டி
17. பிழை திருத்தம்
18. நூல்
19. பின் இணைப்புகள்
20. நூல் தொகை
21. பிற அட்டவணைகள்
22. விளக்கப்படங்கள்
23. கலைச் சொற்கள்
24. செய்யுள் முதற்குறிப்பு
25. சொல்லடைவு

இவற்றுள் அட்டைஉறை நூலின் அளவையும், பதிப்பாசிரியரின் விருப்பத்தையும் பொறுத்து அமைவதாகும். சுருக்கத்தலைப்புத் தாள் நூலுக்கு அழகைத் தருவது. படையலும் முகப்புப்படமும் விருப்பமாயின் இடம்பெறுதன. அறிமுகஉரை என்னும் பகுதியில் அணிந்துரை, சிறப்புரை, வாழ்த்துரை எனப் பலவாகவும் அமைய லாம். நூல் ஆய்வுரையில் நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, பாடினோர் வரலாறு, பாடப்பட்டோர் வரலாறு, நூலின் காலம் ஆகிய அனைத்தும் இடம்பெறும். நூலுள் படங்கள் இருப்பின் மட்டுமே படப்பட்டியல் இடம்பெறும். பிழை திருத்தம் நூலின் இறுதியிலும் இடம் பெறலாம். கலைச்சொற்கள் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக அமைவதுண்டு. அதற்குப் பக்க எண், பாடல் எண்கள் அவசியமில்லை. தமிழ் அகரவரிசை அல்லது ஆங்கில அகரவரிசையில் அமைக்கலாம்.

நூலின் தலைப்பு: மேல் அட்டை, அட்டைஉறை, சுருக்கத் தலைப்புத்தாள், தலைப்புத்தாள் ஆகியவற்றில் நூலின்பெயர் ஒரே மாதிரியாக அமையவேண்டும். சுருக்கத்தலைப்புத்தாளில் நூலின் பெயர் மட்டும் இருக்கும். இவை ஒரே புள்ளி எழுத்தால் அச்சிடப் பெறும். அட்டைப் பகுதிக்குத் தனி அச்சு (பிளாக்) தயாரிக்கப்படு மானால் அது மட்டும் வேறுபடலாம். நூல் தொடங்கும் பக்கத்திலும் நூலின் தலைப்பு அமைதல் வேண்டும். அது அடுத்த சிறிய அளவு புள்ளியில் அச்சிடப்பெறும்.

பெயர்: தலைப்புத்தாள் போன்றவற்றில் ஆசிரியர் பெயர் முகவரி ஆகியற்றை அச்சிடும் போது சுருக்கப் பெயரை அடுத்து முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்; முழுப் பெயர்களாயின் புள்ளி வைக்கக் கூடாது. இம்முறை நூலினுள் காணப்பெறும் பெயர் களுக்கும் பொருந்தும். இதனை விளக்குவதைக் காட்டிலும் சான்றுகளால் எடுத்துக் காட்டலாம்.

டாக்டர் குளோரியா சுந்தரமதி
டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
புலவர் இராசேந்திரன்
புலவர் பூ. சுப்பிரமணியம்

என்பன சிறப்புப் பெயருடன் கூடிய பெயர்கள். இப்பெயர்களை அடுத்து ஈற்றில் புள்ளிகூடாது. தொடர்ந்து பட்டங்கள் எழுதப்பட வேண்டுமானால் காற்புள்ளியிட்டுத் தொடங்க வேண்டும்.

சுருக்கப் பெயர்கள்

கி. பி. மூன்றாம் நூற்றாண்டு;

கி. மு. முதலாம் நூற்றாண்டு;

15 கி. மீ. தூரம்; 200 கி. கி. எடையுள்ளது என்பன போல- கி. பி., கி. மு.க்களுக்குப் பின்னால் எண்கள் வரவேண்டும். கி. மீ.' கி.கி. ஆகியவற்றுக்கு முன் எண்கள் வரவேண்டும். '200 கிலோ எடையுள்ளது' என்ற முழுச் சொல்லையுடைய தொடரில் புள்ளி எதுவும் வராது. சுருக்கக் குறிப்புகளைச் சொற்றொடர் தொடக்கத்திலும், இயல் தொடக்கத்திலும் கையாளக் கூடாது. அதாவது தலைப்பு : 'ஐக்கியநாடுகள் சபையின் பணிகள்' என்று எழுதலாம்.
'ஐ. நா. சபையின் பணிகள்' என்று எழுதக் கூடாது.

'தலைப்புகளில் சுருக்கச்சொல் அமைவது, தலைப்பின் பொருளையே ஆழ்ந்து அறிய வேண்டியதாகிவிடும். வாக்கியத் தொடக்கத்தில் சுருக்கச்சொல் அமைவதனால் முதலிலேயே விட்டிசை ஏற்பட்டு விடுகிறது. எனவே இவை தவிர்க்கப்பட வேண்டியவை ஆகின்றன. ஐ. நா. சபை இந்தியப் பொருளாதாரத் திட்டத்தைப் பாராட்டியது என்று தொடங்க வேண்டிவந்தால், இந்தியப் பொருளாதாரத் திட்டத்தை ஐ. நா. சபை பாராட்டியது என்று எழுத வேண்டும். இது எல்லாச் சுருக்கக் குறிப்புகளுக்கும் பொருந்தும். சிறிய சொற்களுக்குச் சுருக்கம் கையாளக் கூடாது. (நாள். மைல், நாடு, ஏக்கர் என்பனவற்றை அப்படியே எழுதலாம்.) இதன் பொருள், என்றவாறு போன்றவற்றின் சுருக்கக் குறிப்புகள் முதலில் அமையலாம். இவ்வாறு சுவடியில் காணும் சில சுருக்கக் குறிப்புகள் கீழே தரப்படுகின்றன. இக்காலத்து இவை பயன்படுத்தப்படுவதில்லை. ஆயினும் சுவடியில் உள்ள இவற்றை அச்சில் கொண்டுவர வேண்டியுள்ளது. ஆதலின் இவை இங்கும் சுட்டப் பெறுகின்றன.

இ-ள்.	— இதன் பொருள்	எ-ம்.	— என்பதாம்
உ-ம்.	— உதாரணம்	எ-று.	— என்றவாறு
எ-டு.	— எடுத்துக்காட்டு	ப-ம்.	— பக்கம்
எ-து.	— என்பது	பொ-ரை	— பொழிப்புரை

ஆண்டு மாதம், தேதி-இவற்றின் சுருக்கக் குறிப்புகள் இணைப்பில் காட்டப் பெற்றுள்ளன.

1985 ஆம் ஆண்டு என்பதே சரியானது. 1985-ம்; 1985-ஆம்; 1985 ஆவது என்பன தவறானவை. 1985இல் என்பது சரியானது. 1985ல்; 1685-ல் என்பன சரியல்ல. 5ஆம். 5இல் என்பன தொடர்ந்து ஓசை உடையவை. இடையே சிறு கோடு போட்டால் ஆம், இல் என்பன விட்டிசைக்கும்.

பக்கங்களில் தலைப்பு : ஒவ்வொரு பக்கமும் மேல்வரியில் நூலின் பெயர் ஒருபுறமும் இயல், கட்டுரை, நூற்பா எண் ஆகிய வற்றில் ஒன்று மற்றொரு புறமுமாக அமைவது பயன்பாட்டுக்குரிய அமைப்பாகும். 'யாப்பியல் ஆய்வுக் கோவை' என்னும் நூலினுள் பரிபாட்டு, மண்டிலயாப்பு, கலிப்பா, கலிவெண்பா...என ஏழு கட்டுரைகள் அமைகின்றன. ஒருபுறம் நூலின் பெயரும் மறுபுறம் அப்பக்கத்தில் உள்ள கட்டுரையின் தலைப்பும் இடம் பெறுவது முறை. ஆனால் நூல் முழுமையும் ஒருபக்கம் யாப்பியல் எனவும் அடுத்த பக்கம் ஆய்வுக்கோவை எனவும் அமைகிறது. கட்டுரைத் தலைப்புகளுக்கு வரிசை எண் கொடுப்பதும் இன்றியமையாத தாகும். மேற்குறிப்பிட்ட நூலில் பொருளடக்கத்தில் எண் கொடுக்கப்பட்டுள்ளது. உள்ளே உள்ள கட்டுரைத் தலைப்பு களுக்கு எண் இல்லை. எடுத்துக் காட்டப் பெற்ற நூல் சுவடிப் பதிப்பு இல்லை ஆயினும் - அச்சிட்டு வெளியிடும் பாங்கில் இரண்டும் ஒருதன்மையன வாதலின் இந்நூல் எடுத்துக் காட்டப் பெற்றது.

அச்சுப்புள்ளி : ஆறு புள்ளி அளவுடைய சிறிய எழுத்து முதல் எழுபத்திரண்டு புள்ளியுடைய பெரிய எழுத்து ஈறாக எழுத்தின் அளவுகள் பலவகைப்படுகின்றன எழுத்தின் அளவுகளையே புள்ளி என்பர். ஆறுபுள்ளி எழுத்தை இக்காலத்தில் தமிழில் பெரும்பாலும் பயன்படுத்துவதில்லை. தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்டுவரும் '**தமிழ்க்கலை**' என்னும் இதழில் பொருளடக்கம் ஆறுபுள்ளியில் அச்சிடப் பெற்று வருகிறது. மிகப்பெரிய அளவுகள் விளம்பரச் சுவரொட்டிகளுக்குப் பயன்படுவனவாகும்.

பொருளும் புள்ளியும் : சுவடிப் பதிப்பில் பாடல்கள் பன்னிரண்டு புள்ளியிலும் உரை, விளக்கவுரை ஆகியவை பத்துப் புள்ளியிலும் அச்சிடப்பெறுமாயின் நூல் தெளிவாக இருக்கும். அடிக்குறிப்புகள் எட்டுப்புள்ளியில் அமையலாம். இவ்வமைப்பு களுக்கு ஏற்ப பாடல்களுக்கான பொருள்தலைப்பு, பத்தித் தலைப்பு, உள்தலைப்பு, இயல்தலைப்பு, கட்டுரைத் தலைப்பு, நூல் தலைப்பு ஆகியவை ஒன்றற்கொன்று இரண்டுபுள்ளி பெரியதாக அமைவதும் நூலின் தெளிவை உயர்த்தும். எந்த எழுத்து அளவைத தேர்ந்தெடுப்பினும் ஒருவகையான தலைப்பிற்கு நூல் முழுமையும் அதே அளவு எழுத்தே அமையுமாறு கவனித்துக் கொள்ள வேண்டும். ஓர் இயல் தலைப்பிற்குப் பதினான்கு புள்ளி யுடைய எழுத்தைத் தேர்ந்தெடுத்தால் நூல் முழுமையும் இயல் தலைப்புகள் பதினான்கு புள்ளியிலேயே அமைய வேண்டும்.

அச்சில் அடிக்குறிப்பு : அடிக்குறிப்பு அமைப்பிணைப் பதிப்பாசிரியர் நுணுக்கமாக உற்று நோக்க வேண்டும். பக்க அளவினை அதிகமாக்க அடிக்குறிப்பில் இடத்தை வீணாக்குவதைக் கவனிக்க வேண்டும்.

அடிக்குறிப்பு எண் — 1. உருபுருபாகி
2. வடிவாகி
3. உயிரும்
4. உருபுருபாகி
5. உருபு

என இவ்வாறே அடிக்குறிப்பில் இடம் வீணாகியுள்ளது.[1] ஒரே வரியில் அல்லது இரண்டு வரிகளில் தொடர்ச்சியாக இடைவெளி விட்டு அமைக்கலாம்.

1. தொல். பொருள். இளம். நூ. 56.
2. தொல். பொருள். இளம். நூ. 425.
3. தொல். பொருள். இளம். நூ. 423

என்பன ஒரே பக்கத்தில் அமைந்துள்ள அடிக்குறிப்புகள்.[2] இப்படிப் பல பக்கங்கள். இவை முறையே

1. தொல். பொருள். இளம்-55. 2. ஷை. 425, 3. ஷை. 413 என ஒரே வரியில் அமைக்கப்பெறலாம்.

"உம்மைப் பிரிந்தாளே[4]...யிம்மைப் பிரிந்தாயெப்[5] போது-
இதினுரை...பிறப்பைப் பிரிந்தாளென்றால்[6]...
பிரிந்தாளோ[7]..."

அடிக்குறிப்பு : 4. பிரிந்தாள்; 5. பிரிந்தாள்;
6. பிரிந்தாள்; 7. பிரிந்தாள்

என்பது ஒருவகையாகக் கொடுக்கப்பட்டுள்ள அடிக்குறிப்பு.[3] பிரிந்தாள் என்ற சொல்வரும் நான்கு இடத்திலும் ஒரே எண்ணை மீண்டும் மீண்டும் கொடுத்து, அவ்வெண்ணிற்குரிய அடிக்குறிப்பை ஒரே சொல்லில் அமைக்கலாம்.

தகவல்பட்டி : நூல் அச்சாகியுள்ள செயல்களைக் குறித்த அனைத்துத் தகவல்களும் ஒருபக்க அளவில் தருவது கடமையும் பயனுடையதுமாகும். இப்பட்டி ஒன்று **இணைப்பு** 4இல் கொடுக்கப் பெற்றுள்ளது.

---

1. தொல். உரைவளம், நூன்மரபு, பக். 96, 2. திருவிளையாடற்புராணம் மதிப்பீடு, பக். 49, 3. மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகள்-ஓர் ஆய்வு-அளகேசுவரன், வெண்பா-17.

அச்சுப்பிழை : பொதுவாக நூல்கள் பிழையின்றி இருப்பதையே அனைவரும் விரும்புவர். தரமான நூல் என்பது பிழையின்றி முன்மாதிரியாகவும் விளங்க வேண்டும். இதற்கு முழுமையாகப் பதிப்பாசிரியர் பொறுப்புடையவராகிறார், எழுத்துகள் விட்டுப் போவதும், மாறுவதும் இயல்பாக நிகழக்கூடியவை. இவற்றில் கவனமே மிகவும் முக்கியம்.

அறத்தான் வருவதே இன்பம்...என்னும் தொடரில் றகரம் விடுமாயின்; தங்கள் வரவை விரும்பும், பெண்ணின் தாய் மாமன்மார்...என்பதில் தாய் என்பதிலுள்ள தகரம் நகரமாக மாறுமாயின்; வாழ்த்துமாறுகோருகிறோம் என்பதில் 'ரு' 'று'வாக மாறுமாயின் எவ்வாறாகும் என்பதை நோக்க வேண்டும். இவ்வாறான விபத்துகள் பதிப்பில் நிகழாவண்ணம் அச்சுப் படியினைத் திருத்த வேண்டும். இவ்வாறே எண்களில் மாற்றம் ஏற்படுவதுண்டு. 1974இல் நமது நாடு சுதந்திரம் பெற்றது என்பது போல எண்கள் மாறி இடம் பெறக்கூடும். இத்தகு பிழைகள் மிகவும் நுணுக்கமாகப் பார்த்துத் திருத்தப்பெற வேண்டியவை யாகும். பிழைதிருத்தக் குறியீடுகள் **இணைப்பு** 1இல் தரப் பட்டுள்ளன.

ஆ. சொந்தப்பதிப்பு

பொதுவாகச் சுவடிப் பதிப்பில் நால்வர் ஈடுபடுவர். 1. சுவடிக் குரியோர் 2, பதிப்பாசிரியர் 3. அச்சிடுபவர் 4. விற்பனையாளர் என்போர் அந்நால்வர். இந்த நால்வரும் ஒருவராக அமையும் நிலையே சொந்தப் பதிப்பு நிலையாகும். சுவடி, பதிப்பு, அச்சு, விற்பனை ஆகிய நான்கு பணிகளையும் ஒருவரே மேற்கொள்ளும் போது, பொதுவான சில செய்திகளை மனங்கொள்ள வேண்டும்.

சுவடித் தேர்வு : மக்களின் தேவை, சுவை, நூலின் அளவு, வாங்கும் சக்தி ஆகியவற்றை உள்ளத்திற்கொண்டு ஏற்ற சுவடியினைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

செலவு : தேர்ந்தெடுத்த சுவடியினைப் படியெடுப்பது முதலாக அச்சிடுவது ஈறாக ஆகும் செலவினங்களை ஆய்ந்து பார்க்கவேண்டும். உரிய கருவிகள், துணைக்கருவிகள் ஆகியவற்றைத் திரட்டுதல், படங்கள் முதலான எடுத்துக் காட்டுகள் திரட்டுதல், அதற்கான பயணச்செலவுகள் ஆகிய பலவகைச் செலவினங்களும் நூல் உற்பத்தி அல்லது நூல் பதிப்புச் செலவினங் களாகவே கருதப்பெறும்.

விலை நிர்ணயம்: நூலின் உற்பத்திச் செலவுகளோடு விற்பனையாளர்களுக்குத் தரும் கழிவுத்தொகையும் பதிப்பாசிரிய ருக்குரிய இலாபத்தொகையும் சேர்த்து விலை நிர்ணயித்து, விலை யினைத் தெளிவாக அச்சிடவேண்டும்.

விற்பனை: தரமான பதிப்பேயாயினும் குறைந்த விலை யுள்ளதாய் இருந்தால்தான் மிகுதியாக விற்பனையாகும். குறைந்த விலை நிர்ணயிக்க நூலின் எண்ணிக்கையை அதிகமாக்கவேண்டும். அதாவது சுமார் முந்நூறு பக்க அளவுள்ள ஒரு நூலை அச்சிடுவ தாகக் கொள்ளுவோம். ஆயிரம் படிகள் அச்சிடச் சுமார் பத்தாயிரம் ரூபாய் செலவாகும். ஒரு படியின் அடக்க விலை பத்து ரூபாய் ஆகும். அதே நூலை ஐயாயிரம் படிகளாக வெளியிடச் சுமார் முப்பது ஆயிரம் செலவாகும். ஒரு படியின் அடக்கவிலை ஆறுரூபாய் ஆகும். நல்ல இலாபத்தோடு நூலின் விலையை நிர்ணயிக்கலாம். அவ்வளவும் விற்கவேண்டும்; தக்க விளம்பரமும் அரசின் ஆதரவும் இருக்குமாயின் விரைவில் விற்பனையாகும்.

தாள் தேர்ந்தெடுத்தல்: அச்சுக்குரிய தாள்கள் இன்றைய நிலையில் ஐந்து வகையான அளவுகளில் கிடைக்கின்றன. நூலின் பொருள், பக்க அளவு ஆகியவற்றிற்கு ஏற்ப நூலின் அகல நீளம் அமையுமாறு தாள்களைத் தேர்ந்தெடுதுதல் நல்லது.

ஓர இடைவெளி: ஒவ்வொரு பக்கத்தின் நான்கு ஓரங்களிலும் வெற்றிடம் விடுவது அழகான அமைப்பிற்காக மட்டுமன்று. இடது ஓரம் (முதுகு) தையல் வரும் பக்கம்; 1. 2. செ. மீ. (½") இடம் விட்டால் போதும். தலைப்பக்கம் நூல் தலைப்பு, பக்கஎண் ஆகியவை வரும்; 1.5 செ. மீ. இடம் விடுதல் வேண்டும். வலது ஓரத்தில் குறிப்புகள் எழுதிவைக்கலாம்; கையாளும் பக்கம் ஆதலின் தாள் அழுக்கடையும்; சிதைவுறும்; எனவே 2 செ. மீ. இடம் விடுதல் வேண்டும். அடிப்பக்கம் குறிப்புகளுக்குப் பயன்படுவதோடு கீழே தட்டப்பட்டுத் தேய்வுறும் பகுதி ஆதலின் 2.2. செ. மீ. இடம் விடுதல் வேண்டும். நான்கு பக்கமும் ஒரே அளவு இடம் விடுவது அழகும் பயனும் இல்லாததாகும்.

கட்டமைப்பு: நூலின் சுவர்ச்சியே நூலைப்படிக்கத் தூண்டு கிறது. அக்கவர்சசியானது அகக்கவர்ச்சி, புறக்கவர்ச்சி என இருதிறப்படுகிறது. கையாள வசதியான அளவும், சிறந்த கட்டமைப்பும் புறக்கவர்ச்சியூட்டுவன. அவையே நூலை எடுத்துப் பார்க்கத்தூண்டுவன. எனவே பதிப்பாசிரியர் சிறந்த கட்ட மைப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

நூலைக் கையில் எடுத்துப் பிரிக்கும் போது காணப்பெறும் உட்புறக் கவர்ச்சி நூலைப் படிக்கத்தூண்டுகிறது. எழுத்து வேறு பாடுகளால் அமையும் தெளிவும், அழகான அச்சும் உட்புறக் கவர்ச்சியூட்டுவனவாகும். அதோடு மை மிகுதியாகக் கொட்டாமல் இருத்தல் வேண்டும். மை சரியாகப் படியாமல் எழுத்துத் தெளிவின்றி இருப்பது அழகைக் கெடுக்கும். தேய்ந்த எழுத்து களால் மொத்தையாக விழாமல் ஒரே சீரான தெளிவும் தூய்மையு மான எழுத்துகளால் பதிப்பு அமைவது அழகான அச்சுக்குரிய குணங்களாகும். வரிகள் நெருக்கமின்றி விளங்குவது தெளிவை மிகுதிப்படுத்தும்.

முடிவு : சுவடிப்பதிப்பு என்பது பதிப்பாசிரியரின் அச்சுமுறைக் கண்காணிப்பின் திறத்தினால் சிறப்புற்று விளங்கும். தாள், அட்டை, எழுத்து, கட்டமைப்பு ஆகியவற்றின் உயர்வுகள் பதிப்பு முறையின் ஆழ்ந்த கருத்துகளோடு இணையும் போதுதான் நூல் முழுமையான சிறப்பைப் பெறுகிறது.

இ. நிறைவுரை

சுவடி இயல் என்பது பழந்தமிழரின் கருத்துகளை வெளியில் கொண்டுவரும் ஒரு கலையாகும். அக்கருத்துகள் பொதிந்து கிடக்கும் சுவடிகளைப் படிப்பதற்குப் பல கையெழுத்துகளில் பயிற்சியும், பழைய எழுத்து முறைகளில் தேர்ச்சியும் தேவைப்படு கின்றன. சுவடி இயற் கல்வி இப்பயிற்சிகளைப் பெறத் துணை செய்கிறது. அழியாமற் காக்கும் ஒரு கலையாகவும் விளங்குகிறது.

வழிகாட்டிகள் : பழைய பதிப்பாசிரியருக்குப் புரியாத நிலை யில் துணை எதுவும் இல்லை. புதிய வழிகளைக் காண்பதில் அல்லலுற்றனர். இக்காலப் பதிப்பாசிரியருக்கு அவர்கள் காட்டிய வழிகள் துணைநிற்கின்றன. ஒற்றையடிப் பாதையே யாயினும் தேய்ந்த வழி கிடைக்கிறது. அவ்வழியை நல்ல சாலையாக மாற்றச் சுவடி இயல் பயிற்சி துணை செய்கிறது.

முழுப்பார்வை : சுவடிகளில் காணும் சிக்கல்களைத் தீர்க்க இப்பயிற்சி துணைசெய்கிறது. சுவடியில் காணும் எழுத்து முறை களை அறியவும், சிறந்த பாடங்களைத் தேர்ந்தெடுக்கவும் சுவடி முழுமையும் நோக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது. எழுதுவோரின் கையெழுத்து முறை, பிழை உருவாகும் வகை, கூட்டெழுத்து முறை ஆகியவற்றைத் துணிய, சுவடி முழுமையும் மேற்போக்காகக் காணவேண்டும். ''பல பாடல்களில் ஓடிக்

கிடக்கும் புலவனது கருத்தோட்டத்தைக் காண்பதுகூடத் தெளிவுக்கு நல்லது".[1] நல்ல பாடத்தைத் தேர்ந்தெடுக்கவும் சுவடியின் முழுப்பார்வை தேவைப்படுகிறது.

அந்தாதிமுறை ; சுவடி தேடியும், பிற செயல்களுக்காகவும் வெளியில் செல்லும்போது மாணாக்கர், தாங்கள் மனப்பாடம் செய்த பாடல்களைச் சொல்லிக் கொண்டு செல்வர். ஒருவர் சொல்லிய பாடலின் இறுதிச் சொல்லை முதலாக உடைய வேறு பாடலை மற்றொருவர் சொல்லுவார். இவ்வாறு சொல்லிப் பழகுவது வழக்கம். இம்முறைக்கு ஏற்றதாக மருத்துவம், சோதிடம் ஆகிய நூல்களின் நடை அந்தாதி யாப்பில் அமைந் துள்ளது. பதிப்பில் செய்யுள் தொடர்ச்சியை அறிய இந்த யாப்பு முறை பயன்படுகிறது.

பலவகை ஆற்றல் : பதிப்பு உயர்ந்ததாகவும் பலவகைச் செய்திகள் நிரம்பியதாகவும் உருவாக, பதிப்பாசிரியர் பலவகை நூலறிவு நிரம்பியவராகவும், உலக மரபு அறிந்தவராகவும் விளங்க வேண்டும்; அவ்வறிவு முழுமையாகப் பயன்படுமளவிற்கு நினை வாற்றல் உடையவராகவும் விளங்கவேண்டும். நினைவாற்றல் குறைந்திருப்பினும், தாம் பெற்ற அனுபவங்களைத் தொகுத்து வைக்கும் ஆற்றலுடையவராகவேனும் இருத்தல் வேண்டும். பதிப்பாசிரியர் அறிஞர் பலரையும் நாடிச் சென்று கருத்துகளைத் திரட்டுவதில் முனைப்பு உடையவராதல் வேண்டும். இதனால் பல செய்திகள் பதிப்பில் இடம்பெறுவதோடு பிழையற்ற பதிப்பா கவும் அமையும்.

உரை : நூலுக்கு உரை கிடைக்காத பகுதிகளைப் பதிப் பாசிரியர் நிறைவு செய்யலாம். அப்பகுதிகளை அடைப்புக் குறிக்குள் காட்டவேண்டும். அதேபோல மூலப்பகுதியையும் முழுமைப்படுத்தலாம்.

முன்பதிப்பு : தம்முடைய பதிப்பிற்குமுன் வேறு பதிப்பு களிருப்பின் அவற்றின் தன்மைகளைச் சுட்டிக் காட்டவேண்டும். முன் பதிப்பு இருக்க இப்பதிப்பினைத் தொடங்கிய காரணத்தை யும் சுட்ட வேண்டும்.

படம் : நூல் செய்திகளுக்கேற்பக் கைப்படம் அல்லது நிழற் படங்களை அமைத்து விளக்கம் பெறச் செய்யலாம்.

---

1. ஐவர் அம்மானை, (எடுத்துக்காட்டு), பக். 74.

முதற்குறிப்பு : பாட்டு முதற்குறிப்பு (அகர வரிசையில்) தருவதாயின் பாட்டின் தொடர் எண்ணைக் கொடுப்பதே சிறந்த முறையாகும். இதனால் ஒருபக்கத்தில் இடம்பெறும் பல பாடல் களில் ஒன்றினை எளிமையாகக் காணமுடியும். மேலும் இம் முதற் குறிப்பினை அச்சுக்கு அளிக்கு முன்பே தயாரித்து முழுமையாக்கி விடவும் முடியும். பக்க எண் கொடுப்பதாயின், பக்கங்களாகப் பிரிக்கப்பட்ட அச்சுப்படி வந்தபிறகே செய்ய முடியும்.

விளக்கக் குறிப்பு : பாடலுக்கும் உரைப்பகுதிக்கும் பதிப் பாசிரியர் விளக்கம் கொடுக்க நேர்ந்தால், அவ்விளக்கம் பிற அகராதியையோ நூலையோ பார்த்து அறியுமாறு அமையக் கூடாது, அவ்வாறு அமைந்தால், அந்த நூலின் கருத்தோட்டம் தடைபடும்; கவனம் வேறு நூலில் மாறும்.

சுவடி நிலை : பலவிடங்களில் சிதறிக் கிடக்கும் சுவடிகள் ஓரிடத்தில் திரட்டி வைக்கப் பெறவேண்டும். இதற்கு உரியோர் இரு திறத்தினரேயாவர். பெருஞ் செல்வந்தர் முயன்றால் பெருந் தொகை செலவிட்டு இப்பணியை மேற்கொள்ளலாம். இல்லையேல் அரசு தனிப்பட்ட ஊக்கம் காட்டி இச்செயலை முடிக்கவேண்டும். தமிழ்நாடு அரசு ஊக்கம் காட்டுவதன் மூலம், தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுத்துறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பண்பாட்டுத்துறை ஆகிய நிறுவனங்கள் சுவடி திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளன.

களப்பணியில் கண்ட சுவடிகள் : 1. கோவை மாவட்டத்தில் பலரிடத்திலும் ஒன்றிரண்டு சுவடிகள் உள்ளன. பெரும்பாலும் சிற்றிலக்கியங்கள்; மருத்துவச் சுவடிகள். அறிஞர் ஒருவர் தம் இல்லத்திலிருந்த சுமார் 350 சுவடிகளைப் பேரூர், சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரிக்குக் கொடுத்திருக்கிறார். பலர் 'முன்னோர் சொத்து' என்று கூறிக் கொடுக்க மறுக்கின்ற நிலை காணப்பட்டது.

2. தஞ்சை மாவட்டம், வயித்தீசுவரன்கோயில், சுவாமிமலை ஆகிய இடங்களில் பலரிடம் ஆயிரக் கணக்கான சோதிடச் சுவடிகள் உள்ளன.

1. பூசைமுத்து-சுவடி சோதிடர்
(கோயிலுக்கு அருகில்)
வயித்தீசுவரன்கோயில்.

2. ஜெயராமன்-சுவடி சோதிடர்,
அரசு மருத்துவமனைச் சாலை,
வயித்தீசுவரன்கோயில்.

3. இராமதாஸ்-நாடி சோதிடர்,
வடக்குத் தெரு,
சுவாமிமலை.

ஆகியவை சிலரின் முகவரிகள். மருத்துவமனைச் சாலையில் விளம்பரப் பலகை போடப்பட்டுள்ள சோதிட நிலையங்கள் பல உள்ளன.

சோதிடமுறை : கையின் பெருவிரலைப் பார்த்து-மலர்ச்சுழி-புள்ளி; இரட்டைச்சுழி இருபுள்ளி; நேர்க்கோடு-பலபுள்ளி என்பன போன்ற குறிப்புகளை எடுத்துக் கொள்ளுகிறார்கள். சிறிது நேரங்கழித்து ஒரு சுவடியைக் கொண்டு வருகிறார்கள். நம்மிடமே பல கேள்விகளைக் கேட்டுவிட்டுப் பல ஏடுகளை ஒவ்வொன்றாய்த் தள்ளிவந்து ஓர் ஏட்டில் நின்று இதுதான் உங்கள் சாதகம் என்று முடிவெடுக்கிறார்கள். பிறகு பொதுக் காண்டத்திற்கு ரூபாய் அறுபது என்று பணம் வாங்கிக்கொண்டு பத்து முதல் பதினைந்து வரையிலான பாடல்களை எழுதித் தருகிறார்கள். பிறகு கல்வி, திருமணம், மக்கள் போன்ற காண்டங்களுக்குத் தனித்தனியே ரூபாய் ஐம்பது, நாற்பது என்று வாங்குகிறார்கள்.

நான் நண்பர் ஒருவரை அழைத்துச் சென்று (திரு. செயராம சோதிடரிடம்) அவர்கள் முறையிலேயே பணம் கொடுத்து ஒரு காண்டத்தை எழுதிப் பெற்றேன். நண்பர் என்னைப் பற்றி அவரிடம் கூறிவிட்டார். பிறகு சோதிடர் என்னிடம் சுவடியைக் காட்ட மறுத்துவிட்டார். மீண்டும் ஒருநாள் பூசைமுத்து சோதிடரிடம் சென்றோம். அவ்வாறே எழுதத் தொடங்கினார். அருகில் அமர்ந்து சுவடியைப் பார்க்க முடிந்தது. அவரிடம் என்னைப் பற்றிச் சொல்லவில்லை. மேஷம், குரு, மூன்றில், ஐந்தில் என்பனவாகிய சில சொற்களும் தொடர்களும் அது சோதிடச் சுவடியே என்பதை உறுதிப்படுத்தின. ஆனால் அவர்கள் அதைப்பார்த்து, அதில் உள்ளதை எழுதுவதாகத் தோன்றவில்லை, எழுதுபவர் ஒருமுறை சுவடியை நிமிர்ந்து பார்த்துக்கொள்ளுகிறார். அவ்வளவுதான். இரண்டு மூன்று வரிகளைப் பாடலாகச் சொல்லிக்கொண்டே எழுதிவிடுகிறார்.

இவ்வளவும் அந்தந்தப் பெயருடைய சோதிடர்களே செய்வதில்லை. சுமார் இருபது வயது முதல் பலர் அங்கு பணியாற்று

கிறார்கள். ஒருவர் உள்ளே செல்லும்போது யார் சும்மா இருக்கிறார்களோ அவர்களிடம் பணி ஒப்படைக்கப்படுகிறது.

வடார்க்காடு மாவட்டம் வேலூர், வந்தவாசியை யடுத்த நாவல்பாக்கம் ஆகிய இடங்களில் இதே சோதிடம் நடைபெறு கிறது. நாவல்பாக்கம் சோதிடர் சிறிது உண்மையாக நடந்து கொள்ளுகிறார். நம்முடைய விவரங்களைப் பெற்று வைத்துக் கொண்டு பலநாள் அலைக்கழிக்கிறார். இன்னும் கிடைக்கவில்லை என்று கூறிவருகிறார். இறுதியாக ஒரு சுவடிக் கட்டை எடுத்து வைத்திருந்து, அதில் சில ஏடுகளைப் பிரித்து நம்மிடம் கொடுத்து விடுகிறார். அதுதான் நம்முடைய சோதிடம். நாமே எழுதிக் கொள்ளலாம். அல்லது அங்கு இருக்கும் சுவடி எழுதுவோரிடம் கொடுத்து எழுதிக் கொடுக்கச் செய்யலாம்.

சென்னை, தியாகராயநகர், அகத்தியர் ஆலத்தில் ஒரு அறை ஒதுக்கப்பட்டு 'அகத்தியர் நாடி சோதிடர்' என்னும் பெயரில் சோதிடம் சொல்லப்பட்டு வருகிறது. அங்கு 'மாணிக்கவாசகர் அம்மானை' என்னும் இலக்கியச் சுவடியை வைத்துக்கொண்டு, அதில் சில ஏடுகளைப் புரட்டிச் சோதிடப் பாடல்கள் படித்துக் காட்டப்படுகின்றன. பிறகு விளக்கமும் கூறப்படுகின்றன. ஓய்வு பெற்ற ஐ. ஏ. எஸ். அதிகாரி ஒருவருக்கும். மருத்துவர் ஒருவருக்கும் அந்தச் சுவடியின் நிலையை எடுத்துக் காட்டியிருக்கிறேன். அவர்கள் அந்தச் சோதிடத்தில் மிகுதியாக ஈடுபாடு கொண்டிருந் தார்கள். சென்னையில் இந்த நிலையில் பல இடங்களில் இச் சோதிடம் நடைபெறுகிறது.

இச்சுவடிகள் பயன்பட : சுவடி உரிமையாளர்கள் வாயைப் பிளக்கும் அளவில் பெருந் தொகையைக் கொடுத்து அவற்றைப் பெற்றுவர வேண்டும். எல்லா இடங்களிலும் உள்ளவற்றைத் திரட்டி ஓரிடத்தில் சேர்க்க வேண்டும். அக்கலை வல்லுநர் சிலரையும் அழைத்துப் பணியில் அமர்த்தி, எல்லாவற்றையும் இலக்கணவாரியாகப் பிரித்துத் தொகுத்து வெளியிட்டால் தமிழரின் சோதிடக்கலை பலருக்கும் பயன்படும். அயல்நாட்டவரும் வியக்கும் வண்ணம் அக்கலை சிறப்புற்று நிலைக்கும். இப் பணியைத் தமிழக அரசு, தனியார் நிறுவனம் ஆகியவையே மேற் கொள்ள இயலும்.

திரட்டுதலில் ஆர்வமுள்ளவர்கள் நிறுவனங்களில் நியமிக்கப் பெறுதல் வேண்டும்; அவர்களுக்கு முழு உரிமையும் அளிக்கப்பெற

வேண்டும்; திரட்டுவதோடு பதிப்பிக்க முனைதல் வேண்டும்; பதிப்பிப்பதில் நிறுவனங்களுக்கு உள்ள சிக்கல்கள் அகற்றப்பெற வேண்டும். திரட்டும் சுவடிகள் எல்லாம் ஒரே இடத்தில் வைக்கப் பட வேண்டும் என்னும் கருத்து[2] ஏற்புடைய ஒன்றாகும்.

நுண்நிழற்படம் எடுத்து வைக்கப்பட்டு வேண்டிய பிற நிறுவனங்கள் அவற்றைப் பயன்படுத்தலாம். ஒரே பணியை இருவேறு நிறுவனங்கள் மேற்கொள்ளாதவாறு தவிர்க்கப்படலாம்.

மருத்துவச்சுவடி : சுவடி கிடைக்கும் எல்லா இடங்களிலும் மருத்துவச் சுவடி ஒன்றேனும் இல்லாத இடம் இல்லை எனலாம். கொடுக்க மறுக்கும் அவற்றையும் பெருந் தொகையின் மூலம் பெறலாம். மருத்துவச் சுவடிகளை வகைதொகை செய்து, நோய் வாரியாக, மருந்துவாரியாகத் தொகுத்து வெளியிடுவது, வளர்ந்து வரும் சித்த மருத்துவத் துறைக்குப் பெரிதும் துணையாக இருக்கும். தமிழ்நாடு சித்த மருத்துவக் குழுவின் மூலம், அண்ணா மருத்துவ மனை (சென்னை)யில் இப்பணி தொடங்கப்பட்டுள்ளது. தஞ்சை, சரசுவதி மகால் நூல்நிலையம் 'சரபேந்திர வைத்திய முறைகள்' என்னும் வரிசையில் பல நூல்களை வெளியிட்டு வழிகாட்டியுள்ளது.

பல சுவடிகளிலும் காணப்படும் ஒரு நோய்க்குரிய மருத்துவத் தொகுப்பாக, **'கண் மருத்துவம்'** என்னும் அரிய நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டு இம்முறையில் வழிகாட்டி யுள்ளது. அதேபோல பல சுவடிகளிலும் காணப்பெறும் ஒரு மருந்தின் தொகுப்பாக, 'கற்பங்கள்' என்ற நூலையும் அந்நிறுவனம் வெளியிடவிருக்கிறது. இதுவும் ஒரு வழிகாட்டும் பதிப்பாக விளங்கும்.

தொகுப்புப் பதிப்பு-வழிகாட்டி : சகுனங்களின் பயன், மனை கோலும் முறை, கதவு இலக்கணம், பொருத்த வகைகள், பொருத்தப் பலன்கள் என்ற தலைப்புகளில் தனித்தனியே இருந்த சுவடிகளைத் திரட்டி, வீடு கட்டுவதற்கான அனைத்துச் செயல் களுக்குரிய இலக்கணங்களைத் தொகுத்து **'மனைநூல'** என்னும் பெயரில் ஒரே நூலாக வெளியிட்டுப் பயன்படச் செய்தது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்; தொகுப்புப் பதிப்பு என்ற தலைப்பில் கூறியவாறு பல சிற்றிலக்கியங்களையும் தொகுத்து வெளியிட் டுள்ளது அந்நிறுவனம்.

---

2. எண்பத்தொன்றில் தமிழ், பக். 471.

மெக்கன்சி சுவடிகள் : காலின் மெக்கன்சி திரட்டிய சுவடிகள் 1379 என்பது அரசினர் சுவடி நூலக எண்ணிக்கை. ஆனால் 155 சுவடிகள் கூடுதலாக உள்ளன என்று இராசேந்திரனின் ஆய்வேடு எடுத்துக் காட்டுகிறது.[3] வரலாறு, இலக்கியம், மதம் போன்ற பல துறைகளுக்கான சுவடிகள் சுட்டிக் காட்டப்பெற்றுள்ளன. அவற்றுள் மிகச் சிலவே முழுமையாக வெளியாகியுள்ளன. பிற அனைத்தும் வெளியிடப் பெறாதவை; ஒவ்வொரு துறையிலும் தனித்தனியாக வெளியிடக்கூடிய பல சுவடிகள் உள்ளன. இவை பதிப்பாசிரியருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பெற வேண்டிய வை எனலாம். அதே சமயம் தமிழ்நாடு அரசும் இச்சுவடிகளில் நோக்கஞ் செலுத்த வேண்டும்.

வடசொல் : சுவடிப் பதிப்பில் வழிகாட்டிய அறிஞர் பலரும் நல்ல பல தமிழ்ச் சொற்களுக்கு வடசொல்லில் உரை யெழுதி யுள்ளனர். அது அவர்கள் காலத்து மொழிநிலை எனக்கொண்டு இக்காலத்து அவை தவிர்க்கப்பட வேண்டும். முன்னோர் உரை களுள் சில :

பிறைவடம்	— சந்திரஹாரம்	(சீவகசிந்தாமணி-171)
சூழ்ச்சி	— தந்திரம்	(மேற்படி. 187)
கலம்	— ஆபரணம்	(மேற்படி, 237)
ஐம்பதம்	— சோர்வில் பொருள் — பஞ்சநமஸ்காரம்	(மேற்படி-933, 951)
பிச்சை	— பிக்ஷை	(மணிமேகலை, பதிகம்-62)
உருவிலாளன்	— அநங்கன்	(மேற்படி, 5: 6)
ஊழிமுதல்வன்	— மஹாப்ரஹ்மா	(மேற்படி, 6: 172)
தலைப்படுதானம்	— உத்தமதானம்	(சிலம்பு, 2:3)

பல்லாற்றானும் சிறப்புற வேண்டிய 'சுவடி இயல்' கொள்கை களைப் பதிப்பாசிரியர் பலரும் நுணுகி ஆய்ந்து தரமான பதிப்பு களைக் கொணர்வதில் முனைதல் இன்றியமையாத ஒன்றாகும்.

அரசின் துணை : சுவடிப் பதிப்புகள் வளர, நம் நாட்டைப் பொறுத்தவரை இரண்டு நிலைகளில் அரசின் துணை தேவைப் படுகிறது, ஒன்று பதிப்பில் நிதி உதவி; மற்றொன்று விற்பனையில் உதவி சிறந்த நூல்களைப் பதிப்பிக்கும் திட்டத்தின்கீழ் சுவடிப் பதிப்புகளுக்குத் தாராளமாக நிதி உதவி செய்வது இன்றியமையாத தாகும். அவ் உதவி முறையில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவது

---

3. மெக்கன்சியின் தமிழ்ச்சுவடிகள் ஓர் ஆய்வு, பக். 245.

பயன்தரும். விற்பனை உதவியே பதிப்பாசிரியருக்கு ஊக்கத்தை அளிப்பதாக அமையும்.

பதிப்பின் விலை குறைவிற்காகவும் நல்ல இலாபம் பெறுவதற்காகவும் ஐயாயிரம், பத்தாயிரம் படிகள் வெளியிடத் துணியலாம் என்று கூறப்பட்டது. அவ்வாறு உருவாகும் நூல்களை மாவட்டப் பொது நூல்கங்கள், ஊராட்சி மன்ற நூலகங்கள், பள்ளி. கல்லூரி நூலகங்கள் ஆகிய யாவும் வாங்கவேண்டும் என்ற கட்டாயம் உருவாக வேண்டும்.

சான்றாக, தமிழ்நாட்டின் பொதுநூலக அமைப்பின்கீழ் 1501 நூலகங்கள் பணியாற்றுகின்றன. அவற்றுள் நகரப் பகுதிகளில் உள்ளவை 500-க்கு மேற்பட்டவை. நகரப் பகுதியில் உள்ள கிளைகளுக்கு 2, 3 நூல்கள், பிறவற்றிற்கு ஒருநூல் என்ற திட்டப்படி வாங்கினால் வெளியாகும் ஒவ்வொரு நூலிலும் இரண்டாயிரம் படிகள் உடனடியாக விற்பனை ஆகிவிடும். பிற நூலகங்களின் மூலம் இரண்டாயிரம் படிகள் எளிமையாக விற்பனை ஆக வழி உண்டு. இந்த முறை அரசினரால் கட்டாயப்படுத்தப்படுமாயின் பதிப்பாசிரியர் பெரும் பயன்பெறுவர். பதிப்புகள் தொடர்ந்து வெளியாகும்.

விளம்பரம் : நூலை வாங்கும் எண்ணம் இருப்பினும் நூலைப் பற்றி அறிய இயலாத நிலை இருந்து வருகிறது. நல்ல விளம்பரம் இருப்பின் விற்பனை உயரும்,

> "ருஷ்யர்கள் புத்தகம் என்றால் என்ன விலையானாலும் வாங்கிவிடுவார்கள்... எங்கள் நாட்டில் புத்தகங்களுக்கு அதிக விளம்பரம் செய்கிறோம்" என்னும் மாரத் எஸ்.கிக் மாதுலவ் என்பாரின் கூற்று[4] இங்கு சுட்டத்தக்கதாகும்.

நடைமுறை : அரசினர் சுவடி நூலகத்தில் ஒரு நூலில் 500 படிகளே போடப்பட்டன. விளக்க அட்டவணைகளாயின் 200, 300 என்ற அளவிலேயே அச்சிடப்பட்டன. அதனாலும், அரசு அச்சகக்கட்டுப்பாடுகளாலும், இலாபமில்லாத நிலையிலேயே மிகுதியான விலை நிர்ணயமாயிற்று. மூவருட விளக்க அட்டவணை (1270 பக்கங்கள்) 11 ஆம் தொகுதி ஒன்றின்விலை ரூபாய் 245 என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பல பதிப்புகள் கிராமங்கள் வரைபரவும் செயற்பாடு உருவாகவில்லை. எனவே நாடி சோதிடம் போன்ற சுவடிப்பதிப்புகள், வெளியிடப்பட்டு 25 ஆண்டுகள்

4. கல்கி, 6-8 1978, பேட்டிக்கட்டுரை.

ஆகியும் அவற்றைப்பற்றி, கிராமப்புறங்களில் உள்ள சோதிடர்களுக்கும் தெரியாத நிலை இருந்து வருகிறது. அக்கலையில் ஆர்வமும் நம்பிக்கையும் உடையவர்களில் கிராமமக்களே பெரும்பான்மையினர். அவர்கள் அந்நூல்களைப்பற்றி அறிய நேர்ந்தால் பல்லாயிரம் படிகள் விற்பனை ஆகும். மருத்துவ நூல்களின் வரலாறும் இது போன்றதே.

அரசினர் சுவடிநூலகப் பதிப்புகள் மறுபதிப்பு உருவாகும் வாய்ப்பினைப் பெறவில்லை. எனவே பிற்காலப் பயன்பாட்டிலும் அவை இடம் பெறாமற்போகின்றன. சான்றாக தென்னிந்திய கோயில் சாசனங்கள் என்னும் நூல் மதுரைப் பல்கலைக்கழகப் பாடத்தில் இடம் பெற்றது. மறுபதிப்புகளின்றி, நூல்கிடைக்காமையால் அவ்வாய்ப்பினை இழந்தது.

இவ்வாறான நடைமுறைகளுக்கு மாற்றுச்செயற்பாடுகள் கூறப்பெற வேண்டுவதில்லை. கூறாமலே நடைமுறைகள் மாற வேண்டியவை எனலாம்.

ஈ. தொடர் ஆய்வுகள்

சுவடி ஆய்வு மேற்கொள்ளும் நிலையில் சுவடிகளை இருவகைப் படுத்தலாம். அவை முன்பே குறிப்பிட்டதுபோல 1. ஓலைச் சுவடிகள். 2. தாள் சுவடிகள் என்பனவாகும். தொடர்ந்து ஆய்வு செய்யலாம் என்பதாகக் காட்டப்பெறும் தலைப்புகள் இவ்விரு வகைச் சுவடிகளிலும் மேற்கொள்ள வேண்டியவை என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

1. அச்சாகாத சுவடிகள் — (பொதுநிலை ஆய்வுகள்) அச்சாகாத தமிழ்ச் சுவடிகள் ஆயிரக்கணக்கில் உள்ளன என்கின்றனர். தமிழ்ச் சுவடிகளில் பதிப்பிப்பதற்கு இனி என்ன இருக்கிறது என்ற கருத்தும் சான்றோரிடையே நிலவிவருகிறது. இக்கருத்துகளின் வன்மை மென்மைகளைக் காண்பதே ஒரு தனி ஆய்வாக அமைய இடமுண்டு.

முறையான ஆய்வின்வழி அச்சிடப்பெறாத சுவடிகளை அறுதியிடுவது சுவடிப் பதிப்புகளை மேற்கொள்ளத் துணைபுரிவதாகும். இந்த ஆய்வில் அச்சாகாத சுவடிகள் மிகுதியாகக் கிடைக்கிறது என்ற நிலை ஏற்பட்டால் ஆய்வியல் நெறிகளின்படி ஒரு வரையறையை உருவாக்கிக் கொள்ளலாம். அந்த வரையறையைப் பெருவாரியாக இருவகைப்படுத்தலாம், அதாவது

1. ஒரு குறிப்பிட்ட நூலகத்திலுள்ள அச்சாகாத சுவடிகள்.

2. ஒரு குறிப்பிட்ட பொருள்பற்றிய அச்சாகாத சுவடிகள்.

என்ற அடிப்படையில் வரையறுத்துக் கொள்ளலாம்.

இந்த வகைப் பாட்டு முறையிலும் மிகுதிகாணப் பெறுவதாக இருந்தால். ஒரு குறிப்பிட்ட நூலகத்திலுள்ள, ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிய அச்சாகாத சுவடிகள் எனவும், அந்த ஒரு பொருளிலும் ஒரு உட்பிரிவு பற்றிய சுவடிகள் எனவும் ஆய்வுப் பொருளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள இயலும். சான்றாக,

ஒரு நூலக இலக்கியச் சுவடிகளை ஆய்வு செய்வதானால்,

1. அகப் பொருள் இலக்கியச் சுவடிகள்
2. புறப் பொருள் இலக்கியச் சுவடிகள்
3. புராண இலக்கியச் சுவடிகள்
4. தலபுராணச் சுவடிகள்
5. பக்தி இலக்கியச் சுவடிகள் (ஒரு சமயம் பற்றியவை. பல சமயம் குறித்தவை)
6. சிற்றிலக்கியச் சுவடிகள் (ஒருவகைச் சிற்றிலக்கியம்)

என்ற அடிப்படையில் வரையறுத்துக் கொள்ளுவது தெளிவான ஆய்வுக்குத் துணைபுரியும், இவ்வகை ஆய்வுகள் பொதுநிலை ஆய்வுகளாகும்.

2. சிறப்புநிலை ஆய்வுகள் : பொதுநிலை ஆய்வில் வெளியாகும் சுவடிகள் பலவும் சிறப்புநிலை ஆய்வுக்குரியவை ஆகலாம் இவ்வகையுள் சில.

1. மெக்கன்சி என்பவர் திரட்டிய சுவடிகளில் உள்ள கைபீதுகள், வரலாறுகள், வமிசாவளிகள்போல்வன தனித்தனித் தலைப்புக்குரியன.

2. முழுமை இலக்கியங்களிலிருந்து உருவான ஒருமை இலக்கியங்கள் பல தொகுப்புப் பதிப்பாய்வுத் தலைப்புகளுக்கு உரியவையாகும். சான்றாக, வான்மீகிராமாயணம், கம்பராமாயணம் ஆகிய முழுமை இலக்கியங்களிலிருந்து உருவான குகநட்பு, சடாயு மோட்சம், மூலபலப்போர், விசுவாமித்திரன், வீர அனுமன் போன்ற ஒருமை இலக்கியங்கள் நாட்டுப்புறப் பாடல் அமைப்பை உடையவை; மூலநூல்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்து நுழைவுகளைக் காரண காரியங்களுடன் எடுத்துக் காட்டக் கூடியவையாகும். இதே அமைப்பில் பாரதம், சிலப்பதிகாரம் போன்ற முழுமை இலக்கியங்களின் வழிதோன்றிய ஒருமை இலக்கியங்கள் இடமளிப்பனவாகும்.

3. மருத்துவச் சுவடிகள் பல அச்சாகிவிட்டன என்பர். ஆனால் அவை கூறும் மருந்துப் பொருள்கள் எவை? மருந்தைச் செய்வது எப்படி? துணை மருந்துகள் எவை? மருந்தை எப்படிக் கொடுப்பது? பத்தியம் என்ன? என்பனவற்றை எளிமையாக அறிந்து பயன்படுத்த முடியாத நிலையிலேயே அந்த நூல்கள் வெளியாகியுள்ளன, இம்முறைகளோடு கூடிய தெளிவுப் பதிப்புகளைச் சுவடிப்பதிப்பு ஆய்வை மேற்கொள்ளுவதன் வழிஉருவாக்க முடியும். இவை பயனுள்ள ஆய்வுகளாகும். பல சுவடிகளில் காணும் ஒரு நோய் பற்றிய செய்திகளின் தொகுப்பாய்வுகளும் பயன்தருவனவாகும். அந்தந்தத் துறையின் **வல்லுநர்கள்** இத்தகு ஆய்வுகளில் ஈடுபடுவது பெரிதும் பயன்தருவதாகும்.

4. சோதிடச் சுவடிகள் பல ஆய்வுக்குரியவை. இக்கலை அறிந்தவர் இவ்வகை ஆய்வில் ஈடுபடலாம்.

இத்தகு சிறப்பு நிலை ஆய்வுகளுக்குரியவையாகப் பலவகைச் சிற்றிலக்கியங்கள் பழமைவாய்ந்த பலவகை நாடகங்கள் போன்றவை மிகுந்துள்ளன. தாள் சுவடிகளில் உள்ள பல நூல்களும் இவ்வகையைச் சார்ந்தவையாகும்,

துணை நூல்கள்

1 அகநானூறு-களிற்றுயானை நிரை, ந மு. வேங்கடசாமி நாட்டார் உரை, பாகனேரி காசிவிசுவநாதன் (பதி) கழக வெளியீடு. சென்னை. 1943

2 அகநானூறு - மணிமிடை பவளம், கழக வெளியீடு, சென்னை. 1959

3 அகப்பொருள் விளக்கம் - க. வெள்ளை வாரணன் (பதி) அண்ணாமலைப் பல்கலைக் கழகம். 1977

4 அச்சுக்கலை. மா.சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை - 1. 1976

5 அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை-1. 1980

6 அரசினர் சுவடிநூலக அட்டவணைகள், டி-1-11; ஆர். 1-13, அரசினர் சுவடிநூலக வெளியீடுகள், சென்னை,

7 அரும்பொருள் விளக்க நிகண்டு, எஸ். வையாபுரிப் பிள்ளை(பதி) செந்தமிழ்ப் பிரசுரம்-54, மதுரைத் தமிழ்ச் சங்க முத்திரா சாலை. 1931

8 அனுபோக வைத்திய நவநீதம் திறவுகோல் முதற்பாகம், ஆசிரியர். ஹக்கீம்பா முகம்மது அப்துல்லா சாயபு, அருள் மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு, சென்னை-29. 1975

9 ஆய்வுக்கோவை, தொகுதி-2, பதினான்காவது கருத்தரங்கு, டாக்டர் ச. அகத்தியலிங்கம்(முதலான நால்வர்), இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர். 1982

10 இந்திய நூலக இயக்கம், வே. தில்லை நாயகம், பாரி நிலையம், சென்னை-1. 1978

11 இரட்டைக் காப்பியங்கள், டாக்டர் வ.சுப. மாணிக்கம் (பதி) செல்வி பதிப்பகம், காரைக்குடி. 1958

12 இலக்கிய உதயம் (முதற் பகுதி), (பதி)-3). எஸ். வையாபுரிப் பிள்ளை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5. 1958

13 இறையனார் அகப்பொருள், நக்கீரர் உரையுடன், பவானந்தம்பிள்ளை (பதி), சென்னை. 1916

14 எண்பத்தொன்றில் தமிழ், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், டாக்டர் ந. கடிகாசலம் (பதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113. 1983

15 என் சரித்திரம், டாக்டர் உ.வே. சாமிநாதையர், எஸ். கலியாண சுந்தரம் பதிப்பு, சென்னை. 1950

16 ஏலாதி, கா.ர. கோவிந்தராஜ முதலியார் (பதி), ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை. 1915

17 ஐங்குறுநூறு. ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை உரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம். 1978

18 ஐவர் அம்மானை, டாக்டர் அ. விநாயகமூர்த்தி, பாலமுருகன் பதிப்பகம், மதுரை-11. 1981

19 கப்பல் சாத்திரம், அரசினர் சுவடிநூலக வெளியீடு, சென்னை. 1950

20 கம்பராமாயணம், பாலகாண்டம், வை. மு, கோபால கிருஷ்ணமாச்சாரியர் உரை. (பதி) வை மு. கோபால கிருஷ்ணமாச்சாரியர் கம்பெனி, சென்னை-5. 1973

21 கம்பராமாயணம், அயோத்தியா காண்டம். வை.மு., கோபால கிருஷ்ணமாச்சாரியர் (பதி), வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியர் கம்பெனி, சென்னை-5. 1928

22 கம்பராமாயணம், காண்டம், வை மு. கோபால கிருஷ்ணமாச்சாரியர் (பதி), வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியர் கம்பெனி, சென்னை.5. 1932

23 கம்பராமாயணம், யுத்த காண்டம், வெ. நா. ஸ்ரீநிவாஸயங்கார் (பதி), ஆழ்வார்திருநகர் 1954

24 கலிங்கத்துப்பரணியாராய்ச்சி, மு. இராகவையங்கார், தமிழ்ச் சங்க முத்திரா சாலை, மதுரை. 1925

25 கலித்தொகை, சாமிவிசுவநாதன் செட்டியார் வெளியீடு, கழக வெளியீடு. சென்னை. 1967

26 கலித்தொகை, அநந்தராமையர் (பதி), சென்னை. 1925

27 கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள், புலவர் மு. சண்முகம்பிள்ளை, டாக்டர் இ. சுந்தரமூர்த்தி, சென்னைப் பல்கலைக் கழகம். 1979

28 கல்கி, 6-8-1978, கல்கி காரியாலயம், சென்னை. 1978

29 கல்கி தீபாவளி மலர், கல்கி காரியாலயம், சென்னை, தனிநாயகம் அடிகள்-கட்டுரை. 1958

30 கல்லாடம் மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை. 1963

31 கல்வெட்டு ஓர் அறிமுகம், நடனகாசிநாதன், கு. தாமோதரன, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை-28. 1973

32 கழகப் பொன்விழா மலர், கழக வெளியீடு, சென்னை. (கட்டுரை : முதனூலா? மொழிபெயர்ப்பா) -ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை) 1970

33 களவியற் காரிகை, எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி) சென்னை. 1931

34 கன்னியாகுமரித் தலபுராணம், வை. ரா. அருணாசலக் கவிராயர் (பதி) மதுரை. * *

35 குசேலோபாக்கியானம், முருகேசமுதலியார் (பதி) பண்டிதமித்திர யந்திரசாலை, சென்னை. * *

36 குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு, டாக்டர் உ.வே. சாமிநாதையர் (பதி), -திருப்பனந்தாள் காசி மடத்து வெளியீடு, சென்னை. 1947

37 குறுந்தொகை, (பதி), டாக்டர் உ.வே. சாமிநாதையர் (பதி), கபீர் அச்சுக்கூடம், சென்னை. 1947

38 குறுந்தொகை, திருமாளிகைச் சௌரி பெருமாளரங்கன் புத்துரை, சென்னை- 1915

39 சங்கஇலக்கியம் (பாட்டும் தொகையும்) (பதி. 2) பேராசிரியர் எஸ்- வையாபுரிப் பிள்ளை (பதி) பாரி நிலையம், சென்னை. 1967

40 சதுர் அகராதி, வீரமாமுனிவர், தாண்டவராய முதலியார் (பதி) சென்னைக் கல்விச்சங்க அச்சுக்கூடம். 1824

41 சதுரகராதி வீரமாமுனிவர் செய்த சதுரகராதி, 1860

42 சில கட்டுரைகள், தொகுதி 1, டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை. 1961

43 சிலப்பதிகார மூலமும் அடியார்க்கு நல்லாருரையும், வே. சாமிநாதையர் (பதி), வெ. நா. ஜுபிலி அச்சுக்கூடம். சென்னை. 1892

44 சீவக சிந்தாமணி, (பதி. 2), உ. வே. சாமிநாதையர் பிரசிடென்சி அச்சுக்கூடம், சென்னை. 1907

45 சுசிலவள்ளல் அம்மானை, எஸ். சௌந்தரபாண்டின் (பதி) தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை. 1981

46 சுவடியியல் பயிற்சி-கையேடு, மு. கோ. ராமன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113 1982

47 சூளாமணி, ஸ்ரீமதிருக்மிணிதேவி (பதி). உ.வே. சா. நூலக வெளியீடு, சென்னை. 1954

48 சொல்புதிது சுவை புதிது, டாக்டர் இராம. சுந்தரம், தமிழ் நூலகம், சென்னை. 1978

49 சோழர் வரலாறு, டாக்டர் மா. இராசமாணிக்கனார் சென்னை. 1957

50 டாக்டர் உ. வே. சா. காப்பியப் பதிப்புகள், டாக்டர் இரா. காசிராசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113. 1985

51 டாக்டர் உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள், டாக்டர் குளோறியா சுந்தரமதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113. 1984

52 தமிழாய்வு-தொகுதி, சென்னைப் பல்கலைக் கழகம், (பாரதி தீபம் (பதி), மு. சண்முகப்பிள்ளை) 1980

53 தமிழ்ச்சுடர்மணிகள், (பதி. 3), எஸ். வையபுரிப்பிள்ளை, பாரிநிலையம், சென்னை 1 1959

54 தமிழ்ப் புலவர் வரிசை, மூன்றாம் புத்தகம், கழக வெளியீடு, சென்னை. 1956

55 தமிழ்விடுதூது, உ. வே. சாமிநாதையர் (பதி) கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை. 1930

56 தனிச்செய்யுட் சிந்தாமணி, மு. ரா. கந்தசாமிக் கவிராயர் (தொகு) மதுரை. 1908

57 தனிப்பாடல், கழகவெளியீடு, சென்னை. 1969

58 தனிப்பாடல் திரட்டு, கா. சு. பிள்ளை (பதி) சென்னை * *

59 தனிப்பாடற் திரட்டு, முதற்பாகம், கா. இராமசாமி நாயுடு (பதி), சென்னை. 1908

60 தன்வந்திரி குழந்தைவாகடம், க. லலிதாம்பிகா, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113 1984

61 தாமோதரம் (தொகுப்பு) யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற்பதிப்பு விற்பனைக்கழகம், யாழ்ப்பாணம். 1971

62 திருக்குறள், வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியர் (பதி) வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியர் கம்பெனி சென்னை. 1949

63 திருக்குறள் ஆராய்ச்சிப்பதிப்பு, கி. வா. ஜகந்நாதன் (பதி) ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் வித்யாலயம். 1963

64 திருக்குறள். காளிங்கர் உரை, தொ. பொ. பழனியப்பா பிள்ளை (பதி), சென்னை. 1948

65 திருக்குறள் பரிமேலழகர் உரை, நுண்பொருள்மாலை, டாக்டர் இ. சுந்தரமூர்த்தி (பதி) தேன்மொழி நூலகம். சென்னை. 1980

66 திருக்குறள் மேற்கோள் விளக்கம், டாக்டர் அ. தாமோதரன், தெற்காசியக் கழகம், ஹைடர்பர்க் பல்கலைக்சழகம். மேற்குஜெர்மனி 1970

67 திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும், மு. சண்முகம்பிள்ளை, சென்னைப் பல்கலைக்கழகம் 1971

68 திருக்கோவையார், (பதி 4), ஆறுமுகநாவலர் (பதி), சென்னை. துந்துபி, புரட்டாசி

69 திருத்தொண்டர்ப்புராணம், ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள் 1950

70 திருமயிலை உலா, மு. கோ. ராமன் (பதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113 1983

71 திருமயிலைத் திரிபந்தாதி, உ. வே. சாமிநாதையர் (பதி) கும்பகோணம். சருவசித்து-பங்குனி

72 திருமுருகாற்றுப்படை, எஸ். இ. வீரபாகுபிள்ளை-சுரை, ஒற்றுமை ஆபீஸ், சென்னை-17

73 திருவருட்பாப் பெருந்திரட்டு, கழக வெளியீடு, சென்னை. 1972

74 திருவாசகம், எஸ். ராஜம் வெளியீடு, சென்னை-1 1956

75 திருவாசகம்-சில ஆராய்ச்சிக்குறிப்புக்கள், மு. அருணாசலம், சைவசித்தாந்த மகாசமாஜ அறுபதாண்டு நிறைவுவிழா மலர், சிதம்பரம். 1965

76 திருவாசக வியாக்கியானம், உ. வே. சாமிநாதையர் நூலகவெளியீடு, சென்னை. 1954

77 திருவிளையாடற்புராணம், உ. வே. சாமிநாதையர் (பதி) கேசரி அச்சுக்கூடம், சென்னை. 1927

78 திருவிளையாடற்புராணம் இலக்கிய மதிப்பீடு, டாக்டர் ப. கோபாலன், இலட்சுமி பதிப்பகம் கோவை-8. 1983

79 திருவேங்கடநாதன் வண்டுவிடுதூது, மு. சண்முகம் பிள்ளை (பதி) தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை 1981

80 திவ்யப்பிரபந்தம், திருவாய்மொழி, எஸ். ராஜம் வெளியீடு, சென்னை-1. 1956

81 திவ்யப்பிரபந்தம், முதலாயிரம், எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி), எஸ். ராஜம் வெளியீடு, சென்னை-1. 1955

82 தென்இந்திய வரலாறு, கே. கே. பிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. முதற்பகுதி-மூன்றாம் பதிப்பு 1969
இரண்டாம் பகுதி-இரண்டாம் பதிப்பு ஜன. 1970

83 தேவநேயப்பாவாணரின் சொல்லாய்வுகள், இரா. இளங்குமரன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113. 1985

84 தேவாங்கபுராணம், மாம்பழக்கவிச்சிங்கநாவலர், இ. ஒன்னையகவுடர் (பதி), சென்னை. * *

85 தேவாரம் (பண்முறை) ஞானசம்பந்தர்- T. V. கோபால் ஐயர் (பதி), புதுவை பிரஞ்சு நிறுவனம், பாண்டிச்சேரி. 1984

86 தொல்காப்பியம்-உரைவளம்-நூன்மரபு, ஆ.சிவலிங்கனார் (பதி) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113. 1980

87 தொல்சாப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரை, திரு-அடிகளாசிரியன், தஞ்சாவூர்-2- 1969

88 தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரை. கழக வெளியீடு, சென்னை. 1972

89 தொல்காப்பியம், எழுத்ததிகாரம், எஸ். ராஜம் வெளியீடு, சென்னை. 1957

90 தொல்காப்பியம், சொல், சேனாவரையம், கந்தசாமியார் (பதி)கழக வெளியீடு. சென்னை. 1923

91 தொல்காப்பியம், சேனாவரையர்உரை பேராசிரியர் கு சுந்தர மூர்த்தி (பதி) அண்ணாமலைப் பல்கலைக்கழகம். 1981

92 தொல்காப்பியப் பொருளதிகார முதற்பாகம் (நச்சினார்க் கினியம்) எஸ். கனகசபாபதிபிள்ளை (பதி) சென்னை, 1934

93 தொல்காப்பியப் பொருளதிகாரம், இரண்டாம் பாகம் (பேராசிரியம்), எஸ். கனகசபாபதிபிள்ளை (பதி), சென்னை. 1935

94 நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும், வே.சாமிநாதையர் (பதி), லா. ஜெர்னல் அச்சுக்கூடம், சென்னை. 1918

95 நிஷ்டானுபூதி மூலம், வேலாயுத முதலியார் (பதி), கலைக் கியான விளக்க அச்சுக்கூடம், சென்னை. 1887

96 நினைவு மஞ்சுரி (முதற்பாகம்), (பதி 4) டாக்டர் உ.வே. சாமி நாதையர், தியாகராச விலாச வெளியீடு, சென்னை 1957

97 நீதிநூற்கொத்து, நீதிவெண்பா, கழக வெளியீடு ,சென்னை. 1962

98 நீதிவெண்பா, ஆறுமுகநாவலர், (பதி 3) சென்னை. பரிதாபி-தை

99 நுண்பொருள்மாலை, டாக்டர் இ. சுந்தரமூர்த்தி, தேன் மொழி நூலகம், சென்னை. 1980

100 நைடதம், திரு-வேங்கடாசலமுதலியார் (பதி) சரசுவதி அச்சுக்கூடம், சென்னை, சாலிவாகனம 1763

101 பணவிடுதூது, இரா. நிர்மலாதேவி (பதி) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113. 1980

102 பதிப்புக்கலை, அ. விநயாகமூர்த்தி, பாலமுருகன் பதிப்பகம், மதுரை-11, 1979

103 பதிப்புப்பார்வைகள், டாக்டர் அ. விநாயகமூர்த்தி, பாலமுருகன் பதிப்பகம், மதுரை-625011 1983

104 பதிற்றுப்பத்து, கழக வெளியீடு, சென்னை. 1964

105 பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் வே. சாமிநாதையர் (பதி) திராவிடரத்னாகர அச்சுக்கூடம் சென்னை. 1889

106 பரிபாடல், (பதி-1), கழகவெளியீடு, சென்னை. 1957

107 பழமொழி நானூறு (பதி-2) மா. இராசமாணிக்கம்பிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை. 1954

108 பன்னிருபாட்டியல் (பதி 2), கா. ரா. கோவிந்தராஜ முதலியார் உரை, கழக வெளியீடு, சென்னை. 1949

109 பாண்டியர் செப்பேடுகள் பத்து, தமிழ் வரலாற்றுக் கழகம் சென்னை-14. 1967

110 பாண்டியர் வரலாறு, ம. இராச சேகர தங்கமணி, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை. 1978

111 பாரதி தீபம், மு. சண்முகம்பிள்ளை (பதி), சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை. 1980

112 பாரதியார் கவிதைகள், சக்தி காரியாலயம், சென்னை-6. 1957

113 பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி-1, க. குழந்தை வேலன் (பதி), தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை. 1981

114 பிங்கல நிகண்டு, தி. சிவன்பிள்ளை (பதி), சென்னை. 1890

115 பிரபந்த மரபியல், மு. அருணாசலம் (பதி), அரசினர் சுவடி நூலகம், சென்னை-5. 1975

116 புறநானூறு மூலமும் உரையும், (பதி-2), வே. சாமிநாதையர் (பதி), கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை. 1923

117 புறநானூறு-(பதிப்பு-3), உ. வே. சாமிநாதையர் (பதி), லாஜெர்னல் அச்சுக்கூடம், சென்னை. 1935

118 புறநானூறு, ஔவை சு, துரைசாமிப்பிள்ளை விளக்கவுரை, கழக வெளியீடு, சென்னை. 1968

119 பெரிய திருமொழி, எஸ். ராஜம் வெளியீடு, சென்னை-1. 1956

120 பெரிய புராணம், (பதி 5), சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை. 1937

121 பெரியாழ்வார் திருமொழி, தி. வீரராகவாசார்யன் உரை, வெங்கடேசுவர் அச்சகம், காஞ்சிபுரம் 1958

122 பெருங்கதை, பகுதி-1, கழக வெளியீடு, சென்னை. 1970
பெருங்கதை, பகுதி-5, கழக வெளியீடு, சென்னை. 1972

123 பெருந்தொகை. மு. இராகவையங்கார் (தொகுப்பு), செந்தமிழ்ப்பிரசுரம்-62, மதுரை. 1935-1956

124 பேரூர்க்கோவை, சி. எச். இராமச்சந்திரன் செட்டியார், (பதி) அரசினர் சுவடி நூலகம், சென்னை. 1955

125 மணிமேகலை, காசி விசுவநாதன் செட்டியார், (பதி) கழக வெளியீடு, சென்னை. 1960

126 மதுரைக்குமரனார், (பதி-2) ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, கழக வெளியீடு, சென்னை. 1949

127 மனைநூல், பு. சுப்பிரமணியம், (பதி), உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-113. 1981

128 மனோன்மணீயம், வி. மரிய அந்தோணி, (பதி), பூங்கொடிப் பதிப்பகம், விருதுநகர். 1970

129 மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருக்கோவையார் ஆறுமுக நாவலா (பதி), சென்னை. பிரமாதீச ஆடி

130 மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம், முதற்பாகம், டாக்டர் உ. வே. சாமிநாதையர், சென்னை. 1933

131 முத்தொள்ளாயிரம், கழக வெளியீடு, சென்னை. 1946

132 மதுரை, (நீதிநூற்கொத்து), கழக வெளியீடு, சென்னை. 1960

133 மூலபாட ஆய்வியல், அ. விநாயகமூர்த்தி, பாலமுருகன் பதிப்பகம், மதுரை-11. 1978

134 மெய்க்கீர்த்திகள், பு. சுப்பிரமணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113. 1983

135 யாப்பருங்கலக் காரிகை, கா. ரா. கோவிந்தராஜமுதலியார், (பதி) சென்னை. 1908

136 யாப்பருங்கலக் காரிகை, மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை (பதி), பாரி நிலையம், சென்னை-1. (பதி-2), 1971

137. யாப்பருங்கலம், அரசினர் சுவடி நூலக வெளியீடு, சென்னை. 1960

138 யாப்பியல் ஆய்வுக் கோவை, டாக்டர் ந. வீ. செயராமன், இலக்கியப் பதிப்பகம், சென்னை-18. 1980

139 லண்டன் தமிழ்ச்சங்க ஆண்டு மலர், இலண்டன் தமிழ்ச் சங்கம், ஒப்புரவு அச்சகம், சென்னை-18. 1975-1976

140 விநாயகர் அகவல்-பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை, வீராசாமி செட்டியார் (பதி), பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை. 1936

141 விருத்தப்பாவியல், டி. வீரப்பத்திர முதலியார், தணிகாசல முதலியார் (பதி), சென்னை. 1938

142 வில்லிபுத்தூரார் பாரதம், இரத்தின நாயகர் அண்டு சன்ஸ், சென்னை. 1969

143 வில்லைப் புராணம், உ. வே. சாமிநாதையர் (பதி), கேசரி அச்சுக்கூடம், சென்னை. 1940

144. வீரசோழியம், பெருந்தேவனார் உரையுடன். சி. வை. தாமோதரம்பிள்ளை (பதி), சென்னை. 1895

145. ஸ்ரீகாளத்திபுராணம். வே.சாமிநாதையர் (பதி), வைஜயந்தி அச்சுக்கூடம், சென்னை. 1912

ஆய்வேடுகள்

1 ஐவர் அம்மானை, பதிப்பு முன்னுரையுடன், ஆ. விநாயக மூர்த்தி மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் மதுரை. 1979

2 டாக்டர் உ. வே. சா. பதிப்புப்பணி ஓராய்வு, பூ. சொல் விளங்கு பெருமாள், மதுரை. 1981

3 மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகள் ஓர் ஆய்வு, ம. இராசேந் திரன், சென்னைப் பல்கலைக்கழகம். 1984

துணை நூல்கள் - சுவடிகள் ஓலை/தாள்

1 அகத்தியர் தண்டகம் நூறு, டி. 1883. ஓலை

2 அகத்தியர் வாகடம் (வசனம்) ஆர் 1781. ஓலை

3 அகத்தியர் வைத்தியவல்லாதி அறுநூறு, ஆர். 2281. ஓலை

4 அகராதி, ஆர். 6188. ஓலை

5 அகராதி, நிகண்டு, டி. 4. ஓலை

6 அரும்பொருள் விளக்க நிகண்டு, டி. 2207. ஓலை

7 அல்லிகதை, டாக்டர் இ. சுந்தரமூர்த்தி அவர்களின் சுவடி, சென்னைப் பல்கலைக் கழகம். ஓலை

8 இராமயண வசனம், டி. 381.

9 கோலாகல அரங்கன் சரிதம், உ. த. ஆ. நிறுவனச் சுவடி, சென்னை-113. ஓலை

10 கோலாகல அரங்கன் சரிதம், உ. த. ஆ. நி. தாள் சுவடி சென்னை-113. ஓலை

11 கோலாசல ஸ்தலபுராணம், ஆர்-84. ஓலை

12 கபிலை வாசகம், டி. 388-391. ஓலை

13 கப்பல் சாஸ்திரம், டி. 1996. தாள்

14 கலித்தொகை, டி. 210 ஓலை

15 களவியற் காரிகை, ஆர். 435, தாள்

16 கௌளக் குறவஞ்சி ஆர். 2570. ஓலை
கௌளக் குறவஞ்சி, ஆர்- 5594. தாள்

17 சிற்ப சாத்திரம், ஆர். 243. ஓலை
சிற்ப சாத்திரம், ஆர். 1021. தாள்

18 சூடாமணி நிகண்டு, டி. 19. ஓலை

19 செஞ்சிராசாக்கள்கைபீது, டி. 3819. தாள்

20 செஞ்சிராசாக்கள் கைபீது, மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகள் ஓர் ஆய்வு, (ஆய்வேட்டிலிருந்து)

21 சேந்தன் திவாகரம், டி. 28-31. ஓலை

22 தன்வந்திரி நிகண்டு முன்னூறு, ஆர். 145. ஓலை

23 திருச் சிற்றம்பலக்கோவையார் பேராசிரியருரையுடன், டி. 1169-1176. ஓலை

24 நல்லாப்பிள்ளை பாரதம், டி. 2101. ஓலை

25 நல்லாப்பிள்ளை பாரதம் ஆர். 239. ஓலை

26 நீதிவெண்பா, டி. 2283. ஓலை

27 நீலியட்சகானம், டி. 505. ஓலை

28 பரிபூரணசித்தி, டி. 1574. ஓலை

29 பாகவதகாரம், டி. 430. ஓலை

30 பாகவதவசனம், டி. 432. ஓலை

31 பொம்மை நாயகன் கைபீது, டி. 2740 ஓலை

32 மதுரைச் சொக்கேசர் திருவிளையாடற்பயங்கர மாலை டி. 2227. ஓலை

33 மருத்துரந்தாதி, டி. 263. ஓலை

34 மனைநூல், ஆர். 5951. தாள்

35 மேரிகருதம்மாள் அம்மானை, டி. 2050. ஓலை

36 வில்லிபுத்தூரார் பகாபாரதம், கிருஷ்ணன் தூதுச் சருக்கம், டி. 2102. ஓலை

ஆங்கில நூல்கள் :

1 Art and Error – Ronald Gottesman and Scott Bennett (ed) Methuen & Co Ltd , London. 1973

2 Chambers Twentieth Century Dictionary

3 Introduction to Indian Textual Criticism, (2 Edn.) S.M. Katre, POONA, 1954

4 Journal of Tamil Studies, International Institute of Tamil Studies, Madras 113. December, 1980.

5 Mahabharata, The Bhandarkar Oriental Research Institute, POONA. 1923

6 Manuscripts and their preservation, Govt. Oriental MSS. Liberary, Madras.

7 Pudukkottah Inscriptions

8 Report on a research for Sanscrit and Tamil Manuscripts for the year 1896-97—M. Seshagiri Sastri. Govt. Press Ms. 1898

9 South Indian Inscriptions, Vol. II., Part III.

10 South Indian Inscriptions, Vol. III., Part II

11 South Indian Inscriptions, Vol. 17.

12 Tamil Civilization, Vol 2 No. 1.
Quarterly Research Journal of the Tamil University, March, 1984

13 The Encyclopaedia Americcana

14 The Encyclopaedia Britannica, Vol. xviii 11th Edn, 1911

15 The Random House Dictionery

கலைச்சொற்கள் :

அகஅமைப்பு	Internal Structure
அகச்சான்று	Internal evidence
அகநிலை ஆய்வு	Internal Research
அகரவரிசை அட்டைகள்	Alphabetical Index Cards
அச்சாகாத சுவடி	Unpublished Manuscript
அச்சிடுபவர்	Printer
அச்சுக்கோப்பவர்	Compositor
அச்சுத்தாள் (மெய்ப்பு)	Proof
அச்சுத்தாள் திருத்துதல்	Proof Correction, Proof reading
அச்சுப்படி	Press copy
அச்சுப்பிழை	Error Printing
அச்சுப்புள்ளி	Printing point
அடிக்குறிப்பு	Foot-note
அடிக்கோடு	Under line
அடைப்புக்குறி	Brocket
அட்டவணை	Catalogue
அட்டை உறை	Jacket
அணிந்துரை	Preface
அண்மைப்படி	Immediate transmitted copy
அதிகாரபூர்வம்	Authenticity
அம்புக்குறி	Arrow Mark
அரசினர் சுவடி நூலகம்	Oriental Government Manuscripts Library
அரைப்புள்ளி	Semicolon
ஆசிரியர் பெயர் வரிசை	Author Index
ஆய்வடங்கல்	Bibiliography
ஆராய்ச்சிப் பதிப்பு	Critical edition
ஆவணக்கடிதம்	Letter document
இசையோடு கூடிய கதை	Ballad
இடைச்செருகல்	Interpolation
இடைவிடுகை	Lipography, Parablepsia
இணைகோடு	Hyphen
இதிகாசம்	Ancient History
இந்திய அரசுப்பணி	Indian Civil Service
இந்திய அலுவலக நூலகம்	India Office Library
இயல்தலைப்பு	Chapter heading
இயல்	Chapter

இரசவாதம்	Alchemy
(இரட்டை) மேற்கோள்	Quotation mark
இராமபாணம்	White—ants
இருப்புப்பதிவேடு	Stock Register
இன்மைவழி	Method of Omission
உடுக்குறி	Star Mark
உணர்ச்சிக்குறி	Exclamation mark
உண்மைப்பாடம்	Text
உண்மைவழி	Method of Similarity
உரைநடை	Prose order
உரையுடன் உள்ள சுவடி	Manuscripts with commentary
உரை	Commentary
உரோமர்	Roman
உளவியல்	Psychology
எண்	Number
எண்ணிக்கை	Calculation
எழுத்தாணி	Style
ஏடு	Leaf, Manuscript
ஏட்டுஎண்	Folio number
ஏட்டுப்பிரதி	Manuscript
ஒத்தல்வழி	Method of similarity
ஒப்பிடுதல்	Comparing
ஒலிஒத்தபிழை	Syllable Corruption, itacism
ஒற்றைமேற்கோள்	Mono quotation
ஓரஇடைவெளி	Margin
ஓலை	Palm-Leaf
ஓலை எழுதுவோர்	Scribes
கட்டமைப்பு	Binding, get up
கட்டு	Bundle
கட்டு எண்பதிவேடு	Bundle number Register
கரும்பலகை	Slate
கரையான்	White ant
கலைச்சொற்கள்	Technical Terms
கல்	Stone
கல்வெட்டு	Inscriptions
கவர்னர் ஜெனரல்	Governar General
களப்பணி	Field Work
களிமண்பலகை	Clay-plate

காத்தல்	Preservation
காலின் மெக்கன்சி	Colonel Colin Mackenzie
காற்புள்ளி	Comma
கி.பி.	Anno Domini
கி.மு.	Before Christ
கிரந்த எழுத்து	Grontha Script
கிரேக்கர்	Egypts
கிழக்கிந்தியக் கம்பெனி	East Indian Company
கீழ்வழி ஏடுகள்	Lineal descendant
குழப்பம்	Confusion
குறியீட்டுப்பட்டி	List of symbol
குறையான சுவடி	Incomplete Manuscript
கூட்டெழுத்து	Compound Script or Compound letter
கூந்தற்பனை	Srishalam—Leaf
கூர்ந்துஆய்தல்	Scrutiny
கொச்சைச்சொல்	Colloquial word Colloquial
கோடக்ஸ்	Codex
சமஸ்கிருதம்	Sanskrit
சாசனவியல்	Diplomatics
சிக்கல்	Problem
சித்தமருத்துவம்	Siddha medicine
சிறுகோடு	Dash
சீர்மை	Consistency
சுருக்கக்குறிப்பு	Abbreviation
சுவடி	Manuscript
சுவடி இயல்	Manuscriptology
சுவடிக் குறிப்பு	Colophon
சுவடித் தலைமுறை	Genealogy of Manuscript
சுவடி வேறுபாடு	Variant
சுவடு	Trace
செ. மீ.	C.M. Centimetre
செப்பேடு	Copper plate
சேர்க்கைப் பதிவேடு	Accession—Register
சேர்க்கைவழி	Method of additions
சொல்லடைவு	Word Index
சோதிடம்	Astrology
தகவல்பட்டி	Bibliographical Data

தக்காணக் கல்லூரி	Deccan College
தலைப்பு	Title
தலைமுறை	Genealogy
தற்செயலாக நிகழும் வேறுபாடு	Accidental Varient
தனியார் நிறுவனம்	Private Institution
தாலாட்டுப் பாடல்	Lullaby
தாள்	Paper
தாள்சுவடி	Paper Manuscript
திங்களேடு	Monthly Magazine
திரட்டுதல்	Collection
தூயபடி	Clean copy
தூரிகை	Brush
தெரிந்து செய்யும் வேறுபாடு	Voluntary Corruption
தேசிய நூல் நிலையம்	National Library
தொகுதி	Volume
தொகுப்பாசிரியர்	Compiler
தொகுப்புப்பதிப்பு	Compilation
தொடர்எண்	Serial Number
தொடர்கோடு	Hyphen
தோத்திரப்பாடல்	Hymn
நடை	Style
நாணல்குச்சி	Reed
நாளேடு	Daily News Paper
நிழற்படம்	Photo
நிறுத்தற்குறி	Punctuation
நிறுவனம்	Institution
நுண்நிழற்படம்	Micro Film
நூலக எண்	Reference number of the Library
நூலாசிரியர்	Author
நூல் கொள்கை	Principles
நூல் தலைப்பு	Title of the Book
நூல்பெயர் வரிசை	Title Index
நூல் வெளியீட்டாளர்	Publisher
பக்கஎண்	Page Number
பக்கக்கோடு	Margin
பக்திப்பாடல்	Hymn
படி	Copy

படியெடுக்கப்பட்ட சுவடி	Restored Copy Restored Manuscript
படியெடுப்போர்	Copyiest, Transcriber
படிவம்	Autograph
பட்டறிவு	Experience
பதிப்பாசிரியர்	Editor
பதிப்பித்தல்	Editing
பதிப்பு	Edition
பதிப்புக்கலை	A rt of Editing
பதிப்புரை	Edltorial
பதிவேடு	Register
பதுங்கியுள்ள சுவடிகள்	Concealing Manuscripts
பத்தித் தலைப்பு	Paragraph heading
பைபரஸ்	Papyrus
பயிற்சி நூல்	Work book
பழைய பதிப்பு	Old Edition
பனை	Palm—Tree
பாடபேதம்	Variants
பாடவேறுபாடு	Variants
பாதுகாத்தல்	Preserve
பாய்	Mat
பிப்லியன்	Biblion
பிரஞ்சு நிறுவனம்	French Institution
பிரதி	Copy
பிரிட்டானியா பேரகராதி	Encyclopaedia Britannica
பிரௌன் சி.பி.	C.P. Brown
பிழை திருத்தம்	Errata
பிறைவளைவு	Brocket
பிற்காலப் பதிப்பு	Latest Edition
புவியியல்	Geography
புள்ளி	Consonant
புறஅமைப்பு	External Structure
புறச்சான்று	External evidence, Extrinsic
புறநிலை ஆய்வு	External Research
புனிதநூல்	Sacred Book
பேச்சுமொழி	Colloquial Language
பேப்பர்	Paper
பைபிள்	Bible

பொருள்	Subject
பொருள்வாரி அகரவரிசை	Subject Index
பொன்தகடு	Gold Plate
மரபுச் சொல்	Traditional word
மருத்துவர்	Doctor
மருத்துவச் சுவடி	Medical Manuscript
மறுஅச்சு	Re-Print
மறுபதிப்பு	Re-Edition
மாந்திரீகம்	Magic (Witch craft)
மாவட்ட ஆட்சியாளர்	District Collector
மிகை	Additions
முகப்புப் படம்	Cover Picture
முக்காற்புள்ளி	'Colon'
முடிவுரை	Conclution
முதல் நிலை	First Stage
முதல் நூல்	Original Work
முதுகு	Back
முறிச்சீட்டு	Written Bond
முற்றுப்பெற்ற சுவடி	Completed Manuscript
முன்னுரை	Preface (Introduction)
முன்னோடி	Pioneer
மீட்டுருவாக்கம்	Reconstruction
மூலச்சுவடி	Autograph
மூலநூல் சுவடி	Original Manuscript
மூலநூல்	Original Text
மூலபாட ஆய்வியல்	Textual Criticism
மூலபாடம்	Text
மூலப்படி	Original Copy
மூலம் மட்டும் உள்ள சுவடி	Only Text (Manuscript)
மெக்கன்சி சுவடி	Mackenzie Manuscript
மேலட்டை	Wrapper
மேலாளர்	Manager
மேற்கோள்	Quotation
மேற்கோள் குறி	Quotation Mark
மைகொட்டுதல்	Ink—Over Flow
மொழி நடை	Language Style
மொழி பெயர்ப்பாசிரியர்	Translator

யாப்பு	Prosody
யூகமூல ஏடு	Archetype
ராண்டம் அவுஸ் அகராதி	Random House Dictionary
லார்டுமிண்டோபிரபு	Lord MinTTo
டாக்டர் லெய்டன்	Dr. Leidon
வடமொழி	Sanskrit
வட்ட ஆட்சியர்	Thasildar
வரவுப் பதிவேடு	Accession Register
வல்லுநர்	Specialisi
வழி ஏடுகள்	Intermediary Copy
வழிகாட்டிகள்	Guides
வாய்வழிப் பாடம்	Oral transmission
வாரஏடு	Weekly Magazine
வானவியல்	Astronomy
விடுகை	Omission
விடுகைவழி	Method of Omission
வில்சன்	Wilson
விவிலிய நூல்	Bible
விழுக்காடு	Percentage
விளக்க அட்டவணை	Descriptive Catalogue
விளக்கக் குறிப்பு	Explanation
விளக்கப் படங்கள்	Explanatary Pictures
விளம்பரம்	Advertisement
வினாக்குறி	Question Mark
வெள்ளித்தகடு	Silver plate
ஜாலம்	Tricks
ஜாவா	Jawa

இணைப்பு

அச்சுப்படி - திருத்தக்குறிப்புகள்

1 பத்தி தொடங்குக

2 பத்தி வேண்டாம்

3 நீக்குக

4 சிறுகோடு போடுக

5 ஸ்பேசை அழுத்துக

6 ஒரு எம் ஸ்பேஸ் போடுக

7 நான்கு எம் ஸ்பேஸ் போடுக

8 உடைந்த எழுத்தை மாற்றுக

9 தவறான அளவு எழுத்தை மாற்றுக

10 எழுத்தைத் தலைகீழாகப் போடுக

11 வரியைத் தொடர்ச்சியாக்குக

12 சொற்களை நெருக்கமாக்குக

13 சொற்களைப் பிரிக்க

14 விடுபட்டதைச் சேர்க்க

15 எழுத்தை முன், பின் இடம் மாற்றுக

16 மேற்கோள்குறி சேர்க்க

17 ஒற்றை மேற்கோள் சேர்க்க

18 காற் புள்ளி சேர்க்க

19 அரை புள்ளி சேர்க்க

20 முற்றுப் புள்ளி சேர்க்க





21 வினாக்குறி சேர்க்க

22 அடைப்புக்குறி சேர்க்க

23 இடைவெளி சம மாக்குக

24 வரியை நேராக்குக

25 அடிக்குறிப்பு எண் தூக்குக

26 அடிக்குறிப்பு எண் சேர்க்க

27 இறங்கி இருப்பதைத் தூக்குக

28 ஏறி இருப்பதை இறக்குக

29 வலப்புறம் நகர்த்துக

30 இடப்புறம் நகர்த்துக

31 மூலப்படி பார்க்க — See Copy

32 உள்ளதை மாற்ற வேண்டாம் — Stet

33 முன்வரிக்கு மாற்றுக — to

34 பெரிய தலைப்பெழுத்து போடுக (ஆங்கிலம்) — Caps

35 மேல்தட்டு தலைப்பெழுத்தாக்குக — uc

36 கீழ்த்தட்டு தலைப்பெழுத்தாக்குக — lc

37 ரோமன் எழுத்தாக்குக — rom

38 சாய்வெழுத்தாக்குக — italics

39 பிற குறிப்புகளை - ஆங்காங்கு எழுதி அனுப்புதல் வேண்டும்

40 தலைப்பில் அச்சகத்திற்கு - என்று குறிப்பிட்டு வேண்டிய கருத்துகளைத் தனித்தாளில் எழுதி அனுப்பலாம்

இணைப்பு—2

கி.பி. ஆண்டுக்கு மாற்றும் முறை[1]

1	கலியுகம்	—	கி.மு. 3152இல் தொடங்குகிறது
2	புத்தர் ஊழி	—	கி.மு. 544இல் தொடங்குகிறது
3	மகாவீரர் ஊழி	—	கி.மு. 527இல் தொடங்குகிறது
4	விக்கிரமாதித்ய ஊழி	—	கி.மு. 57இல் தொடங்குகிறது
5	சகஊழி (சாலிவாகனசகம்)	—	கி. பி. 78இல் தொடங்குகிறது
6	இஜிராஊழி	—	கி. பி. 622இல் தொடங்குகிறது
7	பர்மியஊழி	—	கி. பி. 630இல் தொடங்குகிறது
8	கொல்லம் ஆண்டு	—	கி. பி. 824இல் தொடங்குகிறது
9	சாளுக்கிய ஊழி	—	கி. பி. 1076இல் தொடங்குகிறது
10	பசலிஊழி (அக்பரால் தொடங்கப்பட்டது.)	—	கி. பி. 1556இல் தொடங்கப்பட்டது

விளக்கம்

கலியுக ஆண்டு 4200 என்பது—4200—3152=48
கி.பி. 48 ஆகும்.

கலியுக ஆண்டு 2500 என்பது—2500—3152=652.
கி.மு. 652 ஆகும்.

சக ஆண்டு 250 என்பது—250+78=328
கி.பி. 328 ஆகும்.

கொல்லம் ஆண்டு 520 என்பது—520+824=1344
கி.பி. 1344 ஆகும்.

---

1. இந்திய நூலக இயக்கம், பக். 41-43.

இணைப்பு-3. எண்கள்

1 ௧	௰ - 10	101 - ௱௧
2 ௨	௨௰ - 20	110 - ௱௰
3 ௩	௩௰ - 30	120 - ௱௨௰
4 ௪		
5 ௫		245 - ௨௱௪௰௫ = என்பது ஒருமுறை
6 ௬		
7 ௭	௱ - 100	௨௪௫ = என்பது ஒருமுறை
8 ௮	௲ - 1000	
9 ௯		

4235 = ௪௲௨௱௩௰௫ = என்பது ஒருமுறை ௪௨௩௫ - என்பதும் காணப்படுகிறது.

இணைப்பு—4

பதிப்பு விவரப்பட்டி

நூலின் பெயர்	:	பிரபந்தத்திரட்டு
நூலாசிரியர்	:	—
பதிப்பாசிரியர்	:	டாக்டர் அன்னிதாமசு
வெளியிடுவோர்	:	உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை-600 113
வெளியீட்டு எண்	:	28
மொழி	:	தமிழ்
பொருள்	:	இலக்கிய வகைகளுக்குரிய இலக்கணம்
வெளியிட்ட நாள்	:	டிசம்பர், 1980
தாள்	:	18.2 கி.கி.
அளவு	:	21 × 14 செ.மீ.
பக்கங்கள்	:	16 + 382.
அச்சுஎழுத்து அளவு	:	10, 12 புள்ளி
படிகளின் எண்ணிக்கை	:	1200
விலை	:	ரூ. 16/-
அச்சகம்	:	நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600 014
கட்டமைப்பு	:	அட்டைக்கட்டு
ஓவியர்	:	அமுதோன்
பிற சிறப்பு	:	சுவடிப்பதிப்பு

இணைப்பு—5

சுவடிப் பதிப்பு—பதிப்பாசிரியர்கள்

சங்க இலக்கியங்களின் முதல பதிப்பாசிரியர்கள்

1	சிவை. தாமோதரம் பிள்ளை	கலித்தொகை	1887
2	உ.வே. சாமிநாதையர்	பத்துப்பாட்டு	1889
3	உ.வே. சாமிநாதையர்	புறநானூறு	1894
4	உ.வே. சாமிநாதையர்	ஐங்குறுநூறு	1903
5	உ.வே. சாமிநாதையர்	பதிற்றுப்பத்து	1904
6	பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்	நற்றிணை	1914
7	தி.ஸௌ. அரங்கனார்	குறுந்தொகை	1915
8	உ.வே. சாமிநாதையர்	பரிபாடல்	1918
9	கம்பர் விலாசம் இராசகோபால ஐயங்கார்	அகநானூறு	1920

	பிற நூல்களைப் பதிப்பித்தவர்கள்	(ஆண்டு ஒருநூல் பதிப்பை அடிப்படையாகக் கொண்டது)	
1	மலையப்பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசன்	திருக்குறள் மூலபாடம்	1812
2	தாண்டவராய முதலியார்	சதுரகராதி திவாகர நிகண்டு	1824
3	இராமச்சந்திர கவிராயர்	நன்னூல், நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை	1835
4	திருத்தணிகை-சரவணப் பெருமாளையர்	திருவாசகம், திருக்குறள், அருணகிரியந்தாதி	1830
5	அ. முத்துசாமிப் பிள்ளை (தாண்டவராய முதலியாருடன்)	நன்னூல் மூலம் நம்பியகப் பொருள்	1835
6	புதுவை நயனப்ப முதலியார்	தஞ்சைவாணன் கோவை, நேமிநாதம்	1836
		திவாகர நிகண்டு, சூடாமணி நிகண்டு	1839
		நாலடியார்	1844
7	யாழ்ப்பாணத்து நல்லூர் சதாசிவப் பிள்ளை	திருவாசகம்	1839
8	முகவை ராமானுசக் கவிராயர்	திருக்குறள் வெள்ளுரையும் புத்துரையும்	1840
		ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன்	1845

9	களத்தூர் வேதகிரி முதலியார்	நாலடியார், நைடதம்	1840
10	செய்கு அப்துல் காதிரு நயினார்	சீறாப்புராணம்	1842
11	மழவை மகாலிங்க ஐயர்	தொல், எழுத்து, அருணாசலபுராணம்	1848
12	கோமளபுரம் இராச கோபாலப் பிள்ளை	கம்ப ராமாயணம்	1850
13	திருசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை	செல்வந்திப் புராணம்	1851
14	சி. வை. தாமோதரம் பிள்ளை	நீதிநெறி விளக்கம், வீரசோழியம் முதலான 13 நூல்கள்	1852
15	யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர்	திருக்குறள், நன்னூல், பாரதம், சிவஞானசித்தியார்	1853
16	சிவக்கொழுந்து தேசிகர்	திருவாசகம்	1857
17	காஞ்சீபுரம் சி.எஸ். சபாபதி முதலியார்	சைவத் திருமுறைகள்	1864
18	முடிச்சூர் அப்பாவு முதலியார்	நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்	1865
19	பாண்டித்துரைத் தேவர்	பன்னூற்றிரட்டு	1865
20	மு. இராகவையங்கார்	பெருந்தொகை	1866
21	ப. அரங்கசாமிப் பிள்ளை	சீவக சிந்தாமணி பதுமையாரிலம்பகம்	1868
22	சோடசாவதானம் சுப்புராய செட்டியார்	சிலப்பதிகாரம், புகார்க் காண்டம்	1872
23	தி. ஈ. ஸ்ரீ ஸ்ரீநிவாசராகவாசாரி	சிலப்பதிகாரம், புகார்க் காண்டம்	1876
24	உ.வே. சாமிநாதையர்	சீவக சிந்தாமணி முதலான 74 நூல்கள்	1887
25	தி. சிவன் பிள்ளை	பிங்கல நிகண்டு, பரத சூடாமணி	1890
26	திருமாளிகைச் சௌரிப் பெருமாளரங்கன்	குறுந்தொகை	1895
27	திருத்தணிகை விசாகப் பெருமாளையர்	திருக்கோவையார், பிரபுலிங்கலீலை, குறள்	1897

28	த. கனகசுந்தரம் பிள்ளை	பன்னிரு படலம்	1900
29	திருமயிலை சண்முகம் பிள்ளை	சிலப்பதிகாரம்	1901
30	வ. உ. சிதம்பரம் பிள்ளை	திருக்குறள்	1910
31	ச. பவாநந்தம் பிள்ளை	தொல்காப்பியம் முதலான பல நூல்கள்	1930
32	ச. வையாபுரிப் பிள்ளை	களவியற்காரிகை முதலான 40 நூல்கள்	1950
33	மு. சண்முகம் பிள்ளை	பாரதி தீபம் முதலான பல நூல்கள்	1970
34	டாக்டர் இ. சுந்தரமூர்த்தி	நுண்பொருள் மாலை, உபமான சங்கிரகம்	1978
35	டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்	குவலயானந்தம், கூவநூல், பிரபந்ததீபம்	1979
36	டாக்டர் அ. தாமோதரன்	நன்னூல், கூழங்கைத் தம்பிரான் உரை	1980
37	டாக்டர் அன்னிதாமசு	பிரபந்தத்திரட்டு	1980
38	மு. அருணாசலம்	சேயூர் முருகன் உலா, பொய்யாமொழியீசர் குறவஞ்சி, பிரபந்த மரபியல் முதலான பல நூல்கள்	1980
39	டாக்டர் ச. சிவகாமி	திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ்	1980
40	இரா. நிர்மலாதேவி	பணவிடுதூது	1980
41	டாக்டர் ஏ. என். பெருமாள்	சின்னமகிபன் குளுவநாடகம், கும்மிப் பாடல்கள்	1980
42	டாக்டர் த. வே. வீராசாமி	தந்திவனப்புராணம்	1981
43	பூ. சுப்பிரமணியம்	மனைநூல்	1981
44	டாக்டர் ம. இராசேந்திரன்	காதல் கொத்து	1981
45	செ. இராசு	கொடுமணல் இலக்கியங்கள்	1981
46	எஸ். சௌந்தரபாண்டியன்	சுசீலவள்ளல் அம்மானை	1981
47	இரா. மாதவன்	மீனாட்சியம்மன் திருப்புகழ், கண் மருத்துவம்	1981
48	த. அழகப்பராசு	ஊஞ்சல் இலக்கியம்	1982
49	க. லலிதாம்பிகா	தன்வந்திரி குழந்தை வாகடம்	1984
50	ஜான் செல்வராஜ்	வர்ம சூத்திரம்	1984

இணைப்பு—6

தமிழ்ச்சுவடிகள் உள்ள இடங்கள்

1	அரசினர் சுவடி நூலகம், சென்னை	14,854
2	உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113—சுமார்	400
3	கல்கத்தா தேசிய நூலகம், கல்கத்தா	335
4	சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்	2,122
5	சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி, பேரூர்-சுமார்	350
6	சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், சென்னை ,,	600
7	டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகம், திருவான்மியூர்	3,143
8	தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்—சுமார்	4,650
9	திருவனந்தபுரம் பல்கலைக்கழகச் சுவடி நூலகம், திருவனந்தபுரம்	3,281
10	பிரமஞானசபை நூல் நிலையம், அடையாறு	...
11	புதுவை பிரஞ்சு நிறுவனம், பாண்டிச்சேரி—சுமார்	1,000
12	வெங்கடேசுவரா கீழ்த்திசைமொழி ஆராய்ச்சி நிறுவன நூலகம், திருப்பதி	1,181
13	ஆந்திரப் பல்கலைக்கழகம், விசாகப்பட்டினம்	...
14	உஸ்மானியா பல்கலைக்கழகம், ஐதராபாத்	...
15	கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு	...
16	கள்ளிக்கோட்டைப் பல்கலைக்கழகம், கள்ளிக்கோட்டை	...
17	காசிமடம், திருப்பனந்தாள்	...
18	சங்கராச்சாரியார் சுவாமிகள் மடம், காஞ்சிபுரம்	...
19	தருமபுர ஆதீனமடம், மாயவரம்	...
20	திருவாவடுதுறை ஆதீனமடம், திருவாவடுதுறை	...
21	மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை	...

---

1. இருப்புப் பதிவேடுகள். டி. எண் & ஆர். எண். ஷி நூலகம்.
3. கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள், சென்னைப் பல்கலைக்கழகம், 1979. 4. விளக்க அட்டவணைகள், தொகுதி 1-3. ஷி நூலகம்.
7. விளக்க அட்டவணைகள், தொகுதி 1-5, ஷி நூலகம்.
9. தமிழ்ச்சுவடிகள் அட்டவணை — உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113.

12 An Alphabetical Index of Sanskrit, Telugu and Tamil Manuscripts, Sri Venkateswara Oriental Research Institute Library, Tirupati.

22	மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை	...
23	East India Collection of Tamil MSS. Mysore	63
24	India Office Library, London 1-34	34
25	Wellcome Medical Research Institute, London 35-36	2
26	British Museum, London 37-135	99
27	The Library of the Royal Asiatic Society, London 136-172	37
28	The Library of the Edinburgh University-173-178	6
29	National Library of Scotland, Edinburgh. 179-182	4
30	Huntanian Library of Glascow University. 183-192	10
31	John Rylands Library, Manchester. 193-203	11
32	The Library of Cambridge University. 204-223	20
33	Bodleian University, Oxford.	...

In the Verious Cities in :

34	Austria	9	35	Belgium	4
36	Czechoslovakia	3	37	England	59
38	Federal Republic of Germany	31			
39	Finland	2	40	France	37
41	German Democratic Republic	14			
42	Italy	26	43	Netherland	6
44	Norway	9	45	Poland	1
46	Portugal	17	47	Republic of Ireland	15
48	Scotland	11	49	Spain	2
50	Sweden	29	51	Switzerland	5
52	U S.S R.	4	53	Vatican City	2

---

23. East India Company Catalogue of East India Collection, Mysore-861 24-33 A Report on A Scientific Catalogue of THE TAMIL MANUSCRIPTS IN EUPORE-1960 (Prepared for the Govt of Madras, India, By A. Krishnamurthy, Madras Educational Service

34-53. Journal of Tamil Studies, 18. pp. 4-13. (European Sources for Tamil Manuscripts— Gregory James)

இணைப்பு—7

எழுத்தாணி இலட்சணம்[1]

1. ஆராறு நீளம் அகலம் பெருவிரல்
ஈராறுக் குள்ளே யிடுந்துருசு—நேரே
பதமுடனே வார்ந்துப் பலகலெனச் சேர்த்துக்
கலகலென வெழுதுங் கணக்கு.

2. ஆதிமுனி சொன்ன தடவே யெழுத்தாணி
சோதிப் பெருவிரலாற் றொட்டெண்ணி—நீதியுடன்
அஞ்சிற் பெருக்கியதை யேழு தனக்கீய
மிஞ்சுபலன் சொன்னேன் விரைந்து.

3. ஏகங் கலகம் இரண்டாந் தளபதியாம்
ஆகமிக னோவாம் அதில்மூன்று—போகம்
பொருள்சேரும் நாலாகும் போர்வெல்லும் அஞ்சாம்
அருள்சேரும் ஏழுதற மாம்.

---

1. எழுத்தாணி இலட்சணம், ஆர். 10210

இணைப்பு—8

சுவடி இயல்—கல்விக்குரிய துணை நூல்கள்

1 அச்சுக்கலை, மா. சு. சம்பந்தன்,
தமிழர் பதிப்பகம், சென்னை-1 1976

2 அச்சும் பதிப்பும், மா. சு. சம்பந்தன்,
தமிழர் பதிப்பகம், சென்னை-1 1980

3 அரசினர் சுவடி நூலக அட்டவணைகள்—டி 1-11;
ஆர் 1-14
அரசினர் சுவடி நூலக வெளியீடுகள், சென்னை-5

4 என் சரித்திரம், டாக்டர் உ. வே. சாமிநாதையர்,
எஸ். கலியாணசுந்தரம், பதிப்பு, சென்னை 1950

5 ஐவரம்மானை, டாக்டர் அ. விநாயகமூர்த்தி,
பாலமுருகன் பதிப்பகம், மதுரை-11 1981

6 கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிகள்,
புலவர் மு. சண்முகம் பிள்ளை, டாக்டர்
இ. சுந்தரமூர்த்தி, சென்னைப் பல்கலைக்
கழகம், சென்னை 1979

7 சுவடிப் பதிப்பு நெறிமுறைகள் (கருத்தரங்கக்
கட்டுரைகள்) முனைவர் த. கோ. பரமசிவம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 1989

8 சுவடியியல் பயிற்சி—கையேடு, மு. கோ. ராமன்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113 1982

9 டாக்டர் உ. வே. சா. காப்பியப் பதிப்புகள்,
டாக்டர் இரா. காசிராசன்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113 1985

10 டாக்டர் உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள்,
டாக்டர் குளோரியா சுந்தரமதி,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113 1984

11 தமிழ்ச் சுவடிகள் (அட்டவணை), நிர்மலாதேவி, (பதி)
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113 1983

12 தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடிகள்,

13 தாமோதரம், (தொகுப்பு) யாழ்ப்பாணம் கூட்டுறவுத்
தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம்,
யாழ்ப்பாணம் 1971

14 திருக்குறள் யாப்பமைதியும் பாடவேறுபாடும்,
மு. சண்முகம் பிள்ளை,
சென்னைப் பல்கலைக்கழகம் 1971

15 திருவாசகம்—சில ஆராய்ச்சிக் குறிப்புக்கள்,
மு. அருணாசலம், சைவ சித்தாந்த மகாசமாஜ
அறுபதாண்டு நிறைவு விழா மலர், சிதம்பரம் 1965

16 தேவாரம் (பண்முறை), கோபாலையர் (பதி),
புதுவை பிரஞ்சு நிறுவனம், பாண்டிச்சேரி 1984

17 நினைவு மஞ்சரி (I & II), உ. வே. சாமிநாதையர்,
தியாகராச விலாச வெளியீடு, சென்னை 1957

18 பதிப்புக்கலை, அ. விநாயகமூர்த்தி,
பாலமுருகன் பதிப்பகம், மதுரை-11 1979

19 பதிப்புப் பார்வைகள், அ. விநாயகமூர்த்தி,
பாலமுருகன் பதிப்பகம், மதுரை-11 1983

20 மூலபாட ஆய்வியல், அ. விநாயகமூர்த்தி,
பாலமுருகன் பதிப்பகம், மதுரை-11 1978

21 மொழிவளர்ச்சியில் சுவடி பதிப்பித்தலின் தேவை
(கருத்தரங்கக் கட்டுரைகள்—தட்டச்சுவடிவம்)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 1989

22 விளக்க அட்டவணைகள்—உ. வே. சா, நூலகம்,
திருவான்மியூர், சென்னை ...
,, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர் ...

ஆய்வேடுகள்

1. டாக்டர் உ.வே.சா.வின் பதிப்புப்பணி—ஓராய்வு
பூ. சொல்விளங்கும் பெருமாள், மதுரை 1981

2. மருத்துவக் சுவடிகளில் பாடவேறுபாடுகள், (எம்.பில்)
க. லலிதாம்பிகா, புஷ்பம் கல்லூரி, பூண்டி,
தஞ்சாவூர் 1989

3. மருத்துவச் சுவடிகள் (குழந்தை மருத்துவம்),
வே. இரா. மாதவன்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113 1985

4. முத்தாரம்மன் அம்மானை, நிர்மலாதேவி,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113 1986

5. மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகள்—ஓராய்வு,
மா. இராசேந்திரன், சென்னைப் பல்கலைக்கழகம் 1984

சொல்லகராதி

அக அமைப்பு 17, 27
அகச்சான்று 177
அகத்திணை 176
அகத்தியர் 43, 52, 55, 56, 90, 275
அகத்தூஹம் 20
அகத்தோத்து 226
அகநானூறு 248
அகநிலை ஆய்வு 257
அகப்பொருள் 156, 280
அகர நிரல் 68, 96, 210, 247, 249, 257
அகராதி 36, 54, 190, 247, 273
அச்சப்பத்து 169
அச்சு 187, 214, 225, 264, 268 269, 271
அச்சு நூல் 4, 18, 196, 209, 247
அச்சுப்பிழைகள் 212, 269
அச்சுப்புள்ளி 224, 267
அச்சும் பதிப்பும் 68
அசாம் 31
அட்சரகாலம் 220
அட்டகவர்க்கம் 56
அட்டவணை 189, 195, 247, 264
அட்டாதசபுராணம் 55
அட்டாவதானம் 162
அடக்கமுடைமை 121
அடிக்குறிப்பு 17, 207, 224, 229, 241, 243, 260, 261, 262, 267 268
அடிகளாசிரியர் 149 259
அடியளவு 228, 256
அடியார்க்கு நல்லார் 101, 148, 151
அடியெதுகை 201, 202
அடைப்புக்குறி 208, 224, 241, 249, 272
அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 43, 69, 75, 156
அண்மைப்படி 157, 158, 159, 161
அணிநலம் 151
அத்துச்சாரியை 119
அதங்கோட்டாசான் 255
அதிகாரபூர்வம் 151, 152
அதியமான் 263
அந்தாதி 21, 272
அந்நியர் கவர்தல் 58
அநாதார காலம் 220
அப்பர் 65
அப்பாவுப்பிள்ளை 69
அபிஷிக்தர் 77
அபோத காலம் 220, 256
அம்பலவாணர் 53
அம்பிகானந்தர் 56
அம்மானை 26, 48
அமானல்லா கதை 55
அமீன் தோத்திரம் 55
அயல் நாட்டவர் 275
அர்மீனியர் 27
அரங்கநாயகி 43
அரசவைச் செய்தி 10, 29
அரசியற்கொள்கை 252
அரசினர் சுவடி நூலகம் 67, 68, 155, 163, 212, 278
அரசு ஆணை 29, 152
அரசு நிறுவனங்கள் 78
அரசு மருத்துவமனை 274
அராபி 156
அரிச்சுவடி 36, 54
அரிசில்கிழார் 222
அரிட்டநவநீதம் 56
அருகர் 233
அருச்சனை 21
அருஞ்சொல் 210, 213, 221, 249
அருணந்தி 242
அருணாசலம் 76, 209
அருணாசல புராணம் 55
அரும்பொருள் விளக்க நிகண்டு 51, 136, 139, 211
அரைப்புள்ளி 236
அல்பருணி 30

அல்லிகதை 47, 141
அல்லியரசாணி மாலை 26
அவையடக்கம் 50, 241
அள்ளூர் நன்முல்லையார் 222
அளகேசுவரன் 268
அளவை வாய்பாடு 55
அறாவெட்டு 218
அறிவியல் 7, 151
அனந்தராமையர் 184
அனுபவ வைத்தியநூல் 147
அனுபோக வைத்திய நவநீதம் 61, 68
அக்ஷரலக்ஷம் 112
ஆகமங்கள் 242
ஆகுபெயர் 7, 9, 10, 12, 15, 155
ஆங்கிரச வருஷம் 162
ஆங்கிலம் 9, 54, 247, 257, 265
ஆசிரியப்பா 261
ஆசிரியர் பெயர் நிரல் 247
ஆடித்திங்கள் 147, 230
ஆண்டாள் 46
ஆண்டு 199, 212, 246
ஆணை 10
ஆத்திசூடி 217
ஆத்திரையன் 222
ஆத்யாமிகம் 242
ஆதி திவாகரம் 74
ஆதிநாத பிள்ளை 51
ஆதி பௌதிகம் 242
ஆதியுலா 96
ஆதிரூபம் 184
ஆதிதைவிகம் 242
ஆதீனகாலம் 220
ஆந்திர நாடு 229, 237
ஆபரணம் 277
ஆய் 263
ஆய்வடங்கல் 229 246, 247, 248
ஆய்வாளர் 188, 210, 258
ஆய்வு 7. 17, 177, 213, 243, 248, 258
ஆய்வு முன்னுரை 212, 241, 246, 251, 262
ஆய்வுப்பணி 190
ஆய்வேடு 35, 156
ஆயுள்வேதம் 68
ஆராய்ச்சி 87, 187, 188, 189, 209, 210
ஆருகத சமயம் 219
ஆருட சாத்திரம் 56
ஆலந்துறையீசர் 71
ஆவணம் 11, 247
ஆவுடையார் கோவில் 55, 242
ஆழ்வார் 46, 121
ஆழ்வார் திருநகரி 53
ஆற்றுநீர் 85
ஆற்றுவளம் 241
ஆற்றொழுக்கு 130
ஆறறியந்தணர் 143
ஆறாறுக்கப்பால் 171, 172
ஆறுகாடுமகாத்மியம் 55
ஆறுமுகநாவலர் 43, 74
ஆன்ம நிர்ணயம் 55
ஆன்மவியல் 7
இங்கிலாந்து 67
இசை 13, 16, 26, 21, 228
இடுகுறி 254
இடைக்காடர் சூத்திரம் 96
இடைக்காலச்சட்டம் 64, 245
இடைச்செருகல் 138, 153, 155, 206
இடைச்சொல் 230
இடைநரம்பு 12
இடைமகன் 218
இடைவிடுகை 215
இணை 8, 178, 240, 243, 268
இணைவிழைச்சு 241
இதழ்கள் 15, 189, 247
இதிகாசகாலம் 55, 220
இந்திய அரசுபணி 67
இந்திரபட்டாபிடேகன் 48
இந்திரன் 185
இமயமலை 31
இயற்கை அழிவு 57
இயற்றமிழ் 16
இயேசு சங்கம் 152
இரசவாதம் 54
இரட்டுற மொழிதல் 254
இரட்டைச்சுழி274
இரட்டை மேற்கோள் 246
இரண்டன்தொகை 180
இராகவையங்கார் 69, 207
இராசகோபாலப்பிள்ளை 209

இராசராசன் 261
இராசிபலன் 56
இராசேந்திரன் 265, 277
இராமகதை 103
இராமச்சந்திர ஐயர் 76
இராமச்சந்திர கவிராயர் 213
இராமச்சந்திரன் செட்டியார் 80
இராமசாமி முதலியார் 76, 162
இராமதாஸ் 274
இராமதேவர் 55
இராமபாணம் 127
இராமாயணம் 25, 55, 161
இருதலைப்பகரக்குறி 208
இருதுசாத்திரம் 56
இலக்கணக்குறிப்பு 190, 244, 245, 249
இலக்கணம் 15, 16, 19, 21, 24, 45, 54, 128, 182, 183, 205, 206, 220, 237, 244, 254, 263
இலக்கண விளக்கம் 72, 73, 219, 256
இலக்கியச் சுவடி 280
இலக்கியம் 11, 13, 14, 15, 16, 19, 24, 46, 54, 209, 225
இலக்குமி 43
இலக்குவன் 181
இலங்கை அளவறிபடலம் 104
இலட்சுமணய்யா 66
இலட்சுமி நாராயணன் 74
இலண்டன் 67
இலவம்பஞ்சு 230
இலிங்கபுராணம் 55
இலை 12, 27, 35
இளநாகனார் 173
இளம்பூரணர் 13, 106
இறையனார் களவியல் 20, 102, 125
இறையனாரகப்பொருள் 86
இறைவணக்கம் 26, 40
இன்மைவழி 160
இனியவைகூறல் 121
ஈகையுடைமை 104
ஈசான தேசிகர் 256
ஈசுவரமூர்த்திப்பிள்ளை 69
ஈனஸ்திதி 184
உட்தலைப்பு 40
உட்பொருள் 259
உடன்பாட்டுப் பொருள் 238
உடுக்குறி 228, 243
உண்கண் 134
உண்மை 188, 190
உண்மைரூபம் 101
உண்மைவழி 160, 171
உணர்ச்சிக்குறி 237
உணர்ச்சிப்பாடல் 21
உத்தமதானபுரம் 139
உத்திரகோசமங்கைத் தல புராணம் 55
உப்பங்கழி 180
உபாத்தியாயர் 21
உமாபதிசிவம் 217
உமையொருபாகன் 235
உயர்திணை 182
உயர்வு நவிற்சி 151
உயிர் (அச்சு) 101, 133, 197
உயிர்மெய் 193, 194
உயிரியல் 7
உரிமைச்சீட்டு 11
உருது 156
உருபியல் 16, 268
உருமானாய் 168
உருவிலாளன் 277
உரைகல் 257
உரைநடை 54, 194
உரைநூல் 20, 190
உரைப்பகுதி 273
உரையாசிரியர் 24, 113, 149, 150, 153, 190, 210, 218
உரைப்பாயிரம் 154, 155
உரையில்லாப்பாடம் 148
உரோமர் 27, 38
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் 156, 273, 276
உலகவழக்கு 252, 254, 272
உலா 205
உலோகத்தகடு 28, 40
உவமான சங்கிரகம் 55
உவமையாகுபெயர் 14, 15

உ. வே. சா. 60, 66, 69, 75, 76, 77, 80, 86, 136, 163, 185, 194, 210, 214, 216, 218, 219, 220, 229, 248, 249, 255, 256
உ. வே. சா. நூலகம் 121, 156
உள்தலைப்பு 190
உளவியல் 7, 16
உறுதிமொழி 29
உறையூர் 222
ஊஞ்சல் இலக்கியம் 212
ஊத்தையேன் 183
ஊர்க்காட்டு வாத்தியார் 61
ஊர் மன்றம் 18, 226
ஊராட்சி மன்ற நூலகங்கள் 278
ஊழி முதல்வன் 277
ஊற்றுநீர் 85
ஊற்றுமலை சமீன்தார் 24
எகிப்து 27
எச்சத் தொடர் 235
எட்டுத் தொகை 214, 220, 255
எடுத்துக்காட்டு 237, 269
எடோர்ட் ஏரியல் 66, 68
எண்சுவடு 19, 55
எண்ணலங்காரம் 172
எண்ணும்மை 115
எதிர்மறைப் பொருள் 238, 257
எதிராசர் 43
எதுகை நடை 151, 200
எபிரேயர் 27
எம்ஃபில் பட்டம் 156
எல்லிஸ் 68, 213
எலிப்பகை 174
எவ்வார் வாத்தியார் சின்னய்யன் 57
எழுத்ததிகாரம் 43
எழுத்தாணி 33
எழுத்து 11, 16, 23, 32, 193, 199, 271
எழுத்துமுறை 190, 195, 229
எழுதப்படு பொருள் 9, 27
எழுது கருவி 8, 27, 33
எழுது பொருள் 8, 17, 27
எளிய பதிப்பு 210
என் சரித்திரம் 61, 71, 75, 79, 133, 139. 142, 143, 216, 217, 218, 219
ஏக்கர் 266
ஏகபோகம் 29
ஏடு 7, 9, 11, 12, 14, 15, 18, 23, 36, 184, 195, 214
ஏடு வாருதல் 37
ஏந்திசைச் செப்பல் 180
ஏலாதி 241
ஏழன் உருபு 181
ஏற்றப்பாட்டு 21
ஏனாதி 75
ஐங்குறு நூறு 75, 145, 156, 211, 221, 266
ஐந்திணை 256
ஐந்திலக்கணம் 70, 71 217
ஐம்பதம் 277
ஐம்பூதங்கள் 235
ஐரோப்பிய நாடுகள் 152
ஐவர் அம்மானை 136, 156, 170, 173
ஒட்டுத்தாள்கள் 264
ஒட்டிய நூல் 56
ஒண்கண் 134
ஒப்பாரிப் பாடல் 21
ஒப்பிலாமணிப்புலவர் 105
ஒப்பீட்டு ஆய்வு 207 257
ஒப்புமைப் பகுதி 190, 245
ஒருபெயர் பொதுச் சொல் 227
ஒருமை ஏவல் 238
ஒருமை பன்மை 181, 182
ஒரேருழவர் 255
ஒலி ஒத்தபிழை 110
ஒலி ஒப்புமை 123, 134, 135, 146
ஒலிக் குறிப்பு 234
ஒவ்வாப் பாடம் 154
ஒற்றர் 194
ஒற்றை அலகு 12
ஒற்றைச் சுழிக் கொம்பு 194, 195
ஒன்னையகவுடர் 207
ஓசைநயம் 13 194, 195, 200, 202, 210, 229
ஓதும் பரிசு 20
ஓர இடைவெளி 270
ஓரங்குலம் 45

ஓரடி 204
ஓரி 263
ஓலை 7, 9, 10, 11, 12, 15, 24, 30, 40, 67, 156, 189, 207, 277
ஓலையெழுதுவோர் 30
ஓலை வாருதல் 37
கட்டமைப்பு 98, 270, 271
கடலூர்பள்ளு 91, 92
கடவுளர் 40
கடநாவுபடலம் 226
கடினசந்திகள் 17, 210
கடைச்சங்கம் 220
கடையெழுவள்ளல்கள், 263
கண்காட்சி 27, 78
கண்காணிப்பு 259
கண்ணன் பாட்டு 112
கண் மருத்துவம் 276
கணக்கதிகாரம் 55, 91
கணிதம் 18, 19, 26, 54, 55
கந்தசாமி கவிராயர் 248
கந்தசாமி புலவர் 92
கந்தபுராணம் 55, 70
கந்தி 50, 153, 154
கப்பல் சாஸ்திரம் 44
கபிலபடலம் 91, 92
கபிலை வாசகம் 44
கம்பராமயணம் 39, 121, 128, 156, 201, 211, 280
கம்பர் 248
கம்பன் கழகம் 157
கயிலை மலையார் 245
கர்ணபரம்பரை 139, 218
கரம்பு 151
கரிநாள் 38, 56
கருங்கல் 31
கருங்குதிரை 238
கருடபஞ்சாட்சரம் 56
கருத்தமைதி 130
கருத்தோட்டம் 272, 273
கரும்பயிலக் கூலியா 226
கரும் பலகை 21
கரும்பனூரன் 81
கருவிளங்காய் 204
கல்கத்தா சுவடி 53
கல்கத்தா பண்டைப் பொருள் சேமிப்பு நிலையம் 67
கல்லாடம் 70
கல்லூரி 156, 213, 232, 278
கல்விச் சங்கம் 213
கல்வியியல் 7
கல்வெட்டு 8, 25, 30, 66, 165, 263
கலப்புவழி ஏடு 158
கலித்தளை 206
கலிதுறை 125, 178, 200, 204, 205, 241
கலித்தொகை 73, 134, 169, 211, 219, 248, 256
கலிப்பா 125, 267
கலிவிருத்தம் 200, 203
கலிவெண்பா 48, 200, 205, 206, 232, 239, 267
கலைச்சொல் 212, 264, 265
கவர்னர் ஜெனரல் 67
கவிதை 11, 225
கழகம் 81, 166
கழஞ்சு 241
கழல் 44, 170, 171
கழனிமாத்து 144
களப்பணி 273
களவியற்காரிகை 20, 86, 103, 169, 208, 211
களவிற்கூட்டம் 184
களிமண் பலகை 28, 31
கள்ளில் ஆத்திரையனார் 222, 255
கற்பம் 20, 276
கறைசேர் கண்டத்தர் 235
கன்னடம் 146, 156
கன்னியாகுமரித் தலபுராணம் 76
கனகசபைப்பிள்ளை 66, 69, 74
கஸ்தூரி ஐயங்கார், 71, 129
காக்கை பாடினியார் 113, 255
காகிதம் 215
காசி விசுவநாதன் 184
காமராசர் 230
காமராஜர் பல்கலைக் கழகம் 156
காமா 228
காரணப் பெயர் 7, 8, 9, 15 233, 254

காரிருள் 231
காலின்மெக்கன்சி 66
காளிங்கர் 133, 134, 172
காற்புள்ளி 224, 235
கானூர் 45
கிரந்த எழுத்து 191, 193, 197, 198
கிராமம் 31, 78, 279
கிருஷ்ணமாச்சாரியார் 149
கிரேக்கர் 27
கிழக்கிந்தியக் கம்பெனியார் 67
கிளிமூக்கு 40
கீரங்கொற்றனார் 20
கீழ்வழி ஏடு 157, 158, 161
குசலவர் கதை 55
குடும்ப வழி ஏடுகள் 159
குண்டெழுத்தாணி 33
குணமின்மை 107
குதிரை 59
குந்தி 143
கும்பகருணப்படலம் 128
கும்பகோணம் 77, 230
கும்மிப் பாடல்கள் 212
குமணன் 105, 263
குமரன் 46
குமாரசாமி 76, 162
குரம்பு 151
குருதி 143
குரோதம் 241
குரோதன வருஷம் 161
குலகுரு 242, 274
குலோத்துங்கன் 165
குவளை 131, 243
குழந்தைவேல் உபாத்தியாயர் 51
குழப்பம் 142. 143
குழித்தலை 216
குளோறியா சுந்தரமதி 250, 265
குற்றியலுகர ஈறு 230
குறவஞ்சி நாடகம் 60
குறிஞ்சிப் பூ 116
குறிப்புரை 148, 245, 249
குறியீடு 47, 163, 199, 228, 234 264
குறுந்தொகை 63, 86, 118, 136 137, 143, 145, 176, 182, 211, 249, 255, 263
குறுநில மன்னர் 25
கூட்டெழுத்து 191, 195, 197, 199, 271
கூந்தற்பனை 38, 54
கூர்நுனை 108
கூர்மபுராணம் 55
கூரியகல் 31
கூரெழுத்தாணி 34
கூவிளங்காய் 178, 204
கூற்று 256
கூன் பாண்டியன் 230
கைபீது 280
கையறுநிலை 27
கொங்கணர் 147
கொச்சகம் 136
கொச்சைச் சொல் 110, 183, 250
கொடுந்தமிழ் 68
கொள்ளிடம் 222
கொன்றைவேந்தன் 217
கோட்டை 213, 233
கோடக்ஸ் 38
கோரைப்புல் 27
கோவிந்தசாமி ரெட்டியார் 75
கோவை மாவட்டம் 273
கோளரி மாதவன் 100
சகலகலா வல்லி 205
சகலாகம பண்டிதர் 242
சங்கம் 46, 63, 135, 136, 210, 221, 256, 250
சங்க மரீஇய நூல்கள் 73
சங்குப் புலவர் 248
சட்டம் 21, 36
சடகோபர் ஊசல் 90
சடகோபையங்கார் 71
சண்பகக் குற்றாலக் கவிராயர் 72
சத்திரம் 18
சதகம் 21
சதுரகராதி 68, 213
சந்தப் பாடல்கள் 48
சந்தவிருத்தம் 202, 203
சந்தி 153, 210, 225, 228, 229
சந்திரநாத செட்டியார் 129

சந்திரஹாரம் 277
சப்தரிஷி நாடி 56
சபாபதி முதலியார் 70
சம்பந்தர் 65
சமணர் 46, 218, 220
சமஸ்கிருதம் 220, 256
சமூகவியல் 16
சயமகள் 165
சரசுவதி மகால் நூல் நிலையம் 68, 156, 163
சரநூல் 91
சரபம் 143
சரபேந்திர வைத்திய முறைகள் 276
சரபோஜி மன்னர் 66, 68
சரஸ்வதி பண்டாரம் 24
சாசனவியல் 152
சாந்தலிங்க அடிகளார் 156, 273
சாமி ஐயங்கார் 71
சாமுத்திரிகம் 41
சாலிப்பரப்பு 157
சாலிவாகன சகாப்தம் 51
சித்தன்னவாசல் 30
சிதம்பரப்பாட்டியல் 208
சிலப்பதிகாரம் 10, 12, 30, 76, 114, 138, 148, 185, 214, 252, 280
சிலாசாசனம் 222
சிலுவைக் குறி 243
சிலேட் 21
சிவக்கொழுந்து தேசிகர் 187
சிவசங்கரம்பிள்ளை 161
சிவதருமோத்திரம் 72
சிற்ப சாஸ்திரம் 83 169
சிற்றிலக்கியம் 25, 28. 42, 46, 55, 145, 147, 205, 273, 280
சிற்றெட்டகம் 169
சிறுத்தொண்டர் யட்சகானம் 46
சிவன்பிள்ளை 73
சின்கோனாத் துறை 99
சின்னடைஞ்சான் 65
சின்னமனூர் பெரிய செப்பேடு 66
சீகாழி 75
சீவக சிந்தாமணி 49, 76, 77, 80, 105, 111, 122, 134, 138, 142, 143,155, 201, 214, 216, 218, 277
சுண்ணாம்பு 39
சுத்தப்பதிப்பு 209
சுந்தரம்பிள்ளை 72
சுந்தர முனிவர் 92
சுந்தரமூர்த்தி 194, 909, 230
சுப்பராமச் செட்டியார் 115
சுப்பிரமணிய அய்யர், வ. வே 113
சுப்பிரமணிய பாரதியார் 111
சுப்பிரமணியம் 46, 193, 206. 265
சுப்பையர் 139
சுபமஸ்து 46
சுருக்கக்குறியீடு 190, 237, 242, 264
சுலோகம் 16, 21, 156, 195, 277
சுவடி திரட்டுதல் 62, 66, 87
சுவடிப் பதிப்பு 17. 156, 209, 245. 247, 271, 277
சுவடிப் புலம் 156
சுவடி வரவுப் பதிவேடு 93
சுவடி வேறுபாடு 149
சுவடு 12
சுவரொட்டி 267
சுவாமி மலை 283
சூடாமணி நிகண்டு 44, 122, 138, 219
சூத்திரம் 20
சூத்திராணம் 20
சூதமுனி 45
சூதாட்டப் போர் 26
செகப்பன் சுவடி 52
செஞ்சிராசாக்கள் கைபீது 146, 147
செந்தமிழ்ப் பிரசுரம் 211
செப்பலோசை 132
செப்புக் காசு 40
செப்பேடு 20, 29
செய்யுள் 187, 225, 264
செயராம சோதிடர் 274
செர்மனி 263

சென்னிப்பத்து 168
சென்னை 19, 67, 68, 83, 189, 23, 285
சென்னைப் பல்கலைக் கழகம் 68
சென்னை மாவட்ட ஆட்சியாளர் 68
சேர்க்கை வழிக்குடும்பம் 126, 140, 160, 161, 212
சேர மன்னன் 113
சேலம் 76, 162, 216
சேனாவரையர் 16, 101, 155
சேனை முதலியார் 43
சைவ சித்தாந்த மகா சமாஜம் 217
சொக்கநாத முதலியார் 162
சோடனை 8
சோதிட நூல் 145, 147
சோதிடம் 21, 26, 54, 56, 78, 201, 273, 274, 281
சோதெயநாயக்கன் 262
சோமாசிக் குறிச்சி 29
சோமாஜியார் 29
சோழர் வரலாறு 65
சோழி 40
சௌந்திரபாண்டியன் எஸ் 193
தகக நாடகம் 90
தக்காணக் கல்லூரி 153
தகவல்பட்டி 264, 268
தகுநிலை 150
தசரதன் 181, 182
தஞ்சை மாவட்டம் 273
தஞ்சை 77, 83, 156, 163
தஞ்சைவாணன் கோவை 162, 213, 217
தட்சிணாமூர்த்தி 55
தண்டலையார் சதகம் 95
தண்டியலங்காரம் 70
தண்ணீநோது மந்திரம் 56
தம்பாபிள்ளையன் 24, 161,
தமிழ் 68, 136, 163, 196, 267
தமிழ்ச் சுடர்மணிகள் 69, 74
தமிழ்நாடு 68, 188, 255, 261
தமிழ்ப் பல்கலைக்கழகம் 156, 273
தமிழ்ப் பண்பாட்டுத்துறை 273
தமிழ் வளர்ச்சி 78, 112, 189
தமிழியல் 7, 16
தருமபுரம் 24
தலபுராணம் 55, 280
தலை ஓடு 230
தவமுடைமை 104
தளவாய்புரச் செப்பேடு 66
தற்கிழமை 118
தறிசெறிகளிறு 169
தனவந்திரி 259
தனிச் செய்யுட் சிந்தாமணி 64, 129, 139
தாண்டவராய முதலியார் 213
தாபத்திரயம் 242
தாமோதரம்பிள்ளை சி. வை. 73, 132, 194, 214, 219, 256, 269
தாமேதரன், அ. 58
தாலாட்டுப் பாடல் 21
தாவரவியல் 7
தாழைமடல் 9, 10, 30
தாள்சுவடி 18, 156, 189, 270, 271, 279, 281
தாளிப்பனை 38
திண்ணைப்பள்ளி 18, 146
திண்தேர்ப் பொறையன் 118
திண்தோள் பொறையன் 118
தியாகராய நகர் 275
திரமிள சங்கம் 65
திரு அவதாரப் படலம் 121
திருக்குருகைபிரான் 43
திருக்குடந்தைப் புராணம் 217
திருக்குற்றாலப் புராணம் 72
திருக்குற்றால யமக அந்தாதி 72
திருக்கோவலூர் 75
திருக்கோவையார் 51
திருச்சிராப்பள்ளி 162, 216
திருச்சிற்றம்பலம் 45, 46, 51. 103, 218
திருசிபுரம் 128
திருத்தக்கதேவர் 218
திருத்தணிகை 46, 213
திருத்தொண்டர் புராணம் 216
திருநெல்வேலி 69, 75, 76, 83, 161, 163

திருப்பாவை 132
திருப்பெருந்துறை 242
திருமயிலைத் திரிபந்தாதி 74
திருவங்கமாலை 90, 92
திருவம்பர் புராணம் 133
திரும்பலத்தின்னமுதம் பிள்ளை 70
திருவருட்பா 201
திருவாசகம் 70, 137, 169, 170, 216, 224
திருவாசகக்குறிப்பு 167, 168, 169, 171
திருவாசிரியம் 46
திருவாதவூரர் 242
திருவாய்மொழி 210
திருவாரூர் 233
திருவாரூர் வடுகநாத தேசிகர் 19
திருவாவடுதுறை 24, 77
திருவிதாங்கோடு 254
திருவான்மியூர் 156
திருவிளையாடற் பயகரமாலை 84
திருவிளையாடற்புராணம் 201, 228
திருவெம்பாவை 167
திருவேங்கடம் 161
திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது 125
திவாகர நிகண்டு 139
தீப்ஸ் நகரம் 28
துணைக்கருவி 183, 189, 190, 212, 247, 269
துப்புரவில்லாமை 149
துயில்வர மறந்தனர் 143
துயிலவர் மறந்தனர் 143
துரியோதனன் 100
துருச்சொல்லி 20
துரோபதை மாலையீடு 26
துறத்தல் 149
துறவாமை 149
தூக்கு 7, 12, 13, 14, 15
தூதுத் திரட்டு 212
தூரிகை 31
தெருப்பள்ளி 18
தெலுங்கு 146, 155, 257
தெளிவுப்பதிப்பு 209, 271, 210
தென்னாடு 67, 68
தென்னார்க்காடு மாவட்டம் 237
தென்னிந்திய கோயில் சாசனங்கள் 66, 279
தேம்பாவணி 68
தேரையர் வயித்தியம் 90, 92
தேவ நேயப்பாவாணர் 8
தேவாரம் 24, 65, 140, 144, 145, 153, 166, 167, 168, 216 217, 235
தேனூர் கிழார் 20
தொகுப்புப்பதிப்பு 8, 14, 49, 709, 211, 276, 280
தொகை நூல் 247, 263
தொடர்நிலைச் செய்யுள் 200
தொண்டை நாடு 222
தொழில் ஊக்கப்பாடல் 21
தொல்காப்பியம் 8, 9, 12, 14, 16, 19, 145, 148, 176, 194, 209, 217, 244 259
தொல்காப்பிய வேட்டுப்பிரதி 226
தோடு 15, 191, 231
தோழம் 167
தோழன் 167
தோழி 217
நக்கீரர் 20, 220, 256
நச்சினார்க்கினியர் 13, 16, 50, 101, 106, 111, 129, 155, 177, 192, 194, 218
நச்செள்ளையார் 113, 255
நந்திதேவர் பெருநூல் 56
நம்பியார் 65
நரம்பு 36
நல்லாப்பிள்ளை 43
நவநீர் 154
நவைநீர் 154
நற்றிணை 256, 263
நன்னூல் 15, 71, 129, 148, 244
நாட்டுப்புறப் பாடல் 147
நாடகம் 1, 21, 26, 54, 56, 225
நாடிசோதிடம் 2/4, 278
நாணல்குச்சி 27

நாலடியார் 248
நாலாயிரதிவ்யப் பிரபந்தம் 54, 210, 217
நாவல்பாக்கம் 275
நாவுக்கரசர் 230
நிகண்டு 19, 41, 54, 201, 211, 220, 259
நிவந்தம் 25
நிழற்படம் 275, 276
நிறுத்தற்குறி 13, 224, 234
நினைவு மஞ்சரி 218, 219
நீதிநூல் 19, 21, 55, 147
நீதிவெண்பா 106
நீலியட்சகானம் 146
நுங்குப்பனை 38, 54
நூலகம் 15, 156, 188, 189, 259, 261
நூலகமலர் 155
நூலக வாரவிழா 78
நூலழகு 15
நூலறிபுலவர் 15
நூலறிவு 15, 188, 272
நூலாசிரியர் 15, 23, 40, 49, 150, 201, 210, 247, 248, 258, 261
நூன் மரபு 268
நூன்முகம் 15
நெடுங்கணக்கு 209
நெற்பொரி 233
நேமிநாதம் 213
நேர்பசை 226
நைடதம் 213
நைல்நதி 27
நொண்டிநாடகம் 56
ப்டாஹ் ஹோட்டெப் 28
ப்ரீஸ்ஸி சுவடி 28
பகரஅடைப்புக்குறி 242, 246
பகைமாற்று 50
பஞ்சநமஸ்காரம் 277
பஞ்சபட்சி சூத்திரம் 56
பட்டேவியா 29
படியெடுப்போர் 44, 126, 150, 190, 193, 197
படைமாட்சி 174
பண்டார்க்கர் கீழைக்கலை ஆராய்ச்சி நிலையம் 153
பண்முறை 153, 217, 241
பத்துப்பாட்டு 76, 169, 256, 257
பதார்த்தகுணசிந்தாமணி 56
பதிப்பாசிரியர் 65, 81, 110, 150, 163, 184, 188, 193, 208, 209, 213, 224, 247, 248, 249, 250, 264
பதிப்புப்பணி 190, 214
பதிப்பு வரலாறு 210, 257
பரதேசி 70
பரமார்த்தகுருவின் கதை 68
பரிசிற்றுரை 226
பரிபாடல் 81
பரிமேலழகர் 14, 103, 133, 134, 149, 154, 172, 178, 179, 180
பல்கலைக்கழகம் 43, 156
பல்பெயர்த்தொகுதி 220
பல்லாரி 147
பவணந்தியார் 244
பவளக்கொடி நாடகம் 156
பவானந்தம் அகாடமி 157
பழமொழி 95, 100, 218
பழைய எழுத்து வடிவம் 191
பள்ளியூர் 75
பன்றிமுள் 31
பன்னிருபாட்டியல் 208, 244
பனுவல் 7, 12, 13, 14, 15
பனையோலை 35, 38, 192
பஃறொடை 226
பாகவதம் 42, 52
பாஞ்சாலிசபதம் 112
பாட்டு நடை 13, 54, 190, 199, 206, 241
பாடபேதம் 86
பாடவேறுபாடு 17, 23, 91, 155, 157, 160, 172, 190, 207, 210, 245, 250, 258
பாடாண்திணை 225
பாண்டித்துரைத்தேவர் 66, 68
பாண்டிநாடு 222
பாண்டியன் புத்தகாலயம் 69
பாண்டிவளநாடு 220
பாரத வெண்பா 26, 55, 280
பாரி 236, 262
பாரீஸ் தேசிய நூல் நிலையம் 68

பாயிகாண்டம் 121, 131, 134, 145, 163
பால்வண்ண முதலியார் 76
பாளையப்பட்டு 261, 262
பிங்கலநிகண்டு 73, 74
பிடமர் 219
பிடித்தபத்து 170
பிணர் 250
பிப்லியன் 28
பிரஞ்சு-தமிழ் அகராதி 54
பிரஞ்சுநிறுவனம் 152, 210, 235
பிரதிபேதம் 34, 101
பிரபந்த மரபியல் 175, 209
பிரிட்டானிகா பேரகராதி 152
பிரிட்டிஷ் 27
பிரீஸ்லி 28
பிரெஞ்சுக்காரர் 68
பிரௌன் 67
பிழைதிருத்தக் குறியீடு 269
பிறப்பியல் 16
பிறிதின்கிழமை 118
பிறையூர் 19
பின் இணைப்புகள் 264
பினீஷியர் 27
புகவு பெறுவான் 20
புகழுடைமை 104
புத்தகம் 12, 13, 14, 15, 24, 28 129
புதவாரம் 162
புதுவை 68. 153, 210, 213
புரமெரித்தோன் 233
புரவலன் 276
புராணம் 46, 55, 216, 219, 280
புலவர் 63, 128, 129, 124, 232, 255, 262
புலியின் அதளர் 232
புலிவில் கயல் 232
புவியியல் 7, 16, 54
புள்ளியின்மை 190, 193, 194 243
புறஅமைப்பு 17, 27
புறக்கோட்டம் 14
புறநானூறு 64, 75, 76, 80, 86. 105, 131, 142, 145, 173, 220 248, 255, 256
புன்னாகவராளி 241
புஷ்பகிரி 52
பூச்சிக் கொல்லி 97
பூசைமுத்து 273
பூர்ஜப்பட்டை 28, 31
பூனா 153
பெண்டன் கிளவி 153
பெண்பால் 181, 182
பெரியதிருமடல் 46
பெரியதிருவந்தாதி 46
பெரியபுராணம் 70, 201
பெருங்கதை 65
பெருஞ்செல்வர் 214
பெருந்தொகை 61, 64. 129
பெல்கியம் 152
பேகன் 236, 263
பேனாக்குறை 58
பேதகமறுத்தல் 68
பேப்பர் 28
பேபுரஸ் பிரதி 27
பேராசிரியர் 13, 132, 134
பேராசிரியர் பிக்போர்டு 67
பேரூர் 156, 273
பேரூர்க் கோவை 80
பேணாகத்தி 34
பொடிகொள் உருவர் 235
பொத்தகம் 8, 14
பொதுநிலை ஆய்வுகள் 279
பொருந்தாப் பாடம் 153
பொருளடக்கம் 264
பொருளமைதி 150, 164, 165, 167, 234
பொருளியல் 7, 16
பொழிப்புமோனை 203, 204, 206
பொழிப்புரை 48, 148
பொறையுடைமை 121
பொன் 33
பொன்னம்பலம் 46
போர்மகள் 165
போலியுரை 155
மகரக்கொடி 141
மகாத்மியம் 55
மகாபாரதம் 25, 43
மஞ்சள் 39
மடக்கெழுத்தாணி 33
மண்டில யாப்பு 267

மண்டோதரி 104
மணக்குடவர் 103, 121, 172, 178, 179
மணிப்பிரவாள நடை 54
மணிமேகலை 143, 218, 219, 277
மணியன் ஆரூரன் 237
மதுரயாழ் 131
மதுரை 83, 156, 168, 221
மதுரைவீரன் அம்மானை 156
மயிரெலும்பு 106
மரபு 9, 12, 16, 41, 244
மருத்துவச் சுவடி 39, 54, 273, 276, 279
மருதன் இளநாகனார் 173
மரூஉச் சொல் 180
மலர்ச்சுழி 274
மலைமகணாயகர் 226
மலையாளம் 146, 155, 257
மழுவேந்தி 233
மழைக்கை 232
மழைநீர் 85
மறக்கேடு 59
மறியெலும்பு 106
மனைசாஸ்திரம் 83, 276
மாணிக்கம் வ. சுப. 228
மாணிக்கவாசகர் அம்மானை 275
மாதவி 10
மாந்தரஞ் சேரலிரும்பொறை 113
மாநிலக் கல்லூரி 67
மாபில்லன் 152
மாரத் எஸ். இக். மாதுலவ் 278
மாரியம்மன் தாலாட்டு 90
மாவட்ட ஆட்சித் தலைவர் 78
மாவட்டப் பொது நூலகங்கள் 278
மாவைப்பள்ளு 156
மானுடவியல் 7
மிதிலைப்பட்டி 84, 155
மீட்டுருவாக்கம் 208, 209
மீனாட்சி சுந்தரம் பிள்ளை 70, 71, 72, 133, 139
மீனாட்சிபுரம் 30
முக்காற்புள்ளி 236
முடங்கல் 9, 10
முத்துசாமிப் பிள்ளை, அ. 66, 68
முத்தொள்ளாயிரம் 141
முதிர்ந்திறும் 149
முதுகண்ணன் 222
முதுமொழி 19
முந்நீர் 85
முரண்தொடை 179
முற்றுப்புள்ளி 242
முற்றெச்சம் 235
முறிச்சீட்டு 11
முன்னோடிகள் 17, 157, 213, 218, 219
முனிவர் 26
மூங்கில்பத்தை 28, 31
மூலஏடு 21, 135, 149, 157, 159. 190, 257
மூலப்படி 24, 163
மூலபலப்போர் 280
மூலபாட ஆய்வு 17, 123, 148, 150, 151, 153, 155, 157, 176, 186, 206
மூலபாட ஆய்வியல் 148, 152
மூலபாடம் 105, 109, 119, 148, 149, 177, 183, 185, 188, 258
மெக்கன்சி 268, 277, 280
மெய் (அல்) 198
மெய்க்கீர்த்தி 165, 166
மெய்கண்டார் 242
மெய்ப்பாடு 249
மேல்வழி ஏடு 157, 158, 159
மேலைநாட்டு அறிஞர் 79
மேலைநாட்டு நூல் நிலையங்கள் 61
மேற்கோள் 164, 190, 244, 246, 249, 254
மேஷம் 274
மைய நூலகம் 189
மொகலாயர் 31
மொழிபெயர்ப்பு 190, 246, 248
மொழியியல் 7, 16
மோட்சம் 42
மௌரிஸ்ட் துறவி 152
யவனர் 27
யாப்பமைதி 150, 164, 177

யாப்பருங்கலக்காரிகை 44, 71, 156, 211
யாப்பியல் ஆய்வுக்கோவை 267
யாப்புநெறி 17, 192, 199, 272
யாழ்ப்பாணம் 139
யுத்தகாண்டம் 121
யுனானி மருத்துவம் 68
யூக மூல ஏடு 157, 158, 162, 164, 195
யோகினி தந்திரம் 31
ராண்டம் அவுஸ் அகராதி 152
ராமலிங்க வாத்தியார் 52
ராமசாமி செட்டியார் 259
ராஜம் வெளியீடு 157, 210, 217, 235
ருஷ்யர்கள் 278
ரூபபேதம் 100
ரேவதி நட்சத்திரம் 162
லண்டன் தமிழ்ச் சங்க ஆண்டு மலர் 61, 79
லத்தீன் போதசத் தமிழிலக்கணம் 55
லார்டு மிண்டோ பிரபு 66
லிங்கப்பையர் 139
லெய்டன் 67
வக்கீல் சுப்பையா பிள்ளை 62
வகையுளி 177, 178, 179, 227
வங்கப் பகுதி 31, 111
வச்சிரநந்தி 65
வசம்பு 97
வடநூலார் 242
வடமேரு 32
வடமொழி 155, 193, 229, 256, 277
வடார்க்காடு மாவட்டம் 275
வடிவ வேறுபாடு 190
வண்ணம் 24, 34, 199,
வணிகவியல் 16
வம்சாவளி 261, 262, 280
வயித்தீசுவரன் கோயில் 273, 274
வரதப்ப முதலியார் 19
வரதராசன் மு. 249
வரலாறு 54, 56, 64, 210, 213, 257, 280
வரைபடம் 157
வரைமார்பன் 233
வழி நூல் 252, 254
வழியேடு 159, 161, 163, 167
வழுவில் கொடை 231
வள்ளியம்மை நாடகம் 46
வளையாபதி 60
வாய்மையுடைமை 104, 121
வாய்வழிப் பாடம் 20
வாரெழுத்தாணி 33
வான்மீகி ராமாயணம் 230
வானவியல் 54
விசாகப் பெருமாள் 76
விசுவாமித்திரன் 280
விடுகை 135, 136, 149, 159, 160, 161
விதுரன் விருந்து 26
வியங்கோள் 238
விருத்தம் 200, 201, 241
விருத்தாசல ரெட்டியார் 71, 128
வில்சன் 67
வில்லிப்புத்தூரார் 43
வில்லுப்பாட்டு 26
வில்லைப்புராணம் 74
வில்வநல்லூர் 74
விலங்கியல் 7
விவிலியம் 28, 52
விளக்கப் படங்கள் 16, 264
விளக்க அட்டவணை 67, 68, 259
விளக்கின் மை 35
விளக்குங்குறி 243
விளித்துக் கூறும் நடை 172
விளையாட்டுப் பாடல் 2
வினாக்குறி 234, 237, 239
வினைஎச்சம் 183
வினைமுதற் பெயர் 233
வினைத்தொகை 180
விஜயராகவ நாயக்கர் 29
விஷ்ணுபிரியர் 52
விருஷப்தாச முதலியார் 216
வீடூா 219
வீர அபிமன்யு 26
வீர அனுமன் 280
வீரசோழியம் 220, 256, 262

வீரபத்திர முதலியார் டி 202, 263
வீரமாமுனிவர் 68, 213
வெண்கலிப்பா 206
வெண்டளை 119, 120, 180, 201, 203 204, 205
வெண்பா 132, 203, 205, 239, 241, 268
வெண்பாப் பாட்டியல் 208
வெள்ளித்தகடு 29
வெள்ளூர்க் கவிராயர் 218
வெள்ளேடு 36
வெள்ளைக்கலை 44
வெள்ளைப்பணி 44
வெள்ளோசை 205
வெள்ளோலை 36
வெற்றி மடந்தை 165
வெற்றிவேற்கை 217
வேங்கடாசல முதலியார் 19
வேதாந்த தேசிகர் 43
வேப்பிலை 97
வேலாயுத வாத்தியார் 162
வேலூர் 275
வேற்றுமை 180, 230, 232, 257
வேற்றுமொழி 128, 146, 147
வேறுபாடு 190, 195, 196
வைணவ நூல் 46
வைத்திய சிந்தாமணி 56
வையாபுரிப் பிள்ளை 86, 206, 214, 216, 220, 229, 255
வைரநாத பிள்ளை 262
ஸ்ரீதாளம் 38
ஸ்ரீபுராணம் 221
ஸ்ரீரங்க மகத்துவம் 55
ஸ்ரீராம ஜெயம் 46
ஸ்ரீராவ் பகதூர் 214
ஸ்ரீராஜ ராஜ தேவர் 29
ஸ்ரீவைகுண்டம் 24, 76, 161
ஜாக்கர்த்தா 29
ஜாலம் 54, 55
ஜாவா 66
ஜீன்போலண்ட் 152
ஜீன்மாபில்லன் 152
ஜூலியன் பின்சோன் 74
ஜெயராமன் 274
ஜைனர்கள் 111
ஹிப்ருமொழி 152
ஹேஸ்டிங்ஸ் பிரபு 67

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
III	7	பயிற்சி.	பயிற்சி—
V	இறுதி	ள்ளன.	துள்ளன.
VI	30	சுவடியில்,	சுவடி,
VII	20	பேராசிரியிர்	பேராசிரியர்
,,	32	(பக். 34 அச்சில்வேறு)	பக். 32
VIII	9	(பக். 130)	பக். 113-114
,,	19	(பக். 164)	பக். 138-139
IX	5	(பக். 145)	பக். 126
,,	11	(பக். 229)	பக். 184-185
X	4	செய்தி,	செய்தி.
,,	4, 9	(பக். 283)	பக். 233
,,	20	(பக். 302)	பக். 250
,,	21	சிறப்பு பெயர்	சிறப்புப் பெயர்
,,	28	விளக்கின்மை	விளக்கின் மை
,,	32	குளிப்பாடல்	குளிப்பாட்டல்
,,	35	வழக்கம்²	வழக்கம்'
XI	35	(பக். 29)	பக். 28
XII	2	இருக்கின்றன	இருக்கின்றன;
,,	15	உள்ளமுறையே	உள்ளமுறையே.
1	1	வாயப்பினை	வாய்ப்பினை
4	30	லிளக்க	விளக்க
5	4	பெற்றுள்ளவை.	பெற்றுள்ளவை
30	13	தூதுவரின்	தூதுவரிடம்
57	14	றையான்	கறையான்
59	அடிக். 5	தளவாய்ப்புரம்	தளவாய்புரம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
75	10	க. துரைசாமி	சு. துரைசாமி
82	11	பெற்றும்.	பெற்றும்
100	2	படாம்	பாடம்
119	18	வேறுபாடாகும்	வேறுபாடாகும்.
120	10	பெறாதாயிற்று	பெறாததாயிற்று
148	1	மூலபஈடம்	மூலபாடம்
151	அடிக். 10	ஷ்டி-12	கைகேயி சூழ்வினை-65
169	16	தறிசெ்றி	தறிசெறி
,,	25	செய்வார்;	செய்வார் பெரியவர்;
181	அடிக்.	63	66
185	10	மழையில்	மலையில்
192	23	புள்ணியிட்டு	புள்ளியிட்டு
204	18	நண்காய்	நான்காய்
238	25	ஏவவ்	ஏவல்
248	15	தவறில்வை	தவறில்லை
251	அடிக். 56	கிலகட்டுரை	சில கட்டுரை
262	அடிக். 69	தொகுதி	தொகுதி I
270	32	சுவர்ச்சி	கவர்ச்சி
276	31	நிறுவனம்;	நிறுவனம்.
277	1	மெக்கன்கி	மெக்கன்சி
278	6	நூல்கங்கள்	நூலகங்கள்
297	—	பிரௌன் கி.பி.	பிரௌன் சி. பி.

உலக தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF
TAMIL STUDIES

டி.டி.டி.ஐ. (அஞ்சல்). தரமணி,
சென்னை600 113

அறக்கட்டளைச் சொற்பொழிவு வெளியீடுகள்

இஸ்லாம் வளர்த்த தமிழ்	15	00
தமிழரின் தாயகம்	10	00
உ.வே.சா. சங்க இலக்கியப் பதிப்புகள்	10	00
இனிக்கும் இராசநாயகம்	50	00
பாவாணரும் தனித்தமிழும்	12	00
தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள்	10	00
உ.வே.சா. காப்பியப் பதிப்புகள்	10	00
விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம்	20	00
அகலமும் ஆழமும்	12	00
செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார்	15	00
உ.வே.சா. இலக்கணப் பதிப்புகள்	15	00
மகாமதிப்பாவலர்	11	00
உலக முதன் மொழி தமிழ்	12	00
மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை	15	00
தமிழ் தந்த வ.உ.சி.	15	00
உ.வே.சா. ஒரு தமிழ் வாழ்வு	15	00
வண்ணக் களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம்	15	00
மு.வ. புதினங்களில் தமிழ்—தமிழினம்	20	00
பாவாணர் ஆய்வு நெறி	25	00
கிறித்துவமும் தமிழகமும்	15	00
நாமக்கல் கவிஞர் கவிதைகள்-தேசியம், காந்தியம்	16	00
தமிழில் அறிவியல்—அன்றும் இன்றும்	25	00
இதழாளர் ஆதித்தனார்	26	00
காந்தியப் பெருந்தலைவர் காமராசர்	20	00